D
211,31 N8
N83·21;1
২২২০২

திரு. க. பாலன்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டிலாக் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,09,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன்: Sir, to discuss the need to expand the sandalwood cultivation in the public and private sector and to provide incentives to such cultivation, I move—

"That the allotment of Rs. 7,09,30,000 under Demand No. 45—Forests be reduced by Rs. 100."

(முற்பகல் 10-30)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகிற ரப்பரைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களுக்கு பயன்படும் வகையில் தேவையான (போம் ரப்பர் டையர் ரப்பர்) தயார் செய்வதற்கு [illegible] திட்டப்படி ஒரு பெரிய தொழிற்சாலை அம் மாவட்டத்தில் [illegible] பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டிலாக் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,09,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். [illegible]: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் [illegible] மற்றும் [illegible] பயிரிட்டு வரும் விவசாயிகளை அந் நிலம் காட்டிலாகாவுக்குச் சேர்ந்தது என்று நில வெளியேற்றம் செய்யப்படுவதைத் தடுத்து அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டியதின் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டிலாக் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,09,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



(இ) கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல் சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,06,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஏலகிரி மலையில் ஒரு திறந்தவெளி திரை அரங்கம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல் சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,06,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தை அகில இந்திய சுற்றுலா மையமாக மாற்றுவதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல் சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,06,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில், நீரோடையிலிருந்து முட்டம் வரையிலும் இயற்கையாகவே இருக்கின்ற கால்வாயை சுற்றுலாத் துறைக்கு பயன்படுத்தாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,06,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,58,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

[1981 ஏப்ரல் 29

**திரு. சு. பாலன்:** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,58,61,000-ல் ரூ. 100 குறைக்கப் பெறவேண்டும்."

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss the need to dispose of old instruments in the possession of the Forest Department I move—

"That the allotment of Rs. 9,58,61,000 under Demand No. 54—Capital outlay on Forests be reduced by Rs. 100".

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனத்துறை மற்றும் செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் துறை ஆகியவை சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள்* அச்சிடப்பட்டு இந்த அவையிலே வழங்கப்பட்டிருக் கின்றது. அந்த நான்கு கொள்கை விளக்கக் குறிப்புக்களையும் நான் இந்த அவையிலே பேசியதாக குறிப்புகளிலே பதிவு செய்வதற்கு தாங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கோரப்பட் டிருக்கின்ற வனத்துறை, சுற்றுலாத்துறை போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றையதினம் தமிழ்நாட்டிலே பருவமழை தவறி இருக்கின்ற நேரம். நம்மு டைய முன்னோர்கள் காடுகள் மக்களுக்கு மிகவும் அவசியமானது என்று கருதி பல ஆண்டுக் காலமாக காடுகளை நல்ல முறையிலே பாதுகாத்து அவை அழிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே அவற்றைப் பாதுகாத்து வந்தார்கள். ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு வந்த பஞ்சாயத்து குருப்புகளை எல்லாம் கலைத்துவிட்டு வனத் துறையின் மூலமாக எந்தெந்த வகையிலே காடுகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்துக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

* 731-808 ஆம் பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச் சிடப்பட்டுள்ளது.



1981 ஏப்ரல் 29] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

இங்கேகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த விளக்க அறிக்கையிலேகூட, இது நல்ல முறையிலே பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லி அதற்காக புதிய பல பொறுப்புக்களைக் கூட ஏற் படுத்தியிருக்கிறார்கள். ஐ.எ.எஸ். படித்த பெரிய அதிகாரிகளை எல்லாம் இதிலே போட்டு, அவர்கள் சொல்கிற பல்வேறு கருத்துக்களை எல்லாம் ஏற்று, அந்தத் துறை செம்மையாக நடைபெறவேண்டும் என்பதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். அப்படி எடுக்கப்பட வேண்டும் என்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

இங்கே கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இந்தக் காடுகள் அழிக்கப்படுவதைப்பற்றி பேசுகிற காலங்களில், அப்படிக் காடுகளை அழிப்பவர்களுக்கு உறுதுணையாக இருக்கிற நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றெல்லாம் சொல்லி அதற்காக சட்டத்திருத் தத்தையும் செய்தார்கள். நான் உங்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் வனத் துறையிலே ஏராளமான அதிகாரிகளும் பல சிப்பந்தி களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பொறுப்பாக பணியாற்றுகிறார்கள் என்றாலும்கூட, இன்றையதினம் நம்மை அறியாமலேயே காடுகள் அழிந்து கொண்டே வருகின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. மறைப்ப தற்கும் முடியாது.

காரணம் கிராமங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள், காடுகளுக்குச் சென்று, அவர்களுக்கு வேறு வேலை கிடைக்காத காரணத்தினால், காட்டு மரங்களை அழித்து அவைகளை வெட்டி, அவற்றை விறகாக கொண்டு வந்து விற்றுத்தான், அந்தக் கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலை கிராமங் களில் இருக்கிறது என்பதை நாம் மறுக்க இயலாது. அந்த வகையிலே நாம் ஒரு பக்கம் காடுகளை வளர்க்க வேண்டும் என்று முயற்சிகள் எடுத்துக்கொண் டாலும், அதே நேரத்தில் ஒரு பக்கத்திலே காடுகள் வேகமாக அழிந்துக்கொண் டிருப்பதை தடுக்கவும் முடியவில்லை.

அப்படிக் காடுகள் அழிந்து கொண்டிருக்கிற காரணத்தாலேதான் பருவ மழை தவறுகின்றன. ஆங்காங்கே காடுகளில் உருவாகி இருக்கும் ஜீவ நதி களில், மழைக்காலங்களில் வெள்ளம் அதிகம் வரும்போது ஏரிகளையும் குளங் களையும் நிரப்பிவிடும். ஆனால் மழை இல்லாத காரணத்தால், இந்த நதி களில் நீர் வரத்து குறைந்து, அதனால் ஏரிகளும் குளங்களும் காய்ந்து இருக் கின்றன. அப்படி ஏரிகளிலும், குளங்களிலும் தண்ணீர் இல்லாமல் இருப்ப

தினால்தான். முப்பயிர்-முப்போகம் என்கின்ற நிலைமை தமிழகத்தில் மாறி, விவசாயமும் பாதிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் அறிந்துதான், இவைகளையெல்லாம் நினைவுபடுத்துகின்ற வகையாகத்தான் நம்முடைய முன்னோர்கள் காணும் இடங்களில் எல்லாம் மரங்களை நட்டார்கள். வீதிகளின் ஓரங்களில் நட்டார்கள். குளங்களின், ஏரிகளின் கரைகளில் நட்டார்கள். நிழலுக்காகவும் நட்டார்கள். மழை வருவதற்கு தேவை என்ற வகையிலும் நட்டார்கள். இப்படி எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் மரங்களை வளர்க்கும் பணி ஒரு காலத்தில் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் இன்றைய தினம் காடுகள் அழிந்துகொண்டிருக்கின்றன.

சென்ற முறை இதே மானியக் கோரிக்கையில் பேசும்போது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். நீங்கள் சட்டம் மட்டும் கொண்டு வந்தால் போதாது, காடுகளை அழியாமல் இருக்கச் செய்ய கவனம் செலுத்துங்கள் என்றெல்லாம் கேட்டேன். நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் என்ன சொல்லியும் கூட, வட ஆற்காடு மாவட்டத்திலே சந்தன மரங்களின் திருட்டை அரசால் நிறுத்த முடியவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகமான அளவு சந்தன மரங்கள் தமிழ்நாட்டிலேயே வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் போன்ற மாவட்டங்களிலேயிருந்துதான் கிடைக்கின்றன. அவற்றின் மூலமாகப் பல கோடி ரூபாய்களை தமிழ்நாடு வருவாயாகப் பெற்றது. ஆனால் சென்ற ஆண்டு மத்திய அரசின் ஒரு ஏற்றுமதிக் கொள்கையின் விளைவாக, பெரும் அளவில் அதன் விற்பனையில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

நீங்கள் மத்திய அரசுக்கு இதுபற்றிக் கடிதம் எழுதுங்கள், நடவடிக்கைகள் எல்லாம் எடுங்கள். தமிழ்நாடு மாநிலம் அந்தச் சந்தன மரங்களிலிருந்து இன்னும் அதிகமான வருவாய் பெறுவதற்கான நடவடிக்கைகளை எல்லாம் எடுங்கள், பெறுங்கள். அதைப் பொருத்தவரையில் எங்களுக்கும் எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது என்றாலும், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்திலே நான் எறக்குறைய 77-லேயிருந்து சொல்லி வருகிறேன், சந்தன மரங்கள் திருடு போவது பற்றி. அப்படியும் கூட, அந்தச் சந்தன மரங்கள் களவாடப்படுவதைப்பற்றிய அந்த நிலைமை மாறவே இல்லை என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதற்காக இந்த அரசை நான் கண்டிக்கவும் விரும்புகிறேன்.





நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட கேட்கலாம். சந்தன மரங்கள் திருட்டுப்போவது என்பது இந்த ஆட்சி வந்த பிறகுதான் திருடப்படுகின்றனவா, ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட திருட்டுக்கள் எல்லாம் போகவில்லையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். அன்றையதினம் கூட இப்படிப்பட்ட திருட்டுக்கள் போயிற்று. என்றோ ஒரு நாள் சந்தன மரங்கள் திருடப்பட்டு அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்துவிட்டார்கள் அல்லது அப்படி திருடு போகிறது என்ற நிலைமை ஏற்பட்டால் அந்தப் பகுதி மக்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்படுவார்கள். சந்தன மரங்களைக் களவாடுகிறார்கள் அல்லது களவாடியவர்களைப் பிடித்துவிட்டார்கள் என்றால் அது ஒரு அதிசயமான செய்தியாக அன்றையதினம் இருந்தது. ஆனால் இன்றைய தினம் அந்த நிலை மாறிவிட்டது. இப்போது சந்தன மரங்கள் தினசரி திருட்டுப் போகிறது. அதிகாரிகள் இந்தப் பாதையில் இன்று மடக்குகிறார்கள் என்றால் வேறு பாதையில் சென்று களவாடுகிறார்கள். ஒரு பகுதியில் மடக்குகிறார்கள் என்றால் இன்னொரு பகுதியில் களவாடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற பத்திரிகைகளைப் பார்க்கிறபோது, இந்தப் பாதையில் சந்தன மரங்களைத் திருடியவர்களைப் பிடித்தார்கள், அந்தப் பாதையில் பிடித்தார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் திருட்டுப் போகிற அந்த நிலை நிற்கவே இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இதில் அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். நீங்கள் சொல்லலாம், நாங்கள் ஏற்கனவே இருந்த சட்டத்தையெல்லாம் திருத்தி விட்டோமே, கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோமே, கடுமையான முறையில் தண்டிக்கப்படுகிறார்களே என்று. ஆனால் சந்தன மரங்களைத் திருடும் திருடர்கள் இந்தச் சட்டங்களைக் கண்டு பயப்படுவதாகத் தெரியவில்லை. என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

இன்றையதினம் இந்தக் குறிப்பிலே கூடச் சொல்லியிருக்கிறார்கள். சந்தன மரங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வெட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். அதை திருப்பத்தூர் கோடவுனில் வைக்கிறோம், ஏலம் போடுகிறோம் என்றெல்லாம் குறிப்பில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்த மரங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வெட்டப்படுகிறதா ? பக்குவம் பெறாத சந்தன மரங்களைக் கூட ஜவ்வாது மலையில் இன்றைய

தினம் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அங்கே போடப்பட்டுள்ள அதிகாரிகள் என்ன செய்கிறார்கள், இதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத்தான் நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஜமுனாமுத்தூரில், திருப்பத்தூர் அருகில் சந்தன மரங்களில் இருந்து சந்தன எண்ணெய் எடுக்கக்கூடிய தொழிற்சாலை ஒன்று வர இருக்கிறது என்றும் அதற்காக ஒரு அதிகாரி கூட நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், பரிசீலனைகள் நடைபெறுகின்றன என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஜவ்வாது மலையில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதில் எல்லாத் தொகுதிகளும் வருகின்றன. என் கலசபாக்கம் தொகுதி வருகிறது, செங்கம் தொகுதி வருகிறது, வாணியம்பாடி தொகுதி வருகிறது, பக்கத்தில் அணைக்கட்டு தொகுதி வருகிறது, போளூர் தொகுதி வருகிறது. இப்படி எல்லாத் தொகுதிகளும், அத்தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களும் ஜவ்வாது மலைப் பகுதியில் அடங்கியிருக்கின்றன. சந்தன மரங்கள் ஜவ்வாது மலைப் பகுதியில் ஏராளமாக இருக்கின்றன. வனத்துறை சார்பாக கூலிகளாக இருப்பவர்கள், அங்கிருக்கிற மரங்களைத் தோண்டுகிற பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் அங்குள்ள மலைவாழ் மக்களாக, மலைவாழ் பழங்குடி மக்களாக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், பல்லாண்டுகளாக அந்த மக்கள் ஆண்டான் அடிமை என்ற நிலையில் இருக்கிறார்கள். அந்த பழங்குடி மக்களை அங்கிருக்கிற வனத் துறை அதிகாரிகள் அடிமைகளாக நடத்தி வருகிறார்கள். அவர்கள் தினக் கூலிகளாக இருக்கிறார்கள். காலையில் சென்றால் மாலை வரை வேலை செய்ய வேண்டும், ஆனால் சரியான கூலி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அங்குள்ள அதிகாரிகளை தைரியமாகக் கேட்க முடியாது. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கிறபோதுதான் ஒன்றிரண்டு நபர்கள் எங்களைச் சந்தித்து அவர்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதி மக்கள் வாழ்க்கைத்தரம் முன்னேறுகிற வகையில் இந்தத் தொழிற்சாலையை, சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை ஜவ்வாது மலைப் பகுதியில் ஆரம்பித்தாக வேண்டும். அங்கே தண்ணீர் வளம் கூட இருக்கிறது. சந்தன மரங்கள் நிறைய இருக்கின்றன. காடுகள் அல்லாத நிலங்களும் அங்கே இருக்கின்றன. ஆகவே ஜவ்வாது மலைப் பகுதியில் இந்த சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தந்து, அந்தப் பழங்குடி மக்களுக்கு போதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக்கொள்கிறேன். இந்த விளக்கக் குறிப்பில் இருக்கிறது. வனத்துறை சார்பில் அங்குள்ள பழங்குடி மக்களுக்கு கல்வி வசதி, வீட்டுவசதி, சாலைவசதி இவைகள் எல்லாம் செய்து கொடுக்கும் பொறுப்பை வனத்துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஜவ்வாது மலைப் பகுதியில் இன்னும் பல கிராமங்களுக்கு குடிநீர் வசதி இல்லை.

நான் சொன்ன ஊராட்சி ஒன்றியங்களான கலசப்பாக்கம், செங்கம், புதுப்பளையம், ஆலங்காயம் போன்றவைகள் எல்லாம் கீழே அடங்கியிருக்கின்றன. மேலே அதிகாரிகள் சரியாக செல்வதில்லை. அதனால் குடிநீர் பிரச்சனை தீர்க்கப்படவில்லை. அப்படியிருக்கும் ஒன்றிரண்டு தொட்டிகள்கூட வனத் துறைத் தொட்டிகளாக இருக்கின்றன. நான்கூட மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலேயும், மற்றும் அமைச்சர் அவர்களிடத்திலேயும் எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை வனத்துறையின் சார்பாக பணம் ஒதுக்கி, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; எல்லோருக்கும் குடிநீர் தரவேண்டும் என்று சொன்னேன்.

அதேபோன்று வனத்துறை சார்பிலே பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. அதேபோல் வனத் துறையின் சார்பிலே உயர்நிலைப் பள்ளிக் கூடங்கள் நடைபெறுகின்றன. ஆனால், அவைகளுக்கு எல்லாம் போதுமான கட்டிடங்கள் இல்லை. ஆகவே, நல்ல கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும். அதே போன்று ஜமுனாமத்தூரிலே ஒரு உயர்நிலைப் பள்ளிக் கூடம் இருக்கிறது. அதை மேல்நிலைப் பள்ளிக்கூடமாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, அந்தப் பகுதிகளில் மான் போன்ற பல வன விலங்குகள், காட்டு மிருகங்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் கிராமங்களை நோக்கி வருகின்றன. இந்தச் செய்தியை பத்திரிகைகளிலேகூட பார்த்தோம். அவைகளுக்கு குடிக்கத் தண்ணீர் இல்லை. ஆகவே, வனத்துறையின் சார்பில் ஆங்காங்கு கிணறுகள் அல்லது பம்புகள் மூலம் தண்ணீர் தொட்டிகள் அமைத்து, இந்த வன விலங்குகளுக்கு குடிநீர் வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான வன இலாக்கா, மற்றும் உள்ள மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு வனத்துறையைப் பாதுகாப்பதில் கடந்த ஆண்டு மொத்த பரப்பளவு 21,73,700 எக்டேர் நிலத்திலும், இந்த ஆண்டு 21,79,100 எக்டேர்

[திரு. கே. உச்சி] [1981 ஏப்ரல் 29

நிலத்திலும் வளர்ந்திருப்பது கண்டு நான் பெருமைப்படுகிறேன். அந்த நிலத்தை மீண்டும் அளந்ததில் 600 எக்டரை இழந்தாலும், 6,000 எக்டேர் நிலம் வனப் பகுதிக்கு சேர்க்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, வனத்துறை காடுகளை வளர்க்க அரசு எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறது என்பதைப் பார்க்கும்போது, என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த வனத்துறை, மக்களுக்கும், நாட்டுக்கும் என்னென்ன நன்மைகள் செய்கிறது என்பதைப் பார்க்கும்போது, 1979-80 ஆம் ஆண்டில் 1,088 இலட்சம் ரூபாயும், 1980-81-ல் 1,182 இலட்சம் ரூபாயும், 1981-82-ல் 1,200 இலட்சம் ரூபாயும், இவ்வளவு பெரிய தொகைகளை வனத்துறை செலவு செய்வதில் எவ்விதத் தவறும் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கைக் காடுகளைப் பாதுகாப்பதில், மரங்களையும் காடுகளையும் வளர்ப்பதால், வன விலங்குகளையும் பாதுகாக்கும் நிலை உருவாகின்றது. இந்த அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதியிலுள்ள வன விலங்குகளின் உய்விடம் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் என்பதில் ஐயமில்லை. எனவே, மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தில் வன விலங்குகளின் உய்விடங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற அரசின் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன்.

மரக் கூழ் தயாரிக்க, கற்பூர மரங்களையும், மிலாறு மரங்களையும் வளர்க்க 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 10.82 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்படுத்துவதையும், அரசு தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதற்கான திட்டத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டில் 75 எக்டேர் பரப்பில் ரூ. 33.88 இலட்சம் செலவிலும் 1981-82 ஆம் ஆண்டில் 34.13 இலட்சம் செலவிலும் திட்டங்கள் போட்டு நிறைவேற்ற இருப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் மலை மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படுகிறது.

(முற்பகல் 10-50)

நீலகிரி மாவட்டத்தில் 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 51.53 இலட்சம் செலவிலும், 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 60.61 இலட்சம் செலவிலும் மத்திய அரசு உதவியுடன் கிராம வனங்கள், சாலைப் போக்குவரத்து மேம்பாடு திட்டங்களை செயல்படுத்துவதையும் பாராட்டுகிறேன். ஆனால் இதில் சிறு கிராமப் பகுதிகளை ஒட்டியுள்ள மேய்ச்சல் காடுகளையும், விவசாய நிலங்களையும் கிராம வன காடுகளாக்குவதை அருள்கூர்ந்து அரசு நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு தேயிலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் தோட்ட வேலைகளில் கான்ட்ராக்ட் முறை கூடாதென்றும், அப்படி கான்ட்ராக்ட் கொடுப்பதால், அங்கு பணியாற்றும் தொழிலாளர்களும், தாயகம் திரும்பிய தமிழர்களும்



1981 ஏப்ரல் 29] [திரு. கே. உச்சி]

மிகவும் பாதிக்கப்படுகிறார்களென்றும் கூற விரும்புகிறேன். அங்கு தோட்ட வேலைகளில் இலங்கை தமிழர்களுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். பெர்மெனென்ட் தொழிலாளர்கள் டெம்பரரி தொழிலாளர்கள் என்று பார்க்காமல் எல்லோருக்கும் வீட்டு வசதி கொடுத்திருப்பதை பாராட்டுவதோடு, அந்த டெம்பரரி தொழிலாளர்களை வேலை இல்லாத காலத்தில் வீடுகளை காலி செய்ய நிர்ப்பந்தம் செய்யக் கூடாதென்று வலியுறுத்துகிறேன். இலங்கைத் தமிழர்களின் படித்த பிள்ளைகளுக்கு தேயிலை தொழிற்சாலையில் ஊழியர்களாகவும், டிரைவர்களாகவும், வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பச்சைத் தேயிலை பறிக்கும் தொழிலாளர்களுக்கு தனியார் தோட்டங்களில் கொடுப்பது போல போனசும், இன்சென்டிவ்வும் கொடுத்து உதவ வேண்டுமென்று தமிழக அரசை விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூரிலும், கூனூரிலும் உள்ள தேயிலைத் தோட்டங்களின் பச்சிலை உற்பத்தியிலும், பறித்த பச்சிலைகளைப் பதப்படுத்தி தயாரிக்கும் தேயிலைத் தூளிலும் அதிக முன்னேற்றம் காண அரசு அலுவலர்களை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மலையிலுள்ள காடுகளில் கற்பூர மர காடுகளும், வேட்டில் மரக் காடுகளும் அல்லாமல் இயற்கைக் காடுகள் ஏராளமாக உள்ளன. நில ஆக்கிரமிப்பும் இருக்கிறது. இதன் காரணமாய் மரங்கள் அதிகமாக கடத்தப்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. இவைகளை எல்லாம் தடுக்க ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு மேல் கைவசம் வைத்திருப்பவர்களுக்கு அந்த நிலத்தை பட்டா செய்து தர வேண்டும். இதனால் மரங்கள் களவு போவதிலிருந்து தடுக்க முடியும். மேலும் நீலகிரியிலிருந்து விறகு போன்ற தேவைகளுக்கும் மற்றும் வியாபாரத்திற்கும் பர்மிட்டுகள் வழங்கும்போது, நடைமுறைப்படுத்தும் கட்டுப்பாடுகளை, வீட்டுத் தேவைகளுக்கு ஐந்து முதல் பத்து மரங்களை வெட்டுபவர்களுக்கும் கட்டாயமாக தளர்த்த வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன். இதிலிருந்தும் 'இல்லிசிட் கட்டிங்கை' நிறுத்த முடியும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரங்களை கடத்துவதில் கண்காணிப்பதில் பாரஸ்ட் செக்போஸ்ட் மாத்திரம் போதுமானவை அல்ல என்றும், கடத்துபவர்களைக் கண்டு பிடிப்பதில் பாரஸ்ட், ரெவின்யூ, போலீஸ் ஆகிய துறை அதிகாரிகளின் கூட்டுப் பொறுப்பில் பணியாற்ற வேண்டுமென்றும், இதில் தமிழக அரசு அக்கறை காட்டவேண்டும் என்றும் கோரிக்கையாக விடுக்கிறேன். கூடலூர் பகுதியிலுள்ள முதுமலை ஊராட்சியைச் சேர்ந்த 600-க்கு மேற்பட்ட விவசாயிகள்

வனவிலங்குகளின் தொல்லையால், தங்களுடைய பட்டா பூமியில் விவசாயம் செய்ய முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு விவசாயம் செய்ய மாற்று இடங்களை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு, மூன்று ஆண்டுகளாக இதில் எந்த எந்த முடிவும் எடுக்காமல் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக மலைகளின் ராணி என்றழைக்கும் நீலகிரி மாவட்டத்தை அகில இந்திய சுற்றுலா மையமாக மாற்றியமைக்க புதியதோர், சிறந்த திட்டத்தை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் இந்திய முழுவதும் உள்ள ரெயில்வே ஸ்டேஷன்களிலும், முக்கியமான நகரங்களிலும், தாராளமாகவும், கவர்ச்சிகரமாகவும் பெரிய அளவிலும் விளம்பரம் செய்ய வேண்டும். கோவையிலிருந்தும், மேட்டுப்பாளையத்திலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வரும் உல்லாசப்பயணிகளைக் கவரும் வகையில் சொகுசு பஸ்களை விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வள்ளலார் பிறந்த வடலூர் வரும் உல்லாசப் பயணிகளுக்கு தங்குவதற்குப் போதுமான விடுதிகள் இல்லை. ஆகவே பயணிகளைக் கவருகின்ற புதிய விடுதிகளைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிங்கோனாவைப் பொறுத்தவரையில் சின்கோனா தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லோரையும் நிரந்தரமாக்கவேண்டும் அவர்களுக்கு வீட்டு வசதி, போனஸ் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். சின்கோனா தோட்டத்திலே உள்ள மரங்கள் களவுபோகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சில பகுதிகளிலே களவுபோய்க்கொண்டு இருக்கின்றன. இதைக் கண்டுபிடித்து திருடியவர்களை தண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. கல்லன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 25, 45, 47, 54 ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றிகூறி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நாட்டிலே உள்ள செல்வங்களில் எல்லாம் தலைசிறந்த செல்வமாக காட்டுச் செல்வங்கள் உள்ளன என்று சொன்னால் மறுக்கமுடியாது. நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் நல்வாழ்விலும் காடு மிக முக்கிய பங்கு வகிக்கிறது இது மனித இடத்திற்கு இன்றியமையாதது. காடுகளால் நமக்கு அத்தியாவசியமான பிராணவாயு, நமக்கு வழங்கப்படுவதில் அவைகளுக்குப் பெரும் பங்கு உண்டு. தண்ணீர் பெய்வதற்கும் மண் வளம் மற்றும் ஈரப் பாதுகாப்பிற்கும் நிலத்தடி நீர் சேமிப்பதற்கும் காடுகள் பெரிதும் உதவுகின்றன. இதைத்தவிர நமக்குத் தேவையான பொருள்களான விறகு, கட்டத்திற்கான மரங்கள் தழை உரம் கனிகள் தோல் பதனிடுவதற்கான பொருள்கள் தைல வகைகள் இதுபோன்ற எண்ணில்லாத செல்வங்களை வனங்கள் வழங்குகின்றன எனவே இந்த விலை மதிக்க முடியாத காடுகளை நாம் பேணிக் காக்க கடமைப்பட்டுள்ளோம்.





ஈக்காலாஜிக்கல் பேலன்ஸ் ஏற்படுத்தப்பட நாட்டில் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்கவேண்டும் என்பது நியதி. ஆனால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கணக்குப்படி ஏறக்குறைய 17 சதவீதம் காடுகள் தான் தமிழ்நாட்டில் உள்ளதாகத் தெரிகிறது. உண்மை நிலையில் இது ஏறக்குறைய 10 சதவீதம் தான் இருக்கமுடியும் என்று நம்புகிறேன். உதாரணமாக காடுமிகுந்த நீலகிரியில் எடுத்துக்கொள்ளுவோம் கடந்த பல ஆண்டுகளாக சோலை வனமாக இருந்த அப்பகுதி எப்படி பாலைவனமாக மாறியிருக்கிறது என்பதை அங்கு விஜயம் செய்யும் ஒவ்வொருவரும் பார்க்க முடிகிறது. சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நீலகிரி இருந்த நிலையும் தற்போது உள்ள நிலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும் என நினைக்கிறேன். இப்போதுள்ள கோரக் காட்சியை மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்தால் அதிர்ச்சி அடைவார்கள் என நம்புகிறேன்.

அதிகாரிகள் தரும் புள்ளிவிவரத்தை நம்பிக்கொண்டு இருக்கிறீர்கள். உதாரணமாக கடந்த டி. டி. சி. கூட்டத்தில் நீலகிரியில் உள்ள 3 சட்டமன்ற உறுப்பினர்களும் நீலகிரியில் உள்ள வறட்சியை எடுத்துச் சொன்னோம். கடந்த 6 மாதமாக மழையே இல்லை என்பதை அதிகாரிகள் ஒப்புக்கொள்கிறார்கள். இரண்டு போக உருளை கிழங்கு காய்கறிகள் மிகவும் பாதிக்கப்பட்டதை ஒப்புக் கொள்கிறார்கள். இதனால் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கிறார்கள். கால்நடைகளுக்கு புல் இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறார்கள். நீலகிரியில் உதகை குன்னூர் தாலுக்காவில் வறட்சி நிலவுவதாகவும் அதற்கென வறட்சி தீர்மானத்தை அரசுக்கு அனுப்புவதாக ஒப்புக்கொண்டு புள்ளிவிவரக் கணக்குப்படி இத்தீர்மானத்தை அரசுக்கு அனுப்பவில்லை என்று தெரியவருகிறது. இதனால் அரசாங்கத்திற்கு வரும் புள்ளிவிவரம் சரியானதாக இல்லை என்பது புலனாகிறது. இது மாதிரியான புள்ளி விவரக்கணக்கு தான் வனத் துறையில் 17 சதவிகிதம் காடுகள் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்திலே பல ஆண்டுகளாக தொடர்ந்து மரங்கள் கடத்தப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கும் மற்ற மாநிலங்களுக்கும் சென்று கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு இத்துறையினரின் ஒத்துழைப்பு இல்லாமல் எப்படி நடக்க முடியும்?

வில்லோஸ் போன்றநிறுவனங்களுக்கு இத்துறையினரால் மிகக் குறைந்த விலையில் மரங்கள் சப்ளை செய்து வருவது ஊரறிந்த உண்மை. இதில் பெரிய ஊழல் நடப்பதாக என்னிடம் சான்றுகள் இருக்கின்றன. இதைக் கட்டுப்படுத்த ஸ்பெஷல் ஸ்குவாட் ஒன்றை ஏற்படுத்தி அடிக்கடி சர்ப்ரைஸ் செக் நடத்தி கண்டுபிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுவீடிஷ் இண்டர்நேஷனல் டெவலப்மெண்ட் ஏஜன்சி ஒத்துழைப்புடன் இத்துறையை அபிவிருத்திசெய்ய 45 கோடி ரூபாயில் ஓர் திட்டம் உள்ளதாக அறிகிறேன். அதில் கணிசமான பகுதி நீலகிரிக்கு ஒதுக்கி காடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியில் காட்டுவளத்தைப் பெருக்குவதனால் நீலகிரிக்கு மட்டுமின்றி தமிழகத்திற்கே பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

தற்போது உள்ள விதிகளின்படி வீட்டு உபயோகத்திற்காக எங்களால் வளர்க்கப்பட்ட மரங்களை வெட்ட அதிகாரிகள் கெடுபிடி செய்கிறார்கள். தவிர, கடந்த சில ஆண்டுகளாகப் புயலாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்ட பலர் மற்ற சாகுபடி செய்ய இயலாமல் தங்களுக்கு சொந்தமான பூமியில் மரங்களை நட்டு இதையே தங்களது ஒரே வருமானம் என நம்பி இருக்கும் விவசாயிகளுக்கு விதிகளைத் தளர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலா அகில உலகிலும் வேகமாக வளர்ந்துவரும் ஓர் தொழிலாகும் என்பதை நாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம். நாட்டின் மேம்பாட்டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் உதவியாய் இருக்கிறது. நாடுகளிடையே சமூக, கலாச்சார வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

இந்தத் துறையில் அரசு காட்ட வேண்டிய அக்கறையைக் காட்டவில்லை என்பது எனது குற்றச்சாட்டு. இயற்கை அன்னை தந்த அபூர்வ செல்வங்களில் நீலகிரி ஒன்றாகும். இப்பகுதியை மலைகளில் ராணி என்றும், பூமியின் சொர்க்கம் என்றும் கூறுகிறார்கள். இந்தச் சுற்றுலா மையத்தைப் பொறுத்தவரையில் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுகிறது என்று குற்றம் சாட்டுகிறேன்.

உதாரணமாக இந்த வருடம் பிரசுரிக்கப்பட்ட டூரிஸ்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் காலண்டரில்கூட நீலகிரியைப்பற்றி அதிகமாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்த வருட நிதிநிலை அறிக்கையிலும் சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலும் நீலகிரிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருக்கும் தமிழ்நாடு தங்கும் விடுதி பாராமரிப்பு சரியில்லை.





நடுத்தர ஏழை மக்களைக் கவரும் வகையில் குறைந்த கட்டணத்தில் அரசாங்க விடுதிகள் அமைக்கப்படாதது ஒரு பெரும் குறையாக நீலகிரி மாவட்டத்தில் உள்ளது. இதைப் போக்குவதற்கு அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயணிகளைக் கவர போக்குவரத்து சீராக இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் எல்லாயிடங்களிலும், ஆட்டோ, டாக்சி பிரச்னையாக இருக்கிறது. இந்தக் குறைபாடுகளைக் களைய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு கூட்டுறவு மூலமாகப் பல டாக்சிகளை வாங்கி உல்லாசப் பயணிகளிடம் நியாயமான கட்டணம் வசூலித்து சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஸ் போக்குவரத்து சீராக இல்லை என்பது என் குற்றச்சாட்டு. 50 பேர் ஏறக்கூடிய பஸ்களில் 100 பேர், 150 பேர் என்று பிரயாணிகளை ஏற்றிச்செல்லுகின்ற நிலைமை உள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் கால அட்டவணைப்படி பஸ்கள் ஓடுவது அபூர்வம். பொது மக்களுக்கும், உல்லாசப் பயணிகளுக்கும் கிடைக்க வேண்டிய மரியாதை கிடைப்பதில்லை. இதுவரை இலாபத்தில் ஓடிய சேரன் போக்குவரத்துக் கழகம் இப்பொழுது நஷ்டத்தில் ஓடத் துவங்கியிருக்கிறது. இதை அரசு கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலின்படி உதகையில் இண்டியன் டூரிஸ்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், கர்நாடக அரசுடன் கூட்டு சேர்ந்து ஒரு நவீன ஹோட்டல் கட்டுவதாகக் கேள்விப்படுகிறேன். ஏன் இந்த அரசாங்கம் இந்த மாவட்டத்தில் அக்கறை காட்டவில்லை என்று கேட்க விரும்புகிறேன். தமிழக அரசு ஏன் பங்கு கொள்ளவில்லை என்பது என் கேள்வி.

உதகையில் உள்ள ஏரியைப் பழுது பார்க்கவும், நவீனப்படுத்தவும் அழகுபடுத்தவும் ரூபாய் 15 இலட்சம் செலவிடப்பட்டது என்று தெரிய வருகிறது. இதில் பெரும்பகுதி சரியாக உபயோகப்படுத்தப்படவில்லை என்பது எனது குற்றச்சாட்டு. இதற்காக ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் சம்மர் ஃபெஸ்டிவல் என்ற பேரில் ஒரு டான்ஸ், ஒரு டிராமா என்று போரடிக்கும் சில அயிட்டங்களைக் கொண்டு செய்கிறார்கள். இதை நல்லவிதமாக அமைக்க அரசு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. கல்லன்] [1981 ஏப்ரல் 29

உதகமண்டலம் தற்போது "உதகமண்டலம்" என்று ஆங்கிலத்தில் திருத்தப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் OOTACAMUND என்று இருந்தால்தான் வடநாட்டில் உள்ளவர்களுக்கும், மேலை நாடுகளில் உள்ளவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே அதை ஆங்கிலத்தில் OOTACAMUND என்று மாற்றிக்கொடுக்கும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன். சின்கோனா 100 வருடங்கள், 120 வருடங்களாக உள்ள ஒரு நிறுவனம். அது பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. அதில் மேலும் அக்கறை செலுத்தி அகில உலகில் ஒரு சிறப்பு வாய்ந்த நிறுவனமாக மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகைக்குப் பல உல்லாசப் பயணிகள் வருவதால், அங்கே இரண்டொரு முக்கியமான கோயில்கள் இருக்கின்றன. அதில் ஒன்றான மாரியம்மன் கோயிலின் இராஜகோபுரத்தை நல்ல முறையில் செய்ய வேண்டும். எல்கிலில் முருகன் கோயிலை நல்ல முறையில் கட்டி அழகுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள செய்தி, வனத்துறை, சின்கோனா ஆகிய மானியங்களின் மீது நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

பொதுவாகவே இன்றையதினம் இந்தத் துறை, இதுவரையிலும் சுதந்திரம் அடைந்து 34 ஆண்டுகள் ஆகியிருந்தும் கூட, 30 ஆண்டுகால நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, மிகவும் சீராகவும், சிறப்பாகவும், மிகவும் பெருமைப்படத்தக்க வகையிலே இயங்கி வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் வெளிநாடுகளிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் கண்டு களிக்கக் கூடிய சுற்றுலா திரைப்படம் எடுத்து வெளியிட்டு இருப்பது பாராட்டுக்குரியதாகும். நிழல்படத் தொகுப்பு மிக அதிக அளவிலே தேவைப்படுகிறது. தமிழக அரசு நடத்திய ஒலி, ஒளி காட்சி, ஒலி-ஒளி அரங்கக் காட்சி, வர்த்தகப் பொருட்காட்சிகள் எல்லாம் உண்மையிலேயே பெருமைக்குரிய விஷயமாகும். அதே நேரத்தில் ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்குச் செல்லுகிறபோது, ஆங்காங் சிங்கப்பூர் நாடுகளிலே செல்லுகிறபோது, சுற்றுலாத் துறையில் அங்கே நியமித்திருக்கக்கூடியவர்கள், அரசு சார்பிலே இருக்கக் கூடியவர்கள் அந்த நாட்டைப் பற்றி, மொழியைப் பற்றி, கலாசாரத்தைப் பற்றி அவர்களுடைய பண்பாட்டைப் பற்றி மிகவும் தெளிவாக கற்று உணர்ந்து வருகின்ற வரவேற்பாளர்களை எல்லாம் அழைத்துச் சென்று அவைகளை எல்லாம் நல்ல முறையிலே விளக்கிக் காட்டி, செம்மையான முறையிலே அவர்கள் நடந்து கொண்டு வருவதை நாம் பார்த்தோம். அதே போல தமிழகத்திலே இருக்கக் கூடியவர்கள் எந்த அளவிற்கு இருக்கிறார்கள் என்று சொல்லுகிறபோது, வெளிநாட்டிலே இது பற்றி சில குறைபாடுகள் எங்களுக்குச் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட நிலை இல்லாமல் இங்கே இருக்கின்ற வழிகாட்டிகள், சுற்றுலாத் துறையிலே இருக்கக் கூடியவர்கள், தமிழக அரசைப் பற்றி, தமிழ்நாட்டைப் பற்றி, மொழியைப் பற்றி, கலாசாரத்தைப் பற்றி, பண்பாடு குறித்து அவர்கள் எந்தெந்த இடங்களைச் சுற்றிக்காட்டுகிறார்களோ, அதனுடைய முழுத் தன்மையையும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லத்தக்க வகையிலே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் இன்னும் மேலும் மேலும் பாராட்டுவதற்கு உரியதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 ஏப்ரல் 29] [டாக்டர் கே. சமரசம்]

அதுமட்டுமல்லாமல், வெளிநாடுகள் என்று சொல்லுகிறபோது வெளிநாட்டிலே இதுபோன்ற இயற்கைக் காட்சிகள் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. செயற்கையாக உருவாக்கப்பட்ட காட்சிகளைத்தான் எங்களை அழைத்துச் சென்று காட்டினார்கள். சிங்கப்பூரில் இருக்கக்கூடிய டைகர் கார்டன் என்பது கூட, இங்கே கோடம்பாக்கம் விஜயா [illegible] அளவுக்குக் கூட இல்லை. ஆனாலும் அது பிரசித்தி பெற்றதாகச் [illegible]படுகிறது. வெளிநாட்டிலே இருந்து வரக்கூடிய அனைவரும் [illegible] அழைத்துச் சென்று அதை ஒரு பெரிய சுற்றுலாத்தலமாகக் காட்டு[illegible]கின்றது. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் நீங்கள் மனதிலே [illegible] கொண்டு, மிக நல்ல முறையிலே இயற்கையாகவே தமிழகத்திற்கு [illegible] வரப்பிரசாதமாக அமைந்திருக்கக்கூடிய இந்த இயற்கைக் [illegible] சென்று பார்க்கிற வகையில் மிக நல்ல திட்டத்தை மே[illegible] வகையில் பல புதிய திட்டங்களை இங்கே அறிமுகப்படுத்[illegible] உண்மையிலேயே வரவேற்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே [illegible] என்று இருக்கக்கூடிய அருவிகளில் நோய் தீர்க்கும் அரு[illegible]

[டாக்டர் கே. சமரசம்] [1981 ஏப்ரல் 29

சொல்லப்பட்டிருக்கின்றன. இயற்கையாகவே சரும நோய்களைத் தீர்க்கக் கூடிய, மருந்து இல்லாமல் குணப்படுத்தக் கூடிய அளவுக்கு, சுக வாழ்க்கை தரக்கூடிய அளவுக்கு, கொஞ்ச காலம் அந்தப் பகுதியிலே, கொடைக்கானலில் இருந்தால், கொஞ்சகாலம் அந்த தீர்த்தமலையிலே இருந்தால் உடலிலே இருக்கக்கூடிய தோல்வியாதிகள் கூட, தீர்ந்து விடும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு மூலிகைச் செடிகள் மத்தியிலே வரக்கூடிய அந்தக் காற்றும், நீரும் உகந்ததாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்டவைகளை எல்லாம் மிகப் பெரிய சுற்றுலாத்தலமாக மேலும் மாற்றப்பட்டு அதற்கு வேண்டிய வழி வகைகளை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டு மலர் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த மலர் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் மிக மிக பரபரப்புள்ளதாக இருக்கின்றது. அந்த மலரே கிடைக்கவில்லை என்று சொல்லத் தக்க வகையில் 50 ரூபாய்க்குக் கிடைத்த மலர், மலிவு விலையிலே, சலுகைவிலையிலே மதுரையில் ரூ. 35 க்குக் கிடைத்த அந்த மலர், வெளியிலே 100 ரூபாய்கள் கொடுத்தால் கூட கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. அந்த வகையிலே பிரசித்தி பெற்றதாக, புகழ் பெற்றதாக தமிழகத்தைப் பற்றி மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளத்தக்கதாக இருப்பதை கண்டு உண்மையி லேயே பாராட்டுகிறேன். இதை மேலும் தயாரிக்கின்ற வகையில், உருவாகக் கூடிய வகையில் சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் உதவக்கூடிய வகையில் அதை மேலும் அச்சடித்து வெளியிடவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தின் கலைக்களஞ்சியம் இப்போது தான் உலகத்துக்கே தெரிகிறது. தமிழ்நாடு என்றால் என்ன, இதிலே இருக்கக் கூடிய இயற்கை தலங்கள் எத்தனை, அதிலே என்னென்ன இருக்கின்றன என்பதை எல்லாம் தெளிவாக விளக்கக்கூடிய வகையில் 'எத்திசையும் புகழ் மணக்கும் தமிழகம்' என்ற புத்தகத்தை, ஜப்பானில் அவர்கள் கொடுத்த புத்தகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதை விட இது சிறப்பாக இருப்பதைக் கண்டு உண்மையிலேயே பாராட்டுகிறேன் மகிழ்ச்சி அடை கிறேன், வரவேற்கிறேன். இதுபோன்ற வெளியீடுகள் இன்னும் ஏராளமாக அளவுக்கு வெளியாகவேண்டும் என்று திட்டமிட்டு இருப்பது மிகவும் ஏதுவாக அமையும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1981 ஏப்ரல் 29] [டாக்டர் கே. சமரசம்]

(முற்பகல் 11-10)

இன்னும் சொல்லப் போனால், வெளி நாட்டிலே இப்படிப்பட்ட இடங்களுக்கு அழைத்துக் கேபிள் காரை உபயோகப்படுத்தி, பல இடங்களுக்கு அழைத்துச் சென்று காண்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட கேபிள் காரை அமைக்கக்கூடிய வாய்ப்புகள் தமிழகத்திலே பல இடங்களில் இருக்கின்றன. உதகமண்டலத்திலே அமைக்கலாம்; ஏர்காட்டிலே அமைக்கலாம்; கொடைக்கானலிலே அமைக் கலாம், இங்கே இருக்கின்ற ஒகனேகல்லில் அமைக்கலாம், இப்படி மதுரையிலே சில இடங்களிலே அமைக்கலாம். இப்படிப்பட்ட இடங்களில் அதுபோன்ற கேபிள் கார் அமைத்து, வருகின்றவர்களையும், போகக் கூடியவர்களையும் அதன் மூலமாக சுற்றுலாப் பயணத்தை அபிவிருத்தி அடையத்தக்க வகையில் ஈடுபடுவதற்கு நாம் முன்வரவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், டெலி பிரிண்டரைத் தமிழில் இப்போது நாம் தயாரித்திருக்கிறோம். அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது, உலகத் தமிழ் மாநாட்டிலே, தமிழ் வழங்கக்கூடிய நாடுகள், தமிழ் பேசக்கூடிய நாடுகள், தமிழ் ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய நாடுகள் எங்கெல்லாம் இருக்கின்ற னவோ, அங்கெல்லாம் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எல்லாம் இந்த டெலி பிரிண்டரைக் கொடுத்து இங்கிருந்து செய்திகளை உடனுக்குடன் தமிழிலே அவர்களுக்கெல்லாம் தெரிவிக்கக்கூடிய வகையில் செய்யலாம். இங்கே பேசுவதைவிட மிகத் தெளிவாக ஹாங்காங் கிலே தமிழிலே பேசுகிறார்கள். சிங்கப்பூரில் பேசுகிறார்கள். நமது தமிழைவிட சிறப்பாக, நாம் வெட்கப்படக்கூடிய அளவிற்கு தமிழர்கள் அங்கே பேசுவதை நாம் கண்ணாறக் கண்டிருக்கிறோம், அவர்கள் எல்லாம் மகிழ்ச்சித்தரத்தக்க வகையில், தமிழகம் எவ்வளவு விரிந்திருக்கிறது, தமிழ் எங்கெங்கே பேசப்படுகிறதோ, அவர்களுடைய நிலைமையை என்ன என்பதை அவ்வப்போது புரிந்துகொள்ளத் தக்கவகையில் அந்த டெலி பிரிண்டர்களை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. மீன் வளர்ப்பு கண்காட்சி அகத்தை ஏற்படுத்த லாம். மீன் விளையாட்டு அரங்கம், சிங்கப்பூரில் இருப்பதைப் போன்ற விளையாட்டு அரங்குகளை யெல்லாம் மிகத் துல்லியமான முறையில் ஏற்படுத்தலாம். அதற்கெல்லாம் கட்டணம் வைத்து, அதன் மூலமாக நாம் வருவாகும் பணத்தை வைத்து சுற்றுலாத் துறையை மிகத் திறமையாக வளர்ப்பதற்கு அது ஏதுவாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால், தமிழ் நாடு முழுவதும் சுற்றிப்பார்க்க வாய்ப்பற்றவர்கள், வெளிநாட்டிலே இருந்து

வரக்கூடியவர்களை 'தாய் வில்லேஜ்' என்று தாய்லாந்திலே இருப்பதைப் போல், 'தமிழகம்' என்ற ஒரு கிராமத்தை அமைத்து, அங்கே கண்காட்சி தமிழ்நாட்டைப் பற்றிய கரகம், காவடி, சிலம்பு, மல்யுத்தம் என்ற கலைகள் இருக்கக்கூடிய நிலை, ஏழு இசைகளை இசைக்கக்கூடிய இசைக் கருவிகள், இயல் இசை நாடகம் என்று சொல்லக்கூடிய முத்தமிழினுடைய தத்துவங்கள் இவைகள் எல்லாம் பொருந்தக்கூடிய மிகப் பெரிய தமிழகம் என்ற தாய் வில்லேஜ் என்று சொல்வதுபோல் தமிழ் நாட்டினுடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவைகளை விளக்கக்கூடிய வகையில் ஒரே இடத்தில் அமைத்து வரக்கூடியவர்கள் எப்போதும் திரந்தரமாக பார்க்கக் கூடிய வகையில் தமிழ்நாட்டின் ஒரு மத்தியப் பகுதியில் அமைக்கலாம். அல்லது மகாபலிபுரம் போன்ற பகுதியில் இருக்கின்ற ஏரியாக்களைத் தேர்ந்தெடுத்து, இது போன்ற இடங்களில் அமைத்தால், அது மிகப் பெரிய வாவையும் கொடுக்கும், தமிழ் நாட்டின் கலாச்சாரத்தையும் பாதுகாக்கும். அதுவும் இல்லாமல், நலிந்த பல கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே, இதனை யெல்லாம் மனதிலே கொண்டு, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே கைவினைப் பொருட்களை விற்பனை செய்யலாம், இசை மேம்பாட்டை வளர்க்கலாம், உணவு பழக்க வழக்கங்களை எடுத்துச் சொல்லலாம். ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அமைந்த நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. செய்தி என்று சொல்லுகிறபோது, மாவட்ட கருத்துக்கள் என்று எடுத்துச் சொல்கிறோம். நன்னிறைவுத் திட்டத்தை எடுத்துச் சொல்கிறோம். என்னென்ன திட்டங்களை, எவ்வப்போது போடுகிறோமோ, அதுபோன்ற அந்தச் செய்திகளையெல்லாம் வெளியிடக்கூடிய தின செய்தியை அரசாங்கமே வெளியிடக்கூடிய பத்திரிகை தேவை. தமிழரசு என்று ஒன்று இருப்பதைப்போல், தினந்தோறும் அரசாங்கம் என்னென்ன செய்கிறது, நாட்டுக்கு அளிக்கின்ற சலுகைகள் என்னென்ன, என்னென்ன புதிய திட்டங்களைப் போட்டிருக்கிறோம், எவ்வளவு தொகையை ஒதுக்கியிருக்கிறோம், அதில் மாநிலத்தின் பங்கென்ன, மத்திய அரசின் பங்கென்ன, அதனால் மக்கள் எந்த வகையில் இதை அனுகலாம், எந்தெந்த வகையில் அவர்கள் நல்லவற்றைத் தர முடியும் என்பனபோன்ற அத்தனையையும் அளிக்கக்கூடிய வகையில் ஒரு பத்திரிகையை அரசு நடத்தாவது மிகச் சிறந்த ஒரு முடிவாகும். காரணம், இன்றைய தினம் அரசாங்கம் எத்தனை செய்திகளைச் சொன்னாலும், அவரவர்களுக்குத





தகுந்தாற்போல் விமர்சனம் செய்துகொள்ளுகிறார்கள். இதில் மக்கள் குழப்பம் அடைகிறார்கள். இந்தக் குழப்பத்திலே இருந்து மக்களைக் காப்பாற்ற, அரசாங்கம் என்ன செய்கிறது, எப்படி செய்கிறது, எப்படி பணம் ஒதுக்குகிறது, அதை எப்படி எப்படி நீங்கள் வாங்கலாம், அதற்கேற்ற விதி முறைகள் என்ன என்பதைப் பற்றி விளக்கக்கூடிய செய்தித் தாளை நீங்கள் வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மகாராஷ்டிராவிலேகூட, திரைச் செய்தியாக, தினப் பத்திரிகை வெளியிட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, அதனை அப்படி மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரைப்படம் என்று வருகின்றபோது "குமரிக்கண்டம்" உண்மையிலேயே தமிழகம் எப்படி உருவானது, உலகம் எப்படி உருவானது என்பதற்கு அடிப்படையாக தமிழகத்தின் வரலாற்றைச் சித்தரிக்கின்ற அளவுக்கு அருமையான அமைந்திருக்கிறது. அது இன்றைக்கு நாம் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பாராட்டும் அளவுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டுக்காரன் ஒருவனைப் பார்த்து மேல்நாட்டுக்காரன் ஒருவன் கேட்டானாம். நீங்கள் என்ன கண்டுபிடித்தீர்கள் 'பூஜ்யம்' என்று சொன்னானாம். பூஜ்யம் என்பதைக் கண்டுபிடித்தவனே, உலகம் உருண்டை என்று கண்டுபிடித்தவனே தமிழன்தான். உலகத்திற்கு விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்வதற்கு வேண்டிய மூலப் பொருளைக் கொடுத்தவன் தமிழன் என்று பாராட்டி இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் மிகப் பெரிய பிரச்சினைகளை உருவாக்கக்கூடியது செய்தித் திரைப் படங்கள் என்பதால் அவைகளை நல்லமுறையில் தயாரிக்க வேண்டும்.

நாம் நல்லமுறையில் அரசாங்கத் துறையிலே பத்திரிகைகளை நடத்தினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும். அதை தினப்பத்திரிகையாகக் கொண்டு வந்தால் நாட்டிலே குழப்பங்கள் தீரும், வதந்திகள் பரவ வழியில்லாமல் போகும். வியாபாரிகள், விவசாயிகள், அரசுத் தொழிலில் இருக்கக்கூடியவர்கள், மற்றும் பணி புரியக்கூடியவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, காடு என்று சொல்லுகிற சின்கோனா துறை மிகவும் நோய் தீர்க்கக்கூடிய மருந்தாக உபயோகப்படக் கூடியது. பல தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவுக்கு செலவு செய்யாமலேயே வருவாய் பெறக்

தக்க வகையிலேயும், அந்நியச் செலாவணி பெறத்தக்க வகையிலேயும் இருக்கக்கூடிய இந்தத் துறை இன்றையதினம் நவீனப்படுத்தப்பட்டிருப்பது மிக மிக வரவேற்கக்கூடியதாகும்.

வனத்துறை என்பது மிக நல்லமுறையில் வளர்ந்திருக்கக்கூடிய மூன்று. ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 45 கோடி ரூபாயிலே புதிய திட்டம் ஆரம்பித்திருப்பது, நாம் வருண பகவானுக்கு மனு போடுவதைவிட மரங்களை வளர்ப்பது இந்த நாட்டிலே பசுமைப்புரட்சியை உருவாக்க அத்தியாவசியமாக இருக்கும் என்ற நல்லத் திட்டத்தின் அடிப்படையிலேயும் கால்நடைச் செல்வங்கள் இல்லாவிட்டால் மனிதனே வாழமுடியாது என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயும் இந்த வன இலாகா மிகவும் சீர்திருத்தப்பட்டிருப்பதும் அதற்கு அதிகப் பணத்தை ஒதுக்கி நல்ல முறையில் இயங்க வைத்திருப்பதும் கண்டு உண்மையிலேயே அதை வரவேற்கிறேன் என்று சொல்லி, வனத் துறையைப் பொறுத்தவரையில் சொல்வதாக இருந்தால் என்ன திட்டங்கள் போட்டாலும் தென் அமெரிக்காவிலே காட்டிலே இருக்கக்கூடிய "ஸ்கங்" மிருகங்களைப் போன்று சிலர் இருந்துகொண்டு இதைப்பற்றி குறை சொன்னாலும்கூட தொன்றுதொட்டு நல்ல பல காரியங்களை ஆக்கபூர்வமாக செய்துவரக்கூடிய அரசைப் பாராட்டி, வரவேற்று, அமர்கிறேன். வணக்கம்.

* திரு. டி. மணி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வனத்துறை, சிங்கோனா, சுற்றுலா, செய்தி திரைப்படத் தொழில் சம்மந்தமாக நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வனத்துறை சம்மந்தமாக வனச் செல்வத்தை பாதுகாப்பதில் எந்த அளவிற்கு அரசு அக்கறை காட்டியுள்ளது என்பது கொள்கை விளக்க அறிக்கையின் மூலமாகத் தெரிகிறது. ஆனால் வனங்கள் எந்த அளவுக்கு அழிக்கப்பட்டு வருகின்றன என்பதை யாராலும் மறைக்க முடியாத காரியமாகும். குறிப்பாக கொடைக்கானல், சிறுமலை, கன்னிவாடி பகுதிகளிலும், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள முதுமலை வன விலங்கு சரணாலயத்திலிருந்தும் விறகுகளை எடுத்துச் செல்லும்போது, சட்ட விரோதமாக விலை உயர்ந்த மரங்களை கடத்திச் செல்வதும், நெல்லை மாவட்டத்தில் விலை உயர்ந்த மரங்களை திருடிச் செல்வதும், குமரி மாவட்டத்தில் மருதம் பாறைக்கு அருகாமையிலுள்ள காடுகளிலிருந்து, நறாம் மைலுக்குப் பக்கத்திலிருந்தும், பேச்சிப்பாறைக்கு அருகாமையிலிருந்தும், தடிக்காரன் கோணம் பக்கம் உள்ள காடுகளிலிருந்தும், பால்குளம் பக்கம் தலைக்கோடுக்கு அருகா





மையிலுள்ள காடுகளிலிருந்தும் அந்த தோட்ட முதலாளிகள் காட்டு மரங்களை வெட்டிச் செல்வதும், வலியாற்றுமுகத்துக்கு, ரோஸ் உட் போன்ற விலை உயர்ந்த மரங்கள் திருடப்படுவதும் இன்று சர்வசாதாரணமாக இருக்கிறது. இது அந்தப் பகுதிகளிலுள்ள வனத்துறை அதிகாரிகளுக்குத் தெரியாதது அல்ல. அந்தக் காடுகளுக்குப் பக்கத்திலேயே தலைக் கொட்டுப் தோட்டத்தில் பர்னிச்சர் மார்ட் வைத்திருக்கிறார்கள் என தெரிகிறது. சைபன் பகவம் பர்னிச்சர் மார்ட் வைத்திருக்கிறார்கள். இதெல்லாம் அந்தப் பகுதியிலுள்ள வனத்துறை அதிகாரிகளுக்கு தெரிந்துதான் நடைபெறுவதாகத் தெரிகிறது.

அரசு மரங்களை நடுவதற்கும் புதிய காடுகளை உருவாக்கவும் மாநிலம் பூராவும் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவிடும்போது மரங்களைத் திருடுவதற்கு உடந்தையாக இருக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் வனப் பகுதியினுடைய பல பகுதிகளும் இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாக கால் பந்தாட்ட மைதானங்களாக காட்சியளிக்கும் நிலைதான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே வனக் கொள்ளையைத் தடுக்க கடினமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதோடு வனப் பகுதியோடு சேர்ந்த சில பகுதிகளிலும், காடுகள் இல்லாத புல் மேடுகளிலும் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தில் சின்னஞ் சிறு விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். குறிப்பாக திண்டுக்கல் வட்டம் அய்யம்பாளையம் பகுதியிலும், வடாற்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுகாவில், பரதாமி, பனமடங்கி, ஆலங்காயம், செங்கம், மாளிவட்டு போன்ற பகுதிகளிலும் செய்து வருகிறார்கள். அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறைக்கு சமீபம் காந்திநகர் என்ற இடத்தில் சிறு வீடுகளைக் கட்டியும் மரவள்ளிக் கிழங்கு, வாழை பயிர் செய்திருக்கிறார்கள். அதுபோன்று வலிய ஏல என்றுமிடத்தில் தென்னை, பாக்கு மரம், ரப்பர், நெற்பயிர் செய்தும் பல ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து கொடுக்கவோ அல்லது குறைந்த குத்தகைக்கு கொடுக்கவோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் பெரும் புள்ளிகள் காட்டுப் பகுதிகளை, நூற்றுக் கணக்கான ஏக்கர்களை ஆக்கிரமித்துள்ளனர். குறிப்பாக கருங்கலைப் பக்கத்தில் ஒரு நபர் சுமார் 100 ஏக்கர்வரை ஆக்கிரமித்துள்ளார். அதைப் போன்று தேவகிரி தோட்ட முதலாளி தேவகிரியால் அரசு நிலங்களை ஆக்கிரமித்துள்ளார். அது மட்டுமல்ல, தேவகிரி வழியாக செல்லும் ரோட்டை அடைத்து செக்போஸ்ட் போட்டு சுங்கமும் வசூலித்து வருவதாகத் தெரிகிறது. தேவகிரி தோட்டத்திற்கு அப்பால் இருக்கும் சிறு தோட்டக்காரர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலங்களுக்கு செல்வதற்கு தடை செய்யப்படுவதாக தெரிகிறது. இப்படி பல்வேறு இடங்களில் இருக்கிறது.

(முற்பகல் 11-20.)

இந்த இடங்களிலே நேர்மையான அரசு அதிகாரிகளை வைத்து பெரிய முதலாளிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்த இடங்களை எல்லாம் திருப்ப எடுப்பதற்கு ரீ சர்வே போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மலையோரச் சாலைகளைப் பொறுத்தவரையில் அவற்றைத் துரிதமாக அமைப்பதற்குப் போதுமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைச் சாலைகள் மற்றும் குமரி மாவட்டம் அரசு ரப்பர் தோட்டம் மருதம்பாறைக்கு செல்லும் சாலை, பால்குளம் கரும்பாறை சாலை, பால்குளம் மகேந்திரகிரி சாலை, கீரிப்பாறை அப்பர் கோதையார் சாலை போன்றவற்றைத் துரிதமாக அமைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்து, மரம் நடுதலைப் பொறுத்தவரையில் குறிப்பாக குமரி மாவட்டத்திலே தேக்கு, ரோஸ்வுட் போன்ற மரங்களை நடுவதற்கு தம்முறையாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தாலி, பிரான்ஸ் போன்ற அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற, இந்த மரங்களை அதிகமாக நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். மூங்கில் போன்றவற்றை அணைக்கட்டுகளின் நீர் பிடிப்புப் பகுதிகளின் கரையோரங்களில் பெருமளவில் நட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதன் மூலம் மண் அரிப்பைத் தடுக்கவும் கரையோரங்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கவும் முடியும்.

அடுத்து, கற்பூர மரங்களை அதிகமாக நட வேண்டும். குமரி மாவட்டத்திலுள்ள சாலையோரங்களில் பயனுள்ள பலா மரம் ஆயினி மரம் போன்றவற்றை நடவேண்டும். மலைப் பகுதிகளில் தீக்குச்சி தயார் செய்ய



பயன்படும் பெருமாம், முக்கம்பால அர்பிசியா. இவை வேகமாக வளரும். இந்த மரங்களை அதிகமாக வளர்க்க ஏற்பாடு செய்வதுடன் களியல் பகுதியில் தீக்குச்சி தயார் செய்யும் தொழிற்சாலையையும் அங்கே அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைத்தால் அதன் மூலம் அரசுக்கு அதிகமான இலாபம் வரும்.

அடுத்தபடியாக, சந்தனக் காடுகளைப் பாதுகாப்பது இன்றியமையாததாக இருக்கின்றது. வட ஆற்காடு காடுகளில் சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதிகளில் சந்தனத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். அந்தத் தொழிற்சாலைகளை பெரிய அளவில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் சந்தனத் தைல தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைத் துரிதமாக எடுக்க வேண்டும். யூக்கலிப்டஸ் போன்ற பயனுள்ள மரங்களை அந்தந்த பகுதிகளின் நிலைக்கேற்றவாறு நடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, சின்கோனா சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். நீலகிரி, வால்பாறை போன்ற பகுதிகளில் சிங்கோனா அபிவிருத்திக்காக அதிகப்படியான இடங்களில் சின்கோனாவை நடுவதுடன் அதிலே வேலை செய்கின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு கொடுக்கும் சம்பளம் போதுமானதல்ல. பல லட்சங்களை அரசுக்கு தேடித்தரும் அந்த தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 10 ரூபாயாவது கிடைக்கக்கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மேலும் அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனசையாவது அந்தப் பிராந்தியத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அங்கே 1940-லே கட்டப்பட்ட பழைய வீடுகளிலே தொழிலாளர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இல்லங்களை மாற்றி அவர்களுக்குப் புதிய இல்லங்களைக் கட்டித்தருவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மேலும் அங்கு முழுமையாக வீட்டு வசதியினை ஏற்படுத்த வேண்டும். அங்கே குடிதண்ணீர் வசதி, மருத்துவ வசதி போன்றவற்றை ஏற்படுத்தவேண்டும். அங்கு பணியாற்றுகின்ற தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக வால்பாறை, நீலகிரி மலை, சோலையார் போன்ற இடங்களிலே உள்ள தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அவசர காலத்தில் செல்வதற்கு ஆம்புலன்ஸ் வண்டிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து ரப்பரைப் பொறுத்தவரையில் குமரி மாவட்டத்தில் சுமார் 1,655 ஹெக்டேர் நிலத்திலிருந்து பால் எடுக்கப்படுகின்றது. 1980-ம் ஆண்டு முடிய வருமானம் சுமார் 1 கோடியே 75 இலட்சம் ரூபாயாகும். இது போதுமானதல்ல. இன்னும் நான்கு ஆண்டுகளிலே 6 கோடி ரூபாயைத் தாண்டக்கூடிய அளவுக்கு இந்த ரப்பர் தொழில் வளர்ந்து வருகின்றது. ஆனால் அந்த ரப்பரைப் பொறுத்த வரையில் பராமரிப்பு வேலைகள் போதுமானதல்ல. ரப்பர் ப்ளான்டேஷனைப் பொறுத்தவரையில் ரப்பரைப் பற்றித் தெரியாத காட்டு இலாகாவின் அதிகாரிகளின் கையிலே இருந்தால் சரியாக இருக்காது. ரப்பரைப் பற்றி சரியாக புரிந்துகொள்ளக் கூடியவர்கள் அந்த நிர்வாகத்திலே நியமிக்கப்படவில்லை. இதிலே பல்வேறு தவறுகள் நடந்து வருகின்றது. ஊழல்களும் நடக்கின்றன. எனக்குக் கிடைத்த தகவலின்படி மயிலார் டிவிஷனில் பச்சைப் பாலை ஏலம் விடுகிறார்கள் எனத் தெரிகிறது. அதனைக் கிலோ 14 ரூபாய்க்குக் கூட ஏலம் விட்டு விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதிலே சில தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. நான் இங்கே ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்: அந்தப் பகுதியிலே நான்கு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற் சங்கங்களின் முக்கியஸ்தர்களும், எம்.எல்.ஏ-க்களும் கொண்ட குழுவின் மூலமாக அங்குள்ள நிலைமைகளைக் கண்காணிக்கக் கூடிய அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தவறுகள் நடக்காமல் அவற்றைத் தடுத்துவிட முடியும். ஏற்கெனவே கடந்த 1980-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்திருந்தார். அப்போது அங்கே பெருஞ்சாணி என்ற இடத்திலே ஒரு ஃபேக்டரியைத் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார். அப்போது நான் அங்கே நடக்கின்ற தவறுகள் பற்றிச் சுட்டிக் காட்டினேன். அதற்கான விசாரணை நடத்த உத்தரவைப் பிறப்பிப்பதாகவும் சொன்னார்.

ஆனாலும் இதுவரையில் அந்த ஊழல்களுக்கு அல்லது தவறுகளுக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இது சம்பந்தமாக நான் பல்வேறு கடிதங்களை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பியிருக்கிறேன். ஆனால் எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யப் பெறவில்லை. குறிப்பாக இந்த ரப்பரைப் பொறுத்தவரையில் இன்னும் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன.



அந்த ரப்பர் தோட்டத்திலேதான், தமிழகத்திலிருந்து முதலிலே வெளி நாடுகளுக்குச் சென்று பிறகு அங்கேயிருந்து திரும்பி வந்தவர்கள், சிலோன் போன்ற நாடுகளிலிருந்து திரும்பி வந்தவர்கள்—சிற்றார், கல்லார், குத்தியாறு போன்ற பகுதிகளிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் தாராளமாக உதவியிருக்கிறது. ஆனாலும் அது போதுமானது அல்ல. ஒரு குடும்பத்திற்கு குறைந்தபட்சம் 3 பேருக்கு வேலை கொடுத்தால்தான் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஏனென்றால் ஒரு ஆண்டிலே அவர்களுக்கு 200 தினங்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது என்ற காரணத்தால், அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 3 பேருக்கு வேலை கிடைக்க வேண்டும்.

அடுத்து, குறிப்பாக சிற்றார், குத்தியாறு, கல்லாறு போன்ற பகுதிகளில் இருக்கும் இந்தத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி என்பதே இன்றைக்கு இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லை. போக்குவரத்து வசதியும் இல்லை. குத்தியாறும் கல்லாறும் தனியாக ஒரு காட்டுப் பகுதிக்குள் இருக்கிறது. அங்கேயிருந்து வந்து அவர்கள் மருத்துவ வசதி பெறவேண்டும் என்றால், 10 மைல் கடந்து வரவேண்டும்; ஆகவே அவர்களுக்கு மருத்துவ வசதியும், தண்ணீர் வசதியும், விளக்கு வசதியும், சாலை வசதியும் அவர்களுக்குச் செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று மயிலார் பகுதிகளில் குடியிருக்கும் தொழிலாளர் நிலையும்.

அது மட்டுமல்ல, கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் துறை ஆரம்பிக்கப்பட்டது. இருந்தாலும் அங்கே வேலை செய்கிற சில ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு இதுவரையில் போனஸ் என்பது வழங்கப்படவில்லை. அதைப்பற்றி கேட்கிறபோது, அது அரசாங்கத்திலுடைய துறையைச் சார்ந்ததாக இருக்கிறது, அதனால் போனஸ் வழங்கப்படுவது மறுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அதை கார்ப்பரேஷன் கீழே கொண்டு வந்து போனஸ் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இல்லை என்றால், அதை அரசினுடைய நேரிடை துறையின் கணக்கில் எடுத்துக்கொண்டு, அரசினுடைய கடைநிலை ஊழியர்களுக்கு என்ன சம்பளம், உரிமைகள் கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு சம்பளம், உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, கார்ப்பொரேஷன் அமைக்கப் போவதில்லை என்று சொன்னால், அந்தப் பிராந்தியத்திலே வருகிற எம்.எல்.ஏ.-க்களை கொண்ட குழு ஒன்றை ஏற்பாடு செய்து அந்த ரப்பர் தோட்டங்களை அபிவிருத்தி செய்ய ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு, அரசுக்கு அதிக வருமானத்தை பெறுவதற்

கான முறையிலே ஏற்பாடுகளைச் செய்வதற்கு, ஒரு குழு தன்னை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல. கிராம்பு தோட்டங்களை எடுத்துக் கொண்டால், அதைப்பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 2 தினங்களுக்கு முன்பாக ஒரு மகஜரைக் கூட கொடுத்திருக்கிறேன். லட்சக்கணக்கான ரூபாய்களை வருமானமாக பெற்றுத் தருகிற ஒரு துறை அது. ஆனால் அதனுடைய பராமரிப்பு சரியில்லாத காரணத்தினால்தான், அதில் வருமானம் சரியாக வரவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, அதைச் சரியாக பராமரிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, முந்திரித் தோட்டத்தை எடுத்துக் கொண்டால், அதற்காக பல லட்சம் ரூபாய்களைச் செலவழிக்கப் போவதாக கொள்கைக் குறிப்பிலே கூட சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்த மாவட்டத்திலே எந்தப் பகுதியிலே அந்த முந்திரித் தோட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்—உருவாக்கப் போகிறார்கள் என்று குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று முந்திரியின் விலையைப் பார்ப்போமேயானால், பச்சை முந்திரியின் விலை 1 கிலோவிற்கு 12 ரூபாய் என்று போகிறது. ஆகவே, அரசாங்கத்தின் துறையிலே அந்த முந்திரி கொட்டைகளைச் சேகரித்து, தனியார் முதலாளிகளுக்கு வினியோகிப்பதற்கான ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கடைசியான என்னுடைய தொகுதியிலே, குமரி மாவட்டத்திலே தமிழறிஞராக இருந்த திரு. அறங்கோட்ட ஆசான் என்பவருக்கு ஒரு நினைவாலயம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று, அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே அவருக்கு ஒரு நினைவாலயத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று சுற்றுலாத் துறை நீரோடியிலிருந்து மூட்டம் வரையிருக்கும் ஏ. வி. எம். கால்வாயைப் பயன்படுத்தி சுற்றுலாத் துறையை விஸ்தரிக்க வேண்டும் (மணியடிக்கப் பெற்றது).

தமிழ் அரசு என்று ஒரு பத்திரிகை வருகிறது. அதை தினப் பத்திரிகையாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். சின்னராஜ்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நமது அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்





களைத் தெரிவிக்க முன்வருகிறேன். அரிய மருந்துகளைத் தயாரிப்பதற்காக இன்று இருக்கிற இந்த சின்கோனாத் துறையில் முதன் முறையாக அரசு சிறந்த அக்கறை எடுத்து, அதன் வளர்ச்சிக்காகவும், அதில் பணிபுரிகின்ற பணியாளர்களின் நலனுக்காகவும் நல்ல பல திட்டங்களை வருகிற 5 ஆண்டு திட்டங்களை உள்ளடக்கி, கொள்கை குறிப்பேட்டிலே குறிப்பிட்டிருப்பதை நான் முதலிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் துறையிலே தயாரிக்கப்படும் பல அரிய மருந்துகள் உலகிலே வேறு எந்தப் பகுதியிலேயும் காண்பதற்கு மிக அரிய மருந்துகளாக இருக்கின்றன என்று பல ஆராய்ச்சியாளர்களே கூறியிருக்கிறார்கள். இந்தத் துறையின் ஆராய்ச்சிப் பணிகளை வளப்படுத்தவும், அந்தத் துறையை மேம்படுத்தவும், இதனை கோவை பல்கலைக் கழகத்தோடு இணைத்து பல ஆராய்ச்சிகள் தொடங்க இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

அந்தத் துறையைப் பொறுத்தவரையில் இது மேலும் வளரவும், இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் ஊழியர்களும் நல்லதொரு நிலையை அடைவதற்கும் இந்த அரசு முன்வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் துறையைச் சார்ந்த தொழிலாளர்கள் பெரும்பாலும் மலைப் பகுதிகளில் வாழும் காரணத்தால் அவர்களுக்கு வேண்டிய குடியிருப்பு வசதிகள், கல்வி வசதிகள் போன்றவற்றை நாம் ஏற்படுத்தித் தரக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசு அதற்கான திட்டங்களை இன்று வகுத்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். காட்டு இலாகாவை எடுத்துக் கொண்டால் எதிர்காலத்தில் நமக்கு வேளாண்மைக்கு அடுத்தபடியாக நம் நாட்டுக்கு வருவாய் தேடித்தரக்கூடிய ஒரு துறையாகும் என்பதை அரசு உணர்ந்து ரூ. 59 கோடி செலவில் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாய காட்டுத் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதை யாரும் சாதாரணமாக நினைத்துவிடமாட்டார்கள் என்று கருதுகிறேன். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த துறையாகும் இந்த வனத்துறை. இப்படி ஒருபக்கம் காட்டுவளத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போது ஒரு சில சமூகவிரோத சக்திகள் தங்கள் சுயநலத்திற்காக வனப்பொருள்களை திருடிச் செல்கிறார்கள். அப்படி திருட்டுகள் நடைபெறுவதைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் இந்த அரசு கட்டுப்படுத்தி வருவதை நாம் உணருகிறோம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் வனங்களில் திருட்டுப் போவதைத் தடுத்து, சமூக விரோதச் செயல்களைத் தீவிரமாகத் தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் உணருகிறார்கள்.

இந்தத் துறையில் நாம் முக்கியமாகச் செய்ய வேண்டிய ஒரு பணி என்னவென்றால், இந்தத் துறையைச் சார்ந்திருக்கிற அதிகாரிகளுக்கும், அடிமட்டத்தில் இருக்கிற ஊழியர்களுக்கும் இந்த வனத் துறையில் ஒரு பற்றுதலை ஏற்படுத்த வேண்டும். காடுகளில் வளருகிற மரங்கள், அந்த மரங்களின் வளம் எதிர்காலத்தில் இந்த நாட்டு மக்களின் நலனுக்காக இருப்பவை, அவை தேசிய சொத்துக்கள் என்ற உணர்வினை அவர்களுக்கு ஏற்படுத்துகிற வகையில் அந்த அதிகாரிகளின் ஊழியர்களின் மனப்போக்கில் காவல் துறையில் நாம் ஏற்படுத்தியதைப்போல் இந்த வனத்துறையிலும் ஏற்படுத்த சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் இந்தத் துறையில் பணிபுரியும் அதிகாரிகள் பெரும்பாலோர் மலைப் பகுதிகளில்தான் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பல வசதிகளுமே இல்லை. ரேஞ்ச் ஆபீசர்கள் நிலையில் இருக்கக்கூடியவர்களுக்குக் கூட கிட்டத்தட்ட 50-ல் இருந்து 200 மைல் சுற்றளவில் உள்ள காடுகளை பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கிறவர்களுக்குக்கூட ஜீப் வசதி இல்லை, அவர்கள் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதியும் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. இதுபோன்ற பல வசதிக் குறைவுகளுக்கு இடையேதான் நூற்றுக்கணக்கான மைல் விஸ்தீரணம் உள்ள காட்டு நிலங்களை பாதுகாக்க வேண்டிய பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் அவர்கள் அடிக்கடி மாறுதல்களுக்கு உள்ளாகிறார்கள். பெரும்பாலும் மலைப் பகுதிகளில் வாழும் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகள் படிப்பதற்குரிய கல்வி நிலையங்கள் மலைப் பகுதிகளில் இருப்பது அரிது. ஆகவே முக்கியமாக அவர்களுக்கு, அப்படி வனத் துறையில் பணிபுரியும் அதிகாரிகளின் குழந்தைகளுக்கு புரபஷனல் Professional) காலேஜுகளில் இடம் ஒதுக்கீடு செய்து ஓரளவு சலுகைகளை நாம் செய்து கொடுக்கவேண்டும். இதுபோன்ற நல்ல திட்டங்களை செயல்படுத்துவதால் அரசாங்கம் அவர்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதோடு கூட, அவர்களிடையே இருக்கிற ஒருசிலர் சமூக விரோத சக்திகளோடு இணைந்திருக்கிற போக்கையும் நாம் மாற்றியமைத்திட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று காட்டுவளத்தைப் பெருக்க, குறிப்பாக மலைப்பகுதிகளில் வாழ்கிற ஆதிவாசிகள் நலனில் வனத்துறை அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். காரணம், காட்டு வளத்தை அழிப்பதற்கு சில இடங்களில் பயன்படுத்தப்படுகிறவர்களும் இந்த ஆதிவாசி மக்கள்தான். என் தொகுதி





யான தொண்டாமுத்தூர் தொகுதியில் ஆனைக்கட்டி, இருட்டுப்பள்ளம், பாலமலை போன்ற பகுதிகளில் இந்த ஆதிவாசி மக்கள், இருக்கின்றார்கள் வசிக்கிறார்கள். 15 ஆண்டுகளாக அங்கே ஒரு பள்ளிக்கூடம் அரசால் நடத்தப்பட்டாலுங்கூட, ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவழித்த பின்னாலுங்கூட ஆண்டு ஒன்றுக்கு இரண்டு பேர்கள் கூட அந்த ஆதிவாசி மக்களில் ஐந்தாவது வகுப்புகூட பாஸ் செய்யவில்லை. காரணம் அவர்கள் எல்லாம் மரம் வெட்டுதல், இதுபோன்ற தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆகவே, அவர்களையெல்லாம் இன்றைக்கு காட்டு வளத்தைப் பெருக்குவதற்காக வேலையிலே அமர்த்திக்கொள்ள முன்வர வேண்டும். குறிப்பாக, அந்த ஆதிவாசிகளை கல்வித் தகுதியை ஓரளவுக்கு குறைத்து அதற்கு விலக்களித்து, அவர்களை வாச்சர்கள், கார்டுகள் போன்ற வேலைகளில் நியமிக்கலாம். அவர்கள் கையிலே ஒரு தடியைக் கொடுத்து, காக்கி உடையை அளித்தால் அவர்களுக்கு ஆயுதங்கள்கூடத் தேவையில்லை, அவர்கள் மிகவும் துணிச்சலோடு நல்ல முறையில், அந்தப் பகுதிகளில் பணியாற்றுவார்கள். இரவு [illegible] பார்த்துக் கொள்வார்கள். ஆகவே காட்டிலாகா அவர்களை இத்தகைய பணிகளில் அமர்த்திக்கொள்ள முன்வர வேண்டும்; அவர்களை இத்தகைய வேலைகளில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்க்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஆனைக்கட்டிப் பகுதி மழை குறைவான பகுதி. அங்கே வளமான காட்டு மரங்கள் வளர்வது கடினம். அந்தப் பகுதியில், மழை குறைவில் வளரக்கூடிய காட்டு மரங்களை அந்தப் பகுதிகளிலே வளர்க்கக்கூடிய வகையில், அதற்கான மரங்களை வளர்ப்பதற்கான திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பகுதி தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதியாகும். ஆகவே, மழைக் காலங்களில் தண்ணீர் வருகின்றபோது, அவைகளைத் தேக்கி, அங்கே சிறிய அணைக்கட்டுகள், தடுப்பணைகள் போன்றவைகளை உண்டாக்கினால், தண்ணீரைத் தேக்கி, அதன்மூலம் நல்ல பலனை பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, தென்னகத்திலே மலைப்பாங்கான பகுதிகளிலே இருக்கின்ற இடங்களில் சந்தன மரங்கள் வளர்கின்றன. சத்தியமங்கலத்திலே சந்தன மரங்கள் அதிகமாக வளர்கின்ற காரணத்தினாலே, ஏற்படுத்தியிருக்கும் சந்தன எண்ணெய் தொழிற்சாலையை சத்தியமங்கலத்திற்கும், கோவைக்கும் இடைப்பட்ட ஒரு பகுதியிலே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால், தொழில் வளமே இல்லாத அவினாசி, அன்னூர் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கு தொழில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பெருமளவிற்கு வருமானம் வரக்கூடிய தொழிலாக இந்த மரம் வளர்க்கின்ற தொழில் இருக்கிறது. காடுகளிலே மரங்கள் வளர்க்கப்படுகின்றன. அவைகளை காகிதத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்துவதன் மூலம், கைத்தறிகளின் மூலம் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. ஆகவே, இந்த காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான மரங்களை வளர்ப்பதற்காக யாராவது முன்வந்தால் தனியார் தங்களுடைய பகுதிகளிலே அவைகளை வளர்ப்பதற்கு, பயிரிட இடம் ஒதுக்கி வந்தால், அந்த நிலங்களுக்கு உரிய பணத்தை பெற்றுக்கொண்டு, அங்கே மரங்களை வளர்ப்பதற்கு உரிமை கொடுத்தால், அதன்மூலம் காட்டு வளத்தைப் பெருக்க முடியும். அதே நேரத்திலே அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்டு, நிரந்தரமாக அங்கே காடுகளை வளர்க்க முடியும்; காடுகளைக் காப்பாற்ற முடியும்; காகிதத் தொழிற்சாலைக்கும் அது பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக நீலகிரி அழகு மலைக்குச் செல்கின்ற வழியாக் கோவை நகரம் இருப்பதால் அதை சுற்றுலா வாரியத்தின் கீழ் கொண்டு வந்து சில பணிகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். கோவையிலிருந்து நீலகிரிக்குச் செல்வதற்கு ஒரு ஹெலிகாப்டர் சர்வீசை மத்திய அரசாங்கத்தின் உதவியோடு நிறைவேற்றினால் அதன் மூலம் நிறைந்த அளவுக்கு வருமானம் வரும்; வெளிநாட்டவர்களையும் அது கவரக்கூடிய முறையில் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, பீடர் சர்வீஸ் என்ற சிறு விமான வழித் தடங்களை தமிழக அரசு, மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி நீலகிரி, கோவை, மதுரை போன்ற பகுதிகளை இணைப்பதற்கு முன் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கோவையைச் சுற்றியிருக்கிற சிறுவாணி, மருதமலை, பூண்டி ஆகிய பகுதிகளை ஒருங் இணைக்கின்ற வகையிலே சாலைகள் அமைத்து, கோவையை ஒரு சுற்றுலாப் பகுதியாக ஆக்கினால், அதன் மூலம் கோவை நகரம் சிறந்த முறையில் சுற்றுலா மையமாக வளர்வதற்கு வாய்ப்பும், வசதியும் இருக்கிறது. ஆகவே, இந்தப் புதிய சாலையை, மருதமலை, பூண்டி, சிறுவாணி ஆகியவற்றோடு இணைக்கின்ற வகையில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் செய்தி துறையின் திரைப்படங்கள் மூலம் இந்த அரசாங்கம் மக்களிடத்திலே ஏராளமான செய்திகளைப் பரப்பி வருகிறது. ஆனால், இந்தத் திரைப்படங்கள் கிராமங்களிலே உள்ள திரை அரங்குகளிலே செய்திப் படங்களாகப் போடப்படுவதில்லை. எனவே, இதற்கு அரசாங்கம் ஒரு கடுமையான உத்தரவைப் போட்டு, அரசாங்க செய்திப் படங்களை கிராமங்களிலே உள்ள திரைப்பட அரங்குகளிலே வெளியிடப்பட வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், செய்திகளை





வழங்குகின்ற பத்திரிகைகள், சில நிகழ்ச்சியை, செய்தியை மிகைப்படுத்தி, பொய்யான செய்திகளை மக்களுக்குத் தந்துவிடுகின்றன. நல்லமுறையிலே வெளியிடுகின்ற முறையிலே இதற்கு தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான சில முறைகளை வகுக்க வேண்டும். பொய்ச் செய்திகளை, மிகைப்படுத்திப் போடுவதைத் தடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-40)

திரு. எ. டி. கருப்பையா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னை பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கொண்டுவந்திருக்கிற மானியத்தின் மீது சின்கோனா சம்பந்தமாக பேசுவதற்கு நான் விரும்புகிறேன்.

சின்கோனா துறையிலே இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, தங்களுடைய கணக்குப்படி பெர்மெனென்ட் தொழிலாளர்கள் இரண்டாயிரம் பேர்கள்; டெம்பரரி தொழிலாளர்கள் 2,100 பேர்கள். அந்த தொழிலாளர்களுக்கு இன்றைக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் எட்டு ரூபாய் 25 பைசா. இந்த எட்டு ரூபாய் 25 பைசாவை பெற்று அந்தத் தொழிலாளர்கள் குடும்பம் நடத்த முடியுமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அந்தத் துறையிலே பணி புரிகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் என்பது கிடையாது; கொடுக்கப்படுவதில்லை. ஆனால் இந்தத் துறை கிட்டத்தட்ட 120 ஆண்டுகாலமாக இயங்கி வருகின்றது என்று சொல்லப்படுகிறது. இப்படி 120 ஆண்டுகாலமாக இயங்கிக் கொண்டிருக்கிற, அந்த துறை முறையிலே ஒரு வேகமாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிற நேரத்திலே கூட, அதில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்படுவதில்லை என்றால், அது நியாயம் தானா என்பதை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். போனஸ் வழங்கவேண்டும்; கொடுக்கப்படும் சம்பளம் குறைவானது; அதிகப்படியான சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் பக்கத்தில் தனியார் கம்பெனிகளில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 10 ரூபாய் 34 பைசா ஊதியமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளத்தை

[திரு. எ. பு. கருப்பையா] [1981 ஏப்ரல் 29

சாலையிலிருந்து ... பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு கொடுக்கவில்லை. அந்த தொழிலாளர்கள் என்ன உற்பத்தி செய்கிறார்கள் என்றால், நாட்டிற்குத் தேவையான, மக்களுக்குத் தேவையான கர்ப்பத்தடை மாத்திரைகளை உற்பத்தி செய்கிறார்கள். அந்த கர்ப்பத்தடை மாத்திரைகள் இன்றைக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதன்மூலம் அன்னியச் செலாவணியும் கிடைக்கிறது. சம்பளத்தை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆறுமாதங்களுக்கு ... நோய்களை ... மருந்துகளை உற்பத்தி செய்கிறார்கள். வாசனை திரவியங்களை அங்கே தயார் செய்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு இன்னமும் முறையான சம்பளம் கொடுப்பது நியாயந்தானா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது; ஒரு குடியிருப்பிலே நூறு பேர், ஐம்பது பேர் என்று இருக்கிறார்கள். ஒரு குடியிருப்பிலே இரண்டு குடும்பங்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கழிப்பிடங்கள் கிடையாது. பள்ளிக்கூட வசதியும் கிடையாது. ஆஸ்பத்திரி வசதியும் அவர்களுக்கு கிடையாது. பஸ் போக்குவரத்து வசதியும் கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப்பள்ளி எட்டு மைல்களுக்கு அப்பால் வால்பாறையில் இருக்கிறது. இதில் படிக்கிற மாணவர்களுக்கு பஸ் வசதி கிடையாது. சர்க்கார் அந்த துறையிலே பணிபுரிகின்ற தொழிலாளர், அதிகாரிகள் குழந்தைகளுக்கு வால்பாறை வந்து படிக்க போவதற்கு பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, காடம்பாறையிலே, ஆழியாறு மின்கோணவின் பக்கத்தில், ஒரு சிறிய பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே பெஞ்சு, நாற்காலி கிடையாது. ஆகவே மழைக் காலங்களிலே பிள்ளைகள் தரையிலே உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு நோய் ஏற்படுகிறது. அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி கிடையாது, கக்கூஸ் வசதி கிடையாது, பஸ் வசதிகள் கிடையாது, இந்த நிலைமைகளை யெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் அமைச்சரைக் கேட்டுக் கொண்டேன், அவர்கள் நிதி ஆதாரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, போனஸ் அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுப்போம் என்று வாக்குறுதி



1981 ஏப்ரல் 29] [திரு. எ. பு. கருப்பையா]

அளித்தார்கள். ஆனால் அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி அந்த போனஸ் அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத் துறை சம்பந்தமாக ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நீலகிரி மலையிலே சோலக்குடி என்ற பகுதியிலே ஈட்டி மரத்தை சமூக விரோதிகள் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதை அந்தப் பகுதியிலே உள்ள தொழிலாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை படம் எடுத்திருக்கிறார்கள். அவைகளை துணைத் தலைவர் அவர்களிடம் கொடுத்து அதன் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே எடுத்துச் செல்லப்பட்ட மரங்கள் என்ன ஆயிற்று? இதுவரை அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் இனிமேலாவது நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைமை]

சிலோனிலிருந்து வந்த பெயர்ந்தவர்கள் அங்கே வந்து அவசி செடி, காப்பி செடி, ஏலச் செடி இவைகளைப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களையெல்லாம் வன இலாகா அதிகாரிகள் அப்புறப்படுத்தி அவர்களை அடித்துவிரட்டி அவர்களுக்கு கஷ்டங்களையும் துன்பங்களையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கள் பயிரிட்டு வந்த நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, மதுரை மாவட்டத்திலே வருஷ நாடு என்ற பகுதியிலே, வைகை கரையின் இரு கரைகளிலேயும் ஏராளமான மரங்களை வெட்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மனு எனக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். * *

திரு. அ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது * * புகார் சொல்லியிருக்கிறார்கள். இது இந்த அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா? ஆதாரம் இருக்கிறதா? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கையிலே மனு இருந்தால் அதை என்னிடம் காட்டிவிட்டுத்தான் சொல்லியிருக்க வேண்டும்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஏ. டி. கருப்பையா : அந்த மனுவைத் தங்களிடம் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி குற்றச்சாட்டுக்களையெல்லாம் அனுமதிக்க முடியாது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான சின்கோனா, காட்டுவளத் துறை, தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வள மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று, அவற்றைச் சிறப்புற நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்களையும் பாராட்டி என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது நாடு செழிப்புற, காட்டுவளத் துறையைச் சிறப்பாக உருவாக்கப் புதியதொரு திட்டத்தைக் கடுமையாக உருவாக்கிக்கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன். வனங்களை அழித்து வருவதால் வன விலங்குகள் பெரும்பாலும் அழிந்து வருகின்றன. இயற்கை நூற்றுக்கு உள்ள காடுகள் பாதிக்கப்பட்டுள்ளதால் மழையில்லாமல் வறட்சி உருவாகி வருகிறது. வனங்களிலுள்ள வனச் செல்வங்களின் பயனைத் தெரிந்துகொண்ட ஒரு சிலர் பெரும் முதலாளிகள் ஒரு சிலர் பழங்குடி மக்களைப் பயன்படுத்தி வனச் செல்வங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வனச் செல்வங்கள் திருட்டுப் போகின்றன. இதில் வனச் செல்வங்களின் பயன் தெரியாத பழங்குடியினர் சிக்கிக் கொள்கின்றனர். ஆனால் பழங்குடியினரைத் திருடச் சொல்பவர்கள் வழக்குகளில் சிக்கிக் கொள்வதில்லை. எனவே, திருடச் சொன்னவர்களையும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிறையில் வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனங்களில் உள்ள சந்தன மரங்கள் திருட்டுப் போகின்றன. அதைத் திருடியவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது வழக்குப்போடப்பட்டு அவர்களை ஜாமீனில் விட்டு விடுகிறார்கள். இதனால் பிறகு அந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களே மீண்டும் அதே தொழிலில் ஈடுபடுகின்றார்கள். ஆகவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்காக இரண்டு முறை சந்தனக் கட்டைத் திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க அரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மரங்கள் எல்லாத் தொழில்களுக்கும் பயன்படுகின்றன. என்னுடைய தொகுதியில் உள்ள கொல்லிமலையில் யூகலிப்டஸ் அதிகமாக வளர்ந்து உள்ளதால் வனத்துறையின் சார்பில் ஒரு தொழிலகத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டுகிறேன்.

மரங்களை நட்டு காடுகளை உருவாக்குகின்ற வன விவசாயிகளுக்கு மானிய விலையில் மர நாற்றுக்களைக் கொடுத்து, அவர்கள் மரங்களை வளர்க்கவும் ஆலோசனை கூற வனத்துறை சிறப்பான வகையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாதிரி பகுதிகளில் ஒரு சில மரங்களை வெட்டிக் கடத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சை மரங்களை வெட்டச் சொல்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சட்டம் இயற்றி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள கொல்லிமலை அடிவாரத்தில் சாரவல்லி பகுதியில் வனத்துறை செக் போஸ்ட் ஒன்றை அமைத்து, வனச் செல்வங்கள் திருட்டுப்போவதைத் தடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சுவீடன் நாட்டின் உதவியுடன் செயல்பட இருக்கும் காடு வளர்ப்புத் திட்டத்தில் கொல்லிமலையில் வனத்துறைக்குச் சொந்தமான பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் பெரும் மரங்களை உருவாக்கிப் பெரிய சோலையாக உருவாக்கித் தரும்படி வேண்டுகிறேன்.

பட்டா நிலங்களிலுள்ள மரங்களைப் பட்டா சொந்தக்காரர்களே தங்களுடைய வீட்டைக் கட்டுவதற்காகப் பழங்குடி மக்கள் அனுமதி கேட்கின்றபொழுது அந்த அனுமதி கிடைப்பதற்கு இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள் ஆகின்றன. அவ்வாறின்றி, விரைவாக அதற்கு அனுமதி தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனக்காடுகளில் மக்களுக்குப் பயன்படும் மூலிகைகள், மரப் பட்டைகள், வேர்கள் போன்ற வனச் செல்வங்கள் இருக்கின்றன. அவைகளைப் பாதுகாத்து, அரசுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் வனத்துறை அதிகாரிகள் அந்தப் பொருள்களுக்கு மதிப்பீடு செய்து, அதை அரசு மதிப்புக்கு ஒப்பான தொகைக்கு ஏலத்தில் விட்டு சிறப்பான நடவடிக்கையை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு காடுகளிலும் ஒவ்வொரு விதமான மூலிகைகள், பட்டைகள் உள்ளன. எந்தெந்த விதமான வனச் செல்வங்கள் எந்தெந்தக் காடுகளில் கிடைக்கின்றன என்பதைக் கண்டறிந்து அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு இந்த மதிப்பீட்டைச் செய்வதற்குச் சிறப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில் வனத்துறை சார்பில் பயணியர் மாளிகை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள பயில்நாடு ஆர்.எஃப்.-இல் உள்ள சுமார் 3,000 ஏக்கர் நிலத்தில் பனைமரங்களை வளர்த்து அந்தப் பனைமரங்களை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஏழை விவசாயப் பெருமக்கள் அனுபவித்து வரும் சுமார் 2,000 ஏக்கர் நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க விரைவாக அறிக்கையை அரசுக்கு அனுப்பி, அவர்களுக்கு விரைவாகப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வன அலுவலர்கள் வனச் செல்வங்கள் திருட்டுப் போவதைக் கண்டு பிடிக்கச் செல்லும்பொழுது அந்த வன அலுவலர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு பாதுகாப்புக் கருவிகள் வழங்க வேண்டுகிறேன். மாவட்டத்தில் உள்ள வன அலுவலருக்கு மட்டும்தான் போக்குவரத்து வசதிக்கு ஜீப் உள்ளது. ஒவ்வொரு ரேஞ்ச் ஆபீசருக்கும் ஜீப் கொடுத்தால் சந்தன மரத் திருட்டைக் கண்டுபிடிக்க அவர்கள் விரைவாகச் சென்று நடவடிக்கை எடுக்க நல்லமுறையில் அமையும்.

பரந்த முதுமலைக் காட்டில் வன அதிகாரிகள் ரைடுக்குச் செல்லும்பொழுது அதிகாரிகளுக்கு ஒயர்லெஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் அவர்கள் விரைவாகச் செயல்பட வசதியாக இருக்கும்.

சுற்றுலா வாரியத்தின் மூலமாக என்னுடைய தொகுதியில் உள்ள கொல்லிமலையில் நவீன விடுதி வசதியைச் செய்து தருமாறு வேண்டுகிறேன்.

கொல்லிமலையில் செம்மேடு அறப்பளீஸ்வரர் ஆலயம் முதல் ஐந்தாறு ஆகாச நீர்வீழ்ச்சி வரையில் தார் சாலை அமைத்து சுற்றுலா வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து, பார்க் அமைக்கவும் அமைச்சர் அவர்கள்





நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே மிகப் பெரிய நீர்வீழ்ச்சி ஆகாச நீர்வீழ்ச்சியாகும். அதைச் சிறப்புடையதாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பழங்குடியினர் திட்டத்திற்காக வனத்துறை 1981-82-லே 60.61 லட்சம் ரூபாய் ஒதுக்கி உள்ளது. அதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எனது தொகுதியில் உள்ள கொல்லி மலைப் பகுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாப் பகுதியாக அறிவித்து இருந்தாலும் அதற்கான முதற்கட்ட பணிகளைச் செய்வதற்கு போன வருடம் போக்குவரத்துத் துறையிடம் ஒப்படைத்து இருந்தும், அந்தத் துறையில் ஏற்பட்ட நட்டத்தின் காரணமாக அந்தப் பணியை அவர்கள் செய்யவில்லை. ஆகவே அதை இந்த சுற்றுலாத் துறையின் மூலம் இந்த வருடம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொல்லிமலையைச் சுற்றுலாத் துறை நல்ல முறையில் வளம்பரப்படுத்தவேண்டும் என்று வேண்டுகிறேன். அங்கே ஒரு சுற்றுலா தங்கும் விடுதி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொல்லிமலையிலே தொலைநோக்குக் கருவிகள் இரண்டு அமைக்க வேண்டும். கொல்லிமலை வனக் காடுகளில் பணப் பயிர்களான ஏலம், காப்பி போன்ற பயிர்கள் அதிகமாக இருந்தும் அங்கே உள்ள பழங்குடியினருக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாக இல்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வனச் செல்வங்களைப் பாது காப்பதற்குப் பழங்குடியினரைச் சேர்ந்த காவலர்களை அதிகமாக நியமிக்க வேண்டும்.

தமிழக அரசு செய்யும் சாதனைகளை மக்களுக்கு ஓரளவு பயன்படுகிற வகையில் திரைப்படச் செய்தி வெளியீடு அடிக்கடி வெளிவரவேண்டும். அதே நேரத்தில் பல தியேட்டர்களில் மத்திய அரசினுடைய இந்தியன் நியூஸ் ரீல்கள் மட்டும்தான் காட்டப்படுகின்றன. தமிழக அரசின் வெளியீடுகள் கட்டாயம் அனைத்துத் தியேட்டர்களிலும், அனைத்துக் காட்சி களிலும் காட்டப்பட வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோடியக்காடு வனவிலங்கு சரணாலயத்தை மேம்படுத்த புதிதாக ரோடு போடவேண்டும். அங்கிருக்கின்ற பங்களாவை அபிவிருத்தி செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியான கொல்லிமலையிலே ஒரு பெரிய வனவிலங்கு சரணாலயத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

[1981 ஏப்ரல் 29

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையிலே தமிழக அரசு,
புரட்சித் தலைவர் அரசு பல்வேறு காரியங்களைச் செய்து நடவடிக்கை எடுத்து
இருக்கின்றது. அதிலும் குறிப்பாக கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில்
உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக இன்று திகழ்ந்து கொண்டிருக்
கின்றது. அண்மையிலே அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அதை
விருத்தி செய்ய அரசு ஒரு உயர்மட்ட அதிகாரியை நியமித்திருக்கிறது என்று.
அப்படிச் செய்கின்றபோது அங்கேயுள்ள காந்தி மண்டபத்தில் இருந்து மனல்
சேரி வரையில் கடற்பகுதி வரையில் பாதுகாப்பு சுவரை எழுப்பினால், மணல்
மேடுகளை அமைத்தால், அங்கே நீண்டதொரு கடற்கரைச் சுவர் அருமையாக
அமைக்கப்பட்டு, நிச்சயமாக அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள்
உட்கார்ந்து அனுபவிக்கின்ற வகையிலே உபயோகமாக இருக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே விவேகானந்தர்
சிலைக்கு அடுத்தபடியாக அமைக்கப்பட்டுள்ள இடத்திலே திருவள்ளுவர் சிலை
நிறுவுவதற்கும், திருக்குறள் ஆராய்ச்சி மையம் ஒன்று அமைப்பதற்கும் 185
லட்சம் ரூபாய் மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளதாகக் குறிப்பிட்டிருக்
கிறார்கள். ஆகவே இந்த அரசைப் பொறுத்த அளவிலே திருவள்ளுவர் சிலை
அமைப்பதற்கும், திருக்குறள் ஆய்வு மையம் அமைப்பதற்கும் வேண்டிய நட
வடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
அதேபோல கன்னியாகுமரியிலே அமைந்திருக்கின்ற பகவதி அம்மன் கோவில்,
சுசீந்தரம் கோவிலில் ஒலி, ஒளி காட்சி அமைக்கப்படவேண்டும். மதுரையிலே
இருப்பதைப்போல பகவதி அம்மன் கோவிலில் அமைக்கவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அங்கே வருகின்ற பக்தர்களும், சுற்றுலாப் பயணி
களும் இதனால் மிகவும் பயனடைவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரிக்கு அடுத்தபடியாக வட்டக்கோட்டை இருக்
கின்றது. அந்த வட்டக்கோட்டை என்ற இடம் சுற்றுலாப் பயணிகளைக்
கவரத்தக்க அளவுக்கு மிகவும் அருமையான இடமாக இருக்கின்றது. ஆனால்
அந்த இடத்தை மத்திய அரசுக்கு இதற்கு முன்னால் இருந்தவர்கள் நிலைமை
கள் காரணமாக எப்படிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

(நண்பகல் 12-00)

ஆகவே, அந்த வட்டக்கோட்டை என்ற இடத்திலே மாநில சுற்றுலா
வளர்ச்சிக் கழகம் எடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, மகாகவி தேசிகவிநாயகம் பிள்ளை



1981 ஏப்ரல் 29] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும். அவர்களைக் கவுரவிக்
கின்ற வகையில் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கன்னியாகுமரியில் இப்போது வருகின்ற பயணிகள்
தங்குவதற்கு இட வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, கன்னியா
குமரியில் 3 ஸ்டார் ஓட்டலோ, 5 ஸ்டார் ஓட்டலோ அமைப்பதற்குத் தனியார்
கள் முன் வந்தாலும், அவர்களுக்கு உரிமை வழங்க வேண்டும். அங்கே 3 ஸ்டார்
ஓட்டல் ஒன்றை அமைப்பதற்கான வழிவகைகள் செய்யவேண்டும். இந்தத்
துறையை ஊக்குவிக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, திரைப் படங்களைப் பொறுத்த அளவில் இன்று
தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற சென்சார் போர்டு நடவடிக்கை மாறிக்
கொண்டிருக்கிறது. மலையாளப் படங்களைப் பொறுத்த வரையில் அதற்கு
ஒரு தனி சென்சார் போர்டு இருக்கிறது; தனியான வகையிலே நடக்கிறது.
தமிழ்ப் படங்களைப் பொறுத்தவரையில் அதற்கு உரிய சென்சார் போர்டில்,
பாகுபாடு காட்டப்படுகிறது. மலையாளப் படத்திற்கு ஒருவிதமாகவும்,
தமிழ்ப் படத்திற்கு ஒருவிதமாகவும் நிலை இருக்கிறது. அதைப்போலவே
இந்திப் படங்களுக்கு, சென்சார் போர்டிலே கூடுதலான சலுகைகள் கொடுக்கப்
படுகின்றன. இப்படிப் பல்வேறு மொழிகளில் சென்சார் போர்டுகள் மிகுந்த
தாராளமாக சலுகைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்ப் படத்திற்கு
மட்டும் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படுவதால், ஏறத்தாழ 50 படங்
களுக்கு மேல் வெளிவராத நிலையிருக்கிறது; விநியோகஸ்தர்கள் அந்தப்
படங்களை வாங்கி வெளியிட முடியாத நிலைமையில் இன்றிருக்கிறார்கள்.
ஆகவே, மத்திய அரசினிடம், தமிழ்ப் படங்களைச் சரியான முறையிலே
சென்சார் செய்வதற்கு, தமிழக அரசே உரிய அதிகாரிகளை நியமிப்பதற்கு
மத்திய அரசை அணுக வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போலவே, மாநில அரசு செய்திப் படப் பிரிவை சென்னையிலே
இயக்கிக் கொண்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் அதற்காகத் தமிழ்நாடு
அரசின் செய்திப் பிரிவு ஒன்றை மதுரையிலே ஏற்படுத்த வேண்டுமென்று
பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தியேட்டர்களைப் பொறுத்த அள
வில், தமிழகத்தில் சில தியேட்டர்கள் சுகாதாரமற்ற முறையில், வசதியற்ற
முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தியேட்டர்களுக்கு உடனடி
யாக லைசென்சை ரத்து செய்து, நல்ல வசதிகளை, சுகாதார வசதிகளைச்
செய்த பிறகு, அவைகளுக்கு மீண்டும் லைசென்ஸ் கொடுக்கக்கூடிய நடவடிக்கை
களை எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை ரப்பர் தோட்டங்களிலே பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப்போல், ரப்பர் தோட்டங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர் களுக்குக் குடியிருப்பு வசதி, வீட்டு வசதி போன்றவைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே கிராம்பு பயிரிடுவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் அதற்கு கூடுதலான நிதியை ஒதுக்கி, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். சந்தனமர ஏலத்தைப் பொறுத்த அளவில், மத்திய அரசு வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத் தடை விதித்திருக்கிறது. அந்த நிலையில் ஆண்டுதோறும் காட்டிலாகா ஒரு பெரிய நஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசை மாநில அரசு அணுகி, சந்தன மரங்களை, ஏலம் எடுக்கின்ற சந்தன மரங்களை வெளிநாடு களுக்கு அனுப்புவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டு, அதன் மூலமாக மாநில அரசு கூடுதலான நிதி வருவாயைப் பெறுகின்ற வகையில் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பிக்கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர் களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சரவர் கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொள்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைக்கு உலகத்திலே இருக்கிற சூழ்நிலைகள் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒரு நாடு வளமான நாடாக மாறவேண்டும் என்றால் அந்த நாட்டிலே எண்ணெய் உற்பத்தியாக வேண்டும் அல்லது அந்த நாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்து அதிகமான எண்ணிக்கையில் உல்லாசப் பயணிகள் வர வேண்டும். அப்போதுதான் ஒரு நாடு வளமான நாடாக இருக்கும். உலகப் பொருளாதார நிலை இன்றைக்கு அப்படி இருக்கிறது. ஆக, எண்ணெய்க்கு, பெட்ரோலியத்திற்கு அடுத்தபடியாக சுற்றுலாப் பயணிகள் வருகை அமைந் திருக்கிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு சுற்றுலாத்துறை ஒரு தொழிலாக முன்னேறிக் கொண்டு வருகிறது.



1990 ஆம் ஆண்டில் நம்முடைய நாட்டிற்கு, இந்தியாவுக்கு வெளிநாட்டி லிருந்து வரக்கூடியவர்கள் எண்ணிக்கை சுமார் 35 இலட்சம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் அவர்கள் மூலமாக நமக்குக் கிடைக்கின்ற அந்நியச் செலாவணி கிட்டத்தட்ட 5,000 கோடி என்றும் எதிர்பார்க்கப்படு கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் நம்முடைய நாட்டிற்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை, உலகத்தில் இருக்கிற சுற்றுலாத் துறைக்குப் போகிறவர்களின் எண்ணிக்கையில் 3.05 சதவிதம் என்று இருக்கிறது. நமக்குக் கிடைக்கின்ற வருமானம் சுமார் 500 கோடி என்ற அளவிலேதான் இருக்கிறது.

குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து இங்கே வரக்கூடியவர்களுக்குப் பல்வேறு வகைகளிலே சிரமங்கள் இருக்கின்ற காரணத்தால் இங்கே வர அஞ்சுகிறார்கள். அதுபற்றி ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள்.

" Selling India has become one of the hardest things to do and those who come here once are so shocked, they seldom ever want to come back again. It is not the poverty that shocks them but the filth, the uncertainties of travel, the arrogance of our officials, the intemperate cheats who abound in the garb of businessmen and, above all, human degradation in the form of hordes of beggars who paw and pester till their very sight becomes disgusting, Even a dog who begs for a biscuit would scamper away if admonished by its moster but not our beggars. A nation does not necessarily have to be afluent to have self-respect and dignity. Poorer nations than ours are known to be more dignified than we are in the presence of strangers who come to visit us. "

திரு. என். சங்கரய்யா : அவர்கள் சொல்வது இந்தியாவில் இருக்கிற பிரச் சனை. அதைத் தெரிவிக்கின்ற இடம் வேறு என்பதை நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

* திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, சுற்றுலா என்று சொன்னால் அது தமிழ்நாட்டுக்கு அல்லது சென்னைக்கு மட்டும் வருகிறவர்கள் என்பதல்ல. சுற்றுலாப் பயணிகள் வந்தால் சென்னைக்கு, மகாபலிபுரத்திற்கு, பெங்களூருக்கு, தாஜ்மகாலுக்கு, எல்லோராவுக்கு இப்படிப் பல்வேறு இடங் களுக்கு வருகிறார்கள். ஆகையால் இந்தியாவில் இருக்கிற சூழ்நிலையைத் தான் எடுத்துச் சொன்னேன்.

குறிப்பாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் காஷ்மீருக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றிருந்தபோது அன்றைக்குச் சபாநாயகராக இருந்தவரைச் சந்தித்துப் பேசினோம். அப்போது அவர் சொன்னார், "உங்களுக்கு இந்த மாநிலத்திலே என்ன என்ன வசதிகள் செய்யவேண்டு மென்று சொல்லுங்கள், செய்யத் தயாராக இருக்கிறோம்" என்று சொன் னார்கள். இன்னும் வேகமாக உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லும்போது, "ஸ்ரீநகரிலிருந்து சந்திர மண்டலத்திற்குப் போக வேண்டுமா, அதற்கும் நாங்கள் வழி செய்கிறோம்" என்று சொன்னார்கள். சுற்றுலாப் பயணி களைக் கவர்வதில் அந்த அளவுக்கு அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். காரணம் அந்த பகுதியின் வருமானம் சுற்றுலாவை நம்பி இருக்கிறது. அந்த நாட்டின் வருமானம் முழுவதும், பொருளாதாரம் முழுவதும் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்து இருக்கிறது; அது அவர் களுடைய வாழ்க்கைக்கு வழி வகுக்கிறது.

நம்முடைய நாட்டில் நமக்குப் பல்வேறு வகையிலான வசதிகள் இருக் கின்றன. குறிப்பாக மகாபலிபுரம், கன்னியாகுமரி, சித்தன்னவாசல் போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் போகின்ற வகையில் வசதி களைச் செய்து கொண்டிருந்தாலும் அதிகமாகச் சுற்றுலாப் பயணிகள் வர முடியவில்லை. காரணம், நான் முதலிலே சொன்ன மாதிரி அவர்களுக்கு இங்கே ஏற்படுகின்ற சிரமங்கள்தான்.

குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பர்மா போன்ற இடங்களி லிருந்து உல்லாசப் பயணிகள் இங்கே வருகின்றார்கள். நம்முடைய நண்பர் [illegible] அவர்கள் கூடச் சொன்னார்கள். சுற்றுலாப் பயணிகளைக் கவர தமிழ்நாட்டில் எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். தமிழ்நாட்டுக்கு அந்தச் சுற்றுலாப் பயணிகள் வருவது என்றால் அதை அவர்கள் ஒரு 'அட்வெஞ்சராக' ஒரு பயங்கரமான வேலையாக நினைக்கிறார்கள். காரணம் இங்கே கப்பல் அல்லது விமான தளத்தில் அவர்கள் வந்து இறங்கியவுடன் கஸ்டம்ஸ் கட்டுப் பாடு இருக்கிறது; அதைக் கடந்து வெளியே வந்த பிறகு, அவர்களுடைய பொருட்களைப் பாதுகாக்க முடியாத நிலை இருக்கிறது. ஒவ்வொரு போர்ட்டரும் ஒவ்வொரு பொருளை எடுத்துக் கொள்கிறார். யார் எந்தப் பொருளை எடுத்துச் செல்கிறார் என்று தெரியாத நிலைமை இருக்கிறது. அவர்களைத் தாண்டி, டாக்சிக்கு வந்தால் இங்கே டாக்சிக்காரர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். 200 ரூபாய், 300 ரூபாய் வாங்குகிறார்கள்



(பிற்பகல் 12-10)

மீனம்பாக்கத்திலே இருந்து இங்கே வருவதற்கு 300 ரூபாய், 400 ரூபாய் கேட்கிறார்கள். அதேபோன்று கப்பல் துறைமுகத்திலே இருந்து அவர்கள் தங்கவேண்டிய இடங்களுக்கு வந்து சேரவேண்டும் என்றாலும் 300 ரூபாய், 400 ரூபாய் கேட்கிறார்கள். மேலும் அப்படிக் கொடுத்துவிட்டு வருகின்றவர் களால் தாங்கள் வெளிநாடுகளிலே இருந்து கொண்டுவருகின்ற பொருட்களைப் பாதுகாப்பாக எடுத்து வர முடிகின்றதா என்றால் இல்லை. துறைமுகத்தை விட்டு வெளியே வந்தவுடன் அங்கே ஒரு கேங் இருந்துகொண்டு—அதனை ஒரு கொள்ளைக் கூட்டம் என்று கூடச் சொல்லலாம்—டாக்சி மெதுவாகச் செல்கின்ற நேரத்தில் பின்னாலே வந்து வெளிநாட்டுப் பொருட்களை எல்லாம் அபகரித்துக்கொண்டு செல்கின்ற காட்சியைத்தான் பார்க்கிறோம். இதனைக் காவல் துறை அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடிகின்றதா என்றால் முடிய வில்லை. எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளுக்குச் சன்மானம் கொடுத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அடுத்து ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா விலே இருக்கின்ற டைரக்டர் ஆஃப் ட்ராவல் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய நிறுவனத்தின் சொந்தக்காரர் இந்தியாவிலே ஏன் டூரிசம் வளரவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்கிறபோது ஒன்றைச் சொல்கிறார். [illegible] நிறுவனம் ஒன்று இங்கே சுற்றிப்பார்ப் பதற்கென்று பலபேரை அனுப்ப இருந்தது. அப்போது போதிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டதற்குப் பிறகு அங்கே இருந்து ஒரு தந்தி வந்ததாம். அதாவது இந்தியாவிற்கு வருகின்ற சுற்றுப்பயணம் பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலையிலே அவர்கள் இருப்பதாகவும் அதற்குக் காரணம் தமிழ்நாட்டின் ஓட்டல்களிலே தங்கினால் [illegible] போடுகிறார்கள் என்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அவர்கள் இங்கே வருவ தையே மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைமைக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆகவே ஒரு புறத்திலே சுற்றுலாவை வளர்க்கவேண்டும் என்று நாம் விரும்பு கிறோம், இன்னொரு புறத்திலே வெளிநாடுகளிலே இருந்து வருபவர்களை வராமல் தடுக்கின்ற காரியங்களையும் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே வெளிநாட்டுப் பயணிகளைக் கவருகின்ற வகையிலே நாம் காரியங்களைச் செய்து ஆகவேண்டும். (குறுக்கீடு). அடுத்து குறிப்பாக சென்னை நகரிலே திரு. நேரு அவர்களுக்குச் சிலை வைக்க இருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதனைப் பாராட்டுகிறேன். சென்னை நகரிலே

ஒரு பெரிய உயர்ந்த பீடத்தைக் கட்டி சோசலிசத்தின் தந்தையான, புரட்சி
கரமான சிந்தனைக்குச் சொந்தக்காரரான, இந்தியாவினைச் சுற்றியுள்ள நாடு
களில் பல்வேறு சர்வாதிகாரமான நிலைமைகள் எல்லாம் இருக்கின்றபோது
இந்தியாவிலே தொடர்ந்து ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு வருகின்றது
என்றால் அதற்குக் காரணமாக இருந்த திரு. நேரு அவர்களுக்கு சென்னை
யிலே சிலை வைக்க எடுக்கப்படுகின்ற அந்த முயற்சியோடு இங்கே சட்ட
மன்றத்திலேயும் அவருடைய படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வ. வே. சு. ஐயர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுக்க இருக்
கின்ற முயற்சியைப் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல. மறைந்த மாபெரும்
கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய சிந்தனைகளை சாதாரண மனிதனும்
புரிந்து கொள்ளக்கூடிய வகையிலே காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச்
செயல்படுத்தினால்தான் நாம் நிச்சயமாகப் பாரதியாருக்கு அஞ்சலி செலுத்திய
தாக இருக்கும். சென்னையில் இருக்கின்ற வள்ளுவர் கோட்டத்தைப்
பொறுத்தவரையில் அது சரியாகப் பராமரிக்கப்படவில்லை. ஒரு புறத்திலே
அந்த வள்ளுவர் கோட்டத்திற்கு வெளியிலே குப்பை கூளங்களைக் கொட்டு
கிறார்கள். மற்றொரு புறத்திலே அந்தக் கட்டிடத்திற்குள்ளே பணிபுரிகின்ற
வர்கள் குப்பையை உள்ளேயே சேர்த்து வைத்திருக்கிறார்கள். அதனை மிகப்
பெரிய மான்யூமென்ட் என்று சொன்னால் கூட மிகையாகாது. அதை முழு
மையாகப் பராமரிக்கவேண்டியது இந்த அரசினுடைய கடமை. அது குறித்து
நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே அதிகமான ரப்பர்
மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்கள் எல்லாம் எப்படி ஏலம் போடப்படு
கின்றன என்று சொன்னால் 10 டன், 15 டன் என்றெல்லாம் லாட்டாக ஏலம்
போடப்படுகின்றது. அந்த ஏலத்திலே யார் போட்டி போட்டுக் கொண்டு
ஏலத்தை எடுக்க வருகிறார்கள் என்று சொன்னால், வடநாட்டிலேயிருந்து
வரக்கூடிய பெரிய பெரிய முதலாளிகள், டாட்டா போன்றவர்கள், டன்லப்
நிறுவனத்தைப் போன்றவர்கள் வந்து போட்டி போட்டு அந்த ஏலங்களை
எடுக்கிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். அப்படி அந்த நிலை
மையை மாற்ற வேண்டும் என்று சொன்னால், நீங்கள் ஏலம் போடும் அந்த
டன்னேஜை குறைத்து, 1 டன்னாக, 2 டன்களாக ஏலம் போட வேண்டும்.
அதன் மூலமாகத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிறிய தொழிற்சாலைகளை
வைத்திருப்பவர்கள் வந்து இந்த ஏலத்திலே கலந்து கொண்டு, அந்த ரப்பரை
ஏலத்திலே எடுத்துப் பயன்படுத்தி அதன் மூலமாகப் பலருக்கு வேலை



வாய்ப்புக் கொடுக்கிற அளவில் பல சிறிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவார்
கள். அந்த வாய்ப்பு புதிதாக ஏற்படும், ஆகவே அதைச் செய்ய அரசாங்கம்
முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்யும் என்றும் நம்பு
கிறேன்.

அடுத்து கொடைக்கானலிலே தொலைக்காட்சி நிலையம் ஒன்றை அமைப்
பதற்காக மத்திய அரசு ஏற்பாடு செய்து அதற்காக மாநில அரசாங்கம்
தேவையான இடத்தைக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி
கொடைக்கானலிலே ஒரு நிலையம் அமைக்கப்பெறும்போது, தமிழ்நாட்டில்
இருக்கிற குக்கிராமங்களில் உள்ள மக்கள் அனைவரும் தொலைக்காட்சியைக்
கண்டு களிக்க வசதி செய்யும் பொருட்டு, அனைத்து ஊர்களிலும் உள்ள
பஞ்சாயத்துகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்கான நடவடிக்
கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். இப்பொழுதிலிருந்தே வேண்டு
மானாலும், இன்ஸ்டால்மெண்ட் முறையில் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி
களை வாங்க, ஒரு குறிப்பிட்ட தொகைகளை ஒவ்வொரு பஞ்சாயத்தும்
அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டு, ஒரு ஆண்டிற்குப் பிறகு, அந்தப்
பெட்டிகளை சப்ளை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கலாம். இதை
யெல்லாம் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு அரசின் செய்திச் சுருள் என்று எடுத்துக்கொண்டால்,
இந்தச் செய்திச் சுருள்கள் எதற்காக இருக்கின்றன? அரசாங்கத்தின் பொறுப்
பிலே என்னென்ன இருக்கிறது. அரசாங்கம் அவைகள் சம்பந்தமாக எடுத்து
வருகிற நடவடிக்கைகள் என்ன, மேற்கொள்ளுகிற காரியங்கள் என்ன, சிறப்புத்
திட்டங்கள் போன்றவற்றை மக்கள் தெளிவாக அறிந்து கொள்ளும் வண்ணம்
திரைப்படச் சுருளாக எடுத்து, அதை ஒரு விளம்பரமாக உபயோகப்படுத்திக்
கொள்வதற்காகத்தான் இருக்கின்றன. ஆனால் இந்தச் செய்திச் சுருள்களில்,
ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்ளும் விழா, பங்கேற்
கும் நிகழ்ச்சிகள் போன்றவற்றைத்தான் காண்பிக்கிறார்கள். ஒரு அரசாங்கம்
என்பது ஆளும் கட்சியோ அல்லது ஆளும் கட்சியின் அமைச்சர்களோ
மட்டுமல்ல. எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும், இந்த அரசாங்கத்தின் ஒரு
அங்கம்தான் என்று நினைக்க வேண்டும். ஆகவே, எதிர்க்கட்சி உறுப்பினர்
களும் அவர்கள் தொகுதியில் நடைபெறும் விழாக்கள், பங்கு பெறும் நிகழ்ச்
சிகள், திட்டங்கள் நிறைவேற்ற செய்யும் பணிகள் போன்றவற்றையும் அந்தச்
செய்திச் சுருள்களில் இணைக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அது
போன்ற எந்த நிகழ்ச்சியும் செய்திச் சுருளாக வந்தது இல்லை. ஏன் இந்த
பாரபட்சம் என்று கேட்கிறேன். சமயம் கிடைத்தபோதெல்லாம், மத்திய
அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கிறது, மாற்றாந்தாய்

மனப்பான்மையோடு செயல்படுகிறது என்பதெல்லாம் குற்றச்சாட்டைச் சொல்லுகிற தமிழக அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்று சற்று சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் தெரியும். அமைச்சர்கள் கலந்து கொள்கிற நிகழ்ச்சிகள் மட்டும்தான் அந்தச் செய்திச் சுருள்களில் காட்டப்படுகிறதே தவிர, எதிர்க் கட்சியினருக்கு எந்தவித இடமும் அதில் கொடுப்பது கிடையாது. (குறுக்கீடு).

**திரு. ஏ. சி. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் பேசுகிறபோது, தமிழக அரசின் செய்திச் சுருளைப் பற்றிச் சொல்லி அதிலே எதிர்க்கட்சியினருக்கு இடம் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். டெல்லியிலே இருந்து மத்திய அரசு வெளியிடும் செய்திச் சுருள்களில் அப்படி எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் பங்கு பெறும் நிகழ்ச்சிகள் பங்கு பெறுகின்றனவா என்று மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் மூலமே அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பங்கு பெறும் நிகழ்ச்சிகள் மத்திய அரசின் செய்தி சுருள்களில் வெளிவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதையாவது பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லாதீர்கள். சரியாகத் தெரிந்திருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மத்திய அரசினர் தென்னக செய்திகள் என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து அளித்தனர். அதில் ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்கள் பங்கு பெற்றிருந்தன. தமிழ்நாடு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதை நினைவுபடுத்தி, அதற்குக் காரணம் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன் . . .

**திரு. நா. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே கேரளத்தில் நடந்த பாரதிய ஜனதா கட்சி மாநாட்டைக் கூட, மத்திய சர்க்கார் திரைப்படமாகத் தயாரித்து எல்லா மக்களும் விரும்பிப் பார்க்கும் வகையில் அதைத் தயார் செய்து வெளியிட்டிருக்கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினர் கலந்துகொள்ளும் செய்திகளையும் திரைப்படமாக மத்திய சர்க்கார் காட்டுவதாக உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள்.





மேற்கு வங்கத்திலே இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நடத்திய பந்த் போராட்டத்தில் செய்திப் படங்களைக் காட்டினார்கள். ஆனால் அவர்கள் நடத்திய பந்தின் விளைவாக ஏற்பட்ட நாசங்களை—எரிக்கப்பட்ட பஸ்கள், வேன்கள் போன்றவற்றை ஒரு தொடர்காட்சியாக மேற்கு வங்க அரசு செய்து வைத்திருக்கிறார்கள். அதை ஏன் செய்திப் படங்களில் காட்டவில்லை என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் விளக்கம் சொல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்க அரசு மத்திய அரசாங்கத்தோடு போட்டி போட்டுக் கொண்டு நடத்தவேண்டும் என்று விரும்புகிறது. குறிப்பாக எந்த நாட்டிலேயும் ஒரு அரசாங்கம் தானே ஒரு பந்தை நடத்துவது என்பது சரித்திரத்திலேயே பார்க்காத ஒன்று . . . . (குறுக்கீடு).

(பிற்பகல் 12-20)

**திரு. என். சங்கரய்யா:** மேற்கு வங்க அரசு போட்டி போடவில்லை. திருமதி இந்திரா காந்தி தலைமையில் உள்ள மத்திய அரசு மேற்கு வங்க அரசை, ஒரு பெரிய அரசியல் திட்டங்களைத் தீட்டி வருகிறது, அவர்களைக் கவிழ்ப்பதற்காக. ஆகவே அவர்கள் அந்த 'பந்தில்' இந்திரா காங்கிரஸ் செய்த வன்முறை பற்றி எரிக்கப்பட்ட பஸ்களைப் போடவில்லை என்பது தான் உண்மை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதிய ஜனதாக் கட்சி மாநாடுபற்றி டெலிவிஷனில் காட்டினார்கள். அந்த மாநாடு முடிந்து மூன்று நாட்கள்தான் ஆகின்றன. இதற்குள் அது பற்றித் திரைப்படம் எடுத்து போட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அது உண்மை அல்ல. மாநாடு முடிந்தே மூன்று நாட்கள்தான் ஆகின்றன. அதை டி.வி.யில் காட்டினார்கள். திரைப்படமாக அவர்கள் காட்டவில்லை. அதற்குள்ளே அதை அவர்கள் எங்கே பார்த்தார்கள் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. இதை வளர்க்க வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு சம்பந்தமான கேள்விகளுக்கு, ஆளும் கட்சி சார்பில் கேட்கிற கேள்விகளுக்கு திரு. சுந்தரராஜன் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நடைபெறுகிற மாநாடுகள் மற்ற நிகழ்ச்சிகள் பற்றித் தமிழ்நாடு சர்க்கார் காட்டுகிற திரைப்படத்தில் காட்டுகிறார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை இதோடு விட்டுவிடுவோம்.

**திரு. எல். இளையபெருமாள்:** மத்திய அரசு அமைச்சர் பொறுப்பில் இருக்கிற நிலையில் சகோதரர் சுந்தரராஜன் அவர்கள் இல்லை. அதுமட்டுமல்ல. மத்திய சர்க்கார் காட்டவில்லை என்பதற்காக மாநில அரசு தன் கடமையில் தவறுவோம் என்று உறுதிப்படுத்துகிறார்களா? அதற்காக நேரத்தை வியர்த்தமாக்க ஏன் அனுமதிக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதை ஆரம்பித்ததே திரு. சுந்தரராஜன்தான். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. நா. சுந்தர்ராஜ் :** நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, உலக நாடுகளில் இன்று எண்ணெய்க்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறைதான் விளங்குகிறது. அவர்கள் வெளிநாடுகளுக்கு இதுவரை செல்லவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே உடனடியாக இந்தச் சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்த பிறகு அவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்கே எந்தளவிற்குச் சுற்றுலாத்துறை வளமாக, மக்களுக்குப் பயன்படுகிற வகையில் வெளி நாடுகளில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பார்த்துவிட்டு வரவேண்டும். அதோடு தமிழ் மக்கள், தம் வம்சாவழியினர்களாக வாழ்கிற மக்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் வாழ்கிற மக்களைச் சுற்றுலாத் துறை வழி ஈர்த்து அவர்களை இங்கு வரவழைத்து சுற்றுலாத்துறை வழி ஒரு புறத்திலும், இங்கே தொழில்களைத் தொடங்க வழிவகை செய்வது என்ற முறையில் இன்னொரு புறத்திலும் அவர்களை ஈர்க்கிற வகையில் நம் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அப்பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சுற்றுலாத் துறை, வருமானத்தை ஈட்டித் தருகிற இலாகா. அதற்காகச் செலவு இல்லை. வருமானம் ஈட்டித் தருகிற இலாகா அது. அந்த இலாகாவை நல்ல முறையில் செயல்படுத்துவார்கள் அமைச்சர் அவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தமிழ்நாட்டில் வாழ்கிற மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் வாழ்கிற மக்கள் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் சுற்றுலாத்துறை மிக முக்கியமான துறையாக இருக்கிறது. அந்த வகையில் நாமும் நம் சுற்றுலாத் துறையை அமைக்கவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன விலங்குகள் சுற்றுலா மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்கு எனது நன்றி



கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதனுடைய வரலாற்றிலே காடுகளை எல்லாம் அழித்து, கழனியாக மாற்றி, அங்கே குடியேறி இருக்கிறானே ஒழிய, மீண்டும் காடுகளை உருவாக்கினான் என்று எந்த நாகரிகத்திலும், மனிதன் முயற்சித்ததாக அந்த அளவிற்கு சரித்திரமோ அல்லது தகவலோ நமக்கில்லை. சிறு பிராயத்திலே படிக்கின்ற காலத்திலே, மகாராஜாக்கள், பெரிய பெரிய மன்னர்கள் என்னென்ன செய்தார்கள் என்று கேட்டால், சாலை ஓரங்களிலே இரு மருங்குகளிலும் மரம் வளர்த்தார்கள் என்று சரித்திரத்திலே படித்திருக்கிறோமே ஒழிய, 1947 ஆம் ஆண்டு இந்த நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, 33 ஆண்டுகளாக மீண்டும் இந்த வனத் துறை இந்த நாட்டிலே அதிகமான அளவிற்கு இந்த காட்டை வளர்த்ததா, மேம்பாடடையச் செய்ததா, அதற்கு முக்கியத்துவம் கொடுத்ததா என்றால், அப்படி கொடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்தின் திட்டமானாலும் சரி, மாநில அரசாங்கத்தின் திட்டமானாலும் சரி, இந்த வனத் துறையிலே அதிகமான அளவு மேம்பாடு செய்வதற்கு யாரும் அதிகமான அளவிற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்தோடுதான் கூறவேண்டும். ஆனால், மறைந்த சஞ்சய் காந்தி அவர்கள் முதன்முதலாக இந்த கோஷத்தைக் கொடுத்தார்கள். அவரது ஐந்து அம்சத் திட்டத்திலே மரம் வளர்ப்பதும் ஒன்று; அந்த வகையில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு மரம் நட வேண்டுமென்ற அளவிற்கு ஒரு கோஷத்தை அவர்கள் உருவாக்கினார்கள். some amount dynamism has been introduced. இதற்கு முன்பெல்லாம் பெரிய மனிதர்கள் யாரேனும் வருகின்ற நேரத்திலே அவர்கள் கையாலே ஒரு செடியை நட்டுவிட்டு, வன மகோற்சவம் என்று கொண்டாடினார்களே ஒழிய, உள்ளபடியே இந்த மரங்களை நம்முடைய நாட்டிலே வளர்க்க வேண்டுமென்ற அளவிற்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் உணரவில்லை என்பதை நான் மிகவும் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். சமீபத்திலே அட்மாஸ்பியரிலே பொலியூஷன் அதிகமான அளவிற்கு காற்று அசுத்தப்படுத்தப்படுகிறது, அதற்கு மரங்கள் பெரிதும் உதவுகின்றன, அவைகள் காற்றை சுத்தப்படுத்துகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியதற்குப் பின்தான், இதனை இந்த உலகத்திலே உள்ள ஆராய்ச்சியாளர்கள் எடுத்துச் சொன்னதற்குப் பிறகுதான், ஓரளவிற்கு இந்த தமிழகத்தைப் பொறுத்தவரையில் நல்ல முறையிலே திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். ஆனாலும், அதற்குக் கொடுக்கின்ற நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். மகாபலிபுரத்திற்குச் செல்லுகின்ற வழியில் ஏராளமான தென்னை மரங்களை வளர்த்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் சிலர், அங்கே நிலம்

களை வாங்கி, எந்த அளவுக்கு அதிகமான தென்னை மரங்களை வளர்க்க முடியுமோ, அந்த அளவிற்கு செலவு செய்து வளர்க்கும்போது, ஏன் நம் அரசாங்கம் அந்த ரோட்டின் இரு மருங்குகளிலும் தென்னை மரங்களை நடக்கூடாது? அந்த அளவிற்கு யாராவது அந்த இரு மருங்குகளிலும் தென்னை மரங்களை நடுவதற்கு முன்வருவார்களானால், அரசாங்கம் இந்த புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கு இனாமாக ஏன் ஒதுக்கக்கூடாது என்பதை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மரங்கள் நடுகின்ற நேரத்திலே ஏராளமான முறைகேடுகள் நடந்திருக்கின்றன. ஆனால், எனக்கு ஏற்படுகின்ற ஒரு திருப்தி என்னவென்று சொன்னால், சென்னையிலே ஏராளமான மரங்களை நட்டிருக்கிறார்கள். உயர்ந்த, வளர்ந்த மரங்களை வைத்திருக்கிறார்கள். அவைகளை ஆடு மாடுகள் கடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதைப் பார்த்து உங்களைப்போல என்னுடைய தொகுதியிலே உள்ளவர்கள், இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்திலே நான் ஒன்றை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நடப்படுகின்ற மரங்கள் தூங்கு மூஞ்சி மரங்களாக இருக்கின்றன. நான் சின்னப் பிள்ளையாக இருக்கும் போது, மதுரை, திருச்சிப் பகுதிகளிலே உள்ள ரோடுகளிலே விளா மரம், புளி மரம், நாவல் மரம் போன்றவைகள் இருக்கும். சுட்டப் பழம் வேண்டுமா, சுடாதப் பழம் வேண்டுமா என்று ஔவை பாட்டி கேட்டாளே, அதைப்போன்ற நாவல் மரங்கள் ஆங்காங்கே இருக்கும். இப்போது அந்த மரங்கள் எல்லாம் எங்கோ மறைந்து விட்டன. ஏன் அந்த மரங்களை எல்லாம் வளர்க்கக் கூடாது? அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நாட்டிலே இந்த புளிய மரங்களே மறைந்து விட்டன. இந்தப் புளிய மரங்களை வளர்ப்பதற்காக ஒரு கிராம் புரோகிராமே போட்டு, இந்த வனத்துறை இதிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால், அதன் மூலம் ஏராளமான பணத்தை நம் அரசு பெற முடியும். ஆனால், வனத்துறை அப்படி செய்யாததினால், காக்காயும் குருவிகளும் இந்த வேப்பங்கொட்டைகளையும் பல கொட்டைகளையும் தின்றுவிட்டு, அவைகள்தான் இந்த வனத்துறை செய்கின்ற வேலையைச் செய்கின்றன. அரசாங்கத்திலே இருக்கின்ற வனத்துறை இவைகளையெல்லாம் செய்வதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, அதிகமான அளவிலே உற்சாகத்தோடு பணியாற்றுவார்களானால், அமைச்சர் அவர்கள் செயல்படுவார்களானால், தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று இருக்கின்ற நிலை உருவாகும். இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபடாமல், எங்கெங்கே புளிய மரங்கள் இருக்கின்றனவோ, அவைகளுக்கு



இந்தத் துறையினர் நெம்பர் போடுகிறார்களே தவிர, தாங்களாகவே அரசாங்கத்தின் சார்பிலே இத்தனை மரங்களை நட்டோம் என்கின்ற புள்ளிவிவரத்தை கொடுக்கவில்லை. எனவே, அந்த அளவிற்கு இதிலே மேலும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கடைசியாக, ஆலங்குளம் தொகுதியில் இருக்கின்ற ஒரு சிறிய குறையை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உள்ள குளத்தில் வனத் துறை சவுக்கு நட்டார்கள். அந்த சவுக்கு மரம் வளர்ந்த பிறகு, அதை பகிரங்க ஏலத்திற்கு விடவில்லை; தனியாருக்கு விட்டிருக்கிறார்கள். அந்த ஏலத்தில் வரக்கூடிய பணத்தில் பாதியை, பஞ்சாயத்திற்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் கொடுக்கவில்லை. இதனால், வருங்காலத்திலே குளத்தை ஆழப்படுத்துவதற்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை என்ற ஒரு குறைபாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளை அவர்கள் மீண்டும் எடுத்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கடைசியாக சட்டமன்றத்திற்கு ஒரு ஆண்டு வந்தும்கூட செய்தி இலாகா ஒரே ஒரு தடவை வந்து நடிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கொடுத்தது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்து விட்டார்கள். சமீபத்தில் நெருப்பிடித்து எரிந்தபோது அதிலே படம் எடுத்தார்கள். நான் சினிமாவே பார்க்காதவன், ஒருமுறையாவது நம்மை செய்தித் துறையினர் படம் எடுத்து விட்டார்கள். நாங்கள் மாத்திரம் என்ன பாவம் செய்தோம்! நீங்கள் எல்லோரும் ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், தினம் தினம் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். எங்களுக்கு ஒரு வாய்ப்பு தரக்கூடாதா என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது என் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே சில பேர்கள் குறிப்பிட்டார்கள். வனத்துறையிலே பொன்னம்மாள் என்ன செய்யப் போகிறார் என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் நாம் மரங்கள் வெட்டுவதை தடுக்க தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறோம். மரங்களை நட வேண்டும். மரங்கள் நடுவதற்கு விழா எடுக்க வேண்டும் என்று எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அப்படி இருந்தும்கூட பாரஸ்ட்டிலே இருக்கிற மரங்கள் அனைத்தும் வெட்டி கடத்தப்பட்டு, இதனால் மழை இல்லாமல் மரங்கள் அழியக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இருக்கிறது. இன்னும் மூன்று, நான்கு மாதங்களுக்கு மழை இல்லாவிட்டால் கிராமங்களில் குடியிருக்க முடியாது. ஒரு நாள் லீவாக இருந்தாலும் தொகுதியில் செல்லும்போது, கிணறுகளில் தண்ணீர் இல்லாத குடிதண்ணீர் பிரச்சினை. நான்கு நாட்களுக்கு முன்பு போகிறபோது குடிதண்ணீர் கிணற்றில் தண்ணீர் இருந்தது. மீண்டும் அடுத்த நான்கு நாட்கள் கழித்து அங்கே போனால் தண்ணீர் இல்லாமல் வரண்டு போய்விட்டது. இப்பேர்ப்பட்ட நிலத்தடித் தண்ணீர் கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நாட்டிலே மரங்களை வளர்ப்பதிலே அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். இவைப்புச் சாலைகள், ரோடுகள், பள்ளிக்கூடங்கள் அருகில், ஆஸ்பத்திரி அருகில் இன்னும் கண்மாய்களில் எல்லாம் மரங்களை நட வேண்டும். கண்மாய்களில் யார், யார் பட்டா வாங்கிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, கண்மாய்களில் மரங்களை நட்டு மழை வருவதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் சில இடங்களில் நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியாத அளவிலே ஒரு லாரிக்கு பெர்மிட் வாங்கிவிட்டு பத்து லாரி, பன்னிரெண்டு லாரி என்று ஒரே நாளில் மரங்களை வெட்டி கடத்தி விடுகிறார்கள். அதை கண்காணிக்க வேண்டும். சிறுமலையில் மரங்களை வெட்டுகிறார்கள். லாரியிலே எடுத்து போகிறார்கள். திருட்டுத்தனமாக மரங்கள் ஏற்றப்பட்ட லாரி வரும்போது மாத்திரம், பாலம், ரோடுகள் சரியாக இருக்கின்றன. அதனால் லாரியை கொண்டு வந்து விடுகிறார்கள். ஆனால் அதிகாரிகள் ஜீப்பை எடுத்துக்கொண்டு போனால் மரத்தைப் போட்டும் வழியை அடைத்து விடுகிறார்கள். நிலைமை இப்படி இருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து மரங்களை நடுவதற்கும், மரங்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்கெங்கெல்லாம் மரங்களை நட முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வனத் துறையிலே அதிக பேர்களுக்கு உத்தியோகம் கொடுக்கிறோம். இதிலே இருக்கிற ரிசர்வேஷன், நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்வார் என்று கருதுகிறேன். செய்வார், எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த பதினெட்டு சதவிகதத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் பால் மாடுகளை வாங்கிக் கொடுக்கிறோம். அதற்கு மேய்ச்சல் தரை இல்லாத சூழ்நிலை இருக்கிறது. புல் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். எங்கெல்லாம் புறம்போக்கு இருக்கிறதோ, கண்மாய் இருக்கிறதோ, அங்கெல்லாம் மரங்களை வைத்து, அதற்கு பக்கத்திலே இந்த புல்லையும் வளர்ப்பதற்கு வழி செய்யவேண்டும். அவர்களுக்கு ஒரு கிலோ புல் அல்லது ஒரு கட்டு





புல் இவ்வளவு என்று கொடுத்தால் நமக்கு ஒரு வருமானமும் கிடைக்கும். மாட்டுக்கு நல்ல தீவனமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கொடைக்கானலில் டி.வி. வரவிருப்பதை, நான் இரண்டு அரசாங்கங்களையும் பாராட்டுகிறேன். அதை விரைவிலே கொண்டு வர வேண்டும். இங்கே கனம் அங்கத்தினர் தம்பி சுந்தரராஜன் அவர்கள் பேசுகிற போது எதிர்க்கட்சிகளுக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை, மதிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய காங்கிரஸ் கால ஆட்சியிலே நான் பத்து ஆண்டு காலம் சட்டமன்றத்திலே இருந்திருக்கிறேன். ஒருநாள் கூட தலைமை தாங்க வேண்டுமென்று நாங்கள் போனதில்லை. நாங்கள் நினைத்து கூட பார்த்தது இல்லை. இன்றைக்கு பாரபட்சம் இல்லாமல், எந்தத் தொகுதி எம்.எல்.எ. ஆக இருந்தாலும் சரி, எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அமைச்சர் அவர்கள் போகின்றபோது அவருடைய தலைமையிலே நடக்க வேண்டுமென்று செய்து கொண்டிருக்கிறார்களே அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திரைப்படத்தைப் பற்றிச் சொல்கிறேன். நான் பெண் என்ற முறையிலே அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாகச் சொல்லிக் கொள்கிறேன். நாம் எல்லோரும் மனிதர்கள், என்ன என்ன அவயங்கள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதையெல்லாம் ஆபாசமான முறையிலே போஸ்டர்கள் போட்டு பத்திரிகையிலே போட்டு வருமானால் நன்றாக இல்லை. மத்திய சர்க்காரிடம் சொல்லி சென்சார் போர்டு மூலம் குழந்தை பிறப்பதும், கர்ப்பம் ஆவதும் போட்டுக் காட்டினால்—இன்றைக்கு ஆற்றுக்கணக்கானவர்கள் வந்து என்னிடம் கண்ணீர் வடிக்கிறார்கள். அவர்கள் வெளியாவதற்குப் போகவில்லையாம், வால்போஸ்டரிலே பார்த்து அப்படிப்பட்ட முறையிலே வேதனைப்படுகின்றார்கள் என்றால் எதிர்கால சந்ததியினர், நாட்டை ஆளத் தகுதி படைத்தவர்கள் எல்லாம் இவைகளைப் பார்த்தால் மரியாதை இல்லாத நிலைமை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்து, கடுமையான சட்டத்தைப் போட்டு அப்படிப்பட்டவைகளைப் போடாமல் ஒட்ட விடாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு பத்திரிகையிலே, நாம் எத்தனையோ காரியங்களைச் செய்கிறோம், நிறைய நல்ல காரியங்களைச் செய்கிறோம், அவைகளை எல்லாம் ஒழுங்காகப் போடக்கூடிய முறையிலே, எல்லா மக்களும் புரிந்துகொள்ளக் கூடிய முறையிலே அனுபவமுள்ள ஆசிரியரைப் போட்டுத் திறமையான எழுத்தர்களைப் போட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கம்பிரமணிய சிவா விற்கு பாப்பாரப்பட்டியிலே

நிலையும் இன்னும் எழுப்ப இருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பிறந்த ஊர் அந்தநல்லூரின்றி, அந்த ஊர்த் தெருவிலே அந்த நிலையச் சிலையைத் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அங்கே உள்ள பள்ளியைப் பள்ளிக்கு அம்மையாருடைய பெயரின் பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் உத்தமத் தலைவர், பெருந்தலைவர், உலகத்திற்கே வழி காட்டியாக இருந்த எமைப் பங்காளர் பெருந்தலைவர் அவர்களுக்குச் சிலை வைத்தீர்கள். காமராஜ் ஆட்சியின்போது அந்தத் ஆட்சியிலே காமராஜ் அவர்களுக்கு கடற்கரையிலே சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே உள்ள இடத்திலே குழந்தைகளுக்கு பூங்கா அமைப்பதாக முடிவு செய்யப்பட்டது. இன்னும் அது செய்யப்படவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு பூங்கா அமைக்க வேண்டும். ஆசிய ஜோதி நேருஜி அவர்களுக்கு சிலை வைக்க இருப்பதை நான் பாராட்டி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு அங்கத்தினர்கள் பல்வேறு கட்சிகளின் சார்பாக இதை ஆதரித்தும் எதிர்த்தும் கண்டித்தும் பேசியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் முதலிலே இந்தச் செய்தித் துறையிலே என்னுடைய பேச்சை துவக்குகிறேன். மக்களுடைய வரிப் பணத்தில் நடக்கின்ற இந்தச் செய்தித் துறை ஒரு ஆளுங் கட்சியினுடைய அதிகாரப் பூர்வமான ஏஜென்டைப்போல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நாடும் நல்லவர்களும் நாமும் அறிவோம். ஆனால் எனக்கு இருக்கிற எண்ணம் அப்படிச் செய்வதை முறையாகச் செய்கிறார்களா என்றால் கிடையாது. இன்றைக்கு என்ன செய்வது என்றுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. வனவளநாள் விழா என்று 21—3—1981 அன்று கொண்டாடுகிறார்கள். அந்த வனவளநாள் விழாவிற்கு பத்திரிகையிலே விளம்பரம் கொடுக்கிறார்கள். விழா நடைபெறுவது 21—3—1981. ஆனால் விளம்பரம் என்றைக்கு வருகிறது என்றால் 24—3—1981-ல் வருகிறது. விழா முடிந்து பந்தல் பிரிந்து போனதற்குப் பிறகு விழாவிற்கு பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். அதே போன்றுதான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய படத்தைப் போட்டு ஊனமுற்றோர் உலக நாள் என்று ஒரு விளம்பரம் வருகிறது. அது என்றைக்கு நடைபெறுகிறது என்றால் அந்த விழாவும், விழா முடிந்ததற்குப் பிறகு 22 ஆம் தேதி விழா. மாலை 6 மணி, கலைவாணர் அரங்கம், மாண்புமிகு அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் தலைமை வகிப்பார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்





அதிலே கலந்துகொள்கிறார். ஆனால் அது என்றைக்கு வருகிறது என்றால் 24 ஆம் தேதி வருகிறது. தலைவரவர்களே, இது மக்கள் குரல் பத்திரிகை. இந்தப் பத்திரிக்கையிலே 24 ஆம் தேதி உலக வன வள நாள் 21—3—1981 என்று விளம்பரம் வருகிறது. அதேபோல ஊனமுற்றோர் உலக நாள். இது என்றைக்கு வருகிறது? 22—3—1981-ல். ஆனால் விளம்பரம் வருவது 24 ஆம் தேதி. என்ன இது? இதைச் செய்தித் துறையிலே இருக்கின்ற யாராவது பார்த்தார்களா அல்லது தனக்கு வேண்டிய பத்திரிக்கைக்கு விளம்பரம் கொடுத்தாக வேண்டுமென்பதற்காகக் கொடுக்கப்பட்டதா? இதனாலே என்ன முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது? மக்களுடைய வரிப் பணத்தை நீங்கள் செலவழிப்பதிலேகூட முறையாகப் போகிறதா என்று கவனிக்க வேண்டாமா? ஆகவே, இப்படி எதுவும் காணாமல், ஏதோ தான் தோன்றித்தனமாக நினைத்த பத்திரிகைகளுக்குத் தருவது, விழா முடிந்த பின் தருவது என்று இப்படிப்பட்ட ஒரு செயலை இந்தச் செய்தித் துறை செய்து கொண்டிருக்கிறதே என்பதிலே நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

(பிற்பகல் 12-40)

அதுமட்டுமல்ல, அவருடைய கட்சிக்காரர்களுடைய படங்களைக் காட்டுகிறார்கள் என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். அதிலேகூட எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. அவர்களே காட்டிக் கொள்ளட்டும். ஆனால் காட்டுவதைக்கூட ஒழுங்காகக் கவனம் செலுத்திச் செய்யவில்லையே என்பதுதான் எனக்கிருக்கின்ற வருத்தம்.

திரைப்படங்களைக்கூடத் தயாரிக்கிறார்கள். இதிலேகூட சரியான கணக்கு கிடையாது. இந்த மாமன்றத்திலேயே ஒருமுறை குமரிக்கண்டம் படம் தயாரிக்கப்பட்டதைப்பற்றி நான் பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்மீது அனுதாபப்பட்டோ அல்லது இரக்கம் காட்டியோ அல்லது உள்கோபம் கொண்டோ, துரைமுருகன் எம்.ஏ., பி.எல்., வேறு படித்தவர், ஆனால் அதிகமான தொகையைச் சொல்லிவிட்டார், அதற்கு 3 இலட்சம்தான் செலவாயிற்று என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு கொஞ்ச நாள் கழித்து திடீரென்று, இல்லை இல்லை, 9 இலட்சம் என்று சொன்னார்கள். ஒரு மாண்புமிகு முதலமைச்சருக்குக்கூட எவ்வளவு பணச் செலவிலே ஒரு படம் தயாரிக்கப்படுகிறது என்ற கணக்கைக்கூட இந்தச் செய்தித்துறை நிர்வாகம் தருவதிலே கால விரயம் ஆக்கிப் பயனற்றிருக்கிறது என்பதை நான் குற்றச்சாட்டாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. துரை முருகன்] [1981 ஏப்ரல் 29

இன்றைக்குச் சுற்றுலா வாரியத்திலேகூட பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை யெல்லாம் இதிலே குறிப்பிட்டுக்காட்டி, இது வெளிநாடுகள் வரையிலே கடல் கடந்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். இங்கே காலையிலே என்னிடத் திலே ஒன்றைக் கொடுத்தார்கள். எத்திசையும் புகழ் மணக்கும் தமிழகம். அதிலே தமிழகத்தின் சிறப்புக்களை, தமிழகத்தின் பெருமைகளையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது எங்கே அச்சடிக்கப்பட்டது என்று கேட்டால், Printed at Prasad Press (Private), Limited, Madras. -லே அச்சடித்திருக்கிறார்கள். அழகாக இருக்கிறது, ஆர்ட் பேப்பர், எழுத்துக்கள் நன்றாக இருக்கின்றன; கலர் சரியாக வந்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். இதை இங்கேயே—மெட்ராஸிலேயே அச்சிட்டு விட்டு இன்னொன்றைக் காட்டுகிறார்கள். Discovery—Tamil Nadu—India என்று போட்டுவிட்டு, இதை எங்கே அச்சடித்திருக்கிறார்கள்? பிரசாத் பிரஸிலே அடித்திருக்கிறார்களா என்றால் கிடையாது. இதற்கு மட்டும் **டெல்லிக்குப் போய் இருக்கிறார்கள். என்ன காரணம்? டெல்லியிலே** New Delhi, Printed at Thomas Press, F idabadi என்ற இடத்திலே அச்சடித்திருக்கிறார்கள். இதைவிட பிரசாத் பிரஸிலே அச்சடித்திருப்பது ஒன்றும் குறைவாக இல்லை. நான் கேட்பது, பிரசாத் பிரசுக்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை; எனக்கு அதைப்பற்றி அக்கறையும் இல்லை. ஆனால் இங்கே ஒன்றை அச்சடித்து விட்டு அங்கே ஒன்றை அச்சடிப்பதிலே இருக்கின்ற மர்மம் என்ன என்பதை அமைச்சரவர்கள் அவர்களுக்கே உரிய பாணியிலே இங்கே விளக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே பிரிண்டிங் டெக்னாலஜி பற்றியெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள். அதிலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எடிட்டிங் பயிற்சி படிக்கச் சேர்வதற்காக மனு அனுப்ப கடைசி நாள் 23—7—1980. ஆனால் அந்த 23—7—1980-க்குப் பிறகு யார் அப்ளிகேஷன் போட்டாலும் எடுக்கக்கூடாது. ஆனால் ஒரு அமைச்சருக்கு வேண்டியவர் என்ற காரணத்திற்காக நம்முடைய அறநிலையத் துறை அமைச்சருக்கு அல்ல—அவருடைய சக அமைச்சர்களிலே ஒருவருக்கு வேண்டியவர் என்பதற் காக 31—7 அன்று அமைச்சருக்கு வேண்டிய ராஜகுமார் என்பவர் மனுச் **செய்து கொண்டிருக்கிறார். அந்த 31—7 அன்றே, மனுச் செய்த அன்றே** பதிவு செய்து கொள்ளப்பட்டு, அரசு ஆணை 34553/11-80இன்படி அவர் **எடிட்டிங் பயிற்சியிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறார். அந்த ஜீ.ஓ. நம்பரைத் தான்** எங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் **அவர்கள் தர வேண்டுமென்று மாண்புமிகு** நம்முடைய அசெம்பிளி செக்ரட்டரியைக் **கேட் டார்கள்.** ஆனால் **இதுவரையிலே,** இந்த நேரத்திலே **சுட்டிக்காட்ட விரும்பு**



1981 ஏப்ரல் 29] (திரு. துரை முருகன்)

**கிறேன்,** எங்களைப்போன்ற எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் **பணி**
**யாற்றுவதற்காகக் கேட்டால் அதை வாங்கித் தர வேண்டும். இந்த அவை**
**யிலே** மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எதிர்க்கட்சியாக
இருக்கும்பொழுது இப்படியொரு ஜீ.ஓ. கேட்டு அது கொடுக்கப்படாத கார
ணத்தால் எழுந்த விவாதத்தை இந்தச் சட்டமன்றம் மறந்துவிடவில்லை.
இப்படி எதிர்க்கட்சிகள் பணியாற்ற விடாமல் ஒரு ஜி.ஓ. நம்பரைக்கூட
கொடுக்க முடியாமல் மறுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு எனக்குத் தெரிந்த
வரையில் இந்த ஜி.ஓ. நம்பரைக் கொடுத்திருக்கிறேன். நான் கேட்கிறேன், 27
ஆம் தேதி முடிந்து போகிற கடைசி நாள் 31 ஆம் தேதி மனு வாங்குகிறீர்கள்,
அதற்குப் பிறகு எடிட்டிங்கிலே சேர்த்திருக்கிறீர்களே, நாங்கள் சொன்னால்
**கோபம்** வருகிறது? இப்படியொரு முறைகேடான செயலுக்கு என்ன பெயரை
**இட்டு அழைப்பது?** முறைகேட்டுக்கு **ஊழல்** என்று சொல்லலாம்; **ஆனால்**
**அமைச்சருக்குக்** கோபம் வரும் **என்பதற்காக நான்** இத்தோடு விட்டுவிடக்
கடமைப்பட்டிருக்**கிறேன்**

**அடுத்து,** அவருடைய இலாகாவிலே பெரும்பான்மையாக ஆக்கிரமித்துக்
**கொண்டிருப்பது** இந்த வனவளம். இந்த வன வளத்திலே இப்போது ஒரு
முக்கியமான பிரச்சினையை மட்டும் முதலிலே சொல்லக் கடமைப்பட்டிருக்
**கிறேன்.** பாரஸ்டர்கள் வேண்டும் என்று சொன்னால் முன்பெல்லாம்
**எம்ப்ளாய்மெண்டு** ஆபீசுக்குத் தெரிவிப்பார்கள். எம்ப்ளாய்மெண்டு ஆபீசிலே
இருப்பவர்கள் இண்டர்வியூ **அனுப்பி,** அது டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசருக்கு
வரும். இண்டர்வியூ நடக்கும். எந்தெந்த ரேஞ்சுக்கு அவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட வேண்டுமோ அதற்கு **அவர்கள்** தேர்ந்தெடுப்பார்கள். **ஆனால்**
**இவைகளை எல்லாம்** சென்ட்ரலைஸ் செய்ய கமிட்டி போடுகிறோம் **என்று**
**சொல்லி,** அப்படியே போட்டார்கள். ஏதோ போட்டார்களே அதன் மூலமாக
**யாவது தேர்ந்தெடுத்தீர்களா என்றால்** கிடையாது. முதல் கமிட்டி போட்
டார்கள், அது முடியவில்லை. அது உங்களுக்கு ஒத்து வரவில்லை. **இரண்**
**டாவது** கமிட்டி போட்டார்கள், அருள்பிரகாசம் என்பவரைத் **தலைவராக**
**ஆக்கினீர்கள்.** அது தன்னுடைய பணியை முடித்ததா என்றால், **முடிக்க**
**வில்லை.** உங்களுடைய **இணிப்பிற்கு** அவர் கட்டுப்படவில்லை. பிறகு **என்ன**
**செய்தீர்கள்?** ஆளை மாற்று என்று 3-வது கமிட்டியைப் **போட்டார்கள்.**
**அந்தக்** கமிட்டிக்கு வேணுகோபால் என்பவரைப் போட்டு, அவர் மதுரை,
**தஞ்சை** என்று சுற்றிக் கொண்டிருக்கும்போது நீங்கள் இங்கே இருந்து போன்
**எல்லாம் செய்கிறீர்கள்,** அவர் கேட்கவில்லை. அவரை திருப்பி அனுப்பு
**என்று சொல்லி இருக்கிறீர்கள்.** அவர் வந்து சேருகிறார். அதுவும் முடிய
**வில்லை.** எனவே **இந்த** ஆளும் ஒத்துவரவில்லை என்று சொல்லி, **4-வது**

[திரு. துரை முருகன்] [1981 ஏப்ரல் 29

கமிட்டியை கட்டாக் என்பவரைக் கொண்டு போட்டார்கள். இன்றைய வரையில் அது வெளியிடவில்லை. நீங்கள் எத்தனை இடங்களுக்கு இப்படி பாரஸ்டர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தீர்கள்?

வேலூர் டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலே வேலைக்கு ஆள் எடுப்பதற்காக ஒரு நாள் இண்டர்வியூ வைத்தார்கள். 25—8—1980-ல் 300 பேர்கள் தேர்வுக்கு வருகிறார்கள். உடல் தகுதி இருக்கிறதா? சர்டிபிகேட் இருக்கிறதா? என்று பார்த்து அதற்குப் பிறகு 190 பேர்களை அந்த 300 பேர்களில், தேர்ந்தெடுக்கிறார்கள். இது 25-ந் தேதி நடைபெறுகிறது. மறுநாள் 26—6—1980 அன்று உடனே அவர்கள் 190 பேர்களுக்கும் வேலூரில் இருக்கிற வெங்கடேஸ்வரா மைதானத்தில் ஒரு ரிட்டன் டெஸ்ட் வைக்கிறார்கள். ரிட்டன் டெஸ்ட் முடிந்த பிறகு, அடுத்த நாள் 27-ம் தேதி இண்டர்வியூ நடக்கிறது. 28-ந் தேதி ரிசல்ட் போடப்படுகிறது. இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 60 பேர்கள். ஆனால் 29-ந் தேதி அன்று அந்தத் தேர்வு மட்டும் போதாது—வாக்கிங் டெஸ்ட் வேண்டும் என்று சொல்லி, வேலூர் காந்தி சிலையில் இருந்து கணியம்பாடி வரை நடக்கவிட்டிருக்கிறார்கள். அந்த 60 பேர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் உத்தரவு வரும், வீட்டுக்குப் போங்கள், நடந்த களைப்பு தீர இளைப்பாறுங்கள் என்று சொன்னார்கள். தலைவர் அவர்களே, மாதங்கள் 10 உருண்டோடி விட்டன. இதுவரையில் அவர்களை வேலைக்கு வா என்று அழைப்பு வந்திருக்கிறதா? என்று கேட்டால் இல்லை. ஆனால் அந்த இடத்தில் இருந்த சேர்மனை மாற்றிவிட்டு வேறு ஒருவரை போட்டுக் கொண்டார்கள். அதே போன்று சேலத்திலே 31 ஆகஸ்டு முதல் செப்டம்பர் மாதம் 4-ம் தேதி வரையில் அந்த பாரஸ்டருக்கு இண்டர்வியூ நடந்தது. 500 பேர்கள் வந்தார்கள். 49 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் இதுவரையில் அவர்களுக்கு ஆர்டர் வந்ததா என்றால் இல்லை. அவர்களுக்கு நியமனமில்லை. நான் கேட்கிறேன். எதற்காக இப்படி அவர்களை எல்லாம் அலைக்கழிக்கிறீர்கள்? இப்படி செலக்ஷன் கமிட்டி போட்டீர்கள். போட்ட கமிட்டி உங்களுடைய சிபாரிசுகளை எடுக்கவில்லை என்று உங்களுடைய மனம் கொதித்துப் போகிறது. கமிட்டியின் தலைவரை மாற்றுகிறீர்கள். பிறகு ஊருக்கு ஊர் ஏன் இந்த ஏழைகளை அலைக்கழிக்கிறீர்கள்? கடைசியிலே வீட்டுக்குப் போ என்று அவர்களை அனுப்பிவிடுகிறீர்கள். இது என்ன நியாயம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் காட்டு இலாகாவில் ஒரு காட்டுத் தர்பார் நடந்தது. காட்டுத் தர்பார் என்பதை சொல்லமாட்டேன். [illegible] ஒரு கதை—மாண்புமிகு முதலமைச்சரின் பொதுச் செயலாளர், மாண்புமிகு முன்னாள் அமைச்சராக



1981 ஏப்ரல் 29] [திரு. துரைமுருகன்]

இருந்த ப. உ. சண்முகம் அவர்கள் எருமியூரத்தில் இருந்து இரவு நேரத்தில் காரிலே போகிறார். அன்றையதினம் வேலூரில் இருக்கும் டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசர் அவர்களுக்கு ஒரு தகவல் வருகிறது. சந்தனக் கட்டைகளை ஏற்றிக்கொண்டு அந்த வழியாக ஒரு கார் போகிறது என்று தகவல் வருகிறது. கார் வருகிறது என்ற செய்தி வந்த உடனே அவர் தன்னுடைய உதவியாளர்களை அழைத்துக்கொண்டு அந்த டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசர் அண்டு ஷிஸ் பார்ட்டி சந்திரசேகரன், ரேஞ்சு ஆபீசர், ராஜகோபால், ராமமூர்த்தி, ரிசர்வ் வாச்சர் கோதண்டம் ஆகியோரை அழைத்துக்கொண்டு போய், நாயுடுமங்கலம் கூட்டு ரோட்டிலே காரை நிறுத்திவிட்டு பதுங்கி இருக்கிறார்கள். அப்போது ஒரு வெள்ளை அம்பாசிடர் கார் அந்த வழியாக திருவண்ணாமலைக்குப் போகிறது. உடனே அந்தக் காராக இருக்குமோ என்று அந்தக் காரை நிறுத்தினார்கள். கார் நிற்கவில்லை. நிற்காமல் வண்டி ஓடுகிறது. அந்த வண்டி நிற்காமல் போனவுடன் பதுங்கி இருக்கிறவர்களுக்கு அவர்கள்தான் சந்தனக்கட்டை கடத்துபவர்களாக இருப்பார்களோ என்று பின்னாலே போகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

கிட்டத்தட்ட சத்திரம் வில்லேஜுக்கு போய்த்தான் ப. உ. சண்முகம் அவர்களுடைய கார் நிற்கிறது. உள்ளே ஓடிப்போய் ஊர் ஜனங்களை அழைத்து வருகிறார். பிறகு வந்தவுடன் அவர் சொல்கிறார். அவர்களிடத்தில் பார்த்து " நான் திருவண்ணாமலை. . . .

On suspicion the special party chased the car upto the Chatram village. The occupants of the white Ambassador car who happened to be Thiru P. U. Shanmugam and his family members got down from the car, rushed to the Chatram village and came back to the roadside with a number of villagers and met the members of the special party. Thiru P. U. Shanmugam enquired me as to who they and why they are chasing the car and said that he is Thiru P. U. Shanmugam of Thiruvannamalai.

என்று அவரே சொல்கிறார், நான் ப.உ.ச. என்று. ஆனால் டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசர், ஒரு அமைச்சராக இருந்தவரை, தெரிந்திருக்க வேண்டும். அவரை தெரியாமல் இருக்க முடியாது தமிழ்நாட்டில். அதற்குப் பக்கத்திலே இருக்கிற ரேஞ்சு ஆபீசர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அந்த டிஸ்டிரிக்ட் ஆபீசரும், ரேஞ்சு ஆபீசர்களும் அதைப் பற்றிக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். நான் பி. யு. சண்முகம் என்று சொன்னவுடன்,

On hearing this, the Range Officer, Vellore, immediately enquired you as to whether the gentleman was Thiru P. U. Shanmugam as you happen to know him.

அதிலே சாதாரணமாக இருக்கிற ஒருவரை, கீழே இருக்கிற ஒரு அதிகாரியைப் பார்த்து "இவர் ப.உ.ச.-ஆம், உங்களுக்குத் தெரியுமா" என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சார்ஜிலே கொடுக்கப்பட்டிருப்பது—மெமோரான்டம்-ல் ராமமூர்த்தி என்பவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அவருக்குக் கொடுத்திருந்த சார்ஜ் ஷீட்டில் இருந்து படிக்கிறேன். பாவம், அவர் திருக்கோயிலூர்க்காரர். தெரியாத்தனமாக திருவண்ணாமலையில் தெரிந்தோ தெரியாமலோ கல்யாணம் பண்ணிக்கொண்டார். ஆனால் மாமியார் வீட்டில் இருந்த காரணத்தால் அவருக்குத் தெரியாது. சாதாரண ஒரு கடைநிலை ஊழியர். அவர் சொல்கிறார். '8 மாதம் தான் இந்தத் தொழிலுக்கு வந்து ஆகிறது. எனக்கு திடீரென்று இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டவுடன் நான் பதறி போய்விட்டேன்,' என்று சொன்னார். இதிலே ப.உ.ச. அவர்கள் மீது குற்றஞ் சாட்டவில்லை. ஆனால் நான் கேட்பது இப்படித் தூக்கிக் கொண்டு போன பிறகு, டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசர், மற்றும் பல்வேறு அதிகாரிகள், உடனே அவர்கள் வீட்டிற்குப் போய் அந்த அரசு அதிகாரிகள் அவர்களிடம் மன்னிப்பு கேட்டிருக்கிறார்கள். அதோடு அந்தப் பிரச்னையை விட்டு விட்டுப் போயிருக்கலாம். அதற்குப் பிறகு, நீங்கள் மூன்று பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதில் இரண்டு பேர்களை வேலைக்கு வைத்திருக்கிறீர்கள். ஆனால், திருவண்ணாமலையில் பெண் எடுத்தவனை நீங்கள் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறீர்கள். இன்றுவரையில் இருக்கிறார். அடிமுடிக் காணா அருணாசலேஸ்வரர் திருக்கோயிலாம், அங்கே நீ பெண் எடுத்திருக்கிறாய், எனவே, ப.உ.ச. இருக்கிற ஊர் என்ற காரணத்தினால், சஸ்பென்ஷனில் அவரை வைத்திருக்கிறீர்கள். அது நியாயம் தானா? என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இதே நிலை நாளைக்கு ஒரு சாதாரண குடிமகனுக்கு வந்து, அந்தக் குடிமகனுடைய வீட்டிற்கு அரசு அதிகாரிகள் சென்று, மன்னிப்பு கேட்பார்களா ? அப்படிக் கேட்டதற்குப் பிறகும், அவர்களுக்கு பின்னால் நீங்கள் சஸ்பெண்ட் செய்வீர்களா? என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப படுகிறேன்.

அதேபோன்று, காட்டிலாகாவைப் பொறுத்தவரையில் பல்வேறு விதமான —அமைச்சருக்கு கோபம் வரும்—ஊழல்கள் என்று சொன்னால், முறைகேடுகள் என்று வேண்டுமானால் திருத்திக் கொள்ளுங்கள். ஆனால், நான்





சேஷசாயி பேப்பர் மில்லுக்கு சப்ளை ஆஃப் வுட், தனிப்பட்ட காண்ட்ராக்டர்கள் இதுவரையில் செய்து வந்தார்கள். அவர்கள் டன் ஒன்றுக்கு 120 ரூபாய் கொடுத்தார்கள். அதிலே 80 ரூபாய் பாரெஸ்ட் இலாகாவிற்குப் போகும்; மீதி இருக்கின்ற 40 ரூபாய் டெலிவரி, மற்றவைகளுக்கு எல்லாம் சரியாகப் போய் விடும். ஆனால், அமைச்சர் அவர்கள் அல்லது ஆளுங் கட்சியிலே இருக்கின்ற முக்கியஸ்தர்கள் என்று சொல்ல மாட்டேன்—அமைச்சர் அவர்களுக்கு மிக வேண்டியவர்கள் அந்த மில்காரர்கள், எனவே அமைச்சர் எனக்கு வேண்டியவர்கள், நான் இனிமேல் சொல்கிற ஆட்களுக்குத் தான் நீங்கள் இந்த வேலையைக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார். என்ன வேலை? நான் சொல்லுகின்ற அளவிற்கு காண்ட்ராக்ட் வேலை. அது மட்டுமல்ல. நீங்கள் இப்படிப்பட்ட ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் எப்படி? ஒரு டன் 120 ரூபாய்க்கு அல்லவா சப்ளை செய்தார்கள்? இல்லை. 220 ரூபாய் 'ஏ'-க்கு ஒரு டன்னுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார். அவர்களுக்கு 220 ரூபாய் டன் ஒன்றுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார். என்ன செய்வது ? அவர்கள் உங்களுக்கு ஆடுகின்ற கைப்பாவைகள். எனவே ஒத்துக் கொள்கிறார்கள். பிறகு அந்த மில்காரர் 220 ரூபாய் என்று ஒரு டன்னுக்குக் கொடுக்கிறார். ஆனால், அப்படிப்பட்டவன் அதை வாங்குகிறானே, அவன் வுட் சப்ளை செய்வானா என்றால் இல்லை. பாபம். ஏற்கனவே அந்த வேலையை இழந்திருக்கிறான். அந்த காண்ட்ராக்டர் இந்த வேலைக்கு உதவ, அவனுக்கு சப் காண்ட்ராக்ட் கொடுக்கிறார். என்ன விலைக்கு? அதே 120 ரூபாய்க்கு 120 ரூபாய்க்' விற்றால் டன் ஒன்றுக்கு ரூபாய் 100 லாபம் என்ற வீதத்தில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இது குறித்து சி.பி.ஐ. விசாரணைகூட நடப்பதாக நான் அறிகிறேன். எனவே, விரைவிலேகூட அதுகுறித்து ஒரு முடிவு வருமென்று தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இன்னொன்று. சோலையாறு பக்கத்தில் ஒரு அணை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் 60 ஏக்கரில் ஒரு காடு. அது ஏற்கெனவே கண்ணன்தேவன் டீ எஸ்டேட்டுக்குச் சொந்தமாக இருந்தது. பிறகு அது டாட்டா ஃபின்லே எஸ்டேட் என்று மாற்றப்பட்டிருக்கிறது. அந்தக் காட்டை அழித்து டீ எஸ்டேட்டாக மாற்ற வேண்டுமென்று கடந்த 15 ஆண்டுக்காலமாக அந்த நிறுவனத்தார் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் அரசு பி.டபிள்யூ.டியை கலந்து மற்றவர்களை கலந்துபேசி, அந்தக் காடு அழிக்கப்பட்டால்—அதை இந்த அறிக்கையிலே கூட சொல்லியிருக்கிறீர்கள்—மண் அரிப்பு ஏற்படும்; பிறகு அணையே

[திரு. துரை முருகன்] [1981 ஏப்ரல் 29

உடைந்துவிடும் அபாயம் ஏற்படும். எனவே அந்தக் காட்டை அழிப்பதற்கு அரசாங்கம் பெர்மிட் கொடுக்காது என்று 15 ஆண்டுகளாகத் தள்ளிக் கொண்டு வந்தது.

ஆனால் திடீரென்று அமைச்சருடைய கடாட்சம் கிடைத்ததோ, அருள் பாலித்ததோ நான் அறியேன். உடனே காட்டை அழிக்க உத்தரவு தரப்படுகிறது. காட்டை அழிக்க உத்தரவை வாங்கிப்போய், அவர்கள் பெரும் செலவு செய்த பிறகு, அங்கே போய் நிற்கிறார்கள். ஆனால் அங்கே 'வைல்டு லைஃப் வார்டர்' ஒருவர் இருக்கிறார். சுரேஷ் என்று நினைக்கிறேன் அவர் பெயர். அந்த வார்டர் மரத்தை 'கட்' செய்வதற்குத்தான் அனுமதி தரமுடியும்; ட்ரான்ஸ்போர்ட் செய்வதற்கு அந்த ஆபீசர்கள்தான் அனுமதி தரவேண்டும்; நீங்கள் தவறான முறையிலே பெர்மிட் வாங்கியிருக்கிறீர்கள்; நான் ட்ரான்ஸ்போர்ட் லைசென்ஸ் தரமாட்டேன்' என்று சொல்லிவிட்டார். அந்த ஆட்கள் திரிசங்கு சொர்க்கத்திலே நின்றுகொண்டிருப்பதாக கேள்வி. நான் கேட்கிறேன். ஒரு அணை உடைந்து போகும், பாதிக்கும் என்ற அளவுக்கு அபாயமான சூழ்நிலையை உருவாக்குகின்ற அளவுக்கு அந்த காட்டை அழிக்க பெர்மிட் வழங்கியது ஏன் என்பதற்கு அமைச்சர் விளக்கம் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று கொடைக்கானலிலிருந்து அரசுக்குச் சொந்தமான வனத் துறையைச் சேர்ந்த காட்டு மரங்கள் தினந்தோறும் சிம்சோரஸ், சேஷசாயி, டான் இந்தியா போன்ற கம்பெனிகளுக்கு அனுப்பப்படுகின்றன. கழக ஆட்சி இருந்தபோது இந்த மரங்களை எல்லாம் மொத்தமாக விலை பேசி விற்பார்கள். அதன் பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். ஆட்சிக்கு வந்த பிறகு மரங்களைக் கணக்கிடுகிறார்கள். எப்படி கணக்கிடுகிறார்கள் என்றால் ஒரு 'டாக்' என்று. ஒரு டாக் என்றால் நான் எனக்குத் தெரிந்த கணக்கைச் சொல்கிறேன். அதில் தவறு இருந்தால் வேண்டுமானால் அமைச்சர் திருத்தலாம். ஒரு மீட்டர் உயரம், ஒரு மீட்டர் அகலம் உள்ள மரம் ஒரு டாக் என்று சொல்கிறார்கள். அந்த டாக் எடை 1.65 டன் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த மரங்களை அந்த 1.65 டன் என்ற நிலையிலே அனுப்புகிறார்கள். ஆனால் உண்மையிலே ஒரு டாக் என்பது 2½ டன் முதல் இரண்டே முக்கால் டன் எடை வரையில் வரும் என்று அதிலே அனுபவமுள்ள பெரியவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, 5 டாக் என்று சொன்னால் 5 × 1.65 என்று சொல்லி, அதற்கு மட்டும் கணக்கிட்டு வாங்குகிறார்கள். இந்த 2½ டன்னுக்கும் 1.65 டன்னுக்கும் இடைப்பட்ட டன் மரம் யாருக்கு இலாபம்? கம்பெனிக்காரர்



1981 ஏப்ரல் 29] [திரு. துரை முருகன்]

களுக்குத்தான் இலாபமாக இருக்கும். அந்த எடை மரத்தைக் குறைவாக கணக்கிட்டு, அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி, கம்பெனிக்கு இலாபத்தை ஏற்படுத்துகிறார்கள்.

நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன், அதற்குள்ள ரசீதுகள் எல்லாம் இருக்கின்றன. இந்த ரசீதுகளைப் பார்த்தால் அந்த டாக்குகளை ஏற்றிக் கொண்டு சென்ற லாரி, 5 டாக் மரங்களை எடுத்துக்கொண்டு போன லாரிக்கு உள்ளே எவ்வளவு போயிருக்கிறது என்று சொன்னால் 12.41 டன் மரம் போயிருக்கிறது. ஆனால் இதிலே 8.25 டன் என்றுதான் குறிப்பிடுகிறார்கள். 5 டாக் மரத்திற்கு 8.25 டன் என்றுதான் கணக்கிட்டு வாங்குகிறார்கள். ஆனால் உள்ளே போகிற எடை 12.41 டன். இந்த அளவுக்கு அதிகமாகப் போகிறது. ஆக, ஒரு லாரிக்கு இன்றைக்கு சுமார் 1,000 ரூபாய் கம்பெனிக்கு இலாபம். ஒரு நாளைக்கு 30 லாரிகள் அந்தப் பகுதியிலிருந்து அந்த கம் பெனிகளுக்குப் போகின்றன. அப்படியானால் அந்த கம்பெனிகளுக்கு ஒரு நாளைக்கு 30,000 ரூபாய் இலாபம் வருகிறது. அப்படியானால் அந்த கம் பெனிகளுக்கு இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுத்த யாருக்கு எவ்வளவு லாபம் வரும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

இதற்கெல்லாம் ஒரு 'வே பிரிட்ஜ்' இருந்தால்தான் சரியாகச் செய்ய முடியும் என்று 1978-லே அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு 1.2 இலட்சம் செலவாகும் என்று 1978-லே ஆபீசர்ஸ் நோட்டு போட்டிருக்கிறார் கள். இதுவரையில் அது இல்லை. இந்த அறிக்கையிலே பார்த்தோம். வரு கிறது 'வே பிரிட்ஜ்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை. ஆகவே, நீங்கள் 30,000 ரூபாய் காட்டு மரத்தினுடைய பணத்தை கொள்ளை இலாபம் அடிக்க அந்த கம்பெனிகளுக்கு ஏற்பாடு செய் திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, 1976 ஆம் ஆண்டுக்கு முன்னால் கழக ஆட்சி இருக்கிற காலத்திலேகூட பொதுமக்களுக்கு பயன்படுகிற 'ஃபயர் பெல்ட் ஏரியா' என்று ஒரு ஏரியா இருக்கும் காட்டில்.

(பிற்பகல் 1-00)

அதை சிறு வியாபாரிகளுக்குத் தான் ஏலம் விடுவார்கள். ஆனால் இப்போது அப்படி அல்ல. செய்கிறது என்றால் ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் [illegible] கம்பெனிக்காரர்களுக்கு போகிறது [illegible]

என்று அந்த மேயர் பெல்ட் ஏரியாவையும் அவர்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். நான் கேட்கிறேன், ஏன் அதை ஏலம் விடாமலே கம்பெனிக்காரர்களுக்கு கொடுத்திருக்கிறீர்கள்? ஏலம் விட்டால் சர்க்காருக்கு அதிக லாபம் வரும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 1979-80 ஆம் ஆண்டிலே ஏலம் விட்டார்கள். எவ்வளவு? குண்டஞ்சோலையிலே ஒரு ஹெக்டேர் 31,401, ஏலம் எடுத்தவர் பாலகிருஷ்ணன். அதேபோல் 27,375, ஏலம் எடுத்தவர் டி.வி.எஸ். சதாசிவம். பேரிஜியம், ஒரு ஹெக்டேர் 15,390, ஏலம் எடுத்தவர் சுப்பிரமணியராஜா. மரியப்சோலா, ஒரு ஹெக்டேர் 21,901. அதை ஏலம் எடுத்தவர் முகமது ஹனீபா. இப்படிப் பல்லாயிரக் கணக்கான ரூபாய்க்கு ஒரு ஹெக்டேர் ஏலத்திற்குப் போய்கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே அந்தக் கம்பெனிக்கு நீங்கள் என்ன விலைக்கு கொடுத்து இருக்கிறீர்கள் தெரியுமா? ஒரு ஹெக்டேர் 7,300 ரூபாய்க்குதான் நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். எனவே இப்படி ஒரு கம்பெனிக்கு கொடுத்துவிட்டு இப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்குவது நியாயம்தானா என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. பல்வேறு குற்றச்சாட்டுகள் என்னிடத்திலே இருக்கின்றன. காட்டு இலாக்கா இன்றைக்கு ஊழல் மலிந்து இருக்கின்ற ஒரு இலாக்காவாக மாற்றப்பட்டிருக்கின்றது என்பதற்காக நான் இவைகளை எல்லாம் சொன்னேன். ஆகவே இவ்வளவு நேரம் இலாக்கா சம்பந்தப்பட்டவைகளை பூடகமாக எடுத்து வைத்தேன். ஊழல் என்று சொன்னேன். இந்த ஊழல்களுக்குப் பின்னாலே மறைந்திருக்கின்ற ஊழல் அப்பன்கள் யார் யார் என்பதெல்லாம் வெளியே வரும் என்று நான் மறைமுகமாகச் சொன்னேன். இப்போது நான் நேரடியாகவே கேட்கிறேன். சர்க்காரிலே நடக்கின்ற எந்த விழாவாக இருந்தாலும் அந்த விழாக்களுக்காக அடிக்கப்படுகின்ற போஸ்டர்களை எல்லாம் கணேஷ் வித்தோ பிரஸ்ஸிலேதான் அடிக்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த கணேஷ் வித்தோ பிரஸ்சுக்கு மட்டும் ஏன் ஆர்டர் கொடுக்கப்படுகின்றது? இது யாருடைய பினாமி. ஊரிலே எவன் புதுக் கட்டிடம் கட்டினாலும் கலைஞர்தான் அதனுடைய பினாமி என்று சொன்னவர்களே, இன்றைக்கு அந்த கணேஷ் வித்தோ பிரஸ்சுக்கு உள்ளே ஊழலிலே யார் அமர்ந்து இருக்கிறார்கள். இதை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாடு விரைவிலே தெரிவிக்கும். இன்னொன்று சொல்கிறேன்.

துரைராஜ் என்பவர் டூரிஸ்ட் ஆஃபீஸராக இருக்கிறார். இவர் முன்னாலே நம்முடைய அமைச்சர் அவர்களுடைய சத்யா மூவீஸிலே சாதாரண வேலை பார்த்தவர். ஆபீஸராக இருந்தவர் ...னை 750 ரூபாய் சம்பளம் வாங்கு



கின்ற டூரிஸ்ட் ஆபீசராகப் போட்டார்கள். அப்படி போட்டுக்கொண்டு போய் மகாபலிபுரத்திலே போட்டார்கள். சென்னையிலே இருந்து பல காத தூரம் அல்லவா அது? எனவே அவரை மீண்டும் சென்னைக்கே கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டுவரப்பட்டவர் யார் என்று கேட்டால் நம் முடைய அமைச்சர் அவர்களாலே துரை, துரை என்று வீட்டிலே செல்லமாக அழைக்கப்பட்ட அவருடைய சகோதரர் மகன்தான். அவருக்கு இந்த டூரிஸ்ட் ஆஃபீசர் வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்குப் பெயர் நெப்போட்டிசம் இல்லையா? இதற்குப் பெயர் ஊழல் இல்லையா? இதற்குப் பெயர் அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? அதுமட்டுமல்ல. அந்த துரை ராஜுக்கு இன்னொரு சகோதரர். அவருடைய பெயர் எஸ். சேதுராமன். அவர் சாதாரண கார் பெயிண்டராக இருந்தவர். இன்றைக்கு பொருட்காட்சி நடத்துகிறோம், பொருட்காட்சி நடத்துகிறோம், என்கிறார்களே, அந்தப் பொருட்காட்சிகளைப் பொறுத்தவரை இந்த துரைராஜுக்கு அதிகமான ஏலங்கள் ஆஃபர் ஓர்க் தரப்படுகின்றது. அவர்களுக்குத்தான் நியமன முறை யிலே வேலைகள் கொடுக்கிறார்கள். இந்த மாதிரிதான் திருச்சியிலே நடக்கின்ற கலை அரங்கு அமைக்கின்ற வேலையும் கொடுக்கப்படு கிறது. தப்பித் தவறி டெண்டர் எடுத்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதற்குமேலயும் அதிகமாகச் செலவு ஆகின்றது என்று சொல்லி பணம் வாங்குகிறார்கள். சேலத்திலே அப்படிச் செய்த ஒரு வேலைக்கு 7,000 ரூபாய் உபரியாக கொடுக்கவேண்டும் என்று கேட்டார் சேதுராமன். கடைசியிலே 3,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. இதுபற்றிச் சொல்லவேண்டும் என்றால் வடக்குப் பகுதி சம்பள கமிஷனர் அலுவலகத்தில் டோக்கன் எண் 5,126, 8—4—1981 என்று தேதியிட்டு செய்தித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த செக் நம்பர் 0701331. செய்தித்துறை பெற்று 15—4—1981 அன்று சேதுராமனுக்குப் பணமாக அளிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன், வாட்டர் ட்ரீ என்பது ஒருவகை மரம். கொடைக்கானல், நீலகிரி போன்ற பகுதியிலே இது இருக்கின்றது. இது தோல் பதனிட உபயோகப் படுகிறது. அதை மேட்டுப்பாளையத்திலே எஸ்.எஸ். டேன் இந்தியா, எஸ்.எஸ்.என். சுப்பிரமணியத்துக்கு அந்தக் கம்பெனிக்கு அனுப்புகிறார்கள். அங்கிருந்து தயார் செய்துதான் இப்படிப்பட்ட தோல் பதனிடும் தொழிற் சாலைக்கு வருகிறது. அந்தக் கம்பெனிக்காரர் 12 இலட்சம் ரூபாய் அரசுக்கு பணம் கட்ட வேண்டும். ஆனால் இதுவரையில் அதையும் கேட்கவில்லை. கொஞ்சநாள் நிறுத்தி வைத்து இருந்தார்கள். திடீரென்று ஒரு முடக்கம் ஏற்பட்டது. அமைச்சருடைய மூத்த மருமகன் டெக்னிகல் அசிஸ்டெண்டாக இருந்து இன்றைக்கு மானேஜராக மாற்றப்பட்டிருக்கிறார். எனவே தான்

அந்த வாட்டல் ட்ரியினுடைய விலைகூட ஏற்றப்படவில்லை. சுருக்கமாக சொன்னால், இந்த காட்டிலாகா, சுற்றுலா, திரைப்படம் போன்ற துறைகள் எல்லாம் இந்த அரசினுடைய ஊழல் ஊற்றுக் கண்களாக **இருக்கின்றன*** * என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

***மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிற வனத் துறை, சின்கோனா மற்றும் செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்ப இலாக்காவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது 7 கட்சியைச் சேர்ந்தவர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர்கள் இங்கே தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அதிலே, பல உறுப்பினர்கள் நடைபெற்று இருப்பதாக, அவர்களுக்கு வந்திருக்கிற தகவல்களை ஒட்டி சில குறைகளை சுட்டிக்காட்டி, தீர்த்து வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் மேம்பாட்டிற்கான திட்டங்களை தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் இந்தத் துறையிலே சீர்திருத்தம் செய்ய வேண்டிய முறைகளை பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இறுதியாக இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே வழக்கம்போல, ஒவ்வொரு சட்டமன்றத் தொடரிலேயும், அவருடைய தலைவர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செய்து வந்த வேலையை, இன்றைக்கு அவர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களிடத்திலே ஒப்படைத்து குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். நான் நேற்றைய விவாதத்தில் உச்சக் கட்டத்திலேயிருந்து தொடங்கிலே வந்தேன். இன்றைக்கு நான் .... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகளை நானே தான் சொன்னேன். எங்கள் தலைவர் சொல்லி நான் சொல்வதாக சொல்லுவது தவறு. எனக்கு என்ன தனியாக மூளை கிடையாதா அவ்வளவு இன்னஸண்டா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பேசி முடிக்கட்டும். (கூச்சல் குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்றால், அமைச்சர் பேசிய பிறகு சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன் :** முடியாது. எங்கள் தலைவர் சொல்லிக் கொடுத்து நான் சொன்னதாகக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. (கூச்சல், குழப்பம்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களுடைய பேச்சை நான் அறையிலே கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அதிலே கடைசியில் அவர் ஒரு குற்றச்சாட்டாக சொல்லி முடித்திருக்கிறார். * அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன். ஏனென்றால், இவர் என்று எந்த குற்றச்சாட்டையும் அவையிலே சொல்லக் கூடாது. ஏதாவது சொல்வதாக இருந்தால் அவைத் தலைவரிடம் முன்பே தெரிவித்திருக்க வேண்டும்.

(முற்பகல் 1-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாக வேண்டும்.

**திரு. துரைமுருகன் :** அதற்கு வேண்டிய ஆதாரங்களைச் சொல்லி இருக்கிறேன்.

THIRU V. KRISHNAMOORTHY: What the Hon. Minister has said is an 'insinuation'. Is it not objectionable?

MR. SPEAKER: If it is objectionable, I am here to protect.

MR. RAHMANKHAN: I am raising privilege matter against the Hon. Minister.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டுக்கள் சொல்லக்கூடாது என்பதல்ல. மற்றும் குற்றச்சாட்டுகள் சொல்லலாம். ஆனால் அவர்கள் பேச்சின் முடிவில் அந்தமாதிரி வார்த்தைகள் வந்தது தவறு என்று சொல்கிறேன்.

* மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஏப்ரல் 29

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அந்தப் பக்கத்திலிருந்து யாரும் அதை ஆட்சேபிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் ஆட்சேபிக்கவில்லை என்பதல்ல பிரச்சினை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆட்சேபணை செய்ய இருக்கிறோம். *

என்று அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு இருக்கிறார்கள். அதனால் பேசாமல் இருக்கிறோம். (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் நான் நீக்கியிருக்கிறேன். ஆதாரங்கள் இருக்கிறது என்று சொன்னால் அந்த ஆதாரங்களை என்னிடம் காட்ட வேண்டும். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டியது இல்லை. அதே போல் அமைச்சரவர்கள் சொல்லப் போவதையும் இந்த அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

THIRU A. RAHMANKHAN: Again, I say, I am raising a privilege against the Hon. Minister.

MR. SPEAKER: All of a sudden, you cannot raise a privilege matter.

THIRU A. RAHMANKHAN : Rules are clear. I can raise at any time.

MR. SPEAKER: There are no such rules in our Assembly. Now. I am asking the Hon. Minister to continue his speech.
(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நினைத்தபோது உரிமைப் பிரச்சினை எழுப்ப முடியாது. அது சபையின் மரபு அல்ல.

* மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



கட, மத்திய சர்க்கார் துறையை பாகத் தயாரித்து எல்லா மக்களும் விரும்பிப்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது உரிமைப் பிரச்சினை அல்ல. அவர்கள் கட்சித் தலைவர் சொன்னதை துரைமுருகன் கேட்பார்கள் என்று நம்பி பேசி இருக்கிறார்கள். துரைமுருகன் அவர்கள், அவர்கள் கட்சித் தலைவர் சொல்வதை நம்ப மாட்டேன் என்றால் சரி. (கூச்சல், குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான் : நான் அமைச்சர் மீது ஒரு உரிமை பிரச்னை எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எழுதிக் கொடுங்கள். சபையில் ஏற்படுகிற பிரச்னைகள் பற்றித்தான் சபையில் கேட்கலாம். ஒரு பேச்சின் மீது திடீரென்று ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வர அனுமதிப்பதில்லை. (குறுக்கீடு) இப்படிப்பட்ட முறைகளை நான் அனுமதிப்பதற்கில்லை.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்வதைக் கேளுங்கள். ரூல்ஸ் இருக்கின்றன, உரிமைப் பிரச்னை எழுப்புவதற்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நின்று கொண்டிருக்கிறேன். உறுப்பினர்கள், அவரவர்கள் இடங்களில் அமர வேண்டும். உரிமைப் பிரச்னை எழுப்புவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை. அமைச்சர் தான் சொன்னதை மாற்றிக் கொள்கிறேன் என்று சொன்ன பிறகு அதன் மீது உரிமைப் பிரச்சினை. அவை நடந்து கொண்டிருக்கும்போதே எழுப்ப அனுமதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் மீது ஒரு தவறான தகவல் கொடுத்து விட்டேன் என்று என்மீது ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வரவில்லையா ? (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் எழுப்பி வந்த குற்றச்சாட்டை இன்றைக்கு நான் தயவு செய்து அதை மாற்றிச் சொல்கிறேன். . (கூச்சல், குழப்பம்)

அதை மாற்றி இதுவரை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செய்துவந்த அந்தப் பணியை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள் என்று

நான் சொன்னதைத் திருத்திக் கொள்ளுமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு நான் விவாதத்தை துவக்கத்திலிருந்து ஆரம்பிக்கலாம் என்று கருதுகிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். உரிமைப் பிரச்சினையை இப்படிப்பட்ட நேரங்களில் திரு. ரகுமான்கான் எழுப்ப உரிமை கிடையாது.

**திரு. அ. ரகுமான்கான் :** அமைச்சர் குழந்தைவேலு அவர்கள்தான் அவையிலே ஒரு தவறான தகவல் சொல்லிவிட்டேன் என்பதற்காக, உடனே என்மீது உரிமைப் பிரச்சினை கிளப்பப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. இது தீர்ப்பு அளிக்கின்ற நேரமல்ல. வேறு வகையிலே கொண்டு வாருங்கள். இப்போது எல்லாவற்றிற்கும் நல்ஸ் இருக்கிறது. இப்போது மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு நேரம் தந்தாக வேண்டும். நினைத்த நேரத்தில் உரிமைப் பிரச்சினை எழுப்ப, நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வார்த்தைகள் மாற்றப் பட்டு, அப்படி ஒருவேளை இருக்குமானால், என்று சொல்லிய பிறகு எந்தப் பிரச்சினையும் கிடையாது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எப்படி நடக்க வேண்டுமென்று எனக்கு அடிக்கடி சொல்லித் தாராதீர்கள். எனக்குத் தெரியும். உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்)

**திரு. அ. ரகுமான்கான் :** நான் உட்கார முடியாது. நான் அந்தச் சட்டத்தைப் படிக்கிறேன். உங்கள் தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறேன். எப்படித் தப்பு என்று சொல்லுங்கள் (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் தயவுசெய்து அமைதியாக உட்காரும்படி கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).





(பிற்பகல் 1-20)

திரு. ரகுமான்கான் அவர்களும் உட்கார வேண்டும். அந்த வார்த்தையை மாற்றிக் கொண்டேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். உரிமைப் பிரச்சினை இல்லை. விவாதம் தொடர்ந்து பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். சந்தேகம் இருந்தால் பின்னால் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இப்போது இந்த மானியங்களிலே வனத்துறை என்பது மிக முக்கியமான ஒரு துறையாக எடுத்துக்கொள்ளப்பட்டு, பேசியிருக்கிற அத்தனை உறுப்பினர்களும் இந்த நாட்டிலே வனத்துறை காப்பாற்றப் படவேண்டும் என்பதும், வனங்கள் இன்னும் அதிகமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு உலகம் முழுவதிலும் இந்த வனங்கள் இயற்கை செல்வங்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று ஒரு எண்ணத்தின் தொடர்பாக இருக்கிற காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் இன்னும் புதிய பகுதிகளிலே காடுகள் வளர்க்கப்படவேண்டுமென்றும் மிகத் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை ஒட்டி நம்முடைய அரசும், மற்ற மாநில அரசுகளும் அப்படிப்பட்ட முயற்சிகளை இன்றைக்கு எடுத்து வருகிறது. இதை ஒட்டி மத்திய நாடாளுமன்றத்திலே இன்றைக்கு வனத்துறை என்பதும், இந்த வனம் தொடர்பான சட்டங்கள் கூட்டுப் பொறுப்புக்குள்ளே கொண்டு வந்து விட்ட காரணத்தாலே மத்திய அரசு ஒரு பொது சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் பேசியபோது மத்திய வேளாண்மை துறை அமைச்சர் மாண்புமிகு பீரேந்திர சிங் அவர்கள் அறிவித்துள்ள இந்த அறிவிப்பின் மூலமாக ஒரு கருத்தை நமது நாட்டு மக்களுக்கு தெரிவிப்பது பலனளிக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு பீரேந்திர சிங் அறிவித்தார் என்று நேஷனல் ஹெரால்டு பத்திரிகையில் 8—4—1981 நாளில் வந்த தலையங்கத்தின் ஒரு பகுதியை, அதன் தமிழாக்கத்தை படிக்கிறேன். "ஆனால் திட்டமிட்டு வனங்களை அழிப்பதால் தட்பவெட்ப நிலைக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற ஆபத்துக்களை கணிக்கையில்

திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஏப்ரல் 29

இந்த சட்டம் விரைவாக கொண்டு வருவதே நல்லது. காடுகளிலும், நிலங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தியாகும் மரங்களைப் போல நான்கு மடங்கு அளவு நாட்டில் பயன்படுத்தப்படுகிறது என்று தேசிய வேளாண்மைக் குழு கணக்கிட்டுள்ளது. நாட்டில் தற்போது வனச்செல்வமான மரங்கள் மொத்தத்தில் 2500 கனமீட்டராகும். நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் முறையை பார்க்கையில் இன்னும் பத்து ஆண்டு காலத்தில் நாட்டில் மொத்த செல்வமான 2500 கன மீட்டர் மரங்களும் தீர்ந்து விடும் என்று தெரிகிறது. வன ஆக்கிரமிப்பும், நினைத்தபடி மரங்களை அழிப்பதும் பயமுறுத்துகிற வகையில் பெருகி வருகிறது என்று வேளாண்மை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். கடந்த முப்பது ஆண்டு காலத்தில் 48 இலட்சம் ஹெக்டேர் வன பிரதேசம் அழிக்கப்பட்டுள்ளது. இது மண் சிதைவு, பல்நோக்கு நீர் தேக்கங்கள், நதிகள் பழுது படுதல், வெள்ளப் பெருக்கு, பலவிதமான வன விலங்குகளின் அழிவு ஆகியவைகளுக்கு இட்டுச் செல்கிறது" என்று, இந்த பகுதி இன்றைக்கு இந்திய அரசோ, மாநில அரசுகளோ எந்த அளவிற்கு இந்த வனத்துறையை காப்பாற்ற வேண்டும், வளர்க்க வேண்டுமென்பதிலே நாம் ஈடுபடவேண்டும் என்கிற கட்டாயத்தை சுட்டிக் காட்டுகிறது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் வனத்துறையிலே திருட்டு போகிறது, திருட்டுப் போகிறது என்று சொன்னார்கள். வனத் துறையிலே திருட்டு போகிறது இன்று தெரிகிறது. முன்னலே திருட்டுப் போனது தெரியவில்லை. அதுதான் இன்றைக்கு நாட்டு மக்களின் கவனத்திற்கு, இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளினாலே, திருட்டுப் போவது தெளிவாகத் தெரிகிறது. காரணம் திருடர்கள் பிடிபடுகிறார்கள். செய்திகள் வருகின்றன. முன்னாலே திருடுகள் நடைபெற்றன. வெளியிலே தெரியாது. ஆனால் யார் திருடினார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. யார் துணையாக இருந்தார்கள், என்றும் நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் வெளியே வரவில்லை நாட்டு மக்களுடைய கவனத்திற்கும் வரவில்லை. இன்றைக்கு எல்லாப் பிரச்சினைகளும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. நம்முடைய அரசினுடைய கண்காணிப்பின் மூலமாக பிரச்சினைகள் இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே வைக்கப்பட்டன. அதனாலே தான் திருட்டுப்போவதைப்பற்றியும் நாம் இங்கே பேசிக்கொண்டு இருக்கிறோம். இதைத் தடுத்து நிறுத்துவதற்காக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இங்கே இந்த விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய திராவிட முன்னேற்றக்



1981 ஏப்ரல் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கழக உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் அங்கே நடைபெற்றிருக்கின்ற நடைமுறைகளை பிரத்தியட்ச நிலைமைகளோடு எடுத்துச் சொன்னார்கள். அரசு நடவடிக்கைகள் எடுத்தாலும் திருட்டுப் போய்க்கொண்டிருக்கிறது என்று விஷயங்களை எல்லாம் சொன்னார்கள். நான் முன்னாலே இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறேன், கள்ளன் பெரிதா, காப்பான் பெரிதா என்ற பழமொழி இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டது அல்ல, நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற தமிழ் பழமொழியாகும். ஆகவே இங்கே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்த வனத் துறையில் ஒரு பாரஸ்டருக்கு சில ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் ஒரு பாரஸ்டு கார்டுக்கு சில ஆயிரக்கணக்கான ஏக்கர்கள், ஒரு ரேஞ்சருக்கு இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் என்று நாம் அவர்களை காவலுக்கு வைத்திருக்கிறோம். இதைவிட இந்த அரசு கடந்த 2 ஆண்டு காலத்திலே பாரஸ்ட் புரட்டக்ஷன் ஸ்குவாட் என்று போட்டு இந்தத் திருட்டுகளைக் கண்டுபிடிக்கிற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறது. கடந்த ஆண்டிலே அந்தத் திருட்டுக்களைக் கண்டுபிடித்ததன் மூலமாக நமக்கு கம்பவுண்டிங் செய்ததன் மூலமாக வந்துள்ள வருமானம் 22,18,564 ரூபாய். கைப்பற்றப்பட்ட சந்தன மரங்களினுடைய மதிப்பு 39,86,553 ரூபாய். ஆகவே அந்த அளவுக்கு வனத் துறையும் அதனுடைய நிர்வாகிகளும் இந்தத் திருட்டுக்களைக் கண்டுபிடிக்கிறார்கள் என்பதை நீங்கள் அருள்கூர்ந்து பார்த்தால் உண்மையைத் தெரிந்துகொள்ள இயலும். ஆகவே நாம் மிகப்பெரிய பரந்து கிடக்கின்ற காடுகளில் தடுப்பு முறைகளை ஏற்படுத்தினாலும் நம்மிடத்திலே இருக்கின்ற வசதிக் குறைவும் அதிகாரிகளுடைய குறைவும் மிகக் குறைந்தே இருக்கிறது. சட்டத்தைத் திருத்தவேண்டும், சட்டத்தைத் திருத்தவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய கன்னியாகுமரி உறுப்பினர் அல்லது சேந்தமங்கலம் உறுப்பினர் தண்டனை அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக கடுமையாக சட்டத்தை நாம் திருத்தினோம். திருத்தியதினுடைய பலன் வனத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் பல பேர் இந்தக் குற்றவாளிகளைப் பிடித்து ஏதோ ஆயிரம், இரண்டாயிரம் என்று கம்பவுண்டிங் செய்து விட்டு விட்டார்கள். ஆகவே கம்பவுண்டிங் செய்கிற அதிகாரத்தை ரத்து செய்துவிட்டு நீதிமன்றங்களுக்கு அவர்களை அனுப்பவும் அவர்கள் கிரிமினல் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு அதற்கு மிகக் குறைந்தபட்ச தண்டனை ஓர் ஆண்டு என்று கருதுகிறேன், அந்தச் சட்டத்தின் பிரிவு என்னிடத்திலே இல்லை. அல்லது குறைந்த அபராதம்தான் அந்தச் சட்டத் திருத்தத்திலே நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் விளைவுகளை நான் சொல்கிறேன். சென்ற ஆண்டிலே இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு 31 வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. 11 குற்றங்களில் அபராதம் போட்டார்கள். அந்த

அபராதம், 10 ரூபாய், 30 ரூபாய், 50 ரூபாய், 85 ரூபாய், 100 ரூபாய் என்று நடைமுறையிலே ஒரு கேசிலேதான் 1,000 ரூபாய் தண்டித் தவறிப் போட்டு இருக்கிறார்கள். 14 பேர்களுக்கு சிறைத் தண்டனை. அந்தச் சட்டத் திருத்தத்திலேயே குறைந்தபட்ச தண்டனை என்றே நாம் குறிப்பிட்டோம் என்று கருதுகிறேன், விவரம் சரியாக இருக்குமானால். ஆனால் அவர்கள் தந்திருக்கிற தண்டனை ஒரு வாரம், 3 வாரம், 6 வாரம், 2 மாதம் 3 வழக்குகளிலேதான் ஒரு வருடம் தண்டனை தந்திருக்கிறார்கள். இதிலே இன்னும் என்ன பெரிய வேதனை என்றால் ஒருவன் அபராதம் ஆக்ட் என்ற அந்தச் சட்டத்தின்கீழ் இவன் முதல் தடவை குற்றம் செய்திருக்கிறான், இவன் முதல் தடவை சந்தன மரத்தை திருடியிருக்கிறான். ஆகவே விடுதலை செய்கிறேன் என்று 5 வழக்குகளிலே நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது. இன்னொரு வழக்கிலே மிகப் பெரிய தண்டனையாக கோர்ட் கலையும் வரை தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படியிருக்கிறது? வனத் துறையிலே உள்ள அதிகாரிகள் காம்பவுண்டு அதிகாரத்தை வைத்திருந்தபோது இங்கே சொன்னதுபோல ஒரு 25 லட்சம் ரூபாய் தந்திருப்பார்கள். இப்போது அந்த காம்பவுண்டு அதிகாரத்தை எடுத்துவிட்டு பிறகு வருகிற அத்தனையும் நடைமுறையிலே நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டு விடுதலை செய்யப்படுகிறார்கள்.

(பிற்பகல் 1.30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இதை நீங்கள்தான் கவனித்துப் பரிகாரம் காண வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள். ஆகவே, நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற கடுமையான நடவடிக்கைகளின் மூலம் எப்படிப்பட்ட . . . (குறுக்கீடு) நாம் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டாலும் எப்படித் திருட்டுக்கள் நடந்து கொண்டே இருக்கின்றன என்று சொல்கிறபோழுது இன்றைக்கு இந்த வனத்துறையைப்பற்றியும், சுற்றுலாத் துறையைப்பற்றியும், செய்தித் துறையைப்பற்றியும் இந்த அளவிற்கு விவாதிக்கப்படுவதற்கே இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள்தான் காரணம் என்பதை நான் பணிவன்போடு உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்கும், நாட்டிற்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையானால் இவைகள் அனைத்தும் கவனிப்பா



ஏற்றுக் கொடுத்தது, என்னென்ன நடைபெற்றது என்பதை நான் பின்னாலே சொல்லுகிறேன். காரணம் மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. [illegible] முருகன் அவர்கள் இங்கே குற்றம் சாட்டியிருக்கிறார்கள். சமீப காலத்திலே இந்த மாமன்றம் மாண்புமிக்க மாமன்றம், அவதூறுகளையும், உண்மையற்ற குற்றச்சாட்டுக்களையும், அடிப்படையற்ற அவதூறுகளையும் அரங்கேற்றுகின்ற மன்றமாக மாற்றப்பட்டு வருகிறது என்பதை நான் மன வேதனையோடு மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கும், இந்த நாட்டிற்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த மன்றத்திலே எதையும் எடுத்துச் சொல்லலாம் என்கின்ற உரிமையை இந்த நாட்டு மக்கள் தந்திருக்கின்ற ஒரே காரணத்தினாலே எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று இங்கே எடுத்து வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களைச் சந்திக்கின்ற துணிவோடு இந்த அரசவையும், அமைச்சர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நாம், வனங்களைப் பாதுகாக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும், திருட்டுக்களெல்லாம் தடுக்கப்படவில்லை என்று சொன்னார்களே, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே பொள்ளாச்சியிலே வெட்டிக் கடத்தப்பட்ட வழக்கைப் பற்றி இந்த அரசு வந்ததற்குப் பிறகு மிகப்பெரிய அதிகாரிகளை அனுப்பி அங்கே நடைபெற்ற குற்றச்சாட்டுக்களையெல்லாம் கண்டுபிடித்து, எத்தனை அதிகாரிகள் மீது தான் நடவடிக்கை எடுப்பது? நான் இங்கே பட்டியல் தந்தால் அது நீண்டுகொண்டே இருக்கும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] முருகன் அவர்களுக்கு அவர்களைப்பற்றியெல்லாம் கவலையில்லை.

ஆனால், ப. உ. சண்முகம் அவர்களை விரட்டி, விரட்டி, தூக்கித் தூக்கி அவருடைய கார் டயரைச் சுட்டு, அவரைக் கொண்டுபோய் மிரட்டி, குடும்பத்தை நடுநடுங்க வைத்து, நள்ளிரவு வேளையிலே குடும்பப் பெண்களோடு நிர்க்கதியாக நிற்கின்ற அவரிற்குத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகின்ற காரியத்தைச் செய்த ஒரு அலுவலர்மீது எடுக்கின்ற நடவடிக்கை மாத்திரம் அவருடைய கவனத்திற்கு வரும்; வேறு எந்த நடவடிக்கைகளும் இவர்களுடைய கவனத்திற்கு வராது.

இங்கே காடுகள் காப்பாற்றப்பட வேண்டும், காப்பாற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசும், நம்முடைய மதிப்பிற்குரிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், இந்த மாநில அரசும் இன்றைக்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் எப்படியெல்லாம் இந்தக் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஒரு சான்று சொல்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஏப்ரல் 29

பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கு அருகில் சிறுமலை என்று ஒரு மலையிருக்கிறது. அந்த மலையானது 3,000 அடி உயரமுள்ள மலையாகும். இந்த நாட்டிலே மலைகளைப் பல குறை. எத்தனை மலை வளர்ந்தாலும் நாம் வேகமாக பாதுகாப்பதில் இருந்துவிட்டோம். இருக்கின்ற மலைகளையாவது காப்பாற்ற வேண்டிய மிகவும் அவசியமான நிலையில் இருக்கிறோம். ஆனால், 3,000 அடி உயரமுள்ள அந்த சிறுமலைப் பகுதியிலே முன்னாலே இருந்த அரசு நாங்கள் பட்டா கொடுக்கிறோம், பட்டா கொடுக்கிறோம் என்று சொல்லி 3,000 ஏக்கர்களை, மலையிலே உள்ள காடுகளை அழித்து, பட்டா வழங்குவதற்குத் திட்டமிட்டு வழங்கினார்கள். பட்டாவாவது கிடைத்ததா? அங்கே சென்று பார்த்தால் தெரியும். அங்கே பொட்டல்காடாக இருக்கிறது; பட்டா பெற்றவர்களும் இல்லை; அங்கே விளை நிலம் ஆக்குகின்றவர்களும் இல்லை. அந்த 3,000 ஏக்கர் நிலத்தைப் பட்டா போட்டுத் தருகிறார்களாம் ஏழைகளுக்கு, 3 ஏக்கர் வீதம். ஆனால், போடுகின்ற புத்திசாலிகள் ஒரு உத்தரவைப் போடுகிறார்கள். அவனே ஏழை, அவனுக்கு ஆதாயமாகக் காட்டை அழிக்கிறார்கள்; காட்டை அழித்தாலும் தரையிலே இருக்கின்ற காட்டை அழிக்கவில்லை; மலையிலே இருக்கின்ற காட்டை அழிக்கிறீர்கள், அப்படி அழித்துக் கொடுக்கின்றபொழுது அதிலேயிருக்கின்ற மரங்களுக்காக ஏக்கருக்கு 200 என்று நினைக்கிறேன், என்னிடத்திலே அந்த ஆணையின் விபரம் இல்லை, மொத்தம் இருநூறா அல்லது ஏக்கருக்கு இருநூறா என்று தெரியவில்லை. அந்த ஏழை, அந்தப் பட்டா வாங்குகின்ற ஏழை அந்த மரத்திற்காக 200 தரவேண்டும் என்று விதிக்கிறார்கள்.

ஏன், அங்கே ஏழையைப் போய் கேட்டால், ஏதோ எங்களுக்கு பட்டா என்று சொன்னார்கள், அந்தப் பட்டாவும் தெரியாது, பட்டா இருக்கிறதில்லும் தெரியாது என்று இன்றைக்கும் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள். பெற்றுக் கொண்டவர்கள் இடைத் தரகர்கள். இவர்கள் மரத்திற்கு விதித்த அந்தத் தொகையை தரமுடியாத ஏழைகள், இடைத் தரகர்கள் அந்தப் பணத்தைக் கட்டி அங்கே மலைகளிலே வளர்ந்து நின்ற, உயர்ந்து நின்ற மரங்களை வெட்டி, அழித்து இன்றைக்கு விற்று விட்டிருக்கிறார்கள். பொட்டல்காடாக இருக்கிறது. இன்றைக்கு இந்த அரசு வந்ததற்குப் பிறகு, மீண்டும் வருவாய்த் துறையிடம் இருந்து அந்த நிலங்களை பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. 3 ஆயிரம் ஏக்கர்களை அழித்த கதை இது.

இங்கே ஏதோ மரம் வெட்டுவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள் என்று ஒன்றை சொன்னார் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள். அதை தெளிவாக பேரவைத் தலைவரிடத்திலே தந்து அது என்னிடத்திலே தரப்பட்டிருக்குமே



1981 ஏப்ரல் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

யானால் அதைப் பார்த்துக்கொண்டு நான் திருத்த முடியும். இப்போதும் சொல்கிறேன். இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு நான் அமைச்சராக இந்த வனத்துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒரு உத்தரவை இந்த ஆணையைப் பற்றித் தந்தது அரசினுடைய முடிவல்ல அன்றைக்கு இருந்த அதிகாரிகள் அவர்களுக்குள்ள உரிமையைக் கூட காட்டி தொழிற்சாலைகள் அங்கமைக்க வைத்திருக்கிற நிலத்திலே ஒரு காட்டுப் பகுதியை அவர்களுடைய தேவையைத் தொட்ட உபயோகத்திற்காக— பல்லாண்டுகள் அவர்களுடைய தேவையைத் தொட்ட உபயோகத்திற்காக— இந்த அரசு வந்ததற்குப் பிறகு எல்லை கற்களை நிறுத்தி இருக்கிறோம். மலையைக் காப்பாற்றி இருக்கிறோம். முன்னாலே இருந்தவர்கள் கூப்புகள், கூப்புகள் என்று அப்படியெல்லாம் மலைகளை கூப்புகளாகப் போட்டார்கள் என்பதற்கு அங்காங்கே கோப்புகள் இருக்கின்றன. அதிகாரிகள் பணி ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்பதும், அவர்களெல்லாம் இன்றைக்கு பணி ஓய்வு பெறுகிற நேரத்திலே, பாவம் அவர்களை என் பழி வேண்டாம் என்று நாங்கள் அவர்களை வீட்டுக்கு அனுப்பி இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்—ஆகவே அவர்களுக்கு இருக்கிற உரிமைகளின் மீது, அன்றைக்கே ஏற்படுத்திவிட்ட உரிமைகளைக் காட்டி, அவர்கள் நடத்துகிற அந்தத் தேவையை உற்பத்தியாகின்ற அந்தத் தொழிற்சாலைக்கு விறகு கிடைக்கவில்லை, ஆயில் கிடைக்கவில்லை, எங்களுக்குள்ள உரிமையைத் தடுத்தால் நாங்கள் நீதி மன்றத்திற்கு போவோம் என்றுகூட தெரிவித்ததால் அன்றைக்கிருந்த அதுவாய் பெரிய உரிமையை, அப்படி உரிமை இருக்கிறது என்று அவர்களுக்கு கொடுத்தாக வேண்டும், தீர்மானித்ததுதான் அந்த ஒன்று. அதன் மீதுதான் ஆணையிடப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு எத்தனை வழக்குகள் வந்தாலும் பரவாயில்லை என்று நாங்கள் நிறுத்தி இருக்கிறோம். சமீபத்திலே கூட கோவையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு உத்தரவை பிறப்பித்து இருக்கிறார்கள். அதையும் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். நாங்கள் ஒரு சட்ட திருத்தம் கொண்டு வந்தோம். அரசாங்கத்திற்கு தெரியாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தான் இந்த மரம் வெட்டும் அனுமதியை வழங்கிக் கொண்டு வந்தார். அதைக் கவனித்த பிறகு ஒரு குழு அமைக்கவேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்தோம். அந்தக் குழுவிலே மாவட்ட வன அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண்மைத் துறை பொறியாளர், மற்றும் ஒரு வருவாய்த் துறை அதிகாரி இவர்கள் இருந்து தீர்மானிக்க வேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். முன்னாலே இருந்த சட்டம், வயது முதிர்ந்த மரம் என்றால், ஆபத்து விளைவிக்கின்ற மரம் என்றால் அவைகளை வெட்டுவதற்கே அனுமதித்தே ஆகவேண்டும் என்று இருந்த சட்டத்தை திருத்தி, அப்படியே ஒருவேளை வயது முதிர்ந்ததாக

இருந்தாலும், வேறு சூழ்நிலைகளை நீங்கள் கணக்கிலே எடுத்து அனுமதி மறுக்கலாம் என்ற சட்டம் இருக்கும் கொண்டு வந்திருக்கிறோம். அதை இன்றைக்கு அமுலிலிருந்தே கொடுத்திருக்கிறோம்.

ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். எங்களுக்கு ஒரு 3½ மாதம் விடுமுறை கொடுத்தார்களே, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சேர்த்து. அந்த நேரத்திலே மாத்திரம் வேகமாக நீலகிரி, ஏற்காட்டிலே எப்படி எல்லாம் மரங்கள் வெட்டுவதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டன என்பதைப் பார்த்தால்—நாங்கள் இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம், அதிகாரிகள் மீது—அந்த 3 மாத காலத்தில் அதிகாரம் இல்லாத முதலமைச்சராக இருந்து ஆட்சி செய்தது யார்? அதிகாரம் இல்லாத அமைச்சர்களாக ஆட்டம் போட்டது யார்? அதிகாரம் இல்லாத அதிகாரிகளாக இருந்தவர்கள் யார்? என்பதை இந்த நாடு நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது. அன்றைக்கு 3½ மாத காலத்திலே நீலகிரியிலேயும், ஏற்காட்டிலேயும் கொடுத்த உத்தரவுகளுக்காக நாங்கள் வழக்கு மன்றத்திலே போய் போராடிக் கொண்டிருக்கிறோம்—ஆயிரக்கணக்கான மரங்கள், சில்வர் ஓக் என்ற மரங்கள், வெட்டுகிறேன் என்று உரிமை கொண்டாடுகிற ஒரு எஸ்டேட் ஓனர்-ஐ எதிர்த்து வழக்கு மன்றத்திற்கு போய்க்கொண்டு இருக்கிற நேரத்தில் இந்த சட்டத் திருத்தம் நோட்டிபிகேஷன் வருகிறது. ஏப்ரல் மாதம் 21-ந் தேதி. 19-ந் தேதி அன்றைக்கு கையெழுத்து ஆகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.40)

ஆகவே, இப்படி இங்கே இந்த மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல இங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாம் ரப்பர் தோட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்; சின்கோனாவைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்—நம்முடைய சின்கோனா என்பது வளர்ந்து வருகின்ற ஒரு துறை, இன்றைக்கு வளர்ச்சி திட்டத்திலே இருக்கிற ஒரு துறை. அந்தத் துறையினுடைய வருமானத்தைப் பார்த்தால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது. காரணம், மத்திய அரசு நம்முடைய கொய்னாவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைக் குறைத்துவிட்ட காரணத்தினால், நாம் அதிகமாக லாபம் பெற முடியவில்லை. இருந்தாலும், சமீபத்திலேகூட ஆனைமலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்—இன்றைக்கு நம்முடைய அரசுத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூலி



உயர்வு கொடுத்திருக்கிறோம். ஆனால், ரப்பர் தோட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, அருமை உறுப்பினர் மணி அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்துவார்கள்; என்னோடு அடிக்கடி தொடர்பு கொள்வார்கள். நல்ல வருமானம் வருகிறது, லாபம் வருகிறது என்கிறார்களே, எங்கே இருந்து வருகிறது என்றால், ஏறத்தாழ ஒரு 10½ கோடி ரூபாய் முதலீடு செய்து, 4 ஆண்டு காலமாகத்தான் வருமானம் ஈட்டிக் கொண்டிருக்கிறோம். 6 கோடி ரூபாயைத் தொட்டுக் கொண்டிருக்கிறோம். நான் கேட்கிறேன் ஒரு 10 கோடி ரூபாய் முதலீடு செய்தால், ஒரு ஆண்டிற்கு குறைந்தபட்சம் வட்டித் தொகையாவது வேண்டாமா? அதுவும் வந்திருக்கிறதா? ஆகவே, வளர்ந்துகொண்டிருக்கின்ற துறை. இன்னும் அந்தப் பகுதிகள் முழுவதும் டாப்பிங் என்று சொல்கிற, பால் எடுக்கின்ற முடிவுகளுக்கு வந்ததற்குப் பிறகு, அது நல்ல நிலையிலே வளர்ந்ததற்குப் பிறகு இன்னும் பல திட்டங்களை அமுல்படுத்த இருக்கிறோம். ஆனால், இன்றைக்குகூட தனியார் தோட்டத் தொழிலாளர்கள் வாங்குகின்ற சம்பளத்தைவிட, இவர்களுக்கு அதிகமான சம்பளம் தருகிறோம் என்பதை அருள்கூர்ந்து உங்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சுற்றுலாவைப்பற்றித் தெரிவித்தார்கள். நான் நேரிலேயே அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான், சுற்றுலாத் துறை என்று ஒரு துறை இருக்கிறது என்பது வெளியிலே தெரிந்திருக்கிறது. உறுப்பினர் அனைவரும் எங்களுடைய பகுதியை சுற்றுலா மையமாக்குங்கள் என்று கேட்கின்ற அளவிற்கு இன்றைக்கு உணர்வுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. நான் முன்னாலே சொல்லியிருக்கிறேன்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே சுற்றுலாத் துறைக்கு அமைச்சராக இருந்தபோதுதான் அன்றைக்கு கால்கோள் விழா நாட்டப்பட்டது. இதிலே மேலும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கின்ற பற்றின் காரணமாக சுற்றுலாத் துறையை மிகச் சிறந்த துறையாக, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை செய்திகளையும் வெளிநாட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுவதன் மூலம் மிகச் சிறந்த வருவாயை ஈட்ட வேண்டுமென்ற முயற்சியால்தான், இந்த சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை வளர்ந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் சௌரி ராஜன் அவர்கள் மரம் வளர்ப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு

மரம் வளர்ப்பதற்கு எவ்வளவோ அதிகமாக நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நான் முன்னால் ஒரு கேள்விக்கு, வன மகோத்சவத்தைப் பற்றிய கேள்விக்கு நான் விரிவாக பதில் அளித்திருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் அன்றைக்கு இல்லையென்று கருதுகிறேன். சாலைகளின் இரு மருங்குகளிலே மாத்திரமல்ல, நகரங்களிலும், கிராமங்களிலும் எங்கெங்கே காலி இடங்கள் இருக்கின்றனவோ, அத்தனை இடங்களிலும் மரங்களை வளர்க்கின்ற திட்டத்தை இந்த அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. அதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரத்திலே தூங்குமூஞ்சி மரங்களை வைப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு மரங்களை வைத்திருக்கிறோம். நகரங்களுக்குள் பெரிய புளிய மரங்களை வைத்தால், அது ஒரு காலத்தில்—பூந்தமல்லி சாலையைப் பார்த்தவர்களுக்குத் தெரியும்—பெரிய மரங்களாகி, அடர்ந்த சோலைகளாக சாலைகளை கவிழ்ந்து கொண்டு இருந்த அற்புதம், இன்றைக்கு வெட்ட வெளியாகியிருக்கிறது. காரணம், நகரத்திலே ஜனப்பெருக்கம் ஏற்பட்டு, நாம் சாலைகளை அகலப்படுத்துகின்றபோது, முதலிலே பலியாவது இந்த மரங்கள்தாம். ஆகவே, பெரிய மரங்களை நகரத்திற்குள் வைக்க முடியாது. இரண்டாவது அபாயம், அந்த மரத்தினுடைய வேர்கள் தரைக்குள் போனால் பக்கத்திலே இருக்கின்ற கட்டிடங்களை வீழ்த்திவிடும். ஆகவே, தான் அந்த மரங்களை அதிகத் தொல்லை தராமல், அதிக இடங்களை அடைக்காமல், வேர்கள் நீட்டமாகப் போகாமல் உள்ள மரங்களை வைக்கிறோம். வெளியிலே மரங்களை வைக்கும்போது, புளிய மரத்திற்குத்தான் முதலிடம் தரப்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நேரமாகி விட்ட காரணத்தினால், பிரதான எதிர்க் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் இங்கே குற்றச்சாட்டுக்களைச் சொல்லி இந்த அமைச்சர் அவையிலே மிக அதிகமான ஊழல் குற்றச்சாட்டிற்கு உள்ள அமைச்சர் நான்தான் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினால், இந்த ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம், எப்படி ஊழலிலே பிறந்து, ஊழலிலே வளர்ந்து, ஊழலிலே புரையோடிக்கொண்டிருக்கின்ற (குறுக்கீடு) அப்படிப்பட்டவர்களாலே, ஊழலின் தலைமகன்களைப் போன்றவர்களாலே சொல்லப்படுகிறது என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் இங்கே விளக்கம் அளிக்க முடியாத சூழ்நிலை இருந்தாலும் அவை அனைத்தும் இந்த அரசின் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தேவையானால் தனியாக வேண்டுமானாலும் நான் அவைகளைப்பற்றி விவாதிக்கிறேன் என்று





தெரிவித்துக்கொண்டு பிரதான எதிர்க்கட்சியினுடைய பிரதான உறுப்பினர் மாண்புமிகு துரை முருகன் சாட்டியிருக்கிற குற்றச்சாட்டுக்களுக்கு நான் வர கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே குப்பையைக் கிளறி அதற்குள்ளே இருந்து ஒரு தலைமுடியை எடுத்து, "பார்த்தீர்களா, தலையில் இருக்கவேண்டிய தலைமுடி குப்பைக்குள்ளே வந்திருக்கிற அக்கிரமத்தைப் பார்த்தீர்களா" என்று சொன்னால் எப்படி இருக்குமோ அப்படி ஒரு மிகப்பெரிய அரசினுடைய விளம்பரத் துறையிலே ஏற்பட்ட ஒரு தேதி மாறுபாட்டை எடுத்து வைத்துக்கொண்டு இங்கே மாண்புமிகு துரை முருகன் அவர்கள் "அது ஒரு ஊழல் என்று நான் சொல்லவில்லை, ஆனால் முறைகேடு என்று திருத்திக்கொள்கிறேன்" என்று சொல்லி திருத்திக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் அதற்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்தச் செய்தித் துறையிலே இருந்து விளம்பரங்கள் வெளியிடுகிறபோது எந்தத் தேதியில் வெளியிட வேண்டும் என்று குறிப்பிட்டு வெளியிடுகிறார்கள் அதிகாரிகள். அந்தத் தேதியிலே அந்த விளம்பரம் அந்தப் பத்திரிகையிலே வரவில்லை என்றால் அதற்கு விளம்பரக் கட்டணம் தருவதில்லை என்று இந்த அரசு வைத்திருக்கிறது. முன்னால் இருந்தவர்கள் எப்படி வைத்துக்கொண்டிருந்தார்களோ தெரியாது. ஆனால் நாளை மாற்றி, தேதியை மாற்றி, நிகழ்ச்சி நடந்த பிறகு விளம்பரம் வெளிவருமானால் அவர்களுக்கு விளம்பரக் கட்டணம் தரப்படுவதில்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஏதோ திரைப்பட தொழில் நுட்ப இயல் துறைப்பற்றிச் சொன்னார்கள். அது எடிட்டிங்கா அல்லது எந்த பிரிவுபற்றிச் சொன்னார்களோ எனக்குத் தெரியவில்லை. இங்கே ஒரு அமைச்சருக்குச் சொந்தக்காரரை சேர்த்துவிட்டார் என்று சொன்னார். இங்கே நம்முடைய சட்ட மன்றத்திலே தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்தப் பிரிவிலே காலி இருக்கிறது என்று தெரிந்ததற்குப் பிறகு, ஐந்து இடங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும். நான்கு இடங்கள் நிறைவு செய்யப்பட்டுவிட்டன. ஒரு தாழ்த்தப்பட்ட மகன் அதிலே வரவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஒருவருக்கு இடம் தரலாம் என்று அரசாங்கம் தனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு இடம் கொடுத்திருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த தாழ்த்தப்பட்டவர் அமைச்சருக்குச்

சொந்தக்காரராக இருக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்திலே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த நேரத்தில் நாட்டில் அனைத்துறையிலே தாழ்த்தப்பட்ட ஆதி திராவிடர் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தால் அதில் அவர்களுக்கு இடம் ஒதுக்கி தந்திருக்கிறோம்.

அடுத்து பாரஸ்டர் செலக்ஷன். நான் தெரிவிக்க விரும்புகிறேன், அவர்களுக்குத் தகவல் தருவதற்கு ஆட்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் எல்லாம் முனை மழுங்கிப்போன ஆயுதங்களாக வைத்திருக்கிறார்கள். தகுதிக தகவலைச் சரியாகத் தந்தால் பிரயோசனமாக இருக்கும். கொஞ்சம் பலனாக ளும் இருக்கும், பயனாகவும் இருக்கும். 1950-ல் ஒரு குழு போட்டு தேர்வு நடைபெற்றிருக்கிறது. அதற்கு முன்னாலே இந்த தேர்வு எப்படி நடந்தது? அதைச் சொன்னால்தான் இது தெரியும். அதற்கு முன்னாலே பாரஸ்டர் என்ற அதிகாரிகளை அல்லது அலுவலர்களை தேர்ந்தெடுப்பவர் டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசர்தான். ஒரே ஒரு தனி மனிதர்தான். அப்படி இருந்தால் எப்படி எல்லாம் ஆட்டிப் படைத்திருப்பார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. சில விவரங்கள் இங்கே சொல்வதற்கு தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும்; உறுப்பினர்களும் மன்னிக்க வேண்டும். செய்திகளைச் சொன்னால் எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் ஒரு தகவலைச் சொல்கிறேன்.

இந்த மருத்துவத் துறையிலே தேர்வு இதற்கு முன்னாலே நடைபெற்றது. அந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது. அதற்கு மிகச் சிறந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழு போட்டு, அவர்கள் அங்கே பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் திடீரென்று, நான் விரும்பிற்கு அப்பன் இன்னொருவர் விரத்திற்கு சாமியாக இருக்கிற ஒருவர் அங்கே போகிறார். அங்கே போய், "கமிட்டி உள்ளே இருக்கிற அந்த சேர்மேனை" என்று சொல்கிறார். அவர் "இப்போது நான் வேலையிலே இருக்கிறேனே, எப்படி வர முடியும்" என்றார். "நான் வந்திருக்கிறேன்" என்று சொல் என்கிறார். அவர், அந்த சேர்மேன் வருகிறார். ஏதோ பெரிய இடத்திலே இருந்து வருகிறார், ஏதோ தவறு நடந்துவிடப்போகிறது என்று நினைத்து வருகிறார். உடனே ஒரு பட்டியலை நீட்டுகிறார். இதையெல்லாம் சேர்த்தாக வேண்டும் என்கிறார். இது பழைய கதை. ஆனால் புதிய கதை அது அல்ல என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒரு டி.எம்.பி.ஓ. தனி அதிகாரி இப்படி அலுவலர்களைத் தேர்ந்தெடுத்த கதையை இன்றைக்கு நாங்கள் மாற்றி, உயர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு போட்டு, இப்படிப்பட்ட நியமனம் தேர்வு செய்யப்பட வேண்டு





மென்று ஆணையிட்டதே இந்த அரசுதான். ஆனால் 1980 ஆம் ஆண்டு அரசாங்கத்தினுடைய கவனத்திற்கே வராமல் பதவிகள் உருவாக்கப்படாத சூழ்நிலையில், பாரஸ்டர் போஸ்டே கிரியேட் ஆகாத சூழ்நிலையில், எதிர் பார்த்து ஒரு குழுவை அமைத்துவிட்டார்கள் எங்களுக்குத் தெரியாமல். காரணம் அரசாங்கத்திற்கு அது வராது. அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு

வராமலேயே தான் அந்தத் தேர்வு நடந்துகொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு எங்களுக்கு தகவல்கள் வந்தது. அதிலே சில தவறுகளும் நடைபெற்ற தாக வந்திருந்தது. இன்னும் பதவிகளே உருவாக்கம் செய்யாத ஒரு சூழ் நிலையில், பாரஸ்டர் போஸ்டுகளே கிரியேட் ஆகாதிருக்கிற ஒரு சூழ்நிலையில், தேர்வுகள் செய்தது தவறு என்று அரசாங்கம் அதை தடுத்து நிறுத்தியது. அதற்குப் பிறகு அதிலேயும் சில திருத்தங்களைச் செய்தது. முன்பு ஒரே குழு மாநிலம் முழுவதற்கும் சுற்றி வந்தது. இப்பொழுது 4, 5 பிரிவுகளில் அந்தந்த கன்சர்வேட்டர்கள் என்ற உயர் அதிகாரிகளின் தலைமையிலே, இன்றைக்கு குழுக்கள் போட்டு தேர்வு நடந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-50)

இங்கே அதிகார துஷ்பிரயோகம் எப்படியெல்லாம் அக்கிரமமாக நடக்கிறது என்று பிரதான எதிர்க்கட்சியினுடைய, பிரதான உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய அனுமதி யோடு இங்கே ஒரு கடிதத்தை படிப்பதற்கு எனக்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

“வி.எம். தேவராஜ், எம்.எல்.ஏ., தமிழக சட்டமன்ற உறுப்பினர், 9, கலாஸ் பெருமாள் கோவில் வீதி, வட ஆற்காடு, தொலைபேசி எண். 22251— மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அவைத் தலைவர், மேலைமாநகர், தேதி 16-2-1981.

உயர் திருவாளர்கள் வனஇலாகா தேர்வு குழு அங்கத்தினர்கள் அவர்களுக்கு எழுதியது. வணக்கம் பல. இக்கடிதம் கொண்டு வரும் தனபாலன் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு தங்கள் அலுவலகத்தில் பாரஸ்டர் வேலை காலி இருப்பதாக, வேலைத் தேடித் தரும் அலுவலகத்தில் இருந்து நேர்முக தேர்வுக்கு வந்துள்ளது. தயவுசெய்து மேற்படி வேலையை அவருக்கு அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அவசியம் செய்வீர்கள் என்று எதிர் பார்க்கிறேன். நேரில் வர இயலாமைக்கு வருந்துகிறேன். இப்படிக்கு வி. எம். தேவராஜ், எம்.எல்.ஏ., மெம்பர் ஆப் தி லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி, வேலூர்.

பார்டிகுலர்ஸ்.

"எம். தனபாலன்,
2695/77
543, காந்தி ரோடு, காஞ்சிபுரம்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பரிசீலனைக்கு இந்தக் கடிதத்தைத் தருகிறேன். (கூச்சல், குழப்பம்)

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஊழலா, தவறா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இங்கே உங்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஒரு கடிதத்தைப் படிக்கிறேன் என்று தங்களுடைய அனுமதியைக் கேட்டுக் கொண்டுதான் படித்திருக்கிறேன். இங்கே முன்னாலே பேசிய சுந்தரராஜன் அவர்கள் ஒரு பத்திரிகையிலேயிருந்து குறிப்புகளைப் படிக்கிறபோது, உங்களிடம் தெரிவித்துவிட்டுத்தான் படித்தார். ஆகவே, அந்தக் கடிதத்தை உங்களிடம் தந்திருக்கிறேன். அந்தக் கடிதம் சரியானதா இல்லை தவறானதா என்பதை நீங்கள்தான் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உத்தமர்கள் யார் யாரோ சொன்னதை கேட்காமலே மாற்றினார்கள் என்று சொன்னார்களே, யார் சொன்னார்கள் என்பதைப்பற்றி இந்தச் சான்றை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தர முன் வருகிறேன். அடுத்து (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வி. எம். தேவராஜ் அவர்கள் ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறட்டும்.

THIRU V. KRISHNAMURTHY: It is not relevant. How is the Hon. Speaker allowing this? Can the Hon. Minister pass on papers like this to the Hon. Speaker? I cannot be allowed......

**டாக்டர் கே. சௌரிராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள், தங்களுக்கு வேலை தேடித் தரவேண்டும் என்று கேட்டு வருகிற நேரத்திலே, அதிகாரிகளுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று



வேண்டுகோள் விடுப்பது தவறா? அதை ஏன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டாக வேண்டுமென்றே சட்டமன்ற உறுப்பினருடைய மரியாதையைப் பாதிக்கிற முறையில், அவர்கள் ஏதோ ஊழல் குற்றத்தைச் செய்தார்கள் என்ற முறையிலே ஆதாரத்தைக் காட்டுவதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

(Thiru V. Krishnamurthi and some members of D. M. K. Shame. shame).

(கூச்சல், குழப்பம்)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** அவர்கள் பேசியதை முதலில் எக்ஸ்பஞ்ச் செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை குற்றச்சாட்டாகவும் சொல்லவில்லை அல்லது ஊழலாகவும் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் ஒரு அமைச்சர் அவருடைய விருப்பத்தின்படி இந்த குழுக்களையெல்லாம் போடுகிறார்கள் அல்லது மாற்றுகிறார்கள் என்று சொல்கிறபோது, ஒரு அமைச்சரிடத்தில் வந்து வேண்டுமானால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு தகவலைத் தரலாம் அல்லது கோரிக்கைகளை வைக்கலாம். ஒரு தனி ஆதிபத்தியம் உள்ள ஒரு குழுவிடம் போய் ஒரு சட்டமன்ற உறுப்பினர் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உட்கார்ந்துகொண்டு பேசிய வார்த்தைகளை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்து கொண்டு பேசுவதெல்லாம் அவைக்குறிப்பில் வராது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நான் உட்கார்ந்துகொண்டு பேசவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** நான் மீண்டும் சொல்கிறேன், சொல்லிவிட்டு இல்லை என்று சொல்கிற அவ்வளவு கோழைத்தனம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. (கூச்சல், குழப்பம்).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** கோழை நான் அல்ல; நீ தான் கோழை. எழுந்து நின்றே சொல்கிறேன். (கூச்சல், குழப்பம்).

[1981 ஏப்ரல் 29

(பிற்பகல் 3.00)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** . . . ஆகவே, இந்தக் காரணங்களை முன்னிட்டு இதை நாங்களும் பின்பற்ற வேண்டிய அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

(கூச்சல், குழப்பம்)

**திரு. என். சங்கரய்யா:** இந்த அவையை அமைதிப்படுத்துவதற்கு சபையை சற்று ஒத்திவைத்து நடத்துங்கள். தொடர்ந்து இப்படியே நடந்தால் என்ன அர்த்தம். எந்தவிதமான நோக்கமும் இல்லை. அமைதி ஏற்பட்ட பிறகு தான் இந்த அவையை நடத்த முடியும். இப்போது நடத்த முடியாது. இந்த நிலை சரியானதல்ல. (கூச்சல், குழப்பம்). ஆளும் கட்சிக்கு பொறுப்பு அதிகமாக இருக்கிறது. சபையை சற்று ஒத்திவைத்து, நிலைமை அமைதியான பிறகு மறுபடியும் கூட்டுங்கள். இந்த நிலையில் சபை நடக்க முடியாது. இப்படியே இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருக்கக் கூடாது. (கூச்சல், குழப்பம்).

**திரு. எஸ். ஆண்டித்தேவர்:** பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நேரம் இந்த அவையை ஒத்திவைக்கும்படி உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**திரு. ஆர். மணிமாறன்:** இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை. இந்தச் சலசலப்புக்கெல்லாம் ஆளுங் கட்சி அஞ்சாது. (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் வீசினார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. (கூச்சல், குழப்பம்). செருப்பு எப்படி வந்தது என்பது எனக்குத் தெரியாது. யார் செருப்பை வீசினார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. (கூச்சல், குழப்பம்).

**திரு. ஆர். மணிமாறன்:** தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினுடைய உறுப்பினர்கள் அந்தந்த இடத்திலே அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் அவரவர்களுடைய இருப்பிடத்திலே இல்லை. ஆகவே தயவுசெய்து அவர்களை அவர்களுடைய இடத்திலே அமரச் சொல்லுங்கள்.



1981 ஏப்ரல் 29]

**திரு. துரைமுருகன்:** பத்திரிகைக்காரர்களே, பாருங்கள் இது நியாயம் தானா? என்னிடத்திலே இருக்கின்ற இந்தச் செருப்பு எங்கே இருந்து வந்தது? (ஒரு செருப்பை எடுத்துக் காட்டினார்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செருப்பைக் காட்டுகின்ற பிரச்சினை பற்றி சொல்ல விரும்புகிறேன். யார் வேண்டுமானாலும் யாருடைய செருப்பை வேண்டுமானாலும் எடுத்துக் காட்டலாம். அவரவர்களுடைய செருப்பைக் கூட எடுத்துக் காட்டலாம்.

**திரு. ஆர். மணிமாறன்:** தலைவர் அவர்களே, ஆளும் கட்சிக்காரர்கள் அவரவர்களுடைய இடத்திலே அமைதியாக அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் மற்று முகாமிலே இருப்பவர்கள் அப்படி அமரவில்லை. அவர்களையும் அமரச் சொல்லுங்கள். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றி நான் விசாரிப்பேன். செருப்பு எப்படி வந்தது என்பது எனக்குத் தெரியாது.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, இதோ இருக்கின்றது பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செருப்பு எப்படி வந்தது என்பது எனக்குத் தெரியாது. அது யாரால் வீசப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது. ஆகவே செருப்பை ஒரு பிரச்சினையாக ஆக்காதீர்கள். இந்த மன்றம் கட்டப்பட்ட காலத்திலே இருந்து இதுபோன்ற நிகழ்ச்சி நடந்தது இல்லை. இந்த மன்றத்தினுடைய மரபை நாம் காப்பாற்ற வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, இந்த மன்றத்தின் மரபைக் காப்பாற்றாதவர்கள் ஆளும் கட்சிக்காரர்கள்தான். செருப்பை வீசியது யார்? இது நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உணர்ச்சி வசப்படாதீர்கள். நடந்த சம்பவத்திற்கு வேண்டுமானால் வருத்தம் தெரிவித்துக்கொள்ளப்படும்.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, செருப்பை வீசியதற்கு வருத்தம் தானா? (கூச்சல், குழப்பம்).

MR. SPEAKER: I am not an eye witness.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, செருப்பு எந்தப் பக்கத்திலே இருந்து வந்தது என்பது உங்களுக்குத் தெரியாதா? அந்தப் பக்கத்திலே இருந்து செருப்பு வந்ததா இல்லையா? அந்தப் பக்கத்திலே

என்ன எதிர்க்கட்சியினரா இருக்கிறோம்? ஆகவே செருப்பு வீசியதை ஏன் தாங்கள் கண்டிக்கக் கூடாது? (கூச்சல், குழப்பம்).

(பிற்பகல் 2-10)

**திரு. துரைமுருகன் :** இங்கே விழுந்த மனைவ் சூரட்டையை பார்க்கவில்லை என்று சொல்கிறீர்கள். காருமன்னார் அவர்கள் ஒரு செருப்பை கொண்டு வந்து கொடுத்தார். அதையும் பார்க்கவில்லை என்று சொல்கிறீர்கள். இது நியாயமா சார். இந்த அவையில் இப்படி நடக்கலாமா? சார் நியாயமா . . . (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துரைமுருகன் போய் உட்காருங்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்களுடைய சீட்டுக்குப் போங்க. (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன் :** சபையை நடத்த வேண்டாம் போய்யா. உங்களுக்கென்று ஒரு பாரம்பரியம் உண்டு. அதைவிட்டு விட்டு இப்படி இருக்கலாமா? சார் நீங்கள் ஒரு வீர பரம்பரை இல்லையா, கேவலம் இதற்கு நீங்கள் பயப்படுகிறீர்களா? (கூச்சல், குழப்பம்) . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது.

**திரு. துரைமுருகன்:** இது உங்களுடைய கௌரவத்திற்கு ஏற்றதல்ல. இதற்குப் பயப்படுகிறீர்களா? உங்களுக்கென்று தனி பாரம்பரியம் உண்டே, வீரப் பரம்பரை சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய பாரம்பரியத்தைவிட இந்த சபையினுடைய பாரம்பரியம் மிகவும் முக்கியமானது. இந்தச் சபையை நடத்த விடுங்க.

**திரு. துரைமுருகன் :** சபை நடக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா? செய்ய வேண்டிய அநியாயத்தை எல்லாம் செய்து விட்டு . . . (கூச்சல், குழப்பம்).

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவரவர்களே, அவைத் தலைவரை பற்றி மிகக் கேவலமாகப் பேசியிருப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை வாபஸ் வாங்கவேண்டும். இல்லாவிட்டால் விடமாட்டோம் . . . (கூச்சல், குழப்பம்).



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மணிமாறன் கொஞ்சம் பொறுங்க . . . அவைகள் எல்லாம் அவைக் குறிப்பிலே இல்லை. (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன் :** செருப்பைப் பார்க்கவில்லை என்று சொல்கிற சபையிலே, பாருபாபர் என்ன, அங்கத்தினர் என்ன போங்கய்யா.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவரவர்களே, அவைத் தலைவரை பற்றி கேவலமாகப் பேசியதை நாங்கள் அனுமதிக்க முடியாது. உங்களுடைய பாரம்பரியத்தைப் பற்றி கேவலமாக பேசியதை வாபஸ் வாங்க வேண்டும் . . . விடமாட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக்குறிப்பிலே அவைகள் இல்லை. இடம் பெறாது. (கூச்சல், குழப்பம்).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, இதை எப்படி நீங்கள் அனுமதிக்கிறீர்கள் . . . .

**திரு. துரைமுருகன் :** செருப்பை வீசியதற்கு நடவடிக்கை இல்லை : . . . சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் கால் மட்டும் தான் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அதை அனுமதிக்க முடியாது. எப்படி. நாங்கள் 'அலவ்' பண்ணுவோம். அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு பத்து நிமிஷத்திலே முடித்துக் கொள்ளலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** எப்படி நாங்கள் "அலவ்" பண்ண முடியும். 'பிரிவெல் ஜ் மோஷன் கமிட்டியிலே' வைத்துப் பேசுங்கள். விவாதத்தை நாளைக்கு வையுங்கள். நாங்கள் இப்போது அலவ் பண்ண முடியாது.

**திருவாளர்கள் துரைமுருகன், பெ. சு. திருவேங்கடம், வி. கிருஷ்ணமூர்த்தி, கெ. சொக்கலிங்கம் :** நியாயம் தேவை; நியாயம் தேவை; அனுமதிக்க மாட்டோம். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, இந்த அவையிலே பல்வேறு நேரங்களில் பல்வேறு விவாதங்களில் எதிர் கட்சியைச் சார்ந்தவர்கள் பல கடிதங்கள், கடிதங்களின் நகல்களைக் காட்டியபோது ஆளும்

கட்சி உறுப்பினர்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், எதிர்க் கட்சியினர் எக்காளத்தோடு கைதட்டி அதை ரசித்துக் கொண்டிருந்தார்கள். நான் இன்றைக்கு ஒரு பத்திரிகையைத்தான் படித்துக் காட்டினேன். அதைக்கூட தாங்க முடியாமல் இந்த அளவுக்கு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் என்பதை எண்ணுகிறபோது எதிர்க்கட்சி எவ்வளவு பலவீனமாக இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(எதிர்க் கட்சியினர் குரல்கள்: சமாதானமாக நியாயம் தேவை.)

**திரு. நா. சுந்தரராஜ்:** தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத சம்பவங்கள் இன்றைக்கு இந்த அவையிலே நடைபெற்றிருக்கின்றன. மக்களுடைய பிரதிநிதிகளாக நாம் தேர்ந்தெடுக்கப்பெற்று இங்கே வந்து அந்தக் கடமைகளை நாம் செம்மையாகத் திறமையாகச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய பணிவான வேண்டுகோள், தயவுசெய்து சபையை ஒத்திவையுங்கள், அதற்குப் பின்னால் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுங்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது, யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். இதுதான் எங்களுடைய கோரிக்கை, அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் ஏற்கெனவே கண்டனத்தை எடுத்துச் சொன்னபடி இவ்வளவு அநீதியாக நாம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சம்பவம் நடந்ததாகச் சொல்கிறார்கள். ஏதாவது ஒரு பிரச்சினை இருந்தால் வருத்தம் தெரிவிக்கலாமே தவிர வேறு என்ன செய்ய முடியும்? சமாதானம்தான் சொல்ல முடியும்.

**திரு. கு. ரமணி:** நடந்த சம்பவத்திற்காக நாம் அத்தனை பேர்களும் என்ன செய்யலாம் என்று நிதானமாக இருந்து யோசித்து முடிக்கலாம், அதுதான் வழி. இந்த அவையிலே இருந்து நாம் காலம் போக்க வேண்டியவர்கள். இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலைக் கொதிப்பு கொஞ்சம் ஒழுங்காக ஆகிறபோது இன்னும் 10, 15, நிமிடங்களுக்கு இந்த அவையை ஒத்திவைத்து— அத்தனை உறுப்பினர்களையும் தாழ்ந்து பணிந்து கேட்டுக்கொள்கிறோம்— அவரவர்கள் போக வேண்டிய இடத்திற்குப் போய் இடத்திலே இருந்து சமாதானமாகச் சிந்தித்து இந்த அவையை ஒழுங்காகக் கொண்டு செல்வதற்கு



ஒரு எண்ணத்தோடு எல்லோரும் சமாதானமாக இருந்து சிந்தித்தால்தானே அது சரி முடியும், ஆகவே அந்த அளவுக்கு 10, 15 நிமிடங்கள் அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் ஏற்பட்டிருக்கிற இந்தக் குழப்பமான நிலைமையைச் சுமுகமாக மாற்ற வேண்டும். அதற்கான நிலைமையை உருவாக்குவதற்கு அவையை ஒத்திவைக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். இதிலே யார் குற்றம் செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி விசாரித்து இப்போது முடிவு செய்ய முடியாது. ஆகவே ஒரு அரை மணி நேரம் இந்த அவையை நிறுத்த ஏற்பாடு செய்து பிறகு நடவடிக்கைகளை முடிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

**மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க் கட்சிகளின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவையைச் சிறிது நேரம் ஒத்திவைக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இப்பொழுது ஏற்கனவே மணி 2.20-க்கு மேல் ஆகியிருக்கிறது. ஒத்திவைத்து நாம் மீண்டும் கூடுவது என்றாலும் இன்று மாலை ஆளுநர் அவர்களுடைய தேநீர் விருந்து ஒன்று இருக்கிறது. ஆகையினாலே மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் இந்த விவாதத்திற்கு நாளைக்குக்கூடப் பதில் தரலாம். ஆனால் நான் தங்களிடத்திலே ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆளைமுருகன் அவர்கள் தனிப்பட்ட முறையிலே பல குற்றச்சாட்டுக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கு விளக்கம் அளிக்காவிட்டால் அந்தக் குற்றச்சாட்டுக்கள் மட்டுமே பத்திரிகைகளில் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. விளக்கங்களும் சேர்ந்து வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகையினாலே தங்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்வது, பிரதான எதிர்க்கட்சியின் சார்பிலே அவர்கள் இங்கே கூறியிருக்கின்ற குற்றச்சாட்டுக்களை நாளை வரையிலே பத்திரிகைகளிலே வெளியிடாமல் இருப்பதற்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவையை இந்த அளவோடு ஒத்திவைத்து மாண்புமிகு அமைச்சரவர்கள் நிச்சயமாக நாளை அவர்களுடைய பதிலைத் தெரிவிக்கத் தாங்கள் அனுமதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சொல்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம், நம்முடைய சபையை நடத்துவது என்பது தமிழக

மக்களுக்காகவே தவிர, பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளுக்காக அல்ல. இன்றைக்குச் சொல்லப்படுகின்ற பல்வேறு அவைகள் மறுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவ்வாறு பேசியிருக்கிறோம். ஒரே பகுதியைப்பற்றி இரண்டு நாட்கள் விவாதம் நடத்தப்பட்டு, முதல்நாள் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு மறுநாள் அமைச்சர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதன் காரணமாக இங்கே பேசப்பட்ட பேச்சை நிறுத்தி வைத்து நாளைக்குப் பதில் சொல்லிய பிறகு பிரசுரிக்கலாம் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாளைக்குக் கேள்வி நேரம் இல்லை என்று நாங்கள் அறிகிறோம். நாளை காலை 9 மணிக்கு இருக்கின்ற கட்சிகளின் தலைவர்களை அழைத்து, பிசினஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்டி, அதற்குப் பிறகு சுமுகமான முடிவை எடுத்த பிறகு சபையை நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பதில் சொல்வதற்கும், கேள்வி கேட்பதற்கும் இந்த அவையிலே உரிமையிருக்கிறது. அமைச்சரைப் பொறுத்தவரையில் பதில் சொல்வதற்கு நாளையாகிவிட்டால் அனுமதி தர வேண்டுமென்று கேட்டிருந்தால் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் சொன்னது பொருத்தமாக இருக்கும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், அமைச்சரைப் பதில் பேசவிடாமல், அதேநேரத்தில் தாங்கள் பேசியது பத்திரிகைகளில் வரவேண்டுமென்று வற்புறுத்துவது ஒரு நல்ல மரபாக இருக்க முடியாது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று, அமைச்சர்களைப் பேச அனுமதிக்க வேண்டும்; அல்லது அமைச்சரவர்கள் பேசுகின்ற வரையில் அவர்களுடைய பேச்சை வெளியிடக் கூடாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நியதி கூடாது என்றால், இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் அங்கிருந்து செருப்பு வீசப்பட்டதாகச் சொல்லி இங்கே செருப்பையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். செருப்பு வீசப்பட்டிருக்கிறது என்று அந்தப் பக்கத்திலேயிருந்தும் சொல்கிறார்கள். இந்தப் பக்கத்திலிருந்து வீசியதாக. இதை நீங்கள் விசாரித்து உண்மையைத் தெரிந்துகொள்ள நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கருதுவீர்களேயானால் அரசின் சார்பாக நிச்சயமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆட்சிக் கட்சியினர் இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக எந்த அளவிற்கு அதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமோ அதைத் தருவோம். அதேநேரத்தில் எதற்காக ஒத்தி வைக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகின்றீர்களோ அதற்காக உள்ள குழப்பங்கள் வெளியே வராமல் இருப்பது மன்றத்திற்கு மரியாதையைத் தரும். நீங்கள் அதை ஏடுகளிலே வெளியிட அனுமதிப்பீர்களேயானால் நாங்கள் இங்கே





விரும்புவதற்குத் தயாராக இல்லை; அமைச்சரவர்கள் பதில் சொல்லி முடியும் வரையில் நாங்கள் இங்கே இருப்போம். உங்கள் தீர்ப்புக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம்.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் செருப்பை எதிர்க்கட்சியினர் மீது வீசியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனைக்கு முதலில் தீர்ப்பு சொல்ல வேண்டும். இங்கே ஆளும் கட்சி வரிசையிலே இருந்து செருப்பை வீசி இருக்கிறார்கள் (கூச்சல், குழப்பம்). (ஆளும் [illegible]) இங்கிருந்து செருப்பை வீசியவர்கள் யார் என்று [illegible] சொல்லட்டும். யார் செருப்பை வீசினார்கள் என்று இதற்கு ஒரு தீர்வு காணாமல் நாங்கள் சபையை நடத்தவிடமாட்டோம். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், இங்கே செருப்பு வீசப்பட்டதாக ஒரு சப்தம்.

**திரு. துரைமுருகன்:** செருப்பை வீசியிருக்கிறார்கள் சார். என்ன சப்தம் என்று சொல்லுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுமையாக இருங்கள். அது சப்தம் இல்லையா?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள், அதிகாரிகள் அனைவரும் பார்த்திருக்கிறார்கள். ஆளுங் கட்சியின் தரப்பில் இருந்து சரமாரியாக செருப்பு வீசப்பட்டதை . . . (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் பொறுமையாக இருங்கள். நாளைக்குக் காலையில் தலைவர்களை எல்லாம் கூட்டி, இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பது எப்படி என்பதைப்பற்றிப் பேசலாம். இந்த விவாதத்தைப் பொறுத்தவரையில் இப்போது முடித்துவிடலாம் . . .

**திரு. ஆர். மணிமாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆரம்பத்திலே இருந்து ஆளுங் கட்சியினுடைய தரப்பிலே இருந்து செருப்பு வீசப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருந்து இங்கே விழுந்த செருப்புக்கு யார் பதில் சொல்வது? . . . .
(கூச்சல், குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** "சபாநாயகர் அவர்களே, தீர்ப்பு கூறு."

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று "சபாநாயகர் அவர்களே, நியாயம் வழங்கு" என்று கோஷம் போட்டனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சமாதானத்தை உருவாக்க எல்லோரும் முயற்சி பண்ணவேண்டுமே தவிர . . . .

**திரு. துரைமுருகன்:** அவர்கள் செருப்பு வீசியிருக்கிறார்கள், இதில் என்ன சமாதானம் வேண்டி இருக்கின்றது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு என்ன பண்ணவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?

**திரு. ஆர். மணிமாறன்:** நீங்கள் அவர்கள் சொல்வதைக் கேட்டீர்கள். நான் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதாக இருந்தால் நான் உட்கார்ந்துவிடுகிறேன்.

**திரு. ஆர். மணிமாறன்:** அவர்களுடைய தரப்பிலே இருந்துதான் செருப்பு இங்கே விழுந்தது. (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன்:** எங்கள் பக்கத்திலே உள்ள உறுப்பினர்கள் யார் காலிலாவது செருப்பு இல்லை என்றால், நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறோம். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து அவரவர்கள் இருக்கையில் அமர வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** ஏன் முகம் கொடுக்க நீங்கள் தயங்குகிறீர்கள்? ஏன் ஆளுங் கட்சியின் பக்கம் பார்க்கிறீர்கள்? எங்களுக்கு என்ன மந்திரி பதவியா கிடைக்கப் போகிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மந்திரி பதவியும் பார்த்த பதவிதான். அது ஒன்றும் புதிய பதவி இல்லை எனக்கு.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசி முடிக்கிற வரையில் நான் அறையிலே இருந்துவிட்டுத்தான் வீட்டுக்குச் சென்றேன். உடல் நலமில்லை. எனவே வீட்டிற்குச் சென்றேன். சென்று சாப்பிட அமருகிற நேரத்தில்தான் இங்கே இருந்து எனக்கு அவசரமாகப் போன் வந்தது. தகராறு ஏற்பட்டிருக்கிறது என்றும், ஆளும் கட்சித்





தரப்பில் இருந்து இந்தப் பக்கம் செருப்பு வீசப்பட்டது என்றும் எனக்குச் செய்தி கிடைத்தது. உடனடியாக நான் இங்கே ஓடோடி வந்தேன். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். இவ்வளவு கவலையாக இருக்கிற காரணத்தினால், மணியும் 2-30-க்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால், அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, இதுபற்றிப் பேசி அவையை தொடர்ந்து சமாதான முறையில் நடப்பதற்கு தாங்கள் உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு எந்த ஒத்துழைப்பை எதிர்க்கட்சியின் சார்பில் அளிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

(பிற்பகல் 2.30)

**திரு. ஆர். மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங் கட்சி சார்பிலேயிருந்து செருப்பு வந்து விழுந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப்போல எதிர்க்கட்சித் தரப்பிலே இருந்து, ஆளும் கட்சி இருக்கக்கூடிய இடத்திலே செருப்பு வந்து விழுந்தது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். (குறுக்கீடு) ஏன் சொல்லக்கூடாது? எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். (கூச்சல் குழப்பம்).

**திரு. துரைமுருகன்:** வாட் இஸ் யுவர் டெசிஷன்? ஆர் யு நாட் அஷேம்ட்? உங்களுக்குத் தனியாக முடிவு சொல்லத் தெரியாதா? உங்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லையா? ஏன் சார் கஸ்தூரி பிள்ளைப் பெயரைக் கெடுக்கிறீர்கள்? (கூச்சல், குழப்பம்).

சபாநாயகரா நீங்கள்? ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையிலே ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதற்கு அமைச்சர் முயற்சி பண்ணுகிற போது, இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான சம்பவங்கள் எல்லாம் ஏற்பட்டன. அதிலே குற்றச்சாட்டுகள் மட்டும் பத்திரிகையிலே வந்து, அமைச்சருடைய பதில் வராமல் இருந்தால், அது சரியாக இருக்காது என்பது ஒரு கருத்து. அதற்குத்தான் இரண்டு, மூன்று நிமிடம் அனுமதித்தால், அதை உடனே பேசி, முடித்துவிடலாம். மற்றப் பிரச்னைகளை எல்லாம் நான் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, உட்கார்ந்து எப்படி நடத்துவது என்பது பற்றியெல்லாம் முடிவு செய்யலாம். அப்போது ஒரு சுமுகமான முடிவு வரும்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, துரைமுருகன் அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளையோ, நானோ சுமத்திய குற்றச்சாட்டுகளை அமைச்சரவையிலிருந்து மாற்றி, அதற்கான மறுப்புகளை மறுநாள் நாளேடுகளில் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வந்து பேசியிருக்கிறார்கள். அது தான் பத்திரிகையிலே வந்து, மறுநாள் மறுப்பு வருகின்ற காரணத்தினால், குற்றச்சாட்டுகள் உண்மையற்றவைகளாக இருந்தால், அவைகள் நிலை பெற்றவைகளாக ஆகிவிட முடியாது. எனவே, இந்தப் பிரச்சினையை முன் வைத்து, இதை அவையின் ஆய்வுக் குழுவின் கவனத்திற்கு விட்டு, அவையை அமைதியான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற அமைச்சர் நான். நானும், என் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளைக் காட்டி . . . (கூச்சல், குழப்பம்).

(கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன்:** விளக்கம் தாருங்கள் . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தெளிவாக குற்றச்சாட்டுகளை காட்டி, இங்கே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசியிருக்கின்றார்கள் . . . (கூச்சல், குழப்பம்)

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று, சபாநாயகரே, தீர்ப்பு வழங்கு, சபாநாயகரே நியாயம் வழங்கு" என்று கோஷமிட்டனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடைபெற்ற சம்பவத்தைக் குறித்து, நாளை கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவு எடுத்து விடலாம். இப்போது 5 நிமிடம் சபை நடந்தால், விவாதத்தை முடித்து விடலாம்.

**திரு. துரைமுருகன்:** இந்த விவகாரம் முடிந்த பிறகுதான், சபையை நடத்த முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவகாரத்தை நான் மட்டும் தீர்க்க முடியாது. எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி முடிவு செய்யலாம் என்று இருக்கிறேன். அப்போதுதான் . . . (கூச்சல், குழப்பம்).

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆளுங்கட்சி எதிர்க்கட்சிகளுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத இந்த நிலையில் எதிர்க்கட்சியின் சார்பில் இந்த அவையை அமைதியாக நடைபெறச் செய்ய ஒத்துழைக்க





வேண்டுமென்ற எண்ணத்தோடு, அமைச்சர் என்ன பதிலை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்; எவ்வளவு ஆதாரங்களை வேண்டுமானாலும் மக்கள் மீது பரப்பிக் கொள்ளட்டும்; 1972 ஆம் ஆண்டு முதல் பரப்பாத ஆதாரங்களையா பரப்பப்போகிறார்கள்? எனவே அவைகளை விட்டுவிட்டு, இந்த அவை அமைதியாக நடைபெற வேண்டும் என்பதற்காக நாங்கள் இந்த அவையை அமைதியாக நடத்திக்கொள்ள வழிவகுத்து நான் வெளியேறுகிறேன்; என்னைத் தொடர்ந்து எங்கள் கட்சிக்காரர்களும் வெளியேறுவார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் நான் ஒரு கருத்தை வைத்தேன். அந்தக் கருத்தாவது இந்த அவை சுமுகமாக நடைபெற வேண்டுமென்ற கருத்து. காரணம், தமிழ்நாடு சரித்திரத்திலே இதுவரையில் இந்த மன்றத்தில் நடைபெறாத நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. தொடர்ந்து இதைப்போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், இன்றைக்கு நடந்த சம்பவம் மீண்டும் வராமல் இருப்பதற்கும், ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்துவதற்கும் ஏற்றவகையில் நான் சொன்ன கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து தன்னுடைய பதிலை முழுமையாகச் சொல்ல வேண்டும். அப்போதுதான் பத்திரிகையில் சரியாக வரும் என்று பிடிவாதமாக மனதிலே வைத்துக்கொண்டு இருப்பது என்னுடைய மனதை வருத்துகிறது. எனவே, எங்களைப் பொறுத்தவரையில் சுமுகமாக இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை. ஆகவே, நீங்கள் தொடர்ந்து இந்த அவையை நடத்துவதற்கு வழி செய்வதற்காக உங்கள் மீது அல்ல, இந்த அரசு நடந்துகொள்ளும் முறையைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, இவ்வளவு இடையூறுகளுக்குப் பிறகு என்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை எடுத்து விளக்குவதற்கு வாய்ப்பு தந்ததற்காக நான் இந்த அவைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் ப. உ. சண்முகம் அவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து திருவண்ணாமலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது வழியிலே நடைபெற்றிருக்கிற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு அதனை

தொடர்பாக வனத்துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியை எடுத்த நடவடிக்கையை இங்கே பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் அரைகுறையாக இந்த மன்றத்தில் தகவல் தந்திருக்கிறார்கள். அதை முழுமையாகச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை.

காருண்யபுரத்திலே ஒரு பொதுக் கூட்டத்திலே பேசிவிட்டு, குடும்பத்தோடு திருவண்ணாமலைக்குச் சென்றார்கள். ஆனால் வனத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு சந்தன மரங்களைக் கடத்திக் கொண்டுபோவதாக தகவல் வருகிறது என்று தெரிவிக்கிறார்கள். அதிலே ரேஞ்சர், டி.எப்.ஓ. போன்ற அதிகாரிகள் எல்லாம் இருந்தார்கள் என்று துரைமுருகன் சொன்னார்கள். அவர்கள் இல்லை. அது ஸ்குவாடு தகவல், சேர்ந்து அளவிலே 'பிளையிங் ஸ்குவாடு' என்று சொல்லுகிறார்களே அந்த அளவிலே என்ன ஆட்களோ அவர்கள்தான் இருந்தார்கள். அந்தக் கார் வருகிறது, அதைத் தொடர்ந்து அவர்கள் துரத்துகிறார்கள். துரத்திக்கொண்டு வருகிற காரைப் பார்த்தவுடன், காரிலே வருகிற ப. உ. சண்முகம் அவர்கள் காரிலே பெண்களும் குழந்தைகளும் இருக்கிறார்கள், அவர்களைக் கொள்ளையடிக்க என்னைத்தான் — கொள்ளைக்காரர்கள்தான் துரத்துகிறார்கள் என்று நினைத்து காரை வேகமாகச் செலுத்துகிறார்கள்.

(பிற்பகல் 2-10)

உடனே இந்த வனத்துறையைச் சேர்ந்தவர்கள் அந்தக் காரைப் பிடிப்பதற்கு முயற்சித்திருக்கிறார்கள். உடனே திரு. ப. உ. சண்முகம் அவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்று ஒரு கிராமத்திற்குள்ளே நுழைகிறார்கள். அப்படி நுழைந்ததற்குப் பிறகு இந்த வனத்துறை அதிகாரிகள் போய் அவர்களைச் சுற்றி வளைக்கிறார்கள். அப்படி வளைத்ததற்குப் பிறகு கீழே இறங்குகிறார்கள். அதிலே மிகப் பெரிய ஆச்சரியம் என்ன என்பதைச் சொல்கிறேன். நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பவர் ஏதோ திருவண்ணாமலையிலே சம்பந்தம் பண்ணிய பாவத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னார்களே மாண்புமிகு திரு. துரைமுருகன் அது அல்ல. அவருக்கு வேலை வாங்கித் தந்ததே நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள்தான். அங்கே இருந்த இரண்டு மூன்று அதிகாரிகளுக்கு இவரை யார் என்று தெரியவில்லை. இருட்டிலே. திரு. ப. உ. சண்முகம் அவர்களுடைய குடும்பத்தினரும் ஏதோ கொலை வெறியோடு நம்மைத் துரத்துகிறார்களோ என்று கருதி அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் மற்றவர்களும் நடுங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே அங்கே பக்கத்திலே



இருக்கின்ற அதிகாரி கேட்கிறார், 'இவர் ப. உ. ச. என்கிறாரே தெரிகிறதா' என்று. இவரை திருவண்ணாமலையிலே சம்பந்தம் பண்ணியதாகச் சொன்னார்களே அவர், அதாவது யாருக்கு திரு. ப. உ. ச. அவர்கள் வேலை வாங்கித்தந்தாரோ அவர் 'எனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்கிறார்', அதற்குப் பிறகு அவரிடத்திலே வாக்குமூலங்கள் எல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன. மற்ற அதிகாரிகள் எல்லாம், "ப. உ. சண்முகத்தைத் தெரிந்த இந்த அலுவலர் வேண்டும் என்றே எங்களுக்கு தகவல் தர மறுத்து எங்களைக் குழப்பத்திலே ஆழ்த்தி இருக்கிறார்" என்ற குற்றச்சாட்டையும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அதற்கு அவர் என்ன விளக்கம் தந்திருக்கிறார் தெரியுமா? 'எனக்கு அந்த நேரத்திலே ஒன்றுமே புரியவில்லை, அவர் யார் என்றே தெரியவில்லை' என்று அவர் சொன்ன வாக்குமூலங்களை எல்லாம் வைத்து விசாரணை செய்து அதற்குப் பிறகுதான் அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இந்த மாநிலத்திலே அமைச்சராக இருந்த ஒருவருக்கு, மிகப்பெரிய கட்சியினுடைய பொதுச் செயலாளர் தன்னுடைய குடும்பத்தோடு போகிறபோது ஏற்பட்ட ஒரு பதட்ட நிலை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. அதிலேயும் உணர்ச்சி வயப்பட்டு, கொந்தளிப்பு ஏற்பட்டு வேலூரிலே உள்ள பொதுமக்களும் கழகத்தைச் சேர்ந்தவர்களும், கட்சிகளைச் சார்ந்தவர்களும் அங்கே உண்மை வேண்டும் என்று எழுப்பிய ஆர்ப்பாட்டத்தின் காரணமாக சில நடவடிக்கைகளை உடனே எடுத்து அதற்குப் பிறகு தீர விசாரணை செய்த பிறகுதான் ஒருவர் மாத்திரம் இப்போது தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர்மீது இவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களுடைய குடும்பத்தை அப்படி விரட்டி இருந்தால் அப்போது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்மை அவர்கள் வற்புறுத்தி இருப்பார்கள். ஆனால் ப. உ. சண்முகமும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும்தானே துரத்தப்பட்டார்கள், அதனாலே அது அவர்களுக்குச் சாதாரணமாகத் தெரியலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தது சேஷசாயி காண்டிராக்ட் என்று இங்கே தப்பும் தவறுமாக இந்தச் சபைக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார்களே, அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருட்களைத் தருகின்ற காரியம் தொடர்ந்து ஒரு பத்தாண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. விஸ்கோஸ் நிறுவனம், சேஷசாயி பேப்பர் நிறுவனம், டேன் இந்தியா நிறுவனம் போன்ற பல நிறுவனங்களுக்கு இன்றைக்கு இப்படிப்பட்ட மரங்களைத் தந்துகொண்டிருக்கின்ற அந்த வேலைகள்

நடந்துகொண்டிருக்கின்றன பத்தாண்டுகளாக. அரசாங்கம் என்ன செய்யும் என்றால் இந்த ஆண்டு இந்தப் பகுதியிலே இவ்வளவு டன் மூங்கில் சேஷசாயி பேப்பர் நிறுவனத்திற்கு, தைல மரங்களைப் பொறுத்தவரையில் விஸ்கோஸுக்கு இவ்வளவு, யூகலிப்டஸ் எக்ஸ்ட்ராக்ட் எடுக்க, அந்த மரங்கள் டேன் இந்தியாவுக்கு இவ்வளவு என்று ஏரியாக்களைப் பிரித்துதான் விடுவது வழக்கம். ஆனால் எவ்வளவு டன் எடுத்துக்கொண்டு வருகிறார்களோ அந்த டன்னுக்குத்தான் நாம் விலை நிர்ணயம் செய்ய முடியும். அந்த விலையைத் தான் அரசாங்கம் வசூலித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் அதை வெட்டி எடுத்துக்கொண்டு போகின்ற அந்தப் பணியை யார் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தவரையிலே அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தமே கிடையாது. வனத் துறைக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. எப்படி ஒரு கூப்பை ஏலத்திலே எடுத்தால் ஏலம் எடுத்தவர் அவருடைய பொறுப்பிலே வெட்டி எடுத்துக்கொண்டு செல்கிறாரோ அப்படித்தான் எடுத்துக்கொண்டு போகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு டன் மூங்கிலுக்கு இன்ன விலை என்று நிர்ணயிக்கின்றது. இந்தப் பகுதியிலே மூங்கில் இருக்கின்றது. இத்தனை ஹெக்டேர் இவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகின்றது. அங்கே இருப்பதை வெட்டி எடுத்துக்கொண்டு போய் எடை போட்டு எவ்வளவு டன் என்று பார்க்கின்ற இடத்திலே ஒரு அதிகாரி இருக்கிறார், ஏ.சி.எஃப். கிரேடிலே. அவர்கள் பார்த்ததற்குப் பிறகு அந்த டன்னைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அதற்குரிய விலையை அவர்கள் தருகிறார்கள். அதுதான் விஸ்கோஸுக்கும், அதுதான் டேன் இந்தியா நிறுவனத்திற்கும் செய்யப்படுகின்ற முறை. ஆகவே அதை யாருக்கு வெட்டுகின்ற பணியைக் கொடுக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கும் தெரியாது, வனத் துறைக்கும் தெரியாது. இப்படிப்பட்ட முறை இந்த அரசாங்கம் வந்து ஏற்படுத்தப்பட்ட முறை அல்ல. ஏழு ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்து இந்த நாட்டை ஆண்டு அதற்கும் முன்னாலே இரண்டு ஆண்டுக்காலம் அமைச்சராக இருந்து ஆக ஒன்பது ஆண்டுக்காலம் அமைச்சராக இருந்து இந்த நாட்டை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயும் இதுதான் முறை. அதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயும் இதுதான் முறை. ஆகவே, அவர்கள் ஒரு தவறான தகவலைத் தந்து, யாரோ அமைச்சருக்கு வேண்டியவர்களுக்கு கொடுப்பதற்காக என்றெல்லாம் சொல்லி அவர்கள் அங்கலாய்க்கிறார்கள். ஆனால், ஒருவேளை அவர்கள் காலத்திலே அப்படியெல்லாம் நடந்து, இன்றைக்கு அது கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுகிறார்களோ என்னவோ தெரியாது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடத்திலே அவர்கள் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். ஆகவே, ஒரு தவறான தகவலை இந்த அவைக்கும், இந்த அவையின் மூலம் நாட்டிற்கும் தந்திருக்கிறார்கள்.



அதற்குப் பிறகு, தொழிற்சாலைகளுக்கு வழங்குகிற மரங்களைப்பற்றி, அவர்கள் அளித்த குற்றச்சாட்டு. அதிலேதான் நான் வேறு எதையும் சான்றாக தர வேண்டியதே இல்லை. இப்பொழுதுதான் நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத்திலே வைக்கப்பட்ட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அடங்கிய, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களை தலைவராகக் கொண்ட பொது கணக்கு குழு, 1980-81 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கையின் சில பகுதிகளை மாத்திரம் படிக்கிறேன். எங்கே ஊழல் நடந்திருக்கிறது என்பது தெரியும். யார் வைத்த கொள்ளியோ, வீடு வெந்து போனது என்பதைப்போல, அப்பன் பட்ட கடனை மகன் தீர்க்க வேண்டும் என்பதைப்போல, அவர்கள் செய்து விட்டு போன ஊழலுக்கு இந்த அரசாங்கத்தினிடத்திலே பொது கணக்கு குழு விளக்கம் கேட்டிருக்கிறது. 50-வது பக்கத்திலே வனம் மற்றும் மீன்வளத் துறை ஒரு தனியார் நிறுவனத்திற்கு கற்பூர மரம் வழங்கியதில் என்கிற தலைப்பிலே 1—4—1973 முதல் ஏக்கருக்கு ரூபாய் 750 என்று கொடுக்கப்பட்டதைப்பற்றி குறிப்பிட்டு, சவுத் இந்தியன் விஸ்கோஸ் கம்பெனியின் ரேயான் தொழிற்சாலை, மரத்தூள் தயாரிப்பதற்கு தேவையான கற்பூர மரத்தினை வனத் துறை, அந்த நிறுவனத்திற்கு 1-1-1966 ஆம் ஆண்டிலேயிருந்து, சந்தை விலைக்கு குறைவான விலையில் வழங்கியதால் ரூபாய் 64.25 லட்சம் அளவிற்கு அரசின் வருவாயில் குறைவு ஏற்பட்டது என்று தணிக்கை அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டது. ஒப்பந்தப்படி முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 450 என்ற விகிதத்தில் கட்டணம் செலுத்தப் பெற வேண்டும். அதற்குப் பின்னர் கட்டண வகையிலே, கற்பூர மரத்திற்கு விலையை நிர்ணயம் செய்வதற்காக அரசினால் அமைக்கப்பெற்ற கைவார் குழுவின் பரிந்துரைக்கேற்ப, நிறுவனத்தின் உற்பத்தி விலையை கணக்குகளை வரவழைத்து நிர்ணயம் செய்ததின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பெற வேண்டும். எனினும், அரசு 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், நிறுவனத்தின் உற்பத்தி விலையை கணக்குகளை வரவழைத்து நிர்ணயம் செய்யாமல், ஒரு ஏக்கருக்கு 30 டன் மரம் கிடைக்கும் என்ற அடிப்படையில் பின்வரும் கட்டண விகிதத்தை நிர்ணயித்தது " என்று இருக்கிறது.

1973 ஆம் ஆண்டு எந்த அரசு இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, 1-4-1973 முதல் ஏக்கருக்கு ரூபாய் 750 என்று உற்பத்தி செலவுகளை குறைத்து நிர்ணயித்ததின் அடிப்படையில், 1-4-1976 ஆம் தேதி முதல் கற்பூர மரங்கள் வழங்குவதற்கான கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 2 ஆயிரம் என்று நிர்ணயிக்கப்பட்டது " என்று இருக்கிறது. 1976 ஆம் ஆண்டு அவசர கால நிலையிலே, ஆளுநருடைய ஆட்சிக் காலத்திலேதான் ரூபாய் 2,000 என்று

ஏக்கருக்கு விலை நிர்ணயிக்கப்பட்டது. "துறையினர் குழுவின் முன்னால் நேரடை சாட்சியம் அளிக்கும்போது, 1969 முதல் 1973 வரையிலான காலத்திற்கும், 1973 முதல் 1976 வரையிலான காலத்திற்கும் கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்வதற்கு முன்னர் நிறுவனத்தின் உற்பத்தி கணக்குகளை வரவழைத்து பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு தக்க விளக்கம் அளிக்க இயலவில்லை. இதனால் ஏற்பட்டிருக்கிற இழப்பு ரூபாய் 64.25 லட்சம்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, இதைத்தான் அவர் மிகப் பெரிய குற்றச்சாட்டாக சொன்னார்கள். எங்கே ஊழல் நடந்திருக்கிறது என்பதை நான் சொல்லவில்லை. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போகிற போக்கிலே, 'அவதூறுகளை அள்ளி அள்ளி வீசட்டும்', என்று அவதூறுகளை அள்ளி அள்ளி வீசி பழக்கப்பட்டவர், அந்த வார்த்தையை பயன்படுத்திவிட்டு போயிருக்கிறார்கள். நான் அவதூறுகளை அள்ளி அள்ளி வீசவில்லை. பொதுக் கணக்குக் குழு இந்த மன்றத்திலே வைத்திருக்கிற அந்த குறிப்புகள், குறை சொல்லிக்கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் அவர்கள். ஆனால், பொதுக் கணக்குக் குழு, இந்த அரசாங்கத்திடமிருந்து விளக்கம் கேட்டிருக்கிறது.

(பிற்பகல் 2-50)

ஆனால் இன்றைக்கு இவைகள் எப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் ஒரு குறிப்பாக சொல்லிவிடுகிறேன். இங்கே ஸ்டேக் என்று சொல்கிற ஒரு அளவைப்பற்றிச் சொன்னார்கள். அதுவும் இந்த அரசாங்கம் வந்து ஏற்படுத்தியது அல்ல. அவர்கள் ஏக்கர் கணக்கிலே கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகுதான் அதை டன்னாக மாற்றியது. இங்கே பொது கணக்குக் குழு தெரிவித்திருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 50 டன்தான் கிடைக்கும் என்று 1973-ல் நிர்ணயம் பண்ணினார்கள் என்று தெரிவித்திருக்கிறது. அப்படியானால் ஒரு டன்னுக்கு இப்பொழுது 25 ரூபாய். ஆளுநர் காலத்திலே அதற்கு 2 ஆயிரம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் ப்ளு-கம் என்கிற மரம் விஸ்கோஸுக்கு தர வேண்டிய மரம், ஒரு ஏக்கருக்கு 40 டன் கிடைக்கும். ஆகவே, ரூபாய் 750 என்றால் எவ்வளவு விலை? ரூபாய் 16.25 முதலில். ரூபாய் 650. பின்னால் ரூபாய் 750. ஒரு டன் ரூபாய் 18.75. ஆனால் ஆளுநர் ஆட்சிக் காலத்தில், அவசர நிலை காலத்தில் ரூபாய் 2,000 ஆக்கியது. ஒரு டன் ரூபாய் 50 ஆகிறது. அப்படியெல்லாம் அவர்கள் ஏக்கர் கணக்கில் வெட்டிக்கொண்டு போக விட்டார்கள். ஆனால் இந்த அரசு வந்த முதல்



ஆண்டே ஏக்கர் கணக்கில் கூடாது டன் கணக்கில்தான். எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்று டன் கணக்கை ஏற்படுத்தி ஒரு டன்னுக்கு ரூபாய் 100 என்று ஆக்கியது. முதல் வருடத்தில் அப்போது 40 டன்னுக்கு ரூபாய் 4,000 ரூபாய் 2,000-யை ரூபாய் 4,000 ஆக ஆக்கியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வைத்துக்கொண்டிருந்த ரூபாய் 750-யை ரூபாய் 4,000 ஆக்கியிருக்கிறோம். ஆகவே 40 டன்னுக்கு இப்படி கணக்கு பார்ப்பது, இந்த ஸ்டேக் சிஸ்டம் இந்திய வனத் துறை சார்பில் அந்த நிபுணர்கள் வைத்திருக்கிற முறை. ஆகவே ஒரு க்யூபிக் மீட்டருக்கு நீளம், உயரம், அகலம் வைத்து கணக்கு எடுக்கிறோம். 1 : 1 என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் அங்கேயும் தவறான தகவலைத் தருகிறார்கள். இந்த வனத் துறையும், இந்த அமைச்சரவையும் குறிப்பாக நானும் மிக விழிப்போடு இருக்கிறோம். முன்னாலே அடித்த கொள்ளைபோல் கொள்ளையடிக்க விடுவதில்லை. இந்த அமைச்சரவை வந்தவுடனே ஏக்கரை டன்னாக மாற்றி இந்த முறையை விதித்தது. அதே நேரத்தில், ஸ்டேக்காக அங்கே அடுக்கி வைக்கப்பட்டு எடுத்துக்கொண்டு போவார்கள். அங்கே தொழிற்சாலைக்கு உள்ளே நுழையும்போது எடை போடப்படுகிறது. அப்படி எடை போடும்போது கூட இருந்தால் அதைத்தான் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் தெளிவாக உத்தரவு போட்டிருக்கிறது. அங்கே எப்படி அந்த விகிதாசாரம் வரும் என்றால் இங்கே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற மரங்கள் ஈரமாக இருந்தால் எடை கூட இருக்கும். அதையே கொஞ்ச நாள் கழித்து எடுத்துச் செல்கிறபோது அது காய்ந்துபோனால் எடை குறைவாக இருக்கும். அதில் அரசுக்கு நஷ்டம் வரக்கூடாது என்று எது கூட வருகிறதோ அதைக்கொண்டுதான் விலை நிர்ணயம் செய்ய வேண்டும், குறைவான எடையை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அரசு தெளிவான உத்தரவை போட்டிருக்கிறது. A.C.F. பதவியில் ஒரு அதிகாரியை வைத்து அந்த ஆலையின் உள்ளே நுழையும்போது எடை போட்டு அந்த எடை எவ்வளவு இருக்கிறதோ அதைக்கொண்டுதான் நாம் விலை நிர்ணயம் செய்கிறோம். அப்படி எடை போடுவதில் அவர்களுக்கு எவ்வளவோ லட்சம் ரூபாய் நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்று அவர்களே அறிவிப்பு தந்திருக்கிறார்கள். தொழிற்சாலையில் இருந்தே நமக்கு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த எடை போடுகிற விவகாரத்தில் அவர்கள் சரியான கணக்குகளை தெரிந்து கொள்ளாமல் ஏதோ இந்த அரசு வந்தபிறகுதான் இந்த ஊழல் செய்கிறது என்பது போல் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

நான் இன்னும் சொல்கிறேன். 1978-79-ல் ரூபாய் 100 ஆக இருந்ததை 1979-80-ல் ரூபாய் 150 ஆக ஆக்குகிறோம். இந்த ஆண்டு அதை ரூபாய் 225 ஆக ஆக்கியிருக்கிறோம். அதேபோல் ஒவ்வொரு மரங்களின் விலையையும் முதல் ஆண்டு டன்னுக்கு விலையை ஏற்றியது. அதற்குப் பிறகு அடுத்த ஆண்டு 50 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று விலையை உயர்த்தியது. இப்போது இரண்டு ஆண்டுக்குப் பிறகு ரூபாய் 225 ஆக டன்னுக்கும், மற்ற மரங்களுக்கும் இந்தமாதிரி விலையை உயர்த்தியிருக்கிறது. இப்படி நாம் இத்துறை மூலம் இன்றைக்கு பெற்றுக்கொண்டிருக்கிற வருமானம் அரசுக்கு சுமார் இரண்டு கோடியைத் தாண்டியிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு அவர்கள் இப்படி தவறான தகவல்களை இங்கே தெரிவிக்கிற அந்த அடிப்படையில் யாரோ ஒருவருக்கு ஒரு வேலை கொடுத்தார்கள், அவர் இவர் அக்காள் மகன் என்று சொன்னார்கள். நான், அக்காளா மகனா என்று அதற்குள்ளே நுழையவில்லை. ஒருவர் ஒரு பதவிக்கு மனு போடுகிறார். அவர் எம்.ஏ. படித்திருக்கிறார் அல்லது பி.ஏ. படித்திருக்கிறார். இந்த டூரிஸ்ட் டிப்பார்ட்மென்ட்க்கு, அவர்களுக்கு டூரிஸ்ட் டிப்ளமா இருக்க வேண்டும் அல்லது பட்டப்படிப்பில் டூரிஸம் பயின்றிருக்க வேண்டும். மற்ற தகுதிகள் எல்லாம் கேட்டிருக்கிறார்கள். அப்படி ஒருவர், இந்த நாட்டில் பிறந்த ஒரு குடிமகன் விண்ணப்பித்தால் அதை பரிசீலனை செய்கிற அதிகாரிகள் பரிசீலனை செய்து, ஒரு எம்.ஏ. பட்டதாரி அல்லது பி.ஏ. பட்டதாரி, பல்கலைக்கழகத்தில் டூரிஸம் டிப்ளமா படித்து பட்டம் பெற்றவர், ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருந்தவர், அனுபவம் பெற்றவர், ஒரு அதிகாரியாக டூரிஸ்ட் ஆபீஸராக அந்த அதிகாரிகள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள் என்றால் எந்த அடிப்படையில், எந்தச் சட்டவிதிகளின்கீழ் தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஒருவேளை ஒருவர் அமைச்சராக வந்துவிட்டால். அவருக்கு அக்காள் இருக்கக்கூடாது; தங்கை இருக்கக்கூடாது; அவர்களுக்கு பிள்ளைகளே பிறக்கக் கூடாது; அவர்கள் பட்டத்தைப் பெறக்கூடாது; தகுதிகளையெல்லாம் பெறக்கூடாது; நியாயமான வேலைகளைப் பெறக்கூடாது என்று எந்த அரசியல் சட்டத்திலே சொல்லியிருக்கிறது. தகுதியற்றவர்களுக்கு வேலை கொடுத்தால் அவர் நிரூபித்திருக்க வேண்டும். எனக்கு எத்தனையோ அக்காள்; மூன்று அக்காள்; அதிலே எத்தனையோ பேர் இறந்துவிட்டார்கள். அவன் படித்தான், கிராஜுவேட், ஆசிரியர் வேலைபார்த்து, பி.ஏ.,வாக எம்.ஏ. வாக, பின்னர் டூரிஸம் பல்கலைக்கழகத்திலே வாங்கி, அவன் மனு போட்டு,





அந்த அதிகாரிகள் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்னும் சொல்கிறேன். முதல் தடவை வந்தபோது, என்னுடைய கவனத்திற்கு வந்தபோது, ஒரு போஸ்ட் தான் என்று சொல்லப்பட்டபோது, நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று மறுத்தேன். அங்கே அந்த அதிகாரிகளிடத்திலே அந்த விண்ணப்பதாரர் தெரிவித்த கருத்து, நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லையானால், வழக்கு மன்றத்திற்குப் போவேன். என்ன காரணத்தினால், என்னை மறுக்கிறீர்கள் என்று கேட்டதாகச் சொன்னார்கள். அவர்கள் ரிசர்வ் லிஸ்டிலே வைத்தார்கள். இரண்டாவது முறை இரண்டு போஸ்டுகள் வந்தபோது, மீண்டும் கொண்டு வந்தார்கள். இந்தத் தகுதிகள் எல்லாம் இருக்கிற காரணத்தினாலே, நாங்கள் நியமிக்க முடியாது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டது. நான் கேட்கிறேன்? அவர் குடும்பத்தில் ஒருவர் அமைச்சராகிவிட்டால், அவருக்கு அக்காள், தங்கை இருக்கக் கூடாதா? அப்படி சொந்தக்காரர்கள் எல்லாம் இந்த எதிர்க் கட்சிக்குத் தான் இருக்க வேண்டுமா? அவர்களுடைய குடும்பத்தினர் முற்காலத்திலே பெற்ற அந்தப் பதவிகள், பவிஷுகள் எல்லாம் அவர்கள்தான் பெறவேண்டுமா? இன்னும் சொல்கிறேன். இங்கே செய்தி-மக்கள் தொடர்புத் துறையிலே, இவர்கள் நியமித்திருக்கிறார்களே அலுவலர்கள், இதே கிரேடிலே, கெஜட்டட் கிரேடிலே, எத்தனைபேர் தகுதியில்லாமல் இங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பல பேர்களுக்கு பட்டப் படிப்புகூட கிடையாது. குறிப்பிட்ட தகுதிகள் கிடையாது. அங்கே அட்மினிஸ்ட்ரேட்டிவ் கவுன்சிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு தகுதிகூட பல பேர்களுக்கு இல்லை. தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள், இன்னும் சில ஜாதியைச் சேர்ந்தவர்கள்—அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. அவர்களை இன்றைக்குப் பாதுகாக்க அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு பாரதித் தலைவர் அவர்கள் ஆணையிட்டு இன்றைக்கு வேலையிலே வைத்துக்கொண்டிருக்கிறோம். இவர்கள் இங்கே இருந்து கொண்டு, அங்கே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதாவது எங்களுக்குத் தெரியாமல் இல்லை. அப்படி மறைமுகமாக இந்த பதவிகள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால் சுட்டிக்காட்டுங்கள்.

என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், டாக்டர் சிவகாமிநாதன் அவர்கள் பிள்ளை மத்திய அரசாங்கத்திலே ஒரு மிகப் பெரிய பதவியிலே இருந்து, விமானத்திலே கூட காயம் அடைந்தார். அப்படியெல்லாம் பார்த்தால், தகுதியுள்ளவர்கள் இந்த நாட்டிலே வாழக் கூடாதா? அல்லது தகுதியுள்ளவர்களுக்கு சொந்தக்காரர் அமைச்சராகக் கூடாதா? தகுதியற்றவர்களை சேர்த்தோம் என்று எடுத்துக் காட்டுங்கள். அடுத்த நாளே அதற்குக்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1981 ஏப்ரல் 29

காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறேன். நானே காரணமாக இருந்தால், நானே நடவடிக்கைக்கு உட்படுத்திக் கொள்கிறேன். இந்த வேலைகளை இங்கே வைத்துக்கொள்ளக் கூடாது.

பொருட்காட்சிக்கு யாரோ வருகிறார்கள்; யாரோ காண்ட்ராக்ட் எடுக்கிறார்கள் என்கிறார்கள். இந்த காண்ட்ராக்ட் விவகாரத்திலே கைதேர்ந்தவர்கள் இவர்கள். யாரோ வேலை செய்கிறார்கள். அங்கே ஒப்பந்தப்புள்ளி தருகிறார்கள். அதன்மீது அங்குள்ள அதிகாரிகள் முடிவெடுக்கிறார்கள். அதிலே தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். அதற்குக் காரணமாக எந்த அதிகாரியாக இருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

அது அக்காள் மகனாக இருந்தாலும் சரி, தங்கை மகனாக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்கிறோம். இதையெல்லாம் விட்டுவிட்டு, இங்கே ஊழல், ஊழல் என்று சொல்லிக்கொண்டிருப்பதிலே பிரயோஜனம் இல்லை. இப்போது வருகிறேன் ஊழலுக்கு.

இங்கே ஏதோ பெரிதாக நிர்வாகத்தைப்பற்றி, அமைச்சரின் அக்காள் மகனுக்கு டிரில் ஆபீசர் வேலை கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இங்கே தவறாக, அவர் என்னுடைய ஆபீசிலே வேலை செய்தார் என்று முதலிலே சொல்லி, பின்னர் ஆசிரியர் வேலை பார்க்கிறார் என்று சொல்லப்பட்டது. அவர் 10 ஆண்டுகளாக ஆசிரியர் பணியாற்றி, படித்து, பட்டம் பெற்றுவிட்டு வருகிறார். இந்த நாட்டிலே ஒருமகனாக பிறந்தவருக்கு சொந்தக்காரர் அமைச்சராக வரக்கூடாது என்று சொன்னால், அப்படி ஒரு முடிவை அரசியல் சட்டத்திலே போட்டுவிட வேண்டியதுதான். நிர்வாகத்தைப்பற்றி சொல்கிற இந்த மாவீரர்கள், செய்தித் துறையிலே ஏற்படுத்திய பதவிகளைப்பற்றிகூட சொல்லவில்லை. வனத் துறை சம்பந்தப்பட்ட ஒரு பதவியைப்பற்றிச் சொல்கிறேன். எப்படி நடைபெற்றிருக்கிறது? மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து மன்னிக்க வேண்டும். ஏனென்றால் மிகப் பெரிய குற்றச்சாட்டுகளை அவர்கள் என்மீது சுமத்தியிருக்கின்ற காரணத்தினால், கொஞ்சம் விவரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த வனத் துறையிலே இறின்சாமி என்கிற ரேஞ்சர் ஒருவர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் 1970 ஆம் ஆண்டு இறுதியிலே தன்னுடைய குடும்ப சூழ்நிலை காரணமாக, தன் வேலையை ராஜினாமா செய்கிறேன் என்று அனுமதி கேட்கிறார்.



1981 ஏப்ரல் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

During the year 1970 certain complications arose in my family; Consequent on the death of my grandfather, I had to make arrangements in the settlement of properties and other family affairs. My personal affairs were so very pressing that I had to resign my post. My resignation was duly accepted by the Chief Conservator of Forests in January 1971.

(பிற்பகல் 3-00)

என்று அவர் விண்ணப்பத்திலே கூறியிருக்கிறார். அவருடைய அந்த ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்டபோது என்ன நடந்தது தெரியுமா? அந்த துறையிலே அந்த ஆள் மீது பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவர்மீது 29,486 ரூபாய் 77 காசுகள் தோட்டப் பயிர் செய்ததிலே கூடுதலாக செலவு செய்த தவறு கண்டு பிடிக்கப்பட்டு அவர் திருப்பிக் கட்டவேண்டுமென்று உத்தரவு இடப்பட்டது. அந்த நேரத்திலேதான் அவர் ராஜினாமா கடிதத்தைக் கொடுக்கிறார். உடனே அன்றைக்கு இருந்த சி.சி.எப். போஜா ஷெட்டி, அதை விசாரித்து அவசரம், அவசரமாக இந்த ரூபாய் 29,486.77-ஐ 3,671.49 காசுகளாக மாற்றுகிறார். இதை மட்டும் கட்டினால் அவருடைய அப்பீலை ரத்து செய்து விட்டு, அவரை ராஜினாமா செய்ய அனுமதிக்கலாம் என்று அரசாங்கத்திலே மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு ரேஞ்சர், 29 ஆயிரத்து சொச்சத்தை மோசடி செய்திருக்கிறார் என்று சொல்லப்பட்டவர், ராஜினாமா செய்கிறேன் என்று சொல்கிறார். அப்போது 3,671 ரூபாயை கொடுத்தால் போதும் என்று, வாங்கிக்கொண்டு அவரை ராஜினாமா செய்ய அனுமதித்தார்கள். மிகப் பெரிய அதிகாரி போஜா ஷெட்டி. அவர்கள் காலத்திலே அவருக்காகவே பதவி உயர்வு தரப்பட்டது. ஒரு உயர்ந்த அதிகாரி ஜெயதேவ் என்பவரை வேறு மாநிலத்திற்கு மாற்றி விட்டார்கள். அந்த அதிகாரியை குற்றம் சொல்லவில்லை. அவர் இப்போது ரிடையர் ஆகி விட்டார். அவரிடத்திலேகூட விசாரணைக்கு கேட்டோம். அவர் கொடுத்த விளக்கத்திலேயிருந்து தெரிந்தது. அவர் என்ன செய்வார், பாவம். எய்தவன் இருக்க அம்பை நோவதிலே என்ன பலன். அவர் எப்படி அந்த முடிவுகளை அந்த நேரத்திலே எடுத்தார் என்பது எனக்குத் தெரிந்தது. பாவம் சர்வீசை விட்டு வெளியிலே போகிறபோது, யாரோ செய்த பாவத்திற்கு இவருக்கு ஏன் தண்டனை தர வேண்டுமென்று அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் இல்லாமல் வெளியே போகலாம் என்று சொன்னோம்.

ஆனால், இந்த கிறிஸ்டோபர் யார் தெரியுமா? 1971 தேர்தல் நடைபெற்றது. இங்கே தன்னுடைய உறவினர் யாரோ இறந்துவிட்டதால், குடும்ப வேலைகள் காரணமாக, இங்கே 30 ஆயிரம் ரூபாயை, மூவாயிரம் ரூபாயாகக் குறைத்து கட்டி விட்டு ராஜினாமா செய்துவிட்டு போகிறாரே, அவசரம், அவசரமாக அனுமதி தரப்படுகிறதே, இந்த கிறிஸ்டோபர் 1971 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலிலே விளவன்கோடு தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக போட்டியிடுகிறார். விளவன்கோடு தொகுதியில் போட்டியிட்டு தோற்கிறார். இவர் ரிசைன் செய்துவிட்டு போகட்டும், அரசியலிலே சேரட்டும், தேர்தலிலே நிற்கட்டும், தோற்கட்டும். இங்கே முதல் குற்றச்சாட்டு ஊழல். 30 ஆயிரம் ரூபாயை மூவாயிரம் ரூபாயாக குறைத்து அவருக்கு அனுமதியளித்து, அவசரம், அவசரமாக அரசாங்கத்திலே நடைபெற்றிருக்கிற ஊழல். அன்றைக்கு அமைச்சர்கள் மட்டத்திலே இருந்தவர்கள் மட்டத்திலே நடந்த ஊழல். இது எங்களுக்கு கவலை இல்லை. அவர் தேர்தலிலே தோற்கிறார். பின்னாலே வருகிறது கடிதம். கோப்பு, கோப்பு என்று கோப்பைப் பற்றி பேசுகிறாரே; பல கடிதங்களை இங்கே பார்த்தால், உறுப்பினர்கள் எல்லாம் நம்முடைய கட்சித் தலைவர் அவர்களுக்கு அடங்கி, ஒடுங்கி அமைதியாக இருந்தார்கள். இன்று ஒரு கடிதத்தை நீட்டியதையே தாங்க முடியவில்லை. இவர் மீண்டும் தேர்தலில் தோற்றதற்குப் பிறகு இந்த அரசாங்கத்திற்கு மனு கொடுக்கிறார். தான் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று மனு போடுகிறார். அரசாங்க சட்ட விதிகள் மீறப்படுகிறது. ஒரு அரசியல் கட்சியிலே தன்னை [illegible] கொண்டு, தேர்தலிலே நின்றவர் மீண்டும் மனு போடுகிறார். ஆனால், இந்த டெப்டி கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் போஸ்ட் [illegible] இருந்து 30 ஆயிரத்தை, மூவாயிரமாக குறைத்தாலே [illegible] மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. அவர் மறுப்பு தெரிவிக்கிறார். இவர் வேலையை விட்டு போன காலத்திலேயே [illegible] போனவர். அவர் அந்த காலத்தை பயன்படுத்தியிருக்கிறார். ஆகவே, திரும்பவும் இந்த ஆளை வேலையில் சேர்ப்பது சரியல்ல. விதிகளுக்கும் [illegible]. இது அரசாங்க நடைமுறைக்கே கூடாத விஷயம் என்று [illegible] அவர்களுடைய குறிப்புகளைத் தந்து, இவரைப் பற்றிய சர்டிபிகேட்டையும் தந்து சேர்க்கக் கூடாது என்கிறார். ஆனால், விவகாரம் அன்றைய வனத் துறை அமைச்சர் ஓ. பி. இராமனுக்கு வருகிறது. இதை நிதித் துறை, மற்ற துறைகளும் அந்தக் கருத்துக்களை ஒத்துக்கொண்டு இருக்கின்றன. வனத் துறை அமைச்சருக்கு வருகிறது. Is there any precedent relating to reinstatement of Government servants in similar cases? என்று அவர் ஒரு





கேள்வியை எழுப்புகிறார். அதற்கு அவர்கள் பதில் தருகிறார்கள். வேறு யாரையோ எப்படியோ செய்தார்கள் என்று பதில் தருகிறார்கள். அப்படியானால் ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்தார்கள். அவர் போய் தன்னுடைய குடும்பச் சூழ்நிலையினால் ராஜிநாமா செய்துவிட்டுப் போய் தேர்தலிலே தோற்றுவிட்டு சர்க்காருக்குத் தரவேண்டிய பணத்தைக் குறைத்துக் கட்டிவிட்டு மீண்டும் வருகிறார். அந்த வனத் துறை அமைச்சர் அதற்கு முன்மாதிரியாக ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறார். அதற்கு முன்மாதிரியாக எதையோ தேடித்தேடிக் கண்டுபிடித்துச் சொல்கிறார்கள். என்ன வழி கண்டுபிடிக்கப்படுகிறது என்றால் அவருக்கு ஏதாவது புதிய உத்திரவு போட்டு புதிய வேலையாகப் போட்டுக்கொள்ளலாம். உடனே ஓ. பி. இராமன் எழுதுகிறார் C. M. may kindly decide என்று முடிக்கிறார். அதற்குப் பிறகு அன்றைய முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், ஊழல் பக்கபே தலைவைத்துப் படுக்காத உத்தமர் எழுதுகிறார். அவர் ஆங்கிலத்திலே தான் எழுதுவார், தமிழிலே எழுதுவது இல்லை. ஆங்கிலம் தெரியாதவர்கள் தான் தமிழிலே எழுதுவார்கள். He may be appointed afresh. என்று போடுகிறார். அப்படி அரசாங்கத்தை மோசடி செய்த ஒரு அதிகாரியை, பணத்தைக் கட்டாத அதிகாரியை, பணத்தைக் குறைத்துக் கட்ட விட்டுவிட்டு வேலையிலிருந்து ராஜிநாமா கொடுத்துவிட்டு வீட்டுக்கு அனுப்பி எலக்ஷனிலே தோற்றதற்குப் பிறகு மீண்டும் சி.சி.எப். எழுதுகிறார், அவனைச் சேர்க்காதே, அவன் குழப்பவாதி, ஏற்கெனவே இருக்கிறபோதே தொல்லை கொடுத்திருக்கிறான் என்று குறிப்பு எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் புதிய பதவியிலே சேர்ப்பதற்காக, வயது முதலியவற்றையெல்லாம் தளர்த்தி—அவன் சர்வீஸ் எல்லாம் வேண்டாம், மற்றவை எல்லாம் வேண்டாமென்று ஓடுகிறான், அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு திரும்ப வேலையில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரியின்மீது, இப்போது என்ன நிலைமை தெரியுமா, அதற்குப் பிறகு அவர் சம்பந்தப்பட்ட சோலையிலே கையாடல் குற்றத்திற்காக இந்த அரசு மீண்டும் தற்காலிக வேலை நீக்கம் செய்து வைத்திருக்கிறது. இங்கே யாரோ என் அக்காள் மகனாகப் பிறந்த குற்றத்திற்காக அவன் எம்.ஏ. படித்து டிப்ளமோ படித்துவிட்டு வந்து வேலையில் சேர்ந்தால் ஊழல், ஊழல், ஊழல் என்று கூக்குரலிடுகிறார்களே, அந்தப் புண்ணியவான்களைக் கேட்கிறேன். எது ஊழல், எது லஞ்சம்? அதற்கு என்ன பொருள் என்பதை நான் தெரிந்து கொண்டாக வேண்டும். இன்றைக்கு நாங்கள் தொழிற்சாலைகளுக்கு வழங்குகிற மரத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் விலைகளை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நம்முடைய அமைச்சரவை முடிவு செய்து கணக்குகளை காஸ்ட் அக்கவுண்டண்டுக்குக் கொண்டுபோய் பரிசீலனை செய்து இன்றைக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்களிடமிருந்து வசூல் செய்துகொண்டிருக்

கிறோம். ஆனால், இந்த சேகரிப்பாளர்க்கு 1975 ஆம் ஆண்டு முதல்வரைப் பற்றி யில்லை புல்லைய செய்ய அவசியம் இருக்கிறது. அங்கே துறையிலே இருக்கிறவர்கள் எல்லாம் மூன்று ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்தால் போதும் என்கிறார்கள். அதையும் மீறி அந்த முதலமைச்சருடைய அனுமதியோடு அன்றைக்கு இருந்த வனத்துறை அமைச்சர் ஐந்து ஆண்டுகளுக்குப் போடலாம், பெரிய மனது, 11 ரூபாயை 22 ஆக டன்னுக்கு உயர்த்தி, துறையிலே இருப்பவர்கள் எல்லாம் மூன்று ஆண்டுகள் போதும் என்றால் 1975 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டுவரையில் 22 ரூபாய் என்று நிர்ணயிக்கிறார்கள். நம்முடைய அரசு வந்தவுடனே அதை மாற்றி ஆண்டுக்கு ஒரு முறை விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று எண்ணியபோது சட்டத் துறையும் மற்றத் துறைகளும் அவர்கள் முன்னாலேயே 1980 ஆம் ஆண்டுவரையில் ஒப்பந்தம் செய்துவிட்டார்கள், அதை மாற்ற முடியாது. நீங்கள் இனிமேல் கொள்கை முடிவு எடுக்க வேண்டுமானால் 1980-க்குப் பிறகுதான் எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் அள்ளி இறைத்த அவதூறுகளுக்கு—அவர்கள் கைகூட அசிங்கம் ஆனாலும் பரவாயில்லை என்று எண்ணிக்கொண்டு அசிங்கத்தைப்பற்றியே கவலைப்படாமல் மலத்தை வாரி இறைப்பதைப்போல், சேற்றை வாரி இறைப்பதைப் போல் வீசுவார்கள்—அவர்கள் என்னை குறிவைத்திருக்கிறார்கள் என்று தெரிந்தே தான் நான் இவ்வளவு ஆதாரங்களோடு வந்தேன். இவர்களைப் பற்றி எனக்குத் தெரியாமல் இல்லை. நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். நான் வெளியே சொன்னதை இங்கே சொல்ல வேண்டாம். ஆகவே, அவர்கள் விழிக்கிற விழியிலிருந்து எங்களுக்குத் தெரியும். அவரே ஒத்துக்கொண்டு போனார். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர் முருகன் அவர்கள் பேசி முடிப்பதுவரை அறையிலே உட்கார்ந்து கவனமாகக் கேட்டு ஒழுங்காகப் பேசினாரா என்பதைப் பார்த்துவிட்டுத்தான் போனேன் என்று சொன்னார். இந்நேரம் டைப்போசிங் ஆகியிருக்கும். அவர்களுடைய குற்றச்சாட்டு நாளைக்கு அவர்களுடைய பத்திரிகையில் 8 கால தலைப்பிலே வரும், நாங்கள் சொன்ன குற்றச்சாட்டுகள் பதில்கள் அதிலே இடம் பெறாது. அப்படி வருமானால் மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் இந்தச் சபையின் நடவடிக்கைகளுக்கு உரிமைகளுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து இங்கே எழுப்பப்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 3-10)

பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தூள் தூளாக்கப்பட்டிருக்கின்றன. அப்படி நிரூபிக்கப்படுமேயானால் எந்த நேரத்திலும் எந்த தண்டனையும் ஏற்க தயாராக நான் புரட்சித் தலைவர் தலைமையிலே





அமைந்திருக்கின்ற ஒரு தொண்டன் என்பதைச் சொல்லி, இந்த அமைச்சரவையிலேயே நான்தான் இலஞ்சம் வாங்குகின்றவர் என்று சொன்னார் என்று கருதுகிறேன்; அந்த ஆங்கில வார்த்தை என்ன சொன்னார் என்பது நினைவிலே இல்லை. அப்படி நிரூபித்தால் ஒரு சான்றைச் சொன்னால், அவர்களுக்குத் தைரியம் இருந்தால், திராணி இருந்தால் எங்கே வேண்டுமானாலும் நிரூபிக்கட்டும். அதை மறுத்து ஆயிரம் சான்றுகளைத் தருவதற்கு இந்த அமைச்சரவை தயாராக இருக்கிறது என்று சொல்லி, நான் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்ல எடுத்துக்கொண்ட நேரத்தினாலே மாண்புமிகு மற்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அத்தனையையும் நாங்கள் கவனத்திலே எடுத்துக்கொண்டிருக்கிறோம். நேரங்கள் வருகின்றபோது அவைப்பற்றி விவாதித்து அரசு முடிவுகளை அறிவிக்கும், பரிசீலிக்கும் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வெட்டுப்பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### கோரிக்கை எண் 25—சின்கோனா.

திருவாளர்கள் கு. சாமி மற்றும் எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் சு. பாலன் மற்றும் என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 2,08,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை.

திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் சு. பாலன் மற்றும் என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

'மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 7,09,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண் 47—தகவல்; சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.**

திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் ப. சுந்தரம் மற்றும் கே. கல்லன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 2,06,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு.**

திருவாளர்கள் சு. பாலன் மற்றும் என். எஸ். வி. சித்தன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 9,58,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**8. அரசினர் தீர்மானம்.**

**விதி 31-ஐத் தளர்த்தல்.**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31, தளர்த்தப்பட்டு, நாளை (30-4-1981 அன்று) மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் தொடங்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**4. அறிவிப்பு—(தொடர்ச்சி).**

**ஆ. அலுவல் ஆய்வுக் குழு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளை காலை 8-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு என்னுடைய அறையிலே கூடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (30-4-1981) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 5-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

267. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வட்டிக் கடைக்காரர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 7-2-1981 ஆம் தேதியிடப்பெற்ற 347 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

172. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணை (திருத்தச்) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1981).

173. கோரிக்கை எண் 25—சின்கோனாத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

174. கோரிக்கை எண் 45—வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

175. கோரிக்கை எண் 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

176. கோரிக்கை எண் 47—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

177. 1981-82 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

178. 1981-82 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

179. 1981-82 ஆம் ஆண்டிற்கான வனத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).





### இணைப்பு 1.

(618-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

சின்கோனாத்துறை மானியக் கோரிக்கை 1981-82.

கொள்கை விளக்கக் குறிப்பு.

திட்ட மதிப்பீடு 1981-82.

1. முன்னுரை.—சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசால் வணிக வடிப் படையில் நடத்தப்படும் ஓர் அமைப்பாகும். இத் துறை, மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மற்றும் இதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் குனிடின் சல்பேட் ஆகிய பொருட் களை பெருமளவில் தயாரித்து வருகிறது. மேலும், மருந்து மற்றும் தாவர வகைத் தைலங்களையும் தயாரித்து வருகிறது. பொது மக்களுக்குத் தேவைப்படும் உயிர்காக்கும் மருந்துகளைத் தயாரித்து கடந்த 120 ஆண்டு களாக இயங்கி வரும் ஒரு பழைமையான துறையாகும். இத் துறையின் மூலம் சுமார் 2,000 தொழிலாளர்கள் நிரந்தர வேலை வாய்ப்பும், 2,100 தொழி லாளர்கள் தற்காலிக வேலை வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

இந்திய அரசு, கோய்னாப் பொருட்களின் ஏற்றுமதியை 1978 சூலைத் திங்களில் தடை செய்ததால் வெளி நாட்டிற்கு கோய்னாப் பொருட்களின் ஏற்றுமதி ஒரே சீராக அமையவில்லை. இந்தத் தடை குறித்து தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் பேச்சு நடத்திய பின்னர் தடை ஓரளவு தளர்த்தப் பட்டு 1978-79 ஆம் ஆண்டில் 3.25 டன், 1979-80 ஆம் ஆண்டில் 4.50 டன் மற்றும் 1980-81 ஆம் ஆண்டில் 6 டன் கோய்னாப் பொருட்களை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. நம் நாட்டில் மலேரியா மீண்டும் தோன்றிப் பரவி வருவதால் கோய்னாப் பொருட்களுக் குள்ள உள்நாட்டுத் தேவை அதிகமாகலாம் என்பதோடு வெளிநாட்டு ஏற்று மதியும் காலப் போக்கில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே வளரும் இத்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஏற்கனவே சாகுபடி செய்து அறுவடை செய்யப்பட்ட நிலங்களிலும் புதிய நிலங்களிலும் சின் கோனா பயிரிடப்பட்டு வருகிறது. 31—12—1980 வரை நீலகிரியில் 427.11 ஹெக்டேர் நிலத்திலும், ஆனைமலையில் 1,524.65 ஹெக்டேர் நிலத்திலும் ஆக மொத்தம் 1,951.76 ஹெக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது.

நடுகைத்திட்டம்.—1979-80, 1980-81, 1981-82 ஆகிய மூன்றாண்டு காலத் திற்கு கீழ்க்கண்ட சின்கோனா நடுகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| (1) | 1979–80 (உள்ளபடி) (2) | 1980–81 மதிப்பிட்டது. (3) | 1981–82 எதிர் பார்க்கப் படுவது. (4) |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்) | | |
| 1. வழக்கமான நடுகைத் திட்டம் .. .. | 126.40 | 144.50 | 143 |
| 2. பதியன்முறை நடுகைத் திட்டம் .. .. (Vegetative propagation) | 39.91 | 24.19 | 20 |
| மொத்தம் .. | 166.41 | 168.99 | 154 |

(ஆ) நாட்டில் மருந்து வகைத் தைலங்கள் மற்றும் வாசனைத் தைலங்கள் (Medicinal and Aromatic oils) இவற்றிற்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை கருத்தில் நோக்குடன், இத்தகைய பயிர்களின் சாகுபடியினைப் பல்வேறு வகைகளில் விரிவுபடுத்தும் பணியினை இத்துறை மேற்கொண்டுள்ளது. 31—12—1980 ஆம் நாள் முடிய இத்தகைய பயிர்கள் வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலப் பரப்பு பின் வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) நீலகிரிப் பிரிவு | 712.28 | ஹெக்டேர் |
| (2) ஆனைமலைப் பிரிவு | 362.66 | ஹெக்டேர் |
| (3) மேல் பழனி மலைப் பிரிவு | 134.25 | ஹெக்டேர் |
| | 1,209.19 | ஹெக்டேர் |



1979-80, 1980-81, 1981-82 ஆகிய மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளப் பட்டுள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலப் பயிர் நடுகைக்கு கீழ்க்கண்ட வாறுள்ள நடுதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது :—

| பயிர்களின் பெயர். (1) | 1979–80 (உள்ளபடி) (2) | 1980–81 (மதிப்பிட்டது). (3) | 1981–82 (எதிர் பார்க்கப் படுவது). (4) |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்). | | |
| 1. ஜெரேனியம் (Geranium) .. | 25.00 | 95.00 | 108.00 |
| 2. ஜாவாசிட்ரோ-னெல்லா (Java citronella) | 8.00 | 8.00 | 23.00 |
| 3. டயஸ்சோரியா (Dioscorea) .. | 20.00 | 20.00 | 20.00 |
| 4. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா .. Euc. citriodora) | 13.00 | 12.00 | 10.00 |
| 5. யூகலிப்டஸ்குளோபுலஸ் Euc. Globules). | 2.00 | 4.00 | 10.00 |
| 6. சோலானம் காசியனேம் .. (Solanum khasianum) | 3.00 | 0.50 | 0,50 |
| 7. பச்சோலி .. Patchouli | 3.00 | .. | .. |
| 8. ஓசிமம் கேம்பரா .. Octimum Camphora) | 2.00 | 3.00 | 10.00 |
| 9. பயிரித்ரம் (Pyrethrum) | 1.00 | 0.50 | 0.50 |
| 10. ரோஸ்மேரி .. (Rosemary) | 1.00 | 0.50 | 0.50 |
| மொத்தம் .. | 78.00 | 143.50 | 182.50 |

இத்துறையானது மதுரை மாவட்டத்திலும் தனது வளர்ச்சிப் பணியை மேற்கொண்டுள்ளது. மேல் பழனி குன்றிலுள்ள வெம்பாடி (பேரிஜம்) என்னுமிடத்தில் 160 ஹெக்டேர் பரப்பிலும், கொடைக்கானல் அருகே பெரும் பள்ளம் என்னுமிடத்தில் 200 ஹெக்டேர் பரப்பிலும் ஜெரேனியம் பயிரிடத் தொடங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் குறிக்கோளான 76 ஹெக்டேர் பரப்பில் நடுகைத் திட்டம் இவ்விரு திட்டங்களாலும் முடிக்கப்பட்டுள்ளது.

[1981 ஏப்ரல் 29

| (1) | 1979–80 (உள்ளபடி) (2) | 1980–81 மதிப்பிட்டது. (3) | 1981–82 எதிர் பார்க்கப் படுவது. (4) |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்) | | |
| 1. வழக்கமான நடுகைத் திட்டம் .. .. | 126.40 | 144.50 | 143 |
| 2. பதியன்முறை நடுகைத் திட்டம் .. .. (Vegetative propagation) | 39.91 | 24.19 | 20 |
| மொத்தம் .. | 166.41 | 168.99 | 154 |

(ஆ) நாட்டில் மருந்து வகைத் தைலங்கள் மற்றும் வாசனைத் தைலங்கள் (Medicinal and Aromatic oils) இவற்றிற்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை ஈடுகட்டும் நோக்குடன், இத்தகைய பயிர்களின் சாகுபடியினைப் பல்வேறு வகைகளில் விரிவுபடுத்தும் பணியினை இத்துறை மேற்கொண்டுள்ளது. 31—12—1980 ஆம் நாள் முடிய இத்தகைய பயிர்கள் வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலப் பரப்பு யின் வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) நீலகிரிப் பிரிவு | 712.28 | ஹெக்டேர் |
| (2) ஆனைமலைப் பிரிவு | 362.66 | ஹெக்டேர் |
| (3) மேல் பழனி மலைப் பிரிவு | 134.25 | ஹெக்டேர் |
| | 1,209.19 | ஹெக்டேர் |



1981 ஏப்ரல் 29]

1979-80, 1980-81, 1981-82 ஆகிய மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளப் பட்டுள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலப் பயிர் நடுகைக்கு கீழ்க்கண்ட வாறுள்ள நடுதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது :—

| பயிர்களின் பெயர். (1) | 1979–80 (உள்ளபடி) (2) | 1980–81 (மதிப்பிட்டது). (3) | 1981–82 (எதிர் பார்க்கப் படுவது). (4) |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்). | | |
| 1. ஜெரேனியம் (Geranium) .. | 25.00 | 95.00 | 108.00 |
| 2. ஜாவாசிட்ரோ-னெல்லா (Java citronella) | 8.00 | 8.00 | 23.00 |
| 3. டயஸ்சோரியா (Dioscorea) .. | 20.00 | 20.00 | 20.00 |
| 4. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா .. Euc. citriodora) | 13.00 | 12.00 | 10.00 |
| 5. யூகலிப்டஸ்குளோபுலஸ் Euc. Globules). | 2.00 | 4.00 | 10.00 |
| 6. சோலானம் காசியனேம் .. (Solanum khasianum) | 3.00 | 0.50 | 0,50 |
| 7. பச்சோலி .. Patchouli | 3.00 | .. | .. |
| 8. ஓசிமம் கேம்பரா .. Octimum Camphora) | 2.00 | 3.00 | 10.00 |
| 9. பயிரித்ரம் (Pyrethrum) | 1.00 | 0.50 | 0.50 |
| 10. ரோஸ்மேரி .. (Rosemary) | 1.00 | 0.50 | 0.50 |
| மொத்தம் .. | 78.00 | 143.50 | 182.50 |

இத்துறையானது மதுரை மாவட்டத்திலும் தனது வளர்ச்சிப் பணியை மேற்கொண்டுள்ளது. மேல் பழனி குன்றிலுள்ள வேம்பாடி (பேரிஜம்) என்னுமிடத்தில் 160 ஹெக்டேர் பரப்பிலும், கொடைக்கானல் அருகே பெரும் பள்ளம் என்னுமிடத்தில் 200 ஹெக்டேர் பரப்பிலும் ஜெரேனியம் பயிரிடத் தொடங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் குறிக்கோளான 76 ஹெக்டேர் பரப்பில் நடுகைத் திட்டம் இவ்விரு திட்டங்களாலும் முடிக்கப்பட்டுள்ளது.

1981-82-க்கான குறிக்கோள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| பேரிஜம் (வேம்பாடி) | 40 ஹெக்டேர் |
| பெரும்பள்ளம் கொடைக்கானல் | 50 ஹெக்டேர் |

தமிழ்நாடு அரசு ஜாவா சிட்ரோனெல்லா பயிரிடும் திட்டம் ஒன்றுக்கு 1979 ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஒப்புதல் அளித்தது. அத் திட்டத்திற்கான முன்னோடி வேலைகள் 1980 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் 15 ஹெக்டேர் நிலப் பரப்பில் ஜாவா சிட்ரோனெல்லா புல் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. கொய்னாப் பொருட்களின் உற்பத்தி.

கோவை மாவட்டம், ஆனை மலையிலுள்ள அரசினர் சின்கோனாத் தோட்டத்திலுள்ள கொய்னாத் தொழிற்சாலை இத் துறையின் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் சின்கோனா பட்டையிலிருந்து பல்வேறு வகை கொய்னாப் பொருட்களைத் தொடர்ந்து தயாரித்து வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் விவரம் பின்வருமாறு:

| கொய்னாப் பொருட்கள் | 1978–79 (உள்ளபடி) | 1979–80 (உள்ளபடி) | 1980–81 (மதிப்பிடப்பட்டது.) |
|---|---|---|---|
| | (கிலோகிராமில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| குனைன் சல்பேட் (Qunine Sulphate) .. | 7,601 | 7,0[illegible]0 | 7,000 |
| குனைன் ஹைடிரோ குளோரைடு (Qunine hydrochloride) | 526* | 2,929* | 3'600* |
| குனிடின் சல்பேட் (Quinidine sulphate) .. | 250 | 160 | 200 |
| சின்கோனா பெப்ரிபியூஜ் (Cinchona febrifuge) | 7,651 | 7,300 | 7,500 |

(3) 1981–82 ஆம் ஆண்டிற்கான கொய்னாப் பொருட்கள் உற்பத்தி திட்ட இலக்கு பின்வருமாறு:—

| | |
|---|---|
| குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு (Qunine sulphate and Qunine hydrocholoride) | .. 6,000 கிலோகிராம். |
| சின்கோனா பெப்ரிபியூஜ் (Cinchona febrifuge) | .. 7,000 கிலோகிராம் |
| குனிடின் சல்பேட் (Qunidine snlphate) | .. 150 கிலோகிராம். |



4. தைல வகைகளின் உற்பத்தி:

நீலகிரி மாவட்டம், நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலங்கள் உற்பத்தி தொழிற்சாலை இத்துறையின் தோட்டங்களிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத யூகலிப்டஸ் Eucalyptus oil ஜெரேனியம் Geranium ஜாவா சிட்ரோனெல்லா (Java citronella oil) மற்றும் யூகலிப்டஸ் சிட்ரியோடோரா (Euc. citriodora oil) ஆகிய தைலங்களைச் சோதனை செய்து, சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறது.

மூன்றாண்டுகளில் (1979-80, 1980-81, 1981-82) மருந்து மற்றும் மணங்கமழும் தைலங்களின் உற்பத்தி செய்யப்பட்ட, செய்யப்படும் அளவுகள் பின்வருமாறு.—

* (குறிப்பிட்ட ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட குனைன் சல்பேட்டிலிருந்து தயாரித்தது.

| வரிசை எண் பொருட்களின் பெயர். | 1979–80 (உள்ளபடி). | 1980–81 (மதிப்பிடப்பட்டது). | 1981–82 (எதிர்பார்க்கப்படுவது.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (கிலோகிராமில்.) | | |
| 1 யூகலிப்டஸ் ஐ.பி. .. | 1350.340 | 2,200.000 | 3,000 |
| 2 யூகலிப்டஸ் பி.பி. .. | 765.7[illegible]0 | 800.000 | 1,500 |
| 3 ஜெரேணியம் | 929.885 | 1,456 000 | 1,800 |
| 4 யூகலிப்டஸ் சிட்ரியோடோரா | 2,9[illegible]4.015 | 3,300,000 | 3,500 |
| 5 ஜாவா சிட்ரோனெல்லா | 2,746.390 | 3,000 000 | 3,200 |
| 6 பச்சோலி .. .. | 11.070 | [illegible]5.000 | 20 |
| 7 சின்பிரஸ் (லிட்டர்களில்) | 13,460 | [illegible]5.000 | 20,000 |

4. (அ) கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகள் உற்பத்தி:

மூன்றாண்டுகளில் (1979-80, 1980-81, 1981-82) கற்பூரத் தைலமும், கற்பூர வில்லைகளும் நடுவட்டம் மருந்து மற்றும் நறுமண தைல தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட அளவுகள் பின்வருமாறு:—

| | 1979–80 (உள்ளபடி.) | 1980–81 (மதிப்பிடப்பட்டது) | 1981–82 (எதிர்பார்க்கப்பட்டது.) |
|---|---|---|---|
| கற்பூரத் தைலம் (கிலோகிராமில்) .. | 25,625 | 30 000 | 40 000 |
| கற்பூர வில்லைகள் (எண்ணிக்கையில்) | [illegible],49,450 | 2,00,000 | 3,00,000 |

[1981 ஏப்ரல் 29

சின்கோனாத் துறை, திருவரங்கத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ ரங்கநாதசாமி கோவில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், திருச்சிராப்பள்ளி அருள்மிகு தாயுமானவர் கோவில், சென்னை வடபழனி அருள்மிகு பழனியாண்டவர் கோவில் போன்ற 17 கோவில்களுக்கு கற்பூர வில்லைகள் வழங்க ஆரம்பித்துள்ளது.

இத் துறையின் தோட்டங்களில் துளசி இலைகள் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளியிடங்களிலிருந்து செப்பமற்ற இயற்கை கற்பூரத்தைப் பெற்று அதனை சுத்திகரித்து வில்லை வடிவில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யவும் முயற்சிக்கப்பட்டு வருகிறது. 1981-82-ல் பத்து ஹெக்டேர் பரப்பில் துளசி செடி புதிதாக பயிரிடப்படும்.

**5. விற்பனையும் வருவாயும்:**

1979-80 ஆம் ஆண்டில் இத்துறை 3.92 இலட்சம் வருமானம் தந்துள்ளது. இந்த வருமானமானது மூலதனத்தின் மீதுள்ள வட்டிக்கு ரூ. 30.18 இலட்சத்தை கொடுத்த பின்னர் உள்ள நிகர வருமானமாகும். 1980-81-ல் மூலதனத்திற்கான வட்டித் தொகைக்காக 36 இலட்சம் கொடுத்தபின்னர் இத்துறைக்கு 0.57 இலட்சம் வருமானமாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 0.41 இலட்சம் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களின் விலை குறைந்ததால் வருமானமும் குறைந்து விட்டது. வருமானம் குறைந்ததற்கு மற்றும் ஒரு காரணம் இத்துறை தோட்டங்களிலுள்ள முதிர்ந்த சில்வர் ஓக் (Silver Oak) மரங்கள் விற்பனை செய்வதற்கு உள்ள கட்டுப்பாடாகும். கொய்னாப் பொருட்கள், மருந்து தைல வகைகள் மற்ற வாசனை தைலங்களின் விற்பனை மற்றும் வருவாய் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:—

**(அ) கொய்னாப் பொருட்கள்:**

வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களின் தேவை அதிகரித்த போதிலும் இந்திய அரசு கொய்னாத் தயாரிப்பு பொருட்களின் ஏற்றுமதிக்கு 1978 ஜூலைத் திங்களில் தடைவிதித்ததின் காரணமாக சமீப காலங்களில் ஏற்றுமதியாகும் கொய்னாப் பொருட்களின் விலை மிகவும் குறைந்துள்ளது. அதன் விளைவாக குறிப்பிட்ட அளவு கொய்னாப் பொருட்களே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. (1978-79 ஆம் ஆண்டில் 3.25 டன்னும் 1978-79-ல் 4.50 டன்னும், மற்றும் 1980-81-ல் 6 டன்னும்) மேற்கூறிய காரணங்களால் எதிர்பார்த்த வருமானத்தில் குறைவு ஏற்பட்டது. கொய்னாப் பொருட்களின் விற்பனையின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு:—



1981 ஏப்ரல் 29]

| (1) | 1978-79 (2) | 1979-80 (3) | 1980-81 (மதிப்பிடப் பட்டது.) (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| உள்நாட்டு விற்பனை .. | 34.45 | 23.39 | 20.00 |
| வெளிநாட்டிற்கான விற்பனை | 23.67 | 42.55 | 45.40 |
| மொத்தம் .. | 58.12 | 65.94 | 65.40 |

1981-82 ஆம் ஆண்டில் ரூ. 65 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு விற்பனைக்காக கொய்னாத் தயாரிப்புப் பொருட்களின் விலையை ஏறுமுகமாக மாற்றியமைக்க நமது அரசு மத்திய அரசுடன் பேச்சு நடத்தி வருகிறது. இது பற்றிய கருத்து இந்திய அரசின் ஆய்வில் உள்ளது.

**(ஆ) மருந்து மற்றும் மணம் கமழும் தைலங்கள்:**

இத்தைலங்களின் விற்பனையால் கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்குறிப்பிட்டபடி வருவாய் கிட்டியுள்ளது:

| | (ரூ. இலட்சம்.) |
|---|---|
| 1978-79 | 13.35 |
| 1979-80 | 14.81 |
| 1980-81 | 16.50 (மதிப்பிடப் பட்டது.) |

1981-82 ஆம் ஆண்டில் இப்பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. 21.50 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6. ஆராய்ச்சி:**

மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதில் சிறந்த முறைகளைக் கண்டறியவும் அதிக விளைச்சலையும் வருவாயையும் தரும் சின்கோனா இதர மருந்து செடிகள் மற்றும் வாசனைச் செடிவகைகளை வளர்க்கவும் இத்துறை ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. சின்கோனா மற்றும் இதர மருந்து, நறுமண வகைத் தைலங்களின் தரம் பயிர்கள் பற்றி விரிவான முறையில் ஆய்வு நடத்திட தாவர இயல் அறிஞர் தலைமையில் ஓர் ஆராய்ச்சி பிரிவு 1976 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

1981-82 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடன் மருந்து மற்றும் மணங்கமழ்த் தைலங்களின் ஆராய்ச்சிப் பணியை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் குனைனிலிருந்து Quinine ) குனிடிங் ( Quinidine ) தயாரிப்பது பற்றிய ஆராய்ச்சிப் பணியை லக்னோவிலுள்ள "சென்ட்ரல் டிரக்ஸ் லேபரட்டரி" Central Drug Research Laboratory யிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**7. திட்டப் பணிகள் :**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன (1980-81—1984-85) :—

1. சின்கோனா முனைப்பு சாகுபடி (Intensive Cultivation)

2. மருந்து மற்றும் நறுமணச் செடிகளை வாணிப முறையில் பயிர் செய்தல்.

3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றிய நுணுக்கமான ஆய்வினை மேற்கொண்டு சாகுபடியினை வளர்ச்சி செய்தல்.

4. இத்துறையின் தொழிலாளர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர் ஆகியோருக்கு குடியிருப்பு, மருத்துவம், கல்வி, போக்குவரத்து மற்றும் வசதிகள் அளித்தல்.

5. தொழிற்சாலையை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இத்துறையிலுள்ள இரு தொழிற்சாலைகளுக்கும் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்குதல்.

6. நடுவட்டம் மருந்து மற்றும் வாசனை தைலங்கள் தொழிற்சாலையில் தேயிலைக் கழிவிலிருந்து 'கபீன்' (Caffeine) உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றுக்கு 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அரசு ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் 1—3—1980 முதல் இயங்கி வருகிறது. கஃபீன் உற்பத்தி செய்யத் தேவையான இயந்திரங்கள் பொருத்தப்படும் சோதனை அளவில் 200 கி.கி. கஃபீன் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் 1,500 கி.கி. கபீன் இதுவரை உற்பத்தி செய்யப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.





**மத்தியஅரசின் நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள்.**

கீழ்க்காணும் மத்திய அரசின் பொறுப்பேற்ற திட்டங்கள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன :

**1. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் டயஸ் கோரியா பயிரிடவும் அதிலிருந்து டயஸ்ஜெனின் பிரித்தெடுப்பதற்கும் உள்ள திட்டம்.**

இத்திட்டத்தின் கீழ் 80.25 இலட்சம் மதிப்பீட்டில் டயஸ்கோரியா பயிரிடுதலும் அதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை கட்டுவது 1978-79 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களும் கருவிகளும் தயாரித்து அவற்றினை தொழிற்சாலயில் பொருத்தும் பணி ஜம்முவிலுள்ள வட்டார ஆய்வுக்கூட நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு 1980-81ல் அவை தருவிக்கப்பட்டு டயஸ்ஜெனின் தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ளது. தொழிற்சாலை, அலுவலகம், தொழிலாளர் குடியிருப்புகள் ஆகியன கட்டும் பணிகள் பொதுப் பணித்துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

1978-79 ஆம் ஆண்டில் 16 ஹெக்டேர் நிலப் பரப்பில் டயஸ்கோரியாப் பயிர் வேளாண்மை செய்யப்பட்டது. 1979-80-ல் 20 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 1980-81-ல் இருபது ஹெக் டேர் பயிரிடப்பட்டது. 1981-82-ல் 20 ஹெக்டேர் பரப்பில் டயஸ்கோரியா சாகுபடி செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 400 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**2. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பழநிமலை மேல் தளக் குன்றுகளில் ஜெரேனியம் பயிரிடுதல்.**

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பழநிமலை மேற் தள குன்றுகளில் 160 ஹெக்டேர் நிலப்பரப்பில் 52.55 இலட்சங்கள் மதிப்பீட்டில் ஜெரேனியம் பயிரிடும் திட்டம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் (மார்ச் 1979) ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 1979-80-ல் 4.25 ஹெக்டேர் பரப்பிலும், 1980-81-ல் 36 ஹெக்டேர் நிலப் பரப் பிலும் ஜெரேனியம் பயிரிடப்பட்டது. 1981-82-ல் 40 ஹெக்டேர் நிரப்பரப்பில் இப்பயிர் வேளாண்மை செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 800 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

[1981 ஏப்ரல் 29

**3. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பெரும்பள்ளத்தில் (கொடைக்கானல்) ஜெரேனியம் பயிரிடும் திட்டம்.**

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டம் கொடைக்கானலில் உள்ள பெரும்பள்ளம் என்னுமிடத்தில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ. 60.57 இலட்சம் மதிப்பீட்டில் ஜெரேனியம் பயிரிடும் திட்டம் 4—9—1980 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு வனக் கழகத்திடமிருந்து 54 ஹெக்டேர் பரப்பில் ஜெரேனியம் பயிரோடு இந் நிலப்பரப்பு பெறப்பட்டது. 1980-81-ல் 40 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. 1981-82-ல் 50 ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 385 தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**4. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனெல்லா பயிரிடும் திட்டம்.**

நீலகிரி மலைப் பகுதியில் (டாக்டர் நாயுடும்மா கமிட்டி பரிந்துரையினால்) ரூ. 121.04 இலட்சம் செலவில் 1980-81 ஆம் ஆண்டில் ஜாவா சிட்ரோனெல்லா பயிர் செய்யும் திட்டமொன்று 1980-81 முதல் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 200 நிரந்தர தொழிலாளர்களுக்கும், 100 தற்காலிக தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டம் 2—10—1980 முதல் இயங்கி வருகிறது.

**5. நிதி ஆதார அமைப்பு :**

1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி சின்கோனாத் துறையின் சொத்து இருப்பு, இவற்றின் மதிப்பு ரூ. 5,46,15,443 ஆகும். இதன் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| நிலையான சொத்துக்கள் :— | |
| சின்கோனா தோட்டங்கள் | 1,86,76,145 |
| விறகுக்கு பயன்படும் மர வகைகள் மருந்து மற்றும் வாசனைத் தைலப் பயிர்கள் | 53,49,862 |
| கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள் போன்ற இதர வகைச் சொத்துக்கள் | 1,15,96,682 |
| தற்காலிக இருப்புகள் :— | |
| பண்டங்கள், நிறைவுப் பெற்ற பொருட்கள் மற்றும் உற்பத்தி வேலைக்கான கையிருப்பு பொருட்கள், சின்கோனா மரப் பட்டை, பல்வகைப் பாக்கி இனங்கள் | 1,89,96,754 |
| மொத்த மதிப்பு | 5,46,15,443 |



1981 ஏப்ரல் 29]

2. **இத்துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்.**—சின்கோனாத் துறையின் அண்மைக்கால சாதனைகளில் குறிப்பிடத்தக்கவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

(1) சின்கோனாப் பட்டையிலிருந்து கொய்னாப் பொருட்களைத் தயாரிக்கும்போது தேங்கிப் போகும் சின்கோனா பெப்ரி பியூஜ் (Cinchona) Febrifuze என்ற துணைப் பொருளிலிருந்து குனைன் சல்பேட் மற்றும் குனைடின் சல்பேட் தயாரித்தல்.

(2) சுற்றுப்புறங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் இருந்து கிடைக்கும் தேயிலைக் கழிவிலிருந்து கஃபீன் (Caffeine) தயாரித்தல்.

(3) குடும்ப நலத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகளில் அடங்கிய ஹார்மோன் (Hormone) போன்றவற்றைத் தயாரித்திட மூலப் பொருளான டயாஸ்ஜெனின் (Dioscenin) என்ற பொருளை இத்துறையில் பயிரிடப்படும் டயஸ்கோரியா கிழங்கிலிருந்து சோதனை அளவில் தயாரிப்பது.

(4) கொசுக்களை விரட்டும் சினோமாஸ் ( cinomos ) என்னும் களிம்பும் சின்ஸ்ப்ரே ( cinsprag ) என்ற தெளிப்பானையும் பாமர மக்களின் வாங்'ம் சக்திக்கேற்ப குறைந்த விலையில் தயாரித்து விற்பது.

(5) பொதுமக்கள் குறைந்த விலையில் வாங்கக் கூடிய தரையைச் சுத்தம் செய்யும் கிருமிநாசினி சக்தியுள்ள 'சின் பிரஷ்' (Cinfresh) என்ற தெளிப்பானை தயாரித்து விற்பனை செய்தல்.

(6) 'சின்னோராமா" (Cinoroma) தொடபெட்டா மிஸ்ட் Dodasetta Mist ) ஆகிய வாசனைத் திரவியங்களைத் தயாரித்தல்.

(7) மதுரை மாவட்டத்தில் மேல் பழநி குன்றுகளில் (பேரிஜம், பெரும்பள்ளம்) புதிதாக ஜெரேனியம் பயிரிடுவதின் மூலம் இத்துறையின் நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குதல்.

(8) தோட்டத் தொழிலாளர் குடியிருப்பு ஆலோசனைக் குழு நிர்ணயித்துள்ள தரத்திற்கொப்ப தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

(9) கொய்னாத் தொழிற்சாலையில் 'உள்ளுறை இயக்க பிரிவு முறை' (closed circuit Extraction System) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[1981 ஏப்ரல் 29

10. (வரவு-செலவுத் திட்டம்.—(அ) மானியக் கோரிக்கை எண் 25 (சின்கோனா).—வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 177,80 இலட்சம் 1980-81-க்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 206.45 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.—1981-82 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 208.94 இலட்சமாகும். இந்த அதிகப்படியான நிதித் தேவை அவ்வாண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் மத்திய அரசு பொறுப்பேற்று இயங்கி வரும் திட்டப் பணிகளுக்காகவும் கோரப்பட்டது.

(ஆ) கோரிக்கை எண் 54.—1980-81 திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 41.80 இலட்சம் ஒதுக்கப்பட்டது. தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு அதிக அளவில் வசதிகளைச் செய்யவும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களை வாங்கவும் இந்த ஒதுக்கீடு தேவையாகிறது. 1981-82 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 43.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண்கள் 25 மற்றும் 54 ஆகிய தலைப்புகளின் கீழ் 1980-81-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, திருத்திய மதிப்பீடு மற்றும் 1981-82-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

11. தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி திட்டங்கள்.—1980-81-ல் தொழிலாளர்களுக்கு 80 வீடுகளும், 10 அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு ரூ. 15.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் இரண்டாம் பிரிவுத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு 50 வீடுகளும், 4 அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு ரூ. 9.80 இலட்சம் கோரப்பட்டுள்ளது.

தற்போதுள்ள குடியிருப்புகள் 1940 ஆம் ஆண்டில் கட்டப்பட்டவை. பழுதடைந்த இவ்வீடுகள் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இல்லை. ஆகவே இந்த பழைய வீடுகளுக்குப் பதிலாக தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளைப் படிப்படியாக கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது. மின்விளக்கு, கழிப்பறை வசதிகளுடன் இப்புதிய குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.



1981 ஏப்ரல் 29]

12. மூன்றுரை, தொழிலாளர்களையே அதிக அளவில் உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தி இயங்கும் துறை சின்கோனாத் துறை. ஆகவே, நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவ தொழிலாளர் சட்டத்தின்கீழ் எல்லா வசதிகளையும் வழங்கி இத்துறை தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் ஆகியோருக்குமிடையே மிக இணக்கமான உறவை தொடர்ந்து நிலைபெறச் செய்கிறது.

விலைவாசிப் புள்ளிகளின் அடிப்படையில் தொழிலாளர்களின் பஞ்சப்படி உயர்த்தப்பட்டு அகவிலைப்படி உயர்வும், ஊதிய உயர்வும் முறையே 1—9—1950 மற்றும் 1—1—1981 முதல் கொடுக்கப்பட்டுள்ளதால் வயது வந்த தொழிலாளியின் தினக் கூலி ரூ. 8.29 ஆக உயர்ந்துள்ளது. ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியமும் இத்துறையில் வழங்கப்படுகிறது. இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டப் பணிகளால் திட்டம் செயல்படும் பகுதியிலுள்ள மக்களுக்கும், துறையில் பணியாற்றும் தொழிலாளர்களைச் சார்ந்து வாழும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அதிக அளவில் புதிய வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்துறையின் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்கான நிர்வாகக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மூன்று மாதத்திற்கொரு முறை நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்று வருகின்றது.

இணைப்பு.

320 தொழில்கள்—மானியக் கோரிக்கை எண். 25 (சின்கோனா.)

| விவரங்கள். | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. 1980-81. | திருத்திய மதிப்பீடு 1980-81. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1981-82. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| நெறிப்படுத்துதல் .. | 9.27 | 9.97 | 10.36 |
| மலைத் தோட்டங்கள் .. (நீலகிரி மற்றும் ஆனைமலை.) | 57.15 | 62.32 | 58.23 |
| தொழிற்சாலைகள் (நடுவட்ட மருந்து மற்றும் வாசனை தைலத் தொழிற்சாலை, ஆனைமலை கொய்னாத் தொழிற்சாலை.) | 13.02 | 13.83 | 14.66 |

| | | | |
|---|---|---|---|
| விற்பனை .. .. | 1.35 | 1.38 | 1.47 |
| திட்டப்பணிகள் (ஆய்வு மற்றும் திட்டம்). .. | 63.51 | 82.95 | 82.22 |
| வட்டி .. | 33.50 | 36.00 | 36.00 |
| மொத்தம் 320 தொழில்கள் | 177.80 | 206.45 | 208.94 |

526. முதலீட்டுச் செலவு. மானியக் கோரிக்கை எண். 54 (சின்கோனா.)

| விவரங்கள். | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1980-81. | திருத்திய மதிப்பீடு 1980-81 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1981-82. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| கட்டிடங்கள் .. | 32.65 | 29.28 | 40.50 |
| கருவிகளும், தளவாடங்களும். .. | 3.00 | 12.52 | 2.61 |
| | 35.65 | 41.80 | 43.11 |
| ஆக மொத்தம் .. | 213.45 | 248.25 | 252.05 |

இராம வீரப்பன்,
செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர்.

**இணைப்பு 2.**

**வனத்துறை.**

**கொள்கை விளக்கக் குறிப்பு.**

**1981-82.**

**முன்னுரை.**

1.1. நமது இயற்கை உயிர் வளங்கள் அழிந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சி இன்று உலக முழுவதும் பொதுவாக நிலவி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நம் மாநிலத்தில் பற்பல வகைக் காடுகளும், தாவரங்களும், உயிரினங்களும் ஏராளமாக உள்ளன. இவை நமக்குக் கிடைத்துள்ள அரிய செல்வங்களாகும். மக்கட் தொகைப் பெருக்கத்தினாலும் வனவிலங்குகள் வாழ்வதற்கேற்ற இயற்கைச் சூழல்கள் குன்றி வருவதாலும் பெறுதற்குரிய இவ்வனங்களை நாம் இழந்து வருகிறோம்.





வனங்கள் அழிக்கப்படுவதால், வன விலங்குகள் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்து வாழ இடமில்லாமற் போகிறது. மக்கள் தொகை பெருகுவதால் அவர்கள் தேவைக்குக் காடுகள் அழிக்கப்படுகின்றன. ஒரு பக்கம் தாவர வகைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இப்படி வனங்கள் அழிக்கப்படுவதால்தான் மழைக் குறைவும் மலைகளில் மண் அரிப்பும் ஏற்படுகிறது. நாம் சுவாசிக்கும் காற்று தூய்மையாக இருக்கவேண்டும். உரிய காலத்தில் மழையும் பெய்ய வேண்டும். இதற்கு ஒரே வழி, காடுகள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இதனைக் கருதி பரந்த அளவில் காடு வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

1.2. மரங்கள் எவ்வளவு முக்கியம் என்பதை நம் முன்னோர்கள் உணர்ந்து சாலை ஓரங்களிலும், கிராமங்களிலும், வாழுகிற வீட்டைச் சுற்றிலும் கூட மரங்களை வளர்த்தனர். இந்த உணர்வை நம் மக்களின் மனதில் மீண்டும் பதிய வைத்து அவர்களை வனவளர்ப்பு, மரவளர்ப்புத் திட்டங்களில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும். இன்றைய சூழ்நிலையில், வேளாண்மை தவிர பிற காரியங்களுக்குப் பயன்படாத நிலங்களில் மக்கள் மரங்களை நட்டு காடுகளை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம். காடுகளையும் இயற்கை உயிரினங்களையும் அழிந்து போகா வண்ணம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இப்போது நாடு முழுவதிலும் மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

1.3. இயற்கை வளத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் செடி கொடி உயிரினங்களைப் பராமரித்து வருவதோடு, வேளாண்மைத் தொழிலுக்கு உதவுவதிலும் காடுகளின் முக்கியப் பங்கினை உணர்ந்து மாநில அரசு, வனங்களை அழிக்கும் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்துப் பரந்த அளவில் ஏராளமாக மரங்கள் நடுவதற்கு கடந்த சில ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறது. 1960 ஆம் ஆண்டிலிருந்து சமூகக் காடு வளர்ப்பில் இம்மாநிலம் முன்னோடியாக உள்ளது. ஓராண்டிற்கு சுமார் 5,000 எக்டேர் பரப்பில் மாதிரிப் பண்ணைக் காடுகள் வளர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டு, இப்போது ஓராண்டிற்கு சுமார் 50,000 எக்டேர் பரப்பில் காடு வளர்க்கும் அளவிற்கு இத்திட்டம் வேகம் பெற்றுள்ளது. சாலை ஓரங்களிலும், இருப்புப்பாதை ஓரங்களிலும், கால்வாய்க்கரை ஓரங்களிலும் மரங்களை நடுவது இத்திட்டத்தில் அடங்கும். முந்தைய திட்டத்தில் காடு வளர்ப்புக்கு 28 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 59 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சமுதாயக் காடுகளுக்கு ரூ. 35 கோடியும், நாங் குறைந்த ஒதுக்கக் காட்டுப் பகுதியில் விறகு மரக் காடுகளுக்கு ரூ. 2 கோடியும் காகிதக் கூழ் மரத் தோட்டங்களுக்கு ரூ. 3

கோடியும் செலவிடப்படும். நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் காடுகள் வளர்க்க பெருந்தொகை செலவிடப்படும். இதனால் மாநிலமெங்கிலும் பசுமைப் புரட்சி ஓங்குவதோடு இயற்கை வளம் கொழிக்கும். மேலும், நமது மாநிலத்தின் விறகுத் தேவையும் கால்நடைகளின் தீவனத் தேவையும் நிறைவு பெறும். தவிர, இவற்றால் மண் அரிப்புக் குறைவதோடு மரத் தொழில்கள் விரிவடையும் வாய்ப்பும் உருவாகும்.

1.4. வனச் செல்வத்தைப் பாதுகாப்பதில் இவ்வரசு அண்மைக் காலத்தில் தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வனங்களில் உள்ள மரங்களைக் கட்டுப்பாடின்றி வெட்டுவதை 1977 மார்ச் திங்களில் அரசு, முதல் முறையாக பொதுவாகத் தடை செய்தது. மீண்டும் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இத்தடையினை வலியுறுத்தி அரசு அறிவுரைகள் வழங்கியது. இத்தடை 1980 ஆம் ஆண்டு வரையில் உள்ள மூன்றாண்டுகள் முழுமையாகத் தொடர்ந்து நீடித்தது. இது வனங்களைப் பாதுகாப்பதில் அரசு எவ்வளவு ஆவலாயுள்ளது என்பதையும் வனங்களை அழிப்பதைத் தடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது என்பதையும் எடுத்துக் காட்டும். 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு பொதுவான இத்தடையை நீக்கி எத்தகைய சூழ்நிலைகளில் மட்டும் மரங்களை வெட்ட அனுமதிக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்டி விரிவான கட்டளைகளை அரசு பிறப்பித்தது. மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வன அதிகாரி, தாசில்தார், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர், வேளாண்மைத் துணைப் பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழு ஆய்வு செய்ய வேண்டுமென்று விதித்து, அரசு இது குறித்த சட்டத்தைத் திருத்தியது. கடந்த காலத்தில், மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. மரங்களை வெட்டுவதற்குரிய அனுமதி, உரிய முறையில் ஆராய்ந்து பார்க்கப்பட்ட பிறகே அளிக்கப்படுகிறது என்பதை உறுதி செய்யும் பொருட்டு, மாவட்டங்களுக்கு, குழுக்களை அரசு தற்போது அமைத்துள்ளது. மரங்களை வெட்டுவதற்காக அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களைச் சாதாரணமாக வழக்கமான முறையில் கருதிப்பாராமல், கவனமுடன் ஆய்வு செய்ய வேண்டும் என்னும் விழிப்புணர்வை, அரசின் ஆணைகள் அதிகாரிகள் இடையே ஏற்படுத்தியது. இக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதன் வாயிலாக, வனங்கள் வகை தொகையின்றி பெருமளவில் அழிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. வனத்துறை நிர்வாகத்தை மேலும் மேம்படுத்துவதற்கு மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வனத்துறையின் நிர்வாகத்தை மேம்



படுத்துவதற்காக அனுபவமிக்க முதுநிலை ஐ.வ.எஸ். அதிகாரி ஒருவரை நியமிக்கலாம் என வனத்துறைத் தலைவர் (பொது) என்ற ஒரு பதவியை அரசு 1979 பிப்ரவரியில் ஏற்படுத்தியது.

1.5. அனுபவமிக்க முதுநிலை ஐ.வ.எஸ். அதிகாரி இத்துறையின் தலைவராகப் (பொது) பொறுப்பேற்றிருந்த இக்கால அளவில் இத்துறையின் நிர்வாகத்தையும் செயல் திறனையும் மேம்படுத்த முக்கியமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார். அவருடைய ஆலோசனையின் அடிப்படையில் அரசு சில ஆணைகளை பிறப்பித்தது. அவை பின் வருமாறு :—

(1) வரி எதிர்வாய் நிலங்கள், பயிரிடப்படாத மலைச்சரிவுகள், ஏனைய தரிசு நிலங்கள் ஆகியவற்றில் மரங்களை வளர்க்கும்பொருட்டு கூடுதலாக எட்டு வன விரிவாக்கக் கோட்டங்களை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது.

(2) வனங்களை நிர்வகித்தல், வளர்த்தல் ஆகியவற்றில் வன ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை கருதி ஆராய்ச்சிப் பணியின் வேகத்தை விரைவுபடுத்தலை கருத்தில் கொண்டு மாநில வன இயல் அலுவலர் (State Silviculturist ) பதவி, வனத்துறை பாதுகாவலர் பதவித்தரத்திற்கு உயர்த்தப்பட்டு உள்ளது. அதன் தலைமையிடம் சென்னையிலிருந்து மதுரைக்கு மாற்றப்பட்டது.

(3) கணக்குகளைச் சரிவர மேற்பார்வை செய்து கண்காணிப்பதற்கும் முறைகேடுகள், பணக்கையாடல் ஆகியவற்றிற்கான வாய்ப்புக்களைத் தவிர்க்கவும், தலைமைக் கணக்கு அலுவலர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. செலவுகளை திட்டமுறைப்படுத்தவும் கணிக்கை மதிப்புகளை ஆய்வு செய்யவும் அவசியமான பணியாளர்களுடன் மேலும் ஒன்று கணிக்கைக் குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(4) அரசு ரப்பர் தோட்டங்களும் தொழிற்சாலைகளும் செவ்வையாக இயங்குவதற்கு ஏதுவான வகையில், ரப்பர் தோட்டப்பணி வட்டம் (Rubber Circle) கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு வட்டம் என இரு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, தேவையான கூடுதல் பணியாளர்கள் பதவிகளை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

(5) தலைமை வனத்துறைத் தலைவரின் பணிச் சுமையைப் பெருமளவிற்கு குறைக்கவும், துறையில் பத்தாண்டுகளுக்கு மேலாக ஒரே பதவியிலேயே இருந்து வரும் முதுநிலை அதிகாரிகளுக்கு தக்க பதவி

[1981 ஏப்ரல் 29

உயர்வு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், இரண்டாம் நிலைப் பதவிக்குரிய ஒன்றை ஏற்படுத்தவும், வன விலங்குகள் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்கென கூடுதல் தலைமை வனத் துறைத் தலைவர் பதவி ஒன்று அண்மையில் தோற்றுவிக்கப்பட்டது.

(6) கோட்ட அதிகாரிகளின் பணிகளை மண்டல அதிகாரிகள் செவ்வையாகக் கண்காணித்திட, வேலூர், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு இரண்டு புதிய மண்டலங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக கோயம்புத்தூர் மாவட்டத்து, மத்திய கோட்டங்கள், கோயம்புத்தூர், சத்தியமங்கலம், ஈரோடு என மூன்று கோட்டங்களாகப் புதிதாய் சீரமைக்கப்பட்டன. மேட்டூர் காவிரி நீர்த் தேக்கப் பகுதியில், தர்மபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு மேலும் ஒரு மண் வளப் பாதுகாப்புக் கோட்டம் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

(7) மரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் மரங்களை வெட்டியெடுத்துச் செல்வதைச் சரிவர மேற்பார்வையிட்டுக் கண்காணிப்பதற்காக, தனிப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற மரங்களின் விலையில் 5 சதவீதம் என்ற அளவில் நிர்வாகச் செலவுகள் வசூலித்து, அத்தொகையிலிருந்து, இதற்கான செலவு சரிக்கட்டப்படுகிறது. தலத்திலேயே வெட்டுமரங்களை எடை போடுவதற்காக ஏழு எடை போடும் இயந்திரப் பாலங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(8) சேலத்தில் ரூ. 9.82 லட்சம் செலவில் பாதுகாப்பான சந்தன மரக் கிடங்கு ஒன்று கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூருக்கு அருகே சந்தனத் தைலத் தொழிற்சாலை (Sandalwood Oil Factory) ஒன்று அமைக்க அரசாங்க அனுமதி வழங்கப்பட்டு, தொடக்கப் பணிகளை கவனிப்பதற்காக வனப் பாதுகாவலர் பதவி ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(9) நிர்வாக நலனைக் கருதி வனப்பாதுகாவலர்களின் பயனுக்கென [illegible] முறையில் வண்டிகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டது. பழுதடைந்த வண்டிகளை ஒப்படைத்துவிட்டு பணியாளர்களுக்கான வண்டிகள் உட்பட 97 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.



1981 ஏப்ரல் 29]

(10) வனத்துறையில், பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்காக மதிப்பீடுகளுக்கு அனுமதி வழங்க மாவட்ட வன தனி அதிகாரி/கோட்ட வன அதிகாரி/வனப் பாதுகாவலர்/வனத்துறைத் தலைவருக்குள்ள நிதி வரம்பு அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(11) வனப்பணியாளர்களுக்கும், வனக்காப்பாளர்களுக்கும் வரையறுத்த பயணப்படி உயர்ந்த விகிதத்தில் வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டது. வனக்காவலர்களுக்கு வரையறுத்த பயணப்படி வழங்கவும் அனுமதிக்கப்பட்டது.

(12) வனத்துறை அதிகாரிகளின் அலுவலகத்திற்கு/வீட்டிற்கு 57 புதிய தொலைப்பேசிக் கருவிகள் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(13) வனத்துறையில் பல்வேறு பதவித்தரங்களில் தேவையான பதவிகள் பல ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. வன செட்டில்மெண்ட் பணியில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டது. இப்பணிக்குக் கூடுதலாகப் பதவிகளை ஏற்படுத்தவும் அனுமதிக்கப்பட்டது.

(14) வனச்சரகப் பணியாளர்களுக்கும், வனக்காவலாளர்களுக்கும் இரண்டு ஜதை சீருடைகள் இலவசமாக வழங்கவும், வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனக்கலைப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுபவர்களுக்கு தங்க புதிய விடுதியும், உணவறைக் கட்டிடம் கட்டவும், கட்டில், மேஜை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

(15) புதிய இரண்டு வனக்கோட்டங்களை ஏற்படுத்தி, தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களின் முக்கிய மலைப்பகுதியான கல்வராயன் மலையை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(16) மண்டல அலுவலகங்களைப் பார்வையிடுவதற்காக, தேவையான அலுவல்பணியாளர்களுடன் வனத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் தலைமையில் ஆய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

4.6. விலை மதிப்புள்ள மரவகைகளை (சந்தன மரம் முதலியன) கடத்துபவர்கள் சென்னையிலிருந்து செயல்பட்டாலும் கூட, சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அவர்களைக் கண்காணிப்பதற்கு வனத்துறை எவ்வித விசேட அமைப்பினையும் பெறவில்லை. இக்குறையினைப் போக்க, தர்மபுரியிலுள்ள வனபாதுகாப்பு படை, சென்னைக்கு மாற்றப்பட்டு, கடத்த இரண்டு யூனிட்டுகளாக, சென்னையில் செயல்பட்டு வருகிறது. இப்

படை போதுமான பணியாளர்களைக் கொண்டு ஒரு உதவி வனப் பாதுகாவலரின் கீழ் செயல்படுகிறது. இப்படைக்கு வாகனம் மற்றும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

## வனப்பரப்பு.

2. சென்ற ஆண்டில் மொத்த வனப்பரப்பு 21,73,700 எக்டேராயிருக்க, இந்த ஆண்டில் மொத்த வனப்பரப்பு 21,79,100 எக்டேராகும். இந்த ஆண்டில் ஒதுக்கக்காடுகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை நீக்கியதாலும், வன நிலத்தை மீண்டும் நில அளவை செய்ததாலும் 600 எக்டேர் நிலப்பரப்பு மட்டுமே இழக்க நேர்ந்தது. ஆனால் 6,000 எக்டேர் நிலம், வனப்பகுதியில் சேர்க்கப்பட்டது. ஒதுக்கக் காடுகளின் பரப்பு 17,83,200 எக்டேராகும். ஒதுக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு 3,52,000 வகைப்படுத்தப்படாத பகுதியின் பரப்பு 43,900 எக்டேராகும்.

## வரவும் செலவும்.

3.1. வனத்துறையிலிருந்து 1980-81 ஆம் ஆண்டில் ரூ 11.82 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென கணிக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் சுமார் 12 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

3.2. “வனங்கள்” என்னும் தலைப்பின் கீழ் 1980-81 ஆம் ஆண்டு காலத்தில் ரூ. 16.38 கோடி ரூபாய் செலவு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணக்கிடப்பட்டுள்ள செலவு ரூ. 16.25 கோடியாகும். வனங்களின் உற்பத்தித் திறனை உயர்த்த வன வள மேம்பாட்டிற்காகச் செய்யப்பட்ட முதலீடே செலவில் பெரும் பகுதியாகும். வெட்டுமரங்கள், விறகு, தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரங்கள், ஏனைய இன்றியமையாக் காடுபடு பொருட்கள் ஆகியவற்றின் தேவையை நிறைவு செய்வதற்காக மலைத் தோட்டங்கள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. கடந்த சில வருடங்களாக பெருமளவில் பல புதிய திட்டங்கள் மக்கள் நல்வாழ்வுக்காகத் தீட்டப்பட்டதின் காரணமாகவே செலவினம் அதிகமாக காணப்படுகின்றது. இதன் பலன் சில ஆண்டுகளுக்குப்பின் மக்களுக்கு பயன் தரும். அரசின் வருவாயும் போகப்போக பெருகும்.

3.3. வனங்களிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் 1,088 லட்சம் ரூபாய் வருவாயாகக் கிடைத்தது. 1980-81 ஆம் ஆண்டில் 1,182 லட்சம் ரூபாய் (திருத்த மதிப்பீடு) வருவாய் கிடைக்குமென கணிக்கப்பட்டுள்ளது. 1981-82



ஆம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்ட வருவாய் 1,200 லட்சம் ஆகும். 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டு வருவாய் இனங்களின் பிரிவுகள் கீழ்க்கண்டவாறு :—

| | | 1980-81 (திருத்த மதிப்பீடு). | 1981-82 (திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| | (1) | (2) | (3) |
| 1 | சந்தன மரம் | 375.00 | 375.00 |
| 2 | வெட்டு மரம் | 140.00 | 120.00 |
| 3 | விறகு மரமும் கரியும் | 97.65 | 97.65 |
| 4. | மூங்கில் | 22.00 | 22.00 |
| 5 | தேயிலை | 10.00 | 10.00 |
| 6 | ரப்பர் | 175.00 | 200.00 |
| 7 | மிலாறு | 80.00 | 80.00 |
| 8 | யூகலிப்டஸ் | 90.00 | 90.00 |
| 9 | பண்ணைக்காடு | 14.00 | 14.00 |
| 10 | முந்திரி | 5.00 | 5.00 |
| 11 | தேக்கு | 8.00 | 8.00 |
| 12 | ஏனைய காடுபடு சிறுபொருள் | 39.00 | 39.00 |
| 13 | இதர வகையில் | 126.26 | 139.26 |
| | | 1,181.91 | 1,199.91 |

திட்டப் பணிகளைச் செயலாக்குதல்.

4.1. 1980-81 ஆம் ஆண்டு வளர்ச்சிப் பணித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| மாநிலத் திட்டம் | 6.90 |
| மண் வளப் பாதுகாப்புத் திட்டம் | 0.65 |
| மத்திய அரசு மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம் முதலியன | 1.52 |
| மொத்தம் | 9.07 |

4.2. 1981-82 ஆம் ஆண்டு வளர்ச்சிப் பணித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| மாநிலத் திட்டங்கள் | 8.25 |
| மண் வளத் திட்டம் | 0.58 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 0.99 |
| மொத்தம் | 9.82 |

4.3. நடப்பு ஆண்டில் வளர்க்கக் கருதப்பட்டுள்ள மொத்த வனத் தோட்டங்களின் பரப்பு 60,980 எக்டேராகும். "காடுவளர்ப்பு" என்பது முதலீடு செய்தும் அதன் மூலம் வருமானத்தைப் பெறுவதற்கும் இடையே நீண்ட கால இடைவெளி கொண்ட நீண்ட காலத் திட்டம் என்றாலும், முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பல திட்டங்கள் தற்போது பலன் தரத் தொடங்கி இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன



காடுபடு பொருள்கள் சார்ந்த தொழில்களுக்கு மூலப்பொருள்கள் வழங்குதல்.

5. தொழில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு மூலப்பொருள்களை காடுகள் வழங்குகின்றன. காகிதம், மா இழைப்பட்டு (ரெயான்) தயாரித்தல் தோல் பதனிடும் பொருள்கள், மரச் சாமான்கள் போன்ற பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு வனத்துறை பின்வரும் முக்கிய மூலப் பொருள்களை வழங்குகின்றன :—

(1) கற்பூர தைல மரங்கள் (Blue gum
(2) தைல மரங்கள் (Eucalyptus grandis)
(3) தைல மரங்கள் (Eucalyptus hyprid)
(4) பட்டை உரித்த மிலாறு மரங்கள் (Debarked Wattle wood)
(5) மிலாறு பட்டைகள் (Wattle)
(6) கருவேல மரங்கள் (Babul)
(7) மூங்கில் மரங்கள்.
(8) நாணல் (Eta Reeds)
(9) மற்றும் பல்வேறு மரவகைகள்.

சந்தன மரங்கள் :

6.1. சந்தன மரங்கள், இயற்கையாக வடாற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளிலும், நீலகிரி, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் கொண்ட ஒவ்வொரு தொடரையும் மூன்று தொகுதிகளாகப் பிரித்து மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்தன மரங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. வெட்டி எடுக்கப்பட்ட மரங்கள் கிடங்குகளுக்குக் கொண்டு வரப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு, ஏலத்தில் விடுவதற்காக வகைப்படுத்தப்படுகின்றன. வனத்துறை, சந்தன மரங்களை ஆண்டிற்கு இருமுறை, வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலும், பெரியார் மாவட்டத்தில் சத்திய மங்கலத்திலும், சேலம் மாவட்டத்தில் அஸ்தம்பட்டியிலும் ஏலத்தில் விடுகிறது.

[1981 ஏப்ரல் 29

**சந்தன மரங்களின் விற்பனை :**

6.2. சந்தன மரங்களின் விற்பனை மூலம் நமது அரசுக்கு கணிசமான வருவாய் கிடைத்து வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கையினால், நமது வருவாயில் பெரும் அளவில் இழப்பு ஏற்பட்டுள்ளதை, பின்வரும் விவரங்களினால் அறியலாம்.

6.3. ஏலங்களின் மூலம் கிடைத்த வருவாய் விவரங்கள் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாக்கும் :—

| வருடம். | விற்பனையின் அளவு (டன்களில்). | கிடைத்த சராசரி விலை டன் ஒன்றுக்கு (ரூபாயில்.) | வருவாய் (லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| டிசம்பர் 1976 .. .. | 750 | 480,42 | 369.31 |
| ஜூலை 1977 .. .. | 750 | 53,968 | 404.76 |
| ஜூலை 1978 .. .. | 514 | 45,7,46 | 235.14 |
| டிசம்பர் 1978 .. .. | 430 | 3[illegible],582 | 148.96 |
| ஜூலை 1979 .. .. | 637 | 37,996 | 242.03 |
| டிசம்பர் 1979 .. .. | 528.75 | 23,103 | 122.15 |
| ஜூலை 1980 .. .. | 701.50 | 20,415 | 142.77 |
| டிசம்பர் 1980 .. .. | 846 | 15,934 | 143.26 |

6.4. 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மத்திய அரசு சந்தன மரங்களை துண்டு மற்றும் அறுக்கப்பட்ட வடிவங்களில் ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்தது. அது முதல் மாநில அரசு பொது ஏலங்களில் விற்பனை செய்யும் சந்தன மரங்களின் விற்பனை விலையை இந்த ஏற்றுமதித் தடை கடுமையாகப் பாதித்துள்ளது. பின்னர், 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மத்திய அரசு 300 டன்கள் எடையுள்ள சந்தன மரங்கள் ஏற்றுமதி



1981 ஏப்ரல் 29]

செய்யப்படலாம் என்று அறிவித்தது. இதன்படி வழங்கப்பட்ட அளவுகள் பின்வருமாறு :—

பம்பாய்—200 டன்கள்.

சென்னை—40 டன்கள்.

பெங்களூர்—30 டன்கள்.

கொச்சி—30 டன்கள்.

சந்தன மர ஏலங்களில் டன் ஒன்றுக்குக் கிடைத்து வந்த சராசரி விலை இந்த தடைகளால் படிப்படியாக குறைந்து வந்துள்ளது.

6.5. மேற்கூறிய உண்மைகளை கருத்திற் கொண்டு இந்த அரசு, மத்திய அரசை, சந்தன மர ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை நீக்குமாறும் அல்லது குறைந்த பட்சம் 1,000 டன்கள் அளவுள்ள சந்தன மரங்களை ஏற்றுமதி செய்யவாவது அனுமதி அளிக்கும்படியும், இப்படிச் செய்வதன் மூலம் இந்த அரசு சந்தன மர ஏலங்களில் இழப்பிற்கு ஆளாகாது என்றும் கேட்டுக்கொண்டது.

**மேலும் கீழ்க்கண்ட கருத்துக்களையும் தெரிவித்தது :—**

(அ) கள்ளக் கடத்தல் செய்யப்பட்ட சந்தன மரங்கள் ஏற்றுமதி ஆகாமல் தடுக்க ஏற்றுமதிக்கு வரும் சந்தன மரங்களின் பிறப்பிடத்தை ஊர்ஜித சான்றிதழ் ஏற்றுமதியாளர்களால் காட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட வேண்டும்,

(ஆ) சந்தன மரத் தைலத்திற்குப் பதிலாக இரசாயன முறையில் உருவாக்கப்படும் சந்தன மரத் தைலத்தின் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனால்தான், தமிழ் நாட்டில் ஏலங்களில் கிடைக்கும் சந்தன மரங்களின் விலையில் மந்த நிலை காணப்படுகிறது.

6.6. ஆனால். நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறாக, மத்திய அரசின் வணிக அமைச்சுத் துறை, 1—4—1980-லிருந்து சந்தன மரங்கள் துண்டு, உருளை மற்றும் அறுக்கப்பட்ட வடிவங்களில் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முழுமையாக தடை விதித்தது. உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த தடை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

6.7. தமிழ்நாட்டில் மட்டிலுமே மிகுந்த அளவில் சந்தன மரங்கள் ஏலங்களில் விற்பனை செய்யப்படுவதால் மத்திய அரசு சந்தன மர ஏற்று மதிக்கு விதித்துள்ள தடையால் தமிழ்நாடு அரசு மட்டுமே பெரும் வருவாய் இழப்பிற்கு உள்ளாகியுள்ளது. 1979-ல் விதிக்கப்பட்ட பகுதித் தடையால் மட்டிலுமே 1979-ல் நடந்த இரண்டு சந்தன மர ஏலங்களில் கிடைத்த விலை 1977-ல் கிடைத்த விலைகளை விட வெகுவாகக் குறைந்துவிட்டது. 1980-ல் விதித்த தடை ஜூலை 1980-ல் நடந்த ஏல விற்பனை விலையை வெகுவாகப் பாதித்துள்ளது. ஜூலை 1980-ல் நடந்த சந்தன மர ஏல விற்பனையில் கிடைத்த சராசரி விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 20,415 என்று குறைந்து, டிசம்பர் 1980-ல் நடந்த சந்தன மர ஏல விற்பனையில் சராசரி விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 16,934 என்று மேலும் குறைந்து விட்டது. மாநில அரசுக்கு இதனால் வருடம் ஒன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய்கள் இழப்பு ஏற்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அரசு மக்களுக்கு பல நல்வாழ்வு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டுள்ள இந்த நேரத்தில், இந்த மாபெரும் வருவாய் இழப்பு தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே, இது குறித்து தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உயர்மட்ட நிலையில் தொடர்பு கொண்டு உரிய வேண்டுகோள் விடுத்துள்ளது. மத்திய அரசின் இது குறித்த ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

### சந்தன மர எண்ணெய் ஆலை நிறுவுதல்.

7. தொடக்கத்தில் 100 டன்கள் சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யும் திறன் உள்ள நான்கு சிறிய அளவு சந்தன எண்ணெய் ஆலைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருந்தது. அரசால் அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு, இந்த திட்டத்தின் அடிப்படையில் 100 டன்கள் அளவுள்ள சிறிய சந்தன மர எண்ணெய் ஆலை நிறுவுவதின் பொருளாதாரத்தை ஆய்வு செய்து, 49.99 லட்சம் ரூபாய் செலவில் அதிக அளவு இலாபம் தரக்கூடிய 400 டன்கள் அளவு சந்தன மர எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சந்தன மர எண்ணெய் ஆலை நிறுவ பரிந்துரை செய்துள்ளது. இதன் தொடர்பாக துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.





### கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களும் தொழிற்சாலைகளும்.

8.1. இதுவரை வளர்க்கப்பட்ட ரப்பர் தோட்டங்களின் பரப்பு 4,775 எக்டேர் ஆகும். இதில் 1,655 எக்டேர் பரப்பிலிருந்து தற்போது பால் எடுக்கப்படுகிறது. கடந்த ஆண்டிற்கு 1979-80 ஆம் ஆண்டில் அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ரப்பர் பொருட்கள் விற்பனை மூலம் கிடைத்த வருவாய் ரூபாய் 131 லட்சம் ஆகும். 1980-81 ஆம் ஆண்டில் (1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரை) இது 176 லட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் வருவாய் கிட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

8.2. பெருஞ்சாணியில் உள்ள மணலோடை ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பாலை ரப்பர் ஷீட்டுகளாக்கும் தொழிற்சாலை (Rubber Sheeting Factory) 22—9—1980-ம் நாளில் தொடங்கப் பெற்றது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரை 1,55,580 கிலோ எடையுள்ள பல்வேறு ரப்பர் பொருட்கள், இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன.

8.3. கன்னியாகுமரி மேற்கு ரப்பர் கோட்டப் பிரிவில் மயிலாறு கோட்டத்தில் 'கிரம்ப் ரப்பர்' (Crumb Rubber) தொழிற்சாலை ஒன்றினை நிறுவ 1980-81 ஆம் ஆண்டில் 30.21 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொழிற்சாலையினை கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

8.4. 1980-81 ஆம் ஆண்டில் மேலும் ஒரு "ஆல் பா லாவல் லாடக்ஸ் கான்சென்டிரேட்டர்" (Alfa Lavel Latex concentrator) என்னும் ரப்பர் பாலைக் கெட்டிப்படுத்துகின்ற இயந்திரம் ஒன்று ஸ்விடன் நாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.5. அரசு ரப்பர் தோட்டங்களில் இதுவரையில் தொழிலாளர்களுக் கென 887 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 392 வீடுகள் கட்டப் பட்டு வருகின்றன. தொழிலாளர்கள் நல நடவடிக்கைகளாக மருத்துவ மனை மருந்தகங்கள், பள்ளிகள், குழந்தை காப்பகங்கள் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சில கோட்டங்களில், தொழிலாளர் களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் வகையில், போதிய பணியாளர் களுடன், தேவையான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

8.6. 1981-82 ஆம் ஆண்டில் அரசு ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென மணலோடை கோட்டத்தில் 30 வீடுகளும், சித்தாறு கோட்டத்தில் 28 வீடுகளும் கட்டிக் கொடுக்கவும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு ஏனைய பல்வேறு பணிகளைச் செய்யவும் கருதப்பட்டுள்ளது. காளிகேசம், பரளியாறு கோட்டங்களிலுள்ள தொழிலாளர் குடியிருப்புக்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8.7. 1980-81 ஆம் ஆண்டு முடிய இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய 237 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1981-82-ல் மேலும் 13 குடும்பங்கள் ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

8.8. 1981-82 ஆம் ஆண்டில் ரப்பர் தோட்ட அபிவிருத்திக்காக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|
| 1. மாநில (ஐந்தாண்டுத் திட்டம்) | 19.13 |
| 2. மேற்கு மலை தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டம் | 44.00 |
| 3. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள் மறுவாழ்வு அளிப்பு திட்டத்தின் கீழ் | 34.65 |
| 4. கிரம்ப் ரப்பர் தொழிற்சாலை | 20.23 |

சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்.

9.1. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தைச் செயலாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமத் தரிசு நிலங்கள், ஊராட்சி நிலங்கள், காடுகளற்ற மலைகள், ஏரி, எதிர்வாய்கள், கால்வாய்கள், சாலைகள், ஆற்றங்கரைகள் நெடுகக் காடுகள் வளர்த்தல், நாற்றுகளை வழங்குதல் மூலமும், தொழில் நுட்ப உத்தியை வழங்குவதின் மூலமும் தனியார் நிலங்களில் மரங்களை வளர்க்க ஊக்குவித்தல் ஆகியவை அடங்கும். கிராமங்களில் வளர்க்கும் திட்டம் 1960 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, இதுவரையில் சுமார் 1,47,500 எக்டேர் நிலப்பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. மரங்களை வளர்ப்பதற்கு எங்கெல்லாம்



ஊராட்சி நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அம் மரங்களிலிருந்து கிட்டும் வருவாயில் 50 சதவீதம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு ஒரு செயலூக்கமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வளர்க்கப்படும் மரங்களில் முக்கியமானவை கருவேல மரம், தைலமரம், ஓதியமரம், பரம்பை, முந்திரி முதலியவையாகும். இம்மரங்கள் விறகு, வெட்டுமரம், பசுந்தழை உரம், கால்நடை தீவனம் முதலியவற்றைப் பொறுத்தமட்டில் கிராம மக்களின் தேவையை நிறைவு செய்கின்றன. இவை, மண்வளத்தையும், மண்ணின் ஈரத் தன்மையையும் பாதுகாத்து உடல் நலத்திற்கு வளங்கூட்டும் சுற்றுப்புற சுகாதார சூழ்நிலைகளைப் பேணி வரவும் உதவி புரிகின்றன. மேலும் இத்திட்டம் ஒரு கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டமாகவும் செயல்படுத்தப்படுகிறது. செடி நடுவது போன்ற பணிகளில் ஆங்காங்கே உள்ள கிராமப்புறத்து மக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதன் மூலம், இது ஒரு சமுதாய வளர்ச்சி திட்டமாகவும் செயல்படுத்தப்படுகிறது.

9.2. 1981-82-ல் ரூ. 136.75 லட்சம் செலவில் 22,820 எக்டேர் பரப்பில் காடுகளும், 737 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை மரங்களும், 15 எக்டேர் பரப்பில் சாலையோர பூங்காக்களும் அமைக்கவும், பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காக 9 லட்சம் மரக்கன்றுகளும், 840 எக்டேர் பரப்பில் ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரையோரக் காடுகளும் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

எரிபொருள் மர வளர்ப்புத் திட்டம் (Centrally Sponsored Scheme)

10. கிராம எரிபொருள் மரவளர்ப்புத் திட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு 5 கூடுதல் வன வளர்ச்சிக் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

(1) அரியலூர்.
(2) செங்கல்பட்டு.
(3) கிருஷ்ணகிரி.
(4) பழனி.
(5) திருநெல்வேலி.

இத் திட்டம் மத்திய அரசு மானியத்தைப் பெறும் திட்டமாகும். 1980-81-ல் இத்திட்டத்தின் கீழ் ரூ. 17.30 லட்சம் செலவில் 16,650 எக்டேர் பரப்பில் மரம் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்து 1981-82-லும் நடத்தப்படும், மேற்கூறிய ஐந்து வன வளர்ச்சி கோட்டங்கள் சென்ற ஆண்டு நிறுவிய 10 வன வளர்ச்சிக் கோட்டங்களுக்கு கூடுதலானதாகும்.

[1981 ஏப்ரல் 29

### SIDA திட்டம்.

11. சமூகநல காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சுவீடன் நாட்டு உதவியுடன் ஒரு தனி திட்டம் செயல்பட இருக்கிறது. இதற்கு 10 ஆண்டு காலத்தில் சுமார் ரூ. 108 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் கட்டமாக நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 45 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு நிதியுதவி, பெறுவதற்கான செயற்குறிப்பு சுவீடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் பரிசீலனையில் இப்போதுள்ளது. இத்திட்டம் 3.58 லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் முக்கியமாக விறகு மரங்களை வளர்க்கவும், 13,125 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆற்றங்கரை கால்வாய், சாலையோரம், ரயில்வே பாதைகளின் ஓரம் ஆகியவற்றில் மரங்களை வளர்க்கவும், வகை செய்கிறது. இத்துடன் தனியார் நிலங்களில் 10 ஆண்டுக்காலத்தில் மரங்களை வளர்ப்பதற்காக பொது மக்களுக்குச் சலுகை விலை விதங்களில் 1,050 லட்சம் நாற்றுகளை வழங்கவும் கருதப்பட்டுள்ளது.

### கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.

12.1. கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 10,000 என்ற விதத்தில் நாற்றுப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்குரிய செலவு முழுவதும் கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்ட நிதிகளிலிருந்து செய்யப்படுகிறது. இந்த நாற்றுப் பண்ணையில் வளர்க்கப்படும் நாற்றுகளை வளர்ச்சி வட்டார அலுவலர்களின் வழியாக உழவர்களுக்கு வனத்துறை வழங்கும்.

### வறட்சிப் பாங்கான பகுதி திட்டம்.

13. மைய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்துறையால் செயல்படுத்தப்படும் மிக முக்கியமான திட்டங்களில் காடு வளர்ப்பும், மேய்ச்சல் பகுதிகளை உருவாக்குதலும் அடங்கும். 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 72.54 லட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 379 எக்டேர் பரப்பளவில் மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல், 104 கிலோ மீட்டர் தொலைவிற்கு நிழல் தரும் மரங்களை வளர்த்தல் ஆகியவற்றோடு 5,379 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த இரு மாவட்டங்களில் திட்டத்தைச் செயல்



1981 ஏப்ரல் 29]

படுத்தும் பொருட்டு அவசியமான பணியாளர்களை கூடுதலாக நியமிக்க அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவென்றே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1981-82 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

### 1981-82 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளையும் வேலைத் திட்டங்களையும் செயற்படுத்தல். (State Plan Scheme).

வனத் துறையால் நிறைவேற்றப்பட்ட இத்திட்டங்களின் விரிவான விளக்கங்கள் வருமாறு :—

(1980-81 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டப் பணிகளுக்கான செலவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.)

### வன செயல் திட்டம்

14.1. வன செயல் திட்டமே (Working Plan) வன நிர்வாகத்தின் அடிப்படை எனலாம். ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு வனசெயல் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அவை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகின்றன. வனக்கோட்டங்களில் காடுகளை மீண்டும் வளர்ப்பது, காடுபடு பொருட்களைச் சேகரிப்பது, நிர்வாகத்தின் ஏனைய கூறுகள் ஆகியன குறித்துத் திட்டவட்டமான வரையறைகளை இத்திட்டம் விதிக்கிறது. இத்திட்டம் வன நிர்வாக அமைப்பை வலுப்படுத்தவும் நவீன முறையில் நடைமுறைப் பணித்திட்டங்களை வகுக்கத் தேவையான கருவிகளை வாங்கவும் வகை செய்கிறது.

14.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 0-30 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 0.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் சந்தன மரங்களைக் கணக்கெடுப்பது, மாதிரிப் பாத்திகளில் சந்தன மரக் கன்றுகளை வைத்து வளர்ப்பது போன்ற பணிகளுக்காக இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

### வன இயல் ஆய்வும் கல்வியும்.

15.1. காடு வளர்ப்புக் கலையில் பல்வேறு பொருள் குறித்து அது தொடர்பான ஏனைய பொருள்கள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்ளும் வெவ்வேறு தட்ப வெட்ப நிலைகளில், வெவ்வேறு மண்ணில், மீண்டும்

காடுகள் வளர்ப்பதற்கு உகந்த சிறந்த இன மரங்களையும் அவற்றை வளர்க்கத் தகுந்த உத்திகளையும் கண்டறிவதற்கான செயல் முறைச் சோதனைகளை நடத்தியும் வனத்துறையின் ஆராய்ச்சித் திட்டத்தை விரிவு படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

15.2. 1980-81 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூ. 8.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது :—

(1) வித்துக்களை வழங்கு நிலையங்களைப் பராமரித்தல் வித்து வழங்கு நிலையங்களை வித்து உற்பத்தி பகுதிகளாக மாற்றியமைத்தல்.

(2) பல்வகை வித்துக்களைச் சேகரித்தல், தூய்மைப் படுத்தல், தரம் பிரித்தல், அவற்றை வழங்குதல்.

(3) பால் இன்னது என இனங்காணமுடியாத வித்துடைய பழ மரங்களையும் Clonal Orchades நுண்ணுயிர் வங்கிகளையும் (Germiplasm Banks). பராமரித்து வருதல்.

(4) பல்வேறு தாவர இனங்கள் குறித்து, பல்வகைப்பட்ட மரபியல் சோதனைகளையும், பதியன்முறை வளர்ப்பு (Vegetative Propagation) சோதனைகளையும் நடத்தல்.

(5) மரபியல் சோதனை ஆய்வுக் கூடங்களைப் பராமரித்து வருதல்.

15.3. 1981-82 ஆம் ஆண்டில் இத் திட்டத்தைச் செயல் படுத்த ரூ. 14-50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வன வள ஆய்வு (Forest Resources Survey).

16.1. காடுகளிலுள்ள இயற்கை வள ஆதாரங்களைப் பயனுள்ள அறிவார்ந்த முறையில் திட்டமிட்டு பயன்படுத்தும் பொருட்டு விரிவான பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். வளர்ந்து வரும் மரங்களைக் குறித்த, மேலும் நம்பத்தக்க வகையிலான பட்டியலைப் பெறுவதும் இதன் நோக்கமாகும்.

16.2. 1980-81 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் ரூ. 0-32 லட்சம் செலவில் கணக்கெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1981-82-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 0-35 லட்சம் செலவிடக் கருதப்



பட்டுள்ளது. 510 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், காடுகளில் வளர்ந்துள்ள மரங்களின் ஒரு பகுதியைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

### முந்திரித் தோட்டங்கள்.

17.1. ஏற்ற இடங்களில் முந்திரி மரங்களை வளர்ப்பதும், தற்போதைய முந்திரித் தோட்டங்களில் களை எடுத்தல், நிலத்தைப் பயன்படுத்தல், உரமிடுதல், பூச்சிக் கொல்லி மருந்து தெளித்தல் முதலிய பணிகளை முனைப்பாக மேற்கொள்வதின் மூலம் விளைச்சலைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

17.2. 1980-81-ல் ரூ. 10-25 லட்சம் செலவில் 250 எக்டேர் பரப்பில் முந்திரி தோட்டங்கள் வளர்க்கும் பணியும் 2,500 எக்டேரில் பண்படுத்தும் பணிகளும் மேற் கொள்ளப்பட்டது. 1981-82-ல் இதே பணி ரூ. 27-99 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

### மரக்கூழ் தயாரிப்பதற்கான மரங்களை வளர்த்தல்.

18.1. மரக்கூழை அடிப்படையாகக் கொண்ட காகிதம், ரயான் போன்ற தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை வழங்குவதற்காக, விரைவில் வளரும் மரவகைகளை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்க மாகும்.

18.2. 1980-81-ல் இத்திட்டத்தின் கீழ் விரைவில் வளரும் மரங்களாகிய நீலகிரி தைல மரம், மூங்கில் மரம் ஆகியவற்றை வளர்க்கும் பணி 2,460 எக்டேர் பரப்பில் ரூ. 31-02 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1981-82-ல், 3,000 எக்டேர் பரப்பில் ரூ. 36-03 லட்சம் செலவில் மரம் வளர்ப்பதன் மூலம் இத்திட்டத்தை விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது.

### தொழில்துறை, வணிகத்துறைகளுக்கு வேண்டிய மரங்களை வளர்த்தல் தேக்கு ஏனைய திண் மரங்கள்.

19. 1980-81-ல் 456 எக்டேர் பரப்பில் ரூ. 5.00 லட்சம் செலவில் வளர்ப்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82-ல் இத் திட்டத்தின் கீழ் 500 எக்டேர் பரப்பில் மரங்களை ரூ. 6.31 லட்சம் செலவில் வளர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ளது.

## மென்மரம்.

20.1 தீப்பெட்டி தயாரிக்கும் தொழில், தமிழ்நாட்டில் பெருமளவில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் மிக முக்கியமான ஒரு சிறு தொழிலாகும். இத்தொழிலுக்கு வேண்டிய மரங்களைப் பெறுவதற்கு இம்மாநிலம் ஏனைய மாநிலங்களை நம்பியுள்ளது. எனவே, தீக்குச்சி தயாரிக்கத் தேவையான மர வகைகளை, அவை வளர்வதற்கேற்ற தட்பவெட்ப நிலைமைகளுள்ள இடங்களில் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. அத்தகைய இடம் மிகக் குறைந்த பரப்பளவிலேயே உள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 132 எக்டேர் பரப்பில் ரூ. 0.61 லட்சம் செலவில் மென் மரங்கள் வளர்க்கப்பட்டன.

20.2. 1980-81 ஆம் ஆண்டில், 110 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மரங்கள் வளர்ப்பதற்காக ரூ. 0.69 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82-ம் ஆண்டில் ரூ. 1.66 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் தஞ்சாவூர், கன்னியாகுமரி, தென் ஆற்காடு மாவட்டங்களில் 205 எக்டேர் பரப்பளவில் மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. 1981-82-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.01 லட்சம் அடையாள நிதி ஒதுக்கம் இதற்காக செய்யப்பட்டுள்ளது.

## மிலாறு மரத்தோட்டங்கள்.

21.1. தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்குவதற்காக, நீலகிரியிலும், பழனி மலைத் தோட்டக் காடுகளிலும் மிலாறு மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தோல் பதனிடுவதற்கு தேவைப்படும் பொருளை எடுப்பதற்கு மிலாறு மரப்பட்டையும் ரேயான் கூழ் தயாரிப்பதற்கு மிலாறு மரமும் பயன்படுத்தப்படுகிறது.

21.2. 1980-81 ஆம் ஆண்டில், 1,000 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மரங்கள் வளர்ப்பதற்காக ரூ. 8-39 லட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், நீலகிரி, மதுரை மாவட்டங்களில் (Coppice Regeneration) மூலமாக எக்டேர் பகுதியிலும், புதிதாக மறு உற்பத்தி செய்தல் மூலமாக சுமார் 300 எக்டேர் பகுதியிலும் இத்திட்டம் ரூ. 4-59 லட்சம் செலவில் மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. (Coppice Regeneration) மூலமாக 1,000 உற்பத்தி செய்வதின் காரணமாக உற்பத்தி செலவு கடந்த ஆண்டை விட குறைவாக செலவு ஆகும்.



## விறகு மரக் காடுகள்.

22.1. மக்களின் தேவையை நிறைவு செய்வதற்காக, மாநகரங்கள், நகரங்களை அடுத்துள்ள படுகை நில வளர்ப் பகுதிகளில் விறகு மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1980-81 ஆம் ஆண்டில் 5,000 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில், மரங்கள் வளர்ப்பதற்காக ரூ. 58.91 லட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

## சந்தன மரத் தோட்டங்கள்.

22.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 26.48 லட்சம் செலவில் 245 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மரங்கள் வளர்ப்பதற்கும் 800 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் ரூ. 67.16 லட்சம் செலவில் மரங்கள் வளர்க்க கருதப்பட்டுள்ளது.

23. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 26.48 லட்சம் செலவில் 245 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மரங்கள் வளர்ப்பதற்கும் 800 எக்டேர் பரப்பளவு பகுதியில் மரங்களைப் பேணுவதற்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இதில் திருப்பத்தூரில் சந்தன மரக்கிடங்கு கட்டுவதும் அடங்கும். 1981-82-ல் ரூ. 13-67 லட்சத்தில் சுமார் 245 எக்டேர் பரப்பளவில் சந்தன மரம் வளர்த்தலும், 620 எக்டேரில் மரங்களை பேணி வளர்க்கும் பணியும் நடைபெறும்.

## கலப்பினத் தோட்டங்கள்.

24.1. தரிசு நிலங்களிலும், ஊராட்சி நிலங்களிலும் கலப்பின தோட்டங்கள் வளர்க்கும் திட்டம், சமுதாயக் காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் வரும் திட்டங்களில் ஒன்றாகும். விறகு, சிறு வெட்டு மரங்கள் முதலியவற்றிற்கு உள்ளூரில் ஏற்படும் தேவைகளை நிறைவு செய்வதற்காக அரசுத் தரிசு நிலங்களிலும், ஊராட்சி நிலங்களிலும் கருவேல மரம், யூகலிப்டஸ் மரம், ஒதிய மரம், பரம்பை ஆகிய பயனுள்ள மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்தகைய காடுகள் மண்வளம், சாம முதலியவற்றைக் காப்பதுடன் உயிரின வாழ்க்கைக்கு ஆதாரமான இயற்கைச் சூழ்நிலையினைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

24.2. 1980-81 ஆம் ஆண்டில் 9,600 எக்டேர் பரப்புள்ள பகுதியில் மரங்கள் நடுவதற்காக ரூ. 74.61 லட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 9,600 எக்டேர் பரப்புள்ள பகுதியில் மரங்கள் வளர்ப்பதற்கும் 250 கி.மீ. தூரத்திற்கு நிழல் தரும் மரங்கள் வளர்ப்பதற்கும் ரூ. 79.62 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு விற்பதற்காக 5 லட்சம் மரக் கன்றுகளும் வளர்க்கப்படவுள்ளன.

## புயற்தடுப்பு மரம் வளர்ப்புத் திட்டம்.

25.1. தமிழ்நாட்டின் கடற்கரையோரங்கள் நெடுகிலும் புயற் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் திட்டம், மத்திய அரசின் இசைவு பெற்ற ஒரு திட்டமாகும். புயற்காற்றை தடுக்கும் அரணாக அமைவதற்காகவும், புயலால் விளையும் சேதங்களைக் குறைக்கவும், வேளாண்மையை மேம்படுத்தவும் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் திருநெல்வேலி ஆகிய கடற்கரையோர மாவட்டங்களில் வருவாய்த்துறை வனத்துறை நிலங்களில் மரங்களை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

25.2. 1980-81 ஆம் ஆண்டில், 900 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மரங்கள் வளர்ப்பதற்காக ரூ. 12.82 லட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இடம் கிடைக்காத காரணத்தால் 500 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மட்டுமே ரூ. 6.08 லட்சம் செலவில் மரங்கள் வளர்ப்பதன் மூலம் இத்திட்டம் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## இருப்புப் பாதை நெடுக வனங்களை வளர்க்கும் திட்டம்.

26.1. இருப்புப் பாதைகள் நெடுக மரங்களை வளர்க்கும் திட்டம், சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டிற்குள் அமைந்துள்ள இருப்புப் பாதைகள் நெடுகிலும் மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

26.2. 1980-81 ஆம் ஆண்டில், 3,000 எக்டேர் நிலப்பரப்பில் மரங்கள் வளர்ப்பதன் மூலம் ரூ. 17.40 லட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 12.51 லட்சம் செலவில் சுமார் 2,000 எக்டேர் நிலப்பரப்பில் மரங்கள் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## அழிந்த காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கான திட்டம்.

27.1. புதர்க்காடுகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் விறகு மரங்கள், இலை வெட்டு மரங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்யவும் அழிந்த காடுகள் அனைத்திலும் மரங்களை மீண்டும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

27.2. 1980-81 ஆம் ஆண்டில் 3,100 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்ப்பதன் மூலம் இத்திட்டம் ரூ. 38.03 லட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 39.80 லட்சம்



செலவில் 3,000 எக்டேர் நிலப்பரப்பில் தோட்டங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

## வெட்டுமரப் பணிகளும், வனப்பயன்பாடும்.

28.1. வெட்டுமரங்கள், பிற காடுபடு பொருட்களை போக்கு வரத்துச் செய்வதில் பொருத்தப்பட்ட வாடிக்கையாளருக்கு வகை செய்வதும், மரங்களைத் துண்டாடும் பணியில் மேம்படுத்தப்பட்ட உத்திகளைக் கையாளுவதும், காடுகளின் உட்பகுதியில் வனவளர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

28.2. 1980-81 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ. 25.41 லட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதில் கோட்டைமலையம், அரூர், தர்மபுரி ஆகிய இடங்களில் எடை இயந்திரங்கள் அமைத்தலும், பணியாளர் குடியிருப்புகள் கட்டுதலும் அடங்கும். 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 2.48 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. எடை இயந்திரங்கள் Weigh Bridges நிறுவியதால் சென்ற ஆண்டு கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டது.

## காடுபடு சிறுபொருள்.

29.1. புளி, கடுக்காய், சீகைக்காய் போன்ற சில மதிப்புள்ள நறுமணப் பொருட்களின் மரங்களைப் பெருமளவில் வளர்ப்பதன் மூலம் வருவாயைப் பெருக்க சாத்தியம் உள்ளதால், இத்தகைய காடுபடு பொருட்களைக் கொடுக்கும் மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

29.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 15.94 லட்சம் செலவில் 1,144 எக்டேர் நிலப்பரப்பில் இத்தகைய மரங்களை வளர்ப்பதன் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 15.22 லட்சம் செலவில், 1300 எக்டேர் நிலப்பரப்பில் இத்தகைய மரங்களை வளர்க்கவும், 600 எக்டேர் நிலப்பரப்பில் தீவிர வளர்ப்புப் பணியை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது.

## காடுகள் வளர்ப்புத் துறையில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பணித்திட்டத்தின் கீழான வேலையைச் செயல்படுத்துவதற்கான திட்டம்.

30.1. "காடு வளர்ப்பு" என்னும் தலைப்பின் கீழ், பழங்குடியினர் நலன் குறித்த இத்திட்டம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டங்களுள் ஒன்றாகும். காட்டுப் பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு

வேலை வாய்ப்பு, கல்வி, வீட்டு வசதி பிற வசதிகளுக்கு வகை செய்வதன் மூலம் அவர்களின் பொருளாதார வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

30.2. 1980-81 ஆம் ஆண்டில் (1) கல்வராயன் குன்றில், 200 எக்டேரில் மூங்கில், சில்வர் ஓக் ஆகிய மரங்கள் வளர்த்தல். (2) மலைப் பகுதிகளில் சாலைகள் அமைத்தல் (3) ஆசிரியர்களுக்கு குடியிருப்புக்கள், மாணவர் விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல் முதலிய பணிகளுக்காக இத்திட்டம் ரூ. 16.82 லட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 27.52 லட்சம் செலவில், (1) 850 எக்டேர் நிலப் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் (2) மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டுதல், மாணவர் விடுதிகளுக்கு மேம்பாடு செய்தல் முதலிய பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

## வனங்கள் பற்றிய விளம்பரத் திட்டம்.

31. பொதுமக்களின் நலனுக்கும் காடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதையும், காடுகள் வன விலங்குகளையும் காக்க வேண்டியதன் அவசியத்தையும், ஒருங்கமைந்த பிரச்சாரம் செய்திப் பரப்பு மூலமாகப் பொதுமக்கள் உணரும்படிச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 1.61 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.11 லட்சம் செலவில் திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது. இதில், வனத்துறை சின்கோனாத் துறை பொருட்களை விற்பதற்காகவும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை விற்பதற்காகவும் சென்னையில் விற்பனை நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கலும் அடங்கும்.

## காடுகளைத் தொகுத்தல்.

32.1. முன்னாள் ஜமீன் காடுகளை நில அளவை செய்து, இப்பகுதிகளை தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் கீழ் ஒதுக்கக் காடுகளாக அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



32.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.30 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 2.00 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

## வனப் பாதுகாப்பு.

33.1. தீ விபத்திலிருந்தும் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவது போன்ற ஏனைய இடையூறுகளிலிருந்தும் வனங்களைப் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தீத்தடுப்புப் பணிகள் பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் வனச் செல்வத்தையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக்குதல், பாதுகாப்புப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி போன்ற அடிப்படை வசதிகளை வழங்குதல் ஆகியவற்றுக்கு இத்திட்டம் வகை செய்கிறது.

33.2. திருடுகளிலிருந்து வனங்களைப் பாதுகாத்தல் என்பது வனத் துறைக்கு எப்போதுமே ஒரு பிரச்சினையாகும். அதுவும் மற்ற மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படும் காடுபடு பொருட்கள் இம்மாநிலத்திற்குள் வரும்போது அவைகள் புதிய பிரச்னைகளை, அதாவது எந்த மாநிலத்திலிருந்து கடத்தி வரப்பட்டது என்பதை நிரூபித்தல் போன்றவைகளைத் தோற்றுவிக்கின்றன. சென்னை முதல்தர துறைமுகத்துடன் கூடிய தலைநகரமாக இருப்பதாலும், ஆந்திர மாநில எல்லைக்கு அருகாமையில் உள்ளதாலும், விலை மதிப்புள்ள மரவகைகளான சந்தனம், செம்மரம் போன்றவை கள்ளத்தனமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட சென்னைக்கு வருகின்றன. எனவே, சென்னையில் ஒரு வனப் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டது.

33.3. இது செயல்பட ஆரம்பித்த முதலாண்டில், இப்படை 354 கடத்தல் வழக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறது. அவைகளில் 27 வழக்குகள் சந்தன மரத்தையும் மற்ற நான்கு வழக்குகள் விலை உயர்ந்த மரத்தையும் பற்றியதாகும். இவ்வழக்குகளில், ரூ. 3,76,000 பெறுமானமுள்ள 8,651.6 கிலோ சந்தன மரம் கைப்பற்றப்பட்டது. 1979-80 இல் இணக்கக் கட்டணமாக ரூ. 1,03,755 வசூலிக்கப்பட்டது.

33.4. 1980-81 இல் சென்னையிலுள்ள வனப் பாதுகாப்புப் படையால் 333 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் 22 வழக்குகள் சந்தன மரம் பற்றியதாகும். ரூ. 5,48,845 பெறுமானமுள்ள 13,730 கிலோ சந்தன மரம் கைப்பற்றப்பட்டது. இணக்கக் கட்டணமாக ரூ. 1,1[illegible],030 வசூலிக்கப்பட்டது.

33.5. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 4.59 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 4.53 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். வெட்டு மரம் எடுத்துச் செல்ல விதிகளை செம்மையாகச் செயல்படுத்துவதற்கும் சந்தன மரம் வெட்டு மரம், முதலிய விலை மதிப்புமிக்க வனப் பொருட்களைக் கள்ளத்தனமாகக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்கும் புதிய சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்படும்.

### தொழிலாளருக்கும், பணியாளருக்கும் வசதிகள்.

34.1. வனப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், குறிப்பாக அடிப்படை வசதிகள் குறைவாக உள்ள வனத்தின் உட்பகுதியில் வசதிகளைச் செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிலாளருக்குக் குடியிருப்புகளும் காலனிகளும் கட்டுதல், குடிநீர் வழங்கல், பொழுதுபோக்கு வசதிகள், மருத்துவ வசதிகள், இன்றியமையாத ஏனைய வசதிகள் அளிப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

34.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 10.64 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 6.00 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

### இயற்கைப் பாதுகாப்பு :

**35.1.** வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், மரங்களை வளர்ப்பதிலும், வனவிலங்கு உய்விடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த உய்விடங்கள் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்வனவாகும். எனவே, மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டத்தில், வனவிலங்கு உய்விடங்களுக்கு உரிய முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

35.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 30.01 லட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 30.01 லட்சம் செலவில் (1) உய்விடங்களில் விலங்குகள் வசிக்குமிடங்களையும் நீர்வாழ் பறவைகள் வசிக்குமிடங்களையும் சீர்படுத்துதல், (2) பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல், (3) சாலைகளையும், கட்டிடங்களையும் மேம்படுத்துதல், (4) நூலகப் புத்தகங்கள், பத்திரிகைகள் ஏனைய வெளியீட்டுப் பொருள்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு வகை செய்யக் கருதப்படுகிறது.



### முந்திரிப் பதியப் பெருக்கம் :

36.1. குறைந்த விளைச்சல் தரும் மாவகைகளின் கன்றுகளைக் கொண்டு, புதிதாக நடப்பட்ட முந்திரித் தோட்டங்களில் பதியப் பெருக்க உத்திகளைப் பின்பற்றி மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறந்த முந்திரி மரங்களின் கிளைகளை ஒட்டுக்கல் அல்லது பதியம் வைத்தல் முறைக்குத் தளிர்கள் பயன்படுத்தப்படும். இவற்றின் விளைச்சல், தரம் என்னவாயிருப்பினும், நல்ல வகை மரங்களை உருவாக்க இதனால் இயலும்.

36.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 0.50 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 0.25 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

### சாலைப் போக்குவரத்து :

37. வனச்சாலைப் போக்குவரத்துத் திட்டம், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஒரு திட்டமாகும். புதிய சாலைகளைப் போடுவதும், வனங்களை மேம்படுத்தவும், வெட்டப்பட்ட மரங்களை எளிதில் எடுத்துச் செல்லத்தக்க வகையில் வனத்திற்குள் ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். மலைத் தோட்டப் பணிகளை மேற்கொள்ள சாலைகள் அவசியமானதாகும். 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 25.00 லட்சம் செலவில் 17.50 கி.மீ. நீளத்திற்குப் புதிய சாலைகள் போடப்பட்டு வருகின்றன. தற்போது திருச்சிராப்பள்ளி வனப் பொறியாளரின் தலைமையில் மாநிலம் முழுவதற்கும் ஒரே ஒரு பொறியியல் கோட்டம் உள்ளது. புதிய பணிகளையும், முக்கியமான சாலைகளைப் பராமரிக்கும் பணியையும் ஒரு வனப் பொறியாளரால் கவனிக்க இயலாதாகையால் 1981-82 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு இரண்டாவது பொறியியல் கோட்டத்தை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இக்கோட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருமூர்த்தி மலையிலுள்ள மேல் ஆளியாற்றிலிருந்தும், கல் மலையிலிருந்து ஈரோடு வரை புதிய சாலைகள் போடும் பணியையும், தற்போதுள்ள சில சாலைகளைப் பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளும். 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 48.03 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

### கட்டிடங்களைக் கட்டும் திட்டம் :

38.1. வன மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் உள்ள கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டம் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஒரு திட்டமாகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்காக

ரூ. 40.00 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. இத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

38.2. 1980-81 ஆம் ஆண்டு காலத்தில் ரூ. 35.00 லட்சம் செலவில் வனப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் எல்லா நிலையிலுள்ள பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ. 28.42 லட்சம் செலவில் புதிய திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்/மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் :**

**களக்காட்டில் சிங்கவால் குரங்கிற்காக உய்விடம் அமைத்தல் :**

39.1. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு உய்விடத்தில் சிங்கவால் குரங்குகளைப் பாதுகாப்பதும், அழிந்து வரும் நிலையில் உள்ள இந்த இனம் குறித்து அறிவியல் முறையில் விரிவான ஆய்வு மேற்கொள்வதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

39.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 5.01 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 10.73 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**கோடிக்கரை வனவிலங்கு உய்விடத்தை மேம்படுத்துதல்**

40.1. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரை உய்விடம், ஓரளவே எஞ்சியுள்ள வெளி மான் (Black buck) இனம் வளர்ந்து வரும் பகுதியாகும். அவ்வினத்தைப் பாதுகாத்தல், செவ்விய முறையில் பாதுகாப்பு வசதிகளைச் செய்தல், விரிவான அறிவியல் ஆய்வு ஆகியவை முக்கிய திட்டப் பணிகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

40.2. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.06 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.23 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**முதுமலை வன விலங்குகள் உய்விடத்தை மேம்படுத்துதல் :**

41. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 0.01 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை முடிப்பதற்காக 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 0.01 லட்சம் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



**முதலைகளை (மக்கர் வகை) நீர்த் தேக்கத்தில் வளர்த்தல் :**

42. சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் வளர்த்து வைத்துள்ள (மக்கர் வகை) முதலைக் குட்டிகளை வளர்க்கும் திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.01 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.01 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம் :**

(Western Ghats Development Programme)

43.1. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். மேற்கு மலைத் தொடரில் இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, அப்பகுதியில் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் விவரங்கள் வருமாறு :—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்புத் தோட்டம் வளர்த்தல் :**

43.2. கிராம்பு மதிப்புமிக்க வணிகப் பயிராகும். இதனை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு மிக நன்றாக உள்ளது. இத்தோட்டங்களில் உரிய முறையில் பயிர் செய்து கவனமாகப் பாதுகாத்தால் சிறந்த பலன் கிடைக்கும். வேளாண்மை குறித்த தேசியக் குழு, கிராம்பு பயிரிடுதலை விரிவுபடுத்தி ஆராய்ச்சிப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்புத் தோட்டங்களை வளர்ப்பதற்கு வாய்ப்பு வளங்கள் உள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 6.98 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 8.02 லட்சம் செலவில் திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**மரக் கூழ் தயாரிப்பதற்கான மரங்களை வளர்த்தல் :**

43.3. மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு அவசியமான மூலப் பொருள்களின் தேவை அதிகரித்து வருகிறது. இதனை ஈடு செய்ய கற்பூர மரம், மிலாறு போன்ற மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 10.08 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் (கொடைக்கானல்) 500 எக்டேர் பரப்பில் தோட்டம் வளர்ப்பதற்கான திட்டத்தை ரூ. 6.26 லட்சம் செலவில் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**தேயிலைத் தோட்டங்களை வளர்த்தல் :**

43.4. 1980-81 ஆம் ஆண்டில் 75 எக்டேர் பரப்பில் தேயிலை தோட்டங்களை வளர்ப்பதற்கான திட்டம் ரூ. 33.88 லட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 34.13 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது. பழைய தோட்டங்களைப் பராமரித்தல், பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுதல், போன்ற வசதிகள் அளித்தல் ஆகியவற்றுக்கு இத்திட்டம் வகை செய்கிறது.

**மண்வளப் பாதுகாப்புத் திட்டம்.**

**வைகை ஆறு நீர்க்கோள் பகுதி :**

44.1. வைகை நீர்த் தேக்கத்திலும் வைகை ஆற்றிலும் மண் அரிப்பு ஏற்படுவதையும், வண்டல் படிவதையும் தடுக்க வேண்டி, வைகை ஆற்றின் நீர்க்கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நீர்க்கோள் பகுதியில் உள்ள செங்குத்து சரிவுப் பகுதிகளில் மண் அரிப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மரங்கள் ஏதுமில்லை. எனவே, அப்பகுதிகளில் மண் அரிப்பு ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அங்கு மலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் 1,000 எக்டேர் பரப்பில் தோட்டங்களை வளர்ப்பதற்கான திட்டம் ரூ. 17.00 லட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டிலும் ரூ. 17.00 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**மேட்டூர் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :**

44.2. 1980-81 ஆம் ஆண்டில், 2,400 எக்டேர் பரப்பில் தோட்டங்களை வளர்ப்பதற்கான திட்டம் ரூ. 48.02 லட்சம் செலவில் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில், 4,800 எக்டேர் பரப்பில் தோட்டங்களை வளர்க்கும் திட்டத்தின் துவக்கப் பணிகளுக்காக ரூ. 40.88 லட்சம் செலவில் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Hill Area Development Programme**

45. இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. கிராம வனங்கள் சாலைப் போக்குவரத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து நிதி உதவியைப் பெற இத்திட்டம் தகுதியுடையதாகும்.





1980-81 ஆம் ஆண்டில் ரூ. 51.53 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 60.61 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

**புதிய திட்டங்கள் :**

46.1. தமிழ்நாடு வன வளர்ப்புக் கழகம் தமிழ்நாடு வனத் துறை விவசாயிகள் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு மாபெரும் அளவில் முந்திரி நாற்றுப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பு ஆண்டில் ரூ. 12.20 லட்சம் செலவில் நிறைவேற்றப்படும்.

46.2. தேக்கு மரங்களின் திசு வளர்ப்புச் சோதனைப் பெருக்க உத்திகளுக்கான ஆராய்ச்சி நிலையத்தை நிறுவவும் கருதப்படுகிறது. இதற்கு ரூ. 6.50 லட்சம் செலவிடப்படும்.

46.3. தர்மபுரியிலும், திருநெல்வேலியிலும் புதிதாக இரண்டு வனப் பாதுகாப்புப் படை அமைக்கப்படும்.

46.4. சேலத்தில் வனப் பாதுகாவலர் குடியிருப்பு அருகில் உள்ள சந்தனக் கிடங்கில் கூறைவேயப்பட்ட சந்தன மரக்கிடங்கு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 4.98 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழங்குடி மக்கள் மேம்பாடு :**

47.1. இம்மாநிலத்தில் பழங்குடியினர் தொகை 3.63 லட்சமாகும். இவர்களில் பெரும்பாலோர் மலைப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு வனத் துறை பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவர்கள் வேளாண்மை புரிய குத்தகைக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. வனத் துறை மீண்டும் காடுகளை வளர்க்கும் பகுதிகளில் பயிரிடும் ‘ கும்ரி ’ சாகுபடி முறையை மேற்கொள்ளவும் அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த முறையில் வேளாண்மை செய்யப்படும் பயிர் வகைகளோடு வனத் தோட்டங்களும் வளர்க்கப்படுகின்றன. அவர்கள் காடுகளில் தங்கள் கால்நடைகளை மேய்த்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் பயிர்த் தொழிலுக்கும் வீட்டுப் பயன்களுக்கும் தேவையான பொருள்களைக் காடுகளிலிருந்து இலவசமாக எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்படுகின்றனர். பல்வேறு காடு வளர்ப்புப் பணிகளில் அவர்கள் தொழிலாளர்களாக வேலைக்கும் அமர்த்தப்படுகின்றனர். சிலர் வனத் துறையில் பணியாளர்களாகவும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

47.2. பழங்குடி மக்களின் குழந்தைகளுக்காக, கோவை, வடாற்காடு மாவட்டங்களில் வனத் துறை பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. தொடக்கப் பள்ளிகள் பதினான்கும் இரு உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவும், உடைகளும், பாட நூல்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சில பள்ளிகளில் தங்கும் விடுதிகளும் உள்ளன. பழங்குடியினர் நன்மைக்காக 19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விறகு மரக்காடுகளும், சிறு காடுபடு பொருள்களும் சலுகை விலையில் இச்சங்கங்களுக்கு, குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு மருத்துவ வசதி, வீட்டு வசதி முதலியவற்றையும் இத்துறை அளிக்கிறது.

47.3. இத்திட்டம் 1980-81-ல் ரூ. 18.81 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்படுகிறது. பழங்குடியினர் குடியிருப்புகளிடையே உள்ள இப்பழங்குடியினர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 9 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 1980-81-ல் நெல்லிவாசலில் ஒன்றும், ஜம்னா மருதூரில் ஒன்றுமாக இரண்டு குடியிருப்பு கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன. பழங்குடியினர் பகுதிகளில் சில சாலைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1981-82-ல் ரூ. 32.02 லட்சம் செலவில் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

47.4. தென்னாற்காடு, சேலம், மாவட்டங்களைச் சேர்ந்த கல்ராயன் குன்றுகளிலுள்ள பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக கடுக்காய், கறிவேப்பிலை, புளி போன்ற காடுபடு சிறுபொருட்களைச் சேகரிக்கும் உரிமையை இப்பழங்குடியினர் நலனுக்காக பேரளவுப் பல்நோக்கக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

**சேலம், தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள கல்ராயன் குன்றுப் பகுதிகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்.**

48. சேலம், தென்னாற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த கல்ராயன் குன்றுகளிலுள்ள காடுகளைப் பாதுகாக்கும் பொருட்டும், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூரையும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சியையும் தலைமை இடங்களாகக் கொண்டு 1—12—1980 முதற்கொண்டு இரு வனக் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ. 28 லட்சம் மதிப்பில் இத்திட்டம் புதுப்பணித் திட்டமாக செயல்படுத்தப்படும். 2,250 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இது தவிர 1980-81 ஆம் ஆண்டில் 5 கிலோ மீட்டர் தொலைவிற்கு நிழல் தரும் மரங்களை வளர்ப்பதோடு மரக்



கன்றுகளை வளர்த்தல், சாலைகளை அமைத்தல், தற்காலிகக் கொட்டகைகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேறு பல மேம்பாடு நடவடிக்கைகளும் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் :**

49.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13—6—1974-ல் ரூ. 2 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் அமைக்கப்பட்டது. நாளது வரை இக்கழகத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 72.06 லட்சம் ஆகும். இத்தொகை முழுவதும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.

49.2. கழகத்திடம் நாளது வரையில் உள்ள மொத்த தோட்டப் பரப்பாகிய 73,573.67 எக்டேரில், 35,181.82 எக்டேர் பரப்பில் வனத் துறையில் உற்பத்தி செய்த தோட்டங்களும் அடங்கும். தோட்டமிடப்படாத பகுதியின் பரப்பு 38,391.85 எக்டேர் ஆகும். இக்கழகம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து மொத்தம் 23,680.17 எக்டேர் பரப்பில் கலப்பினக் கற்பூர மரங்கள், முந்திரி, சவுக்கு போன்ற மரங்களை வளர்த்துள்ளது.

49.3. கலப்பின கற்பூர மரங்கள், முந்திரி, சவுக்கு, சிறுகாடுபடு பொருள். அரக்கு தொழிற்சாலைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்த வகையிலும், இணக்கக் கட்டணங்கள் மூலமாகவும் 1979-80-ல் (1—7—1979 முதல் 30—6—1980) கழகத்திற்குக் கிடைத்த மொத்த வருவாய் ரூபாய் 232.88 லட்சம் ஆகும்.

49.4. அடுத்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூபாய் 280 லட்சமாகும். 1980-81 ஆம் ஆண்டில் 72,000 டன் கற்பூர மரம் விற்பனைக்குத் தயாராக ஒதுக்கப்படலாம் என மதிப்பிடப்படுகின்றது.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.**

50.1. குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்ட தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமாக தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் 1975-76 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இக்கழகம் ரூபாய் 5 கோடி அங்கீகாரம் பெற்ற மூலதனத்துடன் ஏற்படுத்தப்பட்டது. 30—6—1979 அன்றுள்ளவாறு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தாரிடமிருந்தும் வங்கி உதவித் தொகை மூலமாகவும், ரூபாய் 359.23 லட்சத்தை நிறுவன நிதியாகப் பெற்றது.

**50.2.** கழகம், இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 28—2—1981 வரையில் 1899.96 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிட்டுள்ளது.

**50.3.** சென்ற இரண்டாண்டுகளில் கிடைத்த வருவாயும் செலவும், பின்வருமாறு :

| ஆண்டு | வருவாய் (ரூபாய் லட்சத்தில்) | செலவு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1978-79 | 1,55.93 | 1,98.99 |
| 1979-80 | 2,15.47 | 2,79.87 |

**தேயிலைத் துளிர்களை அறுவடை செய்தல் :**

**50.4.** 1978-79 ஆம் ஆண்டு தேயிலைத் தோட்டங்களிலிருந்து சேகரிக்கப் பட்ட தேயிலைத் துளிர்களின் அளவு 56,87,248 கிலோ. இது 1979-80-ல் 64,68,432 கிலோவாக உயர்ந்தது.

**தேயிலைத் தூள் உற்பத்தி :**

**50.5.** 1979-80 ஆம் ஆண்டில் 48,47,430 கிலோ தேயிலைத் துளிரை பதப்படுத்தி 11,24,108 கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்யப்பட்டது. 10,43,408 கிலோ தேயிலைத் தூள் விற்றதன் மூலம் ரூபாய் 1,36.37 லட்சம் பெறப்பட்டது.

**தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டுதல் :**

**50.6.** 1980-81 ஆம் ஆண்டு வரையில் 2,194 குடியிருப்புகளைக் கட்ட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இதில் 1,872 குடியிருப்புகள் கட்டப்பட்டன. மீதி 322 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**1979-80-ல் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களைத் தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கமர்த்திக் குடியமர்த்தல் (- மற்றும் II ஆம் கட்டம்).**

**50.7.** 1979-80-ல் 225 குடும்பங்களுக்கு வேலையளித்துக் குடியமர்த்தக் கருதப்பட்டது. அவற்றில் 221 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. எஞ்சியுள்ள 4 குடும்பங்கள் மறுவாழ்வு இட்ட இயக்குநரால் அனுப்பப்படவில்லையாதலால் அவர்களைக் குடியமர்த்த இயலவில்லை. 1980-81-ல் 100 குடும்பங்களுக்கு வேலையளித்துக் குடியமர்த்தக் கருதப்



பட்டது. அவற்றில் 85 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. மீதி 24 குடும்பங்களைக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 4,000 ஆகும். மே மாதம் 1980-ல் இரண்டாவது தேயிலைத் தொழிற்சாலை குன்னூரில் உள்ள டைகர் மலைப் பகுதியில் திறவப்பட்டது.

**வண்டலூர் ஒதுக்கக் காட்டில் வன விலங்கு பூங்கா அமைத்தல் :**

**51.1.** சென்னை மத்திய இரயில் நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக தற்போது விலங்ககம் (சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது) அமைந்துள்ள இடத்தைக் கொடுக்கும்படி இந்திய இரயில்வே துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க சென்னை மாநகரத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் வண்டலூர் ஒதுக்கக் காட்டில் நவீன வசதிகளுடன் வன விலங்குப் பூங்கா ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்தது. இதற்காகும் மொத்தத் திட்டச் செலவு ரூபாய் 3,00 லட்சத்தில் திட்டத்தின் முதல்கட்டப் பணிக்காக ரூபாய் 1,05 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. வன விலங்குப் பூங்காவின் நிர்வாகம் தமிழ்நாடு வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**51.2.** முதலில் வன விலங்குப் பூங்கா 140 எக்டேர் பரப்பில் அமைக்கக் கருதப்பட்டது. வருங்காலத்தில் இதை விரிவுபடுத்த தேவைப்படும் அதிகப் பரப்பைக் கருத்தில் கொண்டும் வன விலங்ககத்தை சுற்றிப் பார்க்க வருபவர்களுக்குச் சுற்றிலும் வெளியமைக்கப்பட்ட பாதை வசதி செய்து கொடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்ட வன விலங்குப் பூங்காவின் பரப்பு விரிவாக்கப்பட்டு 302 எக்டேராக வரையறுக்கப்பட்டது. வனத்தை ஒட்டியுள்ள சில பட்டா நிலங்களும் இக்காரியத்திற்காக கையகப்படுத்தப் பட்டுள்ளன.

**51.3.** அலந்தூர்-பல்லாவரம் நீர் வழங்குத் திட்டத்திலிருந்து நாளொன்றுக்கு சுமார் 3 லட்சம் காலன் நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. திட்டத்தின் முதல் கட்டப் பணியில் விலங்குகளுக்குக் கூண்டுகள் கட்டவும், அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் குடியிருப்புக்கள் கட்டவும், வனத்தின் உட்பகுதிகளில் சாலைகள் போடவும், துணைக் கிணறுகள் தோண்டவும், நீரேற்று நிலையங்களைக் கட்டவும், உத்தேசிக்கப் பட்ட வன விலங்குப் பூங்காவைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டவும் முடிவு செய்யப்பட்டு இதற்கான பணிகள் நடைபெறுகின்றன. இதுவரையில் ரூபாய் 14.00 லட்சம் செலவிடப்பட்டு உள்ளது. 1981-82-ல் இத்திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 55 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1981 ஏப்ரல் 29

14. 1981-82 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கும் திட்ட விவரங்கள் :

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். (1) | நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. வன செயல் திட்டம் | 0.30 |
| 2. வன இயல் ஆய்வு திட்டம் | 14.50 |
| 3. வன வள ஆய்வு | 0.35 |
| 4. முந்திரி திட்டம் | 27.99 |
| 5. முந்திரி பதிய பெருக்கம் | 0.25 |
| 6. முந்திரி பெரிய விதைபடா நாற்றங்கால் அமைத்தல் | 12.20 |
| 7. ரப்பர் தோட்டங்கள் | 19.18 |
| 8. கிரம்ப் ரப்பர் தொழிற்சாலை அமைத்தல் | 25.23 |
| 9. மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்—ரப்பர் தோட்டங்கள் | 44.00 |
| 10. கூழ் மர உற்பத்தி திட்டம் | 36..03 |
| 11. சமூக நலக்காடுகள் உற்பத்தி திட்டம் | 100.38 |
| 12. தொழிற்துறை வாணிபத்திற்கு வேண்டிய தேக்கு ஏனைய திண் மரங்கள் வளர்த்தல் | 6.31 |
| 13. தீக்குச்சி மர வளர்ப்பு | 0.01 |
| 14. மிலாறு மரத் தோட்டங்கள் | 4 59 |
| 15. விறகு மரக் காடுகள் | 67.16 |
| 16. சந்தன மர தோட்டங்கள் | 13.67 |
| 17. சந்தன மரத் தொழிற்சாலை அமைத்தல் | 1.08 |
| 18. சேலம் அஸ்தம்பட்டியில் சந்தன மரக்கிடங்கில் கொட்டகை அமைத்தல் | 4.98 |
| 19. கலப்பின மரத்தோட்டங்கள் | [illegible] |



1981 ஏப்ரல் 29]

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். (1) | நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 20. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில் புயல் பாதுகாப்பிற்காக மரங்கள் வளர்த்தல் | 6.08 |
| 21. இருப்புப் பாதை நெடுக மரம் நடுதல் | 12.54 |
| 22. அழிந்த காடுகளை மீண்டும் உண்டாக்குதல் | 39.80 |
| 23. வெட்டுமர பணிகளும் வனப்பயன்பாடும் | 2.48 |
| 24. காடுபடு சிறு பொருள்கள் | 15.22 |
| 25. செடி நடும் திட்டம் (தீவிரம்) | 5.00 |
| 26. பழங்குடியினர் திட்டம் | 32.02 |
| 27. வனங்கள் பற்றிய விளம்பரத் திட்டம் | 1.11 |
| 28. வன ஒருங்கிணைப்புத் திட்டம் | 2.00 |
| 29. வனப் பாதுகாப்பு | 4.53 |
| 30. வன தொழிலாளருக்கும் பணியாளருக்கும் வசதிகள் | 6.00 |
| 31. இயற்கைப் பாதுகாப்பு (வனவிலங்குகள் முதலியன) | 30.01 |
| 32. களக்காட்டில் சிங்கவால் குரங்கிற்குப் புகலிடம் அமைத்தல் | 10.73 |
| 33. கோடிக்கரை வனவிலங்கு புகலிடத்தை மேம்படுத்துதல் | 1.23 |
| 34. முதலைகளை நீர் தேக்கத்தில் வளர்த்தல் | 1.01 |
| 35. வண்டலூரில் விலங்ககம் அமைத்தல் | 55.00 |
| 36. ஏரி, குளம், நதி, கால்வாய் ஓரங்களில் மரங்கள் வளர்த்தல் | 7.76 |
| 37. மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தியின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டங்கள் உண்டாக்குதல் | 34,13 |
| 38. மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தியின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்புத் தோட்டங்கள் ஏற்படுத்தல் | 8.02 |
| 39. மேற்கு மலைத்தொடர் அபிவிருத்தியின்கீழ் மதுரை மாவட்டத்தில் மரக்கூழ் மரங்கள் வளர்த்தல் | 6.26 |

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். (1) | நிதி ஒதுக்கீடு (2) (ரூபாய் லட்சத்தில்.) |
| --- | --- |
| 40. நீலகிரி மாவட்டத்தில் மலை மேம்பாட்டுத் திட்டம் | 60.61 |
| 41. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைகை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் மரங்கள் வளர்த்தல் | 17.00 |
| 42. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேட்டூர் ஸ்டான்லி அணையின் நீர்பிடிப்புப் பகுதியில் மரங்கள் வளர்த்தல் | 40.88 |
| 43. சேர்வலாறு அணையோரப் பகுதியின் பாதுகாப்புத் திட்டம் | 1.23 |
| 44. வனக்கோட்டங்களை பிரிவுபடுத்தும் திட்டம் (கிராம நலக்காடுகள் வளர்த்தல்) | 28.44 |
| 45. வன இயல் ஆய்வுத் திட்டம் இழை மூல பண்ணை வளர்ப்பு Tissue C lt e ) நுட்பத்தின் மூலம் தேக்கு மரங்களைப் பெருக்கும் திட்டம் | 6.50 |
| 46. சாலைகள்—போக்குவரத்துத் திட்டம் | 48.03 |
| 47. கட்டிடங்கள் கட்டுதல் | 28.42 |
| 48. வனச் செல்வத்தைப் பாதுகாக்கக் கூடுதலான இரண்டு பாதுகாக்கும் படைகள் அமைத்தல் | 0.01 |
| 49. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள் மறுவாழ்வுத் திட்டம்—ரப்பர் | 34.00 |
| 50. கடல்வாழ் விலங்கின தேசியப் பூங்கா அமைத்தல் | 0.01 |
| 51. முதுமலை வனவிலங்கு சரணாலய மேம்பாடு திட்டம் | 0.01 |
| 52. சவுக்கு, மூங்கில் போன்ற மரபியல் ஆராய்ச்சித் திட்டம் | 0.01 |
| 53. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு நிதி உதவி | 0.02 |



| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். (1) | நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
| --- | --- |
| 54. வடாற்காடு மாவட்டத்தில் சிறுபாசன ஏரிப் பகுதிகளில் காடு வளர்ப்பு சொற்ப நில உழவர்கள், வேளாண்மை தொழிலாளர் மேம்பாட்டு நிறுவனம் நிதி உதவி பெறுவது | 1.88 |

குறிப்பு.—

(1) வரிசை எண் 5, 9, 32, 33, 34, 37-ல் இருந்து 39 வரை குறிப்பிடப்பட்ட திட்டங்கள் மத்திய அரசு மான்யத்துடன் (முழுமையாகவோ பகுதியாகவோ) செயல்படுத்தப்படும்.

(2) வரிசை எண் 6, 18, 45, 46, 47 மற்றும் 48-ல் குறிப்பிடப்பட்ட திட்டங்கள் பகுதி 2 புதிய திட்டங்களில் அடங்கும்.

53. முடிவுரை.—வனத்துறைச் செயற்பாடுகள் பெரும்பாலும் வேலை வாய்ப்பளிக்கும் நோக்கம் கொண்டவை. இத்துறையில் அதிகமாக முதலீடு செய்வதால் குறிப்பாக கிராமப்புறத்திலும், மலைப் பகுதிகளிலும் வாழும் எளிய மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை அளிக்க முடியும். சமூகத்தில் நலிந்துள்ள பிரிவினருக்கு, குறிப்பாகப் பழங்குடியினருக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்குவதே நமது கொள்கையாகும். மேலும், நமது மாநிலத்தில் தொழில்கள் பெருக வேண்டுமானால் காடுபடு மூலப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதும் நமது முக்கிய குறிக்கோளாக அமைய வேண்டும். பொருளாதார வளம், சமுதாய நலம், உயிரினங்களின் வாழ்க்கைத் திறம், சீரான மழைவளம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வனவளத்தைக் காப்பதிலும் மேம்படுத்துவதிலும் ஊன்றிய கவனத்துடன் இத்துறை செயலாற்றி வருகிறது. இயற்கையன்னை வாரிவழங்கும் ஈடில்லாத இந்த அரிய செல்வத்தை மேலும் மேலும் பெருக்கிட எல்லாப் பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படும். இப்பணிகளினால் இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி வருங்காலத் தலைமுறையினரும் வளமான பலன்களைப் பெற்று சிறப்படைய வேண்டும் என்பதே வனத்துறையின் இலட்சியமாகும்.

[1981 ஏப்ரல் 29

இணைப்பு

**செய்தி-மக்கள் தொடர்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொது மக்கள், மற்றும் பத்திரிகைத் துறைக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகள், பல்வேறு அரசுத் துறைகளின் திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவைபற்றிய பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள், திரைப்படங்கள், பொருட் காட்சிகள், நாடகம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் நூல் வெளியீடுகளாக இத்துறையின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும், மூலமாய் ஒருமுகப்படுத்தப்பெற்று, இந்தத் துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்துடன் செய்தி-மக்கள் தொடர்புத் துறை பல விளம்பரங்களைத் தானே தயாரித்தும் வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

**விழாக்கள் :**

நாட்டுமக்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களின் பெருமைகளையும் எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும் பெருந்தலைவர்களின் பிறந்த நாள் விழா, நினைவுநாள் நிழ்ச்சிகளையும் இத்துறை நடத்துகிறது.

கடந்த இரண்டாண்டுகளைப் போலவே 1980-81 ஆம் ஆண்டிலும் திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசனார், காயிதேமில்லத், காமராசர், வ. உ. சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார், முத்துராமலிங்கத் தேவர், ஜவஹர்லால் நேரு, இராஜாஜி, நேதாஜி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, செய்குத்தம்பி பாவலர், வல்வில் ஓரி ஆகியோரின் விழாக்கள் கொண்டாடப் பட்டன. குடியரசு நாள், விடுதலை நாள், ஐக்கிய நாடுகள் தினம், மனித உரிமைகள் தினம், தேசிய ஒருமைப்பாடு வார விழா, தேசிய வளர்ச்சிப் பணி கள் வார விழா ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.



1981 ஏப்ரல் 29]

**தமிழ்நாடு வெள்ளி விழா :**

தமிழ்நாடு தனி மாநிலமாக மலர்ந்து 25 ஆண்டுகள் ஆனதையொட்டி, அதன் வெள்ளி விழா இவ்வாண்டு நவம்பர் திங்களில் சிறப்பாகக் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வ. வே. சு. அய்யர் நூற்றாண்டு விழா, டி. கே. சி. நூற்றாண்டு விழா, ராஜா அண்ணாமலைச் செட்டியார் நூற்றாண்டு விழா, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா ஆகிய விழாக்களையும் இவ்வாண்டு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தந்தை பெரியார் நூற்றாண்டு விழா :**

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்குழு பரிந்துரை செய்துள்ள பல திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது.

தந்தை பெரியார் ஒலி, ஒளி, அரங்கக் காட்சிகள் சென்னையிலும், திருச்சியிலும், தஞ்சாவூரிலும், வேலூரிலும் நடத்தப்பட்டுள்ளன. அடுத்து திருநெல்வேலி, பெரியார் மாவட்டங்களில் நடத்துவதற்கு முடிவு செய்யப் பட்டிருக்கிறது. இவ்வொலி, ஒளி அரங்கக் காட்சி நடத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்துப் பாராட்டி யுள்ளனர். வரும் மாதங்களில் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா வல்லுநர் குழு தயாரித்து வருகிற 'தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு' மூன்று பகுதிகளாக வெளியிடப்படும். முதல் பகுதி இவ்வாண்டு இறுதிக்குள் வெளியிடப்படும். பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய 'பெரியாரின் புரட்சி மொழிகள்' என்ற புத்தகம் மலிவுப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் ஆலோசனையிலுள்ளது. 'பெரியாரின் வாழ்க்கைப்பட விளக்கம்' என்ற குழந்தைகளுக்கான நூல் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

1922 ஆம் ஆண்டில் கேரள மாநிலத்தில் வைக்கம் என்னும் ஊரில் பெரியார் அவர்கள் தீண்டாமையை எதிர்த்துப் போராடிய வரலாற்றின் நினைவாக அவ்வூரில் தந்தை பெரியார் அவர்களின் முழு உருவச் சிலை ஒன்று வைக்கவும், சிலை எழுப்பப்பட விருக்கும் இடத்தில் பூங்கா ஒன்று அமைக்கவும் கேரள அரசின் உதவியுடன் இத்திட்டங்களை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

[1981 ஏப்ரல் 29

தந்தை பெரியார் மாநாட்டு அரங்கம் திராவிடக் கட்டிடக் கலையழகும், புதுமையும், வனப்பும், அனைத்து வசதிகளும் கொண்டதாக தந்தை பெரியார் நினைவாகச் சென்னையில் அமைக்கப்படும் திட்டமொன்று ஆலோசனையில் உள்ளது.

மாவட்டத் தலைநகரங்களில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு நினைவுத்தூண்கள் நிறுவப்பட வேண்டும் என்ற திட்டத்தின்படி முதல் நினைவுத்தூண் திருச்சியில் திறக்கப்படவிருக்கிறது. அந்நினைவுத்தூணில் தந்தை பெரியாரின் பொன்மொழிகள் சிறப்பிடம் பெறும்.

தந்தை பெரியார் சிறை வைக்கப்பட்டிருந்த சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மத்திய சிறைச் சாலைகளில் நினைவுக் கல்வெட்டுக்கள் அமைக்கும் ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பொருட்காட்சிகள் :**

மாநிலத்தில் அரசு பொருட்காட்சிகளை நடத்துவதுடன், பிற மாநிலங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளில், அரசின் சார்பாக. இத்துறை பங்கு பெற்று, அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது.

அரசுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனி நபர்களோ அல்லது தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லையென்று அரசு முடிவெடுத்துள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது நன்மைக்காக உள்ளாட்சி நிறுவனங்களும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தக, கல்வித் தொண்டு நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றன.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை கடந்த ஆண்டு, அரசு, மதுரையில் சித்திரைப் பொருட்காட்சியினை ஏப்ரல்-ஜூன், கோவையில் மார்ச்சு-மே. சேலத்தில் ஜூலை-செப்டம்பர் ஆகிய மாதங்களில் நடத்தியுள்ளது. அரசின் பல்வேறு துறைகளும் நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும், இப்பொருட்காட்சியில் பங்கு கொண்டன. மதுரை சித்திரைப் பொருட்காட்சியில் 6 இலட்சம் மக்களும், கோவைப் பொருட்காட்சியில் 10 இலட்சம் மக்களும், சேலம் பொருட்காட்சியில் 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களும் வருகை தந்துள்ளனர். மேற்கண்ட மூன்று பொருட்காட்சிகளின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 42.74 இலட்சம் ஆகும்.



1981 ஏப்ரல் 29]

தற்போது இந்தத் துறை ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு பொருட்காட்சியினை மதுரையில் 5—1—1981 முதல் நடத்தி வருகிறது. இது 25—4—1981 வரை நடைபெறும். அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் அடைவதோடு, பாராட்டுக்களையும் அளித்துவருகின்றனர். இந்த ஆண்டு முதன் முறையாக திருச்சிராப்பள்ளியில் மார்ச்சு 30 முதல் இத்துறை ஒரு பொருட்காட்சி நடத்திக்கொண்டு வருகிறது.

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன். மாநிலத்தில் சென்னை நீங்கலாக உள்ள 15 மாவட்டங்களிலும் செய்தித்துறை விளக்கக் கண்காட்சிகளை நடத்துவதற்காக அதற்குத் தேவையான சாதனங்கள் விளம்பரப் பலகைகள், சட்டங்கள், கண்ணாடிகள் ஆகியவைகளை வாங்கவும் மொத்தம் ரூ. 2 இலட்சம் நடப்பு ஆண்டில் செலவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கோயம்புத்தூரில் ரூபாய் 25 இலட்சம் செலவில் ஒரு கலை அரங்கம் கட்டும் திட்டமும் பரிசீலனையிலுள்ளது.

**செய்தி நிலையங்கள் :**

சென்னை, மதுரை, ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றியும், செய்திகளையும், விளக்கங்களையும் பொதுமக்களுக்கு வழங்குகின்றன. படிப்பகங்களையும் நடத்தி வருகின்றன.

மாவட்டங்களில் செய்திப் படங்களையும் கருத்து விளக்கப் படங்களையும் செவ்வனே காட்டிட போதிய ஊர்தி வசதிகள் தற்போது இல்லாததால் இக்குறையைப் போக்கிட நடப்பு நிதியாண்டிலிருந்து இதற்கென திரைப்படம் காட்டும் கருவி பொருத்த ஏதுவான இரண்டு வாகனங்கள் ஒவ்வொன்றும் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது, முதற்கட்டமாக மதுரை. கோயம்புத்தூர் மாவட்டங்களில் இவ்வாகனங்கள் பயன்படுத்தப்படும். இத்திட்டம் படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதனால் கிராமப் புறங்களில் செய்தி விளக்கத் திரைப் படங்களைக் காட்டுவதிலுண்டான சிரமங்கள் நீக்கப்பட்டு இப்படங்கள் காட்டுவதும் விரிவாக்கப்பட்டு நல்ல முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

**நினைவுச் சின்னங்கள் :**

தமிழ்நாடு அரசைச் சார்ந்த, தலைவர்கள் வாழ்ந்த இடங்களும் நினைவுச் சின்னங்களும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் நிருவாகப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு உள்ளன.

சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு வருகை தரும் பார்வையாளர்களின் வசதிக்காகக் கோட்டத்தின் வடபுறத்தில் ரூ. 16 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஓர் அங்காடிக் கட்டிடத் தொகுதி அமைப்பதற்கும், கோட்டத்தின் தென் கிழக்குப் பகுதியில் ரூ. 24 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஓர் அழகிய பூங்கா (சிறுவர்கள் விளையாடுமிடம்) அமைப்பதற்குமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

உலகச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு அருகில் உள்ள மற்றுமொரு சிறிய பாறையின் மீது உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் சிலை ஒன்று நிறுவுவதற்கும், அரசு விருந்தினர் மாளிகைக்கருகில் திருக்குறள் ஆய்வு மையம் ஒன்று அமைப்பதற்கும் ரூ. 185 இலட்ச மதிப்பீட்டில் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அண்ணா சதுக்கத்தில் இருபுறமும் செடிகொடியால் அலங்கரிக்கப்பட்ட நடைபாதை அமைத்தல், நூலகக் கட்டிடம் கட்டுதல், அறிஞர் அண்ணாவின் கருத்துக்களை ஒலிபரப்புதல், நுழைவு வாயில் பகுதியிலுள்ள கற்தளத்தைப் புதுப்பித்தல் போன்ற மேம்பாட்டு வேலைகள் சுமார் 8.26 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செய்யப் பரிசீலிக்கப் படுகின்றன.

கன்னியாகுமரியில் அதங்கோட்டாசான் நினைவுச் சின்னம், பாப்பாரப் பட்டியில் சுப்பிரமணிய சிவா நினைவுச் சின்னம், சேலத்தில் விஜயராகவாச்சாரியார் நினைவுச் சின்னம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகிலுள்ள கோட்டாறு என்னுமிடத்தில் சேக்குதம்பி பாவலர் நினைவுச் சின்னம், எட்டயபுரத்தில் உமறுப்புலவர் நினைவுச் சின்னம், புதுக்கோட்டையில் சத்தியமூர்த்தி நினைவுச் சின்னம். சென்னையில் கம்பர் நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேருவின் முழு உருவச் சிலை அமைக்கும் திட்டமும் பரிசீலனையிலுள்ளது. எட்டயபுரத்தில் உள்ள பாரதி மணி மண்டபத்தை அரசு ஏற்றுக்கொள்ளும் செயற்குறிப்பும் பரிசீலனையில் உள்ளது. காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா வாழ்ந்த இல்லத்தை அரசு ஏற்று அண்ணாவின் நினைவு இல்லமாக போற்றிப் பாதுகாத்து வருவதோடு, அண்ணாவின் பெருவாழ்வைச் சித்தரிக்கும் படங்கள், அவர் பயன்படுத்திய பொருட்களடங்கிய பொருட்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.





**கலைவாணர் அரங்கம், சென்னை, அண்ணா கலையரங்கம், வேலூர் :**

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தையும் வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கத்தையும் இத்துறை நிர்வகித்து வருகிறது. வேலூர் அண்ணா கலையரங்கில், கலை நிகழ்ச்சிகளுக்கு அனுமதிப்பதோடு திரைப்படங்களும் காட்டப்படுகின்றன.

குளிர்சாதன வசதியுள்ள கலைவாணர் அரங்கம், அரசாங்க விழாக்கள், பிற விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஒதுக்கப்படுகிறது. விழாக்கள் நடைபெறாத சமயங்களில் நாளொன்றுக்கு இரண்டு காட்சிகள் வீதம் திரைப்படம் நடத்த சில விதிகளின்கீழ் அனுமதிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் பயனாக சமீப ஆண்டுகளில் இந்த அரங்கின் வருமானம் பெருகியுள்ளது. தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்து திட்டமிட்டபடி வாடகை பெறப்படுகிறது. ஆனால் அரசுத் துறைகளுக்கு சலுகையில் அனுமதிக்கப் படுகிறது.

இராஜாஜி மண்டபம், காந்தி இல்லம், சீரணி அரங்கம் ஆகியவையும் இத் துறையின் நிர்வாகத்தில் உள்ளன.

**தமிழரசு இதழ் :**

தமிழரசு இதழ் (தமிழ்-ஆங்கிலம்) இத்துறையினரால் வெளியிடப்படும் இதழாகும். 1970 ஆம் ஆண்டு சூலையில் இந்த இதழ் தமிழில் மாதம் இருமுறை வெளியீடாகவும், ஆங்கிலத்தில் மாதம் ஒருமுறை வெளியீடாகவும் துவக்கப்பட்டது. இந்த இதழ், அரசின் செய்திகளையும், கொள்கைகளையும் பரப்ப முனைவதுடன் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும் பொது மக்களுக்கு அறிவிக்கிறது. மாதம் இரு முறைவரும் தமிழ் இதழ் சராசரி 50,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன. மாதம் ஒரு முறை வரும் ஆங்கில இதழ் சுமார் 3,000 பிரதிகள் வெளியாகின்றன. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு குறித்து வெளியிடப்பட்ட தமிழரசு இதழ் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அட்டைப்படத்தையும் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்ததால், பலதரப்பட்ட மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று அதிகமாக அச்சிடப்பட்ட 10,000 பிரதிகளும் ஓரிரு நாட்களில் விற்பனையாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இவ்விதழின் ஆங்கில வெளியீட்டை அனைத்து இந்திய தூதரகங்களுக்கும் அனுப்பி வருவதால், வெளிநாடுகளாகிய மலேசியா, அமெரிக்கா, பிஜித்தீவுகள் ஆகிய நாடுகளிலிருந்து சந்தாத் தொகை செலுத்தி இதழைப் பெற்றுவருகிறார்கள். தமிழரசு இதழ்களும் மற்றும் செய்தி, மக்கள் தொடர்புத்துறை வெளியிடும் பிரசுரங்களும் இத்துறையின் நிர்வாகத்திலுள்ள தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்திய அரசின் வெளியீடான "திட்டம்", அறநிலையத்துறையின் "திருக்கோயில்", தொழிலாளர் துறையின் "உழைப்பவர் உலகம்", தமிழ்நாடு மின்சாரத்-

துறையின் "மின் குடும்பம்". கல்வித் துறையின் "தமிழகக் கல்வி" ஆகிய இதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன. 1980 ஜனவரி முதல் சென்னை உயர் நீதி மன்றத்தின் "தீர்ப்புத் திரட்டு" என்ற இதழும், "குற்ற வழக்குத் தீர்ப்புத் திரட்டு" என்ற இதழும் இங்கு அச்சிடப்படுகின்றன. இவற்றுடன் அரசின் அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், சிறுவெளியீடுகள், விண்ணப்பங்கள் முதலியனவும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

**திரைப்படங்களுக்கு உதவித்தொகை :**

இம்மாநிலத்தில், திரைப்படத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்களின் தரக் குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசிய அளவில் மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை உள்ளடக்கித் தரமான திரைப்படங்கள் உருவாவதை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் ஐந்து படங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்ச ரூபாய் வீதம் அரசு உதவித் தொகை வழங்குகிறது. இத்தகைய திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் குழு, அரசுக்கு ஆலோசனை நல்குகிறது.

**சிறந்த திரைப்படங்கள்-கலைஞர்களுக்குப் பரிசுகள் :**

உயர்ந்த கலை உணர்வு, சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக, ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மிகச் சிறந்த திரைப்படங்கள், செய்திப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள், நடிக, நடிகையர், தொழில் நுட்பக் கலைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு, ரொக்கப் பரிசும், விருதுகளும் வழங்கப்படுகின்றன. தேர்வுகள் இதற்காக அமைக்கப்படுகிற குழுவினால் செய்யப்படுகின்றன.

இரண்டாவது உலகக் குழந்தைகள் திரைப்பட விழாவினை, பம்பாயிலுள்ள இந்திய குழந்தைகள் திரைப்படக் கழகம் இவ்வாண்டு நவம்பர் திங்கள், 14-23 நாட்களில் சென்னையில் நடத்தவிருக்கிறது. அதற்குத் தேவையான உதவிகள் செய்து தரும்படி குழந்தைகள் திரைப்படக் கழகம் இவ்வரசை அணுகியுள்ளது. இதற்கான ஆணைகள் பிறப்பிக்க அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது.

**திரைப்பட, தொலைக் காட்சி தொழிற் பயிற்சி நிறுவனம் :**

1948 ஆம் ஆண்டில் திரைப்படத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்டு கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்பட, தயாரிப்பு தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி



அளித்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். அரசு அலுவலர்களையும் திரைப்படத்தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று, இந்நிறுவனத்தின் மேம்பாட்டுக்கான ஆலோசனைகளை நல்குகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு, தொலைக்காட்சி இயக்குதல் ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் ரூ. 3 இலட்சத்தில் படச்சுருள் கழுவும் கருவிகள் மற்றும் படப்பிரதிகள் எடுக்கும் கருவிகள் வாங்குவதற்கும், ரூபாய் 3.5 இலட்சத்தில் வெளிப்புறம் படப்பிடிப்புக்குரிய வண்டி வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

படப்பிடிப்பு தளங்களும், திரைப்படத் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள சாதனங்களும், விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவு கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாகவும் அமைகிறது. படப்பிடிப்பு தளங்களை தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் முழுதும் பயன்படுத்தத்தக்க விதத்தில் படத் தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப் பெருக்கிட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப் பணிகளையும் பொது நிகழ்ச்சிகளையும் தேர்ந்தெடுத்து படமாக்கி செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது. இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக்கு தேவையான செய்திகளை கருத்து விளக்கப் படங்களாக (டாகுமென்டரி) எடுத்து இத்திரைப்படப்பிரிவு வெளியிடுகிறது. இப்படங்களின் (16 மில்லி மீட்டர்) அளவில் பிரதிகள், கிராமப்புற மக்களுக்கு காட்டிட மாவட்டங்களில் செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன. சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள், தொழிலாளர் வாழும் குடியிருப்பு பகுதிகள் ஆகியவற்றில் காட்டுவதற்கு இப்படங்கள் மாநிலச்செய்தி நிலையத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

[1981 ஏப்ரல் 29

மதுரை மாவட்டம் கொடைக்கானலில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைப்பதற்கு, மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு சுமார் இரண்டேகால் இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 3.47 ஏக்கர் நிலம், தமிழக அரசால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொலைக் காட்சி அஞ்சல் நிலையத்தின் மூலம் மதுரை, பெரியார், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் முழுவதும் உள்ள மக்கள் சென்னை தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைக் காண முடியும். இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கொடைக்கானலிலிருந்து 180 கி.மீ. ஆர (Radius) அளவிலுள்ள பகுதிகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காணலாம்.

மேலும் மதுரையில் ஒரு வானொலி நிலையம் அமைப்பதற்கு தமிழக அரசின் வேண்டுகோளின் பேரில், மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நிலையம் விரைவில் அமைப்பதற்குத் தேவையான நிலம் மற்றும் இதர உதவிகளை இவ்வரசு செய்து வருகிறது. அத்துடன் திருநெல்வேலியிலுள்ள வானொலி நிலையம் தற்போது பெரும்பாலும் அஞ்சல் நிலையமாக இருப்பதை மாற்றி ஒரு முழு ஒலிபரப்பு நிலையமாக அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு செய்திட இவ்வரசு உறுதுணையாக இருந்து வருகிறது.

**தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை :**

1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம், பொறுப்பு வரையறுக்கப்பட்ட அரசு நிறுவனமாகும். தமிழ்நாட்டில் பகுதி நிலை திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இந்தக் கழகத்தில் அரசால் முழுவதுமாக செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 35 இலட்சம், மேலும் ரூ. 15 இலட்சம் நீண்ட கால கடனாக அரசு அளித்துள்ளது.

இந்நாள் வரையில் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பளிப்புகள் 82 ஆகும். இவற்றில் 72 பேர் திரையரங்குகளைக் கட்டி முடித்து திரைப்படக் காட்சிகள் நடத்துகின்றனர். ஒரு திரையரங்கத்திற்கு அதிக பட்சம் அளிக்கும் தொகை ரூ. 1.20 இலட்சம் ஆகும். இதனை ரூ. 2 இலட்சமாக மாற்றும் கருத்து பரிசீலனையிலுள்ளது. இக்கழகம் இதுவரை ரூ. 94.23 இலட்சம் கடன்தொகை அளிக்க ஒப்பளித்துள்ளது.



1981 ஏப்ரல் 29]

நிறைவு பெறாத திரையரங்கம் கட்டுவதற்கு இந்நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன்கள், வசூலான தொகை, வசூலாக வேண்டிய கடன்கள் ஆகியவை பின்வருமாறு :

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பகுதி நிலை திரையரங்கம் கட்டுவதற்கு இந்நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை. | 85.40 |
| பயன் அடைந்தோர் எண்ணிக்கை—77 நபர்கள். | |

**கொடுக்கப்பட்ட கடன்களில் திரும்ப செலுத்தப்பட வேண்டியதில் வசூலாகாத தொகை.**

| (நீதி மன்றத்தில் தடை உத்தரவு பெற்றவர்களின் கடனையும் சேர்த்து மொத்தம் வசூலாகாத தொகை) | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| அசல் | 28.23 |
| வட்டி | 21.48 |
| அபராத வட்டி | 4.65 |

**இதுவரை திரும்ப செலுத்தப்பட்ட தொகை :**

| | |
|---|---|
| அசல் | 42.81 |
| வட்டி | 35.24 |
| அபராத வட்டி | 1.14 |

| | |
|---|---|
| கடன் தவணையை உரிய காலத்தில் செலுத்தாமல் தட்டிக் கழித்ததுடன் நீதி மன்றத்திற்கு சென்று தடை உத்தரவு பெற்ற நபர்கள் | 25 நபர்கள். |

| அவர்களிடமிருந்து வசூலாகாத நிலுவையில் உள்ள தொகை : | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| அசல் | 20.27 |
| வட்டி | 19.01 |
| அபராத வட்டி | 3.78 |

[1981 ஏப்ரல் 29

**மாவட்ட வாரியாக கட்டி முடிக்கப்பட்டு திரைப்படக் காட்சிகள் நடத்தப் பட்டு வரும் திரையரங்குகளின் எண்ணிக்கை.**

| மாவட்டம். | திரையரங்குகளின் எண்ணிக்கை. |
|---|---|
| செங்கற்பட்டு | 15 |
| கோயம்புத்தூர் | 4 |
| தர்மபுரி | 2 |
| மதுரை | 7 |
| வட ஆற்காடு | 14 |
| புதுக்கோட்டை | 3 |
| இராமநாதபுரம் | 6 |
| சேலம் | 4 |
| தென் ஆற்காடு | 3 |
| தஞ்சாவூர் | 2 |
| திருநெல்வேலி | 6 |
| திருச்சிராப்பள்ளி | 5 |
| பெரியார் | 1 |
| மொத்தம் .. | 72 |

**தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 1957.**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பகுதி மக்களுக்கு குறிப்பாக ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு பொழுது போக்குவதற்குரிய சாதனமாகவும் ஊராட்சி, நகராட்சிகளுக்கும் சிறிது அரசுக்கும் வருவாய் திரட்டக்கூடிய துறையாகவும் திரைப்படத்துறை விளங்குகிறது. தமிழ்நாடு அரசு திரைப்படத் தொழில் வளர்ச்சி அடைய ஊக்கமளிக்கும் வகையில், திரை அரங்குகளை அதிகப் படுத்தும் முயற்சியாக, இக்காலத்திற்குப் பொருந்தாத விதிகளையும், கட்டுப் பாடுகளையும் தளர்த்தியுள்ளது. அதே சமயத்தில் இவ்வரசு திரைப்படங் களுக்குச் செல்லும் பொது மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் பாதுகாப்புகளும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் கண்டிப்பான நடை முறையை அமுல்படுத்தி வருகிறது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தேசிய திரைப்படக்கொள்கை பற்றிய செயற்குழு, திரைப்படங்கள் என்னும் பொருள் மாநிலங்களின் பட்டியலிலிருந்து State List ஒருங்கியல் அதிகாரப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்படலாம் என்று கருத்து



1981 ஏப்ரல் 29]

தெரிவித்திருந்தது. இப்பொருள் நவம்பர் 1980-ல் நடைபெற்ற மாநில செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் இடம் பெற்றது. திரைப்படத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மாநில அரசுகள் குறிப்பாக தமிழக அரசு எடுத்து வருவதால், அவ்வாறான மாற்றம் தேவை யில்லை என்று மத்திய அரசுக்கு இவ்வரசு தெரிவித்துள்ளது.

**கோரிக்கை எண் 47.**

**சுற்றுலாத்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.**

'சுற்றுலா' அகில உலகிலும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு தொழில் ஆகும். நாட்டின் மேம்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் 'சுற்றுலா' முக்கிய பங்கு வகிக்கிறது என்று உலகிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றும் கருதுகின்றன. சுற்றுலா பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருகிறது. சுற்றுலா வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதோடல்லாமல் நாட்டின் தொழில் வளர்ச்சிப் பகுதிகளை மேம்படுத்துவதுடன் ஒரே பகுதியில் குவியும் செல்வம் பல பகுதிகளுக்குப் பயன்பட வழி கோலுகிறது. மேலும் சுற்றுலா வளர்ச்சி கைவினைப் பொருட்கள் உற்பத்திக்கும், சிறு தொழில் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகிறது. சமூக கலாச்சார வளர்ச்சிக்கும், தொடர்புக்கும் பெரிதும் உதவியாயிருக்கிறது. சுருங்கக் கூறின் சுற்றுலாத் தொழில் வளர்ச்சி, நாட்டின் பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சி மற்றும் நாடுகளிடையே நம்பிக்கை, நல்லுறவு ஆகியவற்றில் பயன்மிக்க திருப்பத்தை உருவாக்கி வருவதை உணரலாம்.

ஏராளமான சுற்றுலா மையங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், அழகைக் கொட்டும் அருவிகளும், அடவிகளும், பார்ப்போரைப் பரவசப்படுத்தும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் அழகிய நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் செழிக்கும் நம் தமிழகத்தை அலங்கரிக்கின்றன. நீண்ட சாலை வசதிகளும், நாளும் வளர்ந்து வரும் போக்குவரத்து வசதிகளும் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன. எனவே சுற்றுலாத் தொழிலில் எந்தவொரு முதலீடும் மிக நல்ல பலனை அளிக்கும் நிலை உருவாகி வருகிறது.

சுற்றுலாவினால் ஏற்படும் நற்பயன்களை நன்குணர்ந்துள்ள இவ்வரசு, தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருவதினை, வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்து

அறியலாம். 1975-76 ஆம் ஆண்டில் சுற்றுலாவிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 22.70 இலட்சத்திலிருந்து இன்று 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 110 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதே இதற்கு எடுத்துக்காட்டாகும்.

தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியானது கீழ்க்கண்ட அடிப்படை நோக்கங்களைக் கருத்தில் கொண்டு அமையப் பெற்றதாகும் :—

1. பன்னாட்டுப் பயணிகளைக் கவரும் சுற்றுலாத் தலங்களை, அதிகப் பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாடடையச் செய்தல்.

2. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்களை, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணம் வளரும் வண்ணம் மேம்படுத்துதல்.

3. மாநிலத்திற்குள்ளே சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சங்களைக் கொண்டுள்ள, ஆனால் அதிகம் விளம்பரப்படுத்தப் பெறாத, சுற்றுலாத் தலங்களை வளர்ச்சிபெறச் செய்தல்.

4. உள்நாட்டுப் பயணிகளுக்கும் குறைந்த வருவாய் பெறுவோர்க்கும் ஏற்ற வகையில், குறைந்த வாடகையில் தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவையாகும்.

**பயண வட்டங்களின் மேம்பாடு :**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சிக்காக குறைந்தது இரண்டு பெரிய "பயண வட்டங்களைத்" தமிழகத்தில் தெரிந்தெடுக்குமாறு மைய அரசு கேட்டுக்கொண்டதன் பேரில், கீழ்க்கண்ட மூன்று பயண வட்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென மைய அரசும், மாநில அரசும் செய்யவிருக்கும் முதலீடுகள் நல்ல பயனை விளைவிக்கும் வகையில் இப்பயண வட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

1. சென்னை — மாமல்லபுரம் — திருக்கழுக்குன்றம் — காஞ்சிபுரம் — திருச்சிராப்பள்ளி — தஞ்சாவூர் — புதுக்கோட்டை — மதுரை — இராமேசுவரம் — கன்னியாகுமரி — குற்றாலம் — திருவனந்தபுரம் ;

2. சென்னை — கிருஷ்ணகிரி — ஓகேனக்கல் — ஏற்காடு — கோயம்புத்தூர் — உதகமண்டலம் — முதுமலை — மைசூர் — பெங்களூர்

3. இராமேசுவரம் — மதுரை — கொடைக்கானல் — புதுக்கோட்டை — திருச்சிராப்பள்ளி — தஞ்சாவூர் — மாமல்லபுரம் — சென்னை.

இம்மூன்று பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென ரூபாய் 70 கோடி செலவினைக்கொண்ட பெரும் திட்ட வரைவு ஒன்றும் வரையப்பட்டுள்ளது.





பயண வட்டங்களின் மேம்பாட்டுத் திட்ட வரைவு, இந்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதற்கென அனுப்பப்பட்டு, மைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

**மாமல்லபுரம் :**

மாமல்லபுரத்தின் மேம்பாட்டிற்காக ரூ. 6 கோடி செலவில் மாபெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பெற்றுள்ளது. மாமல்லபுரத்தின் குடைவரைக் கோவிலும், கடற்கரைக் கோவிலும், வெண்மணற் பரப்பும், அழகிய கடற்கரையும், மாமல்லபுரத்தை உலகிலுள்ள சிறந்த சுற்றுலா இடங்களில் ஒன்றாக ஆக்குகின்றன. மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னுரிமை அடிப்படையில் முதற்கட்டமாக பின்வரும் ஐந்து திட்டங்களை நிறைவேற்றுவதெனக் கருதியுள்ளது :—

1. சுற்றுச் சாலை அமைத்தல்.

2. வாகனங்கள் நிறுத்துமிடத்தை உருவாக்குதல்.

3. ஒழுங்குமுறையில் அங்காடிகளை ஏற்படுத்துதல்.

4. எழில் வளாகம் உருவாக்குதல்.

5. பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து தருதல்.

இந்த ஐந்து திட்டங்களையும் மேம்படுத்துவதற்காக முதல் தவணையாக ரூ. 25 இலட்சம் வழங்குமாறு நாம் மத்திய அரசினைக் கேட்டுள்ளோம். அவர்களது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதியாக தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் கட்டுவதற்காக 1978-79 ஆம் ஆண்டில் 1,81,814 ரூபாய் செலவிடப்பட்டது. பயணிகள் தங்கவும், உணவினைச் சமைக்கவும் ஏற்ற விடுமுறைக்கால பயணத் திட்டத்திற்காக ரூபாய் 3.5 இலட்சம் 1979-80 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. பயணிகள் தங்குமிட மேம்பாட்டிற்காக 1980-81-ல் ரூபாய் 2.20 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பயணிகளின் தங்குமிடம் கட்டும் பணி நடந்தேறிவருகிறது. சித்திர, சிற்ப வேலைப்பாடு அமைந்த திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்றையும், மாமல்லபுரத்தில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வருங்காட்சியகம் கடற்கரைக்கருகில் சுமார் இருபத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1980-81-ல் இந்த அருங்காட்சியகத்திற்கென ரூ. 9.80 இலட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது; 1981-82-ல் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்காகத் தேவை என்பதும் அரசின் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

[1981 ஏப்ரல் 29

**இராமேசுவரம் :**

இராமேசுவரம் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மிக முக்கியமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாகும். ஸ்ரீலங்காவிலிருந்து கப்பலில் வரும் சுற்றுலாப் பயணிகள் இங்குதான் இறங்க வேண்டும். இராமேசுவரம் அழகிய கடற்கரையினையுடையதாகவும், பொழுது போக்குவதற்குச் சிறந்த இடமாக வும் விளங்குகிறது. இதற்கு அருகாமையிலுள்ள தீவுகள், அங்கு கடல்வாழ் உயிரினங்களைக் கொண்டு தேசிய கடற்பொருள் பூங்கா அமைப்பதற்கு உகந்ததாக இருக்கின்றன. இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வாய்ப்பிருப்பதால், இராமேசுவரத்தையும், அதன் சுற்றுப் பகுதிகளையும் மேம்படுத்த மாபெருந்திட்டத்தை வகுத்துள்ளோம். இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 28 கோடியாகும். இத்திட்டம் பத்தாண்டுகளில் செயல்படுத்தப் படும். இத்திட்டம் அனைத்து நாட்டு உதவிபெறும் தகுதியுடையதாக இருப்பதால் உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்றுத் தரும்படி மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

இங்கு போதிய வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்களையும், உடைகளை மாற்றிக்கொள்ள அறைகளையும் கட்டுவதற்கு அரசு ரூ. 3 இலட்சம் ஒதுக்கி யுள்ளது. இராமேசுவரத்தைக் காண வேண்டுமென்ற ஆவலில் வருகின்ற குறைந்த வருமானமுடைய பயணிகளுக்காக 1981-82-ல் ரூபாய் 10 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் (துயிலக விடுதி) கட்டத் திட்டமிட்டுள்ளது.

**கன்னியாகுமரி :**

நம்நாட்டின் தெற்குமுனையில் அமைந்திருக்கும் கன்னியாகுமரியைக் காண நாள்தோறும் வெளிநாட்டுப் பயணிகளும், தம நாட்டுப் பயணிகளும் வந்தவண்ணமிருக்கின்றனர்.

கன்னியாகுமரிப் பகுதியை மேம்படுத்த பெரும் திட்டத்தை தயாரிக்க வேண்டி சுற்றுலா பற்றி நன்கு அறிந்த வல்லுநர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் இத்திட்டத்தைத் தயாரித்து வருகின்றார்.

குறைந்த வருமானமுடையோர் நிறைந்த பயனைப்பெறும் வண்ணம் இளைஞர் இல்லமும் (துயிலக விடுதி) சுற்றுலா அலுவலகமும் கட்ட முறையே சுமார் ரூ. 5 இலட்சமும், ரூ. 1 இலட்சமும் 1980-81-ல் ஒதுக்கப்பட்டது.

**உதகமண்டலம் :**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் ஏரிப்பகுதியை அழகுபடுத்த ரூ. 20.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள படகு இல்லத்தை விரிவுபடுத்தவும், இப்பகுதியில் குழந்தைகள் இரயில் விடவும்,



1981 ஏப்ரல் 29]

கருதப்பட்டுள்ளது. 1981-82-இல் மேற்படி திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தை மேம்படுத்த ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**ஏற்காடு :**

ஏற்காடு ஏரியை அழகுபடுத்த அரசு இதுவரை ரூ. 6.72 இலட்சம் வழங்கி யுள்ளது. புதிதாகப் படகு இல்லமும், சிற்றுண்டி விடுதியும் கட்டப்பட்டுள்ளன. பயணிகள் படகுகளில் உல்லாசமாகச் செல்வதற்குப் படகுகளும் உள்ளன. மேலும் "லேடீஸ் சீட்" என்னுமிடத்தில் தொலை நோக்கியகம் (Telescope House) ஒன்று கட்ட ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**கொடைக்கானல் :**

கொடைக்கானலில் இரண்டு தொலைநோக்கியகங்கள் ரூபாய் 1.6 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. சிற்றுண்டி இல்லம் கட்ட 1977-78-இல் ரூபாய் 2.8 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1978-79-இல் துயிலக விடுதி கட்ட ரூ. 7.03 இலட்சம் வழங்கப்பட்டது. துயிலக விடுதியும், சிற்றுண்டி இல்லமும் கட்டப் பட்டு வருகின்றன.

**பிச்சாவரம் :**

கிழக்குக் கடற்கரையில் இயற்கையன்னை எழிற்கோலம் பூண்டு, நீர்வழிப் பாதைகளும் காண்பதற்கரிய கானகக் காட்சிகளும் அமைந்த சிறப்பிடமாக பிச்சாவரம் அமைந்துள்ளது. விடுமுறை நாட்களில் மகிழ்வுலா வருவோரும், ஓய்வினை விழைவோரும் சென்று காண்பதற்கான சிறப்பினை உடையது. இப்பகுதியை, மேம்படுத்தி அங்கு வருகின்ற பயணிகள் தங்குவதற்கு ஓய்வுக் கூடம் கட்டுவதற்கு 1978-79-ல் அரசு ரூபாய் 4.5 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த ஓய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பல வசதிகளை அங்கு செய்து கொடுக்க 1979-80-இல் ரூபாய் 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அங்கு படகு இல்லம் கட்டி, வருகின்ற பயணிகள் உல்லாசமாகப் படகு சவாரி செய்ய, படகுகள் வாங்க, 1981-82-இல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்க கருதப் பட்டுள்ளது.

**ஓகேனக்கல் :**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாப் பயணி களை பெரிதும் கவரக்கூடியதாக இருக்கிறது. இந்நீருக்கு நோய்களை நீக்கும் சக்தியும் உண்டு. குறைந்த வருமானம் உடைய பயணிகளுக்காகத் துயிலக விடுதி கட்ட 1979-80-இல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இவ்விடுதி கட்டப்பட்டு வருகிறது. 1981-82-இல் ரூபாய் 5 இலட்சம் செலவில் அங்கு தொங்கு பாலம் கட்டவும் கருதப்பட்டுள்ளது.

**இளைஞர் இல்லங்கள் (துயிலக விடுதிகள்) :**

இளைய தலைமுறையினரும், குறைந்த வருமானமுடையோரும் பல்வேறு இடங்களையும் கண்டு மகிழ்வதற்கு ஏற்றவாறு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த எல்லா இடங்களிலும் இளைஞர் இல்லங்கள் (துயிலக விடுதிகள்) கட்டப்பட்டு வருகின்றன. ஒரு பயணிக்கு ரூபாய் 5 முதல் ரூபாய் 7.50 வாடகை கொடுத்து தங்குவதற்கேற்றவாறு இந்த இல்லங்கள் கட்டப்படவிருக்கின்றன. கீழ்க்காணும் இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

1. ஏற்காடு.
2. மண்டபம்.
3. பிச்சாவரம்.
4. ஒகேனக்கல்.
5. கொடைக்கானல்.
6. கன்னியாகுமரி.
7. உதகமண்டலம்.
8. இராமேசுவரம்.
9. மாமல்லபுரம்.

ஏற்காடு, மண்டபம், ஒகேனக்கல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் இளைஞர் இல்லங்கள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மற்ற இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

**விளம்பரமும் வளர்ச்சிப் பணியும் :**

தமிழ்நாட்டு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய சுவையான தகவல்களை உலகமெங்கும் பரப்பி அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு, இத்துறை விளம்பர வளர்ச்சிப்பணி குறித்த பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது.

**சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிகள் :**

போர் நினைவுச் சின்னத்திற்கு அருகில் உள்ள "தீவுத் திடலில்" அகில இந்திய சுற்றுலா வர்த்தக 8-ம் பொருட்காட்சியை தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தியுள்ளது. இந்தத் தீவுத்திடலின் ஒரு பகுதியை நமது வேண்டுகோளுக்கிணங்க, சுமார் 6.5 ஏக்கர் கொண்ட பகுதியை மத்திய அரசு மாநில அரசுக்கு மாற்றிக் கொடுத்துள்ளது. இப்பொருட்காட்சித் திடலை நிலையான பொருட்காட்சி இடமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதற்காக, இவ்வாண்டில், அரசு அடையாள நிதி ஒதுக்கம் செய்துள்ளது.



பல்வேறு இடங்களையும் கண்டு மகிழவேண்டுமென்ற ஆர்வத்தை மக்களுக்கு உருவாக்கும் பொருட்டு, செய்தி-மக்கள் தொடர்புத் துறையினர் நடத்தும் முக்கியமான பொருட்காட்சி அனைத்திலும் சுற்றுலாத் துறை தொடர்ந்து பங்கு பெற்று வருகிறது.

மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி ஏற்படுத்தப்பட்ட தமிழ் பண்பாட்டுச் சிறப்புப்பொருட் காட்சியில் சுற்றுலாத் துறை சிறப்பாக பங்கேற்றது. இதில் இத்துறை ஒலி-ஒளிக் காட்சியை அமைத்திருந்தது. இக்காட்சி, வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், நம் நாட்டு மக்களையும் பெரிதும் கவர்ந்தது.

**சுற்றுலாத் திரைப்படம் :**

இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களைப் பற்றி அறிவிக்கச் செய்தித் திரைப்படங்களைத் தயாரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. "தமிழ்நாட்டின் விடுமுறை நாள் மகிழ்விடங்கள்" என்பது பற்றிய செய்தித் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திரைப்படம் ஓரிரு திங்களில் தயாரித்து முடிக்கப்படும்.

**நிழற்படத் தொகுப்பகம் :**

இத்துறை நிழற்படத் தொகுப்பகம் ஒன்றை கொண்டுள்ளது. நம் மாநிலத்தில் உள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் பற்றிய நிழற்படங்களின் மூலப் பிரதிகள், வண்ணப் பிரதிகள் சேகரிக்கப்பட்டு, அட்டவணையிடப்பட்டு, இத்துறையில் வைத்து வரப்படுகின்றன. இவை, இத்துறையின் வெளியீடுகள், பொருட்காட்சிகள், விளம்பரங்கள் ஏனைய விளம்பர முறைகள் ஆகியவற்றில் அதிக அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை, செய்தித் தாள்கள், குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை வெளியிடப்படும் ஏடுகள், போக்குவரத்து வர்த்தக ஏடுகள் ஆகியவற்றிற்கும் வழங்கப்படுகின்றன.

நமது வெளியீடுகளில் வண்ண நிழற்படங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் 1981-82ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் வண்ணப் புகைப்படம் தயாரிக்கத் தேவையான கருவியும் (Colour Photo processing Equipment) ஒலி—ஒளிக் கருவியும் (Audio-Visual equipment) வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**வெளியீடுகள் :**

தமிழ்நாட்டின் சிறப்பு பற்றிய விரிவான தகவலையும் இங்கு கிடைக்கப் பெறும் வசதிகள் பற்றிய அடிப்படைத் தகவலையும் அளிப்பது இத்துறையின்

தலையாய பணிகளில் ஒன்றாகும். ஏற்கெனவே வெளியிடப்பட்ட கையேடு களில் சில திருத்தங்களையும், புதிய மாற்றங்களையும் சேர்த்து அனைவரை யும் கவரத்தக்க வெளியீடுகளும் 1980-81ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

இத்துறையால் வெளியிடப்பட்ட சுற்றுலா பற்றிய கையேடுகள், இம மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா அலுவலகங் கள், செய்தி மையங்கள் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுகின்றன. வெளிநாடு களில் உள்ள சுற்றுலா வர்த்தகர்கள், அந்நாடுகளிலுள்ள சுற்றுலாப் பயணி களுக்கு வழங்குவதற்காக அக் கையேடுகள் இந்திய சுற்றுலா அலுவலகங்கள், ஏர் இந்தியா அலுவலகங்கள் ஆகியவற்றிற்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா முகவர்கள் விமானப் போக்குவரத்து நிறுவன அலுவலகங்கள், உணவகங்கள், ஏனைய சுற்றுலாப் போக்குவரத்து வர்த்தக அமைப்புகள் ஆகியவற்றிற்கும் சுற்றுலா பற்றிய இக்கையேடுகள் வழங்கப்படு கின்றன.

## பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் :

பொங்கல் விழாக் காலம் தமிழ்நாட்டிற்குரிய மிக முக்கியமான சுற்றுலாக் காலமாகும். இக்கால அளவில், வெளிநாட்டு மற்றும் ஏனைய மாநிலங் களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அதிக அளவிற்குத் தமிழ்நாட்டிற்கு வருகின்றனர். முக்கியமான சுற்றுலா நிலையங்கள் அனைத்திலும் பொங்கல் சுற்றுலா விழாவை ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்துறை நடத்தி வருகிறது.

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஆகிய மலை வாழ் இடங்கள் அனைத்திலும் " கோடை விழா " வைக் கொண்டாட இத்துறை சிறப்பாக உதவி புரிகிறது.

## சுற்றுலாத் தகவல் நிலையங்கள் :

1980-81 ஆம் ஆண்டில் நாம் சுற்றுலாத் துறையை பலப்படுத்தியுள்ளோம். சென்னையில் புதியதாக சுற்றுலா அலுவலகம் ஒன்றை நாம் ஏற்படுத்தியுள் ளோம்.

வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் டில்லியில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.



மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்றை யும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

திருநெல்வேலி இரயில் சந்திப்பு நிலையத்திலும், சென்னை மத்திய இரயில் நிலையத்திலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

சுற்றுலா வளர்ச்சியை வணிக அடிப்படையில் கவனிக்கும் பொறுப்பேற் றுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அளிக்கும் நிதி உதவி ஆண்டுக்காண்டு பெருகி வருகிறது. இதனால், இத்துறையில் நல்ல முன்னேற்றம் காண இக்கழகத்திற்கு வழி ஏற்பட்டது. கடந்த மூன்றாண்டு களில் இக்கழகம் வணிக அடிப்படையில் சீரமைக்கப்பட்டு, அதன் பணிகள் பல மடங்கு விரிவடைந்துள்ளன. தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு இன்றிய மையாத் தேவையான பயண வசதிகளையும் தங்கும் வசதிகளையும் உருவாக் கித் தருவதில் இக்கழகம் முன்னணியில் நிற்கிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இக்கழகம் அளிக்கும் போக்குவரத்து வசதிகளையும், தங்கும் இடவசதிகளையும் விரும்பி ஏற்கின்றனர். குறைந்த நியாயமான செலவில் அதிக வசதிகளை இக்கழகம் அளிப்பதே இதற்குக் காரணமாகும். இதனால், இக்கழகத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு கோடியையும் மிஞ்சி யுள்ளது. எனவே, இது 1—7—1980 முதற்கொண்டு, வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறியுள்ளது.

இக்கழகத்தின் வருவாய் 1971-72-ல் ரூபாய் 4.58 இலட்சமாக இருந்தது. 1976-77-ல் இக்கழகத்தின் வருமானம் ரூபாய் 68.51 இலட்சமாக உயர்ந்தது. 1980-81-ல் இவ்வருவாய் ரூபாய் 153 இலட்சமாகப் பெருகியது. 1981-82-ல் இது ரூபாய் 200 இலட்சமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. முதன் முறையாக இக்கழகம் 1977-78-ல் நிகர ஆதாயம் ஈட்டியது. முந்தைய ஆண்டு களில் ஏற்பட்ட இழப்புகள் இப்பொழுது ஈடு செய்யப்பட்டுவிட்டன. மேலும், அரசிடமிருந்து பெற்ற கடன்களுக்கும், இக்கழகம் வட்டி கட்டத் தொடங்கி யுள்ளது. வட்டி செலுத்துவதற்கு முன்னர் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிகர வருவாய் ரூபாய் 15 இலட்சமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 1971-ல் ரூபாய் 50 இலட்சமே. இது 1974-ல் ரூபாய் 100 இலட்சமாகவும், 1977-ல் ரூபாய் 200 இலட்சமாகவும் 1980-ல் ரூ. 500 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இக்கழகத்தின் தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 195.05 இலட்சமாகும்.

[1981 ஏப்ரல் 29

1981-82-ல் இக்கழகத்திற்கு பங்கு மூலதன உதவியாக ரூபாய் 20 இலட்சமும் கடனுதவியாக ரூபாய் 20 இலட்சமும் அரசினால் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஓட்டல்கள் :**

1971-ல் இக்கழகம் அமைக்கப்பட்டபோது அரசால் நடத்தப்பட்ட 6 சுற்றுலா மாளிகைகளை அது தனது நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொண்டது. அப்போது அச்சுற்றுலா மாளிகைகளில் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 253 ஆக இருந்தது.

1975-76-ல் மொத்தம் 752 படுக்கை வசதிகள் கொண்ட 11 சுற்றுலா மாளிகைகள் இருந்தன. அண்மையில் மதுரையில் கட்டப் பெற்ற 3 நட்சத்திர ஓட்டல் உட்பட தற்போது மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை கழகத்திற்குச் சொந்தமான 16 ஓட்டல்களிலும் 1,095 ஆகும். அத்துடன் மதுரை, உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, ஏற்காடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள ஓட்டல்கள் விரிவு படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூரில் ரூபாய் 35 இலட்சம் செலவில் கட்டப்படும் 91 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு புதிய மூன்று நட்சத்திர ஓட்டல் விரைவில் செயல்படத் தொடங்கும். மாமல்லபுரத்தில் ரூபாய் 30 இலட்சம் செலவில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய 30 புதிய குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. முதுமலை, காஞ்சிபுரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய ஓட்டல்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. சென்னையில் நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்ட, இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வழி நெடுகிலும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இராணிப்பேட்டையிலும், உளுந்தூர்ப்பேட்டையிலும் இரண்டு "பெருவழி விடுதிகள்" செயல்படத் தொடங்கியுள்ளன. கிருஷ்ணகிரியில் மூன்றாவது "பெருவழி விடுதியைக்" கட்டும் பணி நடந்தேறி வருகிறது. இம்மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்திலும் "பெருவழி விடுதிகளைக்" கட்ட இக்கழகம் விழைகிறது.

தற்போது கழகம் நடத்தி வரும் ஓட்டல்கள், பெருவழி விடுதிகள் ஆகியவை பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன :—

**ஓட்டல்கள் :**

சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை (இரு ஓட்டல்கள்). இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி (இரு ஓட்டல்கள்), உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஒகேனக்கல், மாமல்லபுரம்.



1981 ஏப்ரல் 29]

**பெருவழி விடுதிகள் :**

இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை.

ஓட்டல்களிலிருந்து 1971-72 ஆம் ஆண்டில் ரூபாய் 4.50 இலட்சம் வருவாய் ஈட்டியது. இது 1976-77 ஆம் ஆண்டில் ரூபாய் 40 இலட்சமாகவும், 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 85 இலட்சமாகவும் உயர்ந்தது.

**போக்குவரத்து :**

கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு கடந்த மூன்றாண்டுகளில் முழுவதும் மாற்றியமைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் தெரிவித்த அனுபவத்தின் அடிப்படையில் பழைய பயணத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டதுமல்லாமல் எல்லோரையும் கவரும் வகையில் புதிய பயணத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நமது பயணத்திட்டங்கள் நாட்டிலேயே மிகச் சிறந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அண்டை மாநிலங்களிலும் இதுபோன்ற கழகங்கள், நமது போக்குவரத்துப் பணி குறித்துக் கண்டறிந்து செல்வதற்காக தங்களது அலுவலர்களை அனுப்பியுள்ளதுவே இதற்கு சான்றாகும். இக்கழகம் தற்போது பின்வரும் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகின்றது.

1. சென்னை மாநகரில் முக்கிய இடங்களை அன்றாடம் சுற்றிப் பார்த்தல்.

2. காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்க்கும் அன்றாடப் பயணம்.

3. திருப்பதிக்கு அன்றாடப் பயணம்.

4. ஏழு நாள் தமிழ்நாடு சுற்றுப்பயணம்.

5. ஏழு நாள் தென்னிந்திய சுற்றுப்பயணம்.

வாடிக்கையாளர்களின் வசதிக்குத் தகுந்த வகையில் தனிப்பட்ட சுற்றுலாப் பயணங்களும் நடத்தப்படுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே நாம் ஏற்பாடு செய்யும் சுற்றுலாப் பயண திட்டங்கள் மிகவும் பாராட்டு பெற்றவையாக உள்ளன. இப்பகுதிகளிலிருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு, மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பொது விற்பனை முகவர்களைக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் இந்தியாவிலேயே இத்தகைய ஏற்பாட்டை முதன் முதல் மேற்கொண்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாப் பயணச் சீட்டுகள் எளிதில் கிடைக்க வகை செய்யும் பொருட்டு, சென்னையிலுள்ள பெரிய ஓட்டல்களும், சுற்றுலாப் பயண முகவர் அமைப்புகளும் 1979 அக்டோபர் திங்கள் முதல் இக்கழகத்தின் பயணச் சீட்டு விற்கும் முகவர்களாக ஆக்கப்பட்டனர். பம்பாய், டில்லி போன்ற பெரும் நகர்களிலும் நமது சுற்றுலாப் பயண ஊர்தியில் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டுகள் கிடைக்கின்றன.

1972 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவில் தொடக்கத்தில் 2 சொகுசு ஊர்திகள் மட்டுமே இருந்தன. தற்போது குளிர் சாதன வசதியுடன் கூடிய ஒரு சுற்றுலா ஊர்தி உட்பட மொத்தம் 15 சொகுசு ஊர்திகள் உள்ளன. விரைவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய ஊர்திகள் இன்னும் இரண்டு சேர்க்கப்படவுள்ளன.

நமது சுற்றுலாப் பயணங்களுக்கு இவ்வூர்திகள் பயன்படுத்தப்படுவதோடு, கூட்டமாகச் சேர்ந்து சுற்றுலா செல்வோருக்கு வாடகைக்கும் விடப்படுகின்றன.

போக்குவரத்துப் பிரிவில் 31—3—1981 ஆம் நாள் வரையில் 35 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவிலிருந்து 1972-73 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாயும் 1976-77 ஆம் ஆண்டில் 14 இலட்சம் ரூபாயும் வருவாய் கிடைத்தது. 1980-81 ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது.

**ஏனைய நடவடிக்கைகள்:**

**படகு இல்லம்.**—உதகமண்டலத்தில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான படகு இல்லத்தை 1977 ஆம் ஆண்டில், அதனிடமிருந்து இக்கழகம் எடுத்துக் கொண்டது. புதிய படகு இல்லம் ஒன்று ஏற்காட்டில் 1979 ஏப்ரலில் கட்டப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக இப்படகு இல்லத்தில் அதிகப் படகுகள் இயக்கப்பட்டுள்ளன.

**சுற்றுலாப் பணி நிலையம்.**—மாமல்லபுரத்தில் உள்ள சுற்றுலாப் பணி நிலையம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படுகிறது. மாமல்லபுரத்தைக் காண வருகின்ற பயணிகளுக்குத் தேவைப்படும் பெட்ரோல், மோட்டார் உதிரிப் பாகங்கள், சுற்றுலாத் தலங்கள் பற்றிய கையேடுகள் ஆகியவற்றை இந்தப் பணி நிலையம் விற்பனை செய்கின்றது. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இங்கு டீசல் விற்பனைப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. டீசலால் இயங்கும் வண்டிகளில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இது பேருதவியாக இருக்கிறது.



**சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிகள்.**—தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னையில் ஆண்டுதோறும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்கிறது. 1981 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் நாளுடன் முடிவடைந்த 8-வது வருடாந்திர சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை சுமார் 20 இலட்சம் மக்கள் கண்டு களித்தார்கள்.

**நினைவுப் பொருள் பிரிவு.**—தமிழ்நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் நமது மாநிலம் பற்றிய இனிய நினைவுகளுடன் செல்வதற்காக சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கவர்ச்சியான நினைவுப் பரிசுப் பொருட்களை வழங்குகிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெளியிடும் படஅட்டைகளும், தமிழ்நாட்டின் சுற்றுலா வரைபடமும் சுற்றுலாப் பயணிகளிடையே ஏற்கெனவே பிரபலமடைந்துள்ளன. கவர்ச்சியான பணப்பை—கைப்பை ஒன்று தற்போது நினைவுப் பரிசுப் பொருளாக வழங்கப்படுகிறது. கழுத்துச் சுற்றுத் துணி (Scarves) வேலைப்பாடுகளுடன் கூடிய தட்டுகள் போன்ற ஏனைய பிற பரிசுப் பொருள்கள் விரைவில் வழங்கப் பெறவுள்ளன.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள்.**—சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டபோது அதில் மொத்தம் 143 பேர்கள் பணியாற்றினர். தற்போது 750 பேர்கள் பணியாற்றுகிறார்கள். பணியாளர்களின் நலனில் நிர்வாகம் எப்போதுமே அக்கறை செலுத்தி வருகிறது. உணவகப் பிரிவிலும் போக்குவரத்துப் பிரிவிலும் உள்ள பணியாளர்கள், அரசின் பல்வேறு சட்டங்களில் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு சம்பளம் மற்றும் படிகளைவிட அதிகமாகவே பெற்று வருகிறார்கள். இத்துடன், கழகம் தனது பணியாளர்களுக்குப் பல ரொக்க, ரொக்கமல்லாத பயன்களையும் வழங்கி வருகிறது.

இக்கழகம் தனது பணியாளர்களுக்கு முதன் முதலாக 1978 செப்டம்பரில் ஊதியக் கொடையை B ; வழங்கியது. அதிலிருந்து தொடர்ந்து கொடுத்தும் வருகிறது.

பணியாளர்கள் தங்களது பிரிவில் ஈட்டிய உபரித் தொகையில் பங்கு பெற இயலும் வண்ணம் ஊக்க ஊதியக் கொடை வழங்கும் முறை தயாரிக்கப்பட்டு 1979 அக்டோபர் முதல் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த நடைமுறை 1980 அக்டோபர் முதல் நாளிலிருந்து மேலும் தாராளமாக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகளிலும் பெருவழி விடுதிகளிலும் (Motels) உள்ள பணியாளர்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்கப்படுகிறது. பணியாளர் பணிக்கொடை பொறுப்பு நிதி ஒன்று 30—1—1980 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளியூரில் உள்ள பணியாளர் அனைவருக்கும் வீட்டு வசதி செய்து தரும் பொருட்டு, படிப்படியான நிலையில் பணி

யாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகப் பணியாளர் அனைவருக்கும் மருத்துவ உதவித் திட்டம் ஒன்றைக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அரசு மருத்துவ மனைகள் அனைத்திலும் இதன் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களுக்கு நிகராக இலவச மருத்துவ சிகிச்சை பெறலாம்.

தனி ஊதியங்கள் (Adhoc wages) பெற்ற பணியாளர்கள் 1—1—1979 முதல் காலச் சம்பள ஏற்ற முறையின் கீழ் கொண்டு வரப்பட்டனர். "சிறப்பாக அமைக்கப்பட்ட ஊதியங்கள் துணைக் குழுவின்" பரிந்துரைகளை ஒட்டி, மலைப் பகுதிப் படி, அகவிலைப்படி போன்ற சிறப்புப் படிகளை வழங்குவதன் மூலம் பணியாளர்களின் ஊதியங்கள் 1980 அக்டோபர் முதல் கணிசமான அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டன.

இவை அனைத்துடன் சேர்த்து பணியாளர் ஒருவரின் மாத சராசரி ஊதியம் 1971-72-ல் ரூ. 140 ஆகவும், 1976-77-ல் ரூ. 210 ஆகவும் இருந்தது. பின் 1980-81-ல் ரூ. 420-க்கு உயர்ந்தது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1981 ஏப்ரல் 30.

சித்திரை 18, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

[illegible] சொற்பொழிவின் இறுதியில் உடுக்குறி* இடம்பெற்றிருந்தால் அவ்வுரை [illegible] பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. சாம்பசிவம் மறைவு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. சாம்பசிவம் அவர்கள் 29—4—1981-ம் தேதியன்று மறைந்ததை இப்போவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாம்பசிவம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதியிலிருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1962 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரை சேலம் உள்ளாட்சிமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

முன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்).

2. வரவு-செலவுத் திட்டம் 1981-82—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,68,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. க. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாஜிஸ்திரேட்டுகள், பொதுமக்கள் ஆகியோருக்கு சரியான வசதி ஏற்படுத்தாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,68,69,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

Thiru N. S. V. CHITHAN : Mr. Deputy Speaker, Sir to discuss the need to provide facilities to lawyers at Court rooms, I move :

"That the allotment of Rs. 7,68,69,000 under Demand No. 13—Administration of Justice—be reduced by Rs. 100."

திரு. பி. சுவாமிநாதன் என்கிற சொர்ணம்: அவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் [illegible] பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,68,69,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. கி. கா. நல்லப்பன்: அவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை வட்டம், பெருந்துறைக்கு சிவில் நீதி மன்றம் ஒன்று புதிதாக ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,68,69,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,12,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, [illegible] சிறைச்சாலையைப் புதுப்பித்தல் குறித்தும் அங்குள்ள கைதிகளுக்கு [illegible] நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,12,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

THIRU N. S. V. CHITHAN : Mr. Deputy Speaker, Sir, to discuss about the failure of the Government to set up separate prisons for political prisoners as suggested by the Justice Ismail Commission, I move.

"That the allotment of Rs. 6,12,8,000 under Demand No. 14—Jails be reduced by Rs. 100.

திரு. பி. சுவாமிநாதன் என்கிற சொர்ணம்: அவைத் தலைவர் அவர்களே, சிறைக் கைதிகளை [illegible] காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,12,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. இரா. கருப்பையா: அவைத் தலைவர் அவர்களே, சிறைத்துறையில் [illegible] பற்றியும், பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் தண்டனை அனுபவித்துவரும் ஆயுள் தண்டனைக் கைதிகளை [illegible] 15 [illegible] விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,12,78,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் [illegible] மாண்புமிகு அமைச்சர் அவர்கள் [illegible] கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அரசினுடைய கொள்கைகளைப் பற்றக

---

* 940-965, 966-1007 பக்கங்களில் இணைப்பு [illegible] ஆக சேர்க்கப்பட்டுள்ளது.

[illegible] [1981 ஏப்ரல் 30]

[illegible]

திரு. கா. [illegible]: [illegible]

[illegible]

Brutality and bribery—the two Bs—have become a way of life with some Administrators.

[illegible]

சிறைக்குள் [illegible] கைதிகளையும் அடிக்க கொட்டடைக்குள் [illegible] முதல் வேலையாக. ஆனால் [illegible] காலத்தில் அதிகாலை [illegible]. தனி ஒரு கைதியையும் வெளியில் கொண்டு வந்து 5, 10 வார்டர்கள் சேர்ந்து அடித்து, அரை உயிராக்கி மீண்டும் கொட்டடையில் அடைப்பார்கள். சாப்பாடு கொடுக்கும்போதும் அவர்களை ஒவ்வொரு தடவையும் அடிப்பார்கள். இந்த முறை இன்றும் நமது சிறைகளில் கையாளப்படுகிறது. அவர்களை அம்மணமாக நிறுத்தி உடம்பில் தண்ணீர் ஊற்றி அடிப்பது. டவருக்குக் கொண்டு போவது என்றாலே அடிப்பதற்கு கொண்டு போவது என்று அர்த்தம். அவர்களுக்கு மொட்டை அடிப்ப[illegible]



1981 ஏப்ரல் 30] [திரு. கா. [illegible]]

[illegible] போன்ற முறைகளினால் [illegible] சாப்பாட்டிலே கல்லையும், மண்ணையும் கலந்து [illegible]. சித்திரவதை செய்யும் முறைகளில் இதுவும் ஒன்று. [illegible] ஒன்று கைதி தற்கொலை செய்து கொள்ளுகிறான், அல்லது தவறான இடத்தில் அடிபட்டு சாகிறான்.

திருச்சி சிறையில் இரண்டாண்டுக்கு முன்பு, நான்கே நாட்களில் ஏற்பட்ட இரண்டு மரணங்கள், நமது சிறைகளில் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு எழுப்பப்பட்ட நினைவுச் சின்னங்கள் ஆகும். இந்த மரணங்கள் சம்பந்தமான [illegible] ரிப்போர்ட்டை வெளியிடுவதில் [illegible] உண்டாக்கி உள்ளது.

(ஆரம்பகம் 9-10)

[illegible] அமைச்சர் [illegible] ஆரம்பத்தில் [illegible]. ஆனால் ஆரம்பத்தில் வைக்கவில்லை. [illegible] அந்த ரிப்போர்ட்டை [illegible]. ஆகவே, [illegible] தெரிவித்துக்கொள் [illegible].

ரிப்போர்ட் வைக்கப்பட [illegible] நோக்கில் இன்[illegible]. அந்த [illegible] மரணம் சம்பந்தமாக இன் [illegible] தகவல் [illegible]. [illegible] சொல்கிறார்கள், [illegible] அல்லது [illegible] தெரியாது.

[illegible] எதிர்பார்க்கிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 30

இன்று அனைத்துச் சிறைகளிலும் பெரும் பதட்ட நிலை உண்டாகக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆயுள் தண்டனைக் கைதிகள் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் முன்புபோல் விடுதலை செய்யப்படவில்லை. போன வாரம் இது பற்றிய செய்தியில் உண்ணாவிரதம் நடந்தது. இந்த நிலையில் தமிழக அரசு ஒரு முடிவை எடுத்து, 10 ஆண்டு சிறைத்தண்டனை முடித்தவர்களை விடுதலை செய்யும் அதிகாரத்தைக் கோரும் ஒரு சட்டத்தை இங்கே ஏகமனதாக நிறைவேற்றி, மைய அரசுக்கு அனுப்பி வைத்தது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. ஊறுகாய் பானையில் போட்டு வைப்பதைப்போல போட்டு வைத்திருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆனால், சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டும் கொடுத்திருக்கிற முடிவுப்படி 1978 டிசம்பர் மாதம் தண்டிக்கப்பட்டிருக்கிற கைதிகளைப் பொறுத்தவரையில் அட்வைசரி போர்டு வைத்து, அவர்கள் [illegible] விடுதலை செய்யலாம் என்று தீர்ப்புக் கூறியதைக் கொண்டு தமிழக அரசு அவர்கள் விடுதலை பற்றி பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதை வரவேற்கிறேன். இதில் எந்தவித [illegible] விடுதலை [illegible] வேகம்தான் முக்கியப் பிரச்சினை ஆகும். இரண்டு ஆண்டுக்காலம் விடுதலை முடக்கப்பட்டவர்களுக்கு பொறுமை இருக்காது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சாதாரண காலத்தில் இந்த விஷயத்தில் ஏற்படும் விசாரணை தாமதம் இப்போதும் ஏற்படுவதாக இருந்தால் அது இன்றைய பதட்ட நிலையைத் தீவிரப்படுத்தி விடும். ஆகவே ஆயுள் தண்டனைக் கைதிகளின் விடுதலையை உடனே ஆரம்பிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் அதைப் பார்க்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

தமிழகத்தின் அனைத்து சிறைக் கைதிகள் மத்தியில் பெரும் அதிருப்திக்குரிய பிரச்சினை கைதிகளின் உணவு சம்பந்தமானதுதான். கல், மண், புழு எல்லாம் சர்வசாதாரணம். இதை நான் எக்ஸாஜரேட் பண்ணிச் சொல்லவில்லை, இருக்கின்ற நிலைதான். பெருவாரியானவர்களுக்கு உணவுக்காக ரூ. 3.55 செலவு செய்யப்படுகிறது. இன்றைய விலைவாசியில் இது அரை வயிற்றுச் சோறு என்பதற்கு இதுவே சான்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இந்தத் தொகைக்கான உணவும் கைதிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. மாநிலம் முழுவதும் மேலிருந்து கீழ்வரை உள்ள அதிகாரிகள் அந்த ரேஷனைத் திருடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அமைச்சர் அதுபற்றி சமீபத்தில் நடவடிக்கை எடுத்ததாகக் கூறுவது 'ஸ்மால் ஃபிஷை' தான். It is only a tsip of the ice-berg



1981 ஏப்ரல் 30] [திரு. ரா. உமாநாத்]

சில விதிவிலக்கைத் தவிர, பெரிய அதிகாரிகள் எல்லாம் கைதிகளின் உணவைத் திருடுவதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று நிச்சயமாகக் கூற முடியும். பெஸ்ட் உதாரணம் என்னவென்றால் ஒரு சிறையில் 100 கிலோ கைதிகளுக்குக் கொடுக்க வேண்டிய ரேஷனில், அதிகாரிகள் 30 கிலோ தனியாக எடுத்து வைத்துவிட்டு, மீதியைக் கொடுப்பார்கள். அப்படிச் சேகரித்த ஸ்டாக்கை அடுத்த மாதம் தங்களுடைய சப்ளையர் இடத்தில் வாங்கியதாக பில் வாங்கி, கணக்கில் எழுதி, பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதில் பில் கொடுத்ததற்காக வியாபாரிக்கு ஒரு கமிஷன் கொடுத்துவிட்டு, மிச்சப் பணத்தை அதிகாரிகள் வைத்துக்கொள்கிறார்கள். இது ஒரு 'மோடஸ் ஆபராண்டி'.

இன்னொரு முறை என்னவென்றால், தனியார்தான் ஜெயிலுக்கு சப்ளை செய்வார். ஆனால் 'சிந்தாமணி' பில் தனியார் கொடுப்பார். எப்படி 'மாஜிக்' ஆச்சர்யமாக இருக்கிறதா? நம்முடைய நாட்டில் இப்படி பல ஆச்சர்யங்கள் நடந்துகொண்டு இருக்கின்றன. அங்கே நுழைந்து பார்த்தால் தான் அதைத் தடுக்க முடியும். நீங்கள் இந்த அமைச்சரவையின் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறபோதே சொன்னேன், நீங்கள் ஒரு பெரிய 'சீரியஸ் சேலஞ்ஜை' ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள் என்று.

இன்னொரு வேடிக்கையை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருச்சி சிறையில் நடந்தது அது. ஐ.ஜி. ஆபீஸ் ஆடிட் திடீரென்று வந்தது. அதிகாரிகள் திருடி வைத்திருந்த தானிய வகையறாக்களை அவசர அவசரமாக பல இடங்களில் ஒளிய வைத்தார்கள். இதை கண்டறிந்த கைதிகள், ஆடிட் டீமை வற்புறுத்தி பல இடங்களில் பார்க்கச் செய்து, ஆங்காங்கு ஒளித்து வைக்கப்பட்டிருந்த சரக்குகளைக் கைப்பற்றினர். இந்தச் சரக்குகளின் மதிப்பு—எனக்குக் கிடைத்த தகவலின்படி—சப்ஜெக்ட்-டு-கரக்ஷன்—7½ டன் தானியமாகும். இதற்காக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, அங்கேயிருந்த கைதிகள் கேரோ நடத்தினார்கள். அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை அதற்காக எடுக்கப்படும் என்று தெரிவித்த பின்னர்தான் அவரவர்கள் லாக்-அப்பிற்குச் சென்றார்கள். நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்பட்டதே தவிர, நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்கிற விவரம் தெரியவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், ஐ.ஜி. ஆபீஸ் ஆடிட் பார்ட்டியும் இதிலே கூட்டு சேர்ந்து விட்டனசா என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த மாதிரி எல்லாச் சிறைகளிலும் இருக்கின்றது. வேலியே பயிரை மேயும் நிலைமை வந்து விட்டால், அவர்களுக்காகச் சாப்பாட்டுக்காகச் செலவழிப்பதாகச் சொல்லப்படுகிற ரூ. 3.55 கூட அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை, பாதி வயிறு கூட சாப்பாடு இல்லை என்கிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 30

அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. திருச்சி சிறை மருத்துவமனையில் நோயாளிகள் சோதனைத் திருடி, அதன் மூலம் சேர்க்கப்பட்ட 96 கிலோ அரிசியைக்கைதிகள் கண்டுபிடித்து காட்டிக் கொடுத்தார்கள். இதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த மாதிரி மாநில ரீதியில் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளை போய்க்கொண்டு இருக்கிறது. இந்த ராக்கெட்டை உடைக்காமல், அந்த அதிகாரிகளைக் கைது செய்து, அதே சிறையில் அடைத்து கீரைக் குழம்பு போடாமல், இருக்கின்ற வரையில், இப்படிக் கைதிகளுக்காக ஒதுக்கப்படுகின்ற பணம் சீரான முறையில் செலவாகாது, கைதிகளுக்கும் சரியான முறையில் உணவு கிடைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நடவடிக்கைகளைத் தடுக்க நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிறை நிர்வாகத்திற்குச் சம்பந்தம் இல்லாத ஒரு தனி 'விஜிலென்ஸ் செல்' அமைத்து, அவர்கள் எந்தச் சிறையையும், எந்த நேரத்திலும் 'ரெய்டு' செய்யலாம், எந்த அதிகாரியின் வீட்டையும் 'ரெய்டு' செய்யலாம், உணவின் தரத்தையும், பொருளின் தரத்தையும் 'செக்' செய்யலாம், என்கிற முறையில் ஒரு 'விஜிலென்ஸ் செல்' அமைக்க வேண்டும். It should be independent of the Jail department.

அதைப்போலவே, உணவுப் பொருள்கள் வழங்குவதில் இருந்து உணவுப் பொருள்களை சமையல் செய்கிற வரையில் கண்காணிக்க—கேரளா போன்ற மாநிலங்களில் இருப்பதுபோல்—கைதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் கண்காணிப்புக் கமிட்டிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு விஷயத்தில். 'மிக்ஸ்ட் டையட்' எடுத்து விடுங்கள். எல்லோருக்கும் அரிசி டையட் கொடுங்கள். சோளம், ராகி நிறுத்தி, அரிசிக் கஞ்சி போட வேண்டும் என்று ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன் சிபார்சு செய்துள்ளது. பாலிஷ் ரைஸ் தருகிறேன் என்று திருச்சி சிறைக்கு அமைச்சர் வந்திருந்த போது வாக்குறுதி அளித்தார்கள். அதை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன் இன்னொரு சிபார்சையும் செய்து இருக்கிறது. அதாவது, கறியும், மீனும் வாரம் ஒருமுறை மாற்றி, மாற்றிப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அந்தச் சிபார்சை அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 30] [திரு. ரா. உமாநாத்]

சிறைகளில் ஏராளமான ஊழல்கள் நடைபெறுகின்றன. இன்னும் ஊழல்கள் சொல்ல வேண்டுமா? நல்லெண்ணை என்று சொல்லி கடலெண்ணை கொடுப்பது, சிறைப் பசு மாடு வெளியில்தான் ஏலம் விடவேண்டும். ஆனால், சில சிறைகளில் மாடு தானாகவே சூப்பிரண்டெண்ட் வீட்டிற்குப் போகும். ஜெயிலர் வீட்டுக்குப் போகும். கறவு மாட்டின் பாலும் அதிகாரிகளின் வீட்டிற்குப் போகும்; உறவினர்களுக்குப் பேட்டி கொடுப்பது என்று சொன்னால். 'எனக்கு லஞ்சம் கொடுப்பது என்று சொன்னால் உடனே, பேட்டி கொடுக்கப்படும், கொடுக்கவில்லை யென்றால், இன்று கிடையாது, நாளை என்று மிரட்டுவார்கள்', இந்த அளவிற்கு அந்தச் சிறை இலாக்கா ஒரு 'டென் ஆப் கரப்ஷன்' என்கிற முறையில் மாறியிருக்கிறது. இது இன்றைக்கு ஏற்பட்டது அல்ல. கடந்த காலத்தில் நடந்ததை அப்படியே நீங்கள் 'இன்ஹெரிட்' செய்து இருக்கிறீர்கள். அதைக் கிளியர் செய்யும் பொறுப்பு இன்றைக்கு உங்களிடத்தில் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு திருட்டு ஜெயில்களில் நடக்கிறது என்று சொன்னால், ஜெயில் விசிட்டர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கலாம். இன்றைய விசிட்டர் சிஸ்டம் ஒரு 'டோட்டல் பெயில்யூர்' என்பதற்கு இந்த நிகழ்ச்சிகள் ப்ரூப்பாக, நிரூபணமாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைதிகளுக்கு விசிட்டர்கள் பேரில் நம்பிக்கை இல்லை. விசிட்டர்கள் பேரில் நம்பிக்கை ஏற்படாததற்குக் காரணம், கனம் அமைச்சர்களிடத்தில் சாட்சியம் சொன்னதற்காக 12 ஜென்மக் கைதிகள் கடலூர் சிறைக்கு மாற்றப்பட்டார்கள். இன்னும் அவர்களைப் பழைய இடத்திற்கே திரும்ப அனுப்ப அமைச்சரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்படி இருக்கின்ற நிலைமையில் எப்படி கைதிகள் விசிட்டர்களிடத்தில் சொல்வார்கள். ஆகவே, நான் கூறிக்கொள்கிறேன். எம்.எல்.ஏ.-க்கள் உள்ளிட்ட 'விசிட்டர்கள் கமிட்டியை' நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அதைத்தவிர வேறு வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாராளமாக 'பெரோல்' விடுவதாகக் குறிப்பு கூறுகிறது. அதற்கு அமைச்சர் அவர்களும் கணக்குக் கொடுக்கலாம். ஆனால், என் அனுபவம் ஒன்றை நான் சொல்லிக் கொள்கிறேன். குருசாமி என்ற ஆயுள் தண்டனைக் கைதியின் தகப்பன், தான் இறப்பதற்கு முன்பு மகனுடன் ஒரு வாரம் வாழ விடுங்கள் என்று கேட்கிறார். அவர் எனக்கும் கடிதம் எழுதினார். நான் தான் பெரோல் பெட்டிஷனை அமைச்சர் அவர்களிடத்தில் நேரடியாகக் கொடுத்தேன். ரொம்ப நாள் ஆயிற்று பதில் வரவில்லை. அப்புறம் மறுப்பு. அந்தத் தகப்பன் இறந்து விட்டார். நான் கேட்கிறேன், அந்தக் கைதியை

மகனுடன் ஒரு நாளைக்குக் கூட வாழவிடாமல், அவனை நொந்து சாக அடித்து விட்டீர்களே, இதனால் நம்முடைய சர்க்காருக்கு என்ன லாபம் கிடைத்தது?

(முற்பகல் 9-20)

இதற்குக் காரணம் ரெட் டேப் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சொல்வாரேயானால் அந்த டேப்பைக் கொளுத்த வேண்டியதுதானே தவிர ஒரு கிழவன் சாகிற நேரத்திலே ஒருநாள் தன்னுடைய மகனுடன் இருப்பதற்கு இடம் கொடுக்காத அந்த டேப்பை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இதை நான் மிகவும் ஆத்திரத்தோடு சொல்கிறேன், மிகவும் எமோஷனோடு சொல்கிறேன். ஆகவே குறுக்கே நிற்கின்ற தடைகளை எல்லாம் உடைத்தெறிய வேண்டும்.

அடுத்து இன்னொரு விடுப்பு சிஸ்டம். அதாவது வருடத்திலே 15 நாட்கள் அவசர விடுப்பு. அது பிரித்து பிரித்து முதல் தடவை ஆறு நாள் இரண்டாம் தடவை மூன்று நாள் மூன்றாம் தடவை மூன்று நாள் நான்காம் தடவை மூன்று நாள் என்று கொடுக்கப்படுகின்றது. அந்த முறையினை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது பாளையங்கோட்டையிலிருந்து தஞ்சைக்கோ அல்லது கடலூரிலிருந்து மதுரைக்கோ செல்ல வேண்டும் என்றால் கொடுக்கப்படுகின்ற மூன்று நாட்களில் போக்குவரத்திலேயே இரண்டரை நாட்கள் போய்விடும். ஆகவே அப்படிப் போய் விட்டு திரும்பி ஜெயிலுக்கு வருகின்றபோது வேதனையோடுதான் திரும்பி வருவான். போய் எந்த வேலையையும் பார்க்க முடியாமல்தான் திரும்பி வருவான். ஆகவே இந்த 15 நாட்களை அப்படியே மொத்தமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் அல்லது முதலில் ஒன்பது நாள் பிறகு இன்னொருதரம் ஆறு நாள் இப்படியாவது கொடுங்கள்.

அடுத்து மெடிக்கல் சர்ட்டிபிகேட்டைப் பொறுத்தவரையில் சர்க்கார் ஆஸ்பத்திரியில்தான் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமாம். கிராமத்தில் இருக்கக் கூடிய ஒரு கிழவன் சிறையில் இருப்பான். அவனுடைய மனைவி கிராமத்திலே வீட்டிலே இருப்பாள். எப்படி அவர்களால் சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு சென்று சர்ட்டிபிகேட் வாங்க முடியும். ஆகவே எம்.பி.பி.எஸ் டாக்டர் கொடுக்கின்ற சர்ட்டிபிகேட் போதும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் யார் வேண்டுமானாலும் சர்டிபிகேட் கொடுப்பார்கள். நீங்கள் சர்க்கார் ஆஸ்பத்திரியிலே வாங்கினால்தான் சரி என்று சொன்னால் சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலே எப்படிக் கொடுப்பார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரிந்த விஷயம்தானே. டாக்டர் சர்ட்டிபிகேட் என்கின்றபோது சர்க்கார்



ஆஸ்பத்திரியில் என்ன நடக்கின்றது என்பது நமக்குத் தெரியும். ஆகவே கிராம மக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய இந்த விதிகளை எடுத்துவிட வேண்டும்.

அடுத்து வயதானவர்களுக்கு விடுதலை சிஸ்டம் இருப்பதாகக் கூறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வந்திருந்தபோது இரண்டு மூன்று பேர்களைச் சுட்டிக்காட்டினார். அவர்கள் விடுதலை ஆனதாகத் தெரியவில்லை. அதேமாதிரி நிரந்தர நோயாளிகளுக்கு என்று விடுதலை சிஸ்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு நான் ஒரு லேட்டஸ்ட் உதாரணத்தைத் தர விரும்புகிறேன். வேலூர் சிறை, ராமச்சந்திரன்—3479. ஹைப்பர் டென்ஷன், ஹார்ட் டிரபிள், 30 தடவை சீரியஸ் என்று பல்வேறு கட்டங்களில் சிறை அதிகாரிகளிடமிருந்து பெற்றோர்களுக்குத் தந்தி வந்திருக்கின்றது. 30 தடவை போய்ப் பார்த்திருக்கிறார்கள். அவருக்கு வேலூர் ஆஸ்பத்திரியிலே ட்ரீட்மென்ட் கொடுக்கப்பட்டு நோ யூஸ். சென்னை ஆஸ்பத்திரியிலே ட்ரீட்மென்ட் கொடுக்கப்பட்டு நோ யூஸ். இப்போது ஆறு மாதமாக பேராலஸிஸ், கை கால் இயங்கவில்லை. வெளி ஆஸ்பத்திரியிலே சிறைக் கஸ்டடியிலே ட்ரீட்மென்ட் கொடுக்கப்பட்டு வருகிறது. அவருக்கு இந்த சிக்னஸ் ஸ்கீம் இன்னும் அப்ளை ஆகவில்லை. ஆகவே ஸ்கீம் இருந்தால் மட்டும் போதாது. Officers must have a mind. ஆஃபீஸர்களுக்கு இனிஷியேட்டிவ் இருக்க வேண்டும். ஃபிட் கேஸ் என்று நினைத்தால் அதற்கு அவர்கள் தைரியமாக ரெக்கமண்ட் பண்ண வேண்டும். அப்படிப்பட்ட நிலை இருந்தால்தான் இந்த ஸ்கீம்கள் எல்லாம் பயன் உடையதாக இருக்கும்.

(மாற்றுத்தலைவர் தலைமை)

அடுத்து இங்கு ஒரு விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். சிறைக் கைதிகள் பற்றி ஆர். வி. கிருஷ்ணய்யர், ரிட்டையர்ட் சுப்ரீம் கோர்ட் நீதிபதி கூறுவதைப் படிக்கிறேன். "சிறையில் அடைக்கப்படுவதனால் இயற்கையாக இழக்க நேரிடும் நஷ்டத்தைத் தவிர, ஒரு கைதி, ஒரு சுதந்திர பிரஜையின் எல்லா உரிமைகளையும் அனுபவிக்க உரியவர்" என்று கூறுகிறார். அதாவது Except these rights deprived by obstruction while in custody in the Jail என்பதைத் தவிர மற்ற எல்லா உரிமைகளுக்கும் அவர் உரியவர். அந்த சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் டெசிஷன்படி சட்டப்படி பிரசுரிக்கப்படக்கூடிய பத்திரிகைகளைப் படிக்கக்கூடிய பிரஜா உரிமை அவர்களுக்கு உண்டு. அதேமாதிரி இந்த அவையின் நடவடிக்கைகளையும் சுதந்திரமாகப் படிப்பதற்கு அந்தக் கைதிகளுக்கு உரிமை உண்டு. ஆனால் 3—2—1981 தேதிய தீக்கதிரில் ஒரு

பகுதியை திருச்சி ஜெயிலர் மையால் அழித்துவிட்டு சம்பந்தப்பட்ட கைதிக்கு கொடுத்துள்ளார். வேறு ஒரு பத்திரிகை படித்து அங்கே அழிக்கப்பட்டது என்ன என்று செக்பண்ணிப் பார்த்தால் கவர்னர் உரை விவாதத்தில் இந்த அவையிலே நான் நிகழ்த்திய உரையைத்தான் ஜெயிலர் மையால் அழித்திருக்கிறார். அந்தக் கைதி படிக்கக் கூடாது என்பதற்காக, நான் பேசிய உரையை மையால் ப்ளாக் அவுட் செய்திருக்கிறார். ஆக இந்த அவையின் நடவடிக்கையையே இருட்டடிப்பு செய்வதற்கு அந்த அதிகாரிக்கு என்ன துணிச்சல்? ஆனால் அப்படி இருட்டடிப்பு செய்த அதிகாரி யார் என்று பார்த்தால் என்னைச் சுடுவேன் என்று சொன்ன அதே ஜெயிலர்தான். அவர் அப்படிச் சொன்னதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று விசாரித்து வந்ததற்குப் பிறகுதான் இதைச் செய்தார். என்னைச் சுடுவேன் என்றுதான் சொன்னார். ஆனால் அவையின் நடவடிக்கையையே சுட்டு விட்டார். ஆகவே அந்த ஜெயிலர் மீது முன்பே சரியான நடவடிக்கை ஏதாவது எடுத்திருந்தால் இந்த தைரியம் அவருக்கு வந்திருக்காது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன், லீகல் பேப்பர்ஸ்தான் கொடுக்கப்படுகிறது, அதிலே உள்ள அவை நடவடிக்கையை மையால் அழித்திருக்கிறார்கள். They are physically imprisoned, but should they be intellectually imprisoned also? ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அவசியமாக இரண்டு விஷயங்களை வலியுறுத்த விரும்புகிறேன். கைதிகள் நடத்தப்படும் விஷயத்தில் பெண்கள் மீது நாம் அதிக கருணை காட்ட வேண்டும். ஆனால் அவர்கள் தான் இன்று மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒரு பெண் எங்கேயிருந்து கைது செய்யப்பட்டாலும் வேலூர் சிறைக்குத்தான் அனுப்புகிறார்கள். இது எப்படி நியாயம்? ஒரு பெண் தூத்துக்குடியில் கைது செய்யப்பட்டிருந்தால், அவளை வேலூர் ஜெயிலுக்கு அனுப்பினால், அவர்கள் எப்படி தன் குழந்தைகளை பார்க்க முடியும்? கணவனைப் பார்க்க முடியும்? அண்ணனைப் பார்க்க முடியும், தம்பி தங்கைகளைப் பார்க்க முடியும்? தாய் தந்தையாரைப் பார்க்க முடியும்? ஆகவே, ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷனே சிபாரிசு செய்திருக்கிற இந்த விஷயத்தை கவனித்து உடனடியாக பணச் செலவு பார்க்காமல் பெண்களுக்கென்று ஒரு தனி சிறையை மதுரையில் ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும், அதை உடனடியாக அவசர ஏற்பாடாக செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக அவசரமானது, ரெவின்யூ அதிகாரிகளின் கீழ் இருக்கும் 109 சப்-ஜெயில்கள் பொருத்தது. அதை படிப்படியாக சிறை டிபார்ட்மெண்டிற்கு மாற்றப் போவதாக அரசு திட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படி



'படிப்படியாக' என்று சொல்வதை சிறை ரிபார்ம்ஸ் கமிஷனே நிராகரித்திருக்கிறது. உடனே எல்லா சப்-ஜெயில்களையும் எடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்திருக்கிறது. அதற்குக் காரணம் உண்டு.

நாகைப்பட்டணம் சப்-ஜெயிலைப் போய் பார்த்தேன். அங்கே சமையல் செய்து வெளியிலே வராண்டாவிலே—ஓபன் வராண்டாவிலே கொண்டு வந்து வைக்கிறார்கள். அங்கே பன்றிகள் அதிகமாக வருகின்றன. பன்றிகள் என்ன வேலையைச் செய்துவிட்டு வரும் என்பது எல்லோருக்கும் தெரியும். பன்றிகள் அந்த வேலையை முடித்துக் கொண்டு நேராகப் போய் சமையல் பாத்திரத்தை முகர்ந்து பார்க்கிறது. This is most attrocious. இதைவிட ஒரு மோசமான நிலைமை வேறு என்ன இருக்க முடியும் கைதிகள் அதைப் பார்த்து கத்துகிறார்கள். நான் அதைக் கண்ணாலேயே பார்த்தேன். கைதிகள் பன்றியால் அவ்வளவு அவஸ்தியாக நடந்து கொள்கிறார்கள். அதை அனுமதிக்கக் கூடாது. ஒருக்கால் பன்றியை வராக அவதாரம் என்றெல்லாம் நினைக்கிறார்களோ என்னவோ. அப்படி நம்பக் கூடியவர் கலந்து அது எல்லாம் சரியாக இருக்கலாமோ என்னவோ. ஆனால் நம்மைப் போன்ற மாடர்ன் மனிதர்கள் இவைகளை அனுமதிப்பது சரியல்ல. For modern men this is the most condemnation thing. ஆகவே தான் ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷனும், இந்த சப்-ஜெயில்களின் கைதிகள் மிருகக் காட்சி சாலைகளில் உள்ள மிருகங்கள் போல் நடத்தப்படுகிறார்கள் என்று அபிப்பிராயம் தெரிவித்தது. இதை பல்லாண்டு காலமாக இருந்து வந்த அரசுகள் எல்லாம் அனுமதித்தது. நீங்களும் அதே தவறைச் செய்ய வேண்டாம். ஆகவே உடனடியாக இந்த சப்-ஜெயில்களை—109 சப்-ஜெயில்களையும் எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அரசு குறிப்பில் சிறைக்காவலர்கள் வெல்பேர் சம்பந்தமாக எதுவுமே குறிக்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று எட்டு மணி நேர டியூட்டி என்று நிர்ணயம் செய்வது. அதைத் தாராளமாகக் கொடுக்கலாமே. நாளை மே தினம் உலகெங்கிலும் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாடப்படும் தினம். அந்த நாளில் நீங்கள் இந்த எட்டு மணி நேர வேலை நேரத்தை அவர்களுக்கு அறிவித்தால், நிச்சயமாக உலகப் புகழ் பெறுவீர்கள். உலகப்புகழ் என்பது நல்ல காரியம் செய்தும் பெறலாம், வேறுவிதமான காரியங்களை செய்தும் பெறலாம். ஆனால் இந்த நல்ல காரியத்தை செய்து உலகப் புகழ்பெற உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதை இந்த அவையில் இன்றே அறிவிப்பு

செய்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அவர்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக அரசு தன்னுடைய மெத்தனப் போக்கை கைவிட கோருகிறேன்.

எல்லாச் சிறைகளிலும் காவலர்களை நிரந்தரமாக்குவது என்பது, துரிதமாக பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பு பண்ணினார்கள். ஆனால் உறுதி அளித்தபடி துரிதமாக முடிவு செய்ய வில்லையே. அன்று கேள்விக்கு பதிலளிக்கையில், டியூட்டி நேரத்தில் காவலர் களுக்கு உணவு அளிப்பது என்று முடிவு செய்து விட்டோம், ஆனால் எப்படிப்பட்ட உணவு கொடுப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் வேடிக்கையாக சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

இனி இன்னும் ஆறு மாதம் கழித்து, எப்படிப்பட்ட உணவு கொடுப்பது என்பதும் முடிவாகிவிட்டது. ஆனால் அதை தட்டில் கொடுப்பதா, இலையில் வைத்துக் கொடுப்பதா என்று பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதிலே பரிசீலனை செய்ய இன்னும் என்ன இருக்கிறது. அமைச்சர் ஒப்புக் கொண்டு ஐ.ஜி., சிறை சூப்பிரண்டெண்டெண்ட், மற்ற அதிகாரிகளையும் அழைத்துப் பேசி முடிவு எடுக்க வேண்டியதுதானே? What sort of food should be given என்று முடிவு செய்ய வேண்டியதுதானே? அவர்களுடைய கோரிக்கைகளாக 33 இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சங்கத்தை அங்கீகரித்தால்தானே, அழைத்துப் பேசி முடிவெடுக்கலாம்? ஆனால் சங்க அங்கீகாரம் சம்பந்தமாக இப்பொழுது சிக்கல் இருப்பதாகவும் இரண்டு சங்கம் இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நான் அமைச்சரை ஒன்றைக் கேட்கிறேன். ஸ்டிரைக்கை வாபஸ் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக இஸ்மாயில் தலைமையில் உள்ள சங்கத்துடன்தானே பேசினீர்கள். அனைத்து வார்டர்களையும் தழுவக் கூடிய ஆறு கோரிக்கைகள் சம்பந்தமாக அதே இஸ்மாயில் சங்கத்திற்குத்தானே வாக்குறுதி கொடுத்தீர்கள். நீங்கள் கொடுத்த வாக்குறுதி அந்தச் சங்கத்திற்குத்தானே?

(முற்பகல் 9-30)

அதேபோல் அமைச்சர் அவர்கள் அன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கைக் குறிப்பில் "1979 ஏப்ரல் மாதத்திலே சங்கம் அமைக்கப்பட்டதாகவும், அவர்களுடைய சங்கத்தை, அதாவது இஸ்மாயில் சங்கத்தை அங்கீகரிப்பது





சம்பந்தமாகத்தானே துரித முடிவு எடுப்பதாக சொன்னீர்கள்"? அப்படி யிருக்க அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டியதுதானே? இப்போது சிக்கல் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் காவலர்கள் மத்தியில் அரசின் க்ரெடிபிலிட்டி என்னவாகும்? அப்படி க்ரெடிபிலிட்டி அஃபெக்ட் ஆகுமானால் நிச்சயமாக அது எபிஷியன்ஸியைப் பாதிக்குமா இல்லையா? ஆகவே இஸ்மாயில் தலைமையில் உள்ள சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும். கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடத்தவேண்டும், அப்படி பேச்சுவார்த்தை நடத்தி ஸெட்டில் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, சட்ட இலாகா பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீதிபதிகளின் குறுகிய சுதந்திரத்தின் மீது மைய அரசு தொடுத்துள்ள தாக்குதல் பற்றி சொன்னார்கள், அதுபற்றி இந்த அரசின் நிலை குறித்து பாராட்டுகிறேன். மேலும் தாக்குதல்கள் நிச்சயமாக வரும். அதையும் தடுக்கவேண்டும். அதற்கு மத்திய அரசுக்கு கடிதம் மட்டும் எழுதினால் போதாது. We must take them into Confidence நம் மாநிலச் சர்க்கார் அல்லது அமைச்சர்கள், ஆளும்கட்சித் தலைவர்கள் மற்றவர்கள் பேசக்கூடிய கூட்டங்களில் தமிழக மக்களிடம் இந்த விஷயம்பற்றி விளக்கும்போது தமிழக மக்களையும் அதற்குச் சாதகமாக திரட்டவேண்டும், அப்போதுதான் நாம் அந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியும். சில சமூக விரோத குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுக்கும் விஷயத்தில் சட்டத் துறை பிரத்தியேகக் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வரதட்சணைக் கொலை, கற்பழிப்புக் கொலை, குழந்தைகள் கொலை இம்மாதிரி கொலைகளில் தாக்குத் தண்டனை பெற்றே தீரவேண்டும். ஆனால் உயர் மட்ட வக்கீல்களை வைத்துக்கொண்டு அந்தக் கொலைகாரர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். திருவரம்பூரில் லக்ஷ்மித்தா கொலை வழக்கு, அரியலூர் குழந்தைகள் நரபலி வழக்கு இவை நடக்கின்றன. இவற்றிற்கு அரசு சார்பில் சாதாரணமாக ஏ.பி.பி., பி.பி. இவர்களிடம் விட்டால் போதாது. குற்றவாளிகள் சீனியர் உயர்மட்ட வக்கீல்களை வைக்கும்போது அரசாங்கம் அதைவிட சீனியர் அல்லது உயர்மட்ட வக்கீல்களுக்கு ஏற்பாடு செய்து அந்தக் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வாங்கிக் கொடுத்தால்தான் பெண்களுக்கு ஓரளவு பாதுகாப்பு கிடைக்கும்.

இன்னொரு ஆச்சரியமான விஷயத்தை அறிய வந்துள்ளேன். அதாவது சமீபத்தில் நம் ஹைக்கோர்ட்டில் இருந்து கீழ் கோர்ட்களுக்கு ஒரு சுற்றறிக்கை போனதாக அதாவது போக்குவரத்து தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட 304-ஏ, 338, 337 ஐ.பி.ஸி. கேஸ்கள் அப்பீலில் வந்தால் கடுந்தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற சுற்றறிக்கையாம். இது உண்மையில் எப்படி நியாயமாகும்?

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 30

ஒவ்வொரு கேஸும் அதன் பிரத்தியேக சூழ்நிலைகள், சாட்சியங்களை வைத்துக்கொண்டுதான் தண்டனையின் தரத்தை நிர்ணயிப்பார்கள். சர்குலர் விட்டு தண்டனை கொடுப்பது என்றால் அப்பீல் கோர்ட் எதற்கு? நீதிபதி எதற்கு? ஆகவே அமைச்சர் அவர்கள் இதை செக் அப் செய்து அதை ரெக்டிபை செய்ய வேண்டும்.

கடைசியாக, நாகை செஷன்ஸ் கோர்ட், சப்-கோர்ட், பர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், செகன்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் எல்லாம் ஒரு நூற்றாண்டு வயதான கட்டடத்தின் உள்ளே இருக்கின்றன. அந்தப் பகுதி அடிக்கடி புயல், வெள்ளம் வரக்கூடிய பகுதியாக இருப்பதால் மழை பெய்தால் பயங்கரமாக ஒழுகும். ஆகவே நீதியும் ஒழுகிப்போய் விடும். அதோடு அங்குள்ள நீதிபதிகளுக்கு அங்கே கழிப்பிடம் இல்லை, வக்கீல்களுக்கு கழிப்பிடம் இல்லை. காம்ப் கோர்ட்களுக்கு இடமில்லை, பார் அஸோஸியேஷன் வராந்தாவில் இருக்கிறது. இது அவமானகரமான விஷயமாகும்.

அதுபற்றி பி.பி. உட்பட மனு கொடுத்திருக்கிறார்கள் சீப் மினிஸ்ட்டர் அவர்களிடம். சட்டத் துறை அமைச்சர் அவர்களிடமும் அந்த பெட்டிஷன் உண்டு. அவற்றையெல்லாம் கட்டித் தருவதற்கு உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளை செய்துதரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த நேரத்தை அளித்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதற்கண் நீதி மன்றங்களில் வழக்குகளை பைசல் செய்வதில் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற வகையில் நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் பதினைந்து ஆண்டுகளாக இருந்து வரும் கோரிக்கையான, திண்டுக்கல் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் கோரிக்கையை ஏற்று அதற்காக தொகை ஒதுக்கியிருப்பது குறித்து அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள் சார்பாகவும் அங்குள்ள வழக்கறிஞர்கள் சார்பாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கை யாக்குகிறேன்.



1981 ஏப்ரல் 30] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

அடுத்து, நீதி நிர்வாகம் பொறுத்தவரையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்தில் மட்டுமல்ல, ஏன் அமெரிக்காவில் கூட, இங்கிலாந்தில் கூட வழக்குகளை பைசல் செய்வதில் காலதாமதமாகிறது என்ற குற்றச்சாட்டு நீக்கமற நிறைந்திருக்கிறது. அதைக் களைய சில சிறப்பான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும். ஆரம்ப நீதிபதிகள் ஒரு வழக்கை விசாரிக்க, சமண்ஸ்கொடுத்து, பிரதிவாதிகள் ஆஜராகி ஒரு வழக்கை முடிக்க 420 நாட்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்றும் உயர்நீதிமன்றத்தில் 1955 கால கட்டத்தில் ஒரு மேல் முறையீடு முடிவு செய்ய 1,500 நாட்கள் ஆகின்றன என்று 1955-ல் நியமிக்கப்பட்ட கமிஷன் கூறுகிறது.

அந்த நாட்கள் கணிசமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு குறைக்கப்பட்டிருக்கிறது என்பது பாராட்டக்கூடிய விஷயமாகும். அப்பேர்ப்பட்ட சட்டக் குழுக்கள் சொல்லுகின்ற ஆலோசனைகளைப் பார்க்கின்றபோது, பெரும்பான்மையான வழக்குகள் பைசல் ஆவதற்குக் காலதாமதம் ஆவதற்குக் காரணம் நீதி மன்றங்களிலே மேல் முறையீடு செய்வதிலேதான், அதற்கு மிகப்பெரிய குறையாக இருப்பது, நீதிமன்றங்களிலே வழங்குகின்ற தீர்ப்புகளின் நகல்களை அச்சிட்டுத் தருவதிலே ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகூட ஆகிவிடுகிறது. ஒருசில நீதி மன்றங்களிலே அதை பிரிண்ட் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கே ஓராண்டு காலமாகி விடுகிறது. ஆகவே, அதைத் தவிர்ப்பதற்கு, அச்சிட்ட நீதிமன்றத் தீர்ப்புகளின் நகலை மேல் முறை யீட்டிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்கிற விதியைத் தளர்த்த வேண்டும். அதனாலேதான் வழக்குகள் பைசலாவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அரசு இதைத் தவிர்க்க முடியும். அதற்கு மாற்று வழி, நீதி மன்றங்களிலே அளிக்கப்படுகின்ற தீர்ப்புகளை ஸ்டென்சில்களிலே அழகாக கட் செய்து, டூப்ளிகேட்டர்களிலே அதை உருட்டிக்கொடுத்தால் கூட, வழக்கு மன்றங்களிலே வழக்குகளை நடத்துகின்றவர்கள், அதை அச்சிடுவதற்கு ஆகும் செலவு நாலில் ஒரு பகுதிகூட ஆகாது என்பதோடு, இன்று மேல் முறையீட்டிற்கு காலதாமத மாகும் முக்கிய காரணமாக இருக்கின்ற இந்த தீர்ப்புகளை அச்சிட்டுக் கொடுப்பதற்குப் பதில், நாம் இப்படி தீர்ப்புகளை ஸ்டென்சில் கட் பண்ணி, டூப்ளிகேட்டரில் போட்டு வழங்கலாம் என்று விதியைத் திருத்தினால் போதும். எனவே, நான் மெத்த பணிவோடு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களை சிவில் ரூல்ஸ் ஆப் பிராக்டிஸ்-ஐ திருத்தியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வகையிலே வழக்குகளை மேல் முறையீடு செய்வதிலே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம் எனவே, அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று, ஆரம்ப நீதி மன்றங்களிலே சாட்சியங்கள் அளிப்பதை நீதிபதி எழுதுகின்ற நடைமுறை இருப்பதால், வழக்குகளின் நடைமுறையை கவனிக்க முடியாத ஒரு நிலை நீதிபதிக்கு இருக்கிறது. ஆகவே, சாட்சியங்கள் அளிக்கின்றதை அங்கே இருக்கிற டைப்பிஸ்டு அவ்வப்போது டைப் அடித்துக் கொண்டு வந்தால், அந்தச் சாட்சி என்ன சொன்னார், வழக்கு மன்றத்தை அணுகியிருக்கிறவர் என்ன சொன்னார் என்பதை சம்பந்தப்பட்ட நீதிபதி கவனிக்கவும், அந்தச் சாட்சி கூண்டிலே இருந்து இறங்கி வெளியே வருவதற்குள், சாட்சி சொன்னதைக் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பு ஏற்படும். பின்னாலே சாட்சி என்ன சொன்னார். டெபோசிஷன் சர்டிபிகேட் கேட்கின்ற நிலையெல்லாம் ஏற்படாது. தவிர, நீதி மன்றத்திலே எழுத்தர்கள் அதற்கான வில்லங்கம், நகல் போன்றவைகளைக் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுவதை ஒழிக்க முடியும். ஆகவே, ஸ்டென்சில் டைப் செய்து, நீதிபதி அளிக்கின்ற தீர்ப்பை நகல் எடுத்துக் கொடுக்கலாம் என்றும், அதேபோல் ஆரம்ப நீதி மன்றங்களில் நீதிபதி சொல்லிக்கொண்டு வருவதை, டிக்டேட் செய்வதை அங்குள்ள டைப்பிஸ்ட் மூலம் அடித்துக் கொடுக்கலாம் என்றும் செய்யலாம். அப்படிச் செய்யும்போது, வழக்குகளின் ஓட்டத்தை கவனிப்பதற்கும், சாட்சியங்கள் என்ன சொன்னார்கள், நாளை விவாதத்திலே என்ன சொல்ல வேண்டுமென்று வழக்கறிஞர் கட்சிக்காரருக்கும் தெரியும். அதனால், சாட்சியங்கள் நகலைப் பெறுவதிலே ஏற்படும் காலதாமதம் பெருமளவிற்குத் தவிர்க்கப்படும். எனவே, சீர்திருத்தம் என்ற அடிப்படையிலே இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஆரம்ப நீதிமன்றங்களிலேயும் காலதாமதத்தைத் தவிர்க்க முடியும். அங்கே காலதாமதம் ஆவதற்கு முக்கியமான காரணம், வழக்குகள் தொடரப்படுகின்றபோது, அங்குள்ள பிராசஸ் சர்வர்கள் செய்கின்ற தவறுகள் தான் என்பதை நான் தாராளமாகச் சொல்வேன். இதை 1955 ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்ட அளவிலே போடப்பட்ட செதல்வாட் கமிஷனே, லா கமிஷனே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த பிராசஸ் சர்வர்கள் என்ற அமைப்பிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவோமே யானால், இந்த உலகமே வியக்கின்ற அளவிற்குச் செய்ய முடியும் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வழக்குகள் பைசல் ஆவதிலே காலதாமதம் ஆவது என்பது இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டும் சொந்தமல்ல ; இங்கிலாந்திலேயும் காலதாமதம் இருக்கிறது. ஏன் அமெரிக்கத் துணைக் கண்டத்திலேகூட இந்தியாவைவிட கூடுதலாக காலதாமதமாகிறது, 80 சதவிகிதத்திற்கு மேல் கூடுதலாக காலதாமதமாகிறது என்பதை இந்தக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது. அந்தக் கமிஷன் ஆரம்ப நீதி மன்றங்களிலே உள்ள இந்த பிராசஸ் சர்வர்கள் அமைப்பிலே சில மாற்றங்களைக் கொண்டு





வந்தால், நீதி மன்றங்களிலே வழக்குகளைப் பைசல் செய்வதிலே ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கலாம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நிர்ப்பை விசாரிக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டிற்குக் காரணம். இந்த பிராசஸ் சர்வர்கள் இடத்திலே இருக்கின்ற தவறான நடைமுறைகள்தான் ; ஆகவே, அதிலே சில நடைமுறைகளை போக்குவதற்காக சமீபத்திலே போடப்பட்ட சிவில் புரொசீஜர் கோடிலே சில ரூல்ஸ்கள் பலமுறை திருத்தப்பட்டிருந்தாலும் கூட, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்—இதிலே இருக்கிற தவறு, அந்த கோர்ட் தயாரித்து அனுப்புகிற சம்மன்களை பிரதிவாதிகளுக்கு அனுப்புவதிலேகூட கோர்ட்டிலே இருக்கின்றவர்கள் காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே, அதிலே விதியை மாற்றி ஆரம்ப நீதி மன்றங்களிலே தயாரித்துக் கொடுக்கப்படுகின்ற சம்மன்களை வாதிகளுக்கு வந்நிலே ரிஜிஸ்தர் தபாலிலே அனுப்பினால் போதும் என்கிற அளவிற்கு செய்ய வேண்டும். அதேபோல், கட்டளைகள்—எக்சிகியூடிவ் புரோசீடிங்ஸை நிறைவேற்றுவதிலே பிராசஸ் சர்வர்கள் வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறார்கள். வாதிப் பிரதிவாதிகளுடன் வேண்டுமென்றே பேசிக்கொண்டு காலதாமதப்படுத்துகிறார்கள். அதைத் தவிர்க்கும் வகையில் மகாராஷ்டிர மாநிலத்திலே இருப்பதைப்போல், ஒவ்வொரு கிராமத்திலும் பெட்ரோல் புக் வைக்கவேண்டும். இந்த முறை மகாராஷ்டிர மாநிலத்திலும், மத்திய பிரதேசத்திலும் சிறப்பாக செய்யப்பட்டிருப்பதாக பல்வேறு கமிட்டிகளின் ரிப்போர்ட்டுகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த பிராசஸ் சர்வர் என்ற முறையிலே சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

அதேபோல், சிறிய சிறிய ரூ. 100 மதிப்புள்ள வழக்குகள், ரூ. 1,000 மதிப்புள்ள வழக்குகள் ஆகியவற்றில் நீதி மன்றங்களில் எதிர்வாத ஸ்டேட்மென்ட் போடுவதினால், ஐந்து அல்லது ஆறு மாதங்கள் கால கெடு நீட்டிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது ; அதற்கு அவர்கள் காஸ்ட் போட முடியும். ஆனால், நீதிபதிக்கு அதிகாரம் இருந்தும், அதைப் பல நீதிபதிகள் உபயோகப்படுத்துவதில்லை. ஆகவே அந்த வகையிலும் நான் மிக பணிவோடு கேட்டுக் கொள்வது மகாராஷ்டிராவில் இருப்பதைப் போல ஆர்டர் எண் 210-க்கு ஒரு மாற்றம் கொண்டு வந்து ஒரு குறிப்பிட்ட அளவு நிர்ணயித்து, 2,000 ரூபாய் வரை இருக்கிற வழக்குகளை, முதல் விசாரணை என்று பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மென்டை தாக்கல் செய்ய வேண்டுமென்கிற திருத்தத்தைக் கொண்டு வந்தால் பல வழக்குகளிலே காலதாமதத்தை நாம் தவிர்க்க முடியும். அதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல 1975-க்கு பிறகு பைசலான வழக்குகளில்

காலதாமதத்திற்குக் காரணம் கேட்டுக்கொண்டால் நான்கு ஐந்து ஆண்டுக் காலமாக கடன் நிவாரணச் சட்டம் என்று போனால், வழக்குத் தொடுப்பதிலே தடை இருந்தது; அதைவிட இன்றைக்கு வழக்குகள் கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் அளிக்கப்படுகிற சலுகைகளை நிர்ணயிக்கிற நீதிமன்றம் தாசில்தார் மன்றமா அல்லது சிவில் நீதிமன்றமா என்று ஒரு பிரச்சினை இருக்கிறது. 'நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்ட் ஆக்ட்'படி சிவில் நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்தாலும் கூட கடன் நிவாரணச் சட்டத்தின்படி, கடன் நிவாரண சட்டத்தினுடைய சலுகை அந்த குறிப்பிட்ட நபருக்கு இருக்கிறதா இல்லையா என்ற முடிவை எடுக்கும் அதிகாரம் தாசில்தாருக்கு இருக்கிற காரணத்தினாலே, தாசில்தார் கோர்ட்டிலே ஒரு வழக்கு, சிவில் கோர்ட்டிலே ஒரு வழக்கு என்று இருக்கிறது. அதைப்போல குத்தகைதாரர் உரிமை சட்டத்திலே தாசில்தாரிடம் ஒரு வழக்கு, அதே சமயத்தில் 'இன்ஜங்ஷன் சூட்' என்று சிவில் கோர்ட்டிலே ஒரு வழக்கு இருந்து கொண்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்த குத்தகைதாரர் சட்டத்தை பொறுத்தவரை அது தாசில்தாரிடம் இருப்பது சரியல்ல. அதை நிச்சயமாக சிவில் நீதிமன்றங்களிலே மாற்ற வேண்டுமென்று சென்னை நீதி மன்றம் கூட பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறது. இருபது ரூபாய் வாடகை கேஸ் என்று வருமேயானால் அப்படிப்பட்ட வீட்டு வாடகை வழக்குகளை விசாரிப்பதற்கு கூட ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கேடருக்குக் குறையாமல் ஒரு விசாரணை வேண்டுமென்று நியதி இருக்கிறபோது, பல இலட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்கள், 10 எக்கர், 20 எக்கர் என்று இருக்கிற அந்த நிலங்களுடைய குத்தகை உரிமையை தாசில்தார் முடிவு செய்யவேண்டும் என்பது சரியல்ல. அவை சிவில் நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு நீதிபதி மோகன் அவர்கள் கூட இரண்டு, மூன்று முறைகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். காலதாமதத்திற்கு முக்கிய காரணம் கடன் நிவாரண சட்டத்திலே தாசில்தாரிடம் ஒரு வழக்கு, சிவில் நீதிமன்றங்களில் ஒரு வழக்கு என்று கிடக்கிறது. தாசில்தார் தீர்ப்பைச் சொன்னால், அதற்கு அப்பீலுக்கு சப்-கலெக்டருக்கு, அதற்கு பிறகு டி.ஆர்.ஓ. என்று போகிறது. இதனால் வழக்குகள் குவிந்து விடுகின்றன. ஒரே வழக்கு இரண்டாக சென்றுவிடுகிறது. குத்தகைதாரர் சட்டத்திலேயும், கடன் நிவாரண சட்டத்திலும் இப்படிப்பட்ட வழக்குகள் பெருகி இருப்பதால்தான், வழக்குகள் தேங்கி இருப்பதற்குக் காரணம் என்பதைக் கூறி, இதனை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மிகச் சாதாரணமான விஷயங்களில், சாதாரண 50 ரூபாய் 100 ரூபாய் என்று ஸ்மால் காஸ் கோர்ட்டிலே கேஸ்கள் பெருகி இருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றுவதற்கு சாதாரண வாய்ப்பு வாய்க்கால்





தகராறு, நடைபாதை தகராறு இவைகளை எல்லாம் தீர்ப்பதற்கு சட்டப் பூர்வமான நீதிமன்றங்கள் இருந்தாலும் கூட, கிராம நீதிமன்றங்கள் இல்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட சிறு, சிறு பிரச்சினைகளை, 2,000 ரூபாய் வரையிலுள்ள பிரச்சினைகளை கிராம நீதிமன்றங்களிலே தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே கிராம நீதிமன்றங்கள் செயல்பட ஆரம்பித்ததென்றால் உண்மையிலேயே பெரும்பாலான வழக்குகள் அங்கே கிராமங்களிலேயே முடிவு பெறும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போல பெரிய பெரிய வழக்குகள் காலதாமதம் ஆவதற்கு முக்கிய காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அறிவித்திருக்கிறார்கள். நான் மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கிரிமினல் வழக்குகளில் காலதாமதத்திற்கு முக்கிய காரணம் சாட்சிகளை அழைத்து வருவதிலே காவல் துறையினர் காட்டுகின்ற அசிரத்தையைத்தான் என்பதை நாம் மறுக்க முடியாது. அப்படி காலதாமதம் செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாமென்று செக்ஷன் 309, சப்-செக்ஷன் (2) சி.ஆர்.பி.சி. இருக்கிறது. ஆனால் இப்படி இருந்தாலும்கூட எந்த நீதிபதிகளும் எந்த வழக்கிலும் அப்படி செய்வதில்லை. ஆகவே நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம் உச்ச நீதிமன்றங்களில் இருப்பதைப்போல 'புராசஸ் சர்வர்' அமைத்து கிரிமினல் நீதிமன்றங்களில் ஏற்படுத்தலாம். ஏனென்றால் குற்றவாளி என்று ஒருவனை கோர்ட்டிலே நிறுத்திவிட்டு அந்த காவல் துறையை சார்ந்தவர்கள் பின்னால் பிராசிகியூஷனாக, எதிர்கட்சியாகிவிடுகிறார்கள். இன்றைக்கு பின்னால் அவர்களே, சாட்சியங்களை கொண்டு வருவது என்பது 'நேச்சுரல் ஜஸ்டிசுக்கு' மாறாக இருக்கிறது. உச்ச நீதிமன்றங்களில் இருப்பதைப் போல 'புராசஸ் சர்வரை' எல்லா கிரிமினல் நீதிமன்றங்களிலும் ஏற்படுத்தினால் நிச்சயமாக கிரிமினல் வழக்குகளில் ஏற்படும் காலதாமதத்தை நம்மால் தவிர்க்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை. கிரிமினல் கோர்ட்டிலே ஆண்டாண்டு காலமாக எந்த அரசுமே கவனிக்காத, எந்த அரசுமே தொட்டுப் பார்க்காத ஒரு பிரச்சினையை மாண்புமிகு நமது சட்ட அமைச்சர் அவர்கள் பரிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நித்தம், நித்தம் கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதால் சொல்கிறேன். கிரிமினல் வழக்கில் ஒருவன் குற்றம் சாட்டப்பட்டு விட்டால், அவனுக்கு ஜாமீன் கொடுத்து வெளியே கொண்டு வருகிறார்கள். நீதிமன்றங்களில் இருக்கிற நடைமுறைகள் தினசரி விசாரணைக்கு வருகிற குற்றவாளிகள், அந்த கிளார்க்கை பார்த்து கையெழுத்து போட வேண்டும். இதனால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆரம்பத்திலேயே அவர்கள் ஜாமீன் கொடுத்து விடுகிறார்கள்.

வழக்கு முடிகிற வரை அந்த ஜாமீன் நிலைத்து நிற்கிறது. அப்படி இருக்கிற போது. நித்தம், நித்தம் விசாரணைக்கு வருகிறவர்கள் ஒவ்வொரு நீதி மன்றத்திலேயும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தினமும் காலையில் அந்த நீதிபதி வாய்தா போட்டுவிட்டாலும், மாலை ஐந்து மணி வரை—அங்கே நீதிபதியாக செயல்படுவதே அங்கே இருக்கிற 'பென்ச கிளார்க்' தான்—வெயிலில் காத்து இருக்கிற கொடுமைகள் அதிகம் இருக்கின்றன. இதை அகற்றுவதால் தவறு இல்லை. இதை அகற்றினால் விசாரணைக்கு வருகிறவர்கள் அனைவரும் பாராட்டுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைத் தவிர்ப்பதற்கு சிவில் வழக்குகளிலே ஏ டயரி, பி டயரி என்றும் கிரிமினல் வழக்குகளிலே பி டயரி என்றும் வைத்தால் விசாரணைக்கு வருகிறவர்களுக்கு சிக்கல்களைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நீதித் துறையிலே உள்ள நீதிபதிகளுக்கு ஹவுஸ் பியூன் என்று போடப்பட்டிருக்கிறார்கள், அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று அரசாங்கம் ஜி.ஓ. எம்எஸ். நம்பர் 1819, தேதி 17—11—1960-இல் உத்திரவிட்டது. ஆனால் 1972-இல் சென்னை நீதிமன்றம் அந்த உத்திரவை ஹைகோர்ட் ஆர்.ஓ.சி. 5285/71, தேதி 18—5—1972-இல் நிறுத்திவைத்துவிட்டது. ஹவுஸ் பியூன் கொடுக்கப்படுவதால் தவறுகள் பல நடப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிற காரணத்தினாலே அந்த உத்திரவு அமல்படுத்தப்படாமல் இருக்கின்ற நிலைமையை மாற்றி அதை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிபதிகள் நியமனத்தைப் பொறுத்தவரையில் 15 ஆண்டுக்காலம் வழக்கறிஞர்களாகப் பணியாற்றியவர்களிலிருந்து நீதிபதிகள் நியமிக்கப்படாத கொடுமை இருந்து வருகிறது. இதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக லா கமிஷன் கூட பணியாற்றிக்கொண்டிருக்கின்ற வழக்கறிஞர்களிலிருந்து நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டுமென்ற தனது கருத்தைத் தெரிவித்து இருக்கிறது. செதல்வாட் கமிஷன் கூட சொல்லியிருக்கிறது.

" There is, however, a considerable body of opinion that this class of people from ministerial service bread in the atmosphere of offices of courts where unhealthy practices prevail should not be eligible for appointment to judicial office. The only question for our consideration whether the reservation now being made in the Southern States of a certain number of posts for the ministerial service should continue. We are of the view that it should not" என்று சொல்லியிருக்கிறது. இந்த முறைகள் தென் மாநிலங்களிலே மட்டும் தான் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசும் 15 ஆண்டுகாலமாக முடங்கிக்கிடக்கிற அந்த நீதிபதிகள் நியமனத்தைமாற்றி பிராக்டீஸ் செய்கின்ற தொழில் செய்கின்ற வழக்கறிஞர்களிலிருந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து நீதித் துறை சிறப்புற நடைபெற வேண்டுமென்றால் நீதிபதிகளுடைய சம்பள பிரச்சினை கவனிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்க வேண்டிய நியாயம் இருக்கிறது. ஆண்டாண்டுக் காலமாக அவர்களுக்குச் சம்பளம் உயர்ந்த முறையில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு நாம் உயர்ந்த சம்பளத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். காரணம், பி.எஸ்ஸி. படித்தவர்—சயன்ஸ் பாடத்தை படித்தவர்கூட—தேர்வு பெற்று ஐ.ஏ.எஸ்.-ஆகச் சேர்ந்துவிடுகிறார். ஆனால் பி.ஏ. அல்லது பி.எஸஸி. படித்த ஒருவர் அதற்குப் பிறகு மூன்று ஆண்டுக்காலமாக சட்டத் துறையிலே பயின்று பிறகு ஐந்து ஆண்டுக்காலம் பணியாற்றினால்தான் நீதித் துறையிலே இடம்பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் இந்த 10 ஆண்டுக் காலத்திற்குள்ளாக அவர்கள் 10 இன்கிரிமெண்ட்டுகளை வாங்கிவிடுகிறார்கள். ஆகவே முக்கியமான இந்த சம்பளப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மிக உயர்ந்த அந்தஸ்திலே நீதிபதிகள் கருதப்படக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு வாகன வசதிகள் கிடையாது, வீட்டு வசதிகள் கிடையாது, இவைகளையெல்லாம் அளிக்க வேண்டும். உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ண அய்யர் அவர்கள்கூட ஒருமுறை சொன்னார்கள், பல சபார்டினேட் ஜட்ஜுகள் குடிசைப் பகுதிகளிலேதான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு சாதாரணமாக ஒரு பி.டி.-ஓவுக்கு கூட ஜீப் வசதி இருக்கிறது, ஆகவே வாகன வசதிகளை நீதிபதிகளுக்கு அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வழக்கு மன்றத்திற்கு வருவதற்கான ஸ்டாப் கார் போன்ற ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும், செக்ரட்டேரியட்டில் உள்ள அதிகாரிகள் மாதம் 75 ரூபாய் செலுத்திவிட்டால் அவர்கள் வீடுகளிலிருந்து தலைமைச் செயலகத்திற்கு அழைத்துவரப்படுகிறார்கள். அந்த முறையிலே நீதிபதிகள் அவர்களுடைய வீடுகளிலிருந்து நீதிமன்றங்களுக்கு வருவதற்கான வாகன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளம் வழக்கறிஞர்களை ஊக்குவிக்கின்ற முறையிலே அவர்களுக்கு நீதிமன்றத்திலே போடப்படுகின்ற ஒரே ஒரு சந்தர்ப்பம் இந்த கமிஷன் ஓர்க் தான். ஆனால் இந்த கமிஷன் ஓர்க்கைப் பொறுத்தவரையில், உயர்நீதி மன்றத்திலே தெளிவான முடிவுகள் எடுக்கப்படவில்லை. குறைந்தது ஐந்து

ஆண்டுகளுக்குள் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களை, ஜூனியர்களைத்தான் கமிஷன் ஓர்க்கிற்காகப் போடப்படவேண்டும், அதோடு ஒரு கமிஷன் ஓர்க் கொடுக்கப்பட்டிருக்கின்றபோது வேறு பணிகள் கொடுக்கப்படக்கூடாது. சில நீதிமன்றங்களிலே 20 கமிஷன் ஓர்க்குகள் கூட அந்த ஜூனியர்களிடத்திலே கொடுக்கப்படுகிற கொடுமையான நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி ஒரு கமிஷன் ஓர்க் கொடுக்கப்பட்டிருக்கிறபோது வேறு பணி கொடுக்கப்படாத நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இளம் வழக்கறிஞர்களை ஊக்குவிக்கின்ற முறையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்ட சம்பந்தமான காவல்துறை, கமர்ஷியல் டாக்ஸஸ் டிபார்ட்மெண்டில் பணியாற்ற வேண்டுமானால், சட்டப் படிப்பை கட்டாயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

அடுத்து ஓரே ஒரு கருத்தைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். சென்னை மாநிலம் என்ற பெயர் தமிழ்நாடு என்று ஆக்கப் பட்டதற்குப் பிறகு சென்னை உயர்நீதி மன்றம் என்பது தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்யப்படவேண்டும். ஆனால் அதற்கு சட்ட சிக்கல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் வரம்புக்குள் பாண்டிச்சேரி நீதி சம்பந்தமான காரியங்களும் சேர்க்கப் பட்டிருப்பதால் அது இயலவில்லை என்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், யூனியன் டெரிட்டரியான இலட்சத்தீவு, கேரள மாநிலத்தினுடைய உயர்நீதி மன்றத் தினுடைய ஆளுகையிலே உட்பட்டிருக்கிறது. அதற்கு அந்த மாநிலத்தினுடைய பெயரான கேரள ஹைகோர்ட் என்றுதான் பெயரிடப்பட்டிருக்கிறது. அதைப் போன்று பல மாநிலங்களிலே யூனியன் டெரிட்டரியினுடைய ஜூரிஸ்டிக்ஷன் அந்தந்த மாநிலங்களுடைய உயர்நீதிமன்றத்திற்கு இருந்தாலும்கூட, அந்தந்த மாநிலங்களுடைய பெயரிலே அந்தந்த நீதிமன்றங்கள் அழைக்கப்படுகின்றன. ஆகவே, தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்கின்ற பெயர் மாற்றுகின்ற கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், நீதித் துறையில் அயல்மொழி வார்த்தைகளை, நாசிர், முன்சீப், அமீன், சிரஸ்தார், ஷெரீப் போன்ற வார்த்தைகளை, தமிழ்ச் சொற்களாக மாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லைப் பொறுத்த மட்டில், திண்டுக்கல்லிலே மாவட்ட நீதிமன்றம் அமைக்கின்ற முடிவினை அறிவித்தமைக்காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும். மாண்புமிகு சட்ட அமைச்சருக்கும் எனது





நன்றியைக் காணிக்கையாக்குகிற அதே சமயத்தில், திண்டுக்கல்லில் நீதி மன்றங்கள் சிதறிக் கிடக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குக் கோடியிலே ஒரு நீதிமன்றம், கிழக்குக் கோடியில் ஒரு நீதிமன்றம், வடக்குக் கோடியிலே ஒரு நீதிமன்றம் என்றிருக்கிறது. இப்பொழுது நீதிமன்றம் இருக்கும் பகுதியிலே ஏராளமான இடம் இருக்கின்றது. ஆகவே, திண்டுக்கல்லைப் பொறுத்த மட்டில், பொது மக்கள் வசதியையும், வழக்குரைஞர்களின் வசதியையும் கருத்திலே கொண்டு, அனைத்து நீதிமன்றங் களும் ஒரே இடத்தில் இருக்கும் வகையில் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கட்டி முடிக்கப்படும் வரை—ஒருசில நீதிமன்றங்கள் தனிப்பட்டவர்களின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன —அப்படிப்பட்டவைகள் காலி செய்யப்படக்கூடாது. நினைத்தவுடன் காலி செய்ய வேண்டுமென்று அந்தத் தனியார்கள் சொல்கிற காரணத்தால், வழக்குரைஞர்கள்கூட சமீபகாலத்திலே சட்ட அமைச்சர் அவர்களைச் சந்தித்து, புது கட்டிடங்கள் கட்டுகிற வரையில், நீதிமன்றங்களைத் தனியார் இடங்களிலிருந்து மாற்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். அதையும் கவனித்து, திண்டுக்கல்லிலே இருக்கிற ஐந்து நீதி மன்றங்களை ஒரே இடத்தில் இருக்கும் வகையில், அந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கும், அங்கு பணியாற்றுகிற வழக்குரைஞர் பெருமக்களுக்கும் வசதியான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதும், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கையின் மீதும் கலந்துகொண்டு பேசுகின்ற ஒரு வாய்ப்பினை அளித்ததற்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றங்கள் சுதந்திரப் பறவைகளாக யாருடைய இச்சைக்கும் அடிபணியாமல், நல்ல முறையிலே நடந்து வர வேண்டுமென்பதுதான் ஜனநாயக மரபு. அந்த நிலைமையிலே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தலைமை நீதிமன்றமாக உயர்நீதிமன்றம் இருந்து வருகிறது. அந்த உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, நீதிபதிகளாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் 21 நிரந்தர நீதிபதிகளும் நான்கு கூடுதல் நீதிபதிகளும் ஆவார்கள். அந்த நிலைமையிலே, வழக்குகள் துரிதமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்கிற ஒரு நிலைமையில் நியமிக்கப்பட வேண்டிய 21 நிரந்தர நீதிபதிகள் இன்னும் நியமிக்கப்படவில்லையென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. கோபால்] [1981 ஏப்ரல் 30

அதே போன்று இப்பொழுது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை செக்கன்ட் கிளாஸ் ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட்டை ப்ரொமோஷன் கொடுத்து டிஸ்டிரிக்ட் முனிசிப்பாக அனுப்பும்போது உரிமையியல் வழக்குகளிலே, அவர்களுக்கு அனுபவம் இருக்கின்றதா என்ற நிலைமையை நாம் பார்க்க வேண்டும். நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவியாக நிலை உயர்த்தப்பட்டு, மாவட்ட முனிசிப் பதவித் தரத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்ற ஆணையை இந்த அரசு இட்டிருக்கிறது. அதை நாங்கள் பாராட்டுகிறோம். அதே நேரத்திலே இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்களாக இருக்கின்றவர்கள் சில இடங்களிலே பதவி உயர்வு பெற்று, டிஸ்டிரிக்ட் முனிசிப்பாக மாறுகிறபொழுது அவர்கள் உரிமையியல் வழக்குகளிலே, அதாவது சிவில் வழக்குகளிலே அனுபவம் வாய்ந்தவர்களாக ஏற்கனவே இருந்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். சிவில் வழக்குகளிலே வழக்கறிஞர்களாக இருந்தவர்கள், சிவில் வழக்குகளை நடத்தக்கூடியவர்கள் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார்களானால் அதை நாம் பாராட்டலாம்.

ஆனால் குறிப்பாக நீதித் துறையிலே பணிபுரிகின்றவர்கள் கூட புரொமோஷனில் டிஸ்டிரிக்ட் முன்சிப்பாக வருகின்றபோது நிலையான நீதியும், நேர்மையான நீதியும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே அப்படி ஜுடிசியல் செகன்டு கிளாஸ் மாஜிஸ்டிரேட் டிலிருந்து பதவி உயர்வு பெற்று டிஸ்டிரிக்ட் முன்சிப்பாக போகும்போது இந்த நிலைமைகளை நன்கு ஆராய்ந்து, பல வருடங்களாக வழக்கறிஞர்களாகப் பணிபுரிகின்றவர்கள், இரண்டாவது ஜுடிசியல் மேஜிஸ்டிரேட்டாகப் பதவி உயர்த்தப்படுகின்றபோது சர்வீஸ் கமிஷன் மூலமாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற நிலைமை இருக்கவேண்டும் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று மாவட்ட முன்சிப்புகளுக்கு தற்சமயம் அளிக்கின்ற சம்பளம் போதாது. அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற பொறுப்புகள் மிக உன்னதமான பொறுப்புக்கள் என்பதையும், உயர்ந்த இடத்திலே நீதியை நிலைநாட்டவேண்டிய கட்டாய காலத்திலே அவர்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய நிலைமைகளை இதுவரையில் இருந்த அரசுகள் எல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை என்று சொன்னாலும் கூட, கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள், நேர்மையையும் நீதியையும் நிலைநாட்டுகின்ற புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த நேரத்தில் இவைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 ஏப்ரல் 30] [திரு. சி. கோபால்]

அதேபோன்று குத்தகைதாரர்கள் சட்டங்கள்—"டென்சிலா" சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கு ஆர்.டி.ஓ.க்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குப் பல வேலைகள் இருக்கின்றன. அதே நேரத்தில் ஆர்.டி.ஓ.-க்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளவர்கள் சட்டம் பயின்றவர்களாக இல்லை. சட்ட நுணுக்கம் தெரிந்தவர்களாக இல்லை. அப்படிப்பட்ட நிலையிலே குத்தகைதாரர்கள் சட்டத்திலே தீர்ப்பளிக்கின்ற பொறுப்பு, அதற்குத் தீர்ப்புக் கொடுக்கின்ற ஒரு முடிவு, அவர்களிடத்திலே விடப்படுமேயானால், சட்டத்தின் விவரம் தெரியாதவர்களிடம் விடப்படுகின்றபோது நேர்மையான நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதே நேரத்தில் இந்தத் துறை சம்பந்தப்பட்ட பல காரியங்களில், அந்த நீதியினுடைய நுணுக்கங்களை ஆராய்ந்து தீர்ப்பு அளிக்கின்ற வகையிலே அவர்கள் முடிவு பல இடங்களிலே இல்லை. ஆகவே அப்படிப்பட்ட அதிகாரங்களை நீதிமன்றத்திற்கே அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கடன் நிவாரணச் சட்டத்தில் கூட—ஆக்ட் 13/80—நிவாரணம் ஏழை மக்கள் பெறவேண்டும் என்று சொன்னால், அந்தத் தீர்ப்பை வழங்குகின்ற அதிகாரம் தாசில்தார்களுக்கு விடப்பட்டிருக்கின்றது. இன்று நடைபெறுகின்ற நிலையிலே தாசில்தார்களுக்கு இப்படிப்பட்ட தீர்ப்பை வழங்குகின்ற சூழ்நிலை வருமானால் அவர்கள் வழக்கறிஞர்களிடத்தில் சென்று அல்லது அரசு வழக்கறிஞர்களைச் சந்தித்து, விவரம் கேட்டு அதற்குப் பின்னர் தீர்ப்பு அளிக்கின்ற நிலையில்தான் இருக்கிறார்களே ஒழிய, அவர்களே சுதந்திரமாக அமர்ந்து அந்த நீதி என்ன என்று எடுத்துக் கூறுகின்ற அளவுக்கு திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையை உணர்ந்து, கடன் நிவாரணச் சட்டத்திலே விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரத்தை நீதிமன்றங்களுக்கு அளிக்கவேண்டும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10.00)

தமிழ்நாடு உயர்நீதி மன்றத்திற்குத் தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறபோது, தமிழ் தெரிந்த, தமிழ் இனத்தவராக உள்ள ஒருவரைத்தான் நியமிக்கவேண்டும் என்ற நியதியை ஏற்படுத்துகின்ற அளவிற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான தாக்கமும் காட்டக்கூடாது என்கிற கருத்தை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பெண் வழக்கறிஞர்களும், நீதிபதிகளாக ஆவதற்கு இன்னும் அதிக அள விற்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்ற கருத்தை நான் இங்கே எடுத்துக் காட்டக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாவட்ட நீபதிபதிகளை உயர்நீதி மன்ற நீதிபதிகளாக நியமிக்க 'கோட்டா' வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் 'கோட்டாவை'க் குறைக்க வேண்டும். வழக்கறிஞர்களை—பார் அனுபவம் உள்ள வழக்கறிஞர்கள்—நீதிபதிகளாக நியமிக்கவேண்டும். பலமுறை வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. மாவட்ட அளவிலே உள்ள நீதிபதிகளை உயர்நீதி மன்ற நீதிபதிகளாக நிய மிப்பதற்கு அரசாங்கம் ஜனாதிபதிக்கு சிபார்சு செய்கின்ற நேரத்திலும் இந்தக் கருத்தை மனதில் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். உயர்நீதி மன்றத்திலும்—பாரில் அனுபவம் உள்ள வழக்கறிஞர்களைத்தான் நீதிபதிகளாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

என்னுடைய தொகுதியான சோளிங்கரில் இருக்கிற டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் நல்ல முறையிலே நல்ல வசதிகளோடு இயங்கிவருகிறது. பஸ்ட் கிளாஸ் ஜுடிசியல் மேஜிஸ்டிரேட் பொறுத்தவரையில், அது அரக்கோணமாக இருந்தாலும், சோளிங்கராக இருந்தாலும் அவர்கள் அங்கேயிருந்து 50 மைல் தூரத்தில் உள்ள செய்யாறு கோர்ட்டுக்கு தான் போகவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளின் ஜுடிசியல் பணியை மாற்றப்போவதாக அரசு கருதியிருக்கிறது என்று அறிகிறேன். அப்படிப் பட்ட நிலைமையில், சோளிங்கரில் உள்ள டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டுக்கு இந்தப் பவர்லை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அரசைப்பொறுத்தவரையில், நீதி சுதந்திர மாக இருந்து கொண்டு, நீதி நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட்டு வரு கின்றது என்ற கருத்தை இங்கே எடுத்துக்கூறி, தேரின் சக்கரம் கன்று மேல் ஏறி இறந்துவிட்டது என்பதற்காக. தன்னுடைய மகனைத் தேரின் சக்கரத் தில் வைத்து நீதி வழங்கிய பாண்டியன் வரலாறு நமக்குத் தெரியும். அதைப் போலவே, முன்னாலே யாரோ ஒருவர் தான் டாக்டர் பட்டம் பெறவேண்டும் என்பதற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் குளத்தில் விழுந்து இறந்தபோது, விழுந்து விட்டவன் என்மகன் என்று அந்த மகனின் தந்தை சொல்லமுடியாத அளவிற்கு இந்த நாட்டில் அநீதி தவழ்ந்து கொண்டு இருந்தது. அந்த நிலைமைகளையெல்லாம் போக்கி, இந்த நாட்டில் சுதந்திர மாக நீதி இயங்கவேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்ததற்காக அவர்களை வாழ்த்தி, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.





* திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி—நிர்வாகம். சிறைச்சாலைகள் ஆகிய மானியக்கோரிக்கைகள் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துக்களை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது சம்பந்தமாகக் கருத்துக்களைக் கூற விரும்புகிற நேரத்தில், சென்ற ஆண்டு நடைபெற்ற, இந்த நீதித் துறை கோரிக்கை பற்றிய விவாதத்தின்போது, பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன. அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்றையதினம் சிறையில் இருக்கக்கூடிய கைதிகள் நடத்தப் படக்கூடிய முறைகள், சம்பந்தமாக எடுத்துக் கூறப்படும். அவர்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றது என்பது தொடர் நிகழ்ச்சியாக இருக் கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். சிறையில் கைதிகளாக வருகிறவர்கள் என்றால், அவர்களெல்லாம் சில நேரங்களில் உணர்ச்சிவயப் பட்டு சில குற்றங்களைச் செய்துவிட்டு வருகின்றவர்கள் தான். கொலை போன்ற குற்றங்களை உணர்ச்சிவயப்பட்டகாரணத்தால் செய்து விட்டு அதற் கான தண்டனை பெற்று சிறைக்கு வருகிறவர்கள்தான். அதுமட்டுமல்லாமல் சமுதாய சூழ்நிலைகளில் வாழ்க்கை நடத்த வேண்டி பலவிதமான குற்றங்களில் ஈடுபட்டு அதன் காரணமாக சிறைக்குள் வரும் நிலையும் ஏற்பட்டு இருக்கலாம். இம்மாதிரி சிறைக்குள்ளே வருபவர்களுக்கு சிறைக்குள்ளே கொடுமைகளை இழைக்காமல், அவர்களைத் திருத்தி சீர்திருத்துவதுதான் சிறைச்சாலையின் சீரியபணி என்பதை நான் இங்கே தெரிவித்தாக வேண்டும். அம்மாதிரியான முறையிலே சிறைச்சாலைகளிலே அமைப்பு இருக்க வேண்டியது அவசியம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் இந்தக் கடமை இன்றையதினம் எந்த அளவுக்கு நிறைவேற்றப் படுகிறது என்பதுதான் கேள்விக்குரிய விஷயமாக இருந்துகொண்டிருக்கிறது. சமூகத்தில் மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டியதை முக்கிய நோக்கமாகக் கொண்டு அவர்களை நடத்த வேண்டுமென்பதும், அவர்கள் குற்றம் இழைத்து சிறைத்தண்டனை முடிந்து வரும்போது அவர்களுக்கு புதிய வாழ்வு கொடுக் கின்ற வகையிலே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதும் முக்கிய மான விஷயங்கள். இன்றைக்கு இதுதான் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் இந்த நோக்கங்களை நிறைவேற்றும் முறையில் இன்றையதினம் சிறை நிர்வாகம் அமையவில்லை. வெள்ளைக்காரன் காலத்திலே எப்படி இருந்ததோ அப்படியேதான் இருக்கிறது. அவர்கள் எழுதி வைத்த சிறை மானுவலையே இன்றுவரையிலும் 'அ' முதல் 'ஃ' வரையிலும் வரி பிறளாமல்

[திரு. இரா. கருப்பையா]

அமுல்படுத்துகின்ற வகையிலே நடந்துகொண்டிருக்கிறது. சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கிற மாற்றங்களை கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல், ஒரு புதிய வாழ்வு அந்த கைதிகளுக்கு அளிக்க வேண்டிய அவசியத்தை உணராமல் இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வெள்ளைக்காரன் எல்லோரையும் அடக்க வேண்டும், ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சிறை நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருந்தான். ஆனால் மக்கள் அமைப்பு ஏற்பட்ட பிறகு, ஜனநாயக அமைப்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு ஏற்பட்ட பிறகு அதற்கு ஏற்றவகையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாதிரியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகத்தான் ஏற்கெனவே இருந்த அரசுகள் சில குழுக்களை சிறை நிர்வாகம் சம்பந்தமாக, சிறைகளில் கைதிகளை நடத்துவது சம்பந்தமாக அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுக்களுடைய பரிந்துரைகள் நம் முன்னால் இருக்கின்றன. ஆனால் அவை இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. கைதிகளை கொடுமையாக நடத்தும் சம்பவம்பற்றி பல்வேறு விவரங்களைத் தொடர்ச்சியாகச் சொல்ல முடியும். ஆனால் அதையே கூறி, என்னுடைய நேரத்தை குறைத்துக்கொள்ள விரும்பவில்லை. அது இன்றைக்கும் தொடர் நிகழ்ச்சியாக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தபோதிலும் இங்கே அந்த கொடுமைகள் பற்றிய ஒருசில குறிப்பை மட்டும் தெரிவிக்கிறேன். சென்ற 20-ந்தேதி முதல் 22-ந்தேதி வரை திருச்சி மத்திய சிறையில் இருக்கிற ஆயுள் தண்டனை கைதிகளும் மற்றவர்களும் தங்களை மனிதர்களாக நடத்த வேண்டும், எங்களுக்கு சில உரிமைகள் வேண்டும், சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, அதற்காக சில கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அம்மாதிரியான நிகழ்ச்சி தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கிறது. அது இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அவர்களுக்கு அளிக்கப்படக்கூடிய உணவில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. ஆட்சியிலே மாற்றத்தைப் பார்க்கிறோம். ஆனால் அந்த கைதிகளுக்கு அளிக்கப்படுகின்ற உணவிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. சிறை சீர்திருத்தக் குழு கூட அவர்களுக்கு கொடுக்கின்ற சோளத்தை மாற்ற வேண்டும், இட்லி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. நான் அரிசி கொடுக்க வேண்டுமா, இட்லி கொடுக்க வேண்டுமா என்றுகூட சொல்ல





வில்லை. கல்லும், மண்ணும் இல்லாமல் அவர்களுக்கு கொடுப்பதை முறையாகக் கொடுத்தாலே அவர்களுக்கு திருப்தியாக இருக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உணவிலே கூட ஒழுங்கீனம், ஊழல் நடக்கிறது. சில தினங்களுக்கு முன்னால், சென்ற 7-ந் தேதி, திருச்சி சிறையில் உள்ள, ஆஸ்பத்திரியில் இருக்கிற கைதிகளுக்கு உணவுக்காக கொடுக்கப்பட்ட அரிசியில் 96 கிலோ அரிசியை திருடி வைத்திருக்கிறார்கள். அது கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரியில் 100 கைதிகள் நோயாளிகளாக இருப்பார்கள். அவர்களுடைய உணவிலே 96 கிலோ திருடப்பட்டிருக்கிறது என்றால் அம்மாதிரி நிகழ்ச்சி தொடர் நிகழ்ச்சியாகத்தான் இருக்கிறது. இதை எதிர்த்து அவர்கள் குரல் எழுப்பினால் அவர்களுக்கு கிடைப்பது தடியடி. சிலர் இந்த ஊரை விட்டு கூட அனுப்பப்பட்டு விடுகிறார்கள். அது சம்பந்தமாக விசாரணை கமிஷன் வைக்கப்பட்டு, அந்த கமிஷன் அறிக்கை, முருகேசன் விசாரணைக் குழு அறிக்கை, இன்று காலையிலேதான் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அக்கிரமங்களைக் கேட்கின்ற கைதிகளை ஒரு சிறையிலே இருந்து மற்றொரு சிறைக்கு தொடர்ச்சியாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 'ஃபுட்பால்' மாதிரி அவர்களுடைய நிலை இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னால் திருச்சி சிறையிலிருந்து சிலரை சேலத்திற்கு மாற்றினார்கள். அங்கும் இந்தப் பிரச்சனை வரும். பின் அங்கிருந்து கடலூருக்கு மாற்றுவார்கள், அங்கிருந்து கோவைக்கு மாற்றுவார்கள். ஆக, அவர்கள் சிறைப் பறவைகளாக இருக்கிறார்கள். பறவைக் கூட்டத்தில் ஒரு கல்லை எடுத்துப்போட்டால் அவை பறந்துபோய் வேறு ஒரு இடத்தில் அமரும், அங்கே கல்லைப்போட்டால் இன்னொரு இடத்தில் போய் அமரும். இப்படி அந்தக் கைதிகளை மாற்றக்கூடிய நிகழ்ச்சி தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-10)

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு திருச்சி சிறையிலே நம்முடைய அமைச்சரவர்களின் இடத்திலே நேரடியாக குறைகளை கூறினார்கள் என்ற காரணத்திற்காக 12 பேர்கள் கடலூருக்கு மாற்றப்பட்டார்கள் என்பது பற்றி இதே சட்டமன்றத்திலே கூறினேன். ஆனால் அதுசம்பந்தமாக எந்த பலனையும் பார்க்க முடியவில்லை. மாற்றப்பட்டவர்கள் மாற்றப்பட்ட நிலையிலேதான் இன்றும் கடலூர் சிறையிலே இருக்கிறார்கள்.

அடுத்து, சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கக்கூடிய பரோலைப் பொறுத்த வரையிலே 15 தினங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த 15 நாட்கள் முழுவதையும் ஒரே [illegible]

அனுமதியைக் கொடுப்பதன் மூலம் அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் இருக்க முடியாது. ஒரு தடவை 6 நாள் என்றும் மற்றும் மூன்று தடவைகளில் மூன்று மூன்று நாட்களாகவும் கொடுக்கப்படுவதால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள் எவ்வளவு என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் நீண்ட தூரங்களில் இருக்கக்கூடிய அவர்களுடைய கிராமங்களுக்குச் சென்று வருவதிலேயே இரண்டு நாள் பயணம் என்ற அளவிலே முடிந்துவிடுகின்றது. ஆகவே ஒருநாள் மட்டும் வீட்டிலே இருந்து என்ன காரியத்தை அவர்களால் கவனிக்க முடியும்? ஆகவே அவர்களுக்கு கொடுக்கக்கூடிய லீவைப் பொறுத்த வரையில் 15 தினங்களையும் ஒரே முறையிலே எடுத்துக்கொள்வதற்குரிய நிலையினை ஏற்படுத்தவேண்டும். சிலர் விருப்பப்பட்டால், வேண்டுமானால் இரண்டுமுறை எடுத்துக்கொள்வது பற்றி ஆட்சேபணை ஒன்றும் இருக்க முடியாது. ஆகவே ஒரே தடவையில் அந்த லீவினை எடுத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பு இருந்தால் குறைந்தது 10 தினங்களாவது அவன் வீட்டிலே தங்கி இருந்து தன்னுடைய குடும்பத்திற்கு வேண்டிய சில காரியங்களை ஓரளவு செய்து கொடுக்க முடியும். ஏதோ விருந்தாளிபோன்ற தன்னுடைய வீட்டிற்கே சென்று ஒருநாள் வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு வருவதற்காக அவன் வீட்டிற்குச் செல்வதில்லை.

அடுத்து, ஹோம் லீவு சம்பந்தப்பட்ட வகையிலே சில முறைகள் மாற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் 5 ஆண்டுகள் முடிந்தால்தான் கொடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது. எனக்குக் கிடைத்த சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி சிறையிலே உள்ள திரு. சி. ராஜாராமன் என்கிற கைதிக்கு 6 மாத காலத்திலேயே இந்த ஹோம் லீவு கொடுக்கப்பட்டிருக்கின்றது. 6 மாத காலம் முடிந்தவுடன் 15 தினங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மறு மாதமே 10 தினங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. 143950/80-1 டேட்டட் 10—10—1980. அடுத்து இதேமாதிரி இன்னொரு கைதி, பெயர் சந்திரசேகரன், கைதி நம்பர் 63363. அவருக்கு ஒரு ஆண்டுக்காலம் முடிவதற்கு முன்னாலேயே பதினைந்து நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி வீராயன் என்பவருக்கு ஆறு மாத காலத்திலேயே பதினைந்து தினங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் கொடுக்கக்கூடாது என்பதல்ல என்னுடைய கோரிக்கை. யாரோ சிலருக்கு மட்டும் கொடுக்கின்றார்கள். அவ்வாறு கொடுத்தது தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரே மாதிரியாக எல்லோருக்கும் செய்யக்கூடிய முறை இருக்க வேண்டும். கைதி எனப்படுபவர்கள் ஏதோ சில சந்தர்ப்பவசத்தால் சில குற்றங்களைச் செய்துவிட்டு சிறைக்கு வருகிறார்கள். அவ்வாறு அவர்கள்





சிறையிலே இருக்கின்றபோது அவர்களுடைய குடும்பத்திற்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் அரசினுடைய பொறுப்பு. ஆகவே எல்லா கைதிகளுக்கும் ஒரே மாதிரியான முறையிலே ஹோம் லீவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே லீவில் செல்லக்கூடிய உத்தரவினை தளர்த்துகின்றபோது அதை யூனிஃபார்மாக எல்லோருக்கும் அந்தச் சலுகை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரையிலே கைதிகளுக்குரிய லீவு சம்பந்தமாகக் குறிப்பிட்டேன்.

அடுத்து சிறை நிர்வாகம்பற்றி எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். சிறையிலே நன்னடத்தைத் துறை என்பது இருக்கின்றது. இது சம்பந்தமாக ஏற்கெனவே பல குழுக்கள் தனித்தனியாக நியமிக்கப்பட்டு, அவை கருத்துக்களைச் சொல்லி இருக்கின்றன. 1950-51 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சிறை சீர்திருத்தக்குழு, 1974-75 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு, 1978-79 ஆம் ஆண்டிலே நியமிக்கப்பட்ட நரசிம்மன் குழு ஆகிய இந்த குழுக்கள் எல்லாம் நன்னடத்தைப் பிரிவினைத் தனித்தனியாக பிரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே அவ்வாறு தனித்தனியாக பிரிப்பதற்கு என்ன தாமதம்? காலதாமதம் செய்யாமல் அந்த நன்னடத்தைப் பிரிவைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிறையிலே இருக்கக்கூடிய கைதிகளின் நடத்தையைப் பொறுத்து சில முடிவுகள் எடுக்க வேண்டும் என்றால் அதற்கு சிறை அதிகாரிகளின் உத்தரவைப் பெற்றுத்தான் அவற்றைச் செயல்படுத்தவேண்டிய நிலைமை இன்று இருக்கின்றது. அப்படியானால் அது எப்படி சரியாகச் செயல்படும்? ஆகவே உடனடியாக அந்த நன்னடத்தைப் பிரிவை சிறை நிர்வாகத்திலே இருந்து தனியாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கைதிகள் காவல் காப்பது போன்ற வேலையைச் செய்வதற்காக ஒரு பிரிவு. அந்த சிறை கைதிகளிடத்திலே பழகி நல்லமுறையிலே பேசி அவர்களுக்கு மன மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இன்னொரு பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று சிறை சீர்திருத்தக் குழுவினுடைய சிபாரிசு இருக்கிறது. ஆகவே, அம்மாதிரியான சீர்திருத்தங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆயுள் கைதிகளை 14 ஆண்டுகளுக்கு சிறையில் இருந்ததற்குப் பிறகு தான் அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று மத்திய அரசினுடைய ஒரு உத்தரவு இருக்கிறது; கைதிகளை முன் கூட்டியே விடுதலை செய்யவேண்டும் என்று நாம் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம். ஆனால் அதை எதிர்பார்த்து இன்றையதினம் ஆயிரக்கணக்கான கைதிகள். அனைத்து சிறைகளி

அனுமதியைக் கொடுப்பதன்மூலம் அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் இருக்க முடியாது. ஒரு தடவை 6 நாள் என்றும் மற்றும் மூன்று தடவைகளில் மூன்று மூன்று நாட்களாகவும் கொடுக்கப்படுவதால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்கள் என்னவென்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் நீண்ட தூரங்களில் இருக்கக்கூடிய அவர்களுடைய கிராமங்களுக்குச் சென்று வரு வழியிலேயே இரண்டு நாள் பயணம் என்ற அளவிலே முடிந்துவிடுகின்றது. ஆகவே ஒருநாள் மட்டும் வீட்டிலே இருந்து என்ன காரியத்தை அவர்களால் கவனிக்க முடியும்? ஆகவே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய லீவைப் பொறுத்த வரையில் 15 தினங்களையும் ஒரே முறையிலே எடுத்துக்கொள்வதற்குரிய நிலையினை ஏற்படுத்தவேண்டும். சிலர் விரும்பினால் வேண்டுமானால் இரண்டுமுறை எடுத்துக்கொள்வது பற்றி ஆட்சேபனை ஒன்றும் இருக்க முடியாது. ஆகவே ஒரே தடவையில் அந்த லீவினை எடுத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பு இருந்தால் குறைந்தது 10 தினங்களாவது அவன் வீட்டிலே தங்கி இருந்து தன்னுடைய குடும்பத்திற்கு வேண்டிய சில காரியங்களை ஓரளவு செய்து கொடுக்க முடியும். ஏதோ விருந்தாளிபோன்று தன்னுடைய வீட்டிற்கே சென்று ஒருநாள் வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு வருவதற்காக அவன் வீட்டிற்குச் செல்லவில்லை.

அடுத்து, ஹோம் லீவு சம்பந்தப்பட்ட வகையிலே சில முறைகள் மாற்றப் பட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறது. அதாவது 5 ஆண்டுகள் முடிந்தால்தான் கொடுக்கப்படும் என்று குறிப்பிடுகின்றது. எனக்குக் கிடைத்த சில விவரங் களைக் குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி சிறையிலே உள்ள திரு. சி. ராஜு ராமன் என்கிற கைதிக்கு 6 மாத காலத்திலேயே இந்த ஹோம் லீவு கொடுக்கப் பட்டிருக்கின்றது. 6 மாத காலம் முடிந்தவுடன் 15 தினங்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றது. அதற்கு மறு மாதமே 10 தினங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றது. அதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. 143950/80-1 டேட்டட் 10—10—1980. அடுத்து இதேமாதிரி இன்னொரு கைதி. பெயர் சந்திர சேகரன், கைதி நம்பர் 63363. அவருக்கு ஒரு ஆண்டுக்காலம் முடிவதற்கு முன்னாலேயே பதினைந்து நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி வீரையன் என்பவருக்கு ஆறு மாத காலத்திலேயே பதினைந்து தினங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் கொடுக்கக்கூடாது என்பதல்ல என்னுடைய கோரிக்கை. யாரோ சிலருக்கு மட்டும் கொடுக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரே மாதிரியாக எல்லோருக்கும் செய்யக்கூடிய முறை இருக்க வேண்டும். கைதி எனப்படுபவர்கள் ஏதோ சில சந்தர்ப்பவசத்தால் குற்றங்களைச் செய்துவிட்டு சிறைக்கு வருகிறார்கள். அவ்வாறு





சிறையிலே இருக்கின்றபோது அவர்களுடைய குடும்பத்திற்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் அரசினுடைய பொறுப்பு. ஆகவே எல்லா கைதிகளுக்கும் ஒரே மாதிரியான முறையிலே ஹோம் லீவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே லீவில் செல்லக்கூடிய உத்தரவினை தளர்த்துகின்றபோது அதை யூனிஃபார்மாக எல்லோருக்கும் அந்தச் சலுகை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரையிலே கைதிகளுக்குரிய லீவு சம்பந்தமாகக் குறிப்பிட்டேன்.

அடுத்து சிறை நிர்வாகம்பற்றி எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக் கைகள் சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். சிறையிலே நன்னடத்தைத் துறை என்பது இருக்கின்றது. இது சம்பந்தமாக ஏற்கெனவே பல குழுக்கள் தனித்தனியாக நியமிக்கப்பட்டு, அவை கருத்துக்களைச் சொல்லி இருக் கின்றன. 1950-51 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சிறை சீர்திருத்தக்குழு, 1974-75 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு, 1978-79 ஆம் ஆண்டிலே நியமிக்கப்பட்ட நரசிம்மன் குழு ஆகிய இந்த குழுக்கள் எல் லாம் நன்னடத்தைப் பிரிவினைத் தனித்தனியாக பிரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே அவ்வாறு தனித்தனியாக பிரிப்பதற்கு என்ன தாமதம்? காலதாமதம் செய்யாமல் அந்த நன்னடத்தைப் பிரிவைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிறையிலே இருக்கக்கூடிய கைதிகளின் நடத்தையைப் பொறுத்து சில முடிவுகள் எடுக்க வேண்டும் என்றால் அதற்கு சிறை அதிகாரிகளின் உத்தரவைப் பெற்றுத்தான் அவற்றைச் செயல்படுத்தவேண்டிய நிலைமை இன்று இருக்கின்றது. அப்படி யானால் அது எப்படி சரியாகச் செயல்படும்? ஆகவே உடனடியாக அந்த நன்னடத்தைப் பிரிவை சிறை நிர்வாகத்திலே இருந்து தனியாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கைதிகள் காவல் காப்பது போன்ற வேலையைச் செய்வதற்காக ஒரு பிரிவு. அந்த சிறை கைதிகளிடத் திலே பழகி நல்லமுறையிலே பேசி அவர்களுக்கு மன மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இன்னொரு பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று சிறை சீர் திருத்தக் குழுவினுடைய சிபாரிசு இருக்கிறது. ஆகவே, அம்மாதிரியான சீர்திருத்தங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து ஆயுள் கைதிகளை 14 ஆண்டுகளுக்கு சிறையில் இருந்ததற்குப் பிறகு தான் அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று மத்திய அரசி னுடைய ஒரு உத்தரவு இருக்கிறது; கைதிகளை முன் கூட்டியே விடுதலை செய்யவேண்டும் என்று நாம் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம். ஆனால் அதை எதிர் பார்த்து இன்றையதினம் ஆயிரக்கணக்கான கைதிகள், அனைத்து சிறைகளி

லும் இருக்கக் கூடியவர்கள் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே நமக்கு வாழ்வு கிடைக்கும், வெளியே செல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள், இன்னும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இருந்த முறைப்படி, 8 ஆண்டுகளுக்கு ஒரு ஆயுள் கைதி சிறையில் இருந்தால், நன்னடத்தை போர்டு என்ற ஒரு போர்டு வைத்து அதிலே அவர் நடத்தையை பரிசீலனை செய்து, அவர்களை விடுதலை செய்வதற்கான வாய்ப்பு உடன் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறையிலே இருக்கக் கூடிய வார்டர்கள் சம்பந்தமாக சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் அவர்கள், சர்வீஸ் முழுவதும் கைதிகளாக இருந்து வாழ்க்கை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று, சிறை சீர்திருத்தக் குழு, இலவசமாக உணவு கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தது. ஆனால் அது கூட அமுல் செய்யப்படவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப் படக் கூடிய சம்பளமும் ஒரே துறையினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரே துறை என்று சொன்னால், போலீஸ் துறையிலே இருக்கிற ஐ.ஜி.-யினுடைய அந்தஸ்துக்கு குறையாதவர்கள், டி.ஐ.ஜி.-யாக இருக்கக் கூடியவர்கள், சிறைப் பிரிவு நிர்வாகத்திற்கு மாற்றப்படுகிறார்கள். அங்கிருந்துதான் அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள்தான் தேர்வு நடத்துகிறார்கள். போலீஸ் வேலைக்கும் அந்த எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் தான் வேலைக்கு எடுக்கிறார்கள். சிறையிலே இருக்கிற வார்டன்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. என்றுதான் எடுக்கிறார்கள். ஆனால் போலீஸ்காரர்களுக்கு அந்த சிறை வார்டன்களை விட 75 ரூபாய் அதிகமாக சம்பளம் வழங்கப்படுகிறது. ஒரே தகுதி. ஒரே அதிகாரிதான் தேர்வு செய்கிறார். ஒரேவிதமான வேலைதான் செய்கிறார்கள். ஆகவே போலீஸ்காரர்களுக்கு கொடுப்பது போலவே இவர்களுக்கும் சம்பளம் கொடுப்பதுவே நியாயமாக இருக்கும். ஆகவே, சிறைவார்டர்கள் சங்கம் இதை உள்ளிட்டு, 33 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். சென்ற டிசம்பர் மாதத்திலேயே அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் ஒரு முடிவு காண பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணபெறும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. தீர்வு காணப்பெறவில்லை. 41 பேர்கள் இன்றையதினம் அவர்கள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள். அவர்கள் குடும்பம் அதன் காரணமாக பட்டினியாலே வாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள், சிறைக்காவலர்களின் பிரச்னைகளை நல்லமுறையிலே சுமூகமான முறையில், தீர்த்து வைப்பதற்கு அந்த சங்கத்தை அழைத்துப் பேசி நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டி உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து நான் குறிப்பிட்டு பேச விரும்புவது நீதித்துறையைப் பொறுத்தது. அந்த நீதித் துறையைப் பொருத்தவரையில், எங்கு பார்த்தாலும் சரி, உயர்நீதி மன்றத்திலிருந்து கீழே இருக்கக் கூடிய சாதாரண நீதிமன்றங்கள் வரை, வட்டங்களிலே இருக்கக் கூடிய, தாலுக்காக்களில் இருக்கக் கூடிய சாதாரண மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுகள் வரையில், வழக்குகள் தேங்கிக் கிடக்கின்ற நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். உயர்நீதிமன்றத்திலே கேட்டால் 1974 முதல் தீர்க்கப்படாத வழக்குகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். உயர்நீதிமன்றத்திலே 4 நீதிபதிகளின் ஸ்தானங்கள் சில ஆண்டுகளாக பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவே இருக்கின்றன என்று சொல்கிறார்கள். உயர்நீதிமன்றத்திலே நீதிபதிகள் நியமனம் சம்பந்தமாக அரசியல் சட்டத்திலே இருக்கக் கூடிய சில விதி முறைகள். அதாவது விகிதாசார முறையில் என்று சொல்கிறார்கள். அப்படி அந்த முறையாக இருந்தால் கூட அது தவறு என்று நான் கூற மாட்டேன். ஆனால் அதற்குப் பதிலாக இன்றையதினம் அங்கே இருக்கக் கூடியவர்கள் மத அடிப்படையிலே, ஜாதி அடிப்படையிலே நியமிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதாக கூறப்படுகிறது. ஆகவே, அதில் மாற்றம் வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன.

வழக்குகளை துரிதமாக தீர்வு காண்பதற்காக துரித நடவடிக்கைகளை துறை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். லேபர் கோர்ட் கேஸ்கள் சம்பந்தபட்ட மட்டிலே, ரிட் பெட்டிஷன் செய்வது சம்பந்தமாக, ராமபிரசாத் ராவ் அவர்கள் உயர்நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக இருந்தபோது, ஒரு ரிட் மனு. அதற்கு மேல் ஒரு ரிட் அப்பீல் இரண்டையும் சேர்த்து, இரண்டு முறையாக அந்த வழக்கை நடத்துவதற்கு பதிலாக, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை ஒரே நேரத்தில், அந்த பெட்டிஷன்களை தாக்கல் செய்து நடத்தலாம் என்ற நடைமுறை இருந்தது. சமீபத்திலே அது கைவிடப்பட்டிருக்கிற காரணத்தாலே, தொழிலாளர்களின் வழக்குகள் பெரிதும் தேங்கிக் கிடக்கின்றன. அவர்கள் இரண்டு முறை அந்த வழக்காட செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அது அவர்களுக்கு பெரிய சிரமமாக இருக்கிறது. ஆகவே அதில் மாற்றம் வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல இந்த ரிட் மனுக்கள்மீது கொடுக்கக்கூடிய கோர்ட் பீஸ்கள் முதலிலே 50 ரூபாயாக இருந்தது. இப்பொழுது அது 100 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதை உயர்த்தியிருப்பது காரணமாக சாதாரண தொழிலாளர்கள் இன்றையதினம் ஒரு ரிட் மனு தாக்கல் செய்ய தன்னுடைய உரிமையை நிலை நாட்ட அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பல. ஒரே நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 30 பேர்கள் இருப்பார்களானால் 33 (வி) (2) பெட்டிஷன் சம்பந்தமாக ஒரு ரிட் மனு தாக்கல் செய்யவேண்டும் என்றால் 30 ரிட்கள் தனித்தனியாக தாக்கல் செய்யவேண்டும். ரூ. 100 ஒரு மனுவிற்கு பீஸ் என்றால் 30 மனுக்களுக்கு ரூ. 3,000 ஆகிறது. அதேசமயத்தில் அந்த நிறுவனத்தின் முதலாளி தொழிலாளர்களுக்கு எதிராக ஒரு மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றால் ஒரு மனு தாக்கல் செய்தால் போதும். ரூ. 100-ல் அந்தக் காரியம் முடிந்துவிடுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன.

(முற்பகல் 10-20)

இன்றையதினம் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் சம்பந்தமான வழக்குகளை பரிசீலிக்க, ரிட் பெட்டிஷனுக்கு பதிலாக சிவில் ரிவிஷன் பெட்டிஷன் என்ற அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. சிவில் ரிவிஷன் பெட்டிஷன் என்றால் அதற்கு ரூ. 10 கட்டணம் கட்டினால் போதும் என்றிருக்கிறது. ஆகவே அம்மாதிரியான முறையை இந்தத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலும் கொண்டுவந்து கட்டணத்தைக் குறைத்து செலுத்துவதற்கான முறையில் நிர்ணயிப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லீகல் எய்ட். நம் நாட்டிலுள்ள சாதாரண ஏழை மக்களுக்கு சட்ட உதவி இலவசமாகக் கிடைக்கவேண்டும் என்பது இன்றையதினம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு கொள்கை. டெல்லியில் உள்ள உச்சநீதி மன்ற நீதிபதிகள் உட்பட அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் பிரதிநிதிகளும் அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அரசுத் துறையிலும் அதுபற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றையதினம் இருக்கக்கூடிய நடைமுறையைப் பார்த்தால், ஏழை மக்கள், வாதாட சக்தியற்ற மக்கள் அந்த இலவச வசதியைப் பெற முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள், ஹரிஜனங்கள், தொழிலாளர்கள் இந்த இலவச சட்ட உதவியை பெறமுடியாத நிலையில்தான் இன்றும் இருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக ஒரு குழு பரிசீலனை நடத்தி, அதற்காக தனியாக ஒரு குழு நியமித்து, பொதுமக்கள் பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைத்து எவ்வாறு இந்த இலவச சட்ட உதவியை அவர்கள் அனைவரும் சுலபமாகப் பெறமுடியும் என்ற முறையில் ஆராய வேண்டும். அப்படிப்பட்டதொரு குழுவை நியமிக்க வேண்டும்.





அடுத்து, லேபர் கோர்ட் ஜட்ஜ்கள். ஏற்கனவே ஓய்வு பெற்ற நீதிபதிகள் ட்ரிப்யூனல் ஜட்ஜ்களாக நியமிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு சீனியர் ஜட்ஜ்கள் நியமிக்கப்பட்டார்கள். இன்று புதிதாக வரக்கூடியவர்களை லேபர் கோர்ட் நீதிபதிகளாக நியமிக்கக்கூடிய நிலை இருக்கிறது. இவர்கள் தொழிற் துறை சட்டங்களை புரிந்துகொண்டு தீர்ப்புகள் வழங்க வேண்டும். ஒரு பழமொழி சொல்வார்கள். ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று. இவர்கள் தொழிற்சட்டங்களை நன்கு புரிந்துகொண்டு அதில் தேர்ச்சி பெற்று வருவதற்குள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப் படக்கூடிய நிலை உள்ளது. ஆகவே தொழில் கோர்ட் நீதிபதிகளுக்கு, லேபர் லாஸ்-ல் ( Labour Laws ) தனியாக பயிற்சி பெற அதற்கான பயிற்சி தர ஏற்பாடு செய்து, பயிற்சி கொடுத்து அவர்களை தொழில் நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலத்துறை மானியத்தின் மீது பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன். திருச்சியிலும், திருநெல்வேலியிலும் லேபர் கோர்ட்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறேன். அதை நிறைவேற்றித் தரவேண்டும். கடைசியாக நீதி அனைவருக்கும் அருகில், சமீபத்தில் கிடைக்க வேண்டும் 'நியாஸ் பாயின்ட்டில்' கிடைக்க வேண்டும். வழக்கு மன்றங்களுக்கு வரவேண்டுமென்றால், நீண்ட தூரத்திற்கு வரக்கூடிய நிலைமை கிராமங்களிலே இருக்கிறது. கிராமங்களிலே இருந்து மாவட்ட தலைநகருக்கும், மாநில தலைநகருக்கும் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, நீதி என்பது அவர்களுக்கு அருகாமையில் கிடைக்கக் கூடிய வகையில் ஏற்படுத்த வேண்டும். அந்த முறையில் கோர்ட்டுகளை அருகாமையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியில் குளித்தலை நகரம், மணப்பாறை, முசிறி, மற்றும் கரூருக்கு மையமாக இருக்கிறது. ஆகவே, குளித்தலையில் ஒரு சப் கோர்ட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே கோர்ட் இருந்து கரூருக்கு மாற்றப்பட்டது. ஆகவே தற்சமயம் மையமாக இருக்கக்கூடிய இந்த குளித்தலையில் அதுவும் இப்பொழுது காவேரிப் பால அமைப்பிற்குப் பிறகு மணப்பாறை, முசிறி, கரூர் ஆகிய வட்டங்களுக்கு குளித்தலை மையமாக இருப்பதால், அங்கே ஒரு சப் கோர்ட் ஏற்படுத்த வேண்டும். இன்றையதினம் இந்த நீதித் துறையிலும், சிறைத் துறையிலும் தீவிரமான மாற்றங்கள் செய்யக்கூடிய முறையிலே அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி, நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய குளத்திலே சப் கோர்ட்டு அமைக்க வேண்டுமென்ற அப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், பொதுப் பணித் துறைக்கு, டிரான்ஸ் போர்ட், ஹைவேஸ், இர்ரிகேஷன் ஆகிய ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக இன்ஸ்பெக்ஷன் பங்களாக்கள் இருக்கின்றன. அதேபோல் நீதித் துறைக்கு இருந்தால், வெளி மாவட்டங்களிலே இருந்து, வெளி மாநிலங்களிலே இருந்து வருகின்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மற்றும் நீதித் துறையைச் சார்ந்தவர்கள் வரக்கூடிய நேரத்தில் அவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும். எனவே, அவர்களுக்கென்று தனியாக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இன்ஸ்பெக்ஷன் பங்களாக்கள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட முன்சீப் கோர்ட்டில் ஜூரிஸ்டிக்ஷனை 5,000-லிருந்து 15,000 ஆக ஆக்கியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் மாவட்ட நீதிமன்றங்களின் பளு அதிகமாக இருக்கிறது. சப்-கோர்ட்டினுடைய பளு குறைந்திருக்கிறது. எனவே, அதை சமப்படுத்த மாவட்ட நீதிமன்ற முன்சீப் கோர்ட்டுக்கு ஜூரிஸ்டிக்ஷன் 10,000 ஆக உயர்த்தினால், பேலன்ஸ் ஆப் வெயிட் என்ற முறை ஏற்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், சில வழக்குகள் தாசில்தார் கோர்ட்டிலே விசாரிக்கப்படுகின்றன. தாசில்தார்கள் சட்ட நுணுக்கம் தெரியாதவர்கள். வழக்கறிஞர்கள் வாதாடு கின்றபோது, சட்ட நுணுக்கங்களை புரியாதவர்கள்; புரிந்துகொள்ளும் சக்தி இல்லாதவர்கள். சட்டப் பயிற்சி அடையாதவர்கள். எனவே, தாசில்தார் கோர்ட்டிலே நீதி பற்றிய நிர்வாகம் நடைபெறக்கூடாது என்றும், நீதி மன்றங் களிலேதான் வழக்குகள் நடைபெற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில வழக்குகளைப் பொறுத்தவரை வழக்கறிஞர்கள் வாதாடக் கூடாது என்ற தடையிருக்கிறது. அந்தத் தடை விதியை ஏற்படுத்தியிருப்ப தால், ஏழை எளிய பாமர மக்கள் நிலை மோசமாகியிருக்கிறது. எனவே, அந்தமாதிரி தடையை வழக்கறிஞர்களுக்கு போடக் கூடாது; அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





கோர்ட்டுகளில் தீர்ப்புகள் பெறுவதற்கு காபி அப்ளிகேஷன் தயார் செய்கி றோம். ஆக்ட் 18/60-ன்படி, காபி அப்ளிகேஷன் பெறுவதற்கு, ஒரு ரூபாய் கோர்ட் பீ ஸ்டாம்பு ஒட்டுகிறோம். ஆனால், மற்ற வழக்குகளைப் பொறுத்த வரை, நகல் பெறுவதற்கு 25 பைசா கோர்ட் பீ ஸ்டாம்புதான் ஒட்டுகிறோம். ஆகவே, இதை ஒரே சீராக்கும் முறையில் இரண்டு வழக்குகளுக்கும் தீர்ப்பின் நகலைப் பெறுவதற்கு ஒரு ரூபாய் கட்டினால் போதும் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகை என்ற முறையில் உத்தரவு போட வேண்டும்.

அடுத்து, கொடைக்கானலில் நீதி மன்றத்திற்கு என தனியாக கட்டிடம் கிடையாது. அது தாசில்தார் அலுவலகத்தில் நடைபெறுகிறது. கொடைக் கானலில் தனியாக நீதிமன்றக் கட்டிடம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்க் கோர்ட்டில் அமீனா என்னும் ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அமீனா நுழைந்த வீடும், ஆமை நுழைந்த வீடும் உருப்படாது என்று சொல் வார்கள். அமீனா நுழையும்போதே, அவர்கள் சொந்தக்காரர்கள் அவர்களை நையாண்டி செய்யும் சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை ஹைகோர்ட்டில், பெயிலிப் என்று இருப்பதைப்போல், இவர்களையும் பெயிலிப் என்று அழைக்க வேண்டும். அதே நேரத்தில் அமீனாக்கள் கிராமங்களுக்குச் சென்றால், அவர்களை யார் என்று அங்குள்ள மக்கள் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு அடையாள கார்டுகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டுகளில் நீதிபதிகளால் வழங்கப்படுகின்ற தீர்ப்பினை, உடனுக்குடன் நிறைவேற்றுவதற்கு போலீஸ் உதவி காலதாமதத்தில் கிடைப்பதில்லை.

(முற்பகல் 10-30)

போலீசாருக்கு பல வேலைகள் இருக்கின்றன. அவர்களுக்கு போலீஸ் உதவி வேண்டுமென்று கீழ்க் கோர்ட்டிலே மனு போட்டால் போலீசார் பந்தோபஸ்து வேலைக்கு போயிருக்கிறார்கள்; ஆகவே போலீஸ் உதவி கிடைக்காது என்று கூறிவிடுகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட நீதிபதியின் கண்ட்ரோலிலும் ஒரு போலீஸ் படையை ஏற்படுத்தி, கீழ்க்கோர்ட்டிலே அதற்கான படியைக் கட்டி னால் எந்தெந்த கோர்ட்டிலே படியை கேட்கிறார்களோ அந்த கோர்ட்டுக்கு போலீஸ் உதவி கொடுத்தால் அந்த வழக்குகளின் பலன் மற்றவர்களுக்கு விரைவில் கிடைக்கும். [illegible] கோடை வாசஸ்தலமான கோடைக் கானலில் ஒரு [illegible] இருக்கிறது. அங்கு 'பைலிங்' அனைத்தும் [illegible] நடக்கிறது. வழக்கு விசார ணைக்கு [illegible] முன்சிப் கோடைக்கான லுக்கு வருவார். அதைப்போல கிரிமினல் கோர்ட்டிலே விசாரணை வந்தால்

நிலக்கோட்டை எம்.எல்.ஏ. வருவார். இதை மாற்றி கொடைக்கானலுக்கு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கம் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டங்களை கையாள்வதற்கு காவல்தாருக்குப் போதிய பயிற்சி இல்லை. ஆகவே இதை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாவட்டத்திலே அமையயிருக்கிற இரண்டாவது மாவட்ட நீதிபதி கோர்ட்டைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். பெரியகுளம், உத்தமபாளையம், கொடைக்கானல், நிலக்கோட்டை ஆகிய பல்வேறு வட்டங்களை அடக்கி இந்த கோர்ட் அமைக்கப்படுகிறது. இந்த கோர்ட்டுக்கு மையப் பகுதி பெரியகுளம் ஆகும். இந்த மையப்பகுதியான பெரியகுளம் நகரிலே இந்த மாவட்ட நீதிபதியினுடைய பிரிவு கோர்ட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீதிபதிகள் நியமனம் நாட்களை வழக்கறிஞர்களிலிருந்து நியமிக்கப்படவில்லை. அந்த குறையைப் போக்க வழக்கறிஞர் சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாக, சிறைச்சாலை பற்றிய மானியத்திலே பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் நன்றி சொல்லி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை நீதித்துறையிலே தமிழ் நீதிமன்ற மொழியாக வேண்டும் என்பதற்காக நல்ல நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்திருக்கிறது. நீதிமன்றங்களில் தமிழ் நீதிமன்ற மொழியாக இருந்தால் தான் சாதாரண ஏழை, எளிய மக்கள் நீதியிலே பங்கு பெற முடியும். அல்லது நீதிமன்றங்களில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அதற்காக இரண்டு இதழ்களை அரசு வெளியிட்டு வருகிறது. தீர்ப்புத் திரட்டு, குற்ற வழக்கு தீர்ப்புத் திரட்டு என்ற வகையிலே இந்த தொகுப்பு இதழ்களை அரசு தொடர்ந்து வெளியிடுகிறது. இது ஒரு பாராட்டுக்குரிய முயற்சி. இருந்தாலும் கூட நீதிமன்றங்களிலே சகல மட்டங்களிலும் தமிழே நீதிமன்ற மொழியாக வேண்டுமென்று விரைவான நடவடிக்கையை நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவருக்கும், இந்த அரசுக்கும் இந்த கொள்கையிலே அளவுகடந்த நம்பிக்கை இருப்பதை நான் அறிவேன். உயர்நீதி மன்றங்களிலிருந்து கீழ் இருக்கிற நீதிமன்றங்கள் வரை எல்லா மட்டங்களிலும், ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக தமிழ் நீதிமன்ற மொழியாக ஆவதற்கு சகல நடவடிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.





மதுரையிலே உயர்நீதி மன்ற ஆயம் ஒன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கையை அரசு வற்புறுத்தி வருவதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே சென்னையிலே தலைமை நீதிமன்ற ஆயம் ஒன்று அமைய வேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது. சென்னையிலே தலைமை நீதிமன்ற ஆயம் வருமானால் அது ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழகம் ஆகிய நான்கு தென் மாநிலங்களுக்கும் உதவியாக இருக்கும். இந்த நான்கு தென் மாநிலங்களிலே இருக்கிறவர்கள் டெல்லிக்கு சென்று நீதியை நாட வேண்டிய நிலைமை இருக்கிறது. அதை மீறி சென்னையில் தலைமை நீதிமன்ற ஆயம் வருவதின் மூலம் தமிழகத்திற்கு மட்டுமல்ல, தென்மாநிலங்கள் அத்தனைக்கும் அதன் மூலம் வசதிகள் கிடைக்கும் என்பதாலே எப்படியாவது அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீதிபதிகள் நியமனத்திலே, மாற்றத்திலே அரசியல் நோக்கம் என்பது இருக்கக் கூடாது. இது இந்த அரசுக்கு மட்டுமல்ல, மத்திய அரசுக்கும் சேர்த்து நான் சொல்ல விரும்புகிறேன். அண்மையிலே நம்முடைய உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி மாற்றப்பட்டது பற்றி ஒரு சர்ச்சை எழுந்தது. அது இந்திய நாடு பூராவுக்குமான சர்ச்சையாக மாறியிருக்கிறது. தமிழ்நாட்டிலே தலைமை நீதிபதியாக யார் இருக்க வேண்டும் என்பதை டெல்லியிலே முடிவு செய்து, இந்த மாநில அரசுக்குக் கூடத் தெரியாமல் அந்த மாற்றத்திற்காக ஆணையைப் பிறப்பிப்பது என்றால் மாநில அரசின் உரிமைகள் பறிக்கப்படுவது மட்டுமல்ல, தமிழகத்திலே தமிழ் நீதிமொழியாக வேண்டுமென்பதற்கு குந்தகமாக அமைகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு தமிழறிந்த தமிழ்மகன் தமிழகத்தின் தலைமை நீதிபதியாக இருந்தால் அவருக்கு தமிழ்நாட்டுப் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களிலே அவர் ஊறித் திளைத்திருந்தால் அவர் சட்ட வரம்புக்குட்பட்ட நீதியை வழங்க முடியும். சட்டங்களை வைத்துக்கொண்டு நீதி வழங்குவது என்பது சரியாக இருக்காது. பொருத்தமாக இருக்காது, ஒவ்வொரு சட்டமும் அந்தந்த மாநிலங்களிலே உள்ள மக்களின் பண்பாடுகளுக்கு ஏற்ப, பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப வியாக்கியானம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் தமிழ்நாட்டிலே நீதிபதியாக வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படலாம் என்ற நிலை எழுமானால் மாநில மக்களின் மொழி அந்த மாநிலத்தின் நீதிமன்றங்களிலே அறவே தடுக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, அதன் மூலம் வேற்று மொழிகள் ஆதிக்கம் வருவது மட்டுமல்ல, மாநில மொழியே தெரியாத உயர்நீதி மன்றத்திலே நீதிபதியாகவோ அல்லது தலைமை நீதிபதியாகவோ இருப்பதன் மூலம் மாநில மக்களுக்கு உண்மையான நீதி

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஏப்ரல் 30

வழங்கப்படுவதாகவும் இருக்க முடியாது. நீதிபதிகள் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றை முடிவு செய்கிற பொறுப்பை மத்திய அரசு எடுத்துக்கொள்ளாமல் நீதித் துறையிடம் விட்டுவிட வேண்டும். நீதித் துறை அதற்கு தகுதி வாய்ந்தது என்பதிலே சந்தேகம் இல்லை, நீதித் துறையில் முழு நம்பிக்கை வைத்து அவர்கள் பொறுப்பிலே அவற்றை விடுவதுதான் நாட்டின் நலனுக்கு உகந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதித் துறைக்கு மேலாக ஆட்சியின் நிர்வாகத் துறை இருக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகளை மத்திய அரசு கொஞ்சம் கொஞ்சமாக மேற்கொண்டு வருகிறது. இது மத்திய அரசுக்கும் நல்லதல்ல. மாநில அரசுக்கும் நல்லதல்ல, மொத்தத்திலே மக்களாட்சி முறைக்கு எதிரானது, முரணானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் நீதி என்பது இன்றைக்கு சாதாரண மக்களுக்கு அவ்வளவு எளிதிலே கிட்டுவதாக இல்லை, நிறையப் பொருள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. வீணான சிரமங்களை ஏழை எளிய மக்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. என்றைக்கு நீதி என்பது ஏழை எளிய மக்களுக்கு சுலபமாக கிட்டுகிற வழி இருக்கிறதோ அன்றைக்குத் தான் உண்மையான நீதி அளிக்கப்படுகிறது என்பது ஆகும். அதைப்பற்றி மரியாதைக்குரிய சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஜஸ்டிஸ் கிருஷ்ண அய்யர் அவர்கள் சொன்ன வாக்கியத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Maximisation of justice for the poor is an essential factor in a Welfare State. மக்கள் நல ஆட்சியிலே ஏழை எளிய மக்களுக்கு அதிகபட்சம் நீதி கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுவது உண்மையிலேயே நீதித் துறைக்கு உகந்தது என்பதை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதையே நானும் வற்புறுத்த விரும்புகிறேன். ஏழை எளிய மக்களுக்கு நம்முடைய அரசு சட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைத்து இருக்கிறது. நான் அதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனாலும் இன்று முற்றிலுமாக சரியாக ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்கின்ற தன்மையிலே செயல்படத் தொடங்கவில்லை. அவற்றை முடுக்கி ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையில் செயல்பட வைக்க வேண்டியது நம்முடைய அமைச்சரவர்களின் பொறுப்பு என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

நம்முடைய உயர்நீதிமன்றத்திலே வழக்கறிஞர்களுக்கு இருக்கும் சேம்பர்ஸ் பற்றாக்குறையாக இருக்கிறது. அதை அதிகமாக்குவதற்கு நடவடிக்கைகளை நம்முடைய அமைச்சரவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக உயர்நீதிமன்றத்திலே இளம் வழக்கறிஞர்கள், படித்த இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வருவாயும் இல்லை. அந்தப் பிரச்னையை நம்முடைய அமைச்சரவர்கள் அனுதாபத்தோடு கவனித்து அரசு



1981 ஏப்ரல் 30] [திரு. ப. நெடுமாறன்]

வங்கிகளிலும், மற்றும் துறைகளிலேயும் கடன் உதவி கிடைக்கவும் மற்ற வகைகளில் உதவி செய்யவும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து, சிறைத் துறையைப்பற்றியும் சில பிரச்னைகளை நான் இந்த அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குச் சிறைச்சாலைகளில் எப்படிச் சீர்திருத்தம் செய்வது என்பதற்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்களின் பரிந்துரைகளெல்லாம் அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரைகளில் பெரும்பாலானவை இன்னும் அமலாக்கப்படவில்லை. அவற்றை ஆய்ந்து அவை அமலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆயுள் தண்டனைக் கைதிகளைப்பற்றி ஒரு பிரச்னை இருக்கிறது. குற்றம் செய்பவர்கள் எல்லோரும், குற்றம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலே குற்றங்களைச் செய்து விடவில்லை. At the spur of the moment. என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே, அதைப்போல சில சம்பவங்கள் சில நிகழ்ச்சிகளில் உணர்ச்சிவசப்பட்டு, தாங்கள் செய்வது இன்னது என்று உணராத நிலைமையிலே அவர்கள் பெரிய குற்றங்களைச் செய்து விடுகிறார்கள். கொலைக் குற்றங்களைக்கூடச் செய்து விடுகிறார்கள். தமிழகத்தில் சிறையில் இருக்கும் கைதிகளில் மிகப் பெரும்பாலோர் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள்; 60 சதவீதம், 70 சதவீதம் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள்தான் நம்முடைய சிறைச்சாலைகளில் நிறைந்திருக்கிறார்கள். அவர்களிலே கொலை வெறி கொண்டவர்களின் எண்ணிக்கை ரொம்பவும் குறைவு. நிகழ்ச்சிகளின் தன்மையிலே உணர்ச்சிவசப்பட்டு அந்தக் குற்றங்களைச் செய்துவிட்டு, பிறகு வாழ்க்கை முழுவதும் வருந்திக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலோர் இருக்கிறார்கள். எனவே, இந்த ஆயுள் தண்டனைக் கைதிகள் விஷயத்தை அனுதாபத்தோடு கவனித்து அவர்கள் பிரச்னைகளை நம்முடைய அரசு தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நானே மதுரை, வேலூர் போன்ற சிறைகளில் பல மாதங்கள் இருக்கும்பொழுது அவர்களின் பிரச்னையை ஆராய்ந்திருக்கிறேன். செய்யக்கூடாத கொலைக் குற்றங்களைச் செய்துவிட்ட உணர்வில் அவர்களில் பெரும்பாலோர் இருக்கிறார்கள். யாரைக் கொலை செய்தார்களோ, அவர்களின் குடும்பமும் அழிந்து, தங்களுடைய குடும்பமும் பரிதாபகரமான நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டு, தாமும் சிறையிலே இருக்கின்ற நிலைமைகளை எண்ணிப் பார்த்து மனம் வருந்தி,

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஏப்ரல் 30

வாழ்க்கை பூராவும் வேதனைப்படுகின்ற சூழ்நிலைகளிலே சிறைச்சாலைகளிலே இருக்கிறார்கள். அவர்களின் பிரச்சனைகளை அரசு அனுதாபத்தோடு பார்க்க வேண்டும். அவர்களைத் திருத்தி, நல்ல மனிதர்களாக மாற்றும் பொறுப்பும் அரசாங்கத்திற்கு உண்டு. எனவே, ஐந்தாண்டுகள் ஆனவுடனே அவர்கள் சிறையிலே எப்படியிருந்தார்கள் என்பதைக் கண்காணித்து. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாதம் அவர்களுக்குப் பரோல் கொடுத்து, அவர்களை வெளியே அனுப்பிப் பார்த்து, கண்காணித்து, குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, நன்னடத்தைப் பிரிவைப்பற்றி கமிஷன் ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் துறை தனியாக அமைக்கப்பட வேண்டும். சூழ்நிலை நன்னடத்தைக் கண்காணிப்புத் துறையைத் தனியாக அமைத்து, தனி இயக்குநரின் கீழ் அமைக்கப்பட வேண்டும். சிறைத்துறையில் மேலாதிக்கம் இல்லாமல் தனியாக இயங்குவதற்கான நிலைமையில் துறை அமைக்கப்பட்டு இயங்கினால் கைதிகளின் நன்னடத்தை பற்றிய தங்களது சான்றுகளைக் கொடுக்க வசதியாக இருக்கும். கர்நாடகம், கோவா போன்ற மாநிலங்களில் இப்படித் தனியாக அமைத்திருக்கிறார்கள். அதைப்போலவே இங்கேயும் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனையைப்பற்றி நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அண்மையில் ஒரு சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது தமிழகத்திலே. அதாவது, சிறையிலே அத்துமீறி நடந்த ஒரு அதிகாரிக்கு 3½ ஆண்டுகள் கழித்து, மீண்டும் வேலை கொடுத்ததைப்பற்றி எதிர்க்கட்சிகள் பல சர்ச்சைக்குரிய ஒன்றாக அதை ஆக்கிக் கொண்டிருக்கின்றன. நான் இந்தப் பிரச்சனையிலே தவறு செய்தவர்களுக்கு வக்காலத்து வாங்குவதற்காகப் பேசவில்லை. யார் தவறு செய்தாலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதிலே ஐயமில்லை. ஆனால், அம்பை நொந்து கொள்கிறவர்கள், எய்தியவர்களை நொந்துகொள்ள மறுக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய வருத்தம். வித்தியாசாகர் போன்ற சிறை அதிகாரிகள் சிறையிலே தவறு செய்தார்கள் என்று சொன்னால், அந்தத் தவறு செய்தவர்களை ஏவி விட்டவர்கள் யாரோ, அவர்களுடன் இன்றைக்கு அரசியல் உறவுகள், மற்ற உறவுகள் எல்லாம் வைத்துக்கொண்டு, அவர்கள் ஆட்சிக்கு வர எல்லா உதவிகளையும் செய்துவிட்டு, அந்த எய்தவர்களை மறந்து, அம்பை மட்டும் நொந்துகொள்கிற ஒரு நிலைமை ஏற்பட்டதை நான் வன்மையாக கண்டிக்க விரும்புகிறேன். அது சரியானது அல்ல. அதிகாரிகள்



1981 ஏப்ரல் 30] [திரு. ப. நெடுமாறன்]

யாராக இருந்தாலும், எந்தத் துறையிலே அவர்கள் வேலை பார்த்தாலும், ஆட்சிப் பொறுப்பிலேயிருப்பவர்கள் என்ன சொல்கிறார்களோ, அதன்படி அவர்கள் நடக்க வேண்டியவர்கள். அதை அவர்களாலே மீற முடியாது.

வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்திலே எத்தனையோ கொடுமைகளை அதிகாரிகள் செய்தார்கள். போலீஸ் அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். சுதந்திர அரசாங்கம் வந்தவுடன் அவர்களையெல்லாம் ஒழித்துக்கட்டவேண்டுமென்ற நிலையை எடுக்க வேண்டுமென்று சிலர் வற்புறுத்தினார்கள். அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அவரே வெள்ளை அதிகாரிகளின் கொடுமைக்கு ஆளானவர். இருந்தாலுங்கூட மேலேயிருப்பவர்கள் போட்ட உத்தரவை அதிகாரிகள் செயல்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக, அவர்களைத் தண்டிப்பது சரியானது அல்ல என ஒரு நிலையை எடுத்தார்கள்.

எங்களுடைய மதுரை மாவட்டத்திலே, உங்களுக்குத் தெரியும், விசுவநாதன் நாயர் என்று எஸ்.ஐ. இருந்தார். 'இச்சரட்டி கோவிந்தன்' என்று அவருக்கு ஒரு பட்டப் பெயர். அவர் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே, சுதந்திரப் போராட்ட வீரர்களைக் கொடுமைப்படுத்தினார் என்பதற்காக அவர் மீது அன்றைக்கு காங்கிரஸ் தொண்டர்கள் ஆசிட்டை ஊற்றினார்கள். அதுபற்றி பிரபலமான சதி வழக்கு அந்தக் காலத்திலே நடந்தது. அதே விசுவநாதன் நாயர் அவர்களுக்கு, பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபொழுது. எஸ்.பி. பதவி கொடுப்பதா, வேண்டாமா என்ற ஒரு பிரச்னை வந்தபொழுது, சர்வீசிலே அவர்மீது ஏதாவது குற்றம்-குறைகள் இருக்கிறதா என்று பாருங்கள். அது இருந்தால் வேறு விஷயம் என்று சொல்லி, அவருக்கு ப்ரமோஷன் கொடுங்கள் என்று சொல்லி, கொடுத்தார். அவர் மதுரை மாவட்டத்திற்கே எஸ்.பி.யாக வந்தார், அந்த நிலைதான் அரசியல் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு இருக்க வேண்டுமே தவிர, தவறு செய்து விட்டார்கள் என்று சொல்லி, அதன் காரணமாக பழி வாங்கும் போக்கிலே, அரசியல் தலைவர்களாக இருப்பவர்கள் நடந்து கொள்வார்களானால், அதிகாரிகள், பின்னாலே, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் செயல்பட மறுத்துவிடுவார்கள், நமக்கேதற்கு வம்பு என்ற நிலை ஏற்படும். ஆகவே, அவரை ஏற்கனவே 3½ ஆண்டுக்காலம் சஸ்பென்ஷனிலே வைத்திருக்கிறீர்கள், மற்றவர்களை வைத்திருக்கிறீர்கள். அந்தத் தண்டனையே போதுமானது. மீண்டும் அவருக்கு வேலை கொடுக்க வேண்டும். அதிலே அரசியலைப் புகுத்தக் கூடாது. அரசியல் ஆதாயத்தை அதிலே தேடக் கூடாது.

வித்தியாசமாக அந்த மாதிரி செய்யத் தூண்டிய சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு இன்றைக்கு மத்திய அரசாங்கம் பெரிய பதவிகளையெல்லாம் வழங்கியிருக்கிறது—அவர்களுக்கெல்லாம் பெரிய பதவிகளை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பாராட்டப்படுகிறார்கள். ஆனால், அந்த அரசாங்கத்தோடு எல்லா விதமான உறவுகளையும் வைத்துக்கொண்டும் அந்த அரசாங்கத்தை நிமிடத்திற்கு நிமிடம் பாராட்டிக் கொண்டிருப்பவர்கள், இன்றைக்குச் சாதாரண அதிகாரிகளைப் பழி வாங்கும் போக்கிலே, அவர்களைப்பற்றி பேசுவதும் எழுதுவதுமான நிலைமையிருப்பது சரியல்ல. இந்த அரசாங்கம் அந்தப் பேச்சுக்குப் பணிந்துவிடக் கூடாது. அந்த அதிகாரிகளுக்குப் ப்ரமோஷன் நியாயப்படி வழங்கப்பட வேண்டுமென்றால், அதைத் தைரியமாக வழங்க அரசாங்கம் முன் வர வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம்தான் நீங்கள் அதிகாரிகளின் மத்தியிலே, அரசு ஊழியர்களின் மத்தியிலே 'மொரேலை' ஏற்படுத்த முடியும். இல்லாவிட்டால், 'மொரேல்' சிதைந்து விடுமானால், எந்த அரசாங்கமும் ஒழுங்காக நடக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல், சிறைத் துறையிலே எனக்கு முன்னாலே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. கருப்பையா அவர்கள், உணவு மற்ற விஷயங்களில் எல்லாம், பல மாற்றங்களைச் செய்தாக வேண்டும் என்று சொன்னார்கள். அதை நானும் வரவேற்கிறேன். அதைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசை வற்புறுத்துகிறேன்.

(முற்பகல் 10.50)

சிறைக் காவல் துறைக்கு இன்றைக்கு நாம் ஆட்களை எடுக்கும்போது போலீசாருக்கு இருக்கின்ற தகுதிகளை வைத்துக் கொள்கிறோம். ஆனால் அவர்களுக்கும் இவர்களுக்கும் ஊதிய விகிதத்திலே வித்தியாசம் இருப்பது சரியல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மனதிலே கொண்டு இந்த வேறுபாட்டை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்குக் குறிப்பிட்ட நேரம் வேலை இருக்கவேண்டும். ஆயுள் தண்டனைக் கைதிகள் கூட 14 வருடத்தில் விடுதலை ஆகிப் போக சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் சிறை அதிகாரிகள், சிறை வார்டர்கள் ஆகியவர்கள் [illegible] 24 மணி நேரமும் அங்கேயே உழலவேண்டிய நிலைமை இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கு எட்டு மணி நேர வேலை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வரவேண்டும்.





அதைப்போலவே பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் நீண்டநாட்களாக வற்புறுத்தி வருகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலனை செய்யவேண்டும்.

சிறைத் துறை துணைத் தலைவர் பதவி நீண்ட நாட்களாக காலியாக இருக்கின்றது. உடனடியாக அந்தப் பதவியை பூர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசியல் தலையீடுகள் எது இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்துவிட்டு, யாருக்கு நியாயமாக அந்தப் பதவி சேரவேண்டுமோ, அவர்களுக்கு அந்தப் பதவி உயர்வை அளிக்கவேண்டும். அதை கவனித்து அமைச்சர் அவர்கள் தைரியமாக, துணிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி, வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. கே. குப்புசாமி :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நமது அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி எளியோருக்கும், வலியோருக்கும் சமநீதி வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில், 1981-82 ஆம் ஆண்டுக்கான நீதி நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கையை இந்த அரசு இங்கே கொண்டு வந்திருப்பதை நான் முதற்கண் வரவேற்பதிலே பெருமை அடைகிறேன். அதோடு இந்திய துணைக் கண்டத்திலேயே இருக்கிற இதர மாநிலங்களை விட தமிழகத்திலே வழக்கு மன்றங்கள் அது சாதாரண இரண்டாம் நிலை குற்றவியல் நீதி மன்றமாக இருந்தாலும் சரி, அல்லது உயர் நீதி மன்றமாக இருந்தாலும் சரி, அரசியல் தலையீடு இல்லாமல், ஆட்சியாளர்கள் தலையீடு இல்லாமல், சுதந்திரமாக, தன்னிச்சையாக செயல்படுகின்ற நிலை தமிழகத்தில்தான் இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் அண்மையில்கூட, பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன் அண்டை மாநிலங்களிலே அரசியல் குறுக்கீடுகள், அமைச்சர்களின் குறுக்கீடுகள் இருந்தது என்றும், அதிலே நியமனங்கள்கூட இருந்தது என்றும் பார்த்தேன். பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூட இரண்டு நாட்களுக்கு முன்னாலே பேசியிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சியிலே இல்லாதபோது ஏற்பட்ட நியமனங்கள் அரசியல் சார்புடையதாக ஏற்படுத்தப்பட்டன என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் இல்லாத அளவுக்கு, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருக்கின்ற வகையில், தகுதியின் அடிப்படையில் திறமையின் அடிப்படையில் இங்கே நியமனங்கள் செய்யப்பட்டு நீதி நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை நான் மட்டுமல்ல தமிழகத்திலே இருக்கிற நீதித் துறையைச் சேர்ந்த அறிவார்ந்த கற்றோர்கள் பாராட்டுகிறார்கள் என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அதோடு, இதுவரையில் வழக்கறிஞர்கள் சமுதாயத்திற்கு இருந்த சில சலுகைகள் இடையிலே பறிக்கப்பட்டு, அது மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருப்பதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பப்ளிக் பிராசிக்யூட்டராகவும், அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டராகவும், வழக்கறிஞர்கள் நேரடியாக நியமனம் செய்யப்படும் முறை செயல்பட்டு வந்ததை, இடையிலே நிறுத்தி ஆளுநர் ஆட்சிக் காலத்திலே அந்த நியமனங்கள் எல்லாம் அந்தத் துறையிலே வேலை பார்க்கக்கூடிய அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர்கள்; அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் ஆகியோர்களை ரெகுலர் பப்ளிக் பிராசிக்யூட்டர்களாக நியமனம் செய்கின்ற முறையில், அரசு அதற்கான சட்டத்தைத் திருத்தி, புதிய சட்ட விதிகளைப் புகுத்தி, இப்போது பயிற்சி பெற்ற, தேர்ச்சி பெற்ற, அனுபவம் மிக்க வழக்கறிஞர்கள், பப்ளிக் பிராசிக்யூட்டர்களாகவும், அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர்களாகவும் வரக்கூடிய வாய்ப்புக் கொடுத்தமைக்கு தமிழ்நாடு அரசுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வழக்கறிஞர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

சாதாரணமாக கிராமப்பகுதியில் இருக்கும் மக்கள் 5,000 ரூபாய்க்கு மேல் ப்ராமிசரி நோட் எழுதிக் கொடுத்து, அதன் பேரில் தாவா ஏற்பட்டுவிட்டது. அல்லது வேறு முறையில் அந்த அளவிற்கு தாவா ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால், அவர்கள் 30-40 மைல் தூரம் சென்று, சப்-கோர்ட் இருக்கும் இடத்திற்குச் சென்று அந்த வழக்கை நடத்தவேண்டும் என்று இருந்த நிலைமையை மாற்றி, கிராமப்புற மக்கள் பயன் அடையக்கூடிய முறையில்; அந்த 5,000 ரூபாய் என்கிற வரம்பை 15,000 ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்தி, அதேபோன்று சப்-கோர்ட் ஜூரிஸ்டிக்ஷன், டிஸ்ட்ரிக்ட் கோர்ட் ஜூரிஸ்டிக்ஷன் ஆகியவற்றையும் அதற்கேற்றாற்போல் உயர்த்தி, கிராமப்புற மக்களுக்கு நன்மை செய்ததன் மூலம் லட்சக்கணக்கான கிராம மக்கள்—லிடிகெண்ட் பப்ளிக்—கோர்ட்டுக்குச் செல்கிற மக்கள் இந்த அரசைப் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

ஒரிஜினல் சைடில் இப்படி 5,000 ரூபாய் என்பதை 15,000 ரூபாய் என்று ஆக்கினாலும், ஸ்மால் காஸ் கோர்ட் ஜூரிஸ்டிக்ஷன் இன்னும் 500 ரூபாய் என்கிற அளவிலேயே இருக்கிறது. 5,000 ரூபாய் என்பது 15,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டு இருக்கிறபோது, 500 ரூபாய் என்பதை 2,000 ரூபாய் என்று உயர்த்துவது தான் பொருத்தமுடையதாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். காரணம், 500 ரூபாய்க்குள்ளே இருக்கின்ற ப்ராமிசரி நோட் மீது ஒரு தீர்ப்பு அட்வர்சாகச் சொல்லிவிட்டால், அடுத்த அப்பீல் கோர்ட் சப்கோர்ட் அல்ல, டிஸ்டிரிக்ட் கோர்ட் அல்ல, ஹைகோர்ட்டுதான். எனவே





இப்படிப்பட்ட கேஸ்களில் ஏழைகள் அதிகமாக இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் உயர்நீதிமன்றத்திற்கு வருவதைத் தடுக்கும்பொருட்டு, இந்த ஸ்மால் காஸ் கோர்ட் ஜூரிஸ்டிக்ஷனை உயர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அண்மையில் ஆக்ட் 33/1980—"Tamil Nadu Reference to Magistrates in laws (special provisions) Act 1980" என்ற ஒரு சட்டத்தை இங்கே நிறைவேற்றி, அது ஜனாதிபதியின் ஒப்புதலும் பெற்று இருக்கிறது. கடந்த செப்டம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. காரணம், அதிலே நியமனங்கள் செய்யவேண்டியிருக்கிறது. இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர்கள், முதல் நிலை குற்றவியல் நடுவர்கள்—அதாவது சிவில் நீதிபதிகள்—டிஸ்டிரிக்ட் முன்சீப்—மாவட்ட நீதிபதிக்கு இணையாக ஆக்கப்படவேண்டும் என்பது தான் இந்தச் சட்டத்தின் நோக்கம். சிவில் சைடில் இருப்பவர்கள் கிரிமினல் சைட் தெரிந்து கொள்வதற்கும், கிரிமினல் சைடில் இருப்பவர்கள் சிவில் சைட் தெரிந்து கொள்வதற்கும், வாய்ப்பு ஏற்படுகின்ற முறையில், பின்னால், அவர்கள் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் ஆகும்போது முறையான சீரான நீதி வழங்கவேண்டும் என்கிற அடிப்படையிலே தான் இந்தச் சீர்திருத்தம் இந்த அரசால் கொண்டு வரப்பட்டது. ஆனால் நியமனம் ஆக்குவதில் காலதாமதம் ஏற்படுவதால் அது நடைமுறைக்கு வரவில்லை. இதிலே உள்ள சிக்கல் குறித்து எனக்கு முன்னாலே பேசிய வேடசந்தூர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்து வைத்தார்கள். அதைத் தொடர்ந்து நானும் சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இப்போது 55 சதவிகிதம் வழக்கறிஞர்களில் இருந்தும் 45 சதவிகிதம் டிப்பார்ட்மெண்டில் இருந்தும், தேர்ந்தெடுக்கும் முறை அமலில் இருக்கிறது. ஆனால் 1966 ஆம் ஆண்டில் இருந்து வந்த குற்றவியல் நீதிபதிகள்—சப்-மாஜிஸ்டிரேட்ஸ்—வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1974 ஆம் ஆண்டில் இருந்து எந்த வழக்கறிஞரும் முன்சீப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், இந்தப் பதவிகளுக்கு எல்லாம் மாநில அரசுத் துறையில் இருப்பவர்கள்—தபால் மூலம் கல்வி பயின்றவர்கள்; அனிமல் ஹஸ்பண்டரி துறையில் இருந்து வந்தவர்கள், ஸ்டாடிஸ்டிக்ஸ் துறையில் இருந்து வந்தவர்கள், பிஷரீஸ் துறையில் இருந்து வந்தவர்கள், சட்டம் தெரியாதவர்கள், சட்டப் பயிற்சி இல்லாதவர்கள், வழக்கறிஞர்களாக பயிற்சி பெறாதவர்கள், இப்படிப்பட்டவர்கள் எல்லாம் 1966 ஆம் ஆண்டில் இருந்து 141 பேர் நடுவர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களை எல்லாம், இந்த இண்டக்ரேஷன் நடைமுறைக்கு வருகிறபோது நிச்சயமாக அவர்களுடைய தாய்த் துறைக்கு அனுப்பிவிட்டு, அவர்களுக்கு அதனால் எந்தவித பாதிப்பும் வந்துவிடாது, அவர்களுக்கு பதிலாக வழக்கறிஞர்களை அந்த இடத்தில் நிய

மனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தபால் மூலம் கல்வி பயின்று வந்தவர்களால் ஸ்டாண்டர்ட் ஆப் ஜுடிசியரி மிகவும் தரம் குறைந்து போய் இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாஜிஸ்டிரேட் ஒரு தீர்ப்பு எழுதுகிறார்—அதாவது கிணற்றில் தண்ணீர் இல்லை என்பதற்கு பதிலாக தண்ணீரில் கிணறு இல்லை என்று எழுதுகிறார்—ஆங்கிலத்தில் There is no water in the well என்பதற்குப் பதிலாக There is no well in the water என்று எழுதியிருக்கிறார். அனிமல் ஹஸ்பண்டரியில் இருந்து போன ஆசாமி. அதேபோன்று 'இந்தச் சுவர் சிமெண்ட்டால் பூசப்பட்டது' என்பதற்கு ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்கள்.

"The wall had been plastered with cement" என்பதற்குப் பதிலாக "The wall has been blastered with cement.". என்று எழுதியிருக்கிறார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த வழக்கறிஞர்கள் பயிற்சி இல்லாதவர்கள், ஆங்கில அறிவு இல்லாதவர்கள் பிற துறைகளில் இருந்து வந்தவர்கள், தபால் மூலம் எப்படியோ படித்து தேறிவிட்டு வந்தவர்கள் எல்லாம் இப்படி முன்சீப்பாகவும், மேஜிஸ்டிரேட்டாகவும் நியமனம் செய்யப்பட்டு இருப்பதால், ஒரு காலத்தில் நீதித்துறை மிகச் சிறந்தது தமிழகத்தில் என்பது உலகத்திற்குத் தெரியும்—அது மாறிவிடும்போல் இருக்கிறது—ஆகவே, ஸ்டாண்டர்ட் ஆப் ஜுடிசியரி காக்கப்பட வேண்டும் என்று சொன்னால், இந்த நியமனங்களை தவிர்த்தால் நல்லது. என்கிற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்கிறேன். இப்படிப் பட்டவர்களை இப்போது கூட தேர்வு செய்து இருக்கிறார்கள். அந்த நியமனங்களை நிறுத்திவிட்டு, வழக்கறிஞர்களை அந்த இடத்தில் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது மாஜிஸ்டிரேட்டுகளாக உள்ளவர்கள் முன்சீப்பாக வருவதற்குத் தகுதியிருந்தால், அவர்களை அந்தப் பதவியில் நியமனம் செய்யவேண்டும் என்கிற நிலைமை இருந்தால், அவர்களை நேரடியாக—ப்ரமோஷன் என்று இல்லாமல்—பயிற்சி அளித்து சர்வீஸ் கமிஷன் மூலம் முன்சீப்பாகப் பணியாற்ற வாய்ப்பு அளிக்க அரசு முன்வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதோடு, இந்த ஆக்டிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (கிளாஸ் 3)

*Clause* 3 (b).: Reference to a Judicial Magistrate of the Second class, shall, by reason of this Act, be construed as a reference to a District Munsiff-*cum*-Judicial Magistrate exercising the powers of a Judicial Magistrate of the Second Class.





ஒரு செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் இந்தச் சட்டப்படி முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்-கம்-முன்சீப் என்று மாறினாலும் இரண்டாம் வகுப்பு குற்றங்களையே விசாரித்துக் கொண்டிருப்பார் என்று இருக்கிறது. இந்த சட்டத்தின்படி அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற முதல் வகுப்பு நடுவர்கள் தான் முதல் வகுப்பு குற்றங்களை விசாரிக்க வேண்டும். இது ஹைகோர்ட் டிஸ்கிரிஷனாக இருந்தாலும், அவர்கள் விருப்பப்படிச் செய்யலாம் என்று இருந்தாலும், மாஜிஸ்ட்ரேட்-கம்-முன்சீப் என்று நியமிக்கப்பட்ட பின்பு, அவர் முதல் வகுப்பு குற்றங்களையும் இரண்டாம் வகுப்பு குற்றங்களையும் விசாரிக்கலாம் என்ற வகையிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த டவாலி முறை இருக்கிறது. அது பிரிட்டிஷ் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முறை. தற்போதைய நடைமுறைக்கு அது ஒத்துக் கொள்ளப்படாத ஒரு முறை. சமுதாயத்தின் நம்பிக்கைக்கு விரோதமான முறை அது என்பதால் இந்த அரசு அடியோடு அதை ஒழித்துவிட்டது. அதனால் இப்போது அவர்கள் டவாலி அணிவதில்லை, அரசின் ஆணைப்படி. ஆனால் உயர்நீதிமன்றத்திலிருந்து மீண்டும் அவர்கள் டவாலி அணியவேண்டுமென்று ஒரு சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள். எனவே அரசின் கீழே பணியாற்றுகின்ற ஊழியர்கள் அரசு ஆணையைக் கேட்பதா, ஹைகோர்ட் சர்க்குலரை கேட்பதா என்ற சங்கடத்தில் இருக்கிறார்கள். எனவே, இந்த டவாலி அணியும் முறையை அடியோடு ஒழித்து. அவர்களுக்கும் சமூகத்தில் 'ஈக்குவல் ஸ்டேடஸ்' இருக்கக்கூடிய வாய்ப்பை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, திறந்த வெளிச் சிறைச்சாலை மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் நல்லமுறையில் வெற்றிகரமாக நடைபெறுகிறது. தஞ்சாவூரில் திறந்தவெளிச் சிறை வெற்றிகரமாக இருக்கிறது என்பதை அங்கிருந்து வெளியே வந்த கைதிகள் மனதாரப் பாராட்டுகிறார்கள். இந்த மாதிரியான பல சிறைச்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். சிறை நிர்வாக விசாரணைக் கமிஷன்—டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் முருகேசன் கமிஷன்—கூட இந்த திறந்த வெளிச் சிறைச்சாலையைப் பாராட்டி, எண்டோர்ஸ் செய்திருக்கிறது. ஆகவே, ஆண்களுக்கு தனியாக திறந்த வெளிச் சிறைகளையும், பெண்களுக்கு தனியாக திறந்த வெளிச் சிறைகளையும் வட்ட அளவில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அப்படிப்பட்ட திறந்த வெளிச் சிறைச்சாலைகளைக் கண்காணிக்கவும், குறைகளைச் சொல்வதற்கும் சர்வ கட்சிக் குழுக்கள் ஏற்படுத்த வேண்டும். அவர்கள் சிறைகளைப் பார்வையிடுவதற்கும், போலீஸ் லாக்கப்பில் இருக்கிற

வழக்குகளை விசாரிப்பதற்கும், தண்டனையளிப்பதற்குமான அதிகாரத்தைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அரசு அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையாக ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்றை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் சட்ட அமைச்சர் அவர்களும் இன்றைக்கு மத்திய அரசிலே இருக்கிற உள்துறை அமைச்சருக்கும், சட்ட அமைச்சருக்கும், பிரதம அமைச்சருக்கும் அனுப்பி வைத்து, பலமுறை அவர்களைச் சந்தித்து வற்புறுத்தியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் இன்னும் ஏற்படுத்த அவர்கள் முயற்சி எடுக்கவில்லை. இப்போது உத்தரப்பிரதேசமும் இதைப்போன்ற கோரிக்கையை வைத்திருக்கிறது. எனவே, மீண்டும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து தமிழகத்தின் தலைநகரான சென்னையில் சுப்ரீம் கோர்ட் பெஞ்சை ஏற்படுத்த வேண்டும். அதைப்போல எங்களுடைய நீண்டநாள் கோரிக்கையான, உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில், பழனியில் ஒரு கட்டடம் 100 ஆண்டு காலமாக இருக்கிறது. அதுவும் சொந்தக் கட்டடம் இல்லை; வாடகைக் கட்டடம். அது தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாயத்தில் இருக்கிறது. இப்போதே கொஞ்சம், கொஞ்சமாக இடிந்து விழுந்துகொண்டிருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்ட ஏழு இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். தேவஸ்தானம் அந்தக் கட்டடத்தை காலி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டிலே விரைவிலே புதிய இடத்தில் கட்டடத்தைக் கட்டுவதற்கு பணத்தை ஒதுக்கி, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செங்கற்பட்டிலே ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டு 200 ஆண்டுகள் ஆகின்றன. அதற்குரிய அந்தக் கட்டடம் கட்டப்பட்டு 102 ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் கட்டடம் தற்போது மிகவும் ஆபத்தான நிலையிலே இருப்பதாகத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அங்கே ஒரு கட்டடம் கட்டுவதாக அரசு ஏற்கெனவே முடிவு செய்திருந்தும் அந்தக் கட்டடம் இன்னும் கட்டப்படவில்லை. அந்தக் கட்டடத்தை கட்டிக்கொடுக்க விரைவிலே ஏற்பாடு செய்யவேண்டும்.





அடுத்து பொதுவாக நிதிநிலை அறிக்கையிலே [redacted] ஒதுக்கப்படுகின்ற பணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. மற்ற துறைகளுக்கு எல்லாம் ஏராளமான நிதியினை ஒதுக்கிவிட்டு இதற்கு மட்டும் குறைவான நிதியினை ஒதுக்குகிறார்கள். இதை மாற்றவேண்டும். அதிகமான நிதியை நீதித்துறைக்கு ஒதுக்கவேண்டும்.

டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் போன்றவர்களுக்கு வாகன வசதியினைச் செய்து தரவேண்டும். மேலும் அவர்களுக்கு இருப்பது போன்று டெலிபோன் வசதியினை எல்லா சப்-ஜட்ஜுகளுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து போர்ட்போலியோ முறையினை பரவலாக ஏற்படுத்தினால் காப்பி விரைவிலே கிடைக்கும். ஆகவே அதற்குரிய வகையிலே அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து மாவட்ட நீதிமன்றங்களிலேயும் தமிழிலேயே தீர்ப்பு சொல்லப்பட வேண்டும். தமிழிலேயே சாட்சியங்களைப் பதிவு செய்யவேண்டும். தமிழிலேயே வாதங்களும் நடைபெறவேண்டும். அப்படிப்பட்ட நடைமுறையினை விரைவிலே செயல்படுத்தவேண்டும்.

அடுத்து தற்போது பெண்கள் குற்றம் செய்வது பல பகுதிகளிலே அதிகரித்து வருகின்றது. டைவர்ஸ், மெய்ன்டனன்ஸ், பிகாமி, அடல்ட்ரி, சப்ரஷன் ஆஃப் இம்மாரல் ட்ராபிக் போன்ற குற்றங்களிலே பெண்கள் ஈடுபடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இவர்களைப் பற்றி விசாரிப்பதற்காக இன்காமிரா என்ற அளவிலே கோர்ட்டுக்குள்ளே வைத்து விசாரிக்கின்ற வகையிலே தனியாக கோர்ட்டுகளை ஏற்படுத்தவேண்டும். மற்ற ஆண்களை விசாரிக்கின்ற கோர்ட்டுகளிலேயே இவர்களையும் வைத்து விசாரிப்பதற்குப் பதிலாக இவர்களைத் தனியாக விசாரிப்பதற்குரிய வகையிலே பெண்களுக்கென தனியாக கோர்ட்டுகளை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று அமைகிறேன், நன்றி வணக்கம்.

* திரு. எம். சின்னராஜ் : மாண்புமிகு மாமன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, நீதி, நிர்வாகம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அதனதனுடைய அதிகார வரையறைக்கு உட்பட்டு நம்முடைய நாட்டின் சுதந்திரத்தையும், மக்களுடைய சுதந்திரத்தையும், மாநிலங்களின் சுதந்திரத்தையும், நீதிமன்றங்களின் சுதந்திரத்தையும் காப்பாற்றுகின்ற முறையிலே அரசியல் வல்லுநர்களால் அரசியல் அமைப்புச் சட்டம் அமைக்கப்பட்டது. அந்த அரசியல்

[திரு. எம். சின்னராஜ்] [1981 ஏப்ரல் 30

சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட உரிமைகளை அதாவது அரசியல் அமைப்பு விதிகளை மீறுகின்ற நேரங்களிலே எல்லாம் நீதிபதிகளும் அறிவார்ந்த வழக்கறிஞர் பெருமக்களும் அவர்களுக்குரிய முறையிலே கண்டனங்களைத் தெரிவித்து அப்படிப்பட்ட அடிப்படைச் சட்டங்களினுடைய நிலைகளை மீறுவதைத் தடுத்து வந்திருக்கிறார்கள் என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்று அரசியல் அமைப்பு முறைப்படி அமைக்கப் பட்டிருக்கின்ற சட்டமன்றங்களும் தனவுக்குச் சுதந்திரமாக இயங்குகிறது என்பதை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். சில நேரங்களிலே எல்லை மீறிய சுதந்திரங்களைக் கூட நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் நீதி மன்றங்களினுடைய சுதந்திரம் அடிக்கடி நமது அரசியல்வாதிகளால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றது என்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நீதிபதிகளினுடைய மாறுதலைப் பற்றி பேசும்போது ஒரு நீதிபதி அந்த மாநிலத்தினுடைய மொழியைத் தெரிந்தவராக இருக்கவேண்டும் என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு நிலை. ஆனால் நீதித்துறையிலே சில தார்மீக முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டியது சிறந்த நெறிமுறை யாகும். பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையிலும் நீதித் துறையிலே அடிமட்டத்திலே இருந்து அதாவது சிவில் நீதிமன்றமாக இருந்தாலும் குற்றவியல் நீதிமன்றமாக இருந்தாலும் அங்கெல்லாம் தமிழ்தான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். அப்படி எல்லா நீதிமன்றங்களிலும் தமிழிலே மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்ற முறையினை வரையறுத்துவிட்டால் அந்தத் தீர்ப்புகளை மறு பரிசீலனை செய்வதற்காக மேல்நிலையிலே உள்ள நீதி மன்றங்களுக்கு வருகின்றபோது அங்கே உள்ள நீதிபதிகளுக்கு அந்த மாநிலத்தின் மொழியோ அதாவது தமிழோ தெரியாமல் இருந்தால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை தயவுசெய்து அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

இன்று நீதித்துறையைப் பொறுத்த அளவிலே அங்கு அரசியல் சுதந்திரத்திற்கும், மக்களுடைய அடிப்படை சுதந்திரத்திற்குமாக ஏற்பட்ட உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் இருந்தாலும் கூட, மக்களுடைய அடிப்படை சொத்து உரிமைகளையும், பாதுகாப்பான வாழ்க்கைக்கு, உத்தரவாதத்தினை அளிப்பதற்காகவும் அமைந்திருக்கின்ற நீதிமன்றங்கள் தான், மாவட்ட அளவிலே அல்லது தாலுக்கா அளவிலே அல்லது அதற்கும் அடி மட்டத்திலே இருக்கிற சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் என்கிற நடுவர் நீதிமன்றங்கள் போன்றவைகளாகும். இன்று இந்த நீதிமன்றங்களில் நாம்



1981 ஏப்ரல் 30] [திரு. எம். சின்னராஜ்]

எதிர்பார்க்கிற, மக்கள் எதிர்பார்க்கிற நீதியினை உரிய நேரத்தில் நாம் பெற முடிகிறதா ? அல்லது மக்கள் பெற முடிகிறதா என்றால் நிச்சயமாக ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே சொல்லிக்கொள்கிறேன், உரிய நேரத்தில் பெற முடியவில்லை என்பது உண்மை. அதை நாம் அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய பல பேர்கள் இந்தக் குறையை எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும் கூட, இந்தக் குறையைப் போக்குவதற்கு நாம் ஒரு தீர்க்கமான முடிவினைக் கண்டாக வேண்டும்.

கிரிமினல் கோர்ட்டிலே சாதாரணமாக ஒருவரை சந்தேக வழக்கில் கைது செய்யப்பட்டாலும் கூட அவர்களை ரிமாண்ட் செய்து 15 அல்லது ஒரு மாதத்திற்குக் கூட சில குற்றவியல் நீதிமன்றங்களில் அவர்களை ரிமாண்டில் வைக்கிறார்கள், சிறையிலே வைக்கிறார்கள். காரணம் அவர்களுக் குரிய பெற்றோர்களோ அல்லது வேறு ஜாமீன் கொடுப்பவர்களோ வரவில்லை என்று சொல்லி, சாதாரணமாக வெளியே சென்ற சிறுவர்களை அல்லது அவர்கள் தங்களைப்பற்றி விவரங்கள் கூற முடியாதவர்களைக் கூட, ரிமாண்டிலே இப்படி வைப்பது மனிதனுடைய அடிப்படை உரிமையை, நடமாடும் சுதந்திரத்தைப் பறிப்பதாக அமைந்திருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறி, அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நடைமுறையில் இருக்கிற ஒரு குற்றவாளியைச் சாட்டப் பெற்ற குற்றம் பெயிலபிளாக இருந்தால், வழக்கு மன்றத்திற்கு வந்தவுடன் சொந்த ஜாமீனில் வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். முகவரி கொடுத்து வெளியேறக் கூடிய அளவில் சுதந்திரம் வழங்க முடியுமா என்று கேட்கலாம். அப்படி அந்தக் குற்றவாளிகளை எந்த ஒரு கட்டுப்பாட்டுக்கும் கொண்டு வாராமல் எந்த ஒரு செக்யூரிட்டியும் இல்லாமல் விட்டு விட முடியுமா என்று கேட்கக் கூடும். என்னைக் கேட்டால் அப்படி அவர்களை விட்டு விடுவதிலே தவறு இல்லை என்று சொல்வேன்.

ஏனென்றால் அவர்கள் செக்யூரிட்டி (Security) கொடுத்துவிட்டு வெளியே சென்று தப்பித்து விட்டால், நம்முடைய காவல் துறையும், கோர்ட்டுக்கும் தான் நடவடிக்கை எடுத்து வழக்கு தொடருகிறார்கள் ஆகவே, செக்யூரிட்டி இல்லாமல், கையெழுத்து வாங்கிக் கொண்டு, அவர்களிடம் பைண்ட்-ஓவர் வாங்கிக் கொண்டு வெளியே அனுப்பி விடுவதினால், பெரிய அளவில் குற்றவாளிகள் தப்பித்து விடுவதற்கான வாய்ப்பு கிடையாது ஆனால் அதற்கு மாறாக, நிரபராதிகளை, குற்றம் செய்யாதவர்களை, அதாவது குற்றம் செய்யப்பட்டதாக நிரூபிக்கப்படாதவர்களை, என்ன குற்றம் என்று அவர்களுக்கே தெரியாத நிலையில் உள்ளவர்களை, இருக்கிற சட்டங்களின் பிரிவுகளை வைத்து நீண்ட நாட்கள் ரிமாண்டில் வைக்கிற முறை இன்று குற்றவியல்

நீதிமன்றங்களில் இருக்கிறதே, அந்த முறை மாற்றப்பட வேண்டும். ஏனென்றால் அப்படிப் பல சிறுவர்கள் காலம் தோறும் விவரம் புரியாமல் கைதிகளாக வந்து போகிற பரிதாபமான காட்சி இன்று நம்முடைய சிறைக் கூடங்களில் இருக்கிறது என்பதை உணர்ந்து, நம் அரசு அதற்காகத் திருத்தங்களைக் கொண்டுவந்து, இப்படிப்பட்ட வழக்குகளுக்கெல்லாம், எந்தக் காரணத்தைக் கொண்டும், ஜாமீன் வந்தாலும், ஜாமீன் வராவிட்டாலும், அவர்களை நீண்ட நாட்கள் ரிமாண்டிலே வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டத்தை வகுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களில் அவர்கள் செய்த குற்றங்களுக்கு உரிய தண்டனையை, எந்த குற்றங்களுக்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்களோ, அந்தக் குற்றங்களுக்குரிய தண்டனை காலத்திற்கு மேல் கூட அவர்கள் கைதிகளாக, அண்டர் பிரிசனர்களாக ரிமாண்டில் இருக்க நேரிட்டுவிடுகிறது. ஆகவே அந்த முறையை தவிர்த்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாநில அரசுக்கு உட்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, ஒரு முறையை வகுத்து அவர்களுக்கு ஒரு அடிப்படை சுதந்திரத்தை நாம் வழங்கியாக வேண்டும் என்று இந்த அரசை வற்புறுத்தி, வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த குற்றவியல் நீதிமன்றங்களில் நடுவர்கள் நியமிப்பது பற்றி வழக்கறிஞர் நண்பர்கள் பலபேர் வலியுறுத்தி கூறிவிட்டார்கள். நான் ஒன்றை மட்டும் அதில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த குற்றவியல் நீதிமன்றங்களையும், சிவில் நீதிமன்றங்களையும் வரைமுறை படுத்துவதற்காக சி.பி.சி ; சி.ஆர்.பி.சி போன்ற சட்டப்பிரிவுகளில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்களுக்கு மட்டும் தான் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. நாங்களெல்லாம் சட்டப்படிப்பைப் படித்தாலும் கூட, அந்தப் பயிற்சியை பெற்றிருந்தாலும் கூட, உடனடியாக நீதிமன்றங்களுக்குச் சென்று, சேர்ந்து வழக்கறிஞராக வழக்கை நடத்த முடியாது. சட்டப் படிப்பைப் படித்ததற்குப் பின்னால் மூன்று ஆண்டுகள் அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு சீனியரின் கீழ் பயிற்சிப் பெற்ற பின்னால்தான் வழக்குகளின் நுணுக்கங்களைத் தெரிந்து, அதில் வாதாட முடிகிறது.

அப்படி இருக்கும்போது சட்டக் கல்லூரிக்கும் செல்லாமல், வழக்கு மன்றங்களுக்கும் செல்லாமல், எந்தப் பயிற்சியும் இல்லாமல் இருப்பவர்களை மாஜிஸ்ட்டிரேட்டுகளாக, தீர்ப்பு வழங்குகிற நீதிபதிகளாக அமர்த்தப்பட்டால், அதனுடைய விளைவு எப்படி இருக்கும் என்பதை இந்த மாநிலத்தில் உள்ள நீதிபதிகளும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும், நீதித்துறையில் அக்கறை கொண்டிருக்கிற பல பெரியவர்களும் பலமுறை எடுத்துக் காட்டிச் சொல்லி வருகிறார்கள். இன்று அதுபோன்ற நியமனங்களை அரசு துறையில்



பணிபுரிகிற, வழக்குமன்றம் அனுபவம் இல்லாத அவர்களை மாஜிஸ்ட்டிரேட்டுகளாக நியமிக்கக் கூடாது என்ற கருத்தை அரசியலில் இருப்பவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சட்டப் பயிற்சி பெற்று வழக்கறிஞராகவும் தொழில் நடத்திக்கொண்டிருந்து, அமைச்சர் அவர்களுக்கும் அந்தக் கருத்து உடன்பாடாகத்தான் இருக்க முடியும். இருந்தாலும் கூட. நீதிமன்றமும் அதை வலியுறுத்துகிறது. இருந்தாலும் வழக்கறிஞர்களாக பயிற்சி பெற்றவர்கள் மட்டும் தான், நீதிபதிகளாக, நடுவர்களாக நியமிக்கவேண்டும் என்ற அந்தக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக ஒரு சக்தி இருக்கிறது என்பதை நான் வெளிப்படையாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம். மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமனத்திற்குரிய விதிகளும் அதற்குரிய வரைமுறைகளும் பத்து பதினான்கு ஆண்டுகளாக வகுக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி இப்படி நியமிப்பது என்றால், 14 ஆண்டுகளாக ஒரு அரசாங்கம் அந்த விதிகளை மாற்றவில்லை என்பதைக் காரணம் காட்டி டெம்பரரி மாஜிஸ்ட்ரேட்ஸ் ப்ராம் டிப்பார்ட்மென்ட்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இது ஒரு சாராருக்குச் சலுகை காட்ட அந்தத் துறை இப்படி செய்து கொண்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். இதை அனுமதிக்கக்கூடாது. அரசின் கொள்கைக்கும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் கொள்கைக்கும் விரோதமான ஒரு செயல் நடப்பது என்பது அனுமதிக்கப்படக்கூடாது.

அடுத்து நீதிமன்றங்கள் பற்றிக் குறிப்பிடும்போது, ஈரோடில் ஒரு நீதிபதி தீர்ப்பு எழுதமுடியாத ஒரு நிலையில் அவர்கள் லீவில் சென்று விட்டார்கள் என்று சொன்னார்கள். இது ஒரு அன்றாடப் பிரச்னை. ஆகவே வழக்கறிஞன் என்ற முறையில் மட்டுமல்லாது நீதிமன்றத்தின்பால் அக்கறை உள்ளவன் என்ற முறையில் சொல்கிறேன். இப்படிப்பட்ட நியமனங்களை வழக்கறிஞர்கள் மத்தியில் இருந்து மட்டும்தான் செய்யவேண்டும்.

கோவை மாவட்டத்தில் நீதிமன்றங்கள் பல்வேறு இடங்களில் அமைந்துள்ளன. சப்-கோர்ட் ஒரு இடத்தில் இருக்கிறது, தொழில் கோர்ட் ஒரு இடத்தில் இருக்கிறது, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் ஒரு இடத்தில் இருக்கின்றன, இதன் காரணமாக ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல வழக்கறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. ஆகவே, கோவை மாவட்ட நீதிமன்றத்திற்குள் எல்லா கோர்ட்களையும் அமைக்கவேண்டும். அப்படி எல்லா நீதிமன்றங்களையும் ஒரே காம்பவுண்டிற்குள் கொண்டுவரவேண்டும். அல்லது அமைக்கவேண்டும் என்ற வழக்கறிஞர்களின் கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆகவே, இந்தக் கோரிக்கையை ஏற்று எல்லா நீதிமன்றங்களையும்

[திரு. எம். சின்னராஜ்] [1981 ஏப்ரல் 30

ஒரே காம்பவுண்டிற்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரியார் மாவட்ட நீதிமன்றங்களின் அமைப்பும் இதே பிரச்சனைக்கு உட்பட்டுள்ளது. பல வழக்கு மன்றங்களும் ஈரோட்டு நகரத்தின் பல பகுதிகளில் இருப்பதை ஒரே இடத்தில் அமைத்துத் தர வேண்டும்.

கோவையில் வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு சங்கம் இருக்கிறது. எந்த நாட்டிலும் இல்லாத முறையில், நவீனமுறையில் இன்று அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு சில சலுகைகள் அளிக்கவேண்டும். வழக்கறிஞர்களுக்கு வேண்டிய அனைத்துப் பொருள்களும் அங்கே கிடைப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் மாண்புமிகு செங்குட்டுவேலன் அவர்கள் முயற்சியால்தான் அந்த கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கங்கள் மற்ற மாவட்டங்களிலும் அமைக்கப்படும் அளவில் ஏற்பாடு செய்யவேண்டும். இன்னொரு விஷயம். கோவையில் உள்ள அந்த வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம், தாங்களே அங்கு ஒரு சேம்பர் கட்டிக்கொள்வதாகவும் அதற்கு வேண்டிய இடத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்றும் அரசைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இசைவினை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர்நீதிமன்றத்தின் ஒரு பெஞ்சை மதுரையில் ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி மதுரையில் ஒரு பெஞ்ச் ஏற்படுத்தும்போது கோவையை தயவுசெய்து மறந்துவிடக் கூடாது. கோவையில் இருந்துதான் வழக்குகள் உயர்நீதிமன்றத்திற்கு அதிகமாக வருகின்றன. ஆகவே நீலகிரியோடு சேர்த்து, சேலம், பெரியார் மாவட்டங்களைச் சேர்த்து கோவையில் உயர்நீதிமன்றத்தின் ஒரு பெஞ்ச் ஏற்படுத்த நம் அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உடுமலைப்பேட்டையில் நீதிபதிகளுக்கு வீட்டுவசதி செய்து தரப்பட வேண்டும். நீலகிரியில் ஒரு மாவட்ட நீதிமன்றம் இல்லை. அது மலைப் பகுதியாக இருப்பதால் அங்குள்ள மக்கள் பல சிரமங்களுக்கு ஆளாகிறார்கள். அவர்கள் கோவைக்கு வந்து செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே நீலகிரியில் ஒரு மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. முகமது இஸ்மாயில்:** தலைவர் அவர்களே, இந்த நீதி நிர்வாக மானியக் கோரிக்கை மீது பங்குபெற்று ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் நீதித்துறை மிகவும் உன்னதமான இடத்தினைப் பெற்றிருந்தது. அதிலும் சிறப்பாக உயர்நீதிமன்றம் ஏனைய உயர்நீதிமன்றங்களைப் பார்க்கிறபோது மிக உன்னதமான அந்தஸ்தை பெற்றிருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனாலும் அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டின் நீதி நிர்வாகம் மிகவும் மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய குற்றச்சாட்டு நாடு தழுவிய முறையில் இன்று இருந்தாலும் தமிழ் நாட்டில் நீதி நிர்வாகத்தில் மிகவும் மந்தமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்று குற்றச்சாட்டும் அதற்கான சில காரணங்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக எல்லா நீதிமன்றங்களிலும் தகுந்த சந்தர்ப்பத்தில் நீதிபதிகள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறது. அதற்கு ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தில் இரணியல் என்ற இடத்தில் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்று செயல்பட்டு வருகிறது. பல மாதமாக நீதிபதி இல்லாத காரணத்தால், வழக்குகள் நீண்டகாலம் தேக்க நிலை அடைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அங்கே வழக்காடிக் கொண்டிருக்கின்ற வழக்கறிஞர்கள், அருமைச் சகோதரர்கள் எழுத்து மூலமாக இதுபற்றி, இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அங்கே பல மாதங்களாக நீதிபதி இல்லை. எனவே, வழக்குகள் தேக்கம் கொண்டிருக்கின்றன. வழக்கு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பல காலமாக நீதிமன்றப் படிக்கட்டுகளுக்கு வந்துவிட்டு, திரும்பிச் செல்லுகின்ற நிலைமை உள்ளது. எனவே, அங்கே நீதிபதியை நியமனம் செய்வதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மும்பகல் 10-20)

அது மட்டுமல்ல. நம்முடைய உயர்நீதி மன்றத்தில் 25 நீதிபதிகளுக்கான இடம் இருந்தாலும்கூட, 21 நிரந்தர நீதிபதிகள், 4 இடைக்கால நீதிபதிகள் என்கின்ற அளவிற்கு இருந்தும், அந்த இடங்கள் நிரப்பப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கு வேறு சில கோணங்களிலே இருந்து வருகின்ற முட்டுக்கட்டைகள் இருக்கலாம். அடிஷனல் நீதிபதிகள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், சில கண்டிஷன்களை மத்திய அரசு விதித்திருப்பதாக நாங்கள் செய்திகள் படித்து வருகிறோம். அடிஷனல் நீதிபதிகள் நிரந்தர நீதிபதிகளாக ஆக்கப்படுவதற்கு முன்னால், அவர்கள் சில கண்டிஷன்களை, சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து தாக்கீது வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள்



1981 ஏப்ரல் 30] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

வேறு மாநிலங்களுக்கு மாற்றப்படலாம்; அப்படி மாற்றுவதற்கு அவர்கள் மூன்று மாநிலங்களை குறிப்பிட்டுக் கொடுக்கலாம். அந்த மூன்று மாநிலங்களுக்கு அவர்கள் எந்த நோக்கிலே வேண்டுமென்றாலும் மாற்றுகின்ற உரிமை மத்திய அரசுக்கு இருக்கிறது என்று, அதற்கு நீதிபதிகள் தங்கள் ஒப்புதலைத் தந்திருக்கிறார்கள். அப்படி ஒப்புதலைப் பெற்ற பிறகும்கூட, இந்த மூன்று மாநிலங்கள் தவிர, மற்ற மாநிலங்களுக்கும் மாற்றவேண்டுமென்ற ஒரு நிலையை மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் சொல்லக் கூடிய அந்த ஷரத்தை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகும்கூட, மத்திய அரசு எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும், அவர்கள் விருப்பம் தெரிவிக்காத மாநிலங்களுக்கும் அனுப்புகின்ற உரிமை மத்திய அரசுக்கு வேண்டுமென்ற அளவிலே சொல்வதாகத் தெரிகிறது. எனவே. இந்த நிலைமையைக் கொண்டு வருகின்றபோது, சுதந்திரமாக செயல்பட்டுவந்த நீதித் துறையில் அரசின் தலையீடு ஏற்பட்டுவிடுகிற பயங்கரமான ஒரு சூழ்நிலை வந்து விடுகிறது. இந்தச் சர்க்காரைப் பொறுத்த அளவில், நீதி நிர்வாகத்திலே தலையிடாத ஒரு நேர்மையான கொள்கையை வகுத்துக் கொண்டிருந்தாலும்கூட, வேறு முகாந்திரத்திலே இருந்து தலையீடு வருமானால், அதைத் தடுத்து நிறுத்துகின்ற ஆற்றலை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இன்றைக்கு நீதி நிர்வாகத் துறை அரசியல் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக செயல்பட்டுக் கொண்டுவருவதுபோய், வேறுவிதமாக மாறிவிடுமோ என்று அச்சப்படுகிறேன். எனவே, இதற்கான இடையூறுகள் எந்தப் பகுதியிலே இருந்து வந்தாலும், அது மத்திய அரசிலே இருந்து வந்தாலும், அதைத் தடுத்து நிறுத்துகின்ற ஆற்றலை இந்த அரசு பெற்றிருக்கிறது என்பதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் தம்முடைய கருத்தை, மத்திய அரசினுடைய நிபந்தனையை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று மிகத் தெளிவாக எதிர்ப்பு தெரிவித்த இந்த நிலையில், இந்த அரசு உறுதியோடு நிற்கவேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சென்ற ஆண்டு நீதி நிர்வாகத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற சில மாற்றங்கள் பற்றி இதற்கு முன்னால் பேசிய அருமைச் சகோதரர் குப்புசாமி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளாக அல்லது முன்சீப்புகளாக அந்தஸ்து உயர்த்தி, இரண்டு நீதித் துறைக்கும் ஒரேமாதிரியான அதிகாரத்தை வழங்குவது என்ற திட்டத்தை கொள்கை ரீதியாக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு சட்ட [illegible] தெரிவிக்கப் படுகிறோம். ஆனால், இன்றைய தினம் வரைக்கும் அந்தச் சட்டம் [illegible]





நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தச் சுணக்கத்திற்கு காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இன்னும் ஒன்று. நீதியைத் தேடி வருகின்றபோது, நீதியின் சுமை அதிகமாகியிருக்கிறது என்று கூறப்படுகிறது. நீதியைத் தேடி வருகின்றவர்களுக்கு அதிகமாக செலவு ஏற்படுகிறது, செலவைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கின்ற காரணத்தினாலே, நீதிமன்றத்திற்குச் செல்லுவதற்கு கூட தயக்கம் காட்டிக் கொண்டு, சிலர் நீதியைப் பெற முடியாது இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால் நீதி நிர்வாகத்தில் வழக்குத் கொடுக்கிறவர்கள் கோர்ட் பீஸ் வழங்குகிறபோது 100 ரூபாய்க்கு 7½ ரூபாய் என்று ஒரு இலக்கை வைத்திருக்கிறார்கள். முதல் 100 ரூபாய்க்கு 50 காசுகள் என்றும் அடுத்து வருகின்ற ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் 7½ ரூபாய் என்ற விகிதத்தில் வருகின்றபோது ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள, சொத்துக்கான வழக்கு தொடர்வதற்காக ஏறத்தாழ 7,500 ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலை இருக்கிறது. நீதித்துறை செய்ய வேண்டிய வேலையை ஒப்பிட்டுப்பார்க்கின்றபோது சிறியத் தொகைக்கான வழக்குகள் வருகின்றபோதும், அதிகமான மதிப்புள்ள தொகைக்கு வழக்குகள் வருகின்றபோதும் வேலைப் பளு, சமச்சீராகத்தான் இருக்கும், உதாரணமாக ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு சொத்து சம்பந்தமாக தகராறு வருகின்றபோது 75 ரூபாய் கொடுத்து நீதி பெறுகின்ற ஒருவர், ஒரு லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சம்பந்தமாக வழக்குகள் வருகிறபோது 7,500 ரூபாய் கோர்ட் பீஸ் வழங்கவேண்டிய நிலை இருக்கிறது. நீதித்துறைக்கு வேலைப் பளு சீரானது. ஒரே மாதிரியானது. ஏன் இப்படி அதிகமாக கோர்ட் பீஸ் வாங்கவேண்டுமென்பதை இந்த அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நீதிமன்றங்களில் காலதாமதம் ஏற்படுவதற்கு நீதித் துறையில் வேலை செய்வதற்கு போதிய ஊழியர்கள் இல்லையென்று குறிப்பாக சுட்டிக்காட்டுகிறார்கள். இன்னும் ஒரு முட்டுக்கட்டை ஏற்படுவதற்கு காரணம் போதுமான 'ஸ்டேஷனரி' எழுதுபொருள் கூட தரப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த குறைபாடுகள் எல்லாம் அரசு மிக எளிதில் தீர்க்கக்கூடிய குறைபாடுகள். அவற்றை தீர்க்க வேண்டுமென்று இந்த அரசையும், அமைச்சர் அவர்களையும் கேட்டு, சில கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்த இரண்டு மானியக் கோரிக்கைகளிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை, ஆலோசனைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றை அரசு ஆய்ந்து அந்த ஆய்வின் அடிப்படையில் எவை எவைகளை நடைமுறைப்படுத்த முடியுமோ அவற்றையெல்லாம் விரைவில் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யும் என்பதை முதற்கண் கூறி, நான் முதலில் நீதி நிர்வாகம் மானியக் கோரிக்கையின் மீது சிலவற்றை சொல்ல விழைகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்த வரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நெடுமாறன், திரு. இஸ்மாயில் ஆகியவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட ஷரத்துக்கள் அடிப்படையிலே மக்களுக்கு நல்ல நீதி கிட்ட வேண்டுமென்பதில், அதற்காக உறுதுணையாக இருப்பதில் இந்த அரசு அக்கறையோடு செயல்பட்டு வருகிறது என்பதை முதற்கண் சுட்டிக்காட்ட விழைகிறேன். நீதித்துறை, Executive and Administrative machinery of the Government, —லே யிருந்து தனித்து சுயநிலையோடு இயங்குகிற ஒரு துறை என்பதை மாமன்றம் அறியும். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது நீதி நிர்வாகத்தில் பல்வேறு progressive measures , முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோடிட்டு காட்டினார்கள். அவற்றையெல்லாம் உயர்நீதி மன்றத்தோடு அரசு அவ்வப்போது விவாதித்து நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறது. மேலும் இன்றுகூட மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்களை எல்லாம் உயர்நீதி மன்றத்தோடு கலந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் உமாநாத் அவர்களும், நெடுமாறன்

(முற்பகல் 11.30)

(துணைத் தலைவர் தலைமை)

அவர்களும், இஸ்மாயில் அவர்களும் நீதிபதிகளின் மாற்றம் குறித்து மைய அரசு மேற்கொண்டு இருக்கின்ற முடிவைப்பற்றி தங்களது [illegible] வருத்தத்தோடு தெரிவித்து இருக்கிறார்கள். மைய அரசினுடைய முடிவைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசு மேற்கொண்டிருக்கின்ற கொள்கை முடிவை ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெள்ளத் தெளிவாக மைய அரசுக்கு தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி நீதிபதி ஒரு மாநிலத்திலிருந்து ஒரு மாநிலத்தின் உயர்நீதிமன்றத்திலிருந்து இன்னொரு மாநிலத்தின் உயர்நீதி மன்றத்திற்கு அதுவும் பாரதத்திலே எங்கு வேண்டுமென்றாலும்





மாற்றப்படலாம் என்ற நிலை வருகிறபோது, குறிப்பாக நீதிபதிகளுடைய தகுதி, திறமைகூட குறைந்துவிடும் என்பதை மைய அரசுக்கு நாம் சுட்டிக் காட்டி இருக்கிறோம். திறமை மிக்கவர்களை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக கொண்டுவரக்கூடிய வாய்ப்பு, நீதிபதிகள் இந்தியாவின் எந்த இடத்திற்கும் மாற்றப்படுவார்கள், எந்த நேரத்திலும் மாற்றப்படுவார்கள், அதுவும் மைய அரசினுடைய விருப்பப்படி மாற்றப்படுவார்கள் என்ற நிலை ஏற்படுமானால் திறமை பெற்றவர்கள், நீதித் துறையிலே வல்லுநர்களாக இருக்கிறவர்கள் எல்லாம் நீதி பரிபாலனம் செய்ய மனுக்கூட போடமாட்டார்கள் என்ற நிலை வருமானால், பாரதத்திலே நீதிமன்றம் மூலமாக நீதி ஏழைகளுக்கு கிட்டாத ஒரு நிலைகூட ஏற்பட்டுவிடும் என்ற கருத்தினை வலியுறுத்தி மாநிலம் விட்டு மாநிலத்திற்கு உயர்நீதி மன்ற நீதிபதிகளை மாற்றுவது நல்லதல்ல என்று தெளிவாக மைய அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் தமிழகத்திலே உயர்நீதி மன்றத்திலே இருக்கிற நீதிபதி தமிழ் தெரிந்த நீதிபதிகளாக கட்டாயம் இருந்தாக வேண்டும். மைய அரசுகூட மாறுபட்ட கொள்கைகளை ஒருவேளை நடைமுறைப்படுத்துகிறதோ என்ற அச்சம்கூட இருக்கிறது. நீதிமன்றத்திலே அந்த அந்த மாநில மொழிகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று ஒரு புறத்திலே மாநில அரசுகளுக்கு உத்திரவிட்டுவிட்டு, இன்னொரு புறம் எந்த மாநிலத்திலேயிருந்தும் எந்த மாநிலத்திற்கும் நீதிபதிகளை மாற்றலாம் என்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிற போக்கு மாநிலங்களிலே மாநில மொழிகள் வருவதற்கு உண்மையிலேயே உளப்பூர்வமாக விரும்புகிறார்கள் என்பதுகூட கேள்விக் குறியாக எழுந்திருக்கிறது. நாம் தமிழகத்திலே உத்தரவிட்டிருக்கிறோம், ஹைகோர்ட்டிற்கு கீழே இருக்கிற சபார்டினேட் கிரிமினல் ஜுடிஷியரியைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே தமிழிலே நடைமுறைப்படுத்தப்படுகிறது. தீர்ப்புகளும் வாதங்களும் தமிழில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. இன்னும் படிப்படியாக விரைவிலே தமிழை நீதிமன்றங்களிலே கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. உயர்நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கு வருகிறபோது அந்த வழக்கு கீழே இருக்கிற கோர்ட்டிலே தமிழிலே வாதமிட்டு, தீர்ப்புகள் எழுதப்பட்ட வழக்குகள் உயர்நீதிமன்றத்திற்கு வருகின்றன. அப்படி உயர்நீதிமன்றத்திற்கு வருகிறபோது தமிழ் தெரியாத தமிழினுடைய அருமையைக்கூட புரிந்துகொள்ள முடியாது இருக்கிற வடபுலத்து இந்தி பேசுகின்ற நீதிபதி இங்கே வந்து அமருவாரானால் அது எந்த அளவுக்கு தமிழகத்திலே உள்ள ஏழைகளுக்கு நீதி கிட்டும் என்று மைய அரசு எண்ணிப் பார்க்கவில்லை என்ற எண்ணம் எழுகிறது. நாங்கள் மிகத் தெளிவாக மைய

அரசுக்கு எழுதியிருக்கிறோம். மாநில மொழி தெரியாத எவரும் மாநிலத்தில் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்கக்கூடாது என்பதை—சட்டப் பிரசனை என்பது வேறு, சட்டரீதியாக அப்படி நீதிபதிகளை மாற்ற முடியுமா என்பது வேறு, ஆனால் கொள்கை அடிப்படையிலே இந்த நடைமுறை சரியான நடைமுறையல்ல என்பதை—மைய அரசுக்கு நாங்கள் தெரிவித்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் பேசுகின்றபோது போக்குவரத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் 304, 334, 337 சம்பந்தப்பட்ட வழக்குகள் பற்றி ஹைகோர்ட் ஒரு சர்க்குலர் அனுப்பியதாக கூறினார்கள். தற்போது ரிஜிஸ்திராரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. அத்தகைய சர்குலர் அனுப்பவில்லை என்று. என்ன என்று அதுகுறித்து நான் விசாரிக்கிறேன். வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் பேசுகின்றபோது பல்வேறு ஆலோசனைகளை நீதிமன்றங்களில் முன்னேற்றங்களை மேற்கொள்வதற்காக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். அரசு அவைகளையெல்லாம் ஏற்கனவே ஆய்ந்து வருகிறது. அவற்றையெல்லாம் நடைமுறைப் படுத்த, இட்டத்தட்ட அவர் கூறிய ஆலோசனைகளில் பல ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தக்கூடிய அளவிற்குச் சாத்தியக் கூறுகள் உள்ள ஆலோசனைகளாக இருக்கிற காரணத்தினால் அவற்றை நடைமுறைப்படுத்த அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

கிராம நீதிமன்றங்களை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு மாற்றாகத்தான் 1977-லே தமிழகத்திலே அமைக்கப்பட்ட, Free Legal Aid Board -ஐப் பொறுத்தவரைக்கும் தற்போது மாவட்டத் தலைநகரங்களிலிருந்து பல வட்டங்களுக்குச் சென்றிருக்கின்ற அந்த Free Legal Aid Board -ஐப் பொறுத்தவரைக்கும் அது அனைத்து வட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அதைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற ஒரு எண்ணத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. அதிகப்படியான நிதி ஒதுக்கி அதன் மூலமாக இலவசமாகவே கிராமப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரைக்கும், கிராமத்து நீதிமன்றங்களைப் பொறுத்தவரைக்கும் இலவசமாகவே Free Legal Aid Board மூலமாகவே ஏழைகளுக்கு நீதி கிட்ட வேண்டுமென்ற அடிப்படையில் அதை அடுத்த ஆண்டிலிருந்து தீவிரப்படுத்த அரசு நடவடிக்கையெடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோபால் அவர்களும், திரு. பாலு அவர்களும், திரு. சின்னராசு அவர்களும், திரு. குப்புசாமி அவர்களும் integration of Judiciary திட்டம் ஏன் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதையும், அதை நடைமுறைப்படுத்துகின்றபொழுது



மக்களுக்குப் பலன் உள்ளதாக அது இருக்க வேண்டுமென்பதையும், அத்துடன் சேர்த்து தரமான நீதிபதிகள் அங்கு போடப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தினார்கள். அரசு இதைக் கொள்கை அளவில் ஏற்று நடைமுறைப் படுத்த இருக்கிறது. integration of judiciary பொறுத்தவரைக்கும் அரசினுடைய எண்ணமெல்லாம், தற்போது ஒரு தாலுக்காவிற்கு இருக்கின்ற, தாலுக்காவைச் சுற்றியிருக்கும் மக்கள் பன்னெடும் ஆண்டுக் காலமாக—உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் எனது மாவட்டமான சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும்கூட திருச்செங்கோட்டிலே அல்லது சங்ககிரியிலே இருக்கின்ற மக்கள் 30 மைல்களுக்கு அப்பாலுள்ள சேலத்திற்குச் சென்றுதான் நீதி பெற வேண்டுமென்ற ஒரு நிலை; இதுபோன்ற ஒரு நிலை ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஆண்டு பலவாக இருக்கிறது. இதனால் மக்களுக்குச் சொல்லொணாத் துயர் ஏற்படுகிறது; வழக்கறிஞர்களுக்கும் துயர் ஏற்படுகிறது; கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கின்ற அந்த வழக்குகளை நடத்துவது காவல் துறையினருக்குக்கூட பல இடர்பாடுகளை ஏற்படுத்துகின்றது. இவற்றையெல்லாம் போக்குவதற்காகத்தான் ஒவ்வொரு வட்ட அளவிலும், ஒவ்வொரு தாலுக்கா அளவிலும் அங்கேயே under one roof ஒரு கூரையின்கீழ் மக்களுக்குச் சிவில் வழக்குகளையும், கிரிமினல் வழக்குகளையும், கிரிமினல் வழக்குகளில்கூட First and Second Class offences அனைத்தையுமே ஒரே கூரையின்கீழ் ஒரு நீதிபதியிடமிருந்தே பெற வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள்கூட இதைச் சற்று அழுத்தமாகச் சொன்னார்கள். அரசு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதுதான் எண்ணம். மக்களுக்கு, வெள்ளைக்காரர்கள் ஆட்சியிலே இருந்ததைப்போல 100 மைல், 50 மைல், 70 மைல் சென்றுதான் நீதி பெற வேண்டுமென்ற நிலை, சுதந்திரம் அடைந்து 32, 33 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும்கூட இன்னும் இருக்குமேயானால் மக்களுக்கு அது எந்தவிதத்திலேயும் சரியாக அமையாது, ஜனநாயக ஆட்சியில் சரியாக அமையாது என்ற காரணத்தினால்தான் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் அந்த நீதி சென்றாக வேண்டுமென்ற அடிப்படையில், அதுவும் Criminal and Civil வழக்குகள் இரண்டையும் ஒரே நீதிபதியே நடத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் District Munsif-cum-Judicial Magistrates என்ற தலைப்பின்கீழ் அந்தத் தகுதிக்கு Sub-Magistrate ஆக இருக்கின்றவர்களெல்லாம், அவர்கள் First-Class Magistrate தகுதிக்கு உயர்த்தப்பட்டு அவர்கள் District Munsif-க்கு equal ஆக அவர்கள் அமர்த்தப்பட்டு அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 30

மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் ஏற்கனவே கொண்டு வரப்பட்ட சட்டத்தில் சில இடங்களில் Second-class Magistrates களுக்கு First-Class Magistrates -ஆக அவர்களுடைய தகுதி உயர்த்தப்பட்ட போதிலும்கூட அவர்கள் Second-class offences -ஐயே நடத்திக்கொண்டிருப்பார்களேயானால் இதனுடைய பலன் என்ன என்று சொன்னார்கள். அதை அரசு உணர்ந்திருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் அதைச் சொன்னதன் அடிப்படையில் உயர்நீதிமன்றத்திற்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம். விரைவிலே மீண்டும் நடவடிக்கை எடுத்து அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மாஜிஸ்ட்ரேட்டுகள் நடைமுறையிலே First and Second-class offences அதேநேரத்தில் Civil and Criminal put together அனைத்தையுமே நடத்தக்கூடிய அளவிற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கப்படும். ஆனால் இதுபோன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபொழுது அதிகப்படியான நீதிமன்றங்கள் இன்னும் துவங்கப்பட வேண்டிவரும். அதையும் கருத்திற்கொண்டுதான் அரசு இதை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் பேசுகின்ற பொழுது தொழிலாளர் தொடர்பான வழக்குகளை நடத்துகின்ற நீதிமன்றங்களில், தொழிற் சட்டங்களைப் பற்றி நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் அங்கே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது குறித்து உயர்நீதிமன்றத்தோடு அரசு கலந்து ஆவன செய்யும்.

மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசுகின்ற பொழுது நீதிமன்றங்களில் தமிழ் வர வேண்டுமென்றும், சென்னைக்கும் மதுரைக்கும் முறையே உச்ச நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் அதனுடைய பிரிவுகளை இங்கே அமைக்க வேண்டுமென்பது பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அது குறித்துகூட அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், ஜூனியர் வழக்குரைஞர்களுக்கு பாங்க் அசிஸ்டன்ஸ் தர வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சின்னராஜ் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு நல்ல உதாரணத்தைச் சுட்டிக்காட்டினார். கோவையிலே வழக்குரைஞர் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அந்த வழக்குரைஞர் கூட்டுறவுச் சங்கம் அவர்களுக்கு வேண்டிய சேம்பரைக் கூட அவர்களே கட்டக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று சொன்னார். அது உண்மையிலே நல்ல முறையிலே நடந்து வருகிறது. அதைப்போல் ஆங்காங்கு இருக்கிற வழக்குரைஞர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து



1981 ஏப்ரல் 30] [திரு. சி. பொன்னையன்]

கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பார்களானால், கண்டிப்பாக எப்படி கோவையிலே கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு, அவர்களுக்குப் புத்தகம் வாங்குவதற்கும் அவர்களுக்குத் தங்கும் அறைகள்கூடக் கட்டிக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தி இருக்கிறார்களோ அந்த நிலையை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலுமே விரிவுபடுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும்.

மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசுகின்றபொழுது தற்பொழுது integration of judiciary திட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது, 1965-லிருந்து இதுகாறும் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாகத் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவருமே நிர்வாகத் துறையிலேயிருந்து வந்துவிட்ட காரணத்தால் தேர்ச்சி பெற்ற வழக்குரைஞர்கள் ஒருவருமே வராத காரணத்தால், எந்த அளவுக்கு நீதிமன்றங்கள் தடுமாறுகின்றன என்பதைகூடச் சுட்டிக்காட்டினார்கள். அதுபோன்ற குற்றச்சாட்டுகள் அரசினுடைய கவனத்திற்கும் வந்திருக்கின்றன. அந்தத் தற்காலிக நீதிபதிகளாக இருக்கின்றவர்களிலே தரம் இல்லாதவர்கள், தகுதி இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கக்கூடாது என்பதற்காக ஏற்கனவே விதிமுறையிலேகூட அவர்கள் சர்வீஸ் கமிஷன் தேர்வு ஒன்றினைச் சந்திக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த விதிமுறையைக் கடைபிடிக்கும்போது தகுதியற்றவர்கள் நீக்கப்பட்டு, தகுதியுள்ளவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது குறிப்பிடுகின்ற குறைபாடுகள் மீண்டும் இராவண்ணம் ஒரு நல்ல நிலைமை ஏற்படக் கூடிய வாய்ப்பிருக்கிறது.

அதைப்போலவேதான் 1974-க்குப் பின்னால், டிஸ்டிரிக்ட் முனிசிப் செலக்ஷனிலும் இதே பிரச்னை இருக்கிறது என்று சொன்னார்கள். அதைக் களைவதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள் பேசுகின்றபொழுது, நீதி நிர்வாகத்தில் மந்த நிலை சற்று இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். நீதி நிர்வாகத்தில் மந்த நிலை என்பது ஒவ்வொரு மாநிலத்திலும் தற்பொழுது எத்தனை வழக்குகள் தேங்கி இருக்கின்றன என்பதனை ஒப்பிட்டுப் பார்த்த பொழுது, தமிழகம் மற்ற மாநிலங்களைவிடச் சிறந்த நிலையில் தானிருக்கிறது. ஆனால், அதைக் காட்டி இன்னும் தேக்க நிலையிலேயிருக்கிற வழக்குகளைத் துரிதப்படுத்தக் கூடாது என்று அரசு கருதவில்லை; இன்னும் அதிகமாக, சரியான முறையிலே, வழக்குகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்பதாலே, பல உத்தரவுகளை அவ்வப்போது உயர்நீதிமன்றமும் அரசும் இட்டிருக்கின்றன.

[திரு. சி. பொன்னையன்] [1981 எப்ரல் 30

சில நீதிமன்றங்களில் இன்னும் நீதிபதிகள் போடப்படாத நிலை என்றுகூடச் சொன்னார்கள். இதற்குக் காரணம், ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி சுட்டிக்காட்டியதைப் போல, நிர்வாகத் துறையிலேயிருந்து டெம்பரரியாக பலரை நீதிபதிகளாக—தபாலில் பி.எல். படித்தவர்களைக் கூடப் போடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிற காரணத்தால் அங்கு நல்ல நிலைமையிலே நீதி பரிபாலனம் இல்லையென்று உயர்நீதிமன்றம் அரசுக்குத் தகவல் கூறியது. அந்த அடிப்படையில் தாமதம் இருக்கிறது. சர்விஸ் கமிஷன் மூலமாக, அவர்களையெல்லாம் தேர்வுக்கு அனுப்பி, விரைவிலே அந்தத் தேர்வு முடிந்தவுடன் அந்தப் பிரச்னைகள் எல்லாம் தீரும் என்ற உறுதியினைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்னை. தமிழகத்திலேயிருக்கிற நீதிமன்றங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டோமேயானால் மிகப் பழைய காலத்திலே கட்டப்பட்ட நீதிமன்றங்களாகவும் கிட்டத்தட்ட 5 வழக்குரைஞர்கள், 6 வழக்குரைஞர்கள் போவதற்கு, தங்குவதற்குத் தேவையான இடத்தை மட்டுமே உடைய பல மாவட்ட நீதிமன்றங்களில் அதிகப்படியான நீதிபதிகளை; ஆங்காங்கு நாம் போட்டும்கூட நீதிமன்றங்களை நடத்துவதற்குக் கூட கோர்ட்டு அறைகள் இல்லாத நீதிமன்றங்களாகவும், நீதிபதிகளுக்குத் தங்க இடம் இல்லாத வகையிலும், இன்று அல்ல, நேற்றல்ல, பன்னெடுங்காலமாக சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து, இந்த அவல நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

1970 ஆம் ஆண்டு போடப்பட்ட நீதிபதி வரதராஜன் குழு கூறிய பரிந்துரைகளைக் கூட, கடந்த 10 ஆண்டு காலமாக அதிகமான நிதியை ஒதுக்கி செயல்படுத்தாத ஒரு நிலை ஏற்பட்டதன் காரணத்தால்தான் தேவையான அளவுக்கு நீதிமன்றக் கட்டடங்கள் கூட இல்லாத நிலை இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே ஏற்பட்டிருக்கின்றது. இதனைப் போக்குவதற்காக அரசு தீவிர நடவடிக்கைகளை நடப்பாண்டில் இருந்து எடுக்க இருக்கிறது. குறிப்பாக after the 24nd Amendmtnt of the Constitution of India சபார்டினேட் ஜுடிசியல் சர்விசைப் பொறுத்தவரை அது கன்கரன்ட் லிஸ்டுக்குச் சென்று விட்டது. கன்கரன்ட் லிஸ்டிலே சென்று விட்ட பிறகு மத்திய அரசு, வழக்கமாக கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கின்ற ஏனைய பிரிவுகளுக்கு ஒதுக்கக் கூடிய நிதியை, நீதித் துறைக்கு தமிழகத்திலே மட்டுமல்ல, எந்த மாநிலத்திற்குமே ஒதுக்கவில்லை என்பதனை அண்மையிலே நான் தெரிந்தேன். ஆந்திராவிலே இருந்து வந்த அமைச்சரைக் கேட்டாலும்கூட அவர்களுக்கு 16 லட்சம், 17 லட்சம் என 4 ஆண்டுகளுக்கு, 7-வது பைனான்ஸ் கமிஷனுடைய பரிந்துரை என்று ஒரு காரணத்தைச்



1981 எப்ரல் 30] [திரு. சி. பொன்னையன்]

சொல்லி ஒதுக்கி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். கன்கரன்ட் லிஸ்ட் என்று சொல்லி, மாநிலத்தின் அதிகாரத்தைப் பிடுங்கி நீதிபரிபாலனத்தை மத்திய அரசு கொண்டு சென்று விட்டு, பிறகு மைய அரசு மாநில அரசுக்கு, நீதிபரிபாலனத்துக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கி இருக்கவேண்டும். ஆனால் தொடர்ந்து நீதித் துறையை ஏனோ புறக்கணிக்கிறது. நீதித் துறைக்கு ஒதுக்கவேண்டிய நிதியை ஒதுக்காத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக 1979-லிருந்து 1984 வரைக்கும் தமிழகத்திலே இருக்கின்ற நீதி நிர்வாகத்திற்காக மைய அரசு ஒதுக்கி இருக்கின்ற ரூபாய் வெறுமனே 15 லட்சத்து 64 ஆயிரம் ஆகும். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு உடைந்த நிலையிலே இருக்கின்ற கட்டடங்கள் எந்த நேரத்தில் கீழே விழுந்துவிடுமோ என்ற நிலையில் இருக்கின்ற கட்டடங்கள், கழிப்பறை கூட இல்லாமல் நாகைப்பட்டணத்திலே இருக்கின்ற நீதிபதிகள்—மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னதைப்போல—இதுபோன்ற நிலை இருக்கின்றது. நீதிபதிகள் செல்வதற்கு வாகன வசதி இல்லாமல், கிளையன்ட்ஸ்களோடு, வழக்கறிஞர்களோடு ஒன்றாக பஸ்ஸிலே போட்டி போட்டுக்கொண்டு ஏறி, நின்றுகொண்டே செல்லக்கூடிய நிலையில் நீதிபதிகள் இருக்கின்ற நிலை, இன்றல்ல, நேற்றல்ல, பல ஆண்டுகளாகவே இருந்து வருகின்றது. கன்கரன்ட் லிஸ்டுக்கு நீதிபரிபாலனத்தை எடுத்துக்கொண்ட மத்திய அரசு பிரத்தியேகமாக நீதித் துறைக்கு ஒதுக்கவேண்டிய நிதியை ஒதுக்காமல் விட்டிருக்கிறது என்பதற்காகத்தான் சுட்டிக்காட்டப்படுகிறது. 15.64 லட்சம் ரூபாய் அதுவும் 1979 முதல் 1984 வரை, சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒரு நாட்டுக்கு, தமிழகத்திற்கே, நீதித் துறைக்கு மத்திய அரசு ஒதுக்குமானால், எந்த அளவுக்கு நீதித் துறையை, இந்த விதத்திலே அலட்சியப் போக்காக மத்திய அரசு கருதுகிறது என்பதை இது தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. இந்த நிலை போக்கப்படவேண்டும் என்பதற்காக மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். இந்த நிலை நீடிக்குமானால் தமிழகத்திலே இருக்கக்கூடிய நீதிமன்றங்களில் இருக்கக் கூடிய கட்டடங்களைச் சரிபார்த்து, புதிய கட்டடங்களை அமைத்து, நீதிபதிகள் தங்குவதற்கு இடவசதி செய்து தந்து, அவர்களுக்கு வாகன வசதி செய்து தந்து, அவர்களுக்குப் போதிய ஊதிய உயர்வைக்கூட தருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி, வழக்கறிஞர்கள் தங்க அவர்களுக்குச் சேம்பர்கள் ஏற்படுத்தித் தருவதற்காக குறைந்த பட்சம் 40 கோடி ரூபாய் உடனடியாக இந்த ஆண்டு செலவிடுவதற்கு தமிழகத்திற்குத் தேவைப்படுகிறது. ஆனால் மைய அரசு ஆண்டுக்கு 3 லட்சத்து 13 ஆயிரம் ஒதுக்கிவிட்டு, கன்கரன்ட் லிஸ்டிலே மாநிலத்திலே இருந்த அதிகாரத்தைப் பறித்து, மத்திய அரசிடம் வைத்துக்

கொண்டு நீதித் துறைக்கு மத்திய அரசு நிதி ஒதுக்காத நிலை ஏற்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி, இந்த நிதி அடுத்த ஆண்டிலே இருந்து கொடுக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துகிறது.

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது ஏழை மக்களுக்கு நீதி கிட்டவேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்று என்றும் ஏழைகள் பல காலகட்டங்களில் அவர்களுடைய வறுமை காரணமாக கூட அவர்களுக்கு நீதி கிட்டாது போகின்றது என்பதையும், அதை நிவர்த்திக்கின்ற அளவுக்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினர். அரசியல் சட்டம் 39 (ஏ) பிரிவின் பிரகாரம் இலவச சட்ட உதவி, மக்களுக்குக் குறிப்பாக ஏழை மக்களுக்கு செய்து தரவேண்டிய கட்டாயம் இருந்திருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் 1977 ஆம் ஆண்டு வரையிலும் ஏழைகளுக்கு நீதி கிட்டவேண்டும் என்பதிலே அந்த அக்கறை எடுக்காமல் இருந்து 1977 ஆம் ஆண்டு Free Legal Aid Board அமைக்க, பல்வேறு பகுதிகளிலே தற்போது இந்த Free Legal Aid Board ஆங்காங்கு அமைப்புகள் அமைத்து ஏழைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு நெடுமாறன் பேசும்போது சொன்னார்கள் என்று கருதுகிறேன். இந்த ப்ரீ லீகல் எயிட் கூட இன்னும் சீர்திருத்தப்படவேண்டும். முன்னேற்றம் செய்யப்படவேண்டும். ஏழைகளுக்கு நேரடியாக நீதி கிடைக்கக் கூடிய அளவில் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். மாவட்ட அளவில்—மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது—தமிழ்நாட்டில் தான் 'ப்ரீ லீகல் எயிட் போர்ட்' மாண்புமிகு முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பொறுப்பில் செம்மையாக நடந்து வருகிறது. தற்போது இதுகாறும் 78 தாலுக்காக்களில் இந்த வசதி கடந்த இரண்டாண்டு காலத்தில் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள 72 தாலுக்காக்களுக்கும் நடப்பு ஆண்டிலேயே இலவச சட்ட உதவி தரவேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அதற்காக வேண்டிய வசதியைக் கூட மாண்புமிகு முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த வசதியைத் தர அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்லியதுபோல், நடப்பு ஆண்டிலிருந்து அண்ணா பிறந்த நாளான





செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதியன்று [illegible] தமிழகத்தில் உள்ள உயர்நீதிமன்றம் [illegible] நீதிமன்றங்களில் எல்லாம் தமிழ் நீதிமொழியாக [illegible], [illegible], தமிழுக்கும் இது புகுத்தப்படும். (கரகோஷம்)

மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் பேசுகிறபோது பெண்களுக்கு ஒரு தனி நீதிமன்றம் வேண்டும் என்று சொன்னார்கள். இன்று காலையில் கேள்வி நேரத்தின்போதும் கூட மாண்புமிகு பொன்னம்மாள் அவர்கள் [illegible] அமைக்கப்பட்டால் பெண்களுக்குத் தனியான நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசும் நீதிமன்றமும் அதை ஆமோதிக்கிறது. குறிப்பாக, பெண்கள் திருமணம் செய்துகொள்வதற்குக் கட்டாயப்படுத்துதல், பெண்களிடம் கள்ளத்தனமாக தொடர்பு கொள்ளுதல், பெண்களை அந்நிய நாட்டில் இருந்து விபச்சாரத்திற்காகக் கொண்டு வருதல், பெண்களிடம் வரம்பு மீறி நடத்தல், பெண்களை இங்கே இருந்து மற்ற பகுதிகளுக்கு கடத்திச் செல்லுதல், கற்பழிப்பு, பலதார மணம், திருமண [illegible], [illegible] போன்ற வழக்குகள் அனைத்தையும் விசாரிப்பதற்காக தற்போது [illegible] இரண்டு மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றத்தைத் தமிழகத்தில் அமைத்துத் தர இருக்கிறோம். காரணம், அவைகள் வகையின் [illegible] இருக்கவேண்டும்—அந்த வழக்குகள் குறைவாகத்தான் இருக்கும்—பெண்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்கிற அரசின் கொள்கையின் அடிப்படையில் இரண்டு மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் அமைத்து, அந்த நீதிமன்றங்களில் நான் மேலே குறிப்பிட்ட பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில்கூட 'இன்-கேமரா ப்ரொசிடிங்ஸ்' தனியான முறையில், ஒரு அறையிலே அந்த வழக்கை நடத்தவேண்டும் என்று அந்த பாதிக்கப்பட்ட பெண்கள் வழக்கறிஞர்கள் மூலமாக மனு கொடுத்தால்—அந்த வழக்கை இன்கேமராவில் நடத்த வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் பல இடங்களில், பல குற்றங்களில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கும் உயர்நீதிமன்றத்தை இந்த அரசு கலந்து ஆலோசித்தது. பெண்கள் சம்பந்தப்பட்ட, நான் மேற்சொன்ன வழக்குகள் அனைத்தும்—இன்காமராவில் நடத்தவேண்டும் என்பதற்காக உயர்நீதிமன்றத்தின் மூலமாக அவர்களுக்கு கீழ் உள்ள நீதிமன்றங்களுக்கு உத்தரவிட்டு, அதன் மூலம் பெண்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க நடப்பு ஆண்டிலேயே முயற்சிக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். நீதிமன்றங்களில் வேறு முன்னேற்றங்களும் செய்ய தரவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் தற்போது மாவட்ட நீதிபதிகளாக இருப்பவர்களுக்கு—

ஆர்.டி.ஓ.விற்கு கார் இருக்கிறது, டி.டி.ஓ.க்கு கார் இருக்கிறது—ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலே இருக்கிற டிஸ்டிரிக்ட் மேஜிஸ்டிரேட்டுகள், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் ஆகியவர்களுக்கு கார் இல்லை என்கிற காரணத்தால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு ஜீப்கள் கார் என்று வழங்கப்பட்டு, அவர்கள் பொதுமக்களோடு அதிகப்படியாக தொடர்பு இல்லாத அளவிற்கு இருப்பதற்காக அவர்கள் கோரிய அந்தக் கோரிக்கை ஏற்கப்படுகிறது.

அதேபோல, அடிஷனல் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் மற்றும் சப்-ஜட்ஜஸ், ஆகியோருக்கு பல ஆண்டுகாலமாக டெலிபோன் வசதி இல்லாமல் இருக்கிறது என்கிற குறைபாடு இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு டெலிபோன் வசதி செய்து தரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நீதிபதிகளுக்கு குறிப்பாக சென்னையிலே உள்ள நீதிபதிகளுக்கு தங்குவதற்கு வீட்டு வசதி இல்லாத காரணத்தால், உடனடியாக அவர்களுக்கு முதற் கட்டமாக சென்னையிலே இருக்கிற நீதிபதிகளுக்கு—சிட்டி சிவில் கோர்ட்டில் நீதிபதியாக இருக்கிறவர்களுக்கு—தங்குவதற்கு வீட்டு வசதி செய்து தரப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறியதைப்போல சென்னையில் இருக்கிற வழக்கறிஞர்களுக்கு தங்க இடவசதி இல்லை. என்.எஸ்.சி. போஸ் ரோட்டுக்கு அப்பால், கிட்டத்தட்ட ஒரு மைல் தூரத்திலிருந்துகூட வருகிறவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு தங்கும் வசதி ஏற்படுத்த 'அடிஷனல் சேம்பர்ஸ்' உயர்நீதி மன்றத்தின் உட்புறத்திலேயே கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலு சொன்னார்கள் என்று கருதுகிறேன். நீதிமன்றங்களில் டைப்பிஸ்ட் இல்லாத காரணத்தால் நீதிபதிகளே குறிப்புகளை எழுதவேண்டியிருக்கிறது. அதனால் சில சமயங்களில் வாதப் பிரதிவாதங்கள் என்ன நடைபெறுகின்றன என்பதை அவர்களால் முழுமையாக குறிக்க முடியவில்லை; ஆகவே டைப்பிஸ்ட் போட வேண்டுமென்று சொன்னார்கள். முதல் கட்டமாக கிட்டத்தட்ட 80 சப்-ஜட்ஜுகளுக்கு டைப்பிஸ்டுகள் நியமிக்கப்படுவார்கள். அதற்கு அடுத்து 'ட்ரயல் கோர்ட்டு'களில் டைப்பிஸ்டுகள் நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





இன்னொரு பிரச்சனையை திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். தாமதம் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரையில் காவல் துறையில் போதுமான ஆள் இல்லாத காரணத்தால் அல்லது காவல் துறையினர் ஓரிடத்திலிருந்து, பல மைல்களுக்கு அப்பாலிருந்து 'ஃபர்ஸ்ட் கிளாஸ், செக்கண்ட் கிளாஸ்' குற்றவாளிகளை எடுத்துச்செல்ல வேண்டியிருப்பதால் வழக்குகள் தள்ளிவைக்கப்படுகின்றன.

அது மட்டுமல்ல, தாமதத்திற்கு இன்னொரு முக்கியமான பிரச்சனை, நீதிமன்றத்திலே வழங்கப்படுகின்ற தீர்ப்பு காப்பி வழங்குவதில் சுணக்கம் அதிகமாக ஏற்பட்டால், அதனாலும் வழக்கு முடிவதில் தாமதம் ஏற்படுகிறது. இதைப் போக்க 'லேட்டஸ்ட் மாடல் ஜெராக்ஸ் மெஷின்' வாங்க முடிவு செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட 16 மாவட்டங்கள் இருக்கின்றன. மாவட்டத்திற்கு இரண்டு மெஷின்கள் வீதம் 32 மெஷின்கள் வாங்க முடிவு செய்திருக்கிறோம். அந்த மெஷின்கள் வழங்கப்பட்டுவிட்டால், காப்பிஸ்டுகள் மூலம் டைப் செய்து ஜட்ஜ்மெண்ட் காப்பி வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதம் தவிர்க்கப்பட்டுவிடும். அந்தவகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நெடுமாறன், திரு. குப்புசாமி, மற்றும் திரு. சின்னராஜ் ஆகியோர் மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்று அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அங்கே உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைக்க உயர்நீதிமன்றமும், லா கமிஷனும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் மக்களுடைய தேவையின் அடிப்படையில், குறிப்பாக தென் மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு இவ்வளவு தூரம் வந்து நீதி பெறுவது பெரும் சுமையாக இருப்பதால் அங்கே உயர்நீதி மன்றத்தின் கிளை அமைக்கப்பட வேண்டுமென்று மைய அரசுக்கு மாநில அரசு எழுதியிருக்கிறது. மத்திய அரசு சட்ட அமைச்சர் திரு. சிவசங்கர் அவர்கள் கூட கொள்கையளவில் அதை ஏற்றுக்கொண்டு, சில தகவல்களைக் கேட்டிருக்கிறார்கள். விரைவில் மத்திய அரசு அனுமதி தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதைப்போல சென்னையில் உச்சநீதிமன்றத்தின் பெஞ்ச் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள் . . .

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். உத்தரப்பிரதேசத்தில் அலகாபாத்தில்தான் உயர்நீதிமன்றம் இருக்கிறது. அதன் கிளை ஒன்றை லக்னோவில் அமைக்க வேண்டுமென்று

[திரு. [illegible]] [illegible] 30

சொல்லி, [illegible] அந்த மாநிலத்தில் இன்னொரு [illegible], மைய அரசு அதை [illegible].

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** [illegible] பிரதேசம் மட்டுமல்ல. [illegible] இதுபோன்ற [illegible] கோரிக்கைகள் [illegible] அவர்கள் [illegible] என்னவோ இதைப்போன்ற [illegible]. ஆனால் தமிழ்நாடு [illegible] கோரிக்கை [illegible] இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி [illegible] காமல் இருந்துவிட்டு, [illegible] பாராட்டுகிறேன். [illegible] அமைச்சர் சிவசங்கர் கூறியிருக்கிறார். எனவே விரைவிலே [illegible] நமக்கு இருக்கிறது.

அதைப்போல தென் மாநிலங்களில் [illegible] அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு [illegible] நீதிபதி களும்கூட ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அதையும் நாம் மைய அரசிடம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அது பரிசீலிக்கப்பட்டு [illegible] அளிக்கப் படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] ஜுரிஸ்டிக்ஷனைப் பொறுத்தவரைக்கும் [illegible] களுக்கு 5,000 என்று இருந்தது, Taking into account the erosion of money value and inflationary trends 15,000 ஆக [illegible]. ஸ்மால் காஸஸ் கோர்ட் ஜுரிஸ்டிக்ஷனை 500 ரூபாயாகவே வைத்திருப்பது ஏன் என்ற கேள்வியைக் கேட்டார்கள். அவர்களுடைய அந்த கருத்து நல்ல கருத்து. ஸ்மால் காஸஸ் கோர்ட் ஜுரிஸ்டிக்ஷனை 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவோ அல்லது அதைவிட சற்று அதிகமாகவோ உயர்த்துவது குறித்து உயர்நீதிமன்றத்தை கலந்து, உடனடியாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படும்.



1981 [illegible] 30] [திரு. [illegible]]

[illegible] அவர்கள் சொன்னதைப் [illegible] ஜுரிஸ்டிக்ஷன் அட்வ [illegible] இடம் [illegible] அதிகரிக்க [illegible] இருக்கின்றது, நாட் [illegible] ஆனால் [illegible] அதிலே [illegible] அவர்களுக்குக் [illegible] கோரிக்கை [illegible] தன் [illegible] நாம் [illegible] அவர்களுடைய [illegible] நாம் [illegible] அதை [illegible] என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] நீதிமன்றத்திலே [illegible] கோரிக்கையினை [illegible] சொன்னார்கள். [illegible] சிக்கல்கள் [illegible] நியாயமாக [illegible] ஆக [illegible].

[illegible] கொடுக்கப்பட்டிருக்கின்ற [illegible] இந்த [illegible] என்னால் [illegible] பிறகு [illegible]

கொள்கை. அந்தக் கொள்கை அடிப்படையில் அரசுக்கு பல்வேறு நடவடிக்கைகளை கண்டிப்பாக எடுக்கவேண்டி இருக்கின்றது. Prisoners are only wards but not servants of the State. என்ற அடிப்படையில் அரசு பல்வேறு சாதனைகளைச் செய்து சீர்திருத்தங்களை எல்லாம் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கின்றது. சுதந்திர காலத்திலேயும் வெள்ளையர் காலத்திலே இருந்த நிலைதான் சிறைச்சாலைகளில் இருந்து வருகின்றது என்பது பற்றியும் சிறைச்சாலைகளிலே முறைகேடுகளும், கைதிகளைக் கொடுமைப்படுத்துகின்ற நிலையும் ஆண்டுகளாக தொடர்ந்து வருகின்றது என்பதைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. உமாநாத், திரு. கருப்பையா போன்றவர்கள் மிக அழுத்தமாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல் இது இன்றைய நேற்றைய நிலை அல்ல. ஆண்டுகளாக இருந்து வருகின்ற நிலைமை இது. அப்படி இருக்கின்ற குறைபாடுகளை களைய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 1950 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக கே. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் தலைமையில் சிறை நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழகத்திலே ஏற்படுகின்ற காலம் வரை சிறை வசதிகளை மேம்படுத்தவேண்டும் என்பதை யாருமே கருத்திலே கொள்ளாமல் இருந்துவிட்ட காரணத்தாலோ அல்லது திரு. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுடைய பரிந்துரையிலே கூட பலவற்றினை நடைமுறைப்படுத்தாத காரணத்தாலோ ஆங்காங்கு பல கொடுமைகள் நடந்து வந்திருக்கின்றன. சிறையிலே இருக்கின்ற கைதிகள் திருந்தி வாழவேண்டும் திருந்தி வாழக்கூடிய வசதிகளை அவர்களுக்கு சிறைச்சாலைகளிலே செய்து தரவேண்டும், அவர்களை அடிமைகளைப் போல நடத்தக்கூடாது என்ற அடிப்படையில் தான் சில திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்று விழைந்த புரட்சித் தலைவர் அவர்கள் 1978 ஆம் ஆண்டிலே ஆர். எம். நரசிம்மன் அவர்களின் தலைமையில் சிறை நிர்வாக சீர்திருத்தக் குழுவினை அமைத்தார்கள். அந்தக் குழு பல்வேறு பரிந்துரைகளை அரசுக்கு தந்திருக்கின்றது. 1978-லே அமைக்கப்பட்ட அந்தக் குழு தந்த பரிந்துரைகளை கருத்திலே கொண்டு நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். குறிப்பாக சிறைச்சாலைகளில் குடிநீர் வசதி, கழிவறை வசதி அதாவது லைட் அவுட் வசதி போன்றவற்றைச் செய்து தருதல், தரமான உணவு தருதல், சிறைக்கூடத்தை சுகாதாரமான நிலையிலே வைத்திருத்தல், அவர்களுக்குப் போதிய இடவசதி செய்து தருதல், சிறையிலே கற்று பின்னால் அவர்கள் புனர்வாழ்வு பெறுகின்ற வகையிலே, அவர்களுக்கு இருந்து வெளியே வருவதற்கு முன்னால், சிறையிலே இருந்து வெளியே வந்த





பயிற்சி தருவது போன்றவற்றை எல்லாம் உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று அரசு முடிவு செய்து அந்த அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிறபோது, சிறையிலே நடக்கிற பல கொடுமைகள், காட்டுமிராண்டித்தனமாக இருப்பதாகவும், முறைகேடுகளாக இருப்பதாகவும் சொன்னார்கள். கடந்த சில ஆண்டுகளாக, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வந்ததற்குப் பிறகு, சிறையிலே பல்வேறு நடவடிக்கைகள், ஒழுங்கீனங்கள் போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக தரமான உணவுகள் வினியோகிக்கப்படுவதில்லை என்பதற்காகவும், அங்குள்ள உணவுப் பொருள்களை திருடுவதற்காகவும் சிறை வார்டர்களிலிருந்து பலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பலர் சஸ்பெண்ட் கூட செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உணவு தரமானதாக இல்லை, சரியான அளவு கூட அளிப்பது கிடையாது. அப்படி சரியான அளவு கூட கொடுக்காமல் விட்டு, பிறகு அவைகளை திருட்டுத்தனமாக வெளியே எடுத்துச் செல்வது போன்றவைகள் எல்லாம் பல ஆண்டுகளாக இருந்து வருவதும், அங்கே வருகின்ற ஜெயில் விசிட்டர்கள் கூட செம்மையான கண்காணிப்பை மேற்கொள்ளாத நிலைமை இருந்து வந்ததும், பலவற்றை ஆய்ந்தபோது தெரிய வந்தது. அவற்றை எல்லாம் களைவதற்காக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து பல அதிகாரிகளையும் அங்கே சஸ்பெண்ட் செய்தவுடன், ஏன் அந்த அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்தீர்கள் என்று பல இடங்களிலிருந்து கேள்விகள் வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிறபோது, சங்க உரிமையை ஊழியர்களுக்கு வழங்கவேண்டும் என்று சொன்னார்கள். அதிலே அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இரண்டு சங்கங்கள் இருக்கிறபோது, ஒருங்கிணைந்து அவர்கள் செயல்பட்டார்களேயானால் நல்லது. 2, 3 சங்கங்களை வைத்துக் கொண்டு, போட்டி போட்டுக் கொண்டு செயல்படுவது, அவர்களுக்குள்ளேயே, அந்த ஊழியர்களுக்குள்ளேயே, பிளவு ஏற்படுத்துகின்ற காரணத்தால், ஒருங்கிணைந்து செயல்பட்டால் நல்லது என்பதுதான் அரசின் எண்ணம்.

அவர்கள் கொடுத்த மனுவிலே இணைக்கப்பட்டிருந்த லிஸ்டிலே சிறையிலே எத்தனை பணியாளர்கள், ஊழியர்கள் இருக்கிறார்களோ, அந்த எண்ணிக்கைக்கும் அதிகப்படியான எண்ணிக்கையை அவர்கள் அந்த லிஸ்டிலே கொடுத்துவிட்ட காரணத்தால், அவர்கள் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, உங்கள் சங்கத்திலே உள்ள

[[illegible]]    [[illegible] 30

[illegible] தகவல் [illegible].

[illegible] இல்லை என்று [illegible] தினம் [illegible] என்று [illegible] மூலம் [illegible] நடவடிக்கைகளை எடுக்கும்.

[illegible] உள்ளே இருப் [illegible] சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் [illegible] எடுக்கப்பட்டிருக்கிறது. பெண்களுக்காக ஒரு ஜெயில் [illegible] இருக்கிற காரணத்தால் பெண் கைதிகள் பலர் [illegible] பற்றிச் சொன்னார்கள். மதுரையிலே பெண்களுக்காக தனியாக ஒரு சிறைச்சாலையை அமைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் பேசுகிறபோது, ஜெயில் மேனுவலை பொறுத்தவரை [illegible] ஜெயில் மேனுவல் தான் இப்போதும் இருக்கிற காரணத்தினால், சிறையிலே பல பிரச்சனைகள் வருகின்றன என்று சொன்னார்கள். நான் கூட அவைகளையெல்லாம் ஆய்ந்து பார்த்தேன். அவர் சொன்னது உண்மையும் கூட. அந்தக் காலத்திலே இருந்த சிறை மேனுவலின் நடைமுறைகளை பயன்படுத்துகிற காரணத்தினாலேதான் [illegible] அடைந்து விட்ட பிறகும் கூட, சுதந்திரம் அடைந்து விட்ட பிறகும் கூட, பல்வேறு சீர்திருத்தங்களை செய்ய, அந்த விதிகள் ஆங்காங்கே தடைக்கற்களாக இருக்கிற காரணத்தினால், சீர்திருத்தங்களைக் கொண்டு வரமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஜெயில் மேனுவலைப் பொறுத்தவரைக்கும் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் திருத்தப்பட்டு, புதிதான ஜெயில் மேனுவல் வெளியிடப்படும். திருச்சி ஜெயிலிலே ஒரு முறைகேடு நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்களும் உமாநாத் அவர்களும் சொன்னார்கள். திருச்சி ஜெயிலிலே அவர்கள் சொன்னதைப் போல வெறும் 96 கிலோ அரிசி



1981 ஏப்ரல் 30]    [திரு. சி. பொன்னையன்]

மட்டும் திருடப்படவில்லை. அங்கே 17 மூட்டைகள் கொண்ட பல்வேறு உணவுப் பொருள்களை எல்லாம் திருட்டுச் செய்ததிலே, சில ஊழியர்கள், பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அது குறித்து புகார் அரசுக்கு, வந்தவுடன் நடவடிக்கை எடுக்கச் சொன்னோம். 17 (பி) விதியின்கீழ், அதாவது அவர்கள் குற்றத்தை விசாரித்த பிறகு, நிரந்தரமாக அவர்களை பணியிலிருந்து நீக்கம் செய்யும் அளவிற்கு தண்டனை அளிக்கக் கூடிய நடவடிக்கைகளை தற்போது அரசு மேற்கொண்டு வருகிறது. இது, 1,851 ரூபாய் பெறுமானம் உள்ள உணவுப் பொருள்களை அவர்கள் திருடியதாக அரசுக்குத் தகவல் வந்ததன் தொடர்பாக திடீர் சோதனை இட்டு, அதன் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல், கோவையிலும்கூட அதுபோன்ற தவறுகள் நடந்ததாக தெரிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

இந்த 'ப்ரிமச்சூர் ரிலீஸ்' பொறுத்தவரை, இந்த 'லைபேர்ஸ்' பொறுத்த வரையில் புதினான்கு ஆண்டுகள் ஆனபிறகுதான் அட்வைஸரி போர்டிடம் இருந்து அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற நிலையில் 18—12—1978 க்குப் பின்னால் மைய அரசு 433 (எ) சி.ஆர்.பி.சி.-ல் கொண்டுவந்த திருத்தம் காரணமாக அந்தநிலை ஏற்பட்டுவிட்டது. அது கூடாது என்பதை மைய அரசுக்கு வலியுறுத்தி மாநில அரசுக்கு ஏற்கனவே இருந்த அதிகாரத்தைப் பறிக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்தி கைதிகளை சிறையில் அடைத்து விட்டு அவர்கள் திருந்துவார்களானால் நன்னடத்தையோடு செயல்படுவார்களானால், அவர்தன் மனம் திருந்தி விடுவதாக வெளிப்படையாக தெரிந்தபோது அவர்கள் நன்னடத்தை அடிப்படையில் சற்று முன்னர் கூட அவர்களை விடுதலை செய்யலாம் என்றும் வயதானவர்கள் 65 வயது அல்லது 55, 60 வயதை தாண்டிவிட்டால் கூட அவர்கள் திருந்தி 60 வயதைத் தாண்டியவர்களாக இருந்தால் அவர்களை விடுதலை செய்யலாம். மகளிர் போன்றவர்களுக்கு இது அனுமதிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசுக்கு ஏற்கனவே இருந்த அதிகாரத்தை தரவேண்டும் என்று இந்த சட்டமன்றத்திலே ஒரு சட்டம் நிறைவேற்றி நாம் மைய அரசுக்கு அனுப்பினோம். ஆனால் மைய அரசு ஏனோ இதில் பாராமுகம் காட்டிக்கொண்டிருக்கிறது. மீண்டும் இந்த மத்திய அரசுக்கு வலியுறுத்த மாநில அரசு முடிவு செய்திருக்கிறது. ஆனால் சுப்ரீம் கோர்ட் அளித்த ஒரு தீர்ப்பின் அடிப்படையில் அதில் இருக்கிற ஒரு சலுகை தீர்ப்பின் (interpretation of the Judgment) அதைப் பயன்படுத்தி

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 30

18—12—1978-க்கு முன்னால் சிறை சென்று ஆயுள் கைதிகளாக இருக்கிறவர்களை எல்லாம் பத்தாண்டுகள் ஆனாலே அட்வைஸரி போர்டுக்கு அனுப்பி அந்த அடிப்படையில் அவர்களை விடுதலை செய்யலாம் என்ற ஒரு முடிவிற்கு தற்போது அரசு வந்து அந்த அடிப்படையில் அவர்களை விடுதலை செய்ய அரசு உத்தரவிட்டிருக்கிறது. பலர் அந்த முறையில் விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால் 18—12—1978-க்குப் பின்னால் சிறை சென்ற கைதிகளுக்குத்தான் அந்தப் பிரச்னை வரும் என்ற காரணத்தால் மைய அரசு மாநில அரசின் அதிகாரத்தை பறித்துவிட்டபோதிலும் உச்ச நீதிமன்றம் மாநில அரசுக்கு இந்த அதிகாரத்தை தருவதுபோல் தந்திருக்கிற காரணத்தால் 18—12—1978-க்கு முன்னால் சிறை சென்று பத்தாண்டுகள் சிறையில் இருக்கிற கைதிகள் அட்வைஸரிபோர்டுக்கு அனுப்பப்பட்டு விரைவில் அவர்களை விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திறந்தவெளி சிறைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி பாலிஸி நோட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அதிகமாக வரவேண்டும் என்றும் அதன் மூலம் அவர்கள் சிறையில் பயிற்சி பெற்று விடுதலை பெற்றவுடன் ஒரு சுய தொழில் அமைத்துக்கொள்ள வாய்ப்பு தருமுகத்தான் தமிழ் நாட்டில், சிவகெங்கை அருகில் உள்ள, இராமநாதபுரத்திலுள்ள முத்துப்பட்டியிலும், நெல்லை மாவட்டத்தில் சிங்கப்பட்டியிலும், தென் ஆற்காட்டில் மேலப்பாக்கம் அருகில் ஸ்டேட் ஸீட் பார்மிலும், செங்கை மாவட்டத்தில் வேங்கடமங்கலத்திலும் ஓப்பன் எயர் ப்ரிஸன்ஸ் அமைக்க அரசு நடப்பாண்டில் உத்தரவிடும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல கட்டங்களில் கூறிய பிரச்னை, சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளை அடைக்கிறபோது அரசியல் கைதிகள் மற்ற கைதிகளோடு அடைக்கப்படுகிறார்கள், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்ற பிரச்னை வந்தது. இந்த ஆட்சி வந்த பிறகு அந்த நிலைமை இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவான உத்தரவிட்டிருக்கிறார்கள். அரசியல் கைதிகளைப் பொறுத்து, சிறைச்சாலைகளுக்கு அவர்கள் பெரிய குற்றங்கள் செய்துவிட்டு உள்ளே செல்லவில்லை, பொதுப் பிரச்னைகள் காரணமாக சிலநேரங்களில் சட்டத்தை மீறியதாக சிறை செல்கிறபோது அங்கே அவர்கள் வசதிகள் பெற்றிருக்கவேண்டும் என்ற உத்தரவை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இட்டதன்பேரில் பன்னெடுங்காலமாக, இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் சிறைச்சாலைகளில் இருந்து வந்த கொடுமைகளை நீக்குமுகத்தான் சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளுக்கு என்று தனியான பிரிவுகள் ஏற்படுத்தி அரசு நடப்பாண்டில் இருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



1981 ஏப்ரல் 30] [திரு. சி. பொன்னையன்]

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது, சப் ஜெயிலைப் பொறுத்த வரைக்கும், அது ரெவின்யூ டிபார்ட்மெண்ட் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினால், அங்கே கைதிகள் பலவிதத் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் மொத்தமாக 119 கிளைச் சிறைச்சாலைகள், சப் ஜெயில்கள் ரெவின்யூ டிபார்ட்மென்டின் பொறுப்பிலே இருக்கின்றன. அனைத்து சப் ஜெயில்களும், அன்டர் தி கன்ட்ரோல் ஆப் தி ரெவின்யூ டிபார்ட்மென்டில் இருப்பதை நடப்பு ஆண்டிலிருந்து, பேஸ்ட் புரோகிராமாக அல்லாமல் கிட்டத்தட்ட நடப்பு ஆண்டிலேயே, அல்லது அடுத்த ஆண்டிற்குள் சிறைச்சாலை நிர்வாகத்திற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

(மாற்றுத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்லாமல், சிறையிலே இருக்கின்ற கைதிகள், வயதான மகளிர், கர்ப்பிணி, இளங்குழந்தைகளோடு உள்ள தாய்மார்கள், விசாரணைக் கைதிகளாக, ரிமாண்ட் பிரிசினர்களாக இருக்கின்றபோது, அவர்கள் ஏழைகளாக மட்டும் இருந்தால்—மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் வெளியிலே செல்ல முடியாமல், ஜாமீன் எடுக்கும் நிலைமையிலே இல்லாமல், அவர்கள் பல மாதங்களாக தண்டனைக்கு அதிகமான காலமாக சிறையிலேயிருக்கும் காரணத்தினால், அவர்களுக்கு உதவி செய்வதற்காக இலவச சட்ட உதவிக் கழகத்தின் உதவியுடன் இதுபோன்ற வயதான மகளிர், கர்ப்பிணிகள், பிறந்த இளம் குழந்தைகளுடன் இருக்கும் தாய்மார்கள், விசாரணைக் கைதிகளாக இருப்பார்களானால், அவர்களுக்கு இத்தகைய சட்ட உதவி நடப்பு ஆண்டிலிருந்து தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. வேலை வசதியற்ற நிலையிலே விசாரணைக் கைதிகள், மற்றவர்கள், இதைப்போன்று விசேஷப் பிரிவிலே இல்லாத யாராக இருந்தாலும், அவர்கள் ஏழைகளாக இருப்பார்களானால், 3 மாத காலம் விசாரணைக் கைதிகளாக சிறையிலே இருப்பார்களானால், அவர்களுக்கும் இலவச சட்ட உதவி நடப்பு ஆண்டிலே இருந்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பெரும் பிரச்னை ஒன்றைச் சொன்னார்கள்: சிறைச்சாலைகளிலே உணவின் அளவு, தரம் பற்றிய முறைகேடுகளைப் பற்றிச் சொன்னார்கள். பல சிறைச்சாலைகளுக்கு நானே நேரில் சென்று பார்த்த போது, அந்தக் குறைபாடுகளை நானே நேரில் கண்டிருக்கிறேன். ஐ.ஜி. அவர்கள் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறேன். அவரும் எடுத்து வருகிறார். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியதைப் போல், சிறைக் கைதிகளுக்குள், அவர்களே தேர்ந்தெடுத்து, அந்தக் கைதிகள் அடங்கிய கண்காணிப்பு கமிட்டி அமைக்கப்

படுமானால், அந்த கண்காணிப்புக் கமிட்டி கண்டுபிடிக்கின்ற முறைகேடுகள், குறைபாடுகள் எதாவதும் இருந்தால், அவைகளை சூபரின்டென்ட் அளவுக்குச் செல்லாமல், நேரடியாக ஐ.ஜி.-க்கு தகவல் சொல்லக்கூடிய சூழ்நிலையை, ஏற்பாட்டைச் செய்தால், தற்போது இருந்து வருகிற இந்த உணவின் தரம், அளவு இல்லை போன்ற குறைபாடுகளை எல்லாம் கண்டிப்பாக நீக்க முடியும் என்று அரசு ஒத்துக்கொள்கிறது

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்ன ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையிலே நடப்பு ஆண்டிலே சிறைக் கைதிகளுக்குள், அவர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்காணிப்பு கமிட்டி அமைக்கப்படும்.

இன்னும் ஒன்று. சென்னையிலே இருக்கின்ற மத்திய சிறையைப் பொறுத்தவரைக்கும், இட நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வசதியில்லாமல் இருக்கிறது. அதன் காரணமாக அங்கு இருக்கிற கைதிகளுக்கு நவீன வசதிகளைச் செய்துத் தரவேண்டுமென்பது ஒருபக்கம். அதுமட்டுமல்ல. ஒரு மாநிலத்தினுடைய தலைமைச் சிறைச்சாலையாக இருக்கின்ற இந்த சென்ட்ரல் பிரிசின் ஆப் மெட்ராஸ் வேறு ஒரு நல்ல இடத்திற்குச் சென்று, அதிகமான வசதிகளைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில், 139.5 ஏக்கர் நிலத்தில், சென்னைக்கு அருகாமையில் இருக்கின்ற புழல் என்ற இடத்தில் நடப்பு ஆண்டில் 11 கோடி ரூபாய் செலவிலே நவீன வசதிகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. கட்டிடம் கட்டத் துவக்கப்பட்டு இருக்கிறது. அந்த இடத்திற்கு சென்னை மத்திய சிறைச்சாலை மாற்றப்படும். அப்படி சென்னை மத்திய சிறைச்சாலை மாற்றப்பட்ட பின், அந்த இடத்திற்கு தற்போது போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட் வைப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தரம் உயர்த்தப்பட்ட மருத்துவப் பிரிவு அதாவது சென்னை பொது மருத்துவமனை அங்கே மாற்றப்பட இருக்கிறது. அதன் விரிவாக்கமாக முதன் முறையாக அங்கே போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூட் என்ற அளவில் சென்னை பொது மருத்துவமனை அங்கே வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மற்றும் ஒரு கோரிக்கை—சிறை அலுவலர்கள், குறிப்பாக செயல் அலுவலர்கள்—குறிப்பாக ரைட் பிரம் தி கேடர் ஆப் வார்டர் அப் டு சூபரின்டென்ட், வித் எக்சிகியூடிங் ஸ்டாப்—அவர்களுக்கு தங்குவதற்கு வீட்டு வசதியில்லாமல் பலர் இருந்து வருகிறார்கள். நடப்பு ஆண்டில், அதற்கான



நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அனைத்து சிறைச்சாலைகளிலும் இருக்கின்ற அனைத்து எக்சிகியூடிவ் ஸ்டாபுக்கும், செயல் அலுவலர்களுக்கும் தங்குவதற்கு குடியிருப்பு வசதி செய்து தரப்படும். சிறை வார்டர்களைப் பொறுத்தவரைக்

(பிற்பகல் 12-20)

கும் குற்றத்தின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்டர்கள் நீங்கலாக, உதாரணமாக ஏற்கனவே நான் சொன்னதைப் போல சிறையிலே இருக்கிற கைதிகளுக்கு வேண்டிய உணவைத் திருடுதல்; அளவைக் குறைத்தல்; தரத்தைக் குறைத்தல்; போன்ற தவறுகள்; சில சிறைக்கு செல்லக்கூடாத பொருள்களை எல்லாம், கஞ்சா போன்ற பொருள்களை எல்லாம் கடத்திச் செல்கிற பணியில் ஈடுபட்டு அதன் காரணமாக, கடந்த ஓராண்டு காலமாக எடுத்த நடவடிக்கையின் காரணமாக பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நீங்கலாக, தற்போது ஒரு வேலை நிறுத்தத்தின் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்ட மற்றவர்கள் எல்லாம் பணியிலே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை அறிவித்து. . (குறுக்கீடு)

**திரு. ரா. உமாநாத்:** துணைத் தலைவரவர்களே, இந்த ஜெயில் விசிட்டர்ஸ் சிஸ்டம், இப்போது இருக்கிற சிஸ்டம் (effective) ஆக இல்லை. எவ்வளவு circulars சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பினாலும் அது effective ஆக இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட அந்த அட்வைசரி கமிட்டி இருக்க வேண்டுமென்று பல காலமாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அதுபற்றி, அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவு கூறினால் நல்லது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, ஜெயில் விசிட்டர்ஸ் பொறுத்தவரைக்கும் அந்த குழுக்களிலே உண்மையிலே சிறையில் இருக்கிற கைதிகளுக்கு புனர் வாழ்வு கிட்டவேண்டுமென்று, அங்குள்ள குறைபாடுகள் களையபடவேண்டும் என்று அக்கறை உள்ளவர்கள் அந்த ஜெயில் விசிட்டர் கமிட்டியிலே, எந்தெந்த பிரிவுகளிலே இருந்து யார் யாரை போடுவது என்ற அந்த அடிப்படையில் போட்டு தற்போது இருந்து வருகிற குறைகளை அகற்றவும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல கருத்துக்களுக்கும் நான் என்னுடைய பதிலை கூறியிருக்கிறேன். இன்னும், சிலருடைய கோரிக்கை குறித்து. . (குறுக்கீடு)

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த நன்னடத்தை பிரிவை தனியாக பிரிப்பது சம்பந்தமாகவும், அது நீண்ட காலமாக இருந்து வருகிற கோரிக்கை ; பல குழுக்கள் பரிந்துரை செய்திருப்பது. அது சம்பந்தமாக திட்டவட்டமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கிறேன். அதுமட்டுமல்ல இந்த 'ஹோம் லீவ்' ஐந்து ஆண்டுகளுக்கு குறைவாக இருப்பவர்களுக்கு அது கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நன்னடத்தை பிரிவை பொறுத்தவரைக்கும் நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் ஒரு வினாவை கேட்டு பதில் சொல்லியிருக்கிறேன். நன்னடத்தை பிரிவுக்கு 20 பணிகள் இருக்கின்றன. சிறையிலே கைதிகள் இருக்கிறபோது அவர்களை, சென்று பார்த்து, அவர்களுடைய மனப்பக்குவத்தை அறிந்து, சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடன் எத்தகைய தொழிலில் அவர்கள் ஈடுபடவேண்டும் என்பதும், அதை அவர்களிடம் தெரிந்து, விடுதலை பெற்றவுடன் அவர்களுக்கு வசதிகளை செய்து தரவேண்டியதும் இருக்கிறது. தற்போது இருக்கிற நன்னடத்தை அலுவலர்கள், பி.ஓ.-சைப் பொறுத்தவரைக்கும் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டிலே இருக்கிற காரணத்தால் சில தவறுகள் நடக்கின்றன என்பதையும் அவர்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதை மாற்றுவதற்காக அந்த பிரிவு தனியாக பிரிக்கப்படும். But who is the administrative Controller ? என்பதை தான் முடிவு செய்யவில்லை. விரைவில் முடிவு செய்து நடைமுறைப்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் நான் அவைக்கு கூறிய விளக்கத்தை ஏற்று வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

திருவாளர்கள் சு. பாலன், என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.



திரு. கி. கா. நல்லப்பன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 7,68,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”.

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

திருவாளர்கள் கெ. சொக்கலிங்கம், என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. இரா. கருப்பையா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 6,12,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

“மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 25,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்”.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மாநிலத்தில் அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்கும் வகையில் கள்ளுக் கடைகள், சாராயக் கடைகளையும் மற்றும் மது பானங்களையும் முன்னாள் ஆட்சியினர் ஏலம் விட்டதுபோல்

[திரு. செ. சிவசாமி] [1981 ஏப்ரல் 30

விடப்பட்டு சாதாரண ஏழைகளுக்கு நயமான சரக்குகள் சகாய விலையில் கிடைப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 25,19,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

(ஈ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 7,24,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

Thiru M. APPADURAI : Sir, to discuss policy, I move—
"That the allotment of Rs. 7,24,00,000 under Demand No. 4—Tamil Nadu General Sales Tax and other taxes and duties" be reduced by Rs. 100".

(உ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 81 40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூரில் முத்திரைத் தாள்கள் விற்பனை செய்ய அரசு நிர்ணயித்துள்ள நபர்கள் யாருமில்லாததால் மக்களுக்கு ஏற்பட்டு வருகிற கஷ்டங்களைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 81,40,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".



1981 ஏப்ரல் 30]

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மாவட்ட கருவூலத்திலிருந்து கிளைக்கருவூலங்களில் அரசு பதிவுபெற்ற முத்திரைத்தாள் விநியோகஸ்தர்களுக்கு கட்டுகிற ரூபாய் அளவிற்கு முத்திரைத்தாள் கிடைப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 81,40,000-இல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குக் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளைப் பற்றிய கொள்கை குறிப்புகள் * முன்னாலேயே இந்த அவைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை நான் இங்கே படித்ததாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை கூறியதற்குப் பிறகு நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க இருக்கிறேன்.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி சம்பந்தமாக கொள்கை அறிவிப்பிலே 8-வது பக்கத்திலே ஏற்கெனவே இருந்த சேல்ஸ் டாக்ஸினுடைய அளவு மசாலைப் பொறுத்தவரையில் 5 சதவீதம் என்பது 11 சதவீதத்திற்கு வந்திருக்கிறது. அதைப்போன்று மெட்ராஸை சுற்றியிருக்கிற 32 கிலோமீட்டர் அளவுக்கு இருக்கின்ற இடங்களிலே 6 சதவீதமாக இருந்தது 10 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. விற்பனை வரியைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று நாட்டிலே உள்ள சாதாரண மக்கள் ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரியை உயர்த்தியது சரியாக இருக்காது என்று சொல்லிக்கொண்டு கைத்தொழில் பொருட்களான ஊறுகாய், பிளாஸ்டிக் குடம், பிரஷ் போன்றவற்றிற்கு சேல்ஸ் டாக்ஸ் போட்டிருப்பது சரியல்ல. அதை எடுக்க வேண்டும். மசாலுக்கு விற்பனை வரியை அதிகப்படுத்தியதன் காரணமாக நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண ஏழை எளிய மக்கள் வாங்கும் சக்திக்கு பர்சேசிங்

* 1007-1054-ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 30

ப்புக்கு அதிகமாக, போக்குவரத்துறையிலே கட்டணம் ஏற்றியிருப்பதற்கு டீசல் வரிதான் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விற்பனை வரியை எடுத்துவிட வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அதேபோன்று, கார்ப்பரேஷனுக்கு நிதியைத் திரட்டிக் கொடுப்பதற்கு ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே சேல்ஸ் டாக்ஸை உயர்த்துவது என்பது சரியல்ல. இந்த நகரத்திலே இருக்கக்கூடிய மிகப் பெரிய மாடிக் கட்டிடங்களுக்கு இன்றைக்குப் போட்டிருக்கக்கூடிய பலமுறையிலே உள்ள வரிகள், மிகக் கம்மியாக இருக்கின்ற காரணத்தாலே, அவர்களுக்கு வந்திருக்கக்கூடிய வருவாயினுடைய அடிப்படையிலே வரிகள் போடப்படவில்லையென்ற காரணத்தாலே, மாளிகைகளுக்கும் மிகப் பெரிய கட்டிடங்களுக்கும் அதிக வரிகள் போட்டு, கார்ப்பரேஷன் வருவாயை உயர்த்துவதற்குப் பதிலாக, இன்று சாதாரண ஏழைகள், சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய முறையில் விற்பனை வரியை அதிகப்படுத்துவது சரியல்ல என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, சேல்ஸ் டாக்ஸ் பொறுத்த அளவிலே டாக்ஸ் எவேஷன் மிகப் பெரிய அளவிலே இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சேல்ஸ் டாக்ஸிலே டாக்ஸ் எவேஷன் பொறுத்த அளவிலே, சென்ற ஒருசில நாட்களுக்கு முன்னால், இதே அவையிலே, சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான சட்டத்தின்மீது பேசுகின்ற நேரத்திலே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வியாபாரிகள், ரப்பர் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் எப்படி சேல்ஸ் டாக்ஸிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். இன்று கேரள மாநிலத்திலே 'லாஸ்ட் பர்சேஸ'-க்கு சேல்ஸ் டாக்ஸ் விதித்திருக்கிற நேரத்திலே, தமிழகத்திலே ஃபர்ஸ்ட் பர்சேசுக்கு டாக்ஸ் போடுகிற காரணத்தாலே, சாதாரண உற்பத்தியாளர்களிடமிருந்து ரப்பர் வாங்கக்கூடிய வியாபாரிகள் ஃபர்ஸ்ட் பர்சேஸ் என்ற முறையில் சரியான கணக்குகளை வைப்பதில்லை, வைப்பதில்லை. இதனால் சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளுக்கும் அவர்களுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. இந்தக் காரணத்திற்காக, பல இலட்சக்கணக்கான ரூபாய் விற்பனை வரி என்ற முறையிலே ரப்பரிலிருந்து இந்த மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய வரி கிடைக்காமல் போயிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே ஒரே முறையிலுள்ள சேல்ஸ் டாக்ஸ் இந்த மாநிலங்களுக்குள் இருந்தால், அந்தந்த மாநிலங்களுக்கு வரவேண்டிய வருவாய் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலே, அதுவும்



1981 ஏப்ரல் 30] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அதிகமான ரப்பர் உற்பத்தி செய்யக்கூடிய மாநிலம் என்ற முறையிலே கேரளாவிலே இருப்பதைப் போல், ஃபர்ஸ்ட் பர்சேஸ் என்று தமிழகத்திலே வைத்திருப்பதற்குப் பதிலாக, லாஸ்ட் பர்சேசிலே சேல்ஸ் டாக்ஸ விதிக்கக்கூடிய முறையில், சட்டத்திலே திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், ஜெனரல் சேல்ஸ டாக்ஸ் பொறுத்தவரை இன்று மத்திய அரசு, ரப்பர், டீ போன்ற கமர்ஷியல் ப்ராடக்ஸினுடைய உற்பத்தியாளர்களை இணைத்து சேல்ஸ் டாக்சுக்குத் திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். அந்த முறையிலே, லாஸ்ட் பர்சேஸ் என்று வரக்கூடிய நேரத்திலே, டாக்ஸ் எவேஷன் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், இன்று ரப்பர், டீ போன்ற கமர்ஷியல் ப்ராடக்ட்ஸ், இந்த சேல்ஸ் டாக்ஸ் சட்ட திட்டங்களுக்குள் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறேன்.

அதேபோன்று, மோட்டார் கார், ஸ்கூட்டர் ஆகியவற்றை, தமிழகத்திலே இருக்கக்கூடியவர்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய பாண்டிச்சேரியிலே வாங்குகிற நிலைமையைப் பார்க்கிறோம். மேற்கு வங்காளத்திலிருந்தும் வாங்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். இங்கிருந்து மேற்கு வங்காளத்திற்குச் சென்று, அங்கிருந்து கார்களை வாங்கினால்கூட, வாங்குபவர்களுக்கு ரூ. 5,000 இலாபம் ஏற்படுகிறது என்று அந்தக் கார்களை வாங்கியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் இந்த மாநிலத்தில் விதிக்கப்படுகிற டாக்ஸ்தான் என்று கேள்விப்படுகிறோம். ஆகவே, அந்த முறையில் தமிழகத்திற்கு வரவேண்டிய வருவாய் நமக்குக் கிடைக்காத நிலையைத் தவிர்க்கக்கூடிய சட்ட திருத்தங்களைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, சாதாரண ஏழை, எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய சேல்ஸ் டாக்ஸ்கள் கொண்டு வருவது சரியல்ல. அந்தக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்று ஸ்டாம்ப் டூட்டி சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்டாம்ப் டூட்டியிலே கூட இன்று (mortgage, lease and release) போன்ற இவைகளுக்கு முதல் 100 ரூபாய்களுக்கு 2.50 லிருந்து 3.00 ரூபாயாகவும், ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒவ்வொரு 500 ரூபாய் அல்லது அதன் பகுதிக்கு 13 ரூபாயில் இருந்து 15 ரூபாயாகவும் ஸ்டாம்ப் டூட்டியை உயர்த்துகின்ற அளவுக்கு இங்கே புரபோசல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பொருத்த அளவிலே இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை மக்கள் இந்த டீட்களை கொண்டு செல்லும்போது குறிப்பாக 10,000

ரூபாய் வரையில் இருக்கக்கூடிய அந்த டாக்குமென்டுகளுக்கு அந்த சட்டத்தை இம்ப்ளிமென்ட் பண்ணுவதற்கான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 10 ஆயிரம் ரூபாய் வரையிலும் அந்த டிரான்சாக்ஷனில் இந்த சட்டத்தில் இருந்து அதை இம்பலிமென்ட் பண்ணுவதில் இருந்து விதிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எக்சைஸ் டூட்டியை பொறுத்தவரையில் இன்று வரிகளை ஏமாற்றுவதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய டாக்குமென்டுகளை எல்லாம் அந்த மாவட்டத்திலே ரிஜிஸ்டர் செய்வது இல்லை. பக்கத்து மாநிலமான கேரளாவில் ரிஜிஸ்டர் செய்யும் நிலை இருக்கின்றது. அதற்கு என்ன காரணம்? என்பதைப் பற்றி இந்த அரசு ஆராய வேண்டும். எனக்குக் கிடைத்த தகவலின்படி பார்த்தால் இந்த மாநிலத்தில் ஸ்டாம்ப் டூட்டி அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே தான், அவைகளை அண்டை மாநிலத்திற்கு எடுத்துச் சென்று ரிஜிஸடர் செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அதனால் இந்த மாநில அரசுக்குக் கிடைக்கவேண்டிய வருவாய் கிடைக்காமல் போகக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. அதனாலே இந்த அரசு இந்த நட்டத்தை தவிர்க்கக் கூடிய முறையிலே, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பல இடங்களிலே ஸ்டாம்ப் போதிய அளவுக்குக் காலாகாலத்தில் கிடைக்காத நிலை இருக்கிறது. ஸ்டாம்ப் போதுமான அளவுக்கு மக்களுக்குக் காலாகாலத்தில் கிடைக்கின்ற வகையில் தக்க நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பாலிசி நோட்டிலே அதற்கான நடவடிக்கைகளை, போதுமான அவகாசத்தோடு, சம்பந்தப்பட்ட நாசிக் அலுவலகத்துக்கு அனுப்பி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையிலே உள்ள நிலைமை என்னவென்றால் காலகாலத்தில் இந்த ஸ்டாம்பு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எக்சைஸ் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்று சிறிய சிறிய வாலிபர்களுக்கு எல்லாம்கூட குடிப்பழக்கம் ஏற்படுகிற அளவில் நிலைமைகள் இந்த நாட்டில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. 15 வயதானவர்கள்கூட இன்று குடிப்பழக்கத்திற்கு ஆளாகும் நிலை இருக்கின்றது. அவைகளை எல்லாம் அரசு தவிர்க்க வேண்டும்.





அதேபோன்று இந்த லிக்கர் ஷாப்புகளை எல்லாம் தொழிற்சாலைகளுக்குப் பக்கத்தில் வைக்கக் கூடாது என்று உத்தரவிட வேண்டும். அப்படி ஏலம் எடுப்பவர்கள், இன்று அதிகமான வருவாய் வரும் என்று எதிர்பார்த்து அந்தத் தொழில் ஸ்தாபனங்களுக்குப் பக்கத்தில் வைப்பது நல்லது என்று வைக்கிறார்கள். பல தொழில் ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள் கூலியும் வாங்கிக் கொண்டு வருகின்றவர்கள், அந்தப் பணத்தை எல்லாம் அங்கேயே செலவழித்து விட்டு வருகின்ற நிலைமை ஏற்படுகின்றது. தொழில் ஸ்தாபனங்களுக்குப் பக்கத்திலே ஷாப்புகள் வைக்க அனுமதிக்கக் கூடாது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இன்று புரொகிபிஷன் சம்பந்தமாக முக்கியமான கருத்தை சொல்ல விரும்புகிறேன். இல்லிசிட் சாராயம் போன்ற பொருள்கள் நாட்டிலே அதிகமாக இருக்கின்றன. இவைகளை எந்த அளவுக்குத் தடை செய்ய முடியுமோ அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12.40)

இன்று ப்ரொஹிபிஷன் சம்பந்தமாக உள்ள வழக்குகளில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்கிற நேரத்திலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிற நேரத்திலும், பல பிரச்னைகள் எழுவதால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க பெண்களை ஆபீசர்களாக நியமனம் செய்ய வேண்டும். அல்லாமல், இன்று ஆண்கள் பெண்களைக் கைது செய்யும் நேரத்தில் பல்முறை தகராறு ஏற்படுவதாக இன்றைக்குப் புகார்கள் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, பெண்களைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட ப்ரொஹிபிஷன் அபன்சில் அவர்களை டீல் செய்வதற்குத் தேவையான அளவிற்கு பெண்கள் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ப்ரொஹிபிஷன் பொறுத்தவரையில், முக்கியமாக, இல்லிசிட் டிரிங்கஸ் தயாரிப்பதை அரசு தீவிரமாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்துள்ள தமிழ் நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் பற்றிய மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன்,

[திரு. பு. வெங்கடசுப்பிரமணியம்] [1981 ஏப்ரல் 30

1932 ஆம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்களால் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் விற்பனை வரிச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றைக்கு ஒரு ரூபாய்க்கு ½ காசு என்று இருந்த வரி இன்றைக்குக் காலத்தின் கட்டாயத்திற்கு ஏற்ப மாற்றங்கள், திருத்தங்கள் ஏற்பட்டு, அரசின் முக்கிய வருவாயாக இது திகழ்கிறது. பெரும்பாலான மக்களின் பேராதரவைப் பெற்று இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் வணிகப் பெருமக்களின் வாட்டம் நீங்கி இருப்பதனை யாரும் மறுக்க முடியாது. வணிக வரி வசூலில் இருந்த தேக்க நிலை மாறி அதில் ஒரு புதுவேகம் ஏற்படவும், ஊழல்கள் ஒழியவும், பிறரால் நேரும் பெருந்தொல்லைகளிலிருந்து வணிகர்கள் விடுபடவும் பல்வேறு ஏற்பாடுகளை இந்த அரசு செய்து இருக்கிறது. லாப மதிப்பீடு, வரிவிதிப்பு மற்றும் அப்பீல் செய்வது தொடர்பானவற்றை ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டது [illegible].

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், புதிய வருவாய்க் கோட்டங்களை அமைப்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு வட்ட அலுவலகங்கள் அமைப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். தற்போது ஒவ்வொரு வரி விதிப்பு வட்டத்திற்கு—ஜோனல் கலெக்ஷன் பிரிவில்—போதுமான அலுவலர்கள் இல்லை. அவர்களே வரி விதிப்பும், வரி வசூலும் செய்ய வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு வேலை பளு அதிகமாக இருப்பதால், இரண்டு பணிகளையும் அவர்களால் சரியாக கவனிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, வரி விதிப்பு, வரி வசூல் என இரண்டு பிரிவாகப் பிரித்து, தேவையான அலுவலர்களை நியமித்தால் நல்லது என அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இதனால் பதுக்கல் வரி ஏய்ப்பு போன்றவற்றைக் கண்டுபிடித்து அரசின் வருமானம் பெருக வாய்ப்பு இருக்கிறது. மேலும் மற்ற மாகாணங்களில் உள்ளவர்கள் நமது பகுதியில் வியாபாரம் செய்ததினால் ஏற்பட்டுள்ள வரி பாக்கியை வசூலிக்கத் தனியாக ஒரு பிரிவினை ஏற்படுத்தி அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியமான அதிகாரங்களை வழங்கினால் நல்லது. இதனால் நமது மாகாணத்தில் வியாபாரத்தை நடத்தி வரி கட்டாமல் சென்றுவிட்டதினால் நமது அரசுக்கு [illegible] வசூலாக வேண்டிய வரி பாக்கியை வசூலிக்க முடியாமல் [illegible] இருப்பதாக அறிகிறேன். விற்பனை வரித் துறை இதிலே தனிக்கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் இதற்காக அலுவலர்களை நியமித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் நல்லது என [illegible].



1981 ஏப்ரல் 30] [திரு. பு. வெங்கடசுப்பிரமணியம்]

விற்பனை வரி பற்றிய கைவார் அறிக்கை பரிந்துரைகள் அரசு ஏற்று இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

வியாபாரிகள் பதிவு செய்யும்போது, விண்ணப்ப மனுவில் முறையான கட்டணம் வசூலித்துக்கொள்ளப்பட்டு, தற்போது பதிவு செய்யப்படுகிறது. இந்தப் படிவத்தில் இந்த வியாபாரியின் போட்டோக்களையோ அல்லது பங்குதாரர்களின் போட்டோக்களையோ வைத்து பதிவு செய்தால் இவ்வியாபாரிகள் [illegible] வரி பாக்கி [illegible] விட்டு [illegible] அல்லது சொந்தக்காரர் மீது வியாபாரத்தைத் தொடர முடியாது. இப்படி செய்தால் அவர்கள் வியாபாரிகளிடத்தில் வரி ஏய்ப்பைத் தவிர்க்கலாம்.

காஞ்சிபுரத்தில் உள்ள 'அப்பலேட் அசிஸ்டன்ட் கமிஷனர்-5. (சி.டி.) அலுவலகம் மூடப்படவிருப்பதாக கூறப்படுகிறது. பொது மக்களின் நன்மையைக் கருதியும், வியாபாரிகளின் நன்மையைக் கருதியும் இவ்வலுவலகம் காஞ்சிபுரத்தில் தொடர்ந்து பணியாற்ற நடவடிக்கை எடுத்துக்கொடுத்து உதவும்படி இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களையும் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரித்துறை வருவாய் அதிகமாக கிடைக்க எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறேன். வணிக வரித்துறை அலுவலக கட்டடத் திட்டங்களையும் அலுவலர் குடியிருப்புத் திட்டங்களையும் வரவேற்கிறேன்.

தமிழ்நாடு விற்பனை வரி ஆலோசனைக் குழு, மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழு போன்ற அமைப்புகளை அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறேன். வணிகர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு வணிகர் நல ஆலோசனைக் குழு அமைக்க விரும்புவதையும் வரவேற்கிறேன்.

தமிழ்நாடு விற்பனை வரிக் குழுவின் (கைவார் குழு) அறிக்கையினை அரசு ஏற்றுக்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன்.

சென்னை மாநகராட்சி நிதி வசதியைப் பெருக்க விற்பனை வரி மீதான மேல்வரி 5 சதவிதத்திலிருந்து 10 சதவிதமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வரி 1-4-1981 முதல் அமுலுக்கு வருவதாகக் கருதிக்கொண்டு 10 சதவிகிதம் வரி வசூல் செய்துள்ளதாக அறிகிறேன். மானியக் கோரிக்கை இன்றுதான் வருகிறது. இந்த இடைக்காலத்தில் வியாபாரிகள் வசூலித்து

வைத்துள்ள தொகையின் நிலை என்ன? இந்த சட்டத்திற்குப் புறம்பான வரி வசூல் செய்துள்ளவர்களின்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி விலக்குகள், வரிக் குறைப்பு, புதிய சலுகைகள் பகுதிகளில் குறிக்கப்பட்டுள்ள நல்ல செய்திகளை பாராட்டுகிறேன்.

மிதி வண்டிகள், ரிக்‌ஷா வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள் போன்றவற்றிற்கு வரிகள் குறைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். முடிந்தால் இந்த ஏழைகளின் வாகனங்களுக்கு வரிகளை ரத்து செய்து கொடுத்து, உதவ வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணெண்ணெயின் விற்பனை வரி 8½ சதவிகிதத்திலிருந்து 8 சதவிதமாக குறைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். நியூஸ் பிரின்ட் வரிவிதமான 8 சதவிதத்தை 4 சதவிதமாகக் குறைத்துள்ளதை வரவேற்கிறேன்.

அடுத்து, கேளிக்கை வரிச் சட்டத்தைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு யார் மேலோ உள்ள கோபத்தின் காரணமாக 'ஷோ டாக்ஸ்' ரூ. 10-லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது. இதனால் இத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இத்துறையைச் சார்ந்த பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழந்தார்கள். இச் சங்கடமான காலகட்டத்தில்தான் நம்முடைய புரட்சித் தலைவரவர்கள், 26-10-1977 அன்று 'கம்பவுண்டிங் சிஸ்டம் ஆஃப் என்டர்டேயின்மெண்ட் டாக்ஸ்' வரிமுறையை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். இந்த வரி முறை காரணமாக 1,400 என்று இருந்த திரை அரங்குகளின் எண்ணிக்கை இன்று 1,870 என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. இதன் மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் முறையாகக் கிடைத்துள்ளது. இந்த கேளிக்கை வரி வசூல் 1975-76-ல் 17.48 கோடி ரூபாய். 1976-77-ல் கேளிக்கை வரி வசூல் 21.27 கோடி ரூபாய். 1977-78-ல் கேளிக்கை வரி வசூல் 20.81 கோடி ரூபாய். 1978-79ல் கேளிக்கை வரி வசூல் 23.79 கோடி ரூபாய். 1979-80ல் கேளிக்கை வரி வசூல் 26.21 கோடி ரூபாய். 1980-81ல் கேளிக்கை வரி வசூல் 28.63 கோடி ரூபாய். 1981-82ல் கேளிக்கை வரி தோராயமாக 31.90 கோடி ரூபாய். வசூலாக இருக்கிறது. இதன் மூலம் அரசுக்கு வரவேண்டிய வருவாய் நியாயமான அளவில் பெருகிவருகிறது என்பது தெரியும்.

இந்த நிலையில் தமிழக முதல்வர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் சினிமா சட்டத்தை அமுல்படுத்தும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்



அவர்களும் 'கம்பவுண்டிங் சிஸ்டம் ஆஃப் என்டர்டேயின்மெண்ட் டாக்ஸை' முதல் கிரேடு நகரங்களுக்கும் மற்றுமுள்ள டவுன்சிப் நகரங்களுக்கும் விரிவுபடுத்தும்படி விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த 'கம்பவுண்டிங் சிஸ்டம் ஆஃப் என்டர்டேயின்மெண்ட் டாக்ஸ்' இல்லாத காஞ்சி போன்ற நகரங்கள் அதன் அருகில் உள்ள கம்பவுண்டிங் டாக்ஸ் வரி முறையில் உள்ள நத்தம்பேட்டை, ஓரிகை, சிறு காவேரிபாக்கம், வெள்ளமேட்டு போன்ற பகுதிகளில் உள்ள திரையரங்குகளோடு போட்டி போட முடியவில்லை. இதனால் காஞ்சிபுரம் நகராட்சிக்கு வருமானம் குறைந்து வருகிறது. மேலும் கம்பவுண்டிங் டாக்ஸ் உள்ள செங்கற்பட்டு நகரில் புதிய படங்கள் திரையிடப்படுகின்றன. காஞ்சிபுரத்தில் இப்போது இவ்வரி விதிப்பின் காரணமாக புதிய படங்கள் திரையிட முடியவில்லை.

சுருங்கச் சொன்னால் இந்த 'கம்பவுண்டிங் சிஸ்டம் ஆஃப் என்டர்டேயின்மெண்ட் டாக்ஸ்' மூலம் விளைகின்ற நன்மைகள் பலபல. அதிலும் குறிப்பாக, அரசின் வருமானம் குறையவில்லை. திரையரங்க உரிமையாளர்கள் வரவேற்கின்றார்கள். கிராமங்களில் சினிமா பார்க்கும் நுழைவு கட்டணம் குறைந்திருக்கிறது.

(பிற்பகல் 12.50)

நிறைய தமிழ்ப் படங்கள் வெளி வருகின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். வரி ஏய்ப்பினால் வெளியே போய்க்கொண்டிருந்த கோடிக்கணக்கான பணம் இந்தத் துறையைச் சேர்ந்த தொழிலுக்கே பயன்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. எனவே தற்போதுள்ள காம்பவுண்டிங் சிஸ்டத்தை கிராமங்களில் வைத்திருப்பது போன்று டவுன்ஷிப்களுக்கும், நகரங்களுக்கும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலேயும் குறிப்பாக ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிப்பாலிட்டிக்கு 24 சதவிதமும், செலக்‌ஷன் கிரேட் முனிசிப்பாலிட்டிக்கு 25 சதவிதமும், ஸ்பெஷல் கிரேட் முனிசிப்பாலிட்டிகளுக்கு 26 சதவிதமும் வரி விதிக்கின்ற வகையிலே காம்பவுண்டிங் சிஸ்டத்தைத் தமிழகத்திலே நடைமுறைப்படுத்தினால் அரசுக்கும் வருவாய் கிடைக்கும். அதிகாரிகளின் துஷ்பிரயோகமும் நடக்காமல் இருக்கும். அதனால் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் வரி ஏய்ப்பு செய்கின்ற சூழ்நிலையும் குறையும். இதுபோன்ற நிலைமையை கேரள அரசு பின்பற்றி வருகின்றது. எனவே நம்முடைய தமிழக அரசும் நியாயமான வருவாய் இழப்பு இல்லாமல் இருக்கின்ற இந்த திட்டத்தை

ஏற்படுத்த வேண்டும். இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் என்ற தலைப்புக்களின் கீழ் கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவரவர்களே, கொடைக்கானலிலும், பெரியகுளத்திலும் வணிக வரி அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலே இயங்கி வருகின்றன. பெரிய குளத்தில் உள்ள கட்டிடம் மிகப் பழமையான கட்டிடம், எனவே அங்கே புதியதாக ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே கொடைக்கானல் மலைப்பகுதியிலே சிறு வியாபாரிகளால் உற்பத்தி செய்யக்கூடிய வெள்ளை வெங்காயம் என்று சொல்லக்கூடிய வெள்ளைப்பூண்டு அழுகும் காய்கறி வகையைச் சேர்ந்தது. அதை 3 மாதங்களுக்கு மேல் காப்பாற்றுவது கடினம். ட்ரைட் கார்லிக்ஸ்-க்கு வரி உண்டு என்றும் க்ரீன் கார்லிக்ஸ்-க்கு வரி இல்லை என்றும் 1960-லே போடப்பட்டது அந்த உத்தரவு. மொத்தத்திலே வெள்ளைப்பூண்டு அழுகும் காய்கறி வகையினைச் சேர்ந்ததாக இருப்பதால் ட்ரைட் கார்லிக்ஸ்-க்கும் வரி கிடையாது என்று அறிவிக்க வேண்டும். நமது அண்டை மாநிலங்களிலே இந்த கார்லிக்ஸ்-க்கு வரியே கிடையாது. அதனால் நம்முடைய மாநிலத்திலே இது சம்பந்தமாக வியாபாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே இதை மனதில் கொண்டு அந்த வெள்ளைப்பூண்டு காய்கறி வகையைச் சேர்ந்ததால், அது அழுகும் பொருள் வகையைச் சேர்ந்ததால் அதற்குரிய வரியினை நீக்க வேண்டும்.

அடுத்து ஸ்கூட்டர் போன்ற நகரும் ஊர்திகளுக்கு அடுத்துள்ள மாநிலங்களில் வரிகள் மிகவும் குறைவாக இருப்பதால் பெரும்பாலானவர்கள் அங்கே போய் ஸ்கூட்டர் மற்றும் நகரும் ஊர்திகளை வாங்கிக்கொள்கிறார்கள். எனவே நமக்கு வரவேண்டிய வருவாய் குறைகிறது. ஆகவே ஒன்று அடுத்த மாநிலங்களிலே சென்று ஸ்கூட்டர் மற்றும் நகரும் ஊர்திகளை வாங்குவதைத் தடை செய்ய வேண்டும் அல்லது அங்கே போடக்கூடிய அதே அளவுக்கு நாமும் வரியைப் போடவேண்டும். நாம் போடுகின்ற வரியினை குறைக்க வேண்டும்.



அடுத்து செயற்கை வைரங்களைப் பொறுத்தவரையில் திருச்சியிலே மிகப் பிரபலமாக செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் தொழிலிலே 25,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த செயற்கை வைரத்திற்கு கர்நாடக மாநிலத்திலே 3 சதவீதம் வரிதான் விதிக்கப்படுகின்றது. ஆனால் தமிழ்நாட்டிலே 12 சதவீதம் வரி விதிக்கப்படுகின்றது. எனவே வியாபாரிகள் கர்நாடக மாநிலத்திற்குச் சென்று செயற்கை வைரங்களை வாங்குவதால் இங்குள்ள 25,000 தொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்படுகின்றது. எனவே கர்நாடக மாநிலத்திலே விதிக்கப்படுவது போன்று 3 சதவீத வரியினையே தமிழகத்திலும் செயற்கை வைரங்களுக்கு விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வரியை ஏய்ப்பவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அதற்கான தனியாக ஒரு பிரிவினை ஏற்படுத்தி நல்ல முறையிலே வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து வசூலித்தாலே நமக்கு நல்ல முறையிலே வருமானம் வரும் என்று கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் தேடி, அதன்மூலம் மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு, திட்டங்களை வழங்குவதற்கான நல்ல ஒரு அமைச்சகத்தின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு பெற்றமைக்கு, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனுடைய பொறுப்பிலே இருக்கிற, மாண்புமிகு அமைச்சர் பெருமைக்குரிய திருமிகு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் பல்வேறு சங்கங்களும், அமைப்புகளும் கொடுத்த மனுக்களை எல்லாம் ஆழமாக பரிசீலித்து, சிலவற்றிற்கு சாதகமான முடிவுகளை அறிவித்திருப்பதை கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த வகையிலே, அப்பளம், சேமியா, பேக்கரி போன்ற பொருள்களுக்கெல்லாம் வரி விலக்கு அளித்துள்ளார்கள். இவைகளை பார்க்கிறபோது, மனித உழைப்பால் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு எல்லாம் இந்த அரசாங்கம் ஊக்கம் கொடுக்க முனைந்திருப்பது தெளிவாக தெரிகிறது. அப்படிப் பார்க்கிறபோது, ஒரு 50,000 தொழிலாளர்கள் ஈடுபடுத்தக் கூடிய ஒரு கைத்தொழில், சோப்பு தயாரிக்கும் தொழில் ஆகும். அந்த வாஷிங் சோப்பு, டிடர்ஜெண்ட் சோப்பு என்று சொல்லப்படுகிற சோப்புகளுக்கும், அத்தோடு சேர்த்து, உடலுக்கு போடுகின்ற நறுமண

[திரு. குமரிஅனந்தன்] [1981 ஏப்ரல் 30

சோப்புகளும் கையாலேயே தயாரிக்கின்ற சிறு சிறு தொழிற்சாலைகள் 400-க்கு மேலே இருக்கின்றன. இவைகளை நம்பி ஏறத்தாழ 50,000 குடும்பங்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன. அந்த 50,000 குடும்பங்களும் நம்பியிருக்கிற அந்த தொழிலுக்கு போட்டியாக இருப்பது யார் என்று பார்த்தால், பெரிய பெரிய கோடீஸ்வர முதலாளிகள தங்களுடைய தயாரிப்புகளை சந்தையிலே வைத்து, அவர்களுடைய பொருள்களுக்கு போட்டியாக வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் கோடீஸ்வரர்கள், இயந்திரங்களை வைத்து தயார் செய்கிற, மின்சாரத்தை உபயோகித்து தயார் செய்கிற, அந்த சோப்புகளுக்கு என்ன விலை போடுகிறார்கள் என்று பார்த்தால், அவர்கள் 2¼ ரூபாய்க்கு கொடுக்கிற அந்த சோப்பை, கையாலே தயார் செய்கிறவர்கள் 1¼ ரூபாய்க்கு கொடுக்கிறார்கள்.

அவர்களுக்கு கடைசி சோப்பினுடைய விலையே 2¼ ரூபாயாக இருக்கிறபோது, நம்முடைய கையாலே சோப் செய்கிற தொழிலாளர்கள், சிறு சிறு தொழிற்சாலைகளை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், ஏழை எளிய மக்கள், பாமர மக்கள் பயன்படுத்துகிற பார் சோப்புகளை 10 பைசா, 20 பைசா ஒரு துண்டு என்ற விலையில் கொடுக்கிறார்கள். ஏழை எளியவர்கள் வாங்கக் கூடிய சோப் எதுவென்றால், கையினாலே செய்து தருகிறவர்களுடையதுதான். ஆனால் அவர்கள் கூட 25 பைசாவிற்கு ஒரு அச்சு உரையை இட்டு கொடுக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையைப் பார்க்கிறபோது, சிறு மூலதனத்துடன் இந்த சோப் தொழிற்சாலைகளை தொடங்குகிறவர்கள், இன்று அதற்குரிய கெமிக்கல்ஸ் போன்றவைகள் வாங்குவதிலே 8 சதவீதம் வரிகளை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த வரிகள் 4 ஆண்டுக்கு முன்பு 4 சதவீதமாக இருந்தது, இப்பொழுது 8 சதவீதமாக ஆகியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 50,000 தொழிலாளர்களுக்கு இதில் வேலை இருக்கிற காரணத்தாலே இவைகளைக் குறிப்பிடுகிறேன். சிலிகாட் 4 ஆண்டுகளுக்கு முன்பு 50 பைசாவாக இருந்தது, இப்போது 1.50 பைசாவாக ஆகியிருக்கிறது. வரி 4 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக ஆகியிருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு முன்பு காஸ்டிக் சோடாவின் விலை 2.60 பைசாவாக இருந்தது, இன்று 6 ரூபாயாக ஆகி, வரி 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

4 ஆண்டுகளுக்கு முன்பு வாஷிங்சோடா 1.20 பைசாவாக இருந்தது, இன்று 3 ரூபாயாக ஆகியிருக்கிறது. வரி 4 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக ஆகியிருக்கிறது. இவைகளைப் பார்க்கின்றபோது, வரிகளும் அதிகப்பட்டு,



1981 ஏப்ரல் 30] [திரு. குமரி அனந்தன்]

விலைகளும் அதிகப்பட்டு, போட்டியும் பெரிய முதலாளிகளிடம் இருந்து அதிகமாக வருகின்ற நேரத்திலே இந்த வாஷிங் சோப்பையும், டிடர்ஜென்ட் சோப்பையும் தயார் செய்கிறவர்களுக்கு, அந்த வரிகளில் இருந்து விலக்கு அளித்து, அந்த 50,000 குடும்பங்களை பாதுகாக்கவேண்டும். அந்த சிறு தொழில்களுக்கு ஊக்கம் ஊட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்றுதான், இங்கே பார்க்கிறபோது, மாட்டுத் தீவனத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் அரசாங்கத்திற்கு இருந்துக் கொண்டிருக்கிறது. வறட்சியான நிலையில் போதுமான மின்சக்தி இல்லாத போது, மாடுகளைப் போன்ற மிருகங்களைத்தான் சக்திக்காக பயன்படுத்த வேண்டிய நிலையிலே மனிதன் இருக்கிறான். மனிதன் வேலைக்கும், பாலுக்கும் நம்பி இருப்பது மாடு. அந்த மாடுகளுக்கு வேண்டிய தீவனமாகிய சின்ன சின்ன பொருள்களுக்கும் பருத்திப் பொட்டு, பிச்சிக்கிழங்கு, டோப்பியாகா போன்ற பொருள்களுக்குகூட வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டு, ஒட்டு மொத்தமாக வறட்சி நிலவுகிற இந்த நேரத்தில், இந்த வறட்சி காலத்தில், கால்நடை இனங்களை வளர்ப்பதற்கும், அதனை நம்பியிருக்கிற பால்காரர்கள், உழவர்கள் போன்றவர்களுக்கு வாழ்வு அளிக்கவும் உதவியவர்கள் ஆவீர்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலத்தான் சிறு சிறு கான்வென்டுகளிலே கூட, அனாதை ஆஸ்ரமங்களிலே கூட மெழுகு வர்த்தியை செய்து விற்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அது வாழ்வைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு 8 சதவீதமாக இருந்த வரியை நீங்கள் குறைத்திருப்பதும்—பலமுனையாக இருந்த வரியை ஒரு முனையாக கொண்டு வந்திருப்பதும், பூட்டு, சீப்பு, பால்பாயிண்ட் பேனா போன்றவைகளுக்கு, நோட்டு புத்தகங்கள் போன்றவைகளுக்கு நீங்கள் ஒரு முனை வரியைக் கொண்டு வந்திருப்பதும், உண்மையிலேயே, பாராட்டத்தக்கதாகும்.

ஏனென்றால், பல வணிக சங்கங்களிலே நீங்கள் பேசியதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் மனு கொடுப்பதையும் நான் கண்டிருக்கிறேன். நீங்கள் அவைகளையெல்லாம் வெறும் தாள்—மையான மனுவாகக் கருதாமல், உண்மையிலேயே தாழ்மையான மனுக்கள் என்று நினைத்து, அவர்களுக்கெல்லாம் சலுகை அளித்தது குறித்து நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 1.00)

இந்த மெழுகுவர்த்தியையும் அதில் சேர்த்துக்கொள்வார்களேயானால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1981 ஏப்ரல் 30

அடுத்தபடியாக, அனைத்துத் துறையிலும் பலமுனை விற்பனை வரி என்று சொல்வதை ஒருமுனை விற்பனை வரி என்றாக்க வேண்டும் என்று நீண்டநாள் கோரிக்கையை வணிகர்கள் விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வெல்லத்திற்கு ஒருமுனை விற்பனை வரி இருந்தது, அதை பல்முனை விற்பனை வரியின்கீழ் நாம் கொண்டு வந்திருக்கிறோம். மீண்டும் அதை ஒருமுனை விற்பனைவரியின்கீழ் கொண்டுவருவது நல்லது. ஏனென்றால் வரி என்பது சிலரிடமிருந்து எடுத்து பலருக்குக் கொடுப்பதாகும், பலரின் நன்மைக்கு பயன்படுத்துகிற ஒன்றாகும். அப்படி சிலரிடமிருந்து எடுப்பதில் எவ்வளவு செலவாகிறது என்று பார்த்தால் வசூல் செய்வதில் 60 சதவிகிதம் போய்விடுகிறது. அதை பராமரிப்பதற்காகவும், நிர்வகிப்பதற்காகவும் வசூலில் 60 சதவிகிதம் போய்விடுகிறது. மீதமுள்ள 40 சதவிகிதம்தான் பொது மக்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த 40 சதவிகிதம் பொதுமக்கள் அனைவருக்கும் நலன் பயக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் செய்கிறோம். ஆனால் எல்லா மக்களும் பயன்படுத்துகிற ஒரு பொருள் இருக்குமானால், 100 சதவிகிதம் மக்களும் பயன்படுத்துகிற பொருள்கள் பருப்பு, எண்ணெய், புளி போன்றவையாகும். அதற்கு வரி போட்டு அந்த வரியை வாங்கி பிறகு மக்களுக்கு மீண்டும் அந்தத் தொகையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக எல்லா மக்களும், 100 சதவிகிதம் மக்களும் பயன்படுத்துகிற பொருள்களுக்கு வரி விலக்கு அளித்துவிடலாமே என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி அனைத்துப் பொருள்களுக்கும் வரி விலக்கு அளிக்கமுடியவில்லை என்றாலும் சில பொருள்களுக்காவது வரி விலக்கு கொடுத்துவிட்டு மற்றவைகளை பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரிக்கு கொண்டுவரலாமா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த பலமுனை வரியில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை பல அமைப்புகள் மனுக்கள் மூலம் மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். ஒரு சிறிய சான்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று ஒரு மூட்டை எள் வாங்கவேண்டும் என்றால் ரூ. 500 கொடுக்கிறார். அதற்கு பர்சேஸ் டாக்ஸ் 3 சதவிகிதம், ரூ. 15 ஆகிறது. அதை எண்ணெய்யாக எடுத்தால் ரூ. 435 ஆகிறது, வரி 4 சதவிகிதம், ரூ. 17.40 ஆகிறது. அதிலிருந்து வரும் பிண்ணாக்கு மதிப்பு ரூ. 105, வரி 3½ சதவிகிதம் போட்டால் ரூ. 3.67 ஆகிறது. அடிஷனல் சேல்ஸ்டாக்ஸ் 0.7 சதவிகிதம் போடும்போது ரூ. 7.28 ஆகிறது. ஆக மொத்தம், சர்சார்ஜ் 5 சதவிகிதம் சேர்த்து ரூ. 45.15 ஆகிறது. ஆகவே ஒரு மூட்டைக்கு ரூ. 45.15 வரி கொடுக்க வேண்டியிருக்கிறது, பலமுனை வரி காரணமாக. ஒரு லாரியில் 120 மூட்டைகள் வரும்போது ஒரு மூட்டைக்கு ரூ. 45.15 என்று கணக்குப்படி பார்த்தால் ரூ. 5,418 அரசுக்கு கொடுக்க



1981 ஏப்ரல் 30] [திரு. குமரி அனந்தன்]

வேண்டியிருக்கிறது. இந்த அரசுக்குக் கொடுப்பதை வரவேற்கிறேன். அரசுக்குத் கொடுத்தால் அது மக்களுக்குத்தான் கிடைக்கும், இந்த அமைச்சரவையும் அரசும் எதை எடுத்தாலும் நிச்சயமாக அதை ஏழை மக்களுக்குத்தான் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு. ஆனால் ஆந்திராவிலிருந்து வரும் லாரிகள், கர்நாடகா குல்பர்காவிலிருந்து வரும் லாரிகள் வழியிலுள்ள சோதனைச் சாவடிகளில் நல்ல அதிகாரியில்லாமல் தீய நோக்கம் கொண்ட ஒரு அதிகாரி இருந்தால் இந்த ரூ. 5,418 நமக்குக் கிடைக்கும் வருவாய் கிடைப்பதற்குப் பதிலாக ஏதோ ரூ. 500, ரூ. 1,000 வாங்கிக்கொண்டு விட்டுவிடுவதாக இருந்தால் அந்த வியாபாரிகளுக்கு ரூ. 5,418 லாபம் கிடைத்துவிடும். இதனால் நல்ல வணிகர்கள்கூட ஏமாற்றுகிற வணிகர்களாக ஆக இது ஒரு காரணமாகும். ஆகவேதான் நாங்கள் அடிக்கடி சொல்லி வருகிறோம். அரசுக்கு வரி கட்டுவது எப்படி இருக்கவேண்டுமென்று சொன்னால், அதிகாரிகளைச் சரிப்படுத்துவதைவிட அரசுக்கு வரி கட்டுவது குறைவு அல்லது எளிது என்ற நிலை ஏற்படுமானால் நிச்சயமாக வணிகர்கள்—வரி கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இல்லை என்றால் வணிகர் இந்தத் துறையிலிருந்து விரட்டியடிக்கப்படும் நிலை வந்துவிடும். அவர்கள் கணக்கில் காட்டாமல் இருப்பார்கள். இன்கம் டாக்ஸ் இல்லை என்ற நிலை வரும். அந்தப் பணம் கறுப்புப்பணமாக ஆகிவிடுகிறது. எனவே வணிகர்கள் அரசை ஏமாற்றாமல் இருக்க பலமுனையை தவிர்த்து ஒருமுனை வரியாக்கி வரியையும் குறைந்த அளவில் நிர்ணயிக்க வேண்டும். வரியை ஏமாற்றினால் அதிக லாபம் கிடைக்காத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும், வரியை ஏமாற்றினாலும் நமக்கு இலாபம் இருக்காது என்ற அளவில் வரியைக் குறைக்க வேண்டும். ஒருமுனை விற்பனை வரி என்று போட்டால்—எல்லா வணிகர்களும் மகிழ்ச்சியோடு நாம் நம் அரசுக்குக் கொடுக்கிறோம் என்ற மன நிறைவை எய்துகிற சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த அரசை கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ், வியாபாரிகளாக பதிவு செய்து கொள்ள கட்டணம் வைத்திருக்கிறோம், கட்டணம் ரூ. 10. ஆனால் பத்து ரூபாய் கொடுத்துவிட்டு பதிவு செய்துகொண்டுவிட முடியுமா என்று பார்த்தால் முடியாது. இதில் ஒரு மாமூல் வைத்திருப்பதாக தகவல் வந்துகொண்டிருக்கிறது. நம் அமைச்சர் அவர்கள் எதை எடுத்தாலும் கூர்ந்து கவனிக்கக் கூடிய பழக்கமுள்ளவர்கள். அவர்கள் இதுபற்றிய தகவல்களைப் பெற்று தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1981 ஏப்ரல் 30

பல வியாபாரிகள் தமிழ் மட்டுமே தெரிந்தவர்கள். அங்கே இருக்கின்ற படிவங்கள் எல்லாம் ஆங்கிலத்திலே இருக்கின்ற சூழ்நிலை இருப்பதாக அறிகிறேன்——அவைகளையெல்லாம் தமிழிலே மாற்றி தமிழ் பாரங்கள் என்று சொல்கிற அந்த படிவங்களைக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

அதுமட்டுமல்ல. அடிஷனல் டாக்ஸ் என்று டாக்ஸ் போட்டிருக்கிறோமே அதாவது வரிக்கு மேல், மேல் வரியாக போடப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் பொதுமக்களிடமிருந்து வாங்கக் கூடாது, அவர்கள் கையிலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், வியாபாரிகள் அதை எப்படியோ மறைமுகமாக மக்களிடமிருந்து வசூலித்துவிடுகிறார்கள். அப்படி பொது மக்களிடமிருந்து வசூலிக்கின்ற காரணத்தினால், விலைவாசிதான் ஏறிக்கொண்டு போகிறது. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்னைபற்றி நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், கேளிக்கை வரியைப் பற்றிச் சொன்னார்கள். அந்த வரியினுடைய வருமானத்தை இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னால் மிக புத்திசாலித்தனமாக, ஒரு மொத்தத் தொகையாக மற்றவர்கள் ஏமாற்றுவதற்கு இடமில்லாமல், அதிக வரிகள் புகுந்து சங்கடங்களையும், சிரமங்களையும் ஏற்படுத்தாத வண்ணம், லஞ்ச லாவண்யங்களை ஒழித்து, இப்போது நல்ல முறையிலே, அதிக வருவாய் வருகின்ற வகையிலே, ஏன்பு 20 கோடிக்கு மேல் வந்தது, இப்போது 30 கோடிக்கு மேல் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், 1,700 தியேட்டர்கள் இருக்கின்ற நேரத்திலே 1,400 தியேட்டர்களிலே இவ்வளவு வருமானம் வருகின்றது என்று சொன்னால், மொத்தம் இருக்கின்ற, நகரத்திலே இருக்கின்ற தியேட்டர்களையும் இந்த வரவுவளைவுக்குள் கொண்டு வந்தால், இந்த வசதிக்குள் கொண்டு வந்தால், இந்த முறைக்குள் கொண்டு வந்தால், இன்னும் அதிகமாகக் கிடைக்குமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம் நண்பர்கள் பலர் படம் எடுக்கிறார்கள். அப்படி படம் எடுக்கின்ற நேரத்திலே அவர்கள் படுகின்ற துன்பம் எல்லாம் நமக்குத் தெரிகிறது. ஏறத்தாழ கறுப்பு-வெள்ளையிலே படம் எடுத்தவர்கள் 100 படங்கள் வரைக்கும் தொடங்கிவிட்டு, இடையிலே நின்று கொண்டிருப்பதாக எனக்குத் தெரிந்தவரைக்கும் சொல்வேன். அதிலே 30, 40 படங்கள் தணிக்கைக்குச் சென்றுவிட்டுவந்து, வெளியே அதை வாங்குவதற்கு ஆள் இல்லாத காரணத்தினால், அப்படியே கிடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்



1981 ஏப்ரல் 30] [திரு. குமரி அனந்தன்]

அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன். இந்தப் படங்கள் எல்லாம் முடங்கிக் கிடக்கின்ற காரணத்தினால், ஏறத்தாழ 3 கோடி அல்லது 4 கோடி ரூபாய் முடங்கிக் கிடக்கின்றது ; 60, 70 முதலாளிகள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ; அதிலே பணியாற்றுகின்றவர்கள் சம்பளம் வாங்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு வழிவகை செய்ய முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்மையிலே, 4 ஆம் தேதி கர்நாடக மாநிலத்திலே ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அங்கே தயாரிக்கின்ற படங்கள் எதுவாக இருந்தாலும், பிளாக் அண்டு ஒயிட்டாக இருந்தாலும், அதற்கு 50 சதவிகிதம் கேளிக்கை வரியிலிருந்து குறைத்துக் கொடுக்கிறார்கள். அங்கே அதிகமான கூட்டம் வருவதாகச் சொல்லுகிறார்கள் ; அதிக வருமானம் வருவதாகச் சொல்லுகிறார்கள். நான் இங்கே கேட்பதெல்லாம், முடங்கி வெளியே வராமல் முடமாகிக் கிடக்கின்ற படங்கள் எல்லாம் நடமாட விடுவதற்கு வசதியாக ஒரு நான்கு அல்லது ஆறு வாரங்களுக்கு, அவைகளுக்கு இந்த கேளிக்கை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்தால், இந்த முடங்கிக் கிடக்கின்ற படங்கள் எல்லாம் வெளியே வருவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும். அதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால், அது வளர்ந்து முடிந்துவிட்ட ஒரு தொழில் இந்தத் தமிழகத்திலே என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால், 1979-லே உச்ச கட்டத்திலே இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்போது சரிவு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஏனென்றால், ஒரு தமிழ்ப் படத்திற்கு, 100 படங்கள் என்றால் அதற்கு 2,400 பிரிண்டுகள் எடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு வசதி இல்லாத காரணத்தினால், வாங்குவதற்கு ஆள் இல்லாத காரணத்தினால், 1,200 பிரிண்டுகள் தான் எடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றும், சில படங்களுக்கு பத்தே பத்து பிரிண்டுகள்கூட எடுக்கப்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துப் பார்க்கின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்வேன்—இப்படி முடமாகிக் கிடக்கின்ற படங்களை வெளியே கொண்டு வருவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தாருங்கள்.

ஏழை எளிய மக்கள், வசதியற்றவர்கள், சிறு தொழில்சார்கள் கையாலே செய்யப்படுகின்ற சோப்பு, மற்றும் டிடர்ஜெண்ட் மற்றும் மாட்டுத் தீவனங்கள் மற்றும் மெழுகுவர்த்தி போன்றவைகளுக்கு வரி விலக்குத் தர வேண்டும். பல முறை வரியிலே இருந்து ஒருமுறை வரியாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒவ்வொரு துறையிலும் இருப்பவர்கள், அந்த வரியைக் கேட்கின்ற நேரத்திலே, மலரைக் கசக்கி, அத்தர் எடுப்பதைப்போல் எடுக்காமல், அப்படி எடுக்க விரும்ப மாட்டார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்—மலரிலே சென்று, தேனை அமர்ந்து, இன்பப் பாட்டுப் பாடி,

[திரு. குமரி அனந்தன்] [1981 ஏப்ரல் 30

தேனை எடுக்கின்ற வண்டுபோல் எடுக்கின்றவர்கள். ஆதலினாலே, அந்த நல் எண்ணத்தோடு, இந்தச் சலுகைகளையெல்லாம் தர வேண்டுமென்று கனிவோடு கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

* திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வை, முத்திரைத்தாள், வணிக வரி ஆகிய இந்த மூன்று மானியக் கோரிக்கைகளின் பேரிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வணிக வரியைப் பொறுத்தவரை 1979-80 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூபாய் 388.28 இலட்சம் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இந்த வணிக வரியில் ஒருசில பொருள்களுக்கு பலமுனை வரியும், ஒருசில பொருள்களுக்கு ஒருமுனை வரியும் போடப்பட்டிருக்கிறது. ஒருமுனை வரியைப் பொறுத்தவரையில், குறிப்பாக வெள்ளி நகையை எடுத்துக்கொண்டால், மைசூர், கேரளா போன்ற மாநிலங்களிலே வெள்ளியை வாங்குகின்ற இடத்தில் இரண்டு பர்சென்ட் வசூலிக்கப்பட்டு, பிறகு அதை நகையாகச் செய்து விற்கின்றபோது எந்தவிதமான வரியும்

(பிற்பகல் 1-10)

வசூலிக்கப்படுவதில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த வெள்ளி நகையாகச் செய்து சிறு குடிசைத் தொழில் போல அந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் சேலம் மாநிலங்களில் அதிகமாக அந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற ஏனைய மாவட்டங்களில் அந்த வெள்ளி நகைக்கு ஒருமுனை வரி வசூலிப்பதைப் போன்று தமிழகத்தில் இந்த வெள்ளியை வாங்கி நகையாக விற்கிறபோது முதலில் வசூலித்த அந்த வரியை நிறுத்தி குறைந்தபட்சம் இரண்டு சதவீதமாக இருப்பதை ஒரு சதவீதமாக குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அச்சடிக்கும் தொழிலுக்கு வாங்கக்கூடிய காகிதம் விலை கொடுத்து வாங்கும்போது வரி உள்பட வாங்கிக் கொள்கிறார்கள். நோட்டீசாக, வால்போஸ்டராக அடிக்கிறபோது அந்த காகிதம், மை, இதோடு அச்சுக் கூலி ஆகிய மூன்றாக சேர்ப்பதோடு இரண்டாவது முறையாக அந்த பொருளுக்கு வரி வசூல் செய்யப்படுகிறது. அந்த வரியை பரிசீலித்து நோட்டீசாக, வால்போஸ்டராக அடித்துக் கொடுக்கிறபோது அந்த நோட்டீசுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருமுனை வரியாக வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருநகர் பகுதியைப் பொறுத்தவரை ஏற்கனவே நாம் வாங்குகிற பொருளுக்கு ஐந்து சதவீதமாக இருப்பதை 10 சதவீதமாக அதிகரித்திருக்கிறார்கள். அந்த பத்து சதவீதம் என்பது சில இடங்களில் வாங்கக்கூடியவர்



1981 ஏப்ரல் 30] (திரு. தி. கா. நல்லப்பன்)

களுக்கும், இங்கே வாங்குபவர்களுக்கும் பல வித்தியாசமான நிலைமை வரும். அதை பரிசீலனை செய்து ஐந்து சதவீதமாக குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டீசலைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஏற்கனவே வரி போடப்பட்டிருக்கிறது. டீசலை வைத்து மோட்டார் ஓட்டக்கூடிய விவசாயிகள் கட்டுப்படியாகவில்லை என்று கூறிக்கொண்டிருக்கும்போது மீண்டும் 15 சதவீதம் அந்த டீசலுக்கு வரி விதிப்போமானால் ஏற்கனவே கட்டுப்படியாகாத அந்த நிலையில் விவசாயிகள் இருக்கும்போது, மீண்டும் அவர்களை சோதனைக்குள்ளாக்குகிற நிலை ஏற்படும். அதை பரிசீலனை செய்து அதிகமாக வரி விதிப்பதை அரசு குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை பொறுத்தவரை அங்கே மைதானத்தில் பந்தயம் கட்டினால வரியாக கட்ட வேண்டுமென்ற நிலையில், ரோடுகளிலிருந்து அல்லது வேறு மாதிரியாக இருந்து கொண்டு இந்த வரியை ஏய்ப்பதற்கு நிலைமைகள் இருக்கின்றன. அவைகளை அரசு ஆங்காங்கே கண்காணித்து அவர்களிடம் அதிகமாக வரி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தாற்போல் ஓட்டல்களில் ஒரு நாளைக்கு ரூபாய் 25 அல்லது 30 என்று வாங்குகிறார்கள். அவர்கள் அந்த வரியை குறைப்பதற்கு, அல்லது ஏமாற்றுவதற்கு தண்ணீருக்கு இவ்வளவு வரி, மின்சாரத்திற்கு இவ்வளவு வரி என்று குறித்து அந்த வரியை ஏய்க்கிற நிலையில் இருக்கிறார்கள். அதை அரசு கண்காணித்து அதை பில்லாகப் போட்டு அதை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்திரங்களைப் பிரித்தெழுதுகிறபோது ஏற்கெனவே சொத்துக்களைப் பிரித்து எழுதினால் முத்திரைத்தாள் 2.50-க்கு வாங்கி எழுத வேண்டுமென்ற முறை இருந்தது. இன்றைய தினம் அது 25 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது, ஏற்கெனவே நகரப்புறத்திலே 8 சதவீதமும், கிராமப்புறத்திலே 6 சதவீதமும் என்று வைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆயிரம் ரூபாய் அல்லது இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலையாக இருந்தால் அதற்கு 25 ரூபாய் என்று விதித்து இருப்பதை மறுபரிசீலனை செய்து குறைந்த பட்சம் சொத்துக்களைப் பிரித்து எழுதுவதற்கு செட்டில்மென்ட்டிற்கு இவ்வளவு என்று நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத்தாள்கள் விற்பனையாளர்களைப் பொறுத்தவரையில் பல்வேறு மாநிலங்களில் அதிகமான கமிஷன் கொடுக்கப்படுகிறது. கேரளத்திலே 100-க்கு 4½ ரூபாய் என்றும், ஆந்திராவில் 100-க்கு 3½ ரூபாய் என்றும், கர்நாடக

[திரு. தி. கா. நல்லப்பன்] [1981 ஏப்ரல் 30

மாநிலத்திலே 100-க்கு 3 ரூபாய் என்றும் கமிஷன் கொடுக்கப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில ஸ்டாம்புகளுக்கு ஒரு ரூபாயிலிருந்து 1½ ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது. முத்திரைத்தாள்களுக்கு ரூ. 1.25 காசுகள் என்ற நிலையில் கமிஷன் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி அவர்களுக்கு 3 ரூபாய் என்ற நிலைமையிலே கொடுக்க முன்வர வேண்டும்.

முத்திரைத்தாள்களைப் பொறுத்தவரையில் சில இடங்களிலே கிராமத்திற்குத் தேவையான அளவுக்கு கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஒருவர் 5 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் அல்லது 3 ஆயிரம் என்கின்ற அளவிலே ஓர் நாளில் முத்திரைத்தாள் வாங்க வேண்டுமென்றால் வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே குறைந்தபட்சம் முத்திரைத்தாள்கள் விற்பனையாளர்களிடத்திலே 5 ஆயிரம் ரூபாய் அளவிற்காவது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மதுவிலக்கைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே நாம் ஏலத்தில் விட்டதில் அதிகமாக ஏலத் தொகை எடுத்ததன் காரணமாக ரூபாய் 3,74,83,000 நிலுவையாக நிற்கக்கூடிய ஒரு நிலை இருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் கறாராக கண்டிப்பாக வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த விதமான சலுகையும் காட்டக் கூடாது. அடுத்து ஏலத்தில் விடுகிறபோது நிபந்தனையோடு அந்தக் கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள், பிராந்திக் கடைகள் பள்ளிக்கூடங்கள், கோயில் மற்ற பொது இடங்களுக்கு இடைஞ்சல் இல்லாத அளவுக்கு வேறு இடங்களிலே விற்பதற்குண்டான நிபந்தனையை ஏற்படுத்த வேண்டும். சாராயம், ஏனைய மது வகைகளை பாட்டில்களில் அடைத்து விற்க முடியும், ஆனால் கள்ளைப் பொறுத்தவரையில் பாட்டிலிலே அடைத்து விற்க முடியாது. அதற்கு மாற்று ஏற்பாடு செய்கிற முறையிலே நிபந்தனையோடு ஏலம் விடவேண்டும்.

கடைசியாக மரம் ஏறுகிற தொழிலாளர்களுக்கு அவர்கள் இறந்துவிட்டால் 3 ஆயிரம் நட்ட ஈடு கொடுக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. நாளைய தினம் கள்ளுக் கடைகள் ஏலத்திலே விடப்படுகிறபோது என்னதான் மரம் ஏறுகிற தொழிலாளர்களாக இருந்தாலும்கூட குடித்துவிட்டு மரம் ஏறக்கூடிய சூழ்நிலை இருக்கும். அரசு ஊழியர்களைப் போல் இல்லாவிட்டாலும்கூட பொது இன்ஷூரன்ஸ் என்ற நிலையில் லைசென்ஸ் அவர்களுக்குக் கொடுக்கிற போது இம்மாதிரியான நிலையினை ஏற்படுத்தி அவர்கள் மரம் ஏறுகின்ற தொழிலிலே அந்தத் திட்டத்தை அமல்நடத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன்.



1981 ஏப்ரல் 30]

(பிற்பகல் 1-20)

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விற்பனை வரியைப் பொறுத்த வரையிலே மாநிலத்தின் மொத்த வருவாயிலே 60 சதவீதத்தை அளிக்கின்ற இந்த வரி மாநில அரசுக்கு ரொம்பவும் முக்கியமானதாக இருக்கிறது. இது ஒரு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. (Saturation point) வந்திருக்கிறது. விற்பனை வரியைப்பற்றி அகில இந்திய அளவிலே இருக்கும் நிலைமைகளையும் இந்த அவையின் கவனத்திற்கு வைப்பதற்கு நான் விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அவையிலே இதைப் பற்றிப் பேசும்பொழுதும் சொல்லியிருக்கிறேன்.

மாநில அரசுக்கு முக்கிய வருவாயை அளிக்கின்ற வரியாக இருக்கும் இந்த விற்பனை வரியைத் தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மத்திய அரசுக்கு வந்திருக்கிறது. (Excise Duty) என்று அதற்குப் பதிலாகப் போட்டு விற்பனை வரியை மத்திய அரசே எடுத்துக்கொள்ளும் ஒரு அபாயம் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசு கூட்டிய மாநாட்டிலே இதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் மத்திய நிதியமைச்சரின் பேச்சும், சிந்தனையும் இதிலேயே குறியாக இருப்பதை நாம் எச்சரிக்கையுடன் கொண்டு, நடந்துகொள்ள வேண்டும். விற்பனை வரியைப் பொறுத்தவரையிலே இதை நாம் விட்டுக் கொடுத்து விடுவோமேயானால் மாநில அரசு தன் மிகப்பெரிய வருவாயை இழந்துவிடும். எதற்கு நிதி வேண்டுமென்றாலும் மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் பரிதாபகரமான சூழ்நிலை வரும் என்பதை மனத்திற்கொண்டு நம்முடைய அரசு இதிலே உறுதியாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனை வரி முறையிலே பல்வேறு சிக்கல்கள் நடைமுறையிலே உள்ளன. விற்பனை வரித் தொகுப்பு என்பது மூன்று தொகுப்புகளாக இருக்கின்றன. ஒருமுனை விற்பனை வரி ஒருசில பொருள்களுக்கு இருக்கின்றது; பலமுனை விற்பனை வரி இன்னும் சில பொருள்களுக்கு இருக்கிறது; இன்னும் சில பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையிலே அல்லது எந்த நிபந்தனையின் அடிப்படையிலே இவைகள் விதிக்கப்படுகின்றன என்பது தெளிவாக இல்லை. ஒருமுனை விற்பனை வரியாக இருந்தாலும் சரி, பலமுனை விற்பனை வரியாக இருந்தாலும் சரி, விற்பனை வரி விலக்கு கொடுத்தாலும் சரி இவைகளுக்கு அடிப்படையான

நிபந்தனைகள் என்னவென்பதும், அதற்கான இலக்கணம் என்னவென்பதும் இன்னமும் தெளிவாக இல்லை. இந்த விதிமுறைகளைத் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அமைச்சரவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு இடையே நடக்கக்கூடிய விற்பனை பற்றிய விதிமுறைகளும் தெளிவாக இல்லை. அதுவும் தெளிவாக்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படையில் விற்பனை வரிச் சட்டத்தை எளிதாக்குகின்ற ஒரு செயலை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குஜராத் மாநிலத்திலே ஒரு முறை இருப்பதை நான் நம்முடைய அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அங்கே ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே விற்பனை வரித் தொகை இருக்குமேயானால் அதற்குச் சுயமாக மதிப்பீடு செய்து வரி செலுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. "செல்ஃப் அசெஸ்மென்ட்" முறை குஜராத் மாநிலத்திலே இருக்கிறது. அந்த முறையை நம்முடைய தமிழகத்திலேயும் கொண்டு வர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி விதிப்புக்குள்ளான கணக்குகளை ஐந்தாண்டுகள் வரையில் வைத்திருக்க வேண்டும்; இடையிலே அரசாங்கத்திற்குச் சந்தேகம் வந்தால் மீண்டும் அந்தக் கணக்குகளைப் பரிசீலிக்கும் முறை இருக்கிறது. அதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அந்த அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டியதுதான். ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் கணக்குகளை வைத்திருப்பது என்பது சாதாரண வியாபாரிகளுக்கு ரொம்பவும் சிரமமான ஒன்று. ஆகவே, இந்தக் கால அவகாசத்தை மூன்றாண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று நான் இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், நெல்லை போன்ற பெரிய நகரங்களிலே விற்பனை வரிக்கு மேலே சர்சார்ஜ் போடப்படுகிறது. அங்கே 5 சதவீதமாக இருந்தது இன்றைக்கு 10 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது பட்சபாதமானது. இது இருக்கக்கூடாது. இதனால் நகர மக்கள் வாங்கும் பொருள்களுக்கு இயற்கையாகவே விலை உயர்ந்துவிடுகிறது. கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும் இடையே வேற்றுமை காட்டுகின்றது. எனவே, இந்த சர்சார்ஜை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது வெல்லம் காய்ச்சுவதைக் குடிசைத் தொழிலாக அவர் கருதி விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். வெல்லம் காய்ச்சுவதை விவசாயிகள் குடிசைத் தொழிலாகத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் கரும்புப் பயிரிடுகிற விவசாயிகள், ஆலைகளுக்குக் கரும்பு அளிப்பதனாலே இலாபம் இல்லையென்று சொல்லி, அவர்களே வெல்லம் காய்ச்சி விற்கக்கூடிய ஒரு நிலைமையில் அவர்களுக்கு அதிக ஆதாயம் இருந்துகொண்டிருக்கிற இந்த வேளையில், அதைக் குடிசைத் தொழிலாகக் கருதி, நம்முடைய அமைச்சர் அவர்கள் விவசாய . . . .

### 3. அறிவிப்பு.

### அவையில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்த பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று 29-4-1981 அன்று பேரவையில் நடந்த சம்பவங்களைக் குறித்து ஆளும் கட்சி தரப்பில் இருந்தும் எதிர்க்கட்சி தரப்பிலிருந்தும் புகார்க் கடிதங்கள் வந்துள்ளன. அவற்றில் கூறப்பட்டுள்ள பொருட்களைப்பற்றி ஆய்வு செய்து முடிவெடுக்க வேண்டியுள்ளதால், இதைப் பற்றி இரு தரப்பினராலும் கொடுக்கப்பட்டுள்ள கடிதங்கள் அதில் குறிப்பிடப் பட்டுள்ள சம்பவங்கள் பற்றியும் பேரவை விதி 255-ன்கீழ் எனக்குக் கொடுக்கப் பட்டுள்ள தனி அதிகாரத்தின்கீழ் இப்பிரச்னையை விசாரித்து பேரவைக்குத் தனது பரிந்துரைகளைக் கொடுக்க உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படுவதால் அவைக் குறிப்பில் குழப்பம் ஆரம்பித்த பிறகு பதிவான குறிப்புகள் அப்படியே இருக்கும் என உத்தரவிடுகிறேன்.

### 2. வரவு-செலவுத் திட்டம்—1981-82 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

திரு. ப. நெடுமாறன் : (தொடர்ச்சி) ஆகவே, வெல்லம் காய்ச்சுவதைக் குடிசைத் தொழிலாகக் கருதி, வெல்லத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் நம்முடைய அமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஏப்ரல் 30

அடுத்து, குதிரைப் பந்தய வரியைப் பற்றியும் சில வார்த்தைகளை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குதிரைப் பந்தயம் போன்ற சமூகவிரோதச் செயல்களுக்கு எதிரானவர், இந்த அரசும் எதிரானது என்பதை நான் அறிவேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குதிரைப் பந்தய மைதானத்தைக்கூட எட்டிப் பார்த்திருக்க மாட்டார். ஆனால், குதிரைப் பந்தயத்தின் மூலம், குறிப்பாக, மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த ஏராளமான குடும்பங்கள், அழிந்து கொண்டிருக்கின்றன. அதை நிறுத்த வேண்டும் அல்லது நிறுத்தாவிட்டாலும், அதன் மீதுள்ள வரிகளை இந்த அரசு உயர்த்த வேண்டும். ஏற்கெனவே 20 சதவீதமாக இருந்ததை, சென்னையிலே 25 சதவீதமாகவும், அதன் மீது 5 சதவீதம் மேல் வரியையும், இந்த அரசு போட்டிருக்கிறது. அதைப்போலவே உதகமண்டலத்திலே நடக்கக்கூடிய குதிரைப் பந்தயத்திற்கு 20 சதவீத வரியும் மேல் வரி 5 சதவீதமாகவும் இந்த அரசு உயர்த்தியிருக்கிறது. அது போதாது. குதிரைப் பந்தய வரியை 100 சதவீதமாக உயர்த்தி விடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தை வற்புறுத்த விரும்புகிறேன். இது அரசாங்கத்தின் வருமானத்தை உயர்த்துவதோடு மட்டுமல்ல, இதன்மூலம் சாதாரண மக்கள் இந்தக் குதிரைப் பந்தயத்திலிருந்து விடுபடுவதற்கும் வழி ஏற்படும். ஆகவே, 25 சதவீதமாக இருக்கக்கூடிய இந்த வரியை 100 சதவீதமாக உயர்த்துவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

(துணைத் தலைவர் தலைமை)

இங்கே முன்னால் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் விற்பனை வரியைப்பற்றி விரிவாகப் பேசி இருக்கிறார். அவர் கருத்துக்களை நான் வரவேற்கிறேன். ஆகவே நான் அடுத்த விஷயத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.

இங்கே திரை அரங்குகளுக்கு கம்பவுண்டிங் வரி முறையை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அது கடந்த ஓராண்டு காலமாக சிறந்த முறையிலே செயல்பட்டு வெற்றி அளித்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அது முதல் கிரேட் நகரங்களுக்கும் ஸ்பெஷல் கிரேட் நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். ஏற்கனவே கம்பவுண்டிங் வரி முறையில் 1,300 திரைப்படக் கொட்டகைகள் வருகின்றன. முதல் கிரேட் நகரங்களிலே வரக்கூடிய திரை அரங்குகள் 350; ஸ்பெஷல் கிரேட் அரங்குகளிலே நகரங்களிலே 220 திரை அரங்குகள் இருக்கின்றன. ஆகவே 570 திரை அரங்குகளுக்கும் நீங்கள் கம்பவுண்டிங் முறை கொண்டு வருவதாலே நம்முடைய வருமானம் பெருகும். அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 30] [திரு. ப. நெடுமாறன்]

இறுதியாக, ஸ்டாம்ப் டியூட்டிபற்றியும் சில வார்த்தைகளை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பத்திரம் பதிவு செய்வதிலே அல்லது சொத்துக்கள் பரிமாற்றங்களிலே பல்வேறு வகையான நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. சாதாரண மக்கள் அதனாலே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த முறையை அடியோடு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 1-30)

மலேசியாவில் ஒரு சிறந்த முறை அமலாக்கப்பட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மலேசியாவிலே வண்டி வாகனங்களுக்கு இருக்கக் கூடிய ஆர்.சி. புத்தகத்தைப்போல, அங்கே அச்சடிக்கப்பட்ட பாரங்கள், படிவங்கள் உள்ளன. ஒரு சொத்தை ஒருவர் விற்கிறார், இன்னொருவர் வாங்குகிறார் என்றால், அந்த அச்சடித்த படிவத்திலே அதை பூர்த்தி பண்ண வேண்டும். அப்படி பூர்த்தி பண்ணி அதற்குண்டான வரியைக் கொடுத்து சம்பந்தப்பட்ட அலுவலகத்திலே அதைப் பதிவு செய்து உடனடியாக ஒரு பிரதியை அவர்கள் வைத்துக்கொள்ளுகிறார்கள். இன்னொரு படிவத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் கொடுக்கிறார்கள். பின்னாலே மீண்டும் ஒருமுறை இன்னொருவருக்கு அதே சொத்தை விற்க வேண்டும் என்றால் அதே படிவத்தில் மீண்டும் குறிப்பிடுகிறார்கள். இன்னார் சொத்து இன்னாருக்கு இன்ன விலைக்கு விற்கப்பட்டு, மாற்றப்பட்டது என்றும், அதற்குண்டான செலவை வாங்கிக்கொள்கிறார்கள். எத்தனை முறை வேண்டுமானாலும் அந்த ஒரே படிவத்தைப் பயன்படுத்தலாம். வேண்டுமானால் அந்த முறை என்ன என்பதைப்பற்றி ஆராய்ந்து நம்முடைய நாட்டின் சூழ்நிலைக் கேற்ப இங்கே அமலுக்குக் கொண்டு வரவேண்டும், அதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை, ஆயத் தீர்வை இவைகளின் மீது இங்கே எதிர்க் கட்சிகள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை வைக்க முன் வருகிறேன்.

இன்றைய தினம் வணிக வரித் துறை தமிழகத்திற்கும் தமிழக அரசுக்கும் கிடைத்திருக்கின்ற ஒரு காமதேனு என்று சொல்லலாம். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொல்லி இருப்பார்கள் என்று கருதுகிறேன். தமிழகத்திலே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்திலே மதுவிலக்கை அமல் செய்ய வேண்டும் என்ற நிலை வந்த நேரத்தில்

தான், அப்போது ரூபாய்க்கு 192 காசுகள் இருந்தன. அதில் ஒரு காசு என்ற அன்றையதினம் அவர்கள் வணிக வரியை இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகத்தில்தான் புகுத்தினார்கள். ஆனால் அந்த வணிக வரி இன்றைக்குப் பல்வேறு மாநிலங்களில் பின்பற்றப்படுவதோடு மட்டுமல்லாமல், இந்த அரசுக்கு வருவாயைத் தர இருக்கிற நல்ல இனமாக இருந்துகொண்டு வருகிறது.

இங்கே காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் இந்த வரிசையிலேயும் மதுவிலக்கைத் தளர்த்தக்கூடாது என்று எவ்வளவு கடுமையாக நாங்கள் வாதங்களை எடுத்து வைத்தாலும்கூட, மதுவிலக்கைத் தளர்த்துவது என்ற போர்வையிலே அதை ரத்து செய்கின்ற முயற்சியிலே அரசு ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றது. எனவே இந்த அரசு எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே பல கோடிக்கணக்கான ரூபாய்களை இங்கே மதுக்கடைகளைத் திறப்பதன் மூலமாக, மதுவின் மூலமாக தமிழகத்திற்குக் கிடைக்கின்ற காரணத்தாலே ஏற்கனவே மக்களுக்கு, ஏழை, நடுத்தர மக்களுக்கு தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்ற பல்வேறு வரி விதிகளிலே சலுகைகளை அளிக்க வேண்டும் என்று அரசு வரி விகிதங்களை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று முதற்கண் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்ற நேரத்திலே ஏழை, நடுத்தர மக்கள் பயன்படுத்துகிற சைக்கிள், சைக்கிள்-ரிக்ஷாக்கள் போன்றவைகளின் பாகங்களுக்கு, குறிப்பாக சைக்கிள் டயர், டியூப் போன்ற இனங்களிலே 6 சதவீதம் என்று இருக்கிற வணிக வரியை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பில் கோரிக்கை வைத்தோம். அந்த நேரத்திலே அரசு அதனை முழுமையாக ரத்து செய்யாமல் 6 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைத்திருக்கிறது. ஆக 6 சதவிகிதத்தில் இருந்து 3 சதவிகிதம் என்பது பாதி கிணறு தாண்டிய கதையாக இருக்கிற காரணத்தினால் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு ஆதாரமாக பக்கத்திலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே சைக்கிள் பாகங்களின் மீதான வரியை முழுமையாக ரத்து செய்திருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே, பீகாரிலே இந்த சைக்கிள் பாகங்களுக்கு முழுமையாக வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவு சொல்வானேன், அண்டை மாநிலமாக இருக்கின்ற பாண்டிச்சேரியில் சைக்கிள் பாகங்களுக்கு வரியை முழுமையாக ரத்து செய்திருப்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். ஆக பல்வேறு மாநிலங்களிலே ரத்து செய்து இருக்கின்ற சூழ்நிலை [illegible] அங்கே இருக்கின்ற பொருள்களை எல்லாம் [illegible] அனுப்பி,



அதன் மூலம் தமிழகத்திலே இருக்கின்ற பணம் வெளிமாநிலங்களுக்கு போகின்ற சூழ்நிலையை உருவாக்கி இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையின் இறுதியில் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்திலே 3 சதவீதம்தானே, இது கொஞ்சம் பணம்தானே, ஏழை மக்களை வாட்டுகின்ற இந்த வரியை—மதுவிலக்கு மூலம் நிறைய வருமானம் வருகின்ற காரணத்தினாலே—ரத்து செய்கிறேன் என்று அறிவிப்பாக, மக்கள் எதிர்பார்க்கக்கூடிய ஒரு அறிவிப்பினை இன்றைக்கு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பல்வேறு இனங்களில் பலமுறை வரிகளைப் போடுவதைச் சுட்டிக்காட்டி, அவற்றை ஒருமுனை வரியாக மாற்றவேண்டும் என்று சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன். ஒருமுனை வரி மூலமாக அரசுக்குக் கிடைக்கும் வருமானம் மொத்த வருவாயில் 80 சதவீதம். பலமுனை வரி மூலமாகக் கிடைப்பது மீதமுள்ள 20 சதவீதம்தான். ஆகவே, பலமுனை வரி என்று இல்லாமல், எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை வரி வசூல் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதன்முதலாக விற்பனை வரி கொண்டு வந்த காலத்தில் ஒரு ரூபாய்க்கு 192 காசு என்று இருந்த நேரத்தில் 1 காசு என்று கொண்டு வந்தார்களா, ½ காசு என்று கொண்டு வந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் பேசுகிறபோது என்னுடைய நினைவில் இருந்து பேசினேன். அப்போது ½ காசுதான் இருந்து இருக்கும். தாங்கள் என்னுடைய சார்பிலே வாதாட வந்ததற்கு நன்றி. ஆகவே, ஒருமுனை வரி மூலமாக வசூல் செய்வதற்கு அரசு முயற்சிகளை இனிமேல் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக அரசுக்கு பெருத்த நஷ்டம் ஏதேனும் வந்துவிடுமோ என்கிற அச்சம் தேவையில்லை. அரசுக்கு வருகின்ற வருமானம் அதிகமான வரி விதிப்பினால் மட்டும் வந்துவிடும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. விதிக்கின்ற வரியை எந்த அளவிற்குச் சிறப்பாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கின்றோமோ அதை ஒட்டித்தான் வருமானமும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசு வரியைக் குறைக்க வேண்டும். அதாவது உணவுப் பொருள்கள்மீது விதிக்கப்படும் வரியைக் குறைக்கவேண்டும். குறிப்பாக; உளுந்து, துவரை, மொச்சை, மிளகாய் போன்ற உணவுப் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரியை ரத்து

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஏப்ரல் 30

செய்ய வேண்டும். இந்தப் பொருள்கள் எல்லாம் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகிற பொருள்கள். ஆகவே, அதை ரத்து செய்ய வேண்டும். வெங்காயம் போன்று வெள்ளைப்பூண்டும் அழுகும் பொருளாக இருப்பதால், அதற்கு வரிவிலக்கு அளிக்கவேண்டும்.

கையால் செய்யும் தீப் பெட்டிக்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கும் தீப்பெட்டிகளுக்கு மற்ற மாநிலங்களில் வரி விதிப்பதால் அங்கே அவர்களுக்கு மார்க்கெட் பிடிக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இங்கே அதற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும்.

நான் முன்பேகூட குறிப்பிட்டுள்ளேன். ஏழை மக்கள் ஓய்வு நேரங்களில் கொஞ்சம் பொழுதுபோக்குவதற்காக கிராமப்புறங்களில் சினிமாவுக்குப் போகிறார்கள். அவர்களிடமிருந்து கேளிக்கை வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால் சென்னை போன்ற பெரிய ஊரில் கிரிக்கெட் போன்ற விளையாட்டுகள் நடைபெறுகிறபோது ரூபாய் 100, ரூபாய் 500 என்கிற அளவில் டிக்கெட்டுக்களை விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட முறையில் டிக்கெட் விற்பவர்களிடமிருந்தும் இந்த மாதிரியான கேளிக்கை வரி வசூலிப்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

சென்னையைச் சுற்றியிருக்கும் ஊர்களுக்கு அதிகப்படியாக விதிக்கக் கருதியிருக்கும் வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். லக்சுரி ஓட்டல்களுக்கு வரியை அரசு கூட்டியிருக்கிறது. அதைக் கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற பகுதிகளில் இருக்கும் ஓட்டல்களுக்கு போடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மாணிக்கம்:** மத்திய அரசாங்கம் லக்சுரி ஓட்டல்களுக்கு வரி விதித்து இருப்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியுமா?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இதுபோன்ற மலைப்பகுதிகளில் ஆண்டுதோறும் மக்கள் சென்று தங்குவது இல்லை. ஆகவே, இந்த மலைப் பகுதிகளில் இருக்கும் ஓட்டல்களுக்கு இந்த வரி பொருந்தாமல் செய்ய அரசு உத்தரவிட வேண்டும். இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசின்ன வியாபாரிகளுக்கு அதிகாரிகள் அதிக தொல்லை கொடுக்கிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும்.



1981 ஏப்ரல் 30] [திரு. என். எஸ். வி. சித்தன்]

வணிக வரி ஆலோசனைக் குழு அரசு அமைத்து இருக்கிறது. அந்தக் குழு கூட்டத்தை அடிக்கடி கூட்டி, வணிகர்களுக்கும், மக்களுக்கும் இருக்கின்ற பிரச்னைகளை அரசு ஆராய்ந்து பார்த்து, அதனைத் தவிர்க்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சொத்துக்களைப் பொறுத்தவரையில், இனாமாகக் கொடுத்தாலும் சரி, பாகப் பிரிவினை செய்தாலும் சரி, அதற்கு ஸடாம்ப் டியூட்டி 2½ சதவீதம் என்பதில் இருந்து 8 சதவீதம் அளவிற்கு உயர்ந்துவிட்டது. அதையும் அரசாங்கம் மறுபரிசிலனை செய்து குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

இன்னொன்று, மதுரையில் சேதுராமன் செட்டியார் என்பவருக்கு எம்.எல். 4 மற்றும் ஆறு லைசென்ஸ்கள் பாணி எனப்படும் சர்க்கரை தயாரிக்கின்றபோது கிடைக்கின்ற கழிவுகளை வாங்குவதற்காக வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த சேதுராமன் செட்டியார் தன்னுடைய பெயரிலேயும், மகனுடைய பெயரிலேயும் மதுரையிலே வெங்கடேஸ்வரா கேட்டில் ஃபீடு என்றும், மதிசியத்தியலே நாட்டுச் செக்கு என்றும், விருதுநகரிலே இராமகிருஷ்ணா கேட்டில் ஃபீடு என்றும், காளீஸ்வரி கேட்டில் ஃபீடு என்றும் பல்வேறு பெயர்களிலே கால்நடைத் தீவனம் தயாரிப்பதாக கணக்குகளைக் காட்டி, அதிகாரிகளின் அரவணைப்பிலே வியாபாரம் நடைபெற்று வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த நபர்களுக்கு இவர்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் பெயராலே எத்தனையோ டன் பாணி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனங்கள் எத்தனை டன் மாட்டுத் தீவனம் தயாரித்திருக்கின்றன? எப்படி அவைகளை விற்றிருக்கிறார்கள்? எவ்வளவு வணிக வரி செலுத்தியிருக்கிறார்கள்? அல்லது வருமான வரி எவ்வளவு செலுத்தியிருக்கிறார்கள். மாட்டுத் தீவனம் தயாரிப்பதற்கு போதுமான இடம் இருக்கிறதா? கருவிகள் இருக்கின்றனவா? என்பன போன்றவற்றை எல்லாம் அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டும்.

எனக்கு கிடைத்த தகவல்படி இந்த சேதுராமன் செட்டியாருக்கு துணையாக இருந்த சக்தி வாய்ந்த, வீரதீர பராக்கிரமமிக்கவர் என்று சொல்லப்படும் நாவன்மை படைத்த ஒருவர் பின்னாலே இருக்கிறார். அவருடைய துணையோடுதான் இந்தமாதிரியான மோசடி வேலைகள் எல்லாம் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதன்மூலம் பல இலட்சக்கணக்கான ரூபாய் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய இந்தக் குறிப்பிலிருந்து அரசாங்கம் இதை நல்லமுறையில் விரிவான விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

[1981 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு அரசு சார்பில் மூன்று மானியக் கோரிக்கைகளை முன்மொழிந்து, அதிலே என்னுடைய கருத்துக்கள் அரசின் சார்பிலே சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே பேசிய அத்தனை பேரும் இன்றைக்கு வரி விதிப்பது என்பது நியாயம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து நான் என்ன தெரிந்து கொண்டேன் என்றால் மன்னர் ஆட்சியிலே விதிக்கப்படுகிற வரிக்கும், மக்கள் ஆட்சியிலே விதிக்கப்படுகிற வரிக்கும் இருக்கிற மாற்றங்களைப்பற்றி இங்கே இருக்கிற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மன்னர் காலத்திலே விதிக்கப்பட்ட வரி எல்லாம், அதிலே எத்தனை சதவிதம் மக்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நியதிகூட இல்லாமல் இருந்தது. அவர்களுடைய விருப்பம்போல் பயன்படுத்தலாம். ஆனால் ஜனநாயக அமைப்பில் இருக்கிற ஆட்சியில் விதிக்கப்படுகிற வரி எல்லாம் மக்களுக்குத்தான் பயன்படும். இன்றைக்கு வளர்ந்து வருகிற விஞ்ஞான உலகத்தில், வளர்ந்து வருகிற மக்களுடைய தேவைக்கு, இன்றைக்கு பொருளாதாரம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். பொருளாதாரம் முக்கிய இடத்தை வகிக்கிறது என்றால் இன்றைக்கு யார் யாரிடத்திலே எப்படி வரி வசூலிப்பது அல்லது யார் யாரிடத்திலே வரி வசூலிப்பதில்லை என்பது ஒரு முக்கியமான பிரச்சினை. அதன் பிறகு வசூல் செய்யப்படுகிற வரி எல்லாம் சிந்தாமல் சிதறாமல் அரசு கஜானாவுக்கு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல; சிந்தாமல் சிதறாமல் கஜானாவுக்கு கொண்டு வந்தால் மட்டும் போதாது; கொண்டுவந்த பணத்தை கஜானாவிலே இருக்கும்போது அதற்குத் திட்டங்களைத் தீட்டுகிறபோது, அந்தத் திட்டங்கள் மூலம் நாட்டிலே இருக்கிற ஒருசிலர் மட்டுமே பயன்களை அடையாமல் நாட்டிலே இருக்கிற பெரும்பாலானவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் எல்லாம் பயனடைகின்ற அளவுக்கு இன்றைக்கு இருக்கிற அரசு, புரட்சித் தலைவர் அரசு திட்டங்களைத் தீட்டி வைத்திருக்கிறதை, நடைமுறைகளைப் பார்த்த மாண்புமிகு உறுப்பினர்கள்தான் இன்று இந்த மானியக் கோரிக்கைகளில் பேசும்போது, "வீராவேசத்துடன் நீங்கள் இப்படியெல்லாம் வரி போட்டிருக்கிறீர்கள், இப்படி எல்லாம் வர்த்தகர்கள் கஷ்டப்படுகிறார்கள், இப்படி தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள்" என்று யாரும் சொல்லவில்லை. யாரும் அப்படிச் சொல்லாத காரணத்தால்தான் இன்றைக்கு நீங்கள் எல்லாம் இதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டிருப்பது மட்டுமல்ல, சிந்தாமல்



1981 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சிதறாமல் கஜானாவுக்கு கொண்டு வருகிற பணம் மக்களுடைய நலனுக்காக உண்மையில் நல்லமுறையில் இன்றைக்கு இருக்கிற அரசு, மக்கள் அரசு, அண்ணாவின் அரசு, புரட்சித் தலைவர் அரசு செலவழிக்கும் என்பதை மனப்பூர்வமாக நீங்கள் எல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள் என்பதற்காக முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து முத்திரைத்தாள் நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் பேசுகின்றபோது மலேசியாவைப் போல ஃபாரங்களாகத் தரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இதைப்பற்றி எல்லாம் இந்த அரசு நன்றாக ஆலோசனை செய்து எந்த அளவுக்கு சீர்திருத்தம் செய்யவேண்டுமோ அந்த அளவுக்கு சீர்திருத்தங்களைச் செய்வதற்கு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து சில உறுப்பினர்கள் பேசுகின்றபோது விரைவாக இந்த முத்திரைத்தாள் கிடைப்பதேயில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அவை விரைவிலே கிடைப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த முத்திரைத்தாள் வாங்குவதைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஒன்றை இதற்கு முன்னாலே அறிவித்து நடைமுறைப்படுத்தி இருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்கின்றபோது இதனை முற்போக்கு எண்ணம் உள்ளவர்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே இருக்கின்ற அத்தனை பேரும் முற்போக்கு எண்ணம் உடையவர்கள்தான். ஆகவே 234 சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை கண்டிப்பாக எனக்கு இருக்கின்றது. ஒருவர் தனக்கு இருக்கின்ற நிலங்களை மற்றவர்களுக்கு எழுதிக்கொடுக்கின்றபோது அதாவது அதை கிஃப்ட்டாகக் கொடுக்கின்றபோது அதிலே ஏமாற்றம் இருக்கக்கூடும். அதாவது அரசுக்கு வருகின்ற வருமானத்தைக் குறைக்கவேண்டும் என்று அந்தப் பத்திரங்களை எழுதிக்கொடுக்கின்றபோது குறைந்த செலவிலே பத்திரங்களை எழுதிக்கொடுக்கலாம் என்று இன்றைக்கு இருக்கின்றது. அதாவது செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதுகின்றபோது குறைந்த செலவிலே எழுதிக்கொடுக்கலாம் என்று இன்றைக்கு இருக்கின்றது. ஆனால் அப்படி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதுகின்றபோது இரத்த பாசம் உடையவர்களுக்கு அதாவது, இரத்த பாசம் என்றால் கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்குத் தெரியும், மகன் அல்லது மகள் அல்லது மகன் பிள்ளை பேரன் அல்லது பேத்தி, மகள் பிள்ளை பேரன் அல்லது பேத்தி ஆகியவர்களுக்கு எழுதிக்கொடுக்கின்ற போது குறைவான செலவிலே பத்திரம் எழுதிக்கொடுக்கப்படுகின்றது. ஆனால்

இரத்தபாசம் இல்லாதவர்களுக்கு அதாவது மற்றவர்களுக்கு எழுதிக் கொடுக்கின்றபோது அதற்குரிய பத்திரம் மற்ற பத்திரங்களைப் போலத்தான் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக நான் மதுவிலக்கு ஆயத்தீர்வை பற்றிப் பேச விரும்புகிறேன். இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். கள்ளச்சாராயம் தயாரித்தல், கள்ள வியாபாரம் செய்தல் போன்றவற்றைச் செய்கின்ற சமூக விரோதிகளை தடுத்து நிறுத்தி அதிலே இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் அதுபற்றிய சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டதே அல்லாமல் வேறல்ல. ஆனால் வெளியே பேசுகின்றபோது மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தவில்லை. தளர்த்தாமல் அதை இன்னும் நன்றாகத்தான் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்ட முன்வடிவைப் பார்த்தாலே தெரியும், திருத்தம் என்றுதான் போட்டிருக்கிறோம், தளர்த்தி இருக்கிறோம் என்று போடவில்லை. அந்த மதுவிலக்குச் சட்டம் 1—5—1981 முதல் அதாவது மே தினத்திலே இருந்து அமலுக்கு வருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டு விட்டன. சில தினங்களில் அந்த விதிமுறைகளும் வெளியிடப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ளுக்கடை மற்றும் சாராயக் கடைகள் ஏலத்திற்கு விடப்படும். ஆனால் இதுபற்றிய சில செய்திகள் எல்லாம் எனக்கு வந்தன, அதாவது சில இடங்களிலே கள்ளுக்கடை, சாராயக்கடை ஆகியவற்றை ஏலம் விடுகின்றபோது அங்கே பலர் கூட்டமாகக் கூடி யாராவது ஏலம் கேட்க வருவார்களேயானால் அவர்களை எல்லாம் பயமுறுத்தி ஏலம் கேட்காதே என்று சொல்லி தடுத்துவிடுவார்கள் என்ற செய்தி வந்திருக்கின்றது. இதற்கு ஒரு யோசனையை இன்றைக்கு இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. என்றைக்கு கள் கடைகளை ஏலம் விடுகிறோமோ அன்றைக்கு முதல் நாள் வரைக்கும் சீல்டு டெண்டர்கள் கோரப்படும். ஏலம் விடுவதிலே யாராவது வந்து கேட்பார்கள், தடுப்பார்கள், மறிப்பார்கள், போவார்கள், எத்தனையோ நடக்கும். அப்படியெல்லாம் செய்தாலும் பாதுகாப்பதற்கு அரசு இருக்கிறது. என்றாலும், ஏலமும் விடப்போகிறோம், சீல்டு டெண்டர்களும் கோரப் போகிறோம்.

(பிற்பகல் 1.50)

அதற்கு முதல்நாளே உரிய அதிகாரிகளிடத்திலே கவரில் எந்த விலைக்கு கள்ளுக் கடைகளை எடுக்கிறோம், அல்லது சாராயக் கடைகளை எடுக்கிறோம் என்று எழுதிக் கொடுத்துவிடலாம். அது அப்படியே இருக்கும். ஆனால்





ஏலத்திலும் விடப்படும். ஏலத்தில் விடுகிறபோது குறைத்து எடுத்துவிட்டால் என்ன செய்வது என்று, சீல்டு டெண்டரையும் பிரித்து பார்த்து, எது அதிகமாக இருக்கிறதோ அது எடுத்துக்கொள்ளப்படும். ஆனால் சீல்டு டெண்டர் என்று ஒன்று இருந்தால்தான் அவர்கள் என்ன எழுதி கொடுப்பார்கள் என்று தெரியாமலேயே, அந்தப் பகுதியில் என்ன விலைக்குப் போகுமோ அந்த விலைக்கு கொடுப்பதற்கு முன் வருவார்கள் என்று எண்ணித்தான், இந்த இரண்டு முறையையும் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் பிரித்து பார்க்கிறபோது, இரண்டையும் ஒரேநேரத்தில் பிரித்து, எது அதிகமாக இருக்கிறதோ அதை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து விற்பனை வரிகளைப்பற்றி இங்கே பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு நெடுமாறன் அவர்களும், மாண்புமிகு சித்தன் அவர்களும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். ஒரே பக்கத்தில்தான் உட்கார்ந்திருக்கிறார்கள். எதிர் எதிராக உட்காரவில்லை. ஆனால் இதிலே பேசுகிறபோது, ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அருமை சகோதரர் சித்தன் அவர்கள் சொல்கிறபோது, ஒரு வார்த்தையை சொன்னார்கள். அதாவது வடபுலம் என்ற வார்த்தையைச் சொன்னார்கள். வடபுலம் என்பது தமிழ் வார்த்தையாக இல்லாவிட்டாலும் (குறுக்கீடு) அந்த வார்த்தையை எங்கள் தலைவரில் ஒருவர் அடிக்கடி உபயோகிப்பார்கள். (குறுக்கீடு) அது யார் என்றெல்லாம் சொல்லவேண்டாம். (குறுக்கீடு) நல்ல வார்த்தைதான். ஆனால் வடபுலம் என்று சொல்கிறபோது, அந்த வடபுலத்திலேதான் காமதேனு எல்லாம் இருக்கிறது என்று முன்பே சொன்னவர்கள் நாங்கள். ஆகவே, அந்த வார்த்தையை இங்கே சொன்னவுடன், அது எனக்கு ஞாபகம் வந்தது. வேறு ஒன்றும் இல்லை . . .

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் உங்களுக்கு புரியக் கூடிய வார்த்தையாகச் சொல்லலாமே என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நன்றி. அந்த வார்த்தையை அவர்களும் சொல்லி, காமதேனு என்றும் சொன்னார்கள். காமதேனு என்று சொல்கிறபோது எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் அந்த காமதேனுவை மூன்று விதமாகப் பயன்படுத்துவார்கள். காமதேனுவை ஒருவர் பணம் கொடுத்து வாங்கிச் செல்வார். பாதகம் இல்லை. இன்னொருவர் அதை அதிகாரத்தை பயன்படுத்தி பிடித்துக் கொண்டு போவார்கள். அது ஒன்று. மற்றொன்று, திருடிக் கொண்டு போவார்கள். இதற்கு நேர்மாறாகத்தான் அருமை சகோதரர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் காமதேனுவை யாராவது

பிடித்துக்கொண்டு போவார்கள், யாராவது எடுத்துக்கொண்டு போவார்கள் என்று. நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாடாளுமன்றத்தில் இருக்கிறபோதுகூட பைனான்சியல் பவர்பற்றி சொன்னபோது — இந்த நாடு விடுதலை ஆவதற்கு முன்னாலே, 1935 ஆம் ஆண்டு புரோவின்ஷியல் ஆக்ட் என்று ஒன்று இருநதது. அந்த ஆக்டிலே பைனான்சியல் பவர் மாநிலங் களுக்கு எவ்வளவு இருக்கிறதோ, அவைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது என்பதை, நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில், பல்முறை அங்கு வாதிட்டிருக்கிறோம்.

அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்கிற போது சொன்னார்கள், இந்தக் காமதேனுவை அவர்கள் கேட்கிறார்கள். கேட்காவிட்டால் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற பயமும் இருக்கிறது என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பட்டப்பகலில் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற எண்ணமும் இருக்கிறது என்று சொன் னார்கள்.

அதைத்தான் அங்கே சொல்கிறபோது மிகக் கடுமையாகச் சொல்லியிருக் கிறோம். முதலிலே பேசுகிறபோதுகூட. Any self-respect Government cannot accept the proposal of the Central Government என்று சொன்னோம். அது இங்கேயும் சொல்லப்பட்டது. நாடாளுமன்றத்தில் சொன்ன வார்த்தைகள்தான் அது, பின்னால் சேர்க்கப்பட்டது. அதுமட்டும் அல்ல. இன்றைக்கு இருக்கிற நிலைமைகளைப் பார்க்கிறபோது, 1935 ஆம் ஆண்டு புரொவின்ஷியல் ஆக்ட்டில் என்னென்ன பவர் மாநிலங்களுக்கு இருப் பதாக இருக்கிறதோ, அதை எல்லாம் மத்திய அரசு எடுத்துக்கொண்டார்கள் என்றால், மாநில அரசுகள் எல்லாம் இன்றைக்கு, குளோரிபைடு முனிசி பாலிட்டியாக ஆகிவிடுமோ என்றும் பேசப்பட்டது. அந்த வார்த்தையைக் கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சார்பிலே அங்கே பேசியேக் கிறேன்.

"If any further inroad is made the State would be reduced to the status of local body or the mere administrative units of the Government of India."

அங்கே முதல் அமைச்சர் அவர்கள் சார்பில், இங்கே இருக்கிற நம் அவையின் சார்பிலும், மாநிலத்தின் சார்பிலும் அங்கே சொல்லப்பட்டது. அது மட்டு மல்ல. பைனான்ஷியல் பில்லில் பேசும்போது ஒருமுறை அங்கே சொல்கிற போது நம் தமிழகத்தின் சார்பில் நான் சென்றபோதெல்லாம் உங்களுக்கு



1967-க்கு முன்னால் என்றால் பெரும்பாலான மாநிலங்கள் ஒரே அரசின்கீழ் வந்தன. அப்படி ஒரே அரசின்கீழ் வருகிறபோது மத்தியிலும் மாநிலங்களி லும் இரண்டு இடங்களிலும ஆளும கட்சியாக இருக்கிறபோது பைனான்ஷியல் பவர்ஸ் எடுக்கப்பட்டது. அது யாருக்கும் சங்கடம் இல்லாமல், அது குடும்பத் திற்குள்ளேவருகிற சண்டை போல், அண்ணன் தம்பி சண்டைபோல்—ஆனால் தெரியாமல் எடுத்துக்கொள்கிறார்கள். 1967-ல் எட்டு அல்லது ஒன்பது மாநிலங்களில், காங்கிரஸ் ஆட்சி அல்லாத மாநிலங்கள் இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிறபோது நீங்கள் அந்த பைனான்ஷியல் பவர்ஸை எடுக்கிற போது இன்றைக்கு டேட்ஸ் எல்லாம் க்ளோரிபைட் முனிசிபாலிட்டிகளாக ஆகி விட்டன என்று அன்றைக்கு நான் சார்ந்திருக்கிற கட்சி சார்பில் அங்கே பேசி னேன் என்றால் அதே உணர்வுதான் இந்தப் புத்தகத்தில் இன்று அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது அவர்களிடத்தில். இதைத்தான் நாடாளுமன்றத்தில் பேசுகிறபோது சொன்னேன். முதல் அமைச்சர் அவர்கள் சார்பில் இதைப் பற்றியெல்லாம் மிக விளக்கமாக அங்கே நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

இன்று அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டியைப் பொறுத்தவரையில்,

Drugs and Medicines—7.69 crores.

Cotton—9.13 crores.

Cement—6.54 crores.

Iron in crude form, steel Ingots, and iron and steel products—11.18 crores.

Paper and Paper Boards—2.29 crores.

Petrol anl Petroleum Products 30.29 crores.

Fertilizers—5.00 crores.

இதையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் 72 கோடி ரூபாய் நீங்கள் எடுத்துக்கொள் கிறீர்கள். இதைச் சொல்வது "Acceptance of Government of India's proposal will mean that we will loose effective control over 72 or 75 crores of rupees of our State" என்று அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் இதை படித்துக் காண்பிக்க காரணம் நம் இருவருக்கும் மாறுபட்ட கருத்து—நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும், நீங்கள் சார்ந்திருக்கிற கட்சி சார்பில் மாறுபட்ட கருத்தைச் சொன்னாலும் எப்படியோ உள் உணர்வுகள், காமதேனுவை யாரும் பிடித்துக் கொண்டுபோய் விடக்கூடாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அருமை நண்பர் திரு. சித்தன் அவர்கள் வைத்திருப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. காமதேனுவை பிடித்துக்கொண்டு விட்டார்கள் என்றால் இன்றைக்கு மாநில

அரசின் வருவாய் குறைந்துவிடும். மாநிலத்தின் வருவாய் என்றால் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கினால் என்ன என்று நீங்கள் கேட்கக்கூடும். எல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டால் எப்படி பணம் வருவது? நமக்குத் தெரியும். எந்தெந்தப் பொருள்களை ஏழைகள் உபயோகப்படுத்துகிறார்கள், எந்தெந்தப் பொருள்களுக்கு வரி போடலாம், எந்தெந்தப் பொருள்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும், எந்தெந்தப் பொருள்களுக்கு வரியை எடுக்க வேண்டும் என்றெல்லாம் மாநில அரசுக்கு தெரிகிற அளவிற்கு அவர்களுக்கு இருக்க முடியாது என்பதால்தான் இந்த அரசு அதைக் கடுமையாக எதிர்க்கிறது என்பதை அருமை நண்பர் திரு. சித்தன் அவர்கள் உணர்வுகளையும், அருமை நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள் உணர்வுகளையும் மதித்து அவைகளை இந்த அரசு செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் திறமையாக இந்த நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருப்பதால், மற்ற துறைகளை நடத்துவதுபோல் நடத்திக் கொண்டிருப்பதால் சென்ற ஆண்டு வந்ததைவிட இந்த ஆண்டு அதிகமாக எங்களுக்கு வருவாய், 87 கோடி ரூபாய் அதிகமாக வந்திருக்கிறது என்ற செய்தியை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2.00)

87 கோடி வருமானம் வருவது, விலைவாசி ஏற்றத்தினாலே என்று சொல்வார்கள். விலைவாசி ஏறியிருக்கிறது. 1972-73லே, 1974லே விலைவாசி ஏறியிருக்கிறது. அன்றைக்கு இருக்கிற வருமானத்தையும் இன்றைக்கு இருக்கிற வருமானத்தையும், அதேபோன்று சென்ற ஆண்டு விகிதாசாரத்தையும், இந்த ஆண்டு விகிதாசாரத்தையும் பார்க்கிறபோது, இந்த ஆண்டு அதிகமான வருவாய் வந்திருக்கிறது. அதற்குக் காரணமாக இருந்த இந்தத் துறையைச் சார்ந்த அத்தனை அதிகாரிகளையும், அரசின் சார்பாக, தமிழகத்தின் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு தவறு செய்கிறது என்று இங்கே சொன்னார்கள். அருமைச் சகோதரர் குமரி அனந்தன் அவர்கள் சொல்கிறபோது, மலரில் மெல்ல தேனீ உட்கார்ந்து தேனை எடுப்பதுபோல், எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படித்தான் எடுக்கிறோம். உங்களுக்குத் தெரியும், இங்கே இருக்கிற கரும்பு ஆலைகள் பல வருஷங்களாக வரி செலுத்தவில்லை. அப்படி செலுத்தாது இருக்கிறபோது, அதை ஒரேயடியாக கொடுக்கமாட்டார்கள் என்று





சொல்லி, அவர்களைக் கூப்பிட்டுப் பேசி, வரி கொடுக்காமல் இருப்பதைப் பற்றிச் சொல்லி, முதலிலே 20 சதவிகிதம் கட்டுங்கள் என்று காம்ப்ரமைசுக்கு வந்து, 20 சதவிகிதம் வாங்கிய பிறகு, மறுபடியும் கூப்பிட்டுப் பேசி 5 சதவிகிதம் கொடுங்கள் என்று சொல்கிறோம். இப்படி கொடுக்காமல் இருந்ததையெல்லாம் கொடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, வரியை வசூலித்து வருவது உங்களுக்குத் தெரியும்.

சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. அதைப்பற்றி யாரும் ஒன்றும் சொல்லவில்லை. அது வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி யாரும் பேசவில்லை. ஆகவே, வேண்டுமென்று எல்லோரும் கருதுவதாக நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த ஆண்டு மட்டும் எவ்வளவு லாரிகள் சோதனையிடப் பட்டன என்று உங்களுக்குச் சொன்னால், 50 இலட்சம் லாரிகள். இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால், 49,31,885 லாரிகள் இந்த ஆண்டு சோதனைச் சாவடிகள் மூலமாக சோதனையிடப்பட்டது. அதிலே 36,000 லாரிகள் முறையாகச் சாமான்கள் கொண்டு போகவில்லை; முறையாக பில்களைக் கொண்டு போகவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சரியாகச் சொன்னால், 35,470 லாரிகள் இப்படி சென்றிருக்கின்றன. இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது

இங்கே பேசுகின்றபோது, ஒரு முனை வரி . . .

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, சோதனைச் சாவடிகளிலே ஏறக்குறைய 50 இலட்சம் லாரிகளை சோதனையிட்டதாகவும், அவைகளிலே 35,000 லாரிகள் கணக்குப்படி சாமான்கள் கொண்டு செல்லவில்லை என்றும் சொன்னார்கள். அப்படியானால், அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு என்பதைக் தெரிவித்தால், உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அதன்மூலம் ஏறக்குறைய 2 கோடி ரூபாய் அதிகமாக வருமானம் கிடைக்கக்கூடும்.

இங்கே ஒரு முனை வரி, பல முனை வரி பற்றிச் சொன்னார்கள். பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். ஒரு முனை வரி என்றால், எந்தச் சிறிய வியாபாரியானாலும், 5 ரூபாய் சாமான் வாங்கினாலும், அதற்கு பில் வைத்துக் கொள்ள வேண்டும். பலமுனை வரியென்றால் 50,000 வரை கணக்கு வைத்துக் கொள்ளத் தேவையில்லை. ஒரு இலட்சம் வரை காம்பவுண்ட் செய்து

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 ஏப்ரல் 30

தெல்லாம், இதிலே அரசுக்கு வருகின்ற நன்மை, வியாபாரிகளுக்கு வருகின்ற நன்மை என்னவென்றால், சிறிய வியாபாரிக்கு பலமுறை என்றால், லாபம் இருக்கிறது. ஆனால், அரசுக்கு வருகிற நன்மை என்னவென்றால், ஒரு முனை வரி என்றால் அந்தச் சாமானை வாங்குவதில், எங்கிருந்து வாங்கினான் என்பதில் ஏமாற்றி விட்டால், திரும்பக் கண்டுபிடிக்க முடியாது. அது மட்டுமல்ல. பல முனை வரி என்றால், ஒரு இடத்தில் கண்டு பிடித்து விட்டால், அந்தச் சாமான் எங்கே வாங்கப்பட்டது, எந்த வியாபாரியிடம் வாங்கப்பட்டது, எந்த லாரியில் கொண்டு வரப்பட்டது என்பதையெல்லாம் சங்கிலித் தொடரைப்போல் கண்டுபிடித்து விடலாம். அது மட்டுமல்ல. ஒரு முனை வரி என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு வியாபாரி என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வியாபாரி சிறிய வியாபாரி. அவன் இதற்கு வரி செலுத்தியாகிவிட்டது என்பதற்கு அத்தாட்சி வைத்துக்கொள்ள வேண்டும்; வரி கட்டிவிட்டேன் என்பதற்கு அத்தாட்சி வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வளவு சங்கடங்கள் இருப்பது மட்டுமல்ல. போகஸ் பில்கள் என்று இருப்பது உங்களுக்குத் தெரியும். சில பேர்கள் என்ன செய்வார்கள் என்றால், ரொம்ப விஷயம் தெரிந்தவர்கள், வியாபாரமே செய்யமாட்டார்கள். முதலும் வேண்டியதில்லை. அவர்களுக்கு வேண்டியது 100 அல்லது 200 ரூபாய் அவ்வளவுதான் போதும். இவர்கள் ரிஜிஸ்டர் செய்து கொள்வார்கள். பில்லை அடித்துக் கொள்வார்கள். இவர்களுக்கு அந்த இடம் தெரியாது. முகவரி தெரியாது. முகவரியை மாற்றிக் கொள்வார்கள். அவர்கள் பில்லை மட்டும்தான் விற்பார்கள். அந்த பில்லை வாங்கிக்கொள்கிற வியாபாரி வரியை செலுத்திக் கொள்வார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருப்பதால் தான் ஒரு முனை வரியாக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அருமை சகோதரர் மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்கிறபோது அரசினுடைய வருமானம் பெரும்பாலானவை ஒரு முனை வரியில்தான் வருகிறது என்று சொன்னார்கள். ஒரு முனை வரியாக்கி விட்டால் அரசுக்கோ அல்லது சிறு வியாபாரிக்கோ பாதகம் விளையுமோ என்று அஞ்சிதான் செய்யவில்லை என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். சில மாதங்களுக்கு முன்பாக கெய்வார் கமிட்டி போடப்பட்டது உங்களுக்கெல்லாம் தெரியும். மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய பரிந்துரை எவ்வளவு தெரியுமா, 116. நடவடிக்கை எடுக்கப் பட்டது எவ்வளவு தெரியுமா, 93, 116-ல் 93 என்றால் எவ்வளவு சதவீதம் என்பதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். அவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது. மீதி இருக்கிற 23-ம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதைப்போல் இங்கே பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். வரி விலக்கு செய்ய வேண்டுமென்று; வரி விலக்கு செய்ய வேண்டுமென்று சொல்கிறபோது இங்கே மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் அவர்கள் சொன்னார்கள். ஓட்டல்களிலே எல்லாம் என்ன செய்கிறார்கள், இன்றைக்கு ரூபாய் 25 என்பதற்கு மேலே வாடகை இருந்தால் ரூமுக்கு இவ்வளவு, தண்ணீருக்கு இவ்வளவு, கூட்டுவதற்கு இவ்வளவு, பெருக்குவதற்கு இவ்வளவு, எலக்ட்ரிசிட்டி சார்ஜ் இவ்வளவு, சர்வீஸ் செலவு இவ்வளவு என்று பிரித்து போட்டு வரியே இல்லாமல் ஆக்கிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உணவு விடுதிகள் என்று சொல்கிறபோது மூன்றும் அதற்கு மேலும் நட்சத்திர தகுதியுள்ள ஓட்டல்களுக்கு எல்லாம் வரி விதிக்கப்படுகிறது. மூன்றும் அதற்கு மேலும் நட்சத்திரத்திற்குக் குறைவான ஓட்டல்களுக்கு வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. வரி விலக்கு செய்யப்பட்டதாலே அரசுக்கு எவ்வளவு நஷ்டம் என்றால் 300 லட்சம் அரசுக்கு நஷ்டம். அப்பளம், சேமியா இவைகளுக்கு எல்லாம் வரி விலக்கு செய்யப்பட்டதாலே அரசுக்கு பத்து லட்சம் நஷ்டம் ஆகிறது. தயிர், வெண்ணெய் இவைகளுக்கு வரி விலக்கு செய்யப்பட்டதாலே பத்து லட்சம் நஷ்டம். பன், பொறை இவைகளுக்கு வரி விலக்கு செய்ததால் ஐந்து லட்சம் நஷ்டம். தேங்காய், அரிக்கேன் விளக்கு இவைகள் எல்லாம் பார்த்தால் 13 பொருள்களுக்கு இன்றைக்கு வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போல் கையால் செய்யப்பட்ட பேனா, நிப்பு இவைகளுக்கு எல்லாம் வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் 17 ஆயிரம் அரசுக்கு நஷ்டம். கையால் செய்யப்பட்ட பேனாக்களுக்கு 17 ஆயிரம் ரூபாய், கையால் செய்யப்பட்ட நிப்புகளுக்கு வரி விலக்கு செய்யப்பட்டதாலே அரசுக்கு ஒரு லட்சம் ரூபாய் நஷ்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது முழுவதுமாக வரி விலக்கு செய்யப்பட்டது.

வரி விலக்கு குறைக்கப்பட்டது வெல்லம், சைக்கிள் பார்ட்ஸ், பனியன், தங்கம் இப்படிப்பட்ட பொருட்களுக்கு எல்லாம்—16 பொருட்களுக்கு, பூராவும் படிக்கவில்லை—வரியைக் குறைத்திருக்கிறது இந்த அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல குதிரைப் பந்தயத்தைப் பற்றிச் சொன்னார்கள். அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் சொல்கிறபோது குதிரைப் பந்தயத்திற்குப் போனதில்லை என்று சொன்னார்கள். போவதற்கு இரண்டு வழிகள் உண்டு. பந்தயத்திற்கு போவதுண்டு. வேடிக்கை பார்ப்பதற்குப் போவதுண்டு. கடைசி நாளாக இருந்தால் 'பிரைஸ்' மாதிரி ஏதாவது கொடுப்பதற்குப் போவதுண்டு. ஆகவே அவர்கள் சொந்தமாகப் போகவில்லை

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 ஏப்ரல் 30

(பிற்பகல் 3.10)

என்று தெரிவித்தார்கள். ஆகவே, அவர்கள் மொத்தமாக சொன்னது, நன்றாக தெரிந்துதான், சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தமாகவே கூக்குரலாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். பரிசுகள் கொடுப்பதற்குக்கூட கூப்பிட்டபோது நான் போகவில்லை, பார்க்கவும் போகவில்லை, கட்டவும் போகவில்லை, பரிசு கொடுக்கவும் போகவில்லை, ஆகவே நன்றாகவே சொல்லியிருக்கிறார்கள். வரி ஏய்ப்புகள் இங்கே வருகின்றன என்று சொன்னார்கள். அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அரசு எடுத்துக்கொள்வதிலே எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இப்போதுதான் 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக ஆக்கியது. வெளியிலே உள்ளவர்களுக்கு 10 லிருந்து 25 ஆக்கியது. சென்னையிலே கட்டப்படுகிற போட்டிகளிற்குகூட 10 லிருந்து 25 ஆக்கியது. ஆனால் அதற்குப் பிறகு மறுபரிசீலனை செய்ததற்குப் பிறகு 20 ஐ 25 ஆக்கி 10 லிருந்து 25 என்று ஒரே அடியாகப் போகாமல் 15 என்று இந்த அரசு ஆக்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரையிலும் எவ்வளவோ வரி ஏய்ப்புகள் நடக்கின்றன. நான் ஒரு நாளைக்குக்கூட போனதாக இருக்கிறேன். அதைப் பார்ப்பதற்கு நான் போய் பார்த்தாலும்கூட கண்டுபிடிக்கிற திறமை எனக்கு இல்லை. ஏய்க்கிறவர்கள் என்னைவிடத் திறமைசாலிகள், இங்கே இருக்கின்ற நம் எல்லோரையும்விட திறமைசாலிகள் இருக்கிறார்கள் அங்கே என்று சொல்கிறபோது உங்களுக்குத் தெரியும், சொல்கிறார்கள், உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. லட்சக்கணக்கில் கட்டுகிறார்கள், டிக்கட்டுகள் வாங்குவது இல்லை, விரலைக் காட்டுகிறார்களாம், விரலைக் காட்டி லட்சம் லட்சம் என்று காட்டிவிடுவார்கள். ஜெயித்தால் அவர்களுக்குப் பணம். இது எல்லாம் காம்பரமைஸ், ஜென்டில் மென்ஸ் காம்பரமைஸ் என்று சொல்வார்களே, அதை அவர்கள் நடத்திக் கொண்டிருப்பதாகத்தான் கேள்வி. இதை எல்லாம் எப்படி நடைமுறைப் படுத்துவது என்பதைப்பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலிலே கூறியபடி இந்த ஆண்டு மட்டும் 87 கோடி ரூபாய் அதிகமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்றால் இந்த நிர்வாகத்தில் உள்ள அத்தனை பேர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் மக்கள் சார்பிலே என்று சொன்னேன். இந்த அரசு வந்ததற்குப் பிறகு அதற்கு துணை ஆணையரிலிருந்து அடிப்படை ஊழியர்கள் வரைக்கும் 822 பேர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே திறமையாகச் செய்திருக்கிறார்கள் என்பதால் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அருமை சகோதரர் திரு. சித்தன் அவர்கள் கூறுகிறபோது விற்பனை வரி ஆலோசனைக் குழுவைப்பற்றி சொன்னார்கள். மாவட்ட ரீதியில் விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் உண்டு, எல்லா மாவட்டங்களிலும். அங்கே கலெக்டர்தான் தலைமை தாங்குவார். மாநில அளவில் மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் தலைமையிலே அந்தக் குழு இருக்கிறது. அதேபோல் இன்றைக்கு வணிக நலக் குழு என்ற மற்றொரு குழு மாநில அளவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பையும் இன்றைக்கு நான் வெளியே சொல்லியிருக்கிறேன். இந்த அறிவிப்பு விரைவிலே சட்டப்பூர்வமாக வெளியே வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கு, பெரிய பெரிய வியாபாரிகள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் நிற்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இடம் இல்லை, லட்சக் கணக்கிலே பணத்தை அவர்கள் கொடுக்கிறார்கள். தமிழகத்திலே விற்பனை வரித் துறை பல இடங்களிலே கட்டடங்களைக் கட்டுகிறது. சென்னையிலே நுங்கம்பாக்கத்திலே 94 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. அதற்கு யார் பவுண்டேஷன் போட்டார்கள். இப்போது கட்டுகிறார்கள் என்று நான் சொல்லாததற்குக் காரணம் இதை கேட்கவேண்டியவர்கள் இங்கு இல்லாத காரணத்தினால் நான் அதைச் சொல்லவில்லை. மதுரையில் 61 லட்சத்தில், தேனியில் 5 லட்சத்தில், வேலூரில் 5 லட்சத்தில், பாளையங்கோட்டையில் 85 ஆயிரத்தில், திருநெல்வேலியில் 5 லட்சத்தில், கோயில்பட்டியில் 5 லட்சத்தில், கரூரிலே 4 லட்சத்தில் இப்படியாக ஒரு கோடியே 85 லட்சத்தில் அலுவலகங்கள் கட்டப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இந்த அரசு பல காரியங்களைச் செய்து வருகிறது.

அருமைச் சகோதரர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பலவற்றைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே, Hand-made Washing soda, machine washing soda, soap இவைகளுக்கு வரி விலக்கு இரண்டுக்கு ஒன்றாக இருக்கிறது. ஆகவே, முடியவில்லை என்று சொன்னார்கள். அரசு அதிலே பரிசீலித்திருக்கிறது. விரைவிலே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். bue

மாட்டுத் தீவனம் பற்றிச் சொன்னார்கள். மாட்டுத்தீவனம் இன்றைக்கு ஏறக்குறைய எல்லாவற்றிற்கும், மாட்டுத் தீவனத்திற்கு வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. ஏதாவது சில கொடுபடாமல் இருந்தாலும் அதை அரசு பரிசீலிக்க நான் சொல்லியிருக்கிறேன். அதுவும் நிச்சயமாக விரைவிலே வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெழுகுவர்த்தியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த மெழுகுவர்த்திக்கும் அப்படித்தான். அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவெடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வெள்ளைப் பூண்டு என்று சொன்னார்கள். வெள்ளைப் பூண்டும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதுவும் விரைவிலே வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பார்ம்ஸ் எல்லாம் தமிழிலே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழிலேதான் இப்பொழுது அச்சடித்துக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள்தான் சொன்னார்கள் என்று கருதுகிறேன்; அது தமிழிலே அச்சடித்துக் கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். Surcharge and additional tax என்கிறபொழுது additional tax என்கிறபொழுது ஒரு வியாபாரி அல்லது 2 இலட்சத்திற்கு மேலே வியாபாரம் செய்துவிட்டால் அதற்கொரு பர்சென்டேஜ் அதிலே போட்டு, அவர் பெரிய வியாபாரிதான், ஆகவே additional tax கொடுப்பதற்குத் தகுதியுடையவர், அவர் வசூல் பண்ணாமலேயே கொடுக்க வேண்டும் வியாபாரத்திலிருந்து; இன்றைக்குச் சட்டம் இருக்கிறது. அதை இன்றைக்குச் சொல்கிறபொழுது வசூல் பண்ணாமல் கொடுக்கிறார்கள் என்பதாலே வரி ஏய்க்கிறார்கள் அல்லது எப்படியோ மறைமுகமாக வசூல் செய்கிறார்கள் என்பதாலே அதை நீக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள்.

அதைப்போல சர்சார்ஜைப் பற்றியும் பல உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் உடனடியாக உங்களுக்குச் சொல்ல முடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதைப்பற்றி இப்பொழுதே அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே விரைவில் நான் முடிவெடுக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அருமைச் சகோதரர் திரு. வெங்கடசுப்பிரமணியன் அவர்கள் பேசும்பொழுது இதை வரவேற்றுப் பேசினாலும், First Class Municipality and Township சினிமாத் துறைக்கெல்லாம் காம்பவுண்டிங் வரி வேண்டுமென்று சொன்னார்கள். அது அரசின் பரிசீலனையிலே இருக்கிறது. விரைவிலே ஃபர்ஸ்ட் கிளாஸ் முனிசிபாலிட்டிக்கும், டவுன்ஷிப்புக்கும் காம்பவுண்டிங் முறை வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நல்லப்பன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மது, சாராயம் குடித்துவிட்டு மரம் ஏறினாலும் அதை அனுமதிக்க வேண்டும் அல்லது அனுமதிக்க வேண்டாம் என்று அப்படிச் சொல்லி, அதை மறைமுகமாக





அனுமதிக்க வேண்டுமென்பதை அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்கள் மேலே உங்களுக்கு அக்கறை இருக்கிறது; நமக்கும் அக்கறை இருக்கிறது. அவர்களுக்கு நிறையப் பணம் கொடுக்க வேண்டும்; அவர்கள் குடும்பங்களை நடத்த வேண்டும். ஆனால் கள் குடித்துவிட்டு மரம் ஏறி கீழே விழுந்து இறந்துவிட்ட பிறகு அவர்கள் குடும்பத்திற்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், மனைவி, குழந்தைகள் இவர்களுக்கெல்லாம் எவ்வளவு பணம் கொடுத்தாலும் ஈடாகாது. யாரை இழந்தாலும் இன்னார் இருக்கிறார் என்று வழி காட்டலாம்; ஆனால் கணவனை இழந்தோர்க்கு வழிகாட்டுவதற்கு இல்லை என்று தமிழிலே சொல்வார்கள். அப்படி கணவனை இழந்து தவிக்கின்ற நிலைக்கு மனைவியை ஆளாக்குகின்ற அளவிற்கு கள், சாராயம் குடித்துவிட்டு மரம் ஏறுவதை இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர்களே, அருமை உறுப்பினர்கள் சொன்னவற்றிற்கெல்லாம் கூடியவரையிலே நான் பதில் அளித்திருக்கிறேன். ஆனால் ஒவ்வொருவருக்கும் என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதைப்பற்றி வரிசையாக எல்லாப் பெயர்களையும் போட்டு இங்கே எழுதி வைத்திருக்கிறேன். அவைகளையெல்லாம் படிப்பது என்றால் இன்றைக்கு நீங்கள் உணவு அருந்துவதற்குச் செல்லும்பொழுது உங்கள் காதிலே ஏறாது என்பதால் அவைகளையெல்லாம் நான் சொல்லாமல் விட்டுவிடுகிறேன்.

ஆனால், உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நீங்கள் பேசுவதிலே நான் திருப்தி அடைந்தாலும், மகிழ்ச்சி அடைந்தாலும் குறைபாடுகள்

(பிற்பகல் 2.20)

இல்லாமல் இல்லை. இந்த வரி வசூலிப்பதிலே பல இடங்களிலே பல குறைபாடுகள், சில தவறுகள் நடக்கின்றன என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறபொழுது உங்களுடைய உதவி இன்றைக்கு இருக்கிறது என்ற நிலையில் உங்களது பேச்சு ஓரளவுக்குத் தான் எனக்குத் திருப்தியைக் கொடுத்ததே ஒழிய நான் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லையென்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நீங்கள் சொல்லிவிட்டாலும், இங்கே இருக்கிற 234 சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே பல இடங்களிலே பரந்து பணியாளர்கள் இருக்கிறார்கள். நாட்டிலே பல இடங்களிலே பரந்து இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு அந்த அதிகாரிகள், அந்த வியாபாரிகள் மூலமாகத்தான் நாட்டிலேயிருக்கிற ஏழை, எளியவர்களுக்காக முற்போக்குத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 ஏப்ரல் 30

நிறைவேற்ற முடியும், நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். இங்கே சொன்னது மட்டும் போதாது. இங்கே சொல்லாததை, உங்களுக்குத் தெரியாததைத் தெரிந்து, அதைக் கண்டு பிடித்து என்னிடத்திலே, அரசிடத்திலே, மக்களுக்காகச் சொல்ல வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.**

திரு. செ. சிவசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 25,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

திரு. மு. அப்பாதுரை அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,24,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.



1981 ஏப்ரல் 30]

**கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்.**

திருவாளர்கள் கு. ரமணி, தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 81,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை, 4-5-1981 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

268. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சிப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 20-6-1980 ஆம் தேதியிடப்பெற்ற 970 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920 304 (@) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

269. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 23-3-1981 ஆம் தேதியிடப்பெற்ற 627 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1954) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

@ 180. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

181. கோரிக்கை எண் 14—தமிழ் நாடு சிறைகளின் நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

@@ 182. 1980-81 ஆம் ஆண்டின் மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் நடவடிக்கைகள் குறித்த ஆய்வு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

** 183. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகள்-நிருவாகம் குறித்த விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*** 184. கோரிக்கை எண் 5.—முத்திரைத்தாள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

185. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழகம் என்ற தலைப்பில் ஒரு சிறு புத்தகம் (தமிழ்):

### இணைப்பு 1[illegible]

(911 பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 13

### நீதி நிர்வாகம், 1981-82.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க குடிமக்கள் அனைவருக்கும், நீதிநெறி கிட்டுமாறு செய்வதே இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிர்வகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் நிர்வாகப் பிரிவு, செயற் பிரிவு ஆகியவற்றைச் சார்ந்து செயல்படாமல் இது தனித்துச் செயற்படுகின்றது. புதிதாக நீதி மன்றங்கள் அமைப்பது பற்றி உயர்நீதிமன்றம் பரிந்துரைப்பதன் மேல் காலத்தாழ்வின்றி அரசு ஒப்புதல் அளித்தும், நீதிமன்றங்களுக்குத் தேவையான இட வசதி உட்பட நீதிமன்றங்களுக்கான அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வதன் வாயிலாகவும் அரசு பயனுள்ள பணியாற்றுகிறது.





### இணைப்பு

(3 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள்.

13 ஆம் எண் கோரிக்கையும் 'நீதி நிர்வாகம்' தொடர்பான மானியங்களும். இதன் கீழ் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்கள், அதிகாரிகள், பணியாளரமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும்.

1. உயர்நீதிமன்றம், சென்னை.

2. நொடித்தவர் சொத்தாட்சியர் (Official Assignee உயர்நீதிமன்றம், சென்னை.

3. (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட) சிவில்-செஷன்ஸ் நீதிமன்றங்கள்.

4. சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை.

5. மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.

6. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள் (தலைமை நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு. இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்).

7. அரசுப் பொறுப்புச் சொத்தின் ஆட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை.

8. அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

9. சென்னை, மதுரை. கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல்முறையீடு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு அதிகார மன்றம், போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு, தொடர்புடைய துறைக் கணக்குகளில் பற்று எழுதத்தக்கதாகும்.

நீதிமன்றங்கள் அலுவலகங்களிடையே பின்வருவனவற்றைப் பற்றிய செலவு "சாட்டிய செலவினம்" என்றும் "அனுமதிக்கப்பட்ட செலவினம்" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது :—

சாட்டியவை.

(1)

1. உயர்நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர், அசல் தரப்பு, அப்பீல் தரப்புக் கொண்ட பணியாளர் அமைப்பு, மொழி பெயர்ப்பு அச்சுத் துறை, சட்ட அறிக்கையாளர்கள் பணியாளரமைப்பு, புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் குறித்த தனி அலுவலர், ஷெரீப், உயர் நீதிமன்றம், சென்னை பணியாளர்கள்).

2. நொடித்தவர் சொத்தாட்சியர்-அவருடைய பணியாளரமைப்பு.

அனுமதிக்கப்பட்டவை.

(2)

1. மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில், செஷன்ஸ் நீதிமன்றங்கள்.
2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.
3. மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், சென்னை.
4. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள்.
5. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.
6. அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.
7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையில் தொழில் நடுவர் மன்றங்கள்.
8. முதன்மை ஆசிரியர், பணியாளர்கள் தமிழ் சட்ட இதழ் வெளியிடுதல், சென்னை.

1. **சென்னை உயர்நீதிமன்றம்.**—இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமையான நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர்நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும். (21 நிரந்தர நீதிபதிகள், 4 கூடுதல் நீதிபதிகள்).

உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும், ரிட் வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் இதற்கு மேல்முறையீடு மறுஆய்வை விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. தலைமை நீதிபதி, நீதிபதி



களுக்கு பணி முறையைப் பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி உட்பட 21 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்கள் ஒன்றுக்குத் தலைமை நீதிபதியின் ஊதியம் ரூ. 4,000 ஆகும். நீதிபதிகளின் ஊதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3,500 ஆகும். நீதிபதிகளின் சம்பளம் அரசியலமைப்புச் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அவர்களின் பணி நிபந்தனைகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தால் முறைப்படுத்தப்படுகின்றன.

பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். அவருக்குக் கூடுதல் பதிவாளர், மேலாளர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அதிகாரிகள் முதலிய அதிகாரிகள் உதவி புரிகின்றனர். உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. நிர்வாகத் துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டு தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் துறை, மேல்முறையீடுகள் பரிசீலனையாளர்கள் பிரிவு, சுருக்கெழுத்தர் பிரிவு, மொழி பெயர்ப்பு-அச்சுத் துறை, நகல் எடுப்போர் துறை, ஆவணப் பிரிவு ஆகியன ஆகும். புதுச்சேரி தொடர்பான வழக்கு விசாரணை செய்யவும் உயர்நீதிமன்றம் அதிகாரம் பெற்றதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர்கள் ஆகியோர் குறித்த செலவை முதற்கண் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு, பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகை வசூலிக்கப்படுகின்றது.

நீதி வழங்குவதோடு உயர் நீதிமன்றத்தின் பொறுப்புக்கள் முடிவதில்லை. மாநில நீதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாடு முழுவதும் உயர்நீதிமன்றத்தின் பொறுப்பாகும்.

2. **சட்ட அதிகாரிகள்.**—மாநகரத்திலும் வெளியூரிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப் பெற்றுள்ள வழக்குரைஞர் ஆகியோர் குறித்த செலவுகளை ஏற்க இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. அரசு வாதுரைஞர் ஒருவரும், கூடுதல் அரசு வாதுரைஞர் இருவரும், சிவில் வழக்குகளுக்கு அரசு வாதுரைஞர்கள் (உரிமை வழக்குகள்) ஐவரும், அரசு வழக்கு நடத்துநர் ஒருவரும், அரசு வழக்குரைஞர்கள் (குற்றவியல் வழக்குகள்) மூவரும் உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். மாநிலத் தலைமை வாதுரைஞர் தவிர, மாநகர அரசு வாதுரைஞர், மாநகரக் கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் இருவர், மாநகர அரசு வழக்கு நடத்துநர்,

மாநகரக் கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் ஆகியோர் மாநிலத்திலுள்ள சட்ட அலுவலர்களாவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு வாதுரைஞர் ஒருவரும், அரசு வழக்கு நடத்துநர் ஒருவரும் உள்ளனர். மாநகரத்திலும் பிற இடங்களில் உள்ள உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை I.I ) முறையான சம்பள நிலையில் உள்ள முழு நேர அரசுப் பணியாளர்களாவர். 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 24 (3) பிரிவு (மத்தியச் சட்டம் 2/1974), ஒரு மாவட்டத்திற்கான அரசு வழக்கு நடத்துநர்களை நியமிப்பது பற்றி விவரிக்கிறது. ஒரு மாநிலத்தில் வழக்கு நடத்தும் அதிகாரிகள் பதவிகள் இருந்தால் அவர்களிடையேயிருந்து அரசு வழக்கு நடத்துநர்/கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் ஆகியோரை நியமிக்க மேற்சொன்ன சட்டக் கோவையின் 24 (6) பிரிவு வகை செய்கிறது. நிலை I அரசு உதவி வழக்கு நடத்துநர்களிடையேயிருந்து முழுவதும் தற்காலிக அடிப்படையில் அரசு வழக்கு நடத்துநர்கள்/கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்கள், மாநகர கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்களை தமிழ்நாடு அரசு தற்காலிகமாக நியமித்தது. அரசின் சார்பாக வழக்குகளை திறமையான முறையில் நடத்துவதற்காக, மாவட்டத்திற்கான அரசு வழக்கு நடத்துநர்கள்/கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்கள் முதலியவர்களை அனுபவம் மிக்க குற்றவியல் வழக்குரைஞர்களிடையேயிருந்து நேரடியாக நியமிக்க வேண்டியது அவசியம் என அரசு கருதியது. மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள் தயாரித்த வழக்குரைஞர்கள் பட்டியலிலிருந்து அரசு வழக்கு நடத்துநர்களை கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்களை நியமிக்க இயலும் வகையில் மேற்சொன்ன சட்டக் கோவையின் 24 (6) பிரிவை திருத்தியதுடன் 24 ஆம் பிரிவில் (6-A) என்னும் உட்பிரிவையும் சேர்த்துள்ளது. மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களிலும், துணை நீதிமன்றங்களிலும் அரசுப் பணியை மேற்கொள்வதற்காக வழக்குரைஞர்கள் அவ்வப்போது நியமனம் செய்யப்படுகின்றனர். அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது. வழக்குரைஞர் அமர்த்துகைக் கட்டணம் எதனையும் அவர்கள் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், தொடர்பான துறையின் வரவு-செலவுத் திட்டத்தில் பற்று எழுதப்படுகின்றன.

சட்ட அதிகாரிகள் செய்த பணியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. இக்கட்டணம் அரசால் அல்லது சம்பந்தப்பட்ட துறை தலைவர்களால் அனுமதிக்கப்படுகிறது.

பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளை தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் [illegible] செலவாகிறது. மேற்சொன்ன செலவினம் தற்போதைக்கு "214 [illegible] AH சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள் [illegible] CA [illegible]



வாதுரைஞர்—04. அலுவலகச் செலவுகள்" என்பதன்கீழ் பற்று வைக்கப்பட்டு வருகிறது. இச்செலவினத்தை அரசின் சார்பில் உரிமையியல் வழக்குகளை தாக்கல் செய்யுமாறு அரசு வாதுரைஞர்களுக்கு உத்தரவிடுகின்ற சம்பந்தப்பட்ட துறைகளின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பற்று எழுத முடிவு செய்யப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டில் "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்பின் கீழ் மொத்தச் செலவுத் தொகை ரூ. 50,70,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன செலவில், I, I ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பளமும் படியும், வெளியூரிலுள்ள பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள் குறித்த செலவு. அதாவது, 1980-81 ஆம் ஆண்டு வரையில் I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்களின் செலவு "AE குற்றவியல் நீதிமன்றங்கள்" என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, 1980-81 ஆம் ஆண்டு வரையில் சென்னை மாநகரில் I, II ஆம் நிலைப் பதவித் தரத்தில் உள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் குறித்த செலவு 'AD மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்" என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து மேற்சொன்ன சட்ட அதிகாரிகளுக்குரிய செலவு "AH சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்" என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளன. எனவே, 1980-81 ஆம் ஆண்டு செலவுடன் ஒப்பிடும்போது 1981-82 ஆம் ஆண்டு மதிப்பீட்டுச் செலவு உயர்ந்தது.

## 8. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

சென்னை, அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக துணை அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர்-பொறுப்புச் சொத்தாட்சியர், ஒருவர் உள்ளார். அவருடைய சம்பள வீதம் ரூ. 750—50—1,350 ஆகும். தற்போது அப்பதவி வகிப்பவர் மாவட்ட முன்சீப் ஒருவர் ஆவார். இவ்விரு அதிகாரிகளும், மரணமடைந்தவர்களின் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், எஸ்டேட்டுகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ளனர். அவர்கள் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதித்துறைகளுக்கு இணங்க தங்களது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்குத் தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 600—30—750—35—900—[illegible] என்ற சம்பள வீதத்தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்று உள்ளது.

1981-82 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ரூ. 3,32,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**4. மாநகர மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள்.**—இம்மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட நீதிமன்றம், கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட 21 மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட் இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட் துணை நீதிபதி பதவி தரத்தில் இருப்பவராவார். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினோராவது மாநகர மாஜிஸ்டிரேட்டுகள், துணை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும் மாவட்ட முனிசிப் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். மாநகர மாஜிஸ்டிரேட்கள், சென்னை மாநகரில் உள்ள சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் ஆட்சி வரம்பில் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

சென்னை மாநகரில் உள்ள மேற்சொன்ன குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 29,28,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பதற்கு எழும்பூர், சென்ட்ரல் இரயில் நிலையங்கள் ஒவ்வொன்றிலும், இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உள்ளது. இது குறித்த செலவை முதற்கண் அரசு ஏற்று, பின்னர், இரயில்வேத் துறையிடமிருந்து பெறுகிறது.

**5. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம்.**—சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் 23 நீதிமன்ற அதிகாரிகள் (11 மாவட்ட நீதிபதிகள், 12 துணை நீதிபதிகள்) செயல்பட்டு வருகின்றனர். நிர்வாகப் பொறுப்பினை கவனிக்கும் பொருட்டு மாவட்ட முனிசிப் பதவித்தரத்தில் தனியே பதிவாளர் பதவி ஒன்று உள்ளது. மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதற்கும் பரந்து நிற்கும். மாநகர சிவில் நீதிமன்றம் ரூ. 50,000 வரையிலான சொத்து மதிப்பு முறை விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. 7—3—1981 ஆம் நாள்முதல் செயலுக்கு வந்துள்ள 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள், சென்னை நகர சிவில் நீதிமன்றம் (திருத்த) சட்டத்தின்படி, (தமிழ்நாடு சட்டம் 34/1980) சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தின் வழக்கு மதிப்பு முறை அதிகார வரம்பு ரூ. 1,00,000 ஆகவும், மேல் முறையீட்டு அதிகார வரம்பு ரூ. 30,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை கோட்டத்தைப [illegible]வரையில் மாநகர சிவில் நீதிமன்றம், செஷன்ஸ் நீதிமன்றமாகவும்



செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியின் பதவித் தரத்திலுள்ள நீதிபதிகளில், சிலருக்கு, குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ் பட்டிகை வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநகர சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் 1981-82 ஆம் ஆண்டில் மொத்த செலவு ரூ. 21,51,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**6. வெளியூரிலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.**—இம்மாநிலத்தில் 15 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒவ்வொன்றும், மதுரை, திருநெல்வேலியில் இரண்டுமாக இம்மாநிலத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும், செஷன்ஸ் நீதிமன்றங்களும் உள்ளன. மாவட்ட நீதிபதி, அந்தந்தக் கோட்டத்தின் செஷன்ஸ் நீதிபதியாகவும் இருப்பார். தொழிலாளர் அரசுக் காப்புறுதி நீதிமன்றம், எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றம், மோட்டார் வண்டிகள் விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்கள் போன்று குறிப்பிட்டவைகத் தனிச் சட்டங்களின்கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவரது கோட்டங்களிலுள்ள சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் விசாரணை அதிகாரத்துடன் குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்கின்ற சிறப்பு நீதிபதிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளனர்.

**7. சார்நிலை நீதிபதிகள்.**—இம்மாநிலத்தில் 65 துணை நீதிமன்றங்கள் (நிலையானவை 44, தற்காலிகமானவை 21) உள்ளன. சார்நிலை நீதிபதிகளுக்கு, அசல் தரப்பில் (original side) வழக்குகளை விசாரணை செய்ய வரையிலா அதிகார வரம்பு உண்டு. அவர்களுடைய அதிகார வரம்பு, சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. துணை நீதிபதிகள் ரூ. 15,000 மதிப்பு வரை அந்தந்த நிலைவரை அதிகார வரம்பிற்குள் செயல்படும் மாவட்ட முனிசிப்களின் தீர்ப்புகளுக்கு எதிராகச் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகள் விசாரணை செயயவும் அதிகாரமுண்டு. துணை நீதிபதிகள், உதவி செஷன்ஸ் நீதிபதிகளுமாவர். மோட்டார் வண்டி விபத்துக்களின் உரிமை கோரிக்கை தொடர்பான வழக்குகளை விசாரணை செய்ய தலைமையிடங்களிலுமுள்ள முதன்மைத் துணை நீதிபதிகளுக்கும் ஏனைய நீதிபதியிடங்களிலுள்ள முதன்மைத் துணை நீதிபதிகளுக்கும் ஏனைய துணை நீதிபதிகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

8. மாவட்ட முனிசிப் நீதிமன்றங்கள்.—மாவட்ட முனிசிப் நீதிமன்றங்கள் 102 (நிலையானவை 86, தற்காலிகமானவை 16) உள்ளன. மாவட்ட முனிசிப் நீதிமன்றங்கள் ரூ. 5,000 வரை வழக்கு மதிப்பு முறை அதிகார வரம்பைச் செலுத்துகின்றன. மாவட்ட முனிசிப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப் பட்ட விசாரணை அதிகாரப் பகுதியைக் கொண்டுள்ளது. 7—3—1981 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ள 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டத்தின்படி (தமிழ் நாடு சட்டம் 34/1980) மாவட்ட முனிசிப் நீதிமன்றங்களின் வழக்கு மதிப்பு அதிகார வரம்பு ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்ட முனிசிப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் தனித்தனியாக வரையறுக்கப்பட்ட விசாரணை அதிகார பகுதியைக் கொண்டுள்ளது. அவை ரூ. 500 வரை மதிப்புள்ள சிறு வழக்கு களையும் விசாரணை செய்கின்றன. அந்தந்த நீதிமன்றங்களுக்குரிய பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகார மன்றங்களாகவும் அவை செயல் படுகின்றன.

...ப்டி எடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சேர்ப்பிப்போர் ஆகியோர் உட்பட அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள், வெளியூரி லுள்ள மாவட்ட முனிசிப் நீதிமன்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 1981-82 ஆம் ஆண்டுக்குரிய செலவு ரூ. 3,99,75,000 ஆகும். இச்செலவில் அதிகாரிகளின் சம்பளம், படிகள் ஆகியவையும் தபால் செலவுகள், கட்டணங் கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள் (குறித்த கால வெளியீடுகள்), மின்சாரக் கட்டணங்கள், தொலைபேசிக் கட்டணங்கள், மேசை நாற்காலிகள், செஷன்ஸ் நீதிமன்றங்களுக்கு விசாரணைக்காக வரும் சாட்சிகளுக்கு வழங்கக்கூடிய உணவு, போக்குவரத்துச் செலவுகள் போன்ற சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

...சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழி லாளர் நல நீதிமன்றங்கள்.—சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங் களில் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் ஐந்து (நிலையானவை 4, தற்காலிக மானவை 1) இயங்கி வருகின்றன. மாநிலம் முழுவதிற்குமான அதிகார வரம்பு செலுத்தக்கூடிய தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்களாவர். தொழிலாளர் நல நீதி மன்றங்கள், அரசால் குறிப்பிடப்படும் தொழில் தகராறுகளையும், தரப்பினரால் தாக்கல் செய்யப் படும் உரிமைக் கோரிக்கை மனுக்களையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்கு கின்றன.



தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் தங்களது அதிகார வரம்புப் பகுதி களில், தொழில் தகராறுகள் ஏற்படும் இடங்களுக்குச் சென்று, தொழில் தகராறுகளையும், உரிமைக் கோரிக்கை மனுக்களையும் விசாரணை செய்து, தீர்ப்பு வழங்க முகாம் நீதிமன்றங்களை நடத்துவோராவர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் குறித்த செலவு "மானியக் கோரிக்கை எண் 13, 287-ஏ. தொழிலாளர் நலன்—வேலை வாய்ப்பு" என்ற தலைப்பில் பற்றெழுதப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் 1981-82 ஆம் ஆண்டிற்குரிய மொத்தச் செலவு ரூ. 7,20,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

10. சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம்.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி ஒருவர் இந் நீதி மன்றத்தின் நீதிபதியாக உள்ளார். துணை நீதிபதிகள் பதவித் தரத்தில் 6 நீதிபதிகளும், மாவட்ட முனிசிப் பதவித் தரத்தில் 7 நீதிபதிகளும் (நிலையானவர்கள் 3 பேர், தற்காலிகமானவர்கள் 4 பேர்) உள்ளனர். மாவட்ட முனிசிப் பதவித் தரத்தில் பதிவாளர் ஒருவர் உள்ளார். அவர் நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். அவர் குறிப்பிட்ட சில நிறைவேற்றும் மனுக்களை விசாரணை செய்தல் போன்ற நீதிமன்ற அலுவல்களையும் கவனிக்கிறார். மாநகர் சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் தலைமை நீதிபதியும் II முதல் IV வரையுள்ள நீதிபதிகளும் சிறு வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரங்களைச் செலுத்தி வருகின்றனர். V ஆம் நீதிபதி மோட்டார் ஊர்திகள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றேவுள்ள நடுவர் மன்றமாகப் பணிபுரிந்து வருகிறார். V, V ஆம் நீதிபதிகள் வாடகைக் கட்டுப்பாட்டு வழக்குகளுக்குரிய மேல் முறையீட்டு நீதி மன்றங்களாகச் செயல்பட்டு வருகின்றனர். III முதல் XIV வரையுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்குரிய வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்பட்டு வருகின்றனர். தலைமை நீதிபதிக்கும், II, III, IV, VI, VII ஆம் நீதிபதிகளுக்கும், வாடகைக் கட்டுப்பாடு மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் குறித்து 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 15,21,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. திருத்தி முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள் இனாம் ஒழிப்பு நடுவர் மன்றம் தொடர்பாக இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு அளிப்பதற்குரிய நடுவர் மன்றத்தைப் பொறுத்த வரையில் இந்த துணைத் தலைப்பின் கீழ் ஏற்பட்ட ரூ. 14,000 செலவும் மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

[1981 ஏப்ரல் 30

11. **வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள்.**—இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் 14 பேர் செயல்பட்டு வருகின்றனர். தென் ஆர்க்காடு, தருமபுரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நீதிமன்றம் என்ற விதத்தில் நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றில் துணை நீதிபதிகள் பதவித் தரத்திலுள்ளவர்கள், நீதிபதிகளாக உள்ளனர். நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகள், தங்களது மாவட்டங்களிலுள்ள குற்றவியல் துணை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 தனிச் சம்பளம் வழங்கப்படுகிறது. நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்களது நிர்வாகப் பணிகளை கவனிப்பதோடு, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதித்துறைகளின்படி மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளிடம் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகள், இவர்களால், நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதன்பேரில் அவற்றை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் பணியையும் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் கவனிக்க மேற்சொன்ன சட்டக் கோவையின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் 18 பேரும், மாவட்ட முனிசிப்-துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் 7 பேரும், மாவட்ட முனிசிப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு ஒருவரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட முனிசிப் பதவித் தரத்தில் உள்ளனர். அவர்கள் முதல் வகுப்பு அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராகச் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் 29 பேர் உள்ளனர். அவர்கள் முதல் வகுப்பு வழக்குகளை முடிவு செய்வதில் நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வர்.

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் 141 பேர் உள்ளனர். இந்த மாஜிஸ்டிரேட்டுகள், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து முடிவு செய்கின்றனர்.

வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 2,04,57,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, பயணச்சீட்டு இன்றி பயணம் செய்வது முதலிய குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்ய எழும்பூர்



1981 ஏப்ரல் 30]

இரயில்வே நிலையத்திலும், சென்டிரல் இரயில்வே நிலையத்திலும் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் இருப்பதுடன், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்குரிய செலவு தொடக்கத்தில் மாநில அரசால் செய்யப்படுகிறது. பின்னர் சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் மூலமாக இரயில்வேத் துறையிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

வணிகக்குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நீதிமன்றம் என்ற விதத்தில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் தனி நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்குரிய செலவு "AE குற்றவியல் நீதிமன்றங்கள்", என்ற தலைப்பின்கீழ் பற்று எழுதப்படுகிறது.

12. **தமிழில் சட்ட இதழ்கள்.**—"தீர்ப்புத் திரட்டு", "குற்ற வழக்குத் தீர்ப்பு திரட்டு" என்னும் தமிழ் சட்டத் திங்கள் இதழ்கள் இரண்டை உயர்நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை II பதவித் தரத்தில் தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும் துணை நீதிபதி பதவித் தரத்தில் கூட்டுப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவியாளர், பதிப்பாசிரியர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர், படிதிருத்துபவர், ஏவலர்கள் ஆகிய பணியாளர்களையும் நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு சட்ட இதழ் முதன்மைப் பதிப்பாசிரியர் முதலாக அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் படிகள் குறித்த செலவு "214- A நீதிநிர்வாகம்—AJ ஏனைய செலவு—AG சட்ட இதழ் வெளியிடுதல்" என்னும் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 3,39,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாதாந்திரச் சட்ட இதழ் வழக்குரைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் ஓர் இதழ் ரூ. 3 என்ற விலைக்கு விற்பனைக்குக் கிடைக்கிறது.

13. **நீதிமன்றக் கட்டிடங்கள்.**—உயர்நீதிமன்றக் கட்டிடங்களையும், உயர் நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங்களையும் பராமரிப்பதற்குரிய செலவு, 13 ஆம் எண் மானியக் கோரிக்கையில் "259. பொதுப் பணிகள்" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் காட்டப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ள செலவு ரூ. 6,80,000 ஆகும்.

1980-81 ஆம் ஆண்டில், ரூ. 14.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரம் துணை நீதிமன்றத்திற்குக் கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டவும், காஞ்சிபுரம் மாவட்ட முனிசிப் நீதிமன்ற வளைவுக்குள் ரூ. 2.94 இலட்சம் செலவில் இரு துணை நீதிபதிகளுக்கும் இரு மாவட்ட முனிசிப்புகளுக்கும் குடியிருப்புகள்

கட்டவும் அரசு அனுமதியளித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 13.50 இலட்சம் செலவில் தூத்துக்குடியிலுள்ள உரிமையியல் நீதிமன்ற வளைவுக்குள் குற்றவியல் நீதிமன்றத்தையும் அமைக்கும் பொருட்டு, இரண்டுக்கும் சேர்த்துக் கட்டிடங்களைக் கட்ட அரசு அனுமதியளித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 6.48 இலட்சம் செலவில் பெரியார் மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்திற்கும், திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் உள்ள துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்திற்கும் கட்டிடங்கள் கட்டவும் இந்த நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டவும் அரசு அனுமதியளித்துள்ளது. ஏழாம் நிதிக்குழு பரிந்துரையின் பேரில் இதற்கு, மத்திய அரசு ரூ. 2.80 இலட்சம் நிதி உதவி அளித்தது. எஞ்சிய தொகை ரூ. 3.68 இலட்சம் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**14. மதுரையில் உயர்நீதி மன்ற ஆயத்தை அமைத்தல்.**—இந்திய அரசியலமைப்பின் 246 ஆம் பிரிவின்படி உயர்நீதி மன்றங்களை ஏற்படுத்தும் மற்றும் அமைப்பதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது. எனவே தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களிலுள்ள வழக்காடும் பொது மக்களின் நலன் கருதி சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்துவது பற்றி மத்திய அரசோடு கலந்தாலோசிக்கப்பட்டு வரும் இப்பொருள் இந்த அரசின் ஆய்வில் உள்ளது.

**15. சென்னையில் தலைமை நீதிமன்ற ஆயத்தை அமைத்தல்.**—தென் மாநிலங்களிலுள்ள வழக்காடும் பொதுமக்களின் நலன் கருதி சென்னையை இருப்பிடமாகக் கொண்ட தலைமை நீதிமன்றத்தின் ஆயமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வேண்டி இவ்வரசு மைய அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் டெல்லி தவிர ஏனைய இடத்தில் தலைமை நீதிமன்றத்தின் அமர்வுகள் இருக்கலாம் என்று குறிப்பிடும் அதிகாரத்தை இந்திய தலைமை நீதிபதிக்கு அரசியலமைப்பின் 130-வது பிரிவு வழங்குகிறது.

சென்னையில் தலைமை நீதிமன்ற ஆயத்தை அமைக்க வேண்டிய இன்றியமையாமையை இவ்வரசு அண்மையில் மத்திய சட்ட அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

**16. பொது.**—குறிப்பிட்ட இடத்தில் பல நீதிமன்றங்கள் அமைக்கப் படுவதைத் தவிர்க்கவும், வழக்குகளுக்காகத் தலைமையிடங்களுக்குச் செல்வதில் [illegible] இடர்பாட்டிலிருந்து பொதுமக்களுக்குப் போதிய நலம் [illegible] தலைமையிடங்களிலுள்ள நீதிமன்றங்களைப் பரவலாகப் [illegible]



இடங்களில் அமைக்க வேண்டுமென்று அரசும் உயர்நீதிமன்றமும் கருது கின்றன. உரிமையியல் குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார எல்லைகள் குறித்து மாநில அளவிலான ஆய்வை மேற்கொள்ள 1970-ல் அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு 1973-ல் அறிக்கையை அளித்தது. புதிதாக 28 உரிமையியல் நீதிமன்றங்களையும், 27 குற்றவியல் நீதிமன்றங்களையும் அமைக்க இக்குழு பரிந்துரைத்துள்ளது. இக்குழுவின் பரிவுரைகளை அரசு 1975-ல் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, ஐந்தாண்டு கால அளவில் இப்பரிவுரைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதென முடிவு செய்துள்ளது. அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதற்காக உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் முன்னுரிமைப்பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளது.

பின்வரும் 20 உரிமையியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவை முன்னுரிமைப் பட்டியலின் கட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை நீதிமன்றம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

துணை நீதிமன்றம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.

துணை நீதிமன்றம், திண்டிவனம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், செஞ்சி, தென் ஆர்க்காடு மாவட்டம்.

துணை நீதிமன்றம், திருவள்ளூர், செங்கற்பட்டு மாவட்டம்.

துணை நீதிமன்றம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

துணை நீதிமன்றம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

துணை நீதிமன்றம், விருத்தாசலம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

துணை நீதிமன்றம், பெரியகுளம், மதுரை மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், பொன்னேரி, செங்கற்பட்டு மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், மேட்டூர், சேலம் மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

மாவட்ட முனிசீப் நீதிமன்றம், சங்கரன்கோவில், திருநெல்வேலி மாவட்டம்.

துணை நீதிமன்றம், அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

மாவட்ட முனிசிப் நீதிமன்றம், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

மாவட்டட் முனிசிப் நீதிமன்றம், ஜெயங்கொண்டான், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

முன்னுரிமைப் பட்டியலின் முதல் கட்டத்தில் சேர்க்கப்பட்ட 11 குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1979-80-ல் அனுமதியளிக்கப்பட்டது. முன்னுரிமைப் பட்டியலின் இரண்டாம் கட்டத்தில் சேர்க்கப்பட்ட எட்டு உரிமையியல் நீதி மன்றங்களில், நான்கு உரிமையியல் நீதிமன்றங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கக் கருதப்படுகிறது. இது தவிர, 1980-81 ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் துணை நீதிமன்றம் அமைப்பதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.

ஏழாம் நிதிக்குழு பரிந்துரைகளின்படி மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற்று 1980-81 ஆம் ஆண்டில் பின்வரும் நான்கு குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், நெய்வேலி, தென் ஆர்க்காடு மாவட்டம்.

நீதித் துறை துணைக் கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருவண்ணாமலை, வட ஆர்க்காடு மாவட்டம்.

துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், கோபிச்செட்டிபாளையம், பெரியார் மாவட்டம்.

துணைக் கோட்ட நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், வள்ளியூர் திருநெல்வேலி மாவட்டம்.

கோபிசெட்டிப்பாளையத்திலும், வள்ளியூரிலும் துணைக் கோட்ட நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. திருவண்ணாமலையில் துணைக் கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றத்தையும், நெய்வேலியில் நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றத்தையும் அமைப்பதற்குக் கட்டிடங்களை வாடகைக்கு எடுத்த பின் செயல்படத் தொடங்கும்.

இவை தவிர, 1980-81 ஆம் ஆண்டில் பின்வரும் மூன்று குற்றவியல் நீதி மன்றங்களை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது :—

நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு தனி நீதிமன்றம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு தனி நீதிமன்றம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.



நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டு மாவட்ட முனிசிப் பதவித் தரத்துடன் ஒருங்கிணைக்கப்படலாமென அரசு ஆணையிட்டுள்ளது. குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இரு வகையினரும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை நன்றாக அறிந்திருக்க வேண்டியும், மாஜிஸ்டிரேட்டுகள் சிவில் வழக்குகள் குறித்து அனுபவம் பெறவும், சிவில் நீதிபதிகள் குற்ற வழக்கு விசாரணைகள் பற்றி அனுபவம் பெறவும், இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனைச் செயல் படுத்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டத்தைச் செயல் படுத்தக் கருதுகிறோம். நீதித் துறை உயர்நீதிமன்றமும் சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களும் அசல் மேல்முறையீட்டு வழக்குகளின் மூலம் நீதி நிர்வாகம் என்னும் தலைப்பின்கீழ் வருகின்ற வருவாயைக் கருத்திற்கொண்டு பார்த்தால் இதற்கு ஏற்படக் கூடிய செலவினம் நீதித் துறை வரவினங்களிலிருந்தே சரிக்கட்டப்படும்.

" 65- A . நீதி நிர்வாகம் " 030B முத்திரைத்தாள்கள் நீதித் துறை (நீதி மன்றக் கட்டணங்கள் முத்திரைத்தாள்கள் வடிவில் கொடுத்தல்) என்னும் தலைப்பின்கீழ் 1977-78, 1978-79, 1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளுக்கான வருவாயின் வரவும் " 214- A நீதி நிர்வாகம் " என்னும் தலைப்பின்கீழ் மேற்சொன்ன ஆண்டுகளுக்கான செலவும் குறித்த விவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ஆண்டுக் கணக்குகள். 1977-78 | ஆண்டுக் கணக்குகள். 1978-79 | 1979-80 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1980-81 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| வரவு— | | | | |
| 065A நீதி நிர்வாகம் | 314·14 | 304·68 | 383.71 | 319 07 |
| 030B முத்திரைத் தாள்கள் நீதித்துறை | 371.07 | 505.36 | 530 46 | 626.27 |
| மொத்தம் .. | 685.21 | 810.04 | 914.17 | 945.34 |

செலவு—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 214A | நீதிநிர்வாகம் | 541·52 | 6[illegible]7·11 | 662·02 | 730·8 |

1977-78, 1978-79 ஆம் ஆண்டுகளுக்குரிய செலவும் 1979-80, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும் மேற்சொன்ன அட்டவணையிலிருந்து தெளிவாகிறது.

ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவியளிக்கும் நோக்குடன், தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக்குழுவை அரசு அமைத்ததோடு, சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் சட்ட உதவி ஆலோசனை நிலையங்களுக்காக மாவட்டக் குழுக்களையும் அமைத்துள்ளது.

ஏழை எளியவர்களுக்குச் சட்ட உதவி அளிப்பது கட்டுப்பாடு உடையதென இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஆம் பிரிவு கூறுகிறது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி-ஆலோசனைக் குழு 1977 ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இக்குழுவுக்கு ஆகக் கூடிய செலவிற்காக அரசு மானியம் வழங்குகிறது. சென்னை-எழும்பூர், சைதாப்பேட்டை, ஜார்ஜ் டவுன் ஆகிய இடங்களில் மூன்று ஆலோசனை நிலையங்கள் இருப்பதுடன் 17 மாவட்டக் குழுக்களும், 57 வட்டக் குழுக்களும் உள்ளன. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவி செய்வதும், மகளிருக்கும், குழந்தைகளுக்கும் வாழ்க்கைச் செலவு படியை அளிக்க உதவி செய்வதும் இக்குழுவின் திட்டமாகும். 1981-82 ஆம் ஆண்டில் இக்குழுவிற்கு மானியமாக ரூ. 13,75,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

கடன் நிவாரணச் சட்டங்கள் குறித்து தவணைக்கால நீட்டிப்பை நீக்கியதின் விளைவாக உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. நீண்ட காலமாக முடிவுறாமல் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 1980-81-ல் கூடுதலாக 18 நீதிமன்றங்களை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.
2. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், சாத்தூர்.
3. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், ஆரணி.
4. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், கோபிச்செட்டிப்பாளையம்.





5. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், திருவண்ணாமலை.
6. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்.
7. இரண்டாம் கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், ஈரோடு.
8. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், விழுப்புரம்.
9. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், புதுக்கோட்டை.
10. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், தூத்துக்குடி.
11. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், திண்டிவனம்.
12. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், கடலூர்.
13. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம், குளித்தலை.
14. இரு கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றங்கள், கோயம்புத்தூர்.
15. முதல் கூடுதல் துணை நீதிமன்றம், இராமநாதபுரம், மதுரை.
16. முதல் கூடுதல் துணை நீதிமன்றம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.
17. இரண்டாம் கூடுதல் துணை நீதிமன்றம், சேலம்.
18. முதல் கூடுதல் துணை நீதிமன்றம், நாகர்கோவில்.

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதி மன்றத்திலும், சார்நிலை நீதி மன்றங்களிலும் (உரிமையியல் குற்றவியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறித்த விவர அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றம், துணை நீதிமன்றங்கள், மாவட்ட முனிசீப் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்களில் முடிவுறாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் முடிவுறாமலுள்ள எல்லாவகை உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டில் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. எனினும், 1980 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றத்திலும், சிறு வழக்குகள் நீதிமன்றத்திலும் முடிவு செய்யப்படாத உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் சிறிது அதிகரித்துள்ளது. உயர்நீதிமன்றத்திலும், செஷன்ஸ் நீதிமன்றத்திலும் முடிவுறாமலுள்ள குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. ஆனாலும், ஏனைய சார்நிலை நீதிமன்றங்களில் முடிவு செய்யப்படாமலிருந்த குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை 1979-இல் இருந்ததை விட 1980-இல் சிறிது அதிகரித்துள்ளது.

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள்.

| நீதிமன்றங்கள். | 1978 | | | 1979 | | | | 1980 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டு முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டு இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| **உயர் நீதிமன்றம்—** | | | | | | | | | | | |
| 1. அசல் வழக்கு மேல் முறையீடு .. | 1,146 | 1,036 | 3,500 | 1,246 | 4,746 | 892 | 3,854 | 1,296 | 5,150 | 1,562 | [illegible] |
| 2. அசல் வழக்கு பிரிவு மேல் முறையீடுகள் | 141 | 140 | 155 | 129 | 284 | 76 | 208 | 150 | 358 | 128 | [illegible] |
| 3. இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 2,404 | 3,349 | 5,192 | 2,184 | 7,376 | 2,851 | 4,525 | 2,245 | 6,770 | 2,053 | 4,717 |
| 4. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. | 603 | 983 | 1,332 | 598 | [illegible] | 839 | 1,086 | 693 | 1,779 | 884 | [illegible] |
| 5. சிவில் பல்வகை இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 38 | 273 | 85 | 37 | [illegible] | 98 | 24 | 35 | 59 | 29 | 30 |
| 6. லெட்டர் பேட்டன்ட் குறித்த மேல் முறையீடுகள் .. | 123 | 106 | 192 | 153 | [illegible] | 162 | 183 | 142 | 325 | 148 | 177 |
| 7. ரிட் மனுக்கள் | 5,099 | 5,357 | 7,863 | 6,731 | [illegible] | 5,699 | 8,875 | 7,127 | 16,022 | 7,125 | 8,897 |
| 8. ரிட் மேல் முறையீடுகள். | 599 | 445 | 888 | 711 | [illegible] | 659 | 940 | 786 | 1,726 | 574 | 1,152 |
| 9. தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள். | 340 | 691 | 831 | 130 | [illegible] | 10 | 951 | 67 | 1,018 | 532 | [illegible] |
| **மாநகர் சிவில் நீதிமன்றம்—** | | | | | | | | | | | |
| சிவில் வழக்குகள் .. | 11,369 | 9,331 | 18,804 | 10,599 | [illegible] | 10,802 | 18,601 | 8,991 | 27,592 | [illegible] | [illegible] |

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட, விசாரணையிலுள்ள வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| நீதிமன்றங்கள். | 1978 | | 1979 | | | | | 1980 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கபட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப் பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப் பட்ட வழக்குகள். | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப் பட்ட வழக்குகள். | இவ் வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| பல்வகை வழக்குகள் .. | 26,749 | 27,089 | 20,255 | 27,118 | 47,373 | 24,246 | 23,127 | 24,268 | 47,395 | 25,079 | 22,316 |
| முறையாகச் செய்யப்படும் மேல் முறையீடுகள் | 370 | 399 | 516 | 642 | 1,158 | 891 | 267 | 339 | 606 | 431 | 175 |
| பல்வகை மேல் முறையீடுகள் | 258 | 239 | 235 | 361 | 596 | 376 | 220 | 170 | 390 | 238 | 152 |
| நிறைவேற்றல் நடவடிக்கைகள் .. | 3,551 | 2,980 | 1,911 | 3,132 | 5,043 | 2,706 | 2,337 | 2,990 | 5,327 | 3,257 | 2,70 |
| சிறு வழக்கு நீதிமன்றம். | | | | | | | | | | | |
| உரிமையியல் வழக்குகள் .. | 4,566 | 4,703 | 3,351 | 5,232 | 8,583 | 5,441 | 3,142 | 5,023 | 8,165 | 4,979 | 3,186 |
| பல்வகை வழக்குகள் .. | 12,354 | 13,452 | 2,893 | 11,276 | 14,169 | 11,368 | 2,801 | 13,360 | 16,161 | 13,469 | 2,692 |
| நிறைவேற்றல் மனுக்கள் .. | 1,368 | 1,274 | 483 | 1,465 | 1,948 | 1,493 | 455 | 1,525 | 1,980 | 849 | 1,131 |
| மாவட்ட நீதிமன்றங்கள். | | | | | | | | | | | |
| உரிமையியல் வழக்குகள் .. | 1,090 | 1,058 | 190 | 1,377 | 1,567 | 1,393 | 174 | 767 | 941 | 832 | [illegible] |
| மேல் முறையீடுகள் .. | 4,827 | 5,167 | 2,554 | 4,246 | 6,800 | 4,354 | 2,446 | 3,917 | 6,363 | 4,095 | [illegible] |
| பல்வகை மேல் முறையீடுகள் .. | 1,698 | 2,258 | 962 | 1,317 | 2,279 | 1,429 | 850 | 960 | 1,810 | 1,256 | [illegible] |
| பல்வகை வழக்குகள் .. | 26,990 | 27,925 | 4,042 | 26,104 | 30,146 | 25,872 | 4,974 | 17,981 | 22,255 | 17,390 | [illegible] |

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட் விசாரணையிலுள்ள வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள்.

| நீதிமன்றங்கள். | 1978 | | 1979 | | | | | 1980 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட வேண்டிய வழக்குகள் | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முவுறாமலுள்ள வழகுகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| நிறைவேற்றல் மனுக்கள் .. | 149 | 128 | 73 | 183 | 256 | 175 | 61 | 206 | 267 | 177 | 90 |
| தொடிப்பு நிலை குறித்த மனுக்கள் | 3 | 3 | 1 | 3 | 4 | 4 | .. | .. | 1 | .. | 1 |
| துணை நீதி மன்றங்கள். | | | | | | | | | | | |
| உரிமையியல் வழக்குகள் .. | 17,403 | 12,507 | 22,776 | 28,433 | 51,207 | 22,915 | 28,294 | 18,810 | 47,104 | 19,554 | 27,550 |
| பல்வகை வழக்குகள் .. | 1,10,321 | 1,06,835 | 24,437 | 1,28,033 | 1,52,470 | 1,23,298 | 29,172 | 88,276 | 1,17,448 | 92,070 | 25,378 |
| மேல் முறையீடுகள் | 2,888 | 3,408 | 6,212 | 5,607 | 11,821 | 6,508 | 5,313 | 3,681 | 8,994 | 4,462 | 4,532 |
| பல்வகை மேல் முறையீடுகள் .. | 2,856 | 2,815 | 2,648 | 3,321 | 5,767 | 2,858 | 3,111 | 2,351 | 5,462 | 2,502 | 2,960 |
| நிறைவேற்றல் மனுக்கள் | 6,823 | 5,726 | 4,777 | 7,751 | 14,927 | 8,059 | 6,869 | 8,530 | 15,399 | 8,875 | 6,524 |
| தொடிப்பு நிலை குறித்த மனுக்கள் | 441 | 467 | 532 | 601 | 1,133 | 527 | 606 | 449 | 1,055 | 642 | 419 |
| மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள். | | | | | | | | | | | |
| உரிமையியல் வழக்குகள் .. | 1,00,652 | 77,113 | 87,219 | 1,51,631 | 2,38,850 | 1,24,935 | 1,13,915 | 75,111 | 1,89,026 | 1,00,269 | 88,757 |
| பல்வகை வழக்குகள் .. | 2,33,568 | 2,18,739 | 50,820 | 2,85,473 | 3,36,293 | 2,75,832 | 60,461 | 1,98,575 | 2,59,036 | 2,16,498 | 42.538 |
| நிறைவேற்றல் மனுக்கள் | 26,860 | 24,184 | 14,042 | 51,754 | 65,796 | 37,028 | 28,768 | 42,616 | 71,384 | 49,063 | 22.321 |
| தொடிப்பு நிலை மனுக்கள் .. | 38 | 40 | 18 | 75 | 94 | 41 | 53 | 49 | 100 | 59 | 41 |

[1981 ஏப்ரல் 30

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (குற்றவியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள்.

| நீதிமன்றங்கள். | 1978 | | | 1979 | | | | 1980 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டு இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டு இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| **உயர் நீதிமன்றம்.** | | | | | | | | | | | |
| குற்றவியல் மேல் முறையீடுகள்.. | 943 | 348 | 2,271 | 876 | 3,147 | 612 | 2,535 | 906 | 3,441 | 964 | 2,477 |
| மறு விசாரணை.. | 887 | 846 | 1,737 | 1,263 | 3,000 | 859 | 2,141 | 826 | 2,967 | 1,409 | 1,558 |
| ஆய்வு .. | 15 | 8 | 10 | 18 | 28 | 16 | 12 | .. | 12 | .. | 12 |
| **பெருநகர் மாஜிடிரேட்டு நீதிமன்றங்கள்—** | | | | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் | 2,53,642 | 2,47,059 | 20,347 | 1,99,352 | 2,19,699 | 1,99,546 | 20,153 | 2,25,535 | 2,45,688 | 2,29,399 | 16,289 |
| **செஷன்ஸ் நீதிமன்றங்கள்—** | | | | | | | | | | | |
| செஷன்ஸ் வழக்குகள் | 1,590 | 1,430 | 679 | 1,385 | 2,064 | 1,324 | 740 | 1,960 | 2,700 | 1,877 | 823 |
| மேல் முறையீடுகள் | 8,371 | 8,131 | 1,734 | 7,824 | 9,558 | 7,669 | 1,889 | 3,850 | 5,739 | 4,074 | 1,665 |
| மறு விசாரணை.. | 1,424 | 1,387 | 526 | 1,250 | 1,776 | 1,268 | 508 | 834 | 1.342 | 967 | 375 |
| **நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.** | | | | | | | | | | | |
| மேல் முறையீடுகள் | 3,647 | 3,691 | 604 | 3,520 | 4,124 | 3,541 | 583 | 1,419 | 2,002 | 1,538 | 464 |
| ஏனைய சட்டங்கள் | 8,60,121 | 8,34,789 | 78,829 | 15,10,202 | 15,81,031 | 15,00,264 | 88,767 | 3,13,907 | 4,02,674 | 3,64,154 | 38,520 |
| இந்திய தண்டனைச் சட்டக் கோவை | 91,491 | 85,142 | 24,116 | 1,26,837 | 1,50,953 | 1,19,913 | 31,040 | 1,34,378 | 1,65,418 | 1,06,677 | 58,741 |
| குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை .. | 6,607 | 6,735 | 608 | 21,700 | 22,308 | 20,951 | 1,357 | 51,159 | 52,516 | 50,154 | 2,362 |

1981 ஏப்ரல் 30]

## இணைப்பு II

(811 . ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம்.

**14 ஆம் எண் மானியக் கோரிக்கை குறித்த கொள்கைக் குறிப்பு, 1981-82.**

**சிறைகள்.**

எட்டு மத்திய சிறைகள், ஒரு பார்ஸ்டல் பள்ளி (புதுக்கோட்டை), ஆடவர் பிற்காப்பு இல்லம் (பல்லாவரம்), மாநில மகளிர் சிறை (வேலூர்), சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தனிக் கிளைச் சிறைகள், தஞ்சாவூர், சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள இரு திறந்த வெளிச் சிறைகள். சேலம் மத்திய சிறையோடு இணைக்கப் பட்டுள்ள பண்ணைச் சிறை, தஞ்சாவூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள கிளைச் சிறைகள், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிர்வாகம் முதலியவற்றை சிறைத்துறை கவனிக்கிறது. நன்னடத்தைப் பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைமைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும். அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து செயற்படவும், உரிய பயிற்சி நல்கி சீர்திருத்துவதே முக்கிய நோக்கமாகும்.

**சிறைகளின் வகைப்பாடு :**

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள்.

(2) தனிச் சிறை (மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்).

(3) கிளைச் சிறைகள்.

பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்களும், வழக்கமாக குற்றம் செய்வோரும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். கிளைச் சிறைகளில் விசாரணைக் கைதிகளும் ஒரு திங்களுக்குக் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள், இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். அதுபோல ஆண் கைதிகளும், பெண் கைதிகளும் பிரித்து வைக்கப்படுகின்றனர். வழக்கமாகக் குற்றம் செய்யும் கைதிகள் (Habitual Prisoners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையில் பெண்



கைதிகள் வைக்கப்படுகின்றனர். இளங் கைதிகளை அடைப்பதற்காக புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி இயங்குகிறது. தற்காலிக நடவடிக்கையாக மனநோய் வாய்ப்பட்ட கைதிகளைச் சென்னை அரசாங்க மனநலக் காப்பகத்தில் சேர்க்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. வேலூர், திருச்சி மத்திய சிறைகளில் தொழுநோய், தொற்று நோய் கைதிகளுக்கென்று தனிச் சிறைக்கூடங்கள் உள்ளன.

சிறைத்துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. மத்திய சிறைகள் | | 8 |
| 2. மாநில மகளிர் சிறை (வேலூர்) | | 1 |
| 3. பார்ஸ்டல் பள்ளி (புதுக்கோட்டை) | | 1 |
| 4. தனிக் கிளைச் சிறைகள் | | 3 |
| 5. கிளைச் சிறைகள்— | | |
| (அ) சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை | 10 | |
| | | 119 |
| (ஆ) வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை | 109 | |
| 6. திறந்த வெளிச் சிறைகள் | | 2 |
| 7. பண்ணைச் சிறை | | 1 |
| 8. ஆடவர் பிற்காப்பு இல்லம் (பல்லாவரம்) | | 1 |

கிளைச் சிறைகள் நீங்கலாக மத்திய சிறைகளில் மொத்தம் 12,121 கைதிகளுக்கும், கிளைச் சிறைகளில் மொத்தம் 3,446 கைதிகளுக்கும் இடவசதி உண்டு. சிறைத்துறை. வருவாய்த்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சிறைகள் குறித்த பட்டியலொன்று இணைப்பு IV-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

**II நிர்வாகம் :**

சிறைத் துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்கப்படம் ஒன்று இணைப்பு I -ல் இணைக்கப்பட்டுள்ளது. சிறைத் துறையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு II -ல் சேர்க்கப் பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 30]

1972-73 முதல் 1979-80 வரை சிறைத் துறையின் செலவினங்களும், 1980-81-க்குரிய திருத்த மதிப்பீடு, 1981-82 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972-73 முதல் 1979-80 ஆம் ஆண்டு வரை சிறைத் துறையின் வரவினங்கள், 1980-81 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு 1981-82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு குறித்த விவரங்கள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**(அ) வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சிறைகளை படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் சிறைத்துறை நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளுதல் :**

தற்போது, வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நீலகிரி, கோவை, பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைகள் அனைத்தையும் முதல் கட்டமாக சிறைத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக்கொள்வது என்னும் பிரச்சினை குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. 7 ஆம் நிதியாணைக் குழுவின் பரிந்துரையின்கீழ் மத்திய அரசு நிதி வழங்கிய உடனே மேற்சொன்ன இம்முடிவுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**(இ) சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி :**

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் 48 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு சீர்திருத்த முறைகள், சிறை நிர்வாகம், ஒழுங்கு, உடற்பயிற்சி போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க வசதியுள்ளது. பயிற்சியின் கால அளவு ஆறு மாதங்களாகும். மேலும், மத்திய சிறைகள், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியைச் சேர்ந்த ஆறு முதல் நிலைக் காவலர்களுக்கும், ஆறு முதன்மை தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சிக் காலத்தில் தற்காலச் சீர்திருத்த முறைப்படி சிறைக்கைதிகளை அணுகும் முறை குறித்து அதிக முக்கியத்துவம் அளித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

**(ஈ) சீர்திருத்த அலுவலர்களுக்கு பயிற்சிப் பள்ளி :**

தென் மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சீர்திருத்த அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க சுமார் 18.55 இலட்சம் ரூபாய்ச் செலவில் வேலூரில் வட்டாரப் பயிற்சிப் பள்ளி 1—10—1979 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி ஒரு நேரத்தில் இம் மாநிலத்தைச் சார்ந்த ஒன்பது அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இதுவரையில், 23 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பள்ளியின் தொடர் இனச் செலவுகளும், தொடரா இனச் செலவுகளும் நான்கு தென் மாநிலங்களாலும் நிகரளவில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.



1981 ஏப்ரல் 30]

**III திறந்த வெளிச் சிறைகள் :**

தற்போது இம்மாநிலத்தில் திறந்த வெளிச் சிறைகள் இரண்டு உள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நீலகிரி கிராமத்திலும் மற்றொன்று கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரிலும் உள்ளது. பண்ணைச் சிறை ஒன்று சேலம் மத்திய சிறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**2. திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன :**

(அ) பொதுவான சிறையில் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(ஆ) சிறைவாசிகளின் எதிர்காலப் புது வாழ்வுக்காக அவர்களுக்கு சரியான முறையில் வேளாண்மையில் பயிற்சி அளித்தல்.

(இ) வேளாண்மை பொருள் உற்பத்தியில் சிறைகள் தன்னிறைவு பெறுதல்.

(ஈ) நன்முறையில் நடந்து கொள்ளும் கைதிகளை மதித்து அவர்களுக்கும் சிறிதளவு உரிமைப்போக்களித்தல்.

(உ) குறைந்த அளவு கட்டுப்பாடுள்ள சிறைகளில், கைதிகளை நடத்துதல், அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்தல் தொடர்பான கோட்பாடுகளை மேம்படுத்துதல்.

3. தற்போதுள்ள திறந்த வெளிச் சிறைகளின் அடிப்படையில், கீழ்க்காணும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகள் அமைப்பது குறித்த செயற் குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

(1) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை அருகில் முத்துப்பட்டி.

(2) திருநெல்வேலி மாவட்டத்தில் சிங்கம்பட்டி.

(3) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வேப்பாக்கம் அரசு விதைப் பண்ணை.

(4) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்கலம்.

1976 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட திறந்த வெளிச் சிறை குறித்த ஆய்வுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இச் செயற்குறிப்புகள் உள்ளன. ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்திய அரசால் அளிக்கப்படும் நிதி உதவியைக் கொண்டு, மேற்கண்ட நான்கு திறந்த வெளிச் சிறைகளையும் 1982-84-ல் துவக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**V கைதிகளின் வகைப்பாடும் அவர்களுக்குரிய சிறப்புரிமைகளும் :**

சிறையில் கைதிகளுக்காக 'ஏ', 'பி' என்ற இரண்டு பிரிவுகள் மட்டும் உள்ளன. சமூக அந்தஸ்து, கல்வி, வாழ்க்கைத்தரம், சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம், நடத்தை, முன்வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தண்டனை வழங்கும் நீதி மன்றங்கள் கைதிகளுக்கு மேற்கண்ட வகுப்புகளை அளிக்கின்றன. சமூக அந்தஸ்து, கல்வி, பழக்க வழக்கம், ஆகியவற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் கைதிகள் 'ஏ' வகுப்பு பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரிகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்துகொண்ட குற்றத்தைச் செய்வதற்காகத் தண்டிக்கப்பட்டவருக்கும் 'ஏ' வகுப்பு அளிக்கப்பட மாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும் சிறையில் 'ஏ' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். 'பி' வகுப்பு சாதாரணமாக எல்லா வகைக் கைதிகளுக்கும் அளிக்கப்படும்.

**V (அ) உணவு :**

**(1) சாதாரண உணவு.**

'ஏ' வகுப்பு கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உணவு கீழ்க்கண்ட நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு :—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் ;

(2) சைவ உணவருந்தும் வேலை செய்யா கைதிகள் ;

(3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் ;

(4) அசைவ உணவருந்தும் வேலை செய்யா கைதிகள்.

இக்கைதிகள் தங்களது சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட், கோகோ, ஓவல்டின் போன்ற உணவுப் பொருள்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்குச் சைவ உணவு வழங்கப்படுகிறது. இந்த உணவின் அளவு, வேலை செய்யும் கைதிகளுக்கும், வேலை செய்யாக் கைதிகளுக்குமிடையே மாறுபடும். மருத்துவ அலுவலர் கைதிகளுக்கு மருத்துவ ரீதியில் பால், இறைச்சி, ரொட்டி, வெண்ணெய், பழங்கள் மற்றும் முட்டை ஆகியவைகளை வழங்கப் பரிந்துரை செய்யலாம்.



**(2) சத்துணவு.**

கைதிகளுக்கு உணவில், கலோரி அளவை அதிகம் அளிப்பதற்கு வகை செய்யும் சத்துணவுத் திட்டம் சென்னை மத்திய சிறையில் 1971 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்பட்டது. இத் திட்டம் பின்னர், மதுரை, கோவை மத்திய சிறைகளிலும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து அமுலாக்கப்பட்டது. சத்துணவுத் திட்டத்தின்படி, காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், மீதி நான்கு நாட்களுக்கு பிட்டும் கொடுக்கப்படுகின்றன. மாலையில் கொடுக்கப்படும் கடலைச் சுண்டலுக்குப் பதிலாக, வேர்க்கடலைப் பருப்பும் வழங்கப்படுகின்றது. புளிச்சோறு, தயிர்சோறு, தேங்காய்ச் சோறு ஆகியவை போன்ற பல்வேறு வகை உணவை அவற்றுக்குப் பொருத்தமான உணவைத் தொடு கறிகளுடன் மதிய உணவாக சுழல் முறையில் அளிப்பதற்கும், கிளைச் சிறைகளில் உள்ளோர் தவிர ஏனைய சிறைகள் அனைத்திலுமுள்ள அசைவ உணவருந்தும் கைதிகளுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை 100 கிராம் இறைச்சி வழங்கவும், சைவ உணவருந்தும் கைதிகளுக்கு இந்த இறைச்சிக்குப் பதிலாக தகுந்த மாற்றுணவு வழங்கவும் மத்திய அரசின் உதவியோடு ஐந்து இலட்சம் ரூபாய்க்கு 1980 பிப்ரவரியில் ஒப்புதலளிக்கப்பட்டது. சோளம், கேழ்வரகு, ஆகியவற்றை வழங்குவதற்குப் பதிலாகச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் நீட்டிய அரிசி உணவை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது மத்திய அரசின் உதவியோடு மத்திய சிறைகள் அனைத்திலும் மாநில மகளிர் சிறை (வேலூர்) யிலும் கொண்டு வரப்படும்.

**(3) ஓரளவுச் சத்துணவுத் திட்டம்.** Partly Nutritions Dict Scheme

இத்திட்டத்தின் கீழ், 'பி' வகுப்பு சிறைக் கைதிகளுக்குக் காலை நேரங்களில் அளிக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், நான்கு நாட்களுக்குப் பிட்டும் வழங்கப்படுகிறது. மாலை வேளைகளில், கடலைச் சுண்டல் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மற்ற மத்திய சிறைகளிலும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

(வேலூரிலுள்ள) மாநில மகளிர் சிறை உட்பட எல்லா மத்திய சிறைகளிலும் உள்ள அனைத்து 'பி' வகுப்பு கைதிகளுக்கும் ஒரே சீரான உணவு முறையைக் கொண்டு வருவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. அரசு ஆணை எண் 108, உள்துறை, நாள் 14—1—1980-ன் மூலம் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை கைதிகளுக்கு வாரத்தின் நான்கு நாட்கள் வழங்கப்பட்டு வந்த சோளப் பிட்டுக்குப் பதிலாக தற்போது வழங்கப்

படும் உணவுப் பொருள்களின் அளவில் கூடுதல் எதும் இன்றி, கடலைச் சுண்டல், காப்பி மற்றும் கஞ்சி அல்லது உப்புமா வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

(4) உணவுக்காகும் செலவு.

பல்வேறு வகைக் கைதிகளுக்கு அனுமதிக்கத்தக்க பல்வேறு அளவு உணவுக்கு, கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஆகும் தோராயமான செலவு குறித்த விவரங்கள் வருமாறு :—

(1) 'ஏ' வகுப்பு கைதிகள்—

| | ரூ. பை. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள். | 7.86 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள். | 7.06 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள். | 8.27 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா கைதிகள் | 7.92 |
| (2) 'பி' வகுப்பு கைதி—சத்துணவுத் திட்டத்தின் கீழ் | 4.50 |
| (3) 'பி' வகுப்பு கைதி ஓரளவுச் சத்துணவுத் திட்டத்தின் கீழ்— | |
| வேலை செய்வோர் | 3.55 |
| வேலை செய்யாதோர் | 3.25 |

(5) சிறப்பு உணவு.

பொங்கல், விடுதலை நாள் விழக்களின் போது கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1 கூடுதல் செலவில், சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

(ஆ) உடையும் படுக்கையும்.—

'ஏ' வகுப்பு கைதிகள் சொந்தப் படுக்கை வைத்துக் கொள்ளவும் வேலை செய்யும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன் படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை செய்யும் நேரங்களில் சிறை ஆடையை அவர்கள் அணிதல் வேண்டும். உறவினர்களைக் காணும்போது 'ஏ' வகுப்பு கைதிகள் தங்களுடைய சொந்த உடைகளை அணியலாம். 'பி' வகுப்பு கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறை ஆடைகளையே அணிய வேண்டும். அனைத்து மத்திய சிறைச் சாலைகள், மகளிருக்கான மாநில சிறைச்சாலை, வேலூர், சிறப்பு கிளைச் சிறைச்சாலைகள், திறந்த வெளிச் சிறைச்சாலை ஆகியவற்றில் சிறை வைக்கப்பட்ட 'பி' வகுப்பு சிறைக்-



கைதிகளுக்கும், புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும் உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க 1980 ஆம் ஆண்டு பிப்பரவரித் திங்களில் அரசு ஒப்பளித்துள்ளது. சிறைகளுக்குத் தேவையான தலை யணைகள் எவ்வளவு என்பதை அறிந்துகொண்டு அவற்றை கோவை மத்திய சிறையில் தயார் செய்து வரப்படுகிறது.

(இ) சோப்பு, முதலிய பொருள்கள்.—

எல்லா கைதிகளும் சோப்பு, தலைக்குத் தேய்க்கும் எண்ணெய் ஆகிய வைகளை தங்களுடைய சொந்தச் செலவில் வாங்கிப்பயன்படுத்த அனுமதிக் கப்படுகிறார்கள். மாதத்திற்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற் காக ஒவ்வொரு கைதிக்கும் 28 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு கைதிக்கும் சியக்காய்தூளும், சலவைச் சோப்பும் வழங்கப்படுகிறது. கோவை மத்திய சிறைசியிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக அவர் களுக்கு மாதத்திற்கு ஒருமுறை கூடுதலாக எண்ணெய் அளிக்கப்படுகிறது. நன்னடத்தையான அனைத்து வகுப்புக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான அளவை மட்டும் பெறுவது என்று வரம்பு நிபந்தனைக்கு உட்பட்டு, சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள்.

(ஈ) நேர் காணலும் கடிதங்களும்.—

'ஏ' வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களுடன் ஒரு சமயத்தில் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு கைதிகள் மாதத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மூன்று பேர்களுடன் ஒரே சமயத்தில் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

(உ) செய்தித் தாள்களும் இதழ்களும்.—

அரசுச் செலவில் 'பி' வகுப்பு கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.—

1. தினமணி.
2. சுதேசமித்திரன்.
3. அண்ணா.
4. விடுதலை.
5. இந்து.

'ஏ' வகுப்புக் கைதிகள் மரச்சாமான்கள், கொசுவலை மற்றும் புகை செய்தித் தாள்களை வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதுதவிர, சிறைச்சாலை நூலகத்தில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட உள்ளூர் நூலக ஆணைக்குழுவிடமிருந்தும் புத்தகங்கள் பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியல் ஒன்று அவசியமேற்பட்டால் அவற்றை வாங்கிக் கொள்வதற்காகச் சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஊ) இதர சலுகைகள்—

'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களது சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த யிலை, சமையலுக்கும், உண்டி அருந்துவதற்கும் தேவைப்படும் பாத்திரங்கள் ஆகியவற்றை பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மருத்துவ ஆலோசனையின் பேரில் இதற்கு முன் சிறைத்தண்டனை அடையாத, வழக்கமாகக் குற்றம் செய்யாத சிறை மருத்துவ மனையில் இருக்கும் கைதிகள், சிறை மருத்துவ மனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க சிறைக் கண்காணிப்பாளரின் விருப்பத்தின் பேரில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் கைதிகள் அவர்களுடைய நன்னடைத்தையைப் பொறுத்தும், அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கில் கொண்டும், தண்டனை இரவுக் காவற்காரர்கள் Convict Night Watchman தண்டனை மேற்பார்வையாளர் Convict overscers மற்றும் தண்டனைக் காவலர்கள் Convict Warders என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

(எ) மனமகிழ்வு வசதிகள்.—

எல்லா மத்திய சிறை கைதிகளும் ஞாயிற்றுக் கிழமைகளிலும், மற்றைய சிறை விடுமுறை நாட்களுளிலும், கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூர் மகளிருக்கான மாநில சிறைச்சாலைக் கைதிகள் வளை பந்து Tennicoit விளையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்தியக் குற்ற இயல் கழகம்(Indian Society or Criminology, இந்திய இயற்கை விதி மற்றும் ஒழுங்குமுறைக் கழகம் Indian Institute of Normal Law and Orders) மற்றும் தமிழ் நாடு நன்னடத்தை மற்றும் சீர்திருத்த நிறுவனம் (Tamil nadu Probation and correctional Association) ஆகிய நிறுவனங்களினால் நிறுவப்பட்ட மதுரையிலுள்ள சமூக சேவை நிறுவனம் (Madurai Institute of Social Work, Madurai) மற்றும் ஆராய்ச்சிக் குழுவினர் Research Advisory Committee.



மூலம் வேலூர் மற்றும் மதுரை மத்திய சிறைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளுக்கு ஆழ்நிலைத் தியானப் பயிற்சி (Transcendental Meditation Technique) அளிக்கப்படுகிறது. ஆழ்நிலைத் தியானப் பயிற்சி மற்ற சிறைகளிலுள்ள கைதிகளுக்கும் அளிக்கப்பட உள்ளது.

VI கைதிகளுக்கான செய்தொழிலும் சிறைகளின் தொழிற்சாலைகளும்:

கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகளுக்குச் சிறையில் வேலை அளிக்கப்படுகிறது. சிறைகளில் உள்ள கைதிகளுக்கு தொழில் அளிக்கப்படுவதன் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப் புதுவாழ்வு கிடைக்க உதவுவதாகும். எனவே, பயனில்லாத உற்பத்தி நோக்கமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. எல்லாச் சிறை வேலைகளும் கடினம், நடுத்தரம், எளிமை என்ற மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி கைதிக்கு உரியவேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோலால் பொருட்களைச் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் ஆகிய தொழில்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கைதிகள் தங்களது விடுதலைக்குப்பின் தங்களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக்கொள்கின்ற வகையில் நவீன வேளாண்மை முறைகள் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாயத் தொழிற்சாலையும் இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலைகள் நவீனப் படுத்தப்பட்டு வருகின்றன.

எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியிலுள்ள கைதிகளுக்கும் கீழ்க் குறிப்பிடப்பட்ட சில தொழில்களின் பயிற்சி அளிக்கும் கருத்துரு அரசு பரிசீலனையில் உள்ளது):—

1. செங்கல் உற்பத்தித் தொழில்.
2. குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல்.
3. சிறு மின் இணைப்புப் பயிற்சி.
4. மோட்டாருக்கான மின் கம்பியை மீண்டும் சுற்றுதல்.
5. உலோகத் துண்டு இணைப்புப் பயிற்சி.
6. தகடு வேலை செய்தல்.
7. வண்ணம் பூசுதல் (பெயர்ப்பலகை எழுதுதல் உட்பட).
8. சைக்கிள் பழுது பார்த்தல்.

ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, இந்திய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டத்தை செயற்படுத்த கருதப்படுகிறது. இம்மாநிலத்திலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பயிற்றுநர்களால் மேற்கண்ட பயிற்சி அளிக்கப்படும். இத்தொழில்களில் பயிற்சி பெற்று ஆதரவற்ற கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் செய்யலாம்.

இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் கீழ்க் காணும் வீதங்களில் பணிக்கொடை பெறத் தகுதி பெறுகிறார்கள்.—

| | பணிக்கொடையின் வீதம் (ஒரு திங்களுக்கு). ரூ. காசு. |
|---|---|
| 1. கைதிகள் | 0.25 |
| 2. கைதிகள் (இரவுக் காவலர்) | 0.50 |
| 3. கைதிகள் (வேலை மேற்பார்வையாளர்) | 1.00 |
| 4. கைதிகள் (காவலர்) | 2.00 |

ஊதியம் ஈட்டும் திட்டமானது சேலம் மத்திய சிறைச்சாலையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஊதிய வீதங்களாவன :

| | ரூ. காசு. |
|---|---|
| 1. தேர்ச்சி பெற்ற வேலையாள் | 0.40 |
| 2. ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாள் | 0.20 |
| 3. தேர்ச்சி பெறாத வேலையாள் | 0.10 |

ஏனைய, மத்திய சிறைகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. ஊதியம் பெறும் திட்டத்தின்கீழ் மேற்சொன்ன வகை கைதிகளுக்குத் தற்போது இருந்து வரும் 40 காசு, 20 காசு. 10 காசு என்றிருக்கும் ஊதியத்தை ஒரு ரூபாய், 50 காசு, 25 காசு என்று உயர்த்துவது பற்றிய செயற் குறிப்புக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இந்திய அரசிடமிருந்து 7 ஆவது நிதி ஆணைக் குழுவின் மானியத்தின்கீழ் நிதியைப் பெற்றதும், இத்திட்டம் செயற்படுத்தப்படும்.



## VII மருத்துவ துப்புரவு நல ஏற்பாடுகள்.

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு நல ஏற்பாடுகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், சீர்திருத்தப் பள்ளியிலும், மாநில மகளிர் சிறையிலும் ஒரு மருத்துவ அலுவலரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவ அலுவலரும் ஒரு மருந்தாளுநரும் அடங்கிய மருத்துவ மனை ஒன்று உள்ளது. பல்லாவரம், ஆடவர் பிற்காப்பு இல்லத்தில் பகுதி நேர மருத்துவர் ஒருவரையும், முழு நேர மருந்தாளுநர் ஒருவரையும் கொண்ட மருத்துவமனை ஒன்று உள்ளது. தேவைப்படுகின்ற கைதிகளுக்கு அரசு செலவில் மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் பல் மருத்துவமும் செய்யப்படுகிறது. வேலூர், திருச்சிராப்பள்ளி மத்திய சிறைகளில் தொழு நோயால் நலிந்த கைதிகள், தனியாக பிரித்து தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். மன நிலை சரியில்லாத கைதிகள் மனநோய் வாய்ப்பட்ட கைதிகள் சென்னை மனநலக்காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையிலும் புதுக்கோட்டை சீர்திருத்த பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும் மற்றும் 89 கிளைச் சிறைகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய 30 கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிடங்கள் 1981-82-ல் அமைக்கப்படும்.

## VIII கைதிகளுக்குக் கல்வி வசதி அளித்தல்.

கல்வியின் மூலம் பயனடையக் கூடிய நிலையில் இருக்கும் கைதிகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் சிறந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளி உள்ளது. முதியோர் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் தற்கால முறையில் முதியோருக்கு கல்வி புகட்டப்படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள் சிறந்த நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் பல்கலைக் கழகங்கள் நடத்தும் முதுகலைப்பட்டப் படிப்பு வரையிலான தேர்வுகள் எழுத, அனுமதிக்கப் படுகிறார்கள். இது தொடர்பான புத்தகங்கள், தேர்வுக் கட்டணம், இதர செலவுகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கைதிகள் ஒருமுறை தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால் மறுமுறையும் தேர்வுக்கு அரசுச் செலவில் செல்லலாம். இதுபோல் மொத்தம் மூன்று தடவை அவர்கள் தேர்வுக்குச் செல்ல

அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் கைதிகள் தேர்வு எழுதச் செல்லும் போது அவர்களது சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதேபோல் அவர்களைக் காவல் காத்து, அழைத்துச் செல்லும் காவலர்களும் வீட்டுடை அணிந்து செல்கின்றனர்.

சிறையில் மதம், நீதி வகையான வகுப்புகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், 'நீதி அல்லது மத சம்பந்தமான உரைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்பதோடு விரிவுரையாற்றுவோர் எம்மதத்தைச் சேர்ந்தவராக உள்ளவரோ அம்மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளிடம் மட்டுமே உரையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் அத்தகைய உரைகளும் போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

IX சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை—

இப்பள்ளியில் 18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங் குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது :—

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) வேளாண்மை.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) 'பாண்டு' இசை கருவிகள் பயிற்சி.

(ஐ) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள், அங்கிருந்து அனுப்பப்பட்ட பின்னர், தங்களைத் தாமே வேலையில் அமர்த்திக் கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப்பள்ளியில் 405 மாணவர்களுக்கான இடவசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது சுமார் 150 மாணவர்கள் இங்கு உள்ளனர். இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு அங்கு 24—25 வயது பிரிவைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இத்தகைய சிறைவாசிகள் இங்கு 25 வயது வரை



வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற் கூடம், 1894 ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் (The Prisons Act) கீழ் 'சிறை' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட பார்ஸ்டல் பள்ளி மாணவர்களின் புது வாழ்வுக்காக எந்திரங்கள் அல்லது பசுமாடு அல்லது எருமை மாடுகள் வாங்குவதற்காக நிதி உதவி வழங்கப் படுகிறது. இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்களிட மிருந்து எளிய தவணைகளில் வசூலிக்கப்படும்.

X ஆடவர் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்—

பல்லாவரம், ஆடவர் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறுவனங்களில் இருந்தும் அல்லது சீர்திருத்தப் பணி சாராத நிறுவனங்களிலிருந்தும் வெளி வருபவர்களுக்கு இலாபகரமான சொந்த தொழில் புரிந்து நல்ல முறையில் வாழ்க்கை அமைத்துக் கொள்ள இயலும் வண்ணம், இரண்டு ஆண்டுகளுக்குத் தச்சு வேலை, உலோக வேலை, அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம், அளிக்கப்படுவதோடு முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1-50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதமும் பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படு கிறது. அவர்களுக்குத் தொழில் பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடத் திட்டத்தின் கீழ், ஆனால் பிற்காப்பு இல்லத்தின் நிலைமைக்கும் தேவைக்கும், ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. உரிய வயது வந்த ஆடவர் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த இருப்பிடங்கள் 100 என்றாலும், சராசரியாக 40 பேர்களே இந்த இல்லத்தில் தங்கிப் பயிற்சி பெறுகிறார்கள். இப்பிற்காப்பு இல்லவாசிகளுக்கும் சத்துணவுத் திட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

தற்போது இவ்வில்லம் பல்லாவரத்தில் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. சிறைத் துறைக்குச் சொந்தமான புழலில் உள்ள கட்டிடங்கள் இவ்வில்லத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. அக்கட்டிடங்களில் மின்சார வசதி செய்யப்பட்டதும் இவ்வில்லம் அங்கு மாற்றப்படும்.

XI. சிறைப் பார்வையாளர்கள்—

குற்றவியல் நீதித்துறை, நிதித்துறை, மருத்துவம், குடும்ப நலம், தொழில், இணைப்புப் பணிகள் ஆகிய துறைகளிலுள்ள நியமிக்கப்படும் அரசுச் சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொதுமக்கள் முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உளநோய் வல்லுநர்கள் மனோதத்துவ நிபுணர்கள், சமூகவியல் வல்லுநர்கள் ஆகியோரும் ஒவ்வொரு

சிறையிலும் அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர் வழக்கமாக விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் உதவிச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும், சிறைவாசிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு சிறைக்கும் அரசுச் சார்பற்ற சிறைப்பார்வையாளர்கள் நியமிக்கப்படுவதுடன், மாவட்ட அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களையும் அரசு நியமித்துள்ளது. இவர்கள் மாவட்டத்திலுள்ள எந்தச் சிறையையும் பார்வையிடலாம். சிறைவாசிகள், சிறைகள் சம்மந்தப்பட்ட நிர்வாகத்தை முறைப்படுத்தும் சட்டங்கள், விதிகள் ஆகியவை சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தாம் தெரிந்துக் கொள்வதும், சிறைகளின் பகுதிகளைச் சென்று பார்வையிடுவதும், அவரிடம் கைதிகள் எவரேனும் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும் பார்வையாளரின் கடமையாகும். சிறைப் பார்வையாளரின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும். சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரலின் செயற் குறிப்பையொட்டி ஆலோசனைக் குழுவினரைப்போல இவர்களது பதவிக் காலத்தை 3 ஆண்டுகளாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### XII. கைதிகள் இல்லங்களுக்குச் செல்ல விடுப்பில் அனுமதித்தல்—

கைதிகள் தமது இல்லத்திற்குச் சென்று, குடும்பத்தின் தேவைகளை கவனிக்க இயலும் வண்ணம், சம்பந்தப்பட்ட நன்னடத்தை அலுவலரின் அறிக்கையின்படி அரசினரால் விடுப்பு அளிக்கப்படுகிறது. கைதிகளை நீண்டகால விடுப்பில் அனுப்புவதற்கு அல்லது தண்டனைக் காலம், முடிவடைவதற்கு முன்னர் விடுதலை செய்வதற்கு, காவல் துறை அதிகாரிகளிடமிருந்து (மாநகரம் அல்லது சென்னையின் நேர்வில் காவல் துறை கமிஷனரிடமிருந்து, ஏனைய இடங்களாயிருந்தால், காவல் துறை சூப்பிரண்டிடமிருந்து) அறிக்கை அனுப்புமாறு கேட்கும் நடைமுறையைக் கைவிட, 1980, மார்ச் திங்களில் அரசு ஆணையிட்டுள்ளது. முதன் முதலாக விடுப்பு அளிப்பதைப் பொறுத்தமட்டில் சம்மந்தப்பட்ட நன்னடத்தை அலுவலர், சம்மந்தப்பட்ட உள்ளூர் காவல் துறை உதவி ஆய்வாளரைக் கலந்து விசாரித்து தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக அனுப்பிவைக்கிறார். முதல் தடவைக்குப் பிறகு வரும் விடுப்புகளுக்குக் காவல் துறை உதவி ஆய்வாளரைக் கலந்து ஆலோசிக்காமலேயே நன்னடத்தை அலுவலர் தமது அறிக்கையை அரசுக்கு அனுப்பிவைக்கிறார். கைதிகளின் விடுப்பு சம்மந்தமாக அரசு மிகவும் அனுதாபமாக பரிசீலனை செய்கிறது. ஆயுள் தண்டனை பெற்று கைதி ஒருமுறைகூட விடுப்பில் செல்லாமல் இருந்தால் ஐந்து வருட தண்டனைக்காலம்



கழித்திருந்தால் அவருக்கு ஒரு மாத கால விடுப்பு அளிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் விடுப்பில் சென்றதிலிருந்து இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகுதான் மேற்கொண்டு விடுப்பு அளிக்கப்படும். இன்னும் மூன்று ஆண்டுகளே சிறையில் இருக்க வேண்டிய கைதியானால் தங்களது விடுதலைக்குப் பிறகு குடும்பத்தை அமைத்துக் கொள்ள, ஏற்பாடு செய்யும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாத கால விடுப்பு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இது தவிர்த்துக் குறுகிய கால விடுப்பு (அவசரகால விடுப்பு) கைதிகளின் நெருங்கிய சொந்தக்காரர்களாகிய தகப்பனார்/தாய்/கணவர்/மனைவி/மகன்/மகள் மற்றும் உடன் பிறந்த சகோதரர்/சகோதரி போன்ற உறவினரின், உடல் நலக்குறைவு, மரணம் ஆகியவற்றிற்கும், மேலும் சொந்த மகன்/மகள், உடன் பிறந்த சகோதரர்/சகோதரி ஆகியோரின் திருமணத்திற்கும் 15 நாள்களுக்கு மேற்படாமல் கீழ்க்காணும் முறைப்படி குறுகிய காலவிடுப்பு (அவசர கால விடுப்பு) அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. ஓர் ஆண்டில் முதல் தடவை | 6 நாட்கள். |
| 2. ஓர் ஆண்டில் இரண்டாம் தடவை | 3 நாட்கள். |
| 3. ஓர் ஆண்டில் மூன்றாம் தடவை | 3 நாட்கள். |
| 4. ஓர் ஆண்டில் நான்காவது தடவை | 3 நாட்கள். |
| மொத்தம் | 15 நாட்கள். |

ஓர் ஆண்டில் ஐந்தாம் தடவையாக அவசர கால விடுப்பு தேவைப்படின் அவசியமான சந்தர்ப்பங்களில் அரசினரால் அனுமதிக்கப்படுகிறது.

### XIII. தண்டனைக் குறைப்பு—

கைதிகளின் நன்னடத்தையை வளர்த்தவும், வேலை செய்யும் ஆர்வத்தை வளர்க்கவும், ஊக்கமளிக்கும் பொருட்டுப் பல விதமான தண்டனை குறைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக, ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் நல்ல வேலைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் சாதாரண வகைத் தண்டனைக் குறைப்பாக அளிக்கப்படுகிறது. சிறைகளில் ஞாயிறன்றும், ஏனைய விடுமுறை நாட்களிலும். சமையற்கூடங்கள் மற்றும் துப்புரவுக் குழுக்களில் வேலை செய்யும் கைதிகளுக்கும் இந்த விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு, மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் கூடுதலாகத் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. கைதிக் காவலர்களுக்கு மாதத்தில் எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளின் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை

பேணி வரும் கைதிகளுக்குச் சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், நற்பணிக்காகச் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக சிறைத்துறைத் தலைவரால் ஒரு ஆண்டிற்கு 60 நாள்களும் சிறப்புத் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகளுக்கு அதிக பட்சமான ஓராண்டுக் கால சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் கைதிகளுக்கு ஒரு நேரத்தில் 10 முதல் 15 நாட்களுக்கு தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனைக் குறைப்பு தவிர மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற கைதிகளை, அக்கால அளவிற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து கைதிகளின் முந்தைய கால நடவடிக்கை சம்பந்தப்பட்ட குறிப்புகள், கைதியின் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கை ஆகியவற்றைக் கருதிப் பார்த்து ஆலோசனைக் குழு அரசின் பரிசீலனைக்கு தனது முடிவைத் தெரிவித்து வருகிறது.

இந்திய அரசு 1973-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவைக் கொண்டு வருவதற்கு முன்னர், ஆயுள் தண்டனைக் கைதிகள் உரிய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து கருதிப் பார்ப்பதற்காக ஆலோசனைக்குழுவின் முன் வைக்கப்பட்டது. ஆனால், அவர்கள் சிறைகளில் நன்முறையில் நடந்துகொண்டிருந்து அவர்கள் தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே அவர்களை விடுதலை செய்யலாம் என்று சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகள் பரிந்துரைப்பதின் பேரிலும் அவர்கள் பத்தாண்டுக்கால சிறைத் தண்டனை அனுபவித்து முடித்ததின் பேரில் அவர்கள் அரசால் சாதாரணமாக விடுதலை செய்யப்பட்டனர். மேலும், கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆயுள் தண்டனை கைதிகள் 9 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்து முடித்தாலே ஆலோசனைக் குழுவின் திட்டத்தின் கீழ் தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவார்கள்.

ஆனால், குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 433-ஏ புதிய பிரிவின் படி, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் தாம் ஈட்டிய தண்டனைக் குறைப்புகளை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் 14 ஆண்டுகள் சிறை வாசத்தைக் கழித்த பிறகே அவர்களை உரிய தண்டனைக்கால முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் குழுவின் முன் பரிந்துரைக்கு வைக்கப்படவேண்டும். ஆனால், இப்பிரிவின் செயல்திறனை நிறுத்திவைக்கையில், இப் பிரிவு புதிய விசாரணை நீதி மன்றத்தில் செயலுக்கு வருவதற்கு முன் அதாவது, 18—12—78-க்கு முன் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட கைதியை எவ்விதத்திலும் பாதிக்காது என்றும், 18—12—1978



பின்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட கைதிக்கு மட்டுமே பொருந்தும் என்றும் இந்திய உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் மேற்சொன்ன கருத்தினையொட்டி விசாரணை நீதி மன்றத்தில் 18—12—1978-க்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்துக் கருதிப்பார்ப்பதற்கு, குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 433 A புதிய பிரிவு செயலுக்கு வருவதற்கு முன்னர், ஆலோசனைக் குழு திட்டத்தின்கீழ் செயலிலிருந்த நடைமுறை பின்பற்றப்படும் என்று உள்துறையின் 6—1—1981 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் கைதிகளும், 55 வயதிற்கு மேற்பட்ட பெண் கைதிகளும் முதன் முறையாக தண்டனை அளிக்கப்பட்டிருந்து இவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு உட்பட 2½ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்திருந்தால் "வயது முதிர்வுத் திட்டத்தின்" கீழ் அவர்களை விடுதலை செய்ய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யத் தகுதி உடையவர்களாவார்கள். மாநிலச் சிறைச்சாலைகள் நடைமுறை நூல் சிறை விதிகளில் குறிப்பிடப்பட்டவாறு சிறை மருத்துவ அதிகாரி சான்றிதழ் வழங்குவதன் பேரில் நோயுற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் அவர்களது தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யக் கருதிப் பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில், காலக்கெடு முடியுமுன் விடுதலை செய்யும் முறை பிறிதொரு நடைமுறைப்படி செயலில் உள்ளது. இம்முறை "நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல்" என்று அழைக்கப்படுகிறது. 1925-ம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, கண்காணிப்பாளர் விடுதலை செய்வதற்குப் பரிவுரை செய்கிற நல்லொழுக்கமுள்ளோரைப் பொறுத்த வரையில் அவர், ஒவ்வொரு குழுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் ஆறு வாரங்களுக்குக் குறையாமல் வெளியூர்களிலுள்ள அந்தந்த மாவட்ட நன்னடத்தை அலுவலர்களுக்கும் சென்னை மாநகரில் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், மாணவர்களின் பெயர்கள், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழிற் பயிற்சி விவரங்கள், அவர்களுக்குத் தகுதியான வேலை வகை ஆகியவை பற்றிய விவரங்களை அனுப்பிவைப்பதோடு பள்ளியைப் பார்வையிட வரும் குழுவின் நன்னடத்தை அலுவலர்களிடமிருந்து அல்லது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரிடமிருந்து வரப்பெற்ற தகவலை அனுப்ப வேண்டும். பள்ளியைப் பார்வையிடும் குழு பரிவுரை செய்துள்ள மாணவர்களின் நிகர விடுதலைக்காக சிறைத்துறைத் தலைவரால் பரிசீலிக்கப்படுகிறது.

1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிச் சட்டம் 10-ஏ விதியின்கீழ் மற்றைய மத்திய சிறைகளிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்படும் (ஆயுள் தண்டனை அடைந்தவர்கள்) மாணவர்கள் 23 வயது அடைந்ததும் அவர்களை விடுதலை செய்வது குறித்து, அவர்கள் 23 வயதை அடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக அரசால் பரிசீலனை செய்யப்படுகிறது. அவர்களது தண்டனையை தள்ளுபடி செய்ய அரசு மறுத்தால் இம்மாணவர்கள் 25 வயதை அடையும்வரை பார்ஸ்டல் பள்ளியிலுள்ள துயிற் கூடத்தில் வைக்கப்பட்டு, பின்னர் அவர்கள் எந்த மத்திய சிறையிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்பட்டார்களோ அந்த சிறைக்கே மீதமுள்ள தண்டனையைக் கழிக்க மாற்றப்படுகின்றனர்.

## XIV. கைதிகளின் நலம்—

தற்போது கைதிகள் நல அலுவலர்களின் பதவிகள் மொத்தம் பத்து உள்ளன. எட்டு மத்திய சிறை ஒவ்வொன்றிற்கும் ஒரு பதவியும், வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறைக்கு ஒரு பதவியும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கு ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர் கைதிகளுக்கு சிறையின் விதிமுறைகளுக்கேற்ப அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்து வருகிறார்கள்.

பெண் கைதிகளின் குழந்தைகளைத் தனியாக வைத்திருக்க ஏற்பாடு செய்ய முடியாவிட்டால் அக்குழந்தைகளும் சிறையிலேயே வைக்கப் படுகிறார்கள். அவர்களின் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைக் காப்பிடமும், மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு குழந்தை வளர்ப்பிடமும் வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்பட்டு வருகின்றன.

கைதிகளின் நலத்திற்கும், பண்பாட்டுக்கும் ஒழுக்கச் சீரமைப்பிற்கும் ஒவ்வொரு மத்திய சிறையிலும், பண்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டுக்குழு கைதிகளின் நன்மைக்காக காலமுறையாகப் பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக்கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

கைதிகளுக்கென சிற்றுண்டி விடுதி (Canteen) கோவை, மதுரை. சேலம், வேலூர், சென்னை, பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் தொடங்கப்பட்டது. தங்களின் சொந்தக் கணக்கில் பணம் வைத்துள்ள கைதிகளும் ஊதியம் ஈட்டும் கைதிகளும் சிற்றுண்டி விடுதியில் உணவுப் பண்டங்களை வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற மற்ற மத்திய சிறைகளிலும் சிற்றுண்டி விடுதிகளைத் தொடங்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.



கைதிகள் விடுதலையான பிறகு அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், ஆயுள் தண்டனைக் கைதிகள் 50 பேருக்கு காலணி ஷூ தயாரிப்பதிலும், இயந்திரங்கள் இயக்குவதிலும், பெரம்பூரிலுள்ள டான்சி தோல் நிறுவனத்தில் பயிற்சி அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால், வேலூர் மத்திய சிறையில் தயாரிக்கப்படும் காலணி ஷூக்களின் தரம் உயரும்.

## XV. கைதிகளுக்குச் சட்ட உதவி—

விசாரணை கைதிகளுக்கும் தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கும் தமிழ் நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும், சிறைகளுக்குச் சென்று கைதிகளின் பிரச்சனை ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்ய மத்தியச் சிறைகளில் வழக்குரைஞர் களை அமர்த்தும் திட்டத்தை இக்குழு அண்மையில் கொண்டுவந்துள்ளது.

## XVI. நன்னடத்தைப் பணி—

நன்னடத்தைப் பணியானது இளங்குற்றவாளிகள், வளர்ந்த சூழ்நிலை அவர்கள் நடந்துகொள்ளும் விதம் பற்றி விசாரிப்பது, பிணையப்பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் இளங் குற்றவாளிகளையும், நன்னடத்தை ஜாமீனில் பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்களைக் கண்காணிப்பதும், நீதிமன்றங்களுக்கு ஆலோசனை நல்குவதும் முதலியன ஆகும். சிறைத் துறைத் தலைவரின் முழுக் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப் பிற்கும் உட்பட்ட நன்னடத்தைப் பணிப்பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. வட்டார நன்னடத்தை அலுவலர், ஒரு பதிவுரை எழுத்தரைக் கொண்டு ஓர் ஆராய்ச்சிப் பிரிவும் இப்பிரிவில் உள்ளது.

தமிழ்நாடு இளங்குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம் எனப்படும் மத்திய சட்டம் ஒன்றினால், (மத்திய சட்டம் 20/1958) மாற்றப்பட்டது. இம் மத்திய சட்டம் சென்னை மாநகரத்திலும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் 1—12—1962-லிருந்தும், தமிழ்நாடு முழுவதும் 1—5—1964-லிருந்தும், செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இளங்குற்றவாளிகள் செய்த குற்றம் முதல் தடவையாக இருந்தாலும், அக்குற்றத்திற்கான தண்டனை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் சிறைத்தண்டனையோ அபராதமோ அல்லது இவ்விரண்டுக்குமோ விதிக்கக்கூடிய வகையில் இருந்தால், தக்க முன்நடவடிக்கையின் பேரில் நன்னடத்தை கண்காணிப்பில் விடுதலை செய்ய இச்சட்டம் நீதி மன்றங் களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மத்திய சட்டத்தின் விதித் துறைகள் சீர்திருத்த நிர்வாகத்தின் தற்காலபோக்கிற்கேற்ப எளிமையாக உள்ளன.

## XVII. தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச்சங்கம்—

தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்டவர்களுக்கு புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், தேவைப்படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், தற்செயலாக குற்றம் புரிந்தவர்களும் இளங்குற்றவாளிகளும் வழக்கமாகக் குற்றம் புரிகிறவர்களாக மாறுவதை தடுத்தல், அவர்களின் நலனுக்காக புதிய சட்டங்களை இயற்றுதல், ஏற்கனவே இருக்கும் சட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்தவும் செய்தல் ஆகியவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும். இச்சங்கம், சிறு தொழில்கள் நடத்துவதற்கும், கருவிகள், தேநீர் கெண்டி, தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காகவும் உதவித் தொகையைக் கொடுக்கிறது. மேலும் புகைவண்டி, பேருந்து செலவிற்காக உதவித் தொகையும், தொழில் செய்வதற்கும் துணைக் கருவிகள் வாங்குவதற்கும் மானியங்களையும் வழங்குகிறது. தொழில் பயிற்சிபெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழக்காட சட்ட உதவி செய்வதற்கும், வயது முதிர்வு பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவற்றையும் வழங்குகிறது.

இச்சங்கத்திற்கு அரசினால் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மானிய உதவி ரூ. 12,000, 1980-81-லிருந்து ரூ. 18,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## XVIII. சென்னை மாநகரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் தண்டனை பெறும் குற்றவாளிகளை வைப்பதற்கென்று புழல் (செங்குன்றம்) கிராமத்தில் ஒரு புதிய சிறை கட்டுதல்—

செங்குன்றத்திற்கு அருகாமையில் புழல் கிராமத்தில் இத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன வசதிகளைக் கொண்டு புதிய சிறை கட்டும் திட்டம் அரசின் தீவிரப் பரிசீலனையிலுள்ளது. தற்போது சென்னை நகரிலுள்ள மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள, வழக்கை எதிர் நோக்கியுள்ள கைதிகளை வைப்பதற்குப் போதிய இடவசதி இன்மையால், புதிய சிறை கட்டுவது மிக இன்றியமையாததாகிறது. இத் திட்டத்திற்கு வேண்டிய நிதியை ஒதுக்குமாறு ஏழாவது நிதிக் குழுவிடம் வற்புறுத்தப்பட்டு, 1979-84 ஆண்டுத் திட்டக்காலத்தில் புதிய சிறைகள் கட்டுவதற்கென மூலதன செலவு வகையின்கீழ் ரூ. 862 இலட்சம் ஒதுக்க ஏழாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. புழலில் புதிய சிறையை அமைக்கத் தோராயமாக, ரூ. 11 கோடி செலவாகலாம். புதிதாகக் கட்டப்படவிருக்கும் சிறைக்குத் தண்ணீர் கொண்டு வரும் பிரச்சனையே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தடையாக இருந்து வந்தது. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் புதியதாகக் கட்ட கருதியுள்ள சிறைக்கென புழல் ஏரியிலிருந்து 3.5 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கிட தற்போது இசைந்துள்ளது. கட்டப்பட





உள்ள சிறைக்கான வரைபடங்கள், பொதுப் பணித்துறை கட்டிட நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகின்றன. சிறைகட்டுமான பணி 1981-82-ல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## XIX. சிறை சீர்திருத்தக் குழு—

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பிறகு சமுதாயத்திற்குத் திரும்பி கண்ணியமாகவும் நேர்மையுடனும் வாழ்க்கை நடத்தும் வகையில் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதும் சமூகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும், இம்மாநிலத்தின் சிறை சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இம்மாநிலத்திலுள்ள சிறைகள் நிர்வாகத்தில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் குறித்துப் பரிசீலித்து தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி, பாட்னா உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர். எல். நரசிம்மன், ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) அவர்கள் தலைமையில் சிறை சீர்திருத்தக் குழுவை அரசு 1978 பிப்ரவரியில் நியமித்தது.

சிறைகள், கைதிகள் தொடர்பாக பல பரிந்துரைகளை இக்குழு தம் அறிக்கையில் தெரிவித்துள்ளது. குழுவின் சில பரிந்துரைகள் குறித்து ஏற்கனவே முடிவுகள் எடுக்கப்பட்டதோடு அவை குறித்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் ஏனைய முக்கிய பரிந்துரைகள் கொள்கை சம்பந்தப்பட்டவை; அதிக நிதி ஒதுக்கம் தேவைப்படுபவை; சிறைச் சட்டங்களைத் திருத்துதல் போன்ற பரிந்துரைகள் இம்மாநிலத்தின் நிதி ஆதாரம் மத்திய அரசு உறுதி அளித்துள்ள நிதி உதவி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. சிறைகளின் நிலையிலும் கைதிகள் நிலைமைகளிலும் நல்ல முன்னேற்றம் காணும் வகையில் அரசு இயன்றவரையில் முடிந்த அளவிற்குப் பல பரிந்துரைகளைச் செயல்படுத்த ஆர்வம் கொண்டுள்ளது.

## XX. மாநிலச் சிறை நடைமுறை நூலை திருத்துதல்—

மத்திய அரசின் மாதிரிச் சிறை நடைமுறை நூலில் அடங்கியுள்ள விதித் துறைகளையும், 1978-79 ஆம் ஆண்டு சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலின் தொகுதி—II பாகம் 1-ல் உள்ள சட்டப்படியான விதிகளைத் திருத்தும் பணி 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டது. 67 அத்தியாயங்களில் 56 அத்தியாயங்களுக்கான திருத்தவரைவு விதிகள் சிறைத்துறைத் தலைவரிடமிருந்து வரப்பெற்றுள்ளன. அவை பரிசீலனையில் உள்ளன.

[1981 ஏப்ரல் 30,

## XVII. தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச்சங்கம்—

தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்டவர்களுக்கு புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், தேவைப்படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், தற்செயலாக குற்றம் புரிந்தவர்களும் இளங்குற்றவாளிகளும் வழக்கமாகக் குற்றம் புரிகிறவர்களாக மாறுவதை தடுத்தல், அவர்களின் நலனுக்காக புதிய சட்டங்களை இயற்றுதல், ஏற்கனவே இருக்கும் சட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்தவும் செய்தல் ஆகியவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும். இச்சங்கம், சிறு தொழில்கள் நடத்துவதற்கும், கருவிகள், தேநீர் கெண்டி, தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காகவும் உதவித் தொகையைக் கொடுக்கிறது. மேலும் புகைவண்டி, பேருந்து செலவிற்காக உதவித் தொகையும், தொழில் செய்வதற்கும் துணைக் கருவிகள் வாங்குவதற்கும் மானியங்களையும் வழங்குகிறது. தொழில் பயிற்சிபெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழக்காட சட்ட உதவி செய்வதற்கும், வயது முதிர்வு பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவற்றையும் வழங்குகிறது.

இச்சங்கத்திற்கு அரசினால் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மானிய உதவி ரூ. 12,000, 1980-81-லிருந்து ரூ. 18,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## XVIII. சென்னை மாநகரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் தண்டனை பெறும் குற்றவாளிகளை வைப்பதற்கென்று புழல் (செங்குன்றம்) கிராமத்தில் ஒரு புதிய சிறை கட்டுதல்—

செங்குன்றத்திற்கு அருகாமையில் புழல் கிராமத்தில் இத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன வசதிகளைக் கொண்டு புதிய சிறை கட்டும் திட்டம் அரசின் தீவிரப் பரிசீலனையிலுள்ளது. தற்போது சென்னை நகரிலுள்ள மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள, வழக்கை எதிர் நோக்கியுள்ள கைதிகளை வைப்பதற்குப் போதிய இடவசதி இன்மையால், புதிய சிறை கட்டுவது மிக இன்றியமையாததாகிறது. இத் திட்டத்திற்கு வேண்டிய நிதியை ஒதுக்குமாறு ஏழாவது நிதிக் குழுவிடம் வற்புறுத்தப்பட்டு, 1979-84 ஆண்டுத் திட்டக்காலத்தில் புதிய சிறைகள் கட்டுவதற்கென மூலதன செலவு வகையின்கீழ் ரூ. 862 இலட்சம் ஒதுக்க ஏழாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. புழலில் புதிய சிறையை அமைக்கத் தோராயமாக, ரூ. 11 கோடி செலவாகலாம். புதிதாகக் கட்டப்படவிருக்கும் சிறைக்குத் தண்ணீர் கொண்டு வரும் பிரச்சனையே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தடையாக இருந்து வந்தது. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் புதியதாகக் கட்ட கருதியுள்ள சிறைக்கென புழல் ஏரியிலிருந்து 3.5 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கிட தற்போது இசைந்துள்ளது. கட்டப்பட



1981 ஏப்ரல் 30]

உள்ள சிறைக்கான வரைபடங்கள், பொதுப் பணித்துறை கட்டிட நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகின்றன. சிறைகட்டுமான பணி 1981-82-ல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## XIX. சிறை சீர்திருத்தக் குழு—

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பிறகு சமுதாயத்திற்குத் திரும்பி கண்ணியமாகவும் நேர்மையுடனும் வாழ்க்கை நடத்தும் வகையில் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதும் சமூகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும், இம்மாநிலத்தின் சிறை சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இம்மாநிலத்திலுள்ள சிறைகள் நிர்வாகத்தில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் குறித்துப் பரிசீலித்து தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி, பாட்னா உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர். எல். நரசிம்மன், ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) அவர்கள் தலைமையில் சிறை சீர்திருத்தக் குழுவை அரசு 1978 பிப்ரவரியில் நியமித்தது.

சிறைகள், கைதிகள் தொடர்பாக பல பரிந்துரைகளை இக்குழு தம் அறிக்கையில் தெரிவித்துள்ளது. குழுவின் சில பரிந்துரைகள் குறித்து ஏற்கனவே முடிவுகள் எடுக்கப்பட்டதோடு அவை குறித்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் ஏனைய முக்கிய பரிந்துரைகள் கொள்கை சம்பந்தப்பட்டவை; அதிக நிதி ஒதுக்கம் தேவைப்படுபவை; சிறைச் சட்டங்களைத் திருத்துதல் போன்ற பரிந்துரைகள் இம்மாநிலத்தின் நிதி ஆதாரம் மத்திய அரசு உறுதி அளித்துள்ள நிதி உதவி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. சிறைகளின் நிலையிலும் கைதிகள் நிலைமைகளிலும் நல்ல முன்னேற்றம் காணும் வகையில் அரசு இயன்றவரையில் முடிந்த அளவிற்குப் பல பரிந்துரைகளைச் செயல்படுத்த ஆர்வம் கொண்டுள்ளது.

## XX. மாநிலச் சிறை நடைமுறை நூலை திருத்துதல்—

மத்திய அரசின் மாதிரிச் சிறை நடைமுறை நூலில் அடங்கியுள்ள விதித்துறைகளையும், 1978-79 ஆம் ஆண்டு சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலின் தொகுதி—II பாகம் 1-ல் உள்ள சட்டப்படியான விதிகளைத் திருத்தும் பணி 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டது. 67 அத்தியாயங்களில் 56 அத்தியாயங்களுக்கான திருத்தவரைவு விதிகள் சிறைத்துறைத் தலைவரிடமிருந்து வரப்பெற்றுள்ளன. அவை பரிசீலனையில் உள்ளன.

## XXI நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள்—

1981-82 ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள் :

| தொடர் எண்ணும், திட்டமும். | செலவு ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு. |
|---|---|
| 1 மதுரை மத்திய சிறைக்குக் கூடுதல் கண்காணிப்பாளர் பதவிக்கு அனுமதி வழங்குதல் | 18,000 |
| | தொடர் இனச் செலவு 16,000 |
| | தொடரா இனச் செலவ 2,000 |
| 2 கூடுதலாக 2 முதல்நிலை பெண் வார்டர்களையும், 15 இரண்டாம் நிலை பெண் வார்டர்களையும் கீழ் குறிப்பிட்ட சிறைகளிலும் கிளைச் சிறைகளிலும் நியமித்தல் | |

| சிறைகளின் பெயர். (1) | பெண் முதல்நிலை வார்டர். (2) | பெண் இரண்டாம் நிலை வார்டர். (3) | ரூ. (4) |
|---|---|---|---|
| மத்திய சிறை, சென்னை | 1 | 3 | 94,000 |
| மத்திய சிறை, மதுரை | .. | 3 | |
| மத்திய சிறை, கோவை | .. | 3 | |
| தனிக் கிளைச் சிறை கொக்கிறகுளம். | .. | 1 | |
| [illegible]னிக் கிளைச் சிறை, திருச்சி. | 1 | 3 | |
| கிளைச்சிறை, நாகர்கோவில் | .. | 2 | |
| மொத்தம் .. | 2 | 15 | |

| | ரூ. |
|---|---|
| 3 கோவை மத்திய சிறையில் வார்டர்களுக்கு 12 குடியிருப்புகள் கட்டுதல். | 3,42,000 |
| 4 வேலூர் மத்திய சிறையில் வார்டர்களுக்கு 12 குடியிருப்புகள் கட்டுதல். | 3,42,000 |
| 5 வேலூர், மாநில மகளிர் சிறையில் உள்ள சிறை அறைகளில் நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்தல் | 80,000 |



## XXII ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரை—

அனைத்து மாநிலங்களிலுள்ள சிறைகளின் நிர்வாகத்தரத்தை உயர்த்த வேண்டுமென்று ஏழாவது நிதிக்குழு வலியுறுத்தியுள்ளது. நாளொன்றுக்கு கைதி ஒருவருக்கு ஆறு ரூபாய் செலவிடப்பட வேண்டுமென்றும், தற்போதுள்ள சிறைகளை விரிவுபடுத்துவதன் மூலமும், புதிய சிறைகள் கட்டுவதன் மூலமும் சிறைகளின் அதிக எண்ணிக்கையில் கைதிகளை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் இக்குழு வலியுறுத்தி உள்ளது. அதன்படி இக்குழு, 1979-80 முதல் 1983-84 வரையிலுள்ள காலத்திற்கு வருவாயினச் செலவு வகையில் ரூ. 631 இலட்சமும், மூலதனச் செலவு வகையில் ரூ. 862 இலட்சமும் ஆக மொத்தம் 1,493 இலட்சமும் ஒதுக்கீடு செய்யும்படி பரிந்துரைத்துள்ளது. 1979-84 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்ற மூலதனச் செலவாக ரூ. 862 இலட்சமும், வருவாயினச் செலவாக ரூ. 631 இலட்சமும் ஆகக் கூடிய கீழ்க்காணும் திட்டங்கள் இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளன. 1979-80 ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவின் கீழ் ரூ. 200 இலட்சத்திற்கும், வருவாயினச் செலவின்கீழ் ரூ. 40 இலட்சத்திற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கு மூலதனச் செலவின்கீழ் ரூ. 1 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

| ஆண்டு. (1) | | மூலதனச் செலவு. கட்டிடங்கள் கட்ட. (2) | வசதிகள் ஏற்படுத்த. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1979-80 | .. | 269.78 | 30.60 | 300.38 |
| 1980-81 | .. | 180.87 | 71.61 | 252.48 |
| 1981-82 | .. | 99.82 | 19.00 | 118 82 |
| 1982-83 | .. | 91.72 | 20.00 | 111.72 |
| 1983-84 | .. | 69.84 | 8.50 | 78.34 |
| | | 712.03 | 149.71 | 861.74 |
| | | (அல்லது) | (அல்லது) | (அல்லது) |
| மொத்தம் | .. | 712.00 | 150.00 | 862.00 |

1980-81 ஆம் ஆண்டின் மூலதனச் செலவின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள் (அரசாணை எண் 487, உள்துறை, நாள் 22—2—1980).

| பணிகள். | செலவு. ரூ. |
| --- | --- |
| 1. பாளையங்கோட்டை மத்திய சிறையில் கூடுதல் இட வசதி ஏற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் செய்தல். | 47,00,000 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் தட்டச்சு எந்திரம், தொலை பேசி இணைப்பு, தறிகள் மற்றும் தையல் எந்திரங்கள் வாங்குதல். | 78,350 |
| 2 கடலூர் கிளைச் சிறையை தனிக் கிளைச் சிறையாக மாற்றுதல்—கட்டிடம் கட்டுதல். | 5,25,000 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் வாங்குதல் இதர செலவுகள் வசதிகள் செய்தல். | 9,580 |
| 3. செங்கல்பட்டு கிளைச் சிறையை தனிக் கிளைச் சிறையாக மாற்றுதல்—கட்டிடங்கள். | 4,82,000 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் வாங்குதல் முதலியன. | 8,000 |
| 4. சென்னை மத்திய சிறை கிளை அச்சகத்தை மாற்றுதல், கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல், வசதிகள் ஏற்படுத்தல். | 28,50,000 |
| குடியிருப்புகள் கட்டுதல் | 14,21,800 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள், தட்டச்சு எந்திரம் வாங்குதல் முதலியன. | 21,850 |
| 5. மதுரை மத்திய சிறை கூடுதல் கட்டிடத் தொகுதி—சமையல் அறை, சாப்பாட்டுக்கூடம் போன்றவை கட்டுதல், குடிநீர் வழங்கல் போன்ற வசதிகள் செய்து கொடுத்தல். | 60,50,000 |
| குடியிருப்புகள் கட்டுதல் | 11,50,000 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள், தட்டச்சுப் பொறி வாங்குதல், தொலைபேசி நிறுவுதல், கைதிகளுக்கு பணி செய்யுமிட வசதிகள் செய்தல். | 75,750 |
| 6. திருச்சி முகாம் அறை—1,000 கைதிகளுக்கு இடவசதியுடன், சமையல் அறை, சாப்பாட்டுக்கூடம், நவீன வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள், நேர்காணல் அறை போன்றவற்றுடன் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல். | 60,00,000 |




| பணிகள். | செலவு. ரூ. |
| --- | --- |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள், தட்டச்சு எந்திரம் வாங்குதல், கைதிகள் பணி செய்யுமிட வசதிகள் அளித்தல். | 71,250 |
| 7. வேலூர் மத்திய சிறையில் கூடுதல் கட்டிடத் தொகுதிகள்-சமையல் அறை-சாப்பாட்டுக்கூடம் போன்றவற்றைக் கட்டுதல், குடிநீர் வழங்கல். | 31,00,000 |
| குடியிருப்புகள் கட்டுதல் | 8,08,900 |
| வேலூர் தனிக் கிளைச் சிறைக்குக் கட்டிடம் கட்டுதல் வசதிகள் செய்து கொடுத்தல். | 5,70,000 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் வாங்குதல், தட்டச்சு எந்திரம், தொலைபேசி இணைப்பு—கைதிகளுக்கு பணி செய்யுமிட வசதிகள் செய்து கொடுத்தல் முதலியன. | 79,400 |
| 8. சேலம் மத்திய சிறையில் கூடுதல் கட்டிடத் தொகுதி நேர்காணல் அறை போன்றவை கட்டுதல்—குடிநீர் வழங்கல் போன்ற வசதிகள் செய்து கொடுத்தல். | 16,00,000 |
| மேசை, நாற்காலி போன்ற பொருட்கள், தட்டச்சு எந்திரம் வாங்குதல். கைதிகளுக்கு பணியிட வசதிகள். | 70,485 |
| செலவு மொத்தம் | 2,96,73,215 |

II. வருவாயினச் செலவு.

| | 1979–80. | 1980–81. | 198 –82. | 1982–83. | 1983–84. | மொத்தம். |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | |
| 1 சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தல் கைதிகளுக்கு வழங்கும் உணவின் தரத்தை உயர்த்துவது சிறையில் பணியில் இருக்கும் வார்டர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்குவது. | 5 | 28 | 31 | 34 | 37 | 135 |

| | 1979-80. | 1980-81. | 1981-82. | 1982-83. | 1983-84. | [1981 மார்ச் 30] மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 2 (அ) சிறைகளில் கைதிகளைக் கூடுதலாக வைப்பதால் கண்காணிப்பு—கணக்கு பிரிவுகளில் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்கள் குறித்த செலவுகள். | .. | 52 | 55 | 95 | [illegible] | [illegible] |
| (ஆ) கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிர்வாகத்திலிருந்து சிறைத் துறை நிர்வாகத்திற்கு கொண்டு வருதல். | .. | 18 | 46 | 78 | 117 | 259 |
| 3 கைதிகளுக்குக் கூடுதல் படுக்கைகள், பாத்திரங்கள் வழங்குவது. | 3 | 4 | 5 | 6 | 7 | 25 |
| 4 கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவுபடுத்தல் குறைந்த தண்டனை பெற்ற கைதிகளுக்கு சிறு தொழில்களில் பயிற்சி அளித்தல். கைதிகளுக்கு சிறைக்கு உள்ளேயே சிற்றுண்டி வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல். | 2 | 20 | 26 | 27 | 28 | 103 |
| மொத்தம் .. | 10 | 122 | 163 | 203 | 250 | 748 |

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| ஐந்து ஆண்டுகளுக்கான செலவு .. | 748 |
| மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி .. | 631 |
| 1979-84 ஆம் ஆண்டுகளில் மாநில அரசு நிதியிலிருந்து செலவிடவேண்டிய தொகை .. | 117 |



பணியாளர் அமைப்பு.

சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கை.

அதிகாரிகள்.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. சிறைத் துறைத் தலைவர் | 1 |
| 2. சிறைத் துறைத் துணைத் தலைவர் | 1 (தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளது) |
| 3. நிர்வாக அலுவலர் | 1 |
| 4. கணக்கு அலுவலர் | 1 |
| 5. உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 6. சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் | 1 |
| 7. கண்காணிப்பாளர் (தேர்வு நிலை) | 1 |
| 8. சிறைக் கணிகாணிப்பாளர் (தேர்வு நிலை) | 6 |
| 9. சிறைக் கண்காணிப்பாளர்கள் | 3 |
| 10. கண்காணிப்பாளர், மகளிர் மாநிலச் சிறை, வேலூர் | 1 |
| 11. கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள். | 5 |
| 12. துணைக் கண்காணிப்பாளர்கள், மகளிர் மாநிலச் சிறை, வேலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | 2 |
| 13. சிறை அலுவலர்கள். | 8 |
| 14. சிவில் உதவி மருத்துவர்கள் | 17 |
| 15. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் | 1 |
| 16. வட்டார நன்னடத்தை அலுவலர்கள் | 12 |
| 17. கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம். | 1 |

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| **நிர்வாகப் பிரிவு.** | |
| I. பொதுவான வகையினர்— | |
| 18. அலுவலகக் கண்காணிப்பாளர்கள் | 6 |
| 19. உதவியாளர்கள் | 59 |
| 20. இளநிலை உதவியாளர்கள் | 78 |
| 21. சுருக்கெழுத்து தட்டச்சர்கள் | 3 |
| 22. தட்டச்சர்கள் | 19 |
| 23. மேல் நிலைத் தட்டச்சர்கள் | 5 |
| 24. பதிவேட்டு எழுத்தாளர்கள் | 35 |
| 25. டபேதார் | 1 |
| 26. அரசு அடிப்படை ஊழியர்கள் | 92 |
| 27. அரசு அடிப்படை ஊழியர்கள் (தேர்வு நிலை) | 3 |
| II. தனி வகையினர்— | |
| 28. காப்பாளர் | 1 |
| 29. துணைச் சிறை அலுவலர்கள் | 8 |
| 30. உதவி கண்காணிப்பாளர் | 1 |
| 31. சார்நிலை உதவிக் கண்காணிப்பாளர் | 1 |
| 32. கண்காணிப்பாளர்கள், தனிக் கிளைச் சிறைகள் | 8 |
| 33. சேம உதவிக் காப்பாளர் | 1 |
| 34. உளவியல் வல்லுநர்கள் | 8 |
| 35. சமூகப் பணியாளர்கள் | 8 |
| 36. உதவிச் சிறை அலுவலர்கள் | 24 |
| 37. தொழிற்சாலை மேலாளர் | 1 |
| 38. செவிலியர் | 10 |
| 39. மருந்தாளுநர் | 18 |
| 40. செவிலியர் உதவியாளர்கள் (ஆண்) | 29 |



**நிர்வாகப் பிரிவு—தொடர்ச்சி.**

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| II. தனி வகையினர்—தொடர்ச்சி. | |
| 41. முதன்மைத் தலைமைச் சிறைக் காவலர்/வாயில் காவலாள். | 34 |
| 42. வாயிற் காவலாள்—தனிக் கிளைச் சிறைகள் | 3 |
| 43. சிறைக் காவலர்—சிற்றலுவலர் (நிலை I) | 129 |
| 44. சிறைக் காவலர்—சிற்றலுவலர் (நிலை II) | 1,126 |
| 45. அலுவலக மேலாளர்கள் (நிலை I) | 3 |
| 46. அலுவலக மேலாளர்கள் (நிலை II) தேர்வு நிலை உதவியாளர்கள். | 16 |
| 47. சிப்ப எழுத்தர்கள் | 10 |
| 48. இடைநிலை ஆசிரியர்கள் (தேர்வு நிலை) | 33 |
| 49. தொடக்க நிலை ஆசிரியர்கள் | 4 |
| 50. உடற் பயிற்சி ஆசிரியர் | 1 |
| 51. தச்சுத் தொழில் பயிற்றுநர்கள் (நிலை I மற்றும் | 17 |
| 52. நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் | 5 |
| 53. புத்தகம் கட்டும் மேஸ்திரிகள் | 2 |
| 54. தையல் தொழில் முதலாள் | 12 |
| 55. கருமார் தொழில் பயிற்றுநர்கள் | 3 |
| 56. தச்சுத் தொழில் முதலாள் | 3 |
| 57. மின் கம்பியாட்கள் | 12 |
| 58. கிளைச் சிறைச்சாலை சிறை அலுவலர்கள் (நிலை I) | 5 |
| 59. கிளைச் சிறைச்சாலை சிறை அலுவலர்கள் (நிலை II) | 5 |
| 60. நன்னடத்தை அலுவலர்கள் | 28 |
| 61. நலவசதி அலுவலர்கள் | 10 |
| 62. லாரி ஓட்டுநர்கள் | 8 |
| 63. பிரம்புத் தொழில் பயிற்றுநர் | 1 |

நிர்வாகப் பிரிவு—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| II. தனி வகையினர்—தொடர்ச்சி. | |
| 64. தச்சுக் கம்மியர் | 1 |
| 65. லாரி ஆள் | 1 |
| 66. காலணி தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 67. காலணி தயாரிப்புப் பணி கம்மியர் | 1 |
| 68. காலணி தயாரிப்புப் பணி மேலாள் | 4 |
| 69. அலுமினியப் பட்டரை முதலாள் | 1 |
| 70. வண்டிக்காரர்கள் | 6 |
| 71. நூற்பு ஆசிரியர் | 1 |
| 72. நெசவு ஆசிரியர் | 1 |
| 73. சாய வேலை ஆசிரியர் | 1 |
| 74. கூடுதல் சாய வேலை ஆசிரியர் | 1 |
| 75. பாவு ஆசிரியர் | 1 |
| 76. சணல், கம்பளி முதலியவற்றின் சிக்கு எடுக்கும் ஆசிரியர். | 1 |
| 77. இசைக் குழு ஆசிரியர் | 1 |
| 78. உயரிய பயிற்சி பெற்ற தொழிலாளர் | 1 |
| 79. பயிற்சி பெற்ற தொழிலாளர் (நிலை II மற்றும் III) | 4 |
| 80. கைத்தொழில் ஆசிரியர்கள் | 3 |
| 81. முதலாள் ஆசிரியர் | 1 |
| 82. கூடார உதவி மேலாள் | 1 |
| 83. பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாள் | 1 |
| 84. கொதிகலன் சிற்றாள் | 1 |
| 85. பொருத்துத் தச்சர் | 1 |
| 86. பருத்தி கலந்து சுத்தம் செய்யும் அறைப் பணியாளர் | 1 |
| 87. நெசவுப் பணியாளர்கள் (நிலை I) | 2 |
| 88. நூற்பாலை எழுத்தர் | 1 |



நிர்வாகப் பிரிவு—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| தனி வகையினர்—தொடர்ச்சி. | |
| 89. நெசவுப் பணியாளர் (நிலை II) | 1 |
| 90. நெசவுப் பணியாளர் (நிலை III) | 3 |
| 91. கட்டுக் கட்டும் பணியாள் | 1 |
| 92. நீர் இறைப்பு நிலையப் பொருத்துநர் | 1 |
| 93. கொதிகலன் முதலாள் | 1 |
| 94. குழாய் பொருத்துநர் | 1 |
| 95. உருளை மூடுபவர் | 1 |
| 96. மோட்டார் பணியாட்கள் | 3 |
| 97. நூற்புத் தலைமைப் பணியாளர் | 1 |
| 98. உதவி நூற்புப் பணியாட்கள் | 2 |
| 99. நூற்பு ஆசிரியர் | 1 |
| 100. செய்முறை விளக்குநர் | 8 |
| 101. எந்திரம் இயக்குபவர்கள் (நிலை I) | 2 |
| 102. எந்திரம் இயக்குபவர்கள் (நிலை II) | 2 |
| 103. உற்பத்தி உதவியாளர் | 1 |
| 104. தச்சர்கள் | 4 |
| 105. பால்காரர் | 1 |
| 106. கால்நடை உதவியாளர்கள் | 6 |
| 107. பாலர் பள்ளி பயிற்சி பெற்ற ஆசிரியர் | 1 |
| 108. செவிலியர் உதவியாளர்கள் (பெண்) | 1 |
| 109. பற்றவைப்பவர்கள் | 2 |
| 110. தலைமை ஆயா | 1 |
| 111. ஆயாக்கள் | 8 |
| 112. மின்சார மோட்டார் பணியாட்கள் | 2 |
| 113. மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள் எச்.எம்.பி. தொழில். | 6 |
| 114. மின்துறை மேற்பார்வையாளர் | 1 |
| 115. சவக்கார வேதியல் பணியாளர் | 1 |
| 116. எந்திரம் ஓட்டுநர் | [illegible] |
| 117. மெருகிடும் உதவியாளர் | 1 |

நிர்வாகப் பிரிவு—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| **தனி வகையினர்**—தொடர்ச்சி. | |
| 118. காகிதக் கூழ் செய்யும் உதவியாளர்கள் | 5 |
| 119. காவற்காரர்கள் | 10 |
| 120. சிறைக்காவல் ஏவலாட்கள் (கிளைச் சிறைகள்) | 92 |
| 121. உடற்பயிற்சி மருத்துவ தொழில் நுட்ப பணியாளர் | 1 |
| 122. கால்நடை மேய்ப்பவர் | 1 |
| 123. எந்திரக் கலப்பை (உழுவை) ஓட்டுநர்கள் | 2 |
| 124. துப்புரவாளர்கள் | 6 |
| 125. சமையற்காரர்கள் | 19 |
| 126. தோட்டக்காரர் | 1 |
| 127. உழுவை (எந்திரக் கலப்பை) சுத்தம் செய்பவர் | 1 |

## இணைப்பு III.

(IIஆம் எண் இனத்தைக் காண்க.)

1972-73 முதல் 1979-80 வரை சிறைத் துறை ஈட்டிய வருவாய், செய்த செலவு ஆகியவை தொடர்பானதும், 1980-81 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1981-82 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவை குறித்த விவரங்கள் அடங்கிய விரை அறிக்கை.

| ஆண்டு. | தொகை. (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|
| 1. செலவு— | |
| 1972-73 | 2,58,50 |
| 1973-74 | 2,91,61 |
| 1974-75 | 3,76,34 |
| 1975-76 | 4,78,26 |
| 1976-77 | 4,56,44 |
| 1977-78 | 4,27,02 |
| 1978-79 | 4,53,23 |
| 1979-80 | 5,32,94 |
| 1980-81 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு | 5,92,86 |
| 1981-82 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 6,03,25 |



| ஆண்டு. | தொகை. (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|
| 2. வரவு— | |
| 1972-73 | 96,12 |
| 1973-74 | 1,33,13 |
| 1974-75 | 1,00,61 |
| 1975-76 | 99,82 |
| 1976-77 | 1,18,61 |
| 1977-78 | 1,24,99 |
| 1978-79 | 1,14,02 |
| 1979-80 | 80,43 |
| 1980-81 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு | 1,03,23 |
| 1981-82 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1,03,23 |

## இணைப்பு IV.

(I. ஆம் எண் இனத்தைக் காண்க.)

**சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ளவை :**

| | |
|---|---|
| 1. மத்திய சிறை | சென்னை. |
| 2. மத்திய சிறை | வேலூர். |
| 3. மத்திய சிறை | கடலூர் |
| 4. மத்திய சிறை | திருச்சிராப்பள்ளி. |
| 5. மத்திய சிறை | சேலம். |
| 6. மத்திய சிறை | கோயம்புத்தூர். |
| 7. மத்திய சிறை | மதுரை. |
| 8. மத்திய சிறை | பாளையங்கோட்டை. |
| 9. மாநிலச் சிறை (மகளிர்) | வேலூர். |
| 10. பார்ஸ்டல் பள்ளி | புதுக்கோட்டை. |
| 11. தனிக் கிளைச் சிறை (ஆண்கள்) | சேலம். |
| 12. தனிக் கிளைச் சிறை | கொக்கிரகுளம். |

| | |
|---|---|
| 13. தனிக் கிளைச் சிறை | திருச்சிராப்பள்ளி |
| 14. திறந்தவெளிச் சிறை | தஞ்சாவூர். |
| 15. திறந்தவெளிச் சிறை | சிங்காநல்லூர். |
| 16. கிளைச் சிறை (தரம் 1) | சைதாப்பேட்டை. |
| 17. கிளைச் சிறை (தரம் 1) | நாகர்கோவில். |
| 18. கிளைச் சிறை (தரம் 2) | செங்கற்பட்டு. |
| 19. கிளைச் சிறை | மதுராந்தகம். |
| 20 கிளைச் சிறை | பூவிருந்தவல்லி. |
| 21. கிளைச் சிறை | பொன்னேரி. |
| 22. கிளைச் சிறை | திருவள்ளூர். |
| 23. கிளைச் சிறை | திருத்தணி. |
| 24. கிளைச் சிறை | காஞ்சிபுரம். |
| 25. கிளைச் சிறை | தஞ்சாவூர். |

2. வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டுக்குள்ள கிளைச் சிறைகள் பற்றிய பட்டியல்:

(i) வட ஆற்காடு மாவட்டம்.

கிளைச் சிறை—

1. அரக்கோணம்
2. ஆம்பூர்
3. செய்யார்
4. ஆரணி
5. செங்கம்
6. குடியாத்தம்
7. போளூர்
8. திருப்பத்தூர்
9. திருவண்ணாமலை
10. வாணியம்பாடி
11. வாலாஜாப்பேட்டை
12. வந்தவாசி



(ii) தென் ஆற்காடு மாவட்டம்.

கிளைச் சிறை—

13. கள்ளக்குறிச்சி
14. சிதம்பரம்
15. கடலூர்
16. செஞ்சி
17. காட்டுமன்னார்கோவில்
18. பரங்கிப்பேட்டை
19. திண்டிவனம்
20. திருக்கோவிலூர்
21. உளுந்தூர்ப்பேட்டை
22. விழுப்புரம்
23. விருத்தாசலம்
24. பண்ணுருட்டி

(...) கோயம்புத்தூர் மாவட்டம்.

கிளைச் சிறை—

25. அவனாசி
26. மேட்டுப்பாளையம்
27. திருப்பூர்
28. உடுமலைப்பேட்டை
29. பொள்ளாச்சி
30. பல்லடம்

(x) பெரியார் மாவட்டம்.

கிளைச் சிறை—

31. பவானி
32. தாராபுரம்
33. ஈரோடு
34. கோபிச்செட்டிப்பாளையம்
35. காங்கேயம்
36. சத்தியமங்கலம்
37. பெருந்துறை

(v) நீலகிரி மாவட்டம்

கிளைச் சிறை—

38. உதகமண்டலம்

39. குன்னூர்

40. கூடலூர்

(vi) சேலம் மாவட்டம்.

கிளைச் சிறை—

41. ஆத்தூர்

42. நாமக்கல்

43. ஓமலூர்

44. பரமத்தி

45. இராசிபுரம்

46. சங்ககிரி

47. திருச்செங்கோடு

48. சேலம் (மகளிர்)

(vii) மதுரை மாவட்டம்

கிளைச் சிறை—

49. திண்டுக்கல்

50. கொடைக்கானல்

51. நிலக்கோட்டை

52. பழனி

53. பெரியகுளம்

54. திருமங்கலம்

55. உசிலம்பட்டி

56. உத்தமபாளையம்

57. வேடசந்தூர்

58. மேலூர்



(viii) கன்னியாகுமரி மாவட்டம்.

கிளைச் சிறை—

59. தக்கலை

60. குழித்துறை

(ix) இராமநாதபுரம் மாவட்டம்.

கிளைச் சிறை—

61. அருப்புக்கோட்டை

62. முதுகுளத்தூர்

63. பரமக்குடி

64. இராமநாதபுரம்

65. சாத்தூர்

66. சிவகங்கை

67. திருவில்லிப்புத்தூர்

68. திருப்பத்தூர்

69. திருவாடானை

70. விருதுநகர்

(x) திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

கிளைச் சிறை—

71. அரியலூர்

72. செயங்கொண்டான்

73. குளித்தலை

74. லால்குடி

75. மணப்பாறை

76. முசிறி

77. பெரம்பலூர்

78. துறையூர்

79. கரூர்

(xi) புதுக்கோட்டை மாவட்டம்.

கிளைச் சிறை—

80 புதுக்கோட்டை
81. அறந்தாங்கி
82. கீரனூர்
83. திருமயம்

(xii) திருநெல்வேலி மாவட்டம்.

கிளைச் சிறை—

84. அம்பாசமுத்திரம்
85. கோவில்பட்டி
86. நாங்குனேரி
87. சங்கரன்கோவில்
88. தூத்துக்குடி
89. ஸ்ரீவைகுண்டம்
90. தென்காசி
91. திருச்செந்தூர்

(xiii) தஞ்சாவூர் மாவட்டம்.

கிளைச் சிறை—

92. கும்பகோணம்
93. மாயூரம்
94. மன்னார்குடி
95. நாகப்பட்டினம்
96. நன்னிலம்
97. பட்டுக்கோட்டை
98. பாபநாசம்
99. சீர்காழி
100. திருத்துறைப்பூண்டி
101. திருவையாறு
102. திருவாரூர்
103. தரங்கம்பாடி
104. திருவிடைமருதூர்



(xv) தருமபுரி மாவட்டம்.

கிளைச் சிறை—

105. ஓசூர்
106. அரூர்
107. தருமபுரி
108. கிருஷ்ணகிரி
109. ஊத்தங்கரை.

## இணைப்பு III

(87 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

1980-81 ஆம் ஆண்டின் மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் நடவடிக்கைகள் குறித்த ஆய்வு அறிக்கை.

### பொது.

மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறை 15—10—1977 வரை ஒரு தனித் துறையாக இயங்கி பின்னர் உள் துறையுடன் இணைக்கப்பட்டது. 15—4—1981 முதல் மதுவிலக்கு-ஆயத்தீர்வை, உள் துறையிலிருந்து பிரிந்து தனித் துறையாக இயங்கி வருகிறது. பின்வரும் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பணியை இத்துறை கவனிக்கிறது.

### சட்டங்கள்.

1. தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம்.

2. 1955 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பு (ஆயத்தீர்வை) சட்டம்.

3. 1930 ஆம் ஆண்டு அபாயம் விளைவிக்கக்கூடிய மருந்துப் பொருள்கள் சட்டம்.

4. 1956 ஆம் ஆண்டு சாராவியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் தயாரிப்புப் பொருட்கள் (மாநிலங்களுக்கிடையே வர்த்தகம்—வாணியம்) கட்டுப்பாட்டுச் சட்டம்.

5. 1878 ஆம் ஆண்டு அபின் சட்டம்.

**விதிகள்.**

1. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மது (உரிமமும் மற்றும் அனுமதிச் சீட்டும்) பற்றிய விதிகள்.

2. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு விஷ சாராவி, மீதைல் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகள்.

3. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மூலிகைச் செடிகளிலிருந்து தயாரிக்கப் படும் மருந்துகள் பற்றிய விதிகள்.

4. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சாராவி விதிகள்.

5. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சாராவி கலந்த சாரப் பொருட்கள் பற்றிய விதிகள்.

6. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு நீரா அல்லது பதநீர் பற்றிய விதிகள்.

7. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்பு (ஆயத்தீர்வை) விதிகள்.

8. தமிழ்நாடு 1932 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் பற்றிய விதிகள்.

9. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு குளோரல் ஹைட்ரேட் பற்றிய விதிகள்.

10. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு வடிசாலை பற்றிய விதிகள்.

11. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு அபின் பற்றிய விதிகள்.

12. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு சாராவி கலந்த தயாரிப்புகள் (மாநிலங் களுக்கிடையே வர்த்தகம்-வாணிபம்) கட்டுப்பாட்டு விதிகள்.

13. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு (கட்டுப் பாடும் மற்றும் முறைப்படுத்தலும்) பற்றிய விதிகள்.

**அமைப்பும் அதன் பணிகளும்.**

2. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட நாள்வரை, 30—11—1980 ஆம் நாள் வரை, மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணையர் இத்துறையின் தலைவராக இருந்தார். மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணை யாளர் அலுவலகப் பணியைக் கவனிப்பதற்குத் தலைமை அலுவலகத்தில் மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துணை ஆணையர் மற்றும் அலுவல் முறைச் 



செயலாளர் ஒருவரும், உதவிச் செயலாளர் இருவரும் இருந்தனர். நிர்வாகப் பணியைக் கவனிப்பதில் மதுவிலக்கு-ஆயத்தீர்வை துணை ஆணையர் ஒருவரும் மற்றும் கணக்கு அலுவலர் ஒருவரும் இருந்தனர். வருவாய் வாரியம் 1—12—1980 இல் கலைக்கப்பட்ட பின்னர் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டின்படி முன்னர் மதுவிலக்கு-ஆயத்தீர்வை துணை ஆணையர் மற்றும் ஆணையாளரின் அலுவல் முறைச் செயலர் வகித்து வந்த பதவி, தற்போது இயக்குநர், மதுவிலக்கு-ஆயத்தீர்வை என மாற்றப்பட்டுள்ளது. இந்த இயக்குநருக்குத் தலைமை அலுவலகத்தில் உதவி இயக்குநர் இருவரும் நிர்வாகப் பணியைக் கவனிக்க கூட்டு இயக்குநர் ஒருவரும், கணக்கு அலுவலர் ஒருவரும் உதவி புரிகிறார்கள். வருவாய் வாரியம் கலைக்கப்பட்டு, மதுவிலக்கு ஆயத்தீர்வைக்கென தனி இயக்குநர் அலு வலகம் அமைக்கப்பட்டதன் விளைவாக இதுவரை வருவாய் வாரியத்தின் மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணையர், மதுவிலக்கு ஆயத்தீர்வை சட்ட விதிகளின் கீழ் செயலாக்கி வந்த அதிகாரங்களைத் தமிழக அரசு 1—12—1980 ஆம் நாளிட்ட வருவாய்த்துறை ஆணை எண் 2675-ன் படி அரசு மதுவிலக்கு-ஆயத்தீர்வை இயக்குநர்/மாவட்ட ஆட்சியர்/கூட்டு மருந்து கட்டுப்பாட்டு அலுவலர்/சர்க்கரை இயக்குநர் மற்றும் மாநிலக் கருப்பஞ் சாற்று கசண்டு கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியோருக்கு வழங்கியுள்ளது. 9—4—1981 முதல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் இத் துறையின் தலைவராக இருக்கிறார்.

3. மதுவிலக்கு-ஆயத்தீர்வை இணை இயக்குநர், வடிசாலைகளையும், ஆயத்தீர்வைக்கு உட்பட்ட தொழிற்சாலைகளையும் சாராவியை அடிப் படையாகக் கொண்டு நடைபெறும் பெருந் தொழிற்சாலைகளையும் மேற் பார்வையிடுகிறார். இவருக்கு வடிசாலை அதிகாரிகள், ஆயத்தீர்வைக்கு உட்பட்ட தொழிற்சாலை அதிகாரிகள், ஆயத்தீர்வை மேற்பார்வை அதி காரிகள் ஆகியோர் உதவி புரிகின்றனர். இவர்கள் மாவட்டங்களிலுள்ள வருவாய்த்துறை பணியாளர் தொகுதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படு கிறார்கள்.

**மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துதல்.**

4. மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்தும் பணி, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டங்களைச் செயல்படுத்துதல்) அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் காவல் துறையால் கவனிக்கப்படுகிறது. சென்னை மதுவிலக்குப் பலனாய்வுப் பிரிவு, காவல்துறை டெபுடி இன்ஸ் பெக்டர் ஜெனரல் ஒருவரை, தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து கள், சாராயம் ஆகியவற்றைக் கள்ளத் தனமாக வடித்தெடுத்து விற்பது குறித்த தகவல்களைச் சேகரித்து மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள்மீது வழக்கு தொடர்வதே மதுவிலக்குப் புலனாய்வுப் பிரிவின், முக்கியப் பணியாம். இந்நிறுவனம் மிக முக்கியமான வழக்குகளை மட்டுமே கவனித்து வருகிறது. திங்கள் தோறும் நடைபெறும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில், மாவட்ட அளவில் மதுவிலக்கைச் செயல்படுத்தும் பணி குறித்து மாவட்ட ஆட்சியாளர்கள் ஆராய்கின்றனர். இதற்காக அவர்களிடம் தனியாகப் பணியாளர் எவரும் இல்லை. அவர்கள் தங்களிடம் பணிபுரியும் வருவாய்த்துறைப் பணியாளர்களையும் மாவட்டங்களிலுள்ள காவல்துறைப் பணியாளர்களையும் கொண்டு இப்பணியை மேற்கொள்கின்றனர். கள்ளச் சாராயம் தயாரிப்போரையும், விற்பனை செய்வோரையும் கண்டுபிடித்து வழங்குத் தொடரும் பணி உட்பட மதுவிலக்கைச் செயல்படுத்தும் பணிமாவட்டங்களில் காவல்துறை சூப்பிரடென்டென்ட்களாலும், சென்னை மாநகரில் காவல்துறை ஆணையாளராலும் 31—8—1980 ஆம் நாள் வரை கவனிக்கப்பட்டு வந்தது. 1—9—1980-லிருந்து இப்பணியினை அரசு புதிதாக ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் நியமிக்கப்பட்டுள்ள 40 பேர்கள் கொண்ட மதுவிலக்குத் தனிக் காவல் துறையிடம் (Prohibition Cell) ஒப்படைத்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய தனிக் காவல் துறைக்கு, மாவட்டக் காவல்துறை சூப்பிரடெண்டெண்ட் ஒருவரும், கூடுதல் சூப்பிரடெண்டெண்ட் ஒருவரும் ஏனைய காவல்துறைப் பணியாளர்களும் பணியாற்றுவர். எல்லாப் பணிகளையும் கவனிப்பது இவர்களுடைய பொறுப்பாகும். இதன் விளைவாக மதுவிலக்குச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தும் பொறுப்பு லோக்கல் காவல் படையினரிடமிருந்து நீக்கப்பட்டது.

## மதுவிலக்கு.

**மதுவிலக்கை மீண்டும் கொண்டு வருதல் :**

5. இந்தியாவிலேயே மதுவிலக்கைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் மக்களாக இல்லாத உலகப்போர் நடைபெற்ற 1943-1946 ஆம் ஆண்டுகளிலும், அதன்பிறகு 1971-74-ம் ஆண்டுகளிலும், தமிழ்நாட்டில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறுகிய காலம் நீங்கலாக, சுமார் 40 ஆண்டுக் காலமாகச் செயலில் இருந்து வருகிறது. இம்மாநிலத்தில் 1—9—1974 ஆம் நாளிலிருந்து மீண்டும் மதுவிலக்கு செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கு முன்னரே கள்ளுக்கடைகள் மூடப்



பட்டன. 1—9—1974 ஆம் நாளிலிருந்து சாராயக் கடைகளும், இந்தியாவில் தயாராகும் மதுவகைகளையும் வெளிநாட்டில் தயாராகும் மதுவகைகளையும் விற்பனை செய்யும் கடைகளும் மூடப்பட்டன. அரசு தற்போது மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்த தீர்மானித்துள்ளது. இதற்கான திருத்தங்கள் மதுவிலக்கு சட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

6. அயல்நாட்டு மதுவகைகளையும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளையும் விற்பனை செய்வதற்குத் தற்போது நடைமுறையில் இருந்து வரும் உரிமங்களின் வகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | உரிமங்களின் வகை. (1) | உரிமங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| எப்.எல். 1 | புட்டிகளில் அடைக்கப்பட்ட மது வைத்திருப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் அல்லது கொடுப்பதற்கும் ஆன உரிமம் .. .. | 309 |
| எப்.எல்.2ஏ | தனி உரிமை பெற்றிராத சங்கம் ஒன்று அதன் உறுப்பினர்களுக்கு வழங்க மது வைத்திருப்பதற்கான உரிமம் .. .. .. | 25 |
| எப்.எல்.3ஏ | அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள், சொந்தமாக மது அனுமதிச் சீட்டு வைத்துக் கொண்டு இந்தியாவில் தங்கியுள்ள அயல் நாட்டினர், சொந்தமாக மது அனுமதிச் சீட்டு வைத்திருக்கும் இந்தியக் குடிமக்கள் ஆகியோருக்கு வழங்குவதற்காக நட்சத்திர ஓட்டல்கள் மது வைத்திருப்பதற்கான உரிமம் .. | |
| எப்.எல்.4 | சேனைப் பண்டகசாலைத் துறை மேலாளர் மது வைத்திருப்பதற்கான உரிமம் .. | 30 |
| எப்.எல்.4ஏ | இராணுவப் பிரிவுகளுக்கும், இராணுவப் பணியாளர்களுக்கும் மது வைத்திருந்து விற்பதற்கான உரிமம் | |
| எப்.எல்.5 | வர்த்தகக் கப்பற்படையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு / மாலுமிகளுக்கு, சென்னை மாலுமிகள் நிறுவனம்/ சென்னை மாலுமிகள் விடுதி—மது வைத்திருந்து கொடுப்பதற்கான உரிமம் | 34 |
| எப்.எல்.6 | அறிவியல் சார்ந்த தொழில் பணிகளுக்கு அல்லது இது போன்ற பிற காரியங்களுக்காக மது வைத்திருந்து பயன்படுத்துவதற்கான உரிமம் | 2 |

அனுமதிச் சீட்டு வைத்திருப்போருக்கு நம் நாட்டில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள், வெளிநாட்டில் தயாராகும் மதுவகைகள் ஆகியவற்றை விற்பனை செய்ய 299 கூட்டுறவுச் சங்கங்களும் 10 தனியார் வியாபாரிகளும் எப்.எல். 1 உரிமம் பெற்றுள்ளனர். தனியுரிமை பெற்றிராத பொழுதுபோக்குச் சங்கங்களிலும் (Non-proprietory Clubs), நட்சத்திர ஓட்டல்களிலும் மது விற்க அனுமதிக்கப்படுகிறது. அனுமதிச் சீட்டு வைத்திருப்போருக்குத் தேவைப்படும் வெளிநாட்டு மதுவகைகள் இறக்குமதி செய்யப்படுவதோடு நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகளும் வழங்கப்படுகின்றன.

7. மதுவிலக்கு கண்டிப்பாக நிறைவேற்றப்படுவதற்கும், கள்ளத்தனமாக மது கிடைப்பதை முடிந்த அளவிற்குத் தடுப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளும்போது, இம்மாநிலத்திற்கு வெளியிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கோ அல்லது வருகையாளருக்கோ மது தேவைப்படுமானால் அவர்களுக்கு அதனைக் கிடைக்கச் செய்யும் வகை செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் விமான தளம், இரயில் நிலையம் போன்ற முக்கிய இடங்களில் சுற்றுலாத் துறையின் மூலம் இவர்களுக்கு மது அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற்கு மாநில அரசு ஏற்பாடுகள் செய்துள்ளது. இதைப் போலவே இம்மாநிலத்தில் நடக்கின்ற கூட்டங்கள், மாநாடுகள் முதலியவற்றிற்கு வெளி மாநிலங்களிலிருந்து வந்து கலந்து கொள்பவர்களுக்குத் தாமதமேதுமில்லாமல் மது அருந்துவதற்கான சிறப்பு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. வெளி மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கு வந்து சில நாட்கள் தங்கி இருப்பவர்களுக்கு மது தேவைப்படும்போது மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது.

8. மருத்துவக் காரணங்களுக்காக மருத்துவக் குழு பரிந்துரை செய்வதன் பேரில் அரசு மது அனுமதிகளை வழங்கி வந்தது. தமிழ்நாட்டில் வாழ்பவர்களில் 45 வயதுக்கு மேற்பட்டு இருப்பவர்கள் மட்டுமே, மது அனுமதிச் சீட்டு பெற முடியும் என விதிகளில் அப்போது வகை செய்யப்பட்டிருந்தது. மேற்படி விதிகள் தற்போது தளர்த்தப்பட்டு மது அருந்தும் வயதை 45 வயதிலிருந்து 30 வயதாகக் குறைத்து அனுமதிச் சீட்டு வழங்க வட்டாட்சியருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 31—12—1980 வரை 1,90,183 மது அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**செயல்படுத்துதல் :-**

9. மதுவிலக்குத் திட்டம் என்பது ஒரு சமூக நலத் திட்டமாகும். கடுமையான உழைப்பின் மூலம் ஈட்டிய வருமானத்தை மதுவிற்காகச் செலவிட்டுச் சீரழிவதினின்றும், ஏழை எளிய மக்களைக் காத்து அவர்கள்



வாழ்க்கையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பாமர மக்களின் நல்வாழ்வைக் கருதி மதுவிலக்கைச் செவ்வனே செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மதுவிலக்கைத் திறம்படவும், கண்டிப்பாகவும் அமுல்படுத்துவதில் மாநில அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. கள்ளத்தனமாக மது வகைகள் தயாரிப்பதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்ற வழிவகைகளை ஒழிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாகக் கள்ளத்தனமாக மதுவிற்போர், கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், மதுவகைகளைக் கடத்துவோர் ஆகியோரின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மதுவிலக்குக் குற்றங்கள் செய்பவர்களின் எண்ணிக்கைத் தற்பொழுது குறைந்துள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் நடைபெற்ற மதுவிலக்குக் குற்றங்களை கண்டுபிடித்த விவரங்களைக் கொண்ட அறிக்கை இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு மது வகைகளைக் கள்ளத்தனமாகக் கடத்தி கொண்டுவருவதைத் தடுப்பதற்கும், மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கும் சென்னை மாநகரக் காவல் துறையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் சாராவி மீதான கட்டுப்பாடு :**

10. கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்குத் தேவைப்படும் மிக முக்கியமான மூலப் பொருள்களில் ஒன்று கருப்பஞ்சாற்றுக் கசண்டு, கள்ள வாணிபத்திற்கு இது கிடைக்காதவாறு இதன் மீதான கட்டுப்பாடு கண்டிப்பாக்கப்பட்டுள்ளது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு விற்பதற்கு இடையாட்களுக்கு உரிமங்கள் வழங்கப்படுவதில்லை. வடிசாலைகள், கால்நடை, கோழித் தீவனங்களைத் தயாரிப்போர் முதலியவர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இதில் முறைகேடுகள் நிகழ்வதைத் தடுப்பதற்காக, சர்க்கரை ஆலைகள், வடிசாலைகள், மற்றும் இதர உரிமம் பெற்றவர்களின் இடங்களைத் திடீரென்று அவ்வப்போது சென்று பார்வையிடுமாறு மாவட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். கால்நடைத் தீவனம் தயாரிப்பதற்காகவென்று ஒப்புக்கொண்டு கூறிவிட்டு வேறு வகையில் பயன்படுத்திய எப்.எல். 4 உரிமங்கள் பல ரத்து செய்யப்பட்டுள்ளன. காவல் துறையினரும், வனத்துறைப் பணியாளர்களும் இணைந்து செயல்படுவதால் காடுகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது கண்டுபிடிக்கப்படுகிறது. இம்மாதிரி கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் ஏராளமான எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதுபோலவே சாராவி கள்ளச் சந்தைகளுக்கு அனுப்பப்படுவதற்கான வாய்ப்புகளை நீக்க வடிசாலைகள் மீதான கட்டுப்பாடும்

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு வெளியே அனுப்பப்படும் சாராவி இடை வழியிலேயே இறக்குமதி செய்யப்படாத வகையில் எஸ்கார்ட் பாதுகாப்புடன் வெளியே அனுப்பப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுத்தப்பட்டுள்ளது.

**சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருட்களைப் பொதுத் துறையில் தயாரித்தல் :**

11. தொழில் காரியங்களுக்காக, ஒதுக்கப்படும் சாராவியை குடிப்பதற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கத்தோடு பிரெஞ்சு பாலிஷ், வார்னிஷ் முதலியவற்றைப் பொதுத்துறையிலேயே தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்பத்தூரிலுள்ள டான்சி நிறுவனமும், மதுரையில் உள்ள அரசு அரக்குத் தொழிற்சாலையும் தின்னர் (Thinner) பட வார்னிஷ் காஸ்கட் ஷெல்லாக்கு (Gosket Shellac) முதலியவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனால் உரிமம் பெற்று இப் பொருள்களை பயன்படுத்துவோருக்கு இப்பொருள் நியாயமான விலையில் கிடைக்கிறது. இந்த உற்பத்திப் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் பெருமளவில் பயன்படுத்துபவர்களுக்கு நேரடியாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**விஷ சாராவி தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுத்தல் :**

12. வார்னிஷ், பிரெஞ்சு பாலிஷ் போன்ற விஷ சாராவியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற பொருள்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்படும் ஏராளமான உரிமங்களின் பேரில் ஒதுக்கப்பட்ட விஷ சாராவி, கள்ளச்சாராயமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. உரிமதாரர்களுக்கு வழங்கப்பட்ட சாராவியை அவர்கள் உண்மையிலேயே பயன்படுத்தியுள்ளார்களா என்பதைக் கண்டறிவதற்கான அவர்களது வளாகங்கள், கணக்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக தனிச் சோதனை ஒன்று நடத்தப்பட்டது. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம், 1—10—1978-லிருந்து திருத்தியமைக்கப்பட்டு, இதன்படி சாராவி, வார்னிஷ் ஆகியவற்றின் மொத்தம், மற்றும் சில்லறை விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் பொதுத்துறைத் தொழில் பிரிவுகள் ஆகியவற்றிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துடன் புது டில்லி தொழில் நுட்பவியல் வளர்ச்சித் துறை தலைமை இயக்குநர் அல்லது சென்னை தொழில்-வாணிகத் துறை இயக்குநரிடம் சிறுரகத் தொழில் என்று பதிவு செய்யப்பட்டுள்ள தொழில்களுக்கு மட்டுமே, சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை தயாரிப்பதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

**மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்கள் :**



13. மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயாரித்தல் சட்டத்தின்படி சாராவி ஒதுக்கீடுகள் பெற்றுள்ள உரிமதாரர்களின் நடவடிக்கைகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்ட பல நிலைகளில் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இன்னும் பல இடங்களில் பிணைய வைப்புத் தொகைகள் முழுவதுமாகவோ, ஒரு பகுதியோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சாராய பானமாக, டிஞ்சரைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு எந்த ஒரு தனி டிஞ்சர் தயாரிப்பிலும் 10 சதவீதம் பங்களவிற்கு மேல் சாராவியைப் பயன்படுத்தல் கூடாது என்று உரிமங்களில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. டிஞ்சர் [illegible] கள்ளத்தனமாக இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு [illegible] எல்லைப் பகுதிகள் விழிப்போடு கண்காணிக்கப்படுகிறது.

**ஆசவங்களும் மற்றும் அரிஷ்டங்களும்—**

14. மதுவைக் கள்ளத்தனமாக வழங்குவதற்கான முக்கிய வாயிலாக ஆசவங்களும், அரிஷ்டங்களும், கஷாயங்களும் அமைந்து உள்ளன. ஆசவங்கள், அரிஷ்டங்கள், கஷாயம் ஆகியவற்றை விற்பதாகச் சொல்லிக்கொண்டு, சாராயம் விற்கப்பட்டு வந்துள்ளது. சில இடங்களில் வண்ணங்கலந்த கலவை நீரில் குளோரல் ஹைட்ரேட் மட்டும் சேர்க்கப்பட்டு விற்கப்பட்டு வந்தது. இவற்றைக் கண்டு பிடிக்கும் பொருட்டு, தனிச் சோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் போலியான தயாரிப்புகளின் மாதிரிகள் பெருமளவில் கைப்பற்றப்பட்டன. இந்த வழக்குகள் அனைத்திலும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் அல்லது மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அல்லது முடிந்தால் இவ்விரு சட்டங்களின் படியும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**எல் 2 உரிமங்கள் வழங்குவதை முறைப்படுத்துதல்—**

15. ஆசவங்கள், அரிஷ்டங்கள், கஷாயம் ஆகியவற்றைத் தயாரிக்க அனுமதி பெற்றுள்ள எல் 2 உரிமதாரர்களின் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டு மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்வதை முறைப்படுத்துவதற்கு வகை செய்யும் மருந்து, மற்றும் ஒப்பனை பொருள்கள் சட்டத்தின் அத்தியாயம் IV-A —1977 லிருந்து தமிழ் நாட்டிற்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. அதன் விளைவாக, எந்த நிபந்தனைகளின்படி நாட்டு மருந்துகள் தயாரிக்கப்படவேண்டுமென்பது, நாட்டு மருந்து தயாரிப்பாளர்கள் அவர்களின் பணியாளர்கள் ஆகியோருக்கு அமைய வேண்டிய தகுதிகள், தாக்கட்டுப்பாட்டினைக் கருதி, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைச் சோதனை செய்தல், விற்பனையை முறைப்படுத்துதல் ஆகியவற்றைத் தற்போது வரையறுத்து சொல்ல முடிகிறது. மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் [illegible] வது அத்தியாயத்

இன் விதிமுறைகள் செயல்படுத்தப்படுவதால், ஆசவங்கள், அரிஷ்டங்கள் முதலியவற்றைத் தயாரிப்பவர்கள் மீதான கட்டுப்பாட்டினை மேலும் கண்டிப்புடன் செயல்படுத்த முடிகிறது. மேலும் உண்மையான அப்படிப்பட்ட மருந்துகளைத் தயாரிப்பவர்கள் மட்டுமே இந்த உரிமங்களைப் பெற முடிகிறது.

**குளோரல் ஹைட்ரேட்—**

16. குளோரல் ஹைட்ரேட் அபாயம் விளைவிக்கக்கூடிய ஓர் இரசாயனப் பொருளாகும். தமிழ்நாட்டில் குளோரல் ஹைட்ரேட் தயாரிப்பதற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்துவது, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட சிறப்பு விதிகளால் முறைப்படுத்தப்படுகிறது. உண்மையில் பயன்படுத்துபவர்கள் சிலருக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் குளோரல் ஹைட்ரேட் நாட்டில் பிற பகுதிகளிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படுகிறது, இவ்வாறு கள்ளத்தனமாகக் கொண்டு வருவதைக் கண்டுபிடிப்பதில் மதுவிலக்குக் காவலர்கள் பாராட்டத்தக்க முயற்சியையும் நடவடிக்கையையும் எடுத்து உள்ளனர். இவற்றை விற்பனை செய்வதற்கும், எடுத்துச் செல்வதற்கும், இம்மாநிலத்தில் ஒப்படைக்கப்படுவதற்காக அனுப்பப்பட்ட குளோரல் ஹைட்ரேட் சிப்பங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றை விற்பனை செய்வதற்கும், எடுத்துச் செல்வதற்கும் பொறுப்பாக இருந்தவர்கள் அனைவர் மீதும் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசும், குளோரல் ஹைட்ரேட் தயாரிக்கும் சிலமாநில அரசுகளும், விற்பனையையும் கொண்டு செல்வதையும் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**மக்கள் ஒத்துழைப்பு:**

17. மதுவிலக்கு, மக்களுக்கு நலம் பயக்கும் ஒரு நடவடிக்கையாகும். மக்களின் முழு ஒத்துழைப்பு இல்லாமல் மதுவிலக்கு வெற்றியடைய இயலாது. எனவே, மதுவிலக்குக்கு ஆதரவாக மக்களின் கருத்தை வலுவாக உருவாக்க வேண்டியது அவசியமாகும். மதுவிலக்கினால் ஏற்படும் நன்மைகள், மது அருந்துவதனால் ஏற்படும் தீமைகள் ஆகியவை பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறும் பெருந்திட்டத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகுமென்று திரு. சதாசிவம் குழுவும் குறிப்பிட்டுள்ளது. கிராம வளர்ச்சி, வட்டார மாவட்ட, மாநில அளவில் குழுக்களை அமைத்து மக்கள் ஒத்துழைப்பை நாட அக்குழு பரிந்துரைத்துள்ளது. கிராம மதுவிலக்குக் குழுக்களை அமைத்து அவைகளின் மூலம் கள்ளச் சாராயம் தயாரிப்பதையும், அருந்துவதை தடுக்கவும் காவல்துறையினருக்கு மதுவிலக்கைச் சரிவர அமுல்படுத்த உதவவும்



ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் தங்கள் கூட்டங்களில் மதுவிலக்கை அமுல்படுத்துவதை ஆராய்ந்து தகுந்த ஆலோசனைகளை வழங்குகின்றன.

## ஆயத்தீர்வை

**ஆயத்தீர்வை வருவாய்:**

18. மாநிலத்திற்கு அதிக வருவாய் தரக்கூடியதாக இருந்து வந்த ஆயத்தீர்வை, மாநிலத்தில் மதுவிலக்கு செயலுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. 1—9—1971-க்கும் 31—8—1974-க்கும் இடைப்பட்ட காலத்தில் மதுவிலக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டபோது ஆயத்தீர்வை மீண்டும் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. சாராயக் கடைகள், கள்ளுக் கடைகளை குத்தகைக்கு விடுதல், ஆயத்தீர்வை, உரிமக் கட்டணங்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை மதுவிற்கு காலனேஜ் கட்டணம் முதலியவற்றின் மூலம் அரசின் கருவூலத்திற்கு பலகோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. 1—9—1974-லிருந்து மீண்டும் மதுவிலக்குச் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், ஆயத்தீர்வை வருவாய் பெரிதும் சரிந்து விட்டது. மது அருந்த அனுமதிச் சீட்டுக்கள் வழங்கும் விதிகள் சிறிதளவு தளர்த்தப்பட்ட பின்னர் ஆயத்தீர்வையின் வருவாய் சற்றுக் கூடியுள்ளது. தொழிற்சாலையில் தயாராகும் பொருள்களின் விலை அங்காடியில் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருப்பதால் தொழிற்சாலைக்கு வேண்டிய சாராவித் தீர்வை மிகவும் குறைந்த அளவிலேயே விதிக்கப்பட்டு வருகிறது.

19. பல்வேறு தீர்வை வீதங்களைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு 2-ல் குறிக்கப்பட்டுள்ளது. ஆறு ஆண்டுக் கால அளவில் ஆயத்தீர்வை வருவாய் ஒப்பீட்டு விவர அறிக்கை இணைப்பு 3-ல் குறிக்கப்பட்டுள்ளது.

**முறைப்படுத்தப்பட்ட அலுவல்கள்:**

20. மது வகைகளைத் தயாரிப்பதற்கும், அவற்றை வைத்து வருவதற்குமான உரிமங்கள் அனுமதிச் சீட்டுக்கள் முதலியவற்றை வழங்குதலும் மதுவிலக்கு ஆயத்தீர்வையைச சார்ந்த பல்வேறு விதிகளின்கீழ் ஆயத்தீர்வை விதிக்கத்தக்க பொருள்கள் இறக்குமதி ஏற்றுமதித் தீர்வைகள், கட்டணங்கள் முதலியவற்றை வசூலித்தலும் போன்ற, முறைப்படுத்தும் அலுவல்களை வருவாய்த்துறை அதிகாரிகள் தொடர்ந்து கவனித்து வருகின்றனர். குறிப்பிட்டக் காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள், பிற தொழிற்சாலைகளுக்கு சாராவி, வார்னிஷ் ஆகியவற்றின் சில்லறை விற்பனைக்குத் தேவைப்படும் விகூசாராவி உரிமங்கள் வழங்கவும் புதுப்பிக்கவும் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் 20-சி பிரிவின் படி அரசு அதிகாரம் பெற்றுள்ளது.

21. மாநிலத்தில் தற்போது எட்டு வடிசாலைகள் உள்ளன. சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கருப்புஞ்சாற்றுக் கசண்டு வடிசாலைகளுக்கு வழங்கப்படுகிறது. அவற்றின் ஆண்டு உற்பத்தித் திறன் 67.5 மில்லியன் லிட்டர்களாகும்.

1. திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா), லிமிடெட், நெல்லிக்குப்பம், தென்னார்க்காடு மாவட்டம்.

2. திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திருவாளர்கள் திருச்சி டிஸ்டிலரீஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

4. திருவாளர்கள் அரவிந்து டிஸ்டிலரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், காடாம்புலியூர், தென்னார்க்காடு மாவட்டம்.

5. திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சின்னப்புலியூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

6. திருவாளர்கள் ஓரியன் கெமிக்கல்ஸ் அண்டு டிஸ்டிலரீஸ் லிமிடெட், வேதநாராயணபுரம், செங்கல்பட்டு மாவட்டம்.

7. திருவாளர்கள் சதர்ன் அக்ரிப்யூரேன் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், முண்டியம்பாக்கம், தென்னார்க்காடு மாவட்டம்.

8. திருவாளர்கள் கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட், மரிக்கம்பள்ளி, தருமபுரி மாவட்டம்.

22. திருவாளர்கள் கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் இந்தியா நிறுவனம், கடலூர் அருகே அரவங்காட்டிலுள்ள கார்பைட் தொழிற்சாலை ஆகியன இம் மாநிலத்தில் சாராவி பெருமளவில் பயன்படுத்துபவர்களாவர். திருவாளர்கள் திருச்சி டிஸ்டிலரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் 9.5 மில்லியன் லிட்டர் சாராவியை ஆண்டு ஒதுக்கீடாகப் பெற்று அசிடிக் ஆசிட் மற்றும் அசிடால்டிஹைட் தயாரிக்கத் தொடங்கி விட்டனர். பிற அரசுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிற மாநிலங்களுக்கு சாராவி ஏற்றுமதி செய்யப்படுகிறது. மாநிலத் தேவைகளை பாதிக்காத வகையில் இந்திய அரசு பிற மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளதன் அடிப்படையிலும், பிற மாநிலங்களுக்கு சாராவி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

23. இந்நான்கு வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன:—

1. (அ) விஷ சாராவி மெதினால் வார்னிஸ் உட்போகிப்பதற்கும் விற்பதற்கும், மற்றும்.

(ஆ) விஷ சாராவி மெதினால் அடிப்படையாகக்கொண்டு பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு டி.எல். வரிசை உரிமங்கள்.



2. (அ) சாராவி பயன்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் மற்றும்.

(ஆ) சாராவியை அடிப்படையாகக் கொண்டு பொருள்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதற்கும் ஆர்.எல். உரிமங்கள்.

3. மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான 'எல்' வரிசை உரிமங்கள்.

4. மருந்துப் பொருள்கள் விற்பனை செய்வதற்கான 'எம்' வரிசை உரிமங்கள்.

24. பெரும்பாலான உரிமதாரர்கள் முதல்வகையைச் சேர்ந்தவர்களாவர். டி. எல். தொடர் உரிமங்களின் எண்ணிக்கை இணைப்பு 4-ல் குறிக்கப்பட்டுள்ளது.

**ஆயத்தீர்வை நிலுவைகள் :**

25. 1972-73 ஆம் ஆண்டுக்குச் சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் குத்தகைக்கு விடுவதில் கடும் போட்டி நிலவியது. இதனால் ஏலத்தொகை அதிகமாக இருந்தது. மோசமான பருவகால நிலைகள் உட்பட பல்வேறு காரணங்களால் ஏலம் கோரியவர்கள் பலர் பணம் கட்டத் தவறி விட்டனர். இந்தக் கடைகளை மீண்டும் ஏலத்தில் விடவேண்டியதாயிற்று. இதனால் இழப்பு ஏற்பட்டது. சில கடைகள் மூடப்படவேண்டிய நிலையும் நேர்ந்தது. இழப்பிற்கான பொறுப்பு, முன்னர் ஏலம் கோரியவர்கள் மீது சுமத்தப்பட்டது. இவ்வாறு இழப்பு ஏற்பட்ட இழப்புத் தொகை வரி வசூல் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட வேண்டியதாயிற்று. தங்கள் கட்டுக்கு மீறிய சூழ்நிலையால் இழப்பு ஏற்பட்டதாக ஏலத்தொகை கட்டத் தவறியவர்கள் அரசுக்கு முறையிட்டனர். அவர்களின் முறையீட்டின் பேரில் 1—3—1975 வரை வலுக்கட்டாய நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஒரு மாத கிஸ்தியை அல்லது அரை மாத கிஸ்தியைச் செலுத்தினால் மதுவிலக்கு ஆயத்துறையின் 29—1—1975 நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கருணை அடிப்படையில் சலுகைகள் வழங்குதல், நிலுவை பாக்கியைத் தள்ளுபடி செய்தல் ஆகியவை மூலம் முன்னாள் குத்தகைதாரருடன் உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளலாம் என்று அரசு ஆணைகளைப் பிறப்பித்தது. இச்சலுகை 30—6—1977 ஆம் நாளுடன் முடிவடைந்தது. இச்சலுகைகளை ஏற்க முன்வந்தவர்கள் மிகச் சிலரே. முன்னாள் குத்தகைதாரர்களிடமிருந்து 31—12—1980 வரை ரூபாய் 374.33 இலட்சம் நிலுவையாயுள்ளது. இந்த நிலுவைத் தொகை நீதிமன்ற நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு நிலைகளில் உள்ள நடவடிக்கைகளுக்குட்பட்டதாகும்.

கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகளின் விவரங்கள்.

| வரிசை எண்ணும், விவரங்களும். (1) | 1975—76 (2) | 1976—77 (3) | 1977—78 (4) |
|---|---|---|---|
| 1 பிற மாநிலங்களிலிருந்து மதுவைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் .. .. .. .. | 5,826 | 5,834 | 5,241 |
| 2 ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டத்திற்கு கள்ளத்தனமாக மதுவைக் கடத்துதல் .. | 648 | 193 | 429 |
| 3 கள்ளச் சாராயம் காய்ச்சுதல் .. .. | 57,977 | 59,262 | 54,075 |
| 4 சாராவி அல்லது கள்ளச்சாராயத்தை வைத்திருத்தல் .. .. .. .. | 2,04,132 | 1,87,141 | 1,77,853 |
| 5 கள்ளச் சாராயம் அல்லது சாராவியின் விற்பனை | 4,736 | 10,522 | 18,219 |
| 6 உரிமம் இல்லாமல் கள்ளைப் புளிக்கச் செய்தல். | 9,114 | 6,488 | 9,663 |
| 7 உரிமம் இல்லாமல் இனிப்புக் கள்ளைப் புளிக்கச் செய்தல் .. .. .. .. | 357 | 260 | 299 |
| 8 உரிமம் இல்லாமல் மரத்திலிருந்து பதநீர் இறக்குதல் .. .. .. .. | 1,144 | 743 | 1,213 |
| 9. கள்ளத்தனமாக மதுவை எடுத்துச் செல்லுதல் | 6,070 | 10,569 | 19,049 |
| 10 மதுவை அனுமதியின்றி விற்பனை செய்தல் | 35 | 436 | 409 |
| 11 அனுமதியின்றி மதுவை வைத்திருத்தல் .. | 19,608 | 17,412 | 22,115 |
| 12 ஹேம்ப் மருந்துச் செடி வகைகளைப் பயிரிடுதல். | 28 | 42 | 195 |
| 13 பிற மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்குக் கள்ளத்தனமாக மருந்துப்பொருள்களைக் கடத்துதல் .. .. .. | .. | .. | .. |
| 14 மருந்துப் பொருள்களை கள்ளத்தனமாக அனுப்புதல் .. .. .. .. | 132 | 37 | 75 |



கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகளின் விவரங்கள்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், விவரங்களும். | 1978-79 (5) | 1979-80 (6) | 1980-81 (31-12-1980 வரை.) (7) |
|---|---|---|---|
| 1. பிற மாநிலங்களிலிருந்து மதுவைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் .. .. | 5,609 | 4,400 | 2,018 |
| 2. ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டத்திற்கு கள்ளத்தனமாக மதுவைக் கடத்துதல். | 597 | 193 | 794 |
| 3. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் .. .. | 44,512 | 34,697 | 11,117 |
| 4. சாராவி அல்லது கள்ளச்சாராயத்தை வைத்திருத்தல் .. .. | 1,29,111 | 64,878 | 28,065 |
| 5. கள்ளச்சாராயம் அல்லது சாராவியின் விற்பனை. | 23,704 | 25,151 | 14,390 |
| 6. உரிமம் இல்லாமல் கள்ளை புளிக்கச் செய்தல். | 5,462 | 1,258 | 2,666 |
| 7. உரிமம் இல்லாமல் இனிப்புக் கள்ளை புளிக்கச் செய்தல் | 87 | 84 | 341 |
| 8. உரிமம் இல்லாமல் மரத்திலிருந்து பதநீர் இறக்குதல் .. .. | 468 | 179 | 229 |
| 9. கள்ளத்தனமாக மதுவை எடுத்துச் செல்லுதல்: | 24,749 | 25,141 | 30,658 |
| 10. மதுவை அனுமதியின்றி விற்பனை செய்தல் .. | 206 | 63 | 19 |
| 11. அனுமதியின்றி மதுவை வைத்திருத்தல் .. | 13,404 | 8,860 | 2,200 |
| 12. ஹேம்ப் மருந்துச் செடி வகைகளைப் பயிரிடுதல் .. .. | 207 | 206 | 73 |
| 13. பிற மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு கள்ளத்தனமாக மருந்துப் பொருள்களைக் கடத்துதல். .. .. | .. | .. | 129 |
| 14. மருந்துப் பொருள்களை கள்ளத்தனமாக அனுப்புதல் .. | 115 | 159 | 99 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 15 உரிமம் இல்லாமல் மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல் .. .. .. | 80 | 131 | 249 |
| 16 உரிமம் பெறாமல் மருந்துப் பொருள்களை வைத்திருத்தல் .. .. .. | 6,644 | 8,104 | 7,965 |
| 17 பல்வகை குடிபோதையில் இருத்தல் .. | 1,27,721 | 1,05,125 | 67,249 |
| 18 இயல்பு மாற்றப்பட்ட சாராவிகளை குடிப்பதற் கேற்றதாகச் செய்தல் .. .. | 3,388 | 1,901 | 2,429 |
| 19 அபினை கள்ளத்தனமாகக் கடத்தல் .. | .. | 2 | 1 |
| 20 அபினை எடுத்துச் செல்லுதல் .. .. | .. | .. | .. |
| 21 அபினை வைத்திருத்தல் .. .. | 93 | 314 | 418 |
| 22 அபினை விற்பனை செய்தல் .. .. | .. | .. | .. |
| 23 ஆபத்தான மருந்துப்பொருள்கள் சட்டத்தின் கீழ் குற்றங்கள் .. .. .. .. | 177 | 262 | 171 |
| மொத்தம் .. | 4,47,910 | 4,14,778 | 3,87,317 |



| (1) | (5) | (6) | (7) |
|---|---|---|---|
| 15. உரிமம் இல்லாமல் மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல் .. .. | 155 | 183 | 940 |
| 16. உரிமம் பெறாமல் மருந்துப் பொருள்களை வைத்திருத்தல் .. .. .. | 7,315 | 5,578 | இல்லை. |
| 17. பல்வகை குடி போதையில் இருத்தல் .. | 76,440 | 62,566 | 6,538 |
| 18. இயல்பு மாற்றப்பட்ட சாராவிகளை குடிப்பதற் கேற்றதாகச் செய்தல் .. .. | 2,425 | 861 | 209 |
| 19. அபினைக் கள்ளத்தனமாகக் கடத்தல் .. | .. | .. | 196 |
| 20. அபினை எடுத்துச் செல்லுதல் .. .. | .. | .. | .. |
| 21. அபினை வைத்திருத்தல் .. .. | 357 | 639 | இல்லை. |
| 22. அபினை விற்பனை செய்தல் .. .. | 1 | .. | .. |
| 23. ஆபத்தான மருந்துப் பொருள்கள் சட்டத்தின் கீழ் குற்றங்கள் .. .. .. | 28 | 84 | இல்லை. |
| மொத்தம் .. | 3,34,952 | 2,29,180 | 1,00,676 |

இணைப்பு-2

ஆயத்தீர்வை வெவ்வேறு விதங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| வரிசை எண்ணும், விவரங்களும். (1) | ஆயத்தீர்வைக் கட்டணம். (2) | காலனேஜ் கட்டணம். (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) (3) |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| 1. சாராவி :— | | |
| (i) உள்நாட்டிற்கு வழங்குவதற்காக அல்லது இறக்குமதிக்காக | 8 00 (புருஃப் லிட்டர் ஒன்றுக்கு) | 1 00 |
| (ii) முடிவில் கிடைத்த பொருளானது ஆல்கஹால் அற்ற பொருளாக இருந்தால் மாநிலத்திற்குள் பயனுக்கு. | 0 10 (புருஃப் லிட்டர் ஒன்றுக்கு) | 0 10 |
| (iii) சாராவி மற்ற மாநிலங்களுக்கு/வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்காக. | 0 80 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0 25 |
| 2. விஷ சாராவி, மெதிலேடட் ஸ்பிரிட் மெத்தனால்— | | |
| (i) ஏற்றுமதி .. .. .. .. .. | இல்லை. | 0 25 |
| (ii) மாநிலத்திற்குள் பயன் அல்லது இறக்குமதி .. | இல்லை. | 0 50 |
| (iii) முடிவில் கிடைத்த பொருள் ஆல்கஹால் அற்ற பொருளாக இருந்தால் மாநிலத்திற்குள் பயனுக்கு | இல்லை. | 0 10 |

3. (அ) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் இறக்குமதி மீது விதிக்கப்படும் சரிசமத் தீர்வையும் காலனேஜ் கட்டணமும்.

| | சரிசமத் தீர்வை | காலனேஜ் கட்டணம். |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| எப். எல். 1 உரிமதாரர்களின் இறக்குமதிக்காகவும் விற்பனைக்காகவும். | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை | 25 00 (புருப் லிட்டர் ஒன்றுக்கு). | 2 00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |
| (ii) பீர் .. .. .. .. .. | 1 00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). | 0 35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |
| | சரிசமத் தீர்வை. | காலனேஜ் கட்டணம். |
| (ஆ) கேண்டீன் பண்டகசாலைகள் துறையின் இறக்குமதிக்காக— | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை— | | |
| (1) ரம் .. .. .. (ஒன்றுக்கு) .. | 2 75 (புருஃப் லிட்டர் ஒன்றுக்கு.) | 2 00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| (2) மற்ற வகைகள் .. (ஒன்றுக்கு) .. | 25 00 (புருஃப் லிட்டர் ஒன்றுக்கு.) | 2 00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| (ii) பீர் .. .. .. (ஒன்றுக்கு) .. | 1 00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) | 0 35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |
| (இ) இராணுவத்திற்கு வழங்கும் பொருட்டு சோதனைக்காக இறக்குமதியாகும் ரம் மாதிரி பாட்டில்கள் (ஒருங்கிணைந்த உணவு சோதனைக்கூடத்தில் பரிசீலித்தது).. | | |
| (1) ரம் மட்டும் | 6 00 (புருஃப் லிட்டர் ஒன்றுக்கு.) | 2 00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.) |

இணைப்பு-3.

## ஆயத் தீர்வை வருவாய்.

கணக்குகள்.

| வரிசை எண்ணும் விபரமும். | 1975–76 | 1976–77 | 1977–78 |
|---|---|---|---|
| 1 நாட்டுச் சாராவி | 9,79,000 | 3,16,000 | 1,53,000 |
| 2 புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது | 6,44,000 | 3,73,000 | 1,02,000 |
| 3 மாவூரல் மது | 9,57,000 | 9,68,000 | 7,12,000 |
| 4 அயல்நாட்டு மதுவும் சாராவியும் | 1,05,86,000 | 1,95,22,000 | 1,49,46,000 |
| 5 வணிக (இயல்பு மாற்றப்பட்ட) விஷ சாராவி, மருந்து கலந்த திராட்சை ரசங்கள் | 1,02,26,000 | 1,00,23.000 | 1,08,40,000 |
| 6 அபின், சாராவி முதலியவை கொண்ட மருந்து ஒப்பனைத் தயாரிப்புப்பொருள்கள் | 59,08,000 | 1,11,11.000 | 1,29,80,000 |
| 7 அபின் மருந்துச் செடியும் ஏனைய மருந்துகளும் | 4,04,000 | 79,000 | 86,000 |
| 8 ஏனைய வருவாய்கள் | 15,93,000 | 30,36,000 | 18,91,000 |
| 9 அபராதத் தொகைகளும் பறிமுதல்களும் | 6,04,000 | 12,04,000 | 93,000 |
| 10 பணியும் பணிக் கட்டணங்களும் | .. | .. | 69,000 |
| மொத்தம் | 3,19.0[illegible],000 | 4,66,32,000 | 4,18,72,000 |



| வரிசை எண்ணும், விபரமும். | 1978–79 | 1979–80 | 1980–81 (31-12-80 வரை) |
|---|---|---|---|
| 1 நாட்டுச் சாராவி .. .. | 6,67,000 | 5,10,063.37 | 3,04,096.00 |
| 2 புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது .. .. .. .. | 1,10,000 | 19,827.98 | 15,000.00 |
| 3 மாவூரல் மது .. .. .. | 5,34,000 | 13,29,282.12 | 49,44,709.00 |
| 4 அயல்நாட்டு மதுவும் சாராவியும் .. .. .. .. | 93,46,000 | 1,34,38,928.60 | 5,58,13,657.00 |
| 5 வணிக (இயல்பு மாற்றப்பட்ட) விஷ சாராவி, மருந்து கலந்த திராட்சை ரசங்கள் .. .. | 1,14,65,000 | 1,73,14,753.85 | 93,97,811.00 |
| 6 அபின், சாராவி முதலியவை கொண்ட மருந்து ஒப்பனைத் தயாரிப்புப் பொருள்கள் .. | 95,84,000 | 1,60,04,324.29 | 1,12,85,319.00 |
| 7 அபின் மருந்துச் செடியும் ஏனைய மருந்துகளும் .. .. | 48,000 | 69,402.96 | 27,552.00 |
| 8 ஏனைய வருவாய்கள் .. | 13,42,000 | 68,305.01 | 42,571.00 |
| 9 அபராதத் தொகைகளும் பறிமுதல்களும் .. .. | 97,000 | 28,99,642.23 | 56,06,761.00 |
| 10 பணியும் பணிக் கட்டணங்களும். | 89,000 | 83,656.55 | 11,787.00 |
| மொத்தம் .. | 3,32,82,000 | 5,17,38,186.96 | 8,74,49,263.00 |

1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாள் அன்று வரை வழங்கிய டி. எல். வரிலச உரிமங்கள்'

| உரிமங்களின் வகை. | தனியார். | | கூட்டுறவு, | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | அளவு (லிட்டர்). | எண்ணிக்கை, | அளவு (லிட்டர்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| டி. எல். 1 .. .. .. | .. | .. | 13 | 1,90,009 |
| டி. எல் 2 .. .. .. | 342 | 42,01,822 | 5 | 1,985 |
| டி. எல். 3 .. .. .. | .. | .. | .. | .. |
| டி. எல். 4 .. .. .. | .. | .. | 139 | 2,72,132 |
| டி. எல். 5 .. .. .. | .. | .. | .. | .. |
| டி. எல். 6 .. .. .. | 9 | 4,122 | .. | .. |
| டி. எல். 7 .. .. .. | .. | .. | .. | .. |
| டி. எல். 8 .. .. .. | .. | .. | 129 | 2,99,280 |
| மொத்தம் .. | 351 | 42,05,944 | 286 | 7,63,397 |



| உரிமங்களின் வகை. | பொதுத் துறை. | | மொத்தம். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | அளவு (லிட்டர்). | எண்ணிக்கை. | அளவு (லிட்டர்). |
| (1) | (6) | (7) | (8) | (9) |
| டி. எல். 1 .. .. .. | 1 | 25,000 | 14 | 2,15,000 |
| டி. எல். 2 .. .. .. | 183 | 13,99,927 | 530 | 56,03,734 |
| டி. எல். 3 .. .. .. | 3 | 9,250 | 3 | 9,250 |
| டி. எல். 4 .. .. .. | 1 | 2,760 | 140 | 2,74,892 |
| டி. எல். 5 .. .. .. | 3 | 31,000 | 3 | 31,000 |
| டி. எல். 6 .. .. .. | 19 | 16,810 | 28 | 20,932 |
| டி. எல். 7 .. .. .. | 2 | 10,000 | 2 | 10,000 |
| டி. எல். 8 .. .. .. | 4 | 6,905 | 133 | 3,06,185 |
| மொத்தம் .. | 216 | 15,01,652 | 853 | 64,70,993 |

## இணைப்பு IV

[895 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.**

**மானிய கோரிக்கை எண் 4.**

**தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும். நிருவாகம்.**

தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வணிகவரிகளும் மாநில அரசின் முக்கியமான வரி வருவாய் வாயில்களாக அமைந்துள்ளன. வணிக வரிகள் மூலம் 1978-79 ஆம் ஆண்டில், ரூபாய் 319.40 கோடியும்; 1979-80 ஆம் ஆண்டில், ரூபாய் 388.28 கோடியும் வருவாய் கிடைத்தது.

2. வணிகவரிகள் துறை பின்வரும் சட்டங்கள் செயல்படுவதை நிருவகித்து வருகிறது :—

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம். (அண்மையில் அதாவது 1—11—1980 அன்று இச் சட்டம் நீக்கப்பட்டது.)

(4) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம்.

(9) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் காணும் ஆடம்பர வசதிக்கு வரிவிதிக்கும் சட்டம். (13—10—1980 முதல் செயலுக்கு வந்தது.)

வருவாய்த் துறை வாரியம் (வணிக வரிகள்), வணிகவரிகள் சட்டங்கள் செயல்படுவதை நிருவகித்து வந்தது. அவ்வாரியம் 1—12—1980 முதல், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய்த்துறை வாரிய ஒழிப்புச் சட்டத்தால் நீக்கப்பட்டது. இதன் விளைவாக, வணிகவரிகள் துறை, வணிகவரிகள் துறை ஆணையாளரைத் தலைவராகக் கொண்டு அவருடைய பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது.







**3. புதிய வருவாய்க் கோட்டங்களை அமைத்தல்.**

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படியும், மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்படியும் அதிக அளவு விற்பனை வருமானமுள்ள வரிசெலுத்தும் வணிகர்கள் மீது வரி விதிப்பு விதிக்கும் பணியைக் கவனித்துக் கொள்வதற்கென புதிய மத்திய வரிவிதிப்பு வட்டமொன்று கோயம்புத்தூரில் 29—9—1980-லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. அதில் உதவி ஆணையாளர்கள் இருவரும், அவருக்குத் தேவைப்படும் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். கோயம்புத்தூர் வணிகவரி மாவட்டத்தில் தற்போதுள்ள சிங்கநல்லூர் வரிவிதிப்பு வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதனால், கணபதி வரிவிதிப்பு வட்டம் என்னும் புதிய வரிவிதிப்பு வட்டமொன்றும் 1—12—1980 முதற்கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சென்னை வணிகவரிகள் கோட்டத்தை சென்னை (வடக்கு) என்றும் சென்னை (தெற்கு) என்றும் இரு கோட்டங்களாகப் பிரிக்கவும் அண்மையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென கூடுதலாக உதவி ஆணையாளர்கள் இருவரையும் அவர்களுக்கு உதவி புரிவதற்கெனப் பணியாளர்களையும் நியமிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு பொதுக் கணக்குக் குழுவின் கருத்துரைகளை ஏற்றுக் கொண்டு, அதன்படி தணிக்கைப் பணியை கவனிக்கும்பொருட்டு கூடுதலாக வணிகவரித் துணை அதிகாரிகள் 22 பேரையும், இளநிலை உதவியாளர்கள் 22 பேரையும் நியமித்து தற்போதுள்ள தணிக்கைப் பிரிவிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கியுள்ளது.

4. கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் வணிகவரிகள் துறை ஈட்டிய வருவாய், அத்துறைக்கு ஏற்பட்ட செலவு ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.) | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1976-77 | 2,55,58.04 | 4,66.87 |
| 1977-78 | 2,67,21.25 | 5,18.92 |
| 1978-79 | 3,19,40.05 | 5,58.57 |
| 1979-80 | 3,88,27.94 | 5,98.00 |
| 1980-81 | 3,30,50.22 | 3,46.00 |
| | (1980 டிசம்பர் வரை) | (1980 செப்டம்பர் வரை) |

1980-81 ஆம் ஆண்டில், 1980 டிசம்பர் வரையில் ரூபாய் 3,30,50.22 இலட்சம் வசூலிக்கப்பட்டது. முந்தைய ஆண்டில் இதே காலத்தில் ரூபாய் 2,74,14.4[illegible]

இலட்சம் வசூலிக்கப்பட்டிருந்தது. இது ரூபாய் 56,35.74 இலட்சம் அதிகமாக வசூலிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகிறது. (அதாவது கடந்த ஆண்டு இதே காலத்தில் கிடைத்த வசூலைவிட 21 சதவீதம் அதிகமாகும்.)

**5. வணிக வரித் துறை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களையும் வணிக வரித் துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகளையும் கட்டுதல்.**

வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு வருகை தரும் வணிகர்களுக்கும் இத்துறையின் பணியாளர்களுக்கும் போதிய வசதியளிப்பதற்கும் படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் அரசு கட்டிடங்களைக் கட்டி வருகிறது. தற்போது, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்பகோணம், கடலூர், தருமபுரி, சேலம், உதகமண்டலம், வேலூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர், திண்டுக்கல், பொள்ளாச்சி, விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள வணிகவரித் துறை அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன.

இத்துறைக்காகப் பெரிய அலுவலகக் கட்டிடங்களை சென்னையிலும், மதுரையிலும் கட்டுவதற்கு இசைவளிக்கப்பட்டுள்ளது: இக்கட்டுமானப் பணி நன்முறையில் நடந்தேறி வருகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலும் தற்போதுள்ள இத்துறையின் அலுவலகக் கட்டிடங்கள் மீது கூடுதலாக மாடி ஒன்றைக் (அதாவது இரண்டாம் மாடி) கட்டுவதற்கு அரசு இசைவளித்துள்ளது: இக் கட்டுமானப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். கரூர், தேனி, மாயூரம், பட்டுக்கோட்டை, விழுப்புரம், சிதம்பரம் ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகக் கட்டிடங்களைக் கட்டுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. நாகர்கோயில், சேலம் ஆகிய இடங்களில் இத்துறைக்காக கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு 1981-82 ஆம் ஆண்டிற்கு உரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. சோதனைச் சாவடிகள்.**

தற்போதுள்ள 75 சோதனைச் சாவடிகளில், ஏழு பெரிய அளவில் அமைந்த சோதனைச் சாவடிகளாகும். இச்சோதனைச் சாவடிகளுக்கு, படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ், அரசு கட்டிடங்களில் நிலையான இடவசதியளிக்க வகை செய்வது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஏழு இடங்களில், அதாவது கே. ஜி. சாவடி, களியக்காவிளை, புளியரை,



சென்னூராப்பட்டி, சின்னசேலம், மீனாட்சிபுரம், மணத்தட்டை ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகளுக்குரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கான செயற்குறிப்புகளுக்கு அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. இக் கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். பூவிருந்தவல்லி, ஓசூர் ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகளுக்குரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும் 1981-82 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய அலுவலகக் கட்டிடங்களைக் கட்டுவதோடு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய துணை ஆணையர்களுக்கும் (Territorial Deputy Commissioners) ஈரோடு, புதுக்கோட்டை, சென்னை மாநகரில் 1 முதல் 8 வரையிலான மண்டலங்கள் ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய உதவி ஆணையாளர்கள் (Territorial Assistant Commissioners) நீங்கலாக பிற பிராந்திய உதவி ஆணையாளர்கள் அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளை அரசு கட்டியுள்ளது.

**7. தொலைபேசி வசதி.**

வணிகவரி அதிகாரிகள் வணிகர்களிடம் தொடர்பு கொள்ள இயலும் வகையில் போதுமான அளவுக்குத் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. 1981-82 ல் கும்பகோணம், கடலூர், காஞ்சிபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், உதகமண்டலம், விருதுநகர், தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள வணிகவரி அலுவலகங்களில் கூடுதலாக தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும். மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட வரிவிதிப்பு அலுவலகங்களில் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும், இதற்காக 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**8. மேஜை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள்.**

புதிய வணிகவரி அலுவலகங்களுக்கு மேஜை, நாற்காலி முதலிய மரச் சாமான்கள் வாங்குவதற்காக 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. ஆலோசனைக் குழுக்கள்.**

இம்மாநிலத்தில் விற்பனை வரிச் சட்டங்களை நிர்வகிப்பது தொடர்பான பிரச்சினைகள் பற்றி வணிகர்களுக்கும் அரசுக்குமிடையே கருத்துக்களை அவ்வப்போது பரிமாறிக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திக் கூறவேண்டிய அவசியமில்லை. தமிழ்நாடு விற்பனை வரி ஆலோசனைக் குழு தான் இதற்கு

உரிய அமைப்பாகும். இவ்வமைப்பில் வணிகம், தொழில் தொடர்பான பல் வேறு பிரிவுகளுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறது. மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுவை அரசு மாற்றி அமைத்துள்ளது. வணிகர்கள் தங்கள் கருத்துக்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அரசின் முன் வைக்க இந்த அமைப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பெரியார், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலான ஏனைய மாவட்டங்களில் உள்ள மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களின் பதவிக் கால அளவு முடிவடைந்துவிட்டது. இதனை மாற்றி அமைக்கும் பணியை அரசு மேற்கொண்டு வருகிறது.

**10. வணிகர்களின் நல ஆலோசனைக் குழு.**

வணிக சமுதாயத்தினரின் நலனைப் பாதிக்கும் பொதுவான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, வணிகர்களின் நலனுக்கான நடவடிக்கைகளைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பினை நல்கும் நோக்குடன், வணிகர் நல ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**11. புள்ளி விவர தகவல் சேகரிப்பு.**

பொருள்கள் வாரியாகவும், வரிமதிப்பீட்டு வட்டவாரியாகவும் வரிவிதிக்கத்தக்க வணிக தொகை தொகுதிவாரியாகவும் வரி விதிப்பு வீதவாரியாகவும் மொத்த வணிகத் தொகை வரி ஆகியவை தொடர்பான தகவல்களையும், வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருள்களின் வணிகத் தொகை வெவ்வேறு வணிகத் தொகைத் தொகுதிகளின்கீழ் உள்ள வணிகர்கள் எண்ணிக்கை ஆகியவை தொடர்பான புள்ளிவிவரத் தகவல்களையும் சேகரிக்க விற்பனை வரி தொடர்பான புள்ளிவிவரங்களை மின்னணுவியல் முறையில் தொகுக்கும் முறை 1974 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இது இன்டி, அரசுப் புள்ளிவிவரத் தொகுப்பு நிலையத்தில் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

**12. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம்—திருத்தங்கள்.**

1980 ஆம் ஆண்டு 29 ஆம் எண் சட்டத்தின் மூலம் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிச்சட்டம் பின்வரும் நோக்கங்களுடன் திருத்தப்பட்டுள்ளது :—

(1) தமிழ்நாடு விற்பனை வரிக்குழு (கைவார் குழு) வணிக வரிச் சட்டங்களையும், விதிகளையும் சீரமைப்பதற்காகவும், எளிதாக்கவும் நியமிக்கப்பட்ட சிறப்புப் பணி அதிகாரி தெரிவித்த கருத்துரைகளை ஏற்றுக்



கொண்டு, அதே சமயம் துணைப் பாகங்களுக்கு அளிக்கப்படும் [illegible] வரிவிதிப்பு மூலப் பொருட்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று பரிவுரை செய்தது. மேற்சொன்ன பரிவுரையை அரசு ஏற்றுக்கொண்டு, அரசு அறி விக்கவிருக்கிற ஒரு திட்டத்தின் மூலம் மூலப்பொருள்கள் மீது 4 சதவீதம் என்ற விதத்தில் சலுகை வரி விதிப்பதற்காக, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்தியுள்ளது. வணிகர் ஒருவர் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முழுமைத்தலாவது அல்லது 7 ஆம் பிரிவின் கீழ் இணக்க விகிதத்திலாவது வரி செலுத்துவதற்கான விருப்ப உரிமையைச் செலுத்த அவர் இறுதி [illegible] அனுமதிக்கப்பட வேண்டும் என்று குழு செய்த பரிவுரையை ஒட்டி இயற்றப்பட்ட விதித்துறைகளும் திருத்தச் சட்டத்தில் உள்ளன.

( ) அரசின் வருவாயை மோசடி [illegible] செய்யப்பட்ட சொத்து மாற்றத்தை செல்திறனற்றது [illegible], நிலவை வங்கிக் கோரிக்கைகள் ஆகியவை நீங்கலான [illegible] தொகைகள் அனைத்தையும்விட விற்பனை வரிப் பாக்கிகளை [illegible] உரிமை அளிக்க வகை செய்யவும் உரிய விதித்துறைகள் திருத்தச் சட்டத்தின் மூலம் செய்யப்பட்டுள்ளன. வரி ஏய்ப்பைத் தடுக்கும் [illegible] பொருள் போக்குவரத்து வண்டியில், அல்லது பொருள்களை [illegible] பொறுப்பான வர் வசம், பொருள்கள் வைக்கப்பட்டுள்ள [illegible] பொருள்களை [illegible] படைக்கும் முன்னர் அவற்றைப் பரிசீலனை செய்யவும் அவை கொண்டு செல்லப்படுவது தொடர்பான ஆவணங்களைப் பார்வையிடவும் திருத்தச் சட்டத்தில் விதித்துறை இயற்றப்பட்டுள்ளது.

**முதலாம் விவர அட்டவணையில் திருத்தம் :**

1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை 2-7-1980 அன்று சட்டமன்றத்தில் வைத்துச் செய்த அறிவிப்பையொட்டி, வணிக சமுதாயத்தினரின் நீண்ட நாளைய வேண்டுகோளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்துக் கீழ்க்கண்ட பொருட்கள் பலமுனை [illegible] விதிப்பிலிருந்து ஒருமுனை வரிவிதிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் 2-7-1980 முதல் பின்வரும் பதிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| இனம் 142 பூட்டுகள் | மாநிலத்தில் முதல் விற்பனை முனையில். | 8% |
| 143 சீப்புகள் | [illegible] | 8% |

| | | | |
|---|---|---|---|
| இனம் 144 | நோட்டுப் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், பேனாக்கள், பால் பாயிண்ட் பேனாக்கள் "ரீபில்"கள் முதலியவை உட்பட (இந்த விவர அட்டவணையில் வேறிடத்தில் குறிப்பிட்டவை நீங்கலாக) எழுது பொருள்கள். | மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் | 8% |
| 145 | பிளாஸ்டிக் பொருட்கள் .. | ஷை | 8% |
| 146 | துத்தநாகம் பூசப்பட்ட இரும்பு வாளிகள் .. | ஷை | 8% |
| 147 | மெழுகுவர்த்திகள் .. | ஷை | 8% |
| 148 | பெருங்காயம் .. | ஷை | 8% |
| 149 | கற்பூரம் .. | ஷை | 8% |
| இனம் 87 | 17-12-80 முதல் நீக்கப்பட்டது. உள்ளாடைகள், உடல் ஒட்டிய ஆடைகள் உட்பட ஆனால் பனியன் வகைகள் நீங்கலாக 'ஆயத்த ஆடைகள்' என்று வணிகமுறையில் அழைக்கப்படுகிற அணியத்தக்க தயார் நிலையில் தயாரிக்கப்பட்டுள்ள ஆடைகள் 3% என்ற குறைக்கப்பட்ட வீதத்தில் பல முனை வரியின் இழ் கொண்டு வரப்பட்டுள்ளன. | | |

2-9-1980-லிருந்து முதலாவது விவர அட்டவணையின் 116-ம் இனம் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| இனம் 116 | முழுவதுமோ அல்லது முக்கியமான பகுதியோ தோலால் தயாரிக்கப்பட்ட காலணிகள் நீங்கலான பொருட்கள் (நூல், உள்வரி துணி, ஆணிகள் போன்ற ஏனைய பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி.) | மாநிலத்தில் முதல் விற்பனை முனையில். | 8% |



| | | | |
|---|---|---|---|
| இனம் 116A | விளையாட்டு பொம்மைகள், கம்பிச் சுருள்கள், பதக்கங்கள் கோப்பைகள், கேடயங்கள், வில்லைகள் உட்பட இந்த விவர அட்டவணையில் வேறெங்கேனும் குறிப்பிட்டுள்ளவை நீங்கலாக, அரங்கத்திற்குள் அல்லது வெளியில் விளையாடும் விளையாட்டுக்களுக்குத் தேவைப்படும் பொருட்கள், 6-10-1980-லிருந்து ஒரு புதிய இனம் பின்வருமாறு சேர்க்கப்பட்டுள்ளது:— | மாநிலத்தில் முதல் விற்பனை முனையில். | 8% |
| இனம் 150 | இந்திய அரசின் சுற்றுலா வளர்ச்சித் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று நட்சத்திர, நான்கு நட்சத்திர, ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களும் பானங்களும்—இவை ஓட்டல்களிலேயே பயன்படுத்தப்பட்டாலுஞ்சரி. அல்லது வெளியில் பயன்படுத்தப்பட்டாலுஞ்சரி. | ஷை | 10% |

## 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை உரையில் அறிவிக்கப்பட்ட வரி உயர்வுகள்.

(1) தமிழகத்தில் பெட்ரோல் விற்பனையின் மீது விதிக்கப்படும் 5 சதவீத வரியானது மற்ற அண்டை மாநிலங்களான கேரளம் (15 சதவீதம்), கர்நாடகம் (12.5 சதவீதம்), ஆந்திரப் பிரதேசம் (11 சதவீதம்) ஆகிய மாநிலங்களின் விதிக்கப்படும் வரி விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதே. மேலும், டீசலைப் பொறுத்தவரையில், பிற மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம் (10 சதவீதம்), கேரளா (20 சதவீதம்) மற்றும் கர்நாடகம் (16 சதவீதம்) ஆகிய மாநிலங்களை விட குறைவாக வசூலிக்கப்படுகிறது. ஆகையால் பெட்ரோல் மீதான 5 சதவீத வரி விதமானது 11 சதவீதமாக உயர்த்தப்பட்டது; டீசல் மீதான 9 சதவீத வரியானது 11 சதவீதமாக உயர்த்தப்பட்டு 1—4—1981 முதல் செயல்படுத்தப்பட்டது.

(2) பல ஆண்டுகளாகச் சென்னை மாநகராட்சி போதிய நிதி வசதி இல்லாமல் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே மக்களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற கூடுதல் பொறுப்புக்களை மேற்கொண்டுள்ள மாநகராட்சிக்கு நிதி உதவி செய்வது அவசியமாகிறது. ஆகவே, தற்போது சென்னை மாநகராட்சி எல்லையிலும், சென்னை மாநகரைச் சுற்றிலும் 32 கி.மீ. பகுதியிலும் விதிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரி தற்போதுள்ள 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் கூடுதல் வருவாயிலிருந்து கணிசமான பகுதி மாநகராட்சிக்கு ஒதுக்கப்படும். இந்த மாற்றங்களுக்கான சட்ட வரைவு இக்கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

### வரி விலக்குகள்.

பின்வருவனவற்றுக்கு வரிவிலக்களிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது :—

(I) சென்னையிலுள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டுத் துணைத் தூதரக அலுவலகப் பயனுக்காக விற்பனை செய்யப்படும் பொருட்கள் மீது செலுத்தத்தக்க வரி.

(II) பின்வரும் பொருட்களை விற்பனை செய்வதற்கு வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி :—

(i) ஹரிகேன் விளக்குகள் ;

(ii) காற்றழுத்தமில்லாத மண்ணெண்ணெய் ஸ்டவ் ;

(iii) எலுமிச்சம் புல் எண்ணெய் ;

(iv) ... லைசெல் எண்ணெய்



(III) திருச்சிராப்பள்ளியிலுள்ள பார்வையிழந்தோர் புதுவாழ்வுக்கான நிறுவனம் நடத்தும் இலேசான ரகப் பொறியியல் பிரிவு. சரக்கு தயாரிப்புப் பிரிவு, சோப்புத் தயாரிப்புப் பிரிவு ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டு நேரடியாக விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு அந்நிறுவனம் செலுத்தத்தக்க வரி.

(IV) காலடிப்பேட்டையிலுள்ள உடலூனமுற்றோருக்காக கன்யா குருகுலம், உறைகள் தயாரிப்பதற்குத் தேவைப்படும் காகிதம் வாங்குவதன் பேரிலும் உறைகளைத் தயாரித்து விற்பனை செய்வதன் பேரிலும் செலுத்தத்தக்க வரி.

(V) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையின் 150 ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ளவை நீங்கலான ஓட்டலில் அல்லது சிற்றுண்டி சாலையில் விற்பனை செய்யப்படும் உணவு அல்லது பானங்கள் மீதான வரி.

(VI) மதுரை மாவட்டம், சத்திரப்பட்டியிலுள்ள காந்தி சேவா சங்கம் சோப்பு தயாரிப்பதற்குத் தேவைப்படும் நாட்டுச் செக்கு வேப்ப எண்ணெய் வாங்குவதற்கு 7-(a) பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரி.

(VII) மதுரை மாவட்டம், சத்திரப்பட்டியிலுள்ள காந்தி சேவா சங்கத்திற்கு விற்பனை செய்யப்பட்ட நாட்டு செக்கு வேப்ப எண்ணெய் சம்பந்தப்பட்ட மொத்த விற்பனைத் தொகை குறித்து தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 14/1970) வணிகர் ஒருவர் செலுத்தத் தக்கக் கூடுதல் விற்பனை வரி.

(VIII) சென்னை-34, ஸ்ரீ சீனிவாச நிகேதனத்திற்கு நன்கொடையாக வழங்குவதற்காக, சென்னை, இந்திய விமானப் படை, முன்னாள் வாரண்ட் அதிகாரி திரு. எம். பாலசுப்பிரமணியத்திற்கு ஸ்டாண்டர்டு 20 சரக்கு ஒப்படை வண்டி விற்பனை செய்யப்பட்டதன் மேல், சென்னை, யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட் செலுத்தத்தக்க வரி.

(IX) தொழில் நுட்ப நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ள பணிக்களரிக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் தங்கிப் பயிலும் உயர்நிலைப் பள்ளி, சென்னை, ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லம் ஆகியவற்றுக்கு அறிவியல்-ஆய்வுக்கூட கருவிகள், மரம், உருக்கு மேசை, நாற்காலிகள், மின்கருவிகள், துணைக்கருவிகள் ஆகியவற்றை விற்பனை செய்வதன் மேல் வணிகர் செலுத்தத்தக்க வரி.

(X) 450 கிலோ லிட்டர் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் தயாரிப்பதற்கு தேவையான 'பீட்ஸ்டாக் (Transformer Oil Feed Stock) ஷபீபீ சென்னை பெட்ரோ-கெம் லிமிடெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்ததன்

பேரிலும், 450 கிலோ லிட்டர் டிரான்ஸ்பார்மர் எண்ணெயை பெட்ரோ-கெம் லிமிடெட் நிறுவனம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்பனை செய்ததன் பேரிலும் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் செலுத்தத்தக்க வரி

(XI) 200 மர நாற்காலிகளை சென்னையிலுள்ள பால மந்திர்க்கு (பௌண்ட்லிங் மருத்துவமனை) விற்பனை செய்ததன் பேரில் சென்னையிலுள்ள திருவாளர்கள் ஜெயபாரதம் கம்பெனி செலுத்தத்தக்க வரி.

(XII) 450 கிலோ லிட்டர் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் தயாரிப்பதற்குத் தேவையான 'பீட் ஸ்டாக்' (Transformer oil feed stock) சென்னையிலுள்ள இராஜஹாபிரிக்கன்ட்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்ததன் பேரிலும், 450 கிலோ லிட்டர் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் இராஜஹாபிரிக்கன்ட்ஸ் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்பனை செய்ததன் பேரிலும் இந்திய எண்ணெய் கழகம் செலுத்தத்தக்க வரி.

(XIII) பெங்களூரிலுள்ள கர்நாடக பால்வள நிறுவனத்திற்கு வழங்கப் படவேண்டிய பாலித்தீன் பிலிம் தயாரிக்கத் தேவைப்படும் 508 மெட்ரிக்டன் பிளாஸ்டிக் மணிகளை ஓசூரிலுள்ள பத்மா பேக்கேஜஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்ததன்பேரில் சென்னையிலுள்ள திருவாளர்கள் யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனம் செலுத்தத்தக்க வரி.

வரி குறைப்பு :

(1) மிதிவண்டிகள், ரிக்ஷாவண்டிகள், மூன்று சக்கர வண்டிகள், ஒன்றன்பின் ஒன்றாக இருக்கை உள்ள இணைந்த மிதிவண்டிகள் (Tandem cycles) டயர் ட்யூப்கள் உட்பட அவற்றின் பாகங்கள், துணைப் பாகங்கள் ஆகிய பொருட்களின் விற்பனை குறித்து வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி தொடர்பாக, ஒருமுனை வரி 6 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(2) கீழ்க்காணும் பொருட்களின் விற்பனை குறித்து வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி தொடர்பாக, ஒருமுனை வரி 8 சதவீதத்திலிருந்து சதவீதமாகக் (31—7—1980 லிருந்து) குறைக்கப்பட்டது :—

(i) பாலிதீன் மணிகள்.

(ii) உயர் அடர்த்தியுள்ள பாலிதீன்.

(iii) குறைந்த அடர்த்தியுள்ள பாலிதீன்.

(iv) கிலீன் (பாலிபிராப்பிலீன்).

(v) மெழுகுவர்த்திகள்.



(3) கீழ்க்காணும் பொருட்களின் விற்பனை குறித்து வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி தொடர்பாக ஒரு முனைவரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் (3—7—1980-லிருந்து) குறைக்கப்பட்டது :—

(i) பாலிதீன் பைகள்.

(ii) நாற்காலிகள் முதலியவற்றிற்கான பாலிதீன் கயிறு.

(iii) பாலிபிராப்பிலீன் பைகள்.

(iv) பாலிதீன், பாலிபிராப்பிலீன் ஆகியவற்றிலிருந்து நெய்யப் பட்ட சாக்குகள்.

(4) மண்ணெண்ணெயின் விற்பனை குறித்து வணிகர் ஒருவர் செலுத்தக்க வரி தொடர்பாக வரிவீதம் 8½ சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(5) எபோனைட் பேனாக்கள் விற்பனை குறித்து வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி தொடர்பாக ஒருமுனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(6) 22—11—1980-லிருந்து 21—5—1981 வரை கோயம்புத்தூரிலும், கூனூரிலுமுள்ள ஏலமிடும் இடங்களில் தேயிலை விற்பனை குறித்து செலுத் தத்தக்க வரி தொடர்பாக 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக ஒருமுனை வரி குறைக்கப்பட்டது.

புதிய சலுகைகள் :

1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்து ஆற்றிய உரையில், அறிவிக்கப்பட்டதுபோல், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் முதல் அமுலுக்கு வருகின்ற விதத்தில் வரிவிகிதத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மாறுதல்களை அரசு அறிவித்துள்ளது :—

( ) பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் நீங்கலாக உள்ள அரசுத்துறைகள் மற்றும் இரயில்வே உள்ளிட்ட மத்திய அரசு துறைகளுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை ஒரு விற்பனையாளர், விற்கும்போது அப் பொருள்களின் மீது 4 சதவீதத்திற்கு மேலாக வரி விதிக்கப்பட வேண்டியிருந்தாலும் அப்பொருள்களின் மீதான வரியை 4 சதவீதமாக குறைத்துள்ளது. மாநில மற்றும் இரயில்வே உள்ளிட்ட மத்திய அரசின் துறைகளுக்கு பொருள்களை விற்பனை செய்யும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதே வரிவீதத்தை குறைத்ததன் நோக்கமாகும். மேலும் இது மாநிலத்திற்கு வெளியே இருக்கும் வியாபாரிகளால் கொடுக்கப் படும் டெண்டர் தொகைக்கு எதிராக உள் மாநிலத்திலிருக்கும் வியாபாரிகள்

போட்டி போட்டுக் கொண்டு டெண்டர்களை சமர்ப்பிக்கவும் இது வழி செய்யும். இருப்பினும் பெட்ரோல் மற்றும் டீசல் எண்ணெய்களின் விலைகள் இந்தியா முழுமைக்குமாக சேர்த்து நிர்ணயம் செய்யப்பட்டு விநியோகம் செய்வது முழுவதும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளிருப் பதால் எண்ணெய் நிறுவனங்களிடையே எவ்விதமான போட்டியுமிருக்காது. எனவே பெட்ரோல் மற்றும் டீசல் தவிர்த்து, சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து பொருள்களுக்கும் இவ்வரிக் குறைப்பு பொருந்தும்.

(i) பதினைந்தாயிரமும் அதற்கு குறைவான எண்ணிக்கையில் விற்பனை யாகும் சிறிய செய்தித்தாள்கள் வாங்கும் நியூஸ்பிரிண்டின் மேல் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட வேண்டிய வரிவீதமானது 8 சதவீதத்திலிருந்து 4 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

(iii) பாலிதீன், பாலி-புரோபிலின் மற்றும் பாலிவினைல் குளோரைடு ஆகிய பொருள்களினால் செய்யப்பட்ட புட்டிகள், புட்டிகளை மூட பயன் படும் மூடிகள், மற்றும் திருகு மூடிகள் உள்ளிட்ட ஊதி தயாரிக்கப்படும் கொள்கலன்கள், பிலிம்கள், தகடுகள் மற்றும் தட்டையான குழாய்கள் ஆகியவற்றின் விற்பனையின்மீது சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

(iv) இரப்பர் கலந்து தயார் செய்யப்பட்ட தென்னை நார் பொருள் களின் மீதான விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைக் கப்பட்டுள்ளது.

(v) வணிகப் பெயர் இல்லாமல் அல்லது வணிக, வாணிப குறிகள் 1958 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் வணிகக் குறி பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்யப்படும் அப்பளம், சேமியா, ரொட்டி வகைகளுக்கு பல முனை விற்பனை வரியிலிருந்து அறவே வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

(vi) பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவைகளின் விற்பனையின் மீது தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் கீழ் வியாபாரிகள் செலுத்தப்படவேண்டிய மேல் வரியை இனிமேல் விதிக்கா மலிருக்கவும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

13. மத்திய விற்பனை வரிச் சட்டம் வரிவிகிதத்தைக் குறைத்தல்.

( ) பன்மாநில வாணிகம் அல்லது வர்த்தகத்தின்போது, வணிகர் ஒருவர் விற்பனை செய்யும் மிதிவண்டிகளின் பாகங்கள், துணைப் பாகங்களுக்கு (1—7—1980 ஆம் நாளிலிருந்து) 1 சதவீதத்தில் வரி விதிக்கப்படுகிறது.



( ) பன்மாநில வாணிகம் அல்லது வர்த்தகத்தின்போது விற்பனை செய்யப்படும் பின்னப்பட்ட உள்ளாடைகளுக்கு (கம்பளியால் பின்னப் பட்டவை தவிர), 2½ சதவீதத்தில் வரி விதிக்கப்படுகிறது.

14. வருவாய்.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

1976-77 முதல் 1980-81 வரையிலுள்ள கால அளவில் (1980 டிசம்பர் வரை) மேற்சொன்ன சட்டத்தின்கீழ் வரவுகள் வருமாறு :—

| கால அளவு. | மொத்த வரவுகள். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1976-77 | 1,67,88.36 |
| 1977-78 | 1,78,45.59 |
| 1978-79 | 2,17,34.82 |
| 1979-80 | 2,58,27.90 |
| 1980-81 (1980 டிசம்பர் வரை) | 2,26,81.95 |

1979-80 ஆம் ஆண்டில் 1979 டிசம்பர் வரை இச் சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் ரூ. 1,81,63.79 இலட்சமாகும். 1980 டிசம்பர் வரை கிடைத்த வருவாய் ரூ. 2,26,81.95 இலட்சமாகும். முந்திய ஆண்டின் வருவாயுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 45.18.16 இலட்சம் அதிக வருவாய் ஈட்டியுள்ளது. அதாவது 20 சதவீதம் உயர்வைக் காட்டுகிறது.

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

1976-77 முதல் 1980-81 (1980 டிசம்பர் வரையிலான) கால அளவில் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் வருமாறு :—

| கால அளவு. | மொத்த வரவுகள். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1976-77 | 41,90.62 |
| 1977-78 | 43,02.78 |
| 1978-79 | 49,84.25 |
| 1979-80 | 68,54.07 |
| 1980-81 (1980 டிசம்பர் வரை) | 57,70.55 |

முந்திய ஆண்டு டிசம்பர் வரை வருவாய் ரூ. 48,15 30 இலட்சமாகும். இதனுடன் ஒப்பிடுகையில், 1980-81 ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் வரை) ரூ. 9,55 25 இலட்சம் அதிகமாகக் கிடைத்துள்ளது (16 சதவீதம் அதிகம்).

**தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.**

இச்சட்டம் அண்மையில் ரத்து செய்யப்பட்டு, "மோட்டார் எரி எண்ணெய் வகைகள்" 1—11—1980 ஆம் நாளிலிருந்து மதிப்பீட்டு அடிப்படையில் வரி விதிப்பதற்காக தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்கொண்டுவரப்பட்டன (தமிழ்நாடு சட்டம் 7/1981).

மோட்டார் எரி எண்ணெய்க்கு முதல் விற்பனையின்மீது தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் ஒருமுனை வரி விதிக்கப்பட்டுவந்தது.

1976-77 முதல் 1980-81 வரை (1980 டிசம்பர் வரை) இந்த வகையில் கிடைத்த வருவாய் விவரங்கள் வருமாறு :—

| கால அளவு. | மொத்த வரவு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1976-77 | 21,87.21 |
| 1977-78 | 22,17.12 |
| 1978-79 | 26,32.38 |
| 1979-80 | 32,38.76 |
| 1980-81 (1980 டிசம்பர் வரை) | 22,44.11 |

**தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டமும் தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டமும்.**

1976-77 முதல் 1980-81 வரையிலான காலத்தில் (1980 டிசம்பர் வரை) மேற்படி சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாய் விவரங்கள் வருமாறு :—

| கால அளவு. | மொத்த வரவு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1976-77 | 21,27.80 |
| 1977-78 | 20,81.70 |
| 1978-79 | 23,79.69 |
| 1979-80 | 26,71.13 |
| 1980-81 (1980 டிசம்பர் வரை) | 21,25.46 |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1980-81 ஆம் ஆண்டு (1980 டிசம்பர் வரை) வசூல் ஏழு சதவீதம் அதிகரித்துள்ளது.

கேளிக்கை வரி விதிப்பிற்கு இவ்விரு சட்டங்களும், பயன்படுத்தப்படுகின்றன. மக்கள் கட்டணம் செலுத்தி அனுமதிச் சீட்டுப் பெற்றுப் பார்க்கும் திரைப்படக் காட்சி, குதிரைப் பந்தயம் ஆகியவற்றிற்கு கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின்கீழ் வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. இதைத் தவிர, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் அடிப்படை கேளிக்கை வரியில் 90 சதவீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

1980-81 ஆம் ஆண்டில் இந்த வருவாய் 43 சதவீதம் அதிகரித்துள்ளது.



**தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.**

சென்னையிலுள்ள கிண்டியிலும், உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. இந்தப் பந்தயத்தில் வின்ஸ், பிளேஸ், டபுள், டிரிபுள், தனாலா, கோர்க்காஸ்ட், ஜாக்பாட் ஆகியவற்றுக்குப் பந்தயக் கணிப்புப் பொறியுடன் கட்டப்படும் பந்தயங்களுக்கும் சென்னையில் புக்மேக்கர்களுடன் கட்டப்படும் பந்தயங்களுக்கும் 4—1—1981 வரை ஒரே அளவாக 20 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. பின்னர் இவ்வரி 25 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அவ்வரியின் மீது 5 சதவீதம் மேல் வரியும் விதிக்கப்படுகிறது. உதகமண்டலத்தில் நடத்தப்பெறுகின்ற குதிரைப் பந்தயங்களைப் பொறுத்தமட்டில் 4—1—1981 வரை 10 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. 5—1—1981 லிருந்து 25 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வரியின் மீது 5 சதவீதம் மேல் வரியும் விதிக்கப்படுகின்றது.

உதகமண்டலம், ஹைதராபாத், பெங்களூர், பம்பாய்-கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்கு கிண்டியில் பந்தயப் பணம் கட்ட அனுமதிக்கப்படுகிறது. 4—1—1981 வரை அவற்றுக்கு 10 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. பின்னர் இவ்வரி 25 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வரியின் மீது 5 சதவீதம் மேல்வரியும் விதிக்கப்படுகின்றது.

1976-77 முதல் 1980-81 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மேற்படி சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் விவரங்கள் வருமாறு :—

| கால அளவு. | மொத்த வரவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1976-77 | 2,64.00 |
| 1977-78 | 2,70.02 |
| 1978-79 | 2,08.07 |
| 1979-80 | 2,66.08 |

முந்திய ஆண்டு டிசம்பர் வரை வருவாய் ரூபாய் 1,60.12 இலட்சமாகும்.

| | |
|---|---|
| 1980-81 (1980 டிசம்பர் வரை) | 2,88.15 |

## தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டம்.

ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு 13—10—1980 ஆம் நாளிலிருந்து வரிவிதித்து, வசூலிக்க இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம், பின்வரும் வீதங்களில் "ஆடம்பர வரி" விதிக்க வகை செய்கிறது :—

| ஆடம்பர வரி. | வரிவீதம். |
| --- | --- |
| ( ) ஓட்டல் ஒன்றில் அளிக்கப்படும் தங்குமிட வசதிக்காக நாளொன்றுக்கு ஒருவருக்குரிய கட்டண வீதம் (குளிர்பதனவசதி, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, இசை, கூடுதல் படுக்கைகள், இன்ன பிறவசதிகள் போன்றவற்றிற்கான கட்டணங்கள் உட்பட, ஆனால் உணவு, பானம், தொலைபேசி விளிப்புகளுக்கான கட்டணங்கள் நீங்கலாக) இருபது ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டும், ஆனால் ஐம்பது ரூபாய்க்குக் குறைவாகவும் இருக்குமாயின். | அக்கட்டண வீதத்தில் 5 சதவீதம் |
| நாளொன்றுக்கு ஒருவருக்குரிய கட்டண வீதம் ஐம்பது ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டு இருப்பின். | அக்கட்டண வீதத்தில் 10 சதவீதம். |

**15.** 1980-81 ஆம் ஆண்டில் வணிகவரிகள் துறை, அரசு எதிர்பார்த்த அளவுக்கு செயல்பட்டுள்ளது. இத்துறை சென்ற ஆண்டு வசூலித்த வருவாய்த் தொகை ரூபாய் 388 கோடி. 1980-81 ம் ஆண்டில் ரூபாய் 471 கோடி வசூல் செய்துள்ளது. இது சென்ற ஆண்டைவிட ரூபாய் 83 கோடி அதிகமாகும். இது சென்ற ஆண்டைவிட 21.5 சதவித உயர்வை குறிக்கும். இந்த [illegible] சாதனையானது இத்துறையின் வரலாற்றில் ஒரு இணையற்ற [illegible]. துறையில் பல மேம்பாடுகளைச் செய்துள்ளதாலும், வணிகர்களுக்குப் பல சலுகைகளையும் வசதிகளையும் அளித்துள்ளதாலும், துறை அதிகாரிகளுக்கும் வரி செலுத்துவோருக்குமிடையே நல்லுறவு நிலவியது. இதனால் வணிகவரிச் சட்டங்களை நல்லமுறையில் நிர்வகிப்பதற்கு ஏதுவாயிற்று. துறைக்கும் பொதுமக்களுக்குமிடையே தொடர்ந்து நல்லுறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் நிலவும் என்று அரசு நம்புகிறது.



## இணைப்பு V

( 895 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### முத்திரைத்தாள் நிருவாகம்.

1. பொது—

இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899) அரசுக்கு வரி வருவாய் ஈட்டித்தரும் சட்டமாகும். இது, சொத்துக்களை விற்றல்—வாங்கல் முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத்தாள்கள் வடிவத்தில் வரி விதிப்பதற்கு வகை செய்கிறது. வருவாய் வாரியம் (நிலவரி) அண்மைக்காலம் வரையில் தலைமைக் கட்டுப்பாடு அதிகாரமன்றமாக இச்சட்டத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. 1—12—1980 முதல் இவ்வாரியம் நீக்கப்பட்ட பின்னர், அவ்வாரியத்திடமிருந்த அதிகாரங்கள், கடமைகள், அந்நாளிலிருந்து பத்திரப்பதிவுத் துறைத் தலைவரிடம் அளிக்கப்பட்டு, தற்போது அவர், முத்திரைத்தாள் நிருவாகத்தைப் பொறுத்தவரையில், தலைமைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியாக இருக்கிறார்.

2. முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத்தாள்களை வழங்குவதற்குரிய தேவைக் குறிப்புகளை நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள், கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி அவற்றைப் பெறும் அதிகாரங்களைப் பெற்றுள்ளார். பொதுவாக ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள முத்திரைத்தாள்களிலிருந்து கிடைக்கும் வருவாய் தொடர்பான நிருவாகப் பொறுப்பு, கருவூல அதிகாரிகளிடம் உள்ளன. அக்கருவூல அதிகாரிகள் தங்களது மாவட்டங்களில் முத்திரைத்தாள்களை வழங்குதல், விற்றல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாவார். முத்திரைத்தாள்கள் குறித்த பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தங்களது மாவட்டங்களிலுள்ள அனைத்துத் துணைக் கருவூலங்களிலும் அவற்றைப் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்வது கருவூல அதிகாரிகளின் கடமையாகும். சென்னையில், முத்திரைத்தாள் உதவிக் கண்காணிப்பாளர், கருவூல அதிகாரிகளின் கடமைகளை கவனிக்கிறார். முத்திரைத்தாள் உதவிக் கண்காணிப்பாளர் முத்திரைத்தாள் பண்டகசாலைக்கும் பொறுப்பும் வகிக்கிறார். கருவூல அதிகாரிகளும், துணைக் கருவூல அதிகாரிகளும் அலுவல் முறையிலான முத்திரைத்தாள் விற்பனையாளர்களாவர். தெரிந்தெடுக்கப்பட்ட 75 இடங்களில் நீதித்துறை சாரா முத்திரைத் தாள்களையும், அனைத்து அலுவலகங்களில் நீதிமன்றக் கட்டண வில்லைகளையும் விற்பனை செய்ய சார்பதிவாளர்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

3. முத்திரைத்தாள்களுக்குத் தேவைக் குறிப்புகளைக் கொடுத்தலும், முத்திரைத்தாள்களை வழங்குதலும். [1981 ஏப்ரல் 30

இருபது ரூபாய்க்கும் மேலாக மதிப்புடைய முத்திரைத்தாள்களுக்கான
தேவைக் குறிப்பு ஆண்டுக்கொரு முறையும், 20 ரூபாயும் அதற்குக் குறைவாக
வும் மதிப்புள்ள முத்திரைத்தாள்களுக்கான தேவைக் குறிப்பு நான்கு மாதங்
களுக்கொரு முறையும் கொடுக்கப்படுகின்றன. எல்லா மாவட்டங்களுக்கும்
உரிய தேவைக் குறிப்புகளைச் சென்னை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர்
தொகுத்து அவற்றை நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் மைய பண்டகசாலைக்கு
அனுப்பி வைக்கிறார். இவ்வாறு தேவைக் குறிப்புகளை ஒன்றாகத் தொகுக்
கும்போது, எல்லா மாவட்டங்களிலும், வட்டத் தலைமையிடங்களிலும் போது
மான அளவிற்கு முத்திரைத்தாள்கள் இருப்பில் இருக்குமாறு பார்த்துக்
கொள்ளப்படுகிறது. முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் கொடுத்த தேவைக்
குறிப்புகளின் பேரில் நாசிக் முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரி, கம்மிடம்
இருப்பு இருப்பதைப் பொறுத்து, முத்திரைத்தாள்களை அனைத்துக் கருவூல
அதிகாரிகளுக்கும் நேரடியாக வழங்குகிறார். இப்போதெல்லாம் கருவூல
அதிகாரிகள், நாசிக் அச்சகத்திடமிருந்து ஒழுங்காக முத்திரைத்தாள்களைப்
பெற்று வருகின்றனர். முத்திரைத் தாள்கள் வழங்கப்படுவதை கருவூல
அதிகாரிகளும் முத்திரைத்தாள் மைய அலுவலகத்தினரும் கண்காணித்து
வருகின்றனர். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள்கள் பற்றாக்குறை
யாக இருந்தால், இம்மாநிலத்திற்குள் அவை அதிகமாக இருக்கிற மாவட்டத்தி
லிருந்து தேவைப்படுகிற மாவட்டத்திற்கு முத்திரைத் தாள்கள் வழங்கவும்
ஏற்பாடு செய்யப்படுகிறது.

4. முத்திரைத்தாள்களின் விற்பனைமூலம் கிடைக்கும் வருமானத்தில்
பெரும் பகுதி, நீதித்துறை சாரா முத்திரை தாள்களின் விற்பனை மூலம்
கிடைக்கப் பெறும் வருவாயாகும் பததிரங்களில் கணிசமான ஒரு பகுதி,
சொத்துக்களின் "அங்காடி மதிப்பை" யொட்டி முத்திரைத்தாள் கட்டணங்
கள் விதிக்கப்படுகின்றன. செ்சொத்துக்களின் அங்காடி விலையைக் காட்டும்
வழிகாட்டிக் குறிப்புப் பதிவேடுகள் 1974 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு
பத்திரப் பதிவு அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டன. அவை, பதிவு செய்யப்
படுவதற்கென கொடுக்கப்பட்ட பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அங்காடி
மதிப்பு வழிகாட்டிக் குறிப்புகளின்படி சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா
என்று அறிவதற்குப் பெரிதும் உதவும். நிலத்தின் மதிப்பு கணிசமான அள
வுக்கு அதிகரித்துள்ளதால் வழிகாட்டிக் குறிப்புப் பதிவேடுகளைத் திருத்தி



1981 ஏப்ரல் 30]

யமைக்கும்படி அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது. அப்பணி நடை
பெற்று வருகிறது; அப்பணி 31—8—1981 ஆம் நாளுக்குள் முடிவடையு
மென எதிர்பார்க்கப்படுகிறது. வழிகாட்டிக் குறிப்புக்கள் திருத்தியமைக்கப்
பட்டதன் விளைவாக முத்திரைத்தாள் வருவாய் சாதாரணமாக அதிகரித்
துள்ளதுடன், 1981-82 ஆம் ஆண்டுக் காலத்தில் மேலும் கணிசமான அளவுக்கு
அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. விசாரணைகள் நடத்திச் சரியான அங்காடி மதிப்பை நிர்ணயித்து
முத்திரைத் தாள் தீர்வை விதிப்பதற்காக முத்திரைத் தாள் சட்டத்தின் 47-
பிரிவின்படி "கலெக்டர்களாகச்" செயல்பட கோட்டாட்சியர்கள், மாவட்ட
உதவி ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்
பட்டுள்ளது. முத்திரைத்தாள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் கீழ் தெரிவிக்கப்
பட்டு அனுப்பிவைக்கப்படுவை குறித்து விரைவில் தீர்வுகாணும் நோக்கத்
துடன், முத்திரைத்தாள் சட்டத்தின் 47-எ பிரிவின்படி விசாரணை நடத்தி
ஆணை பிறப்பிக்கும் பொருட்டு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்
டப் பதிவாளர் தலைமையில் தனித்தியங்கும் பிரிவொன்றைத் தனிப்பட
அமைக்கும் செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

6. கட்டிடங்களின் அங்காடி மதிப்பைக் கணக்கிடுவதில் பத்திரப் பதிவு
செய்யும் அதிகாரிகளுக்கு உதவும் பொருட்டு, கட்டிடத்தின் கட்டிடப் பரப்பு,
கட்டுமான வகை, அஸ்திவாரத்தின் ஆழம், பயன்படுத்தப்பட்ட கட்டுமானப்
பொருட்கள் முதலிய கட்டிட விவரங்களைக் காட்டும் அறிக்கையொன்றைச்
சேர்த்து அனுப்பும்படி தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் (சொத்
துக்களின் மதிப்பை ஆவணங்களில் குறைத்துக் காட்டுவதைத் தடுத்தல்)
சட்டத்தின்படி கட்டிட உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
முத்திரைத்தாள் தீர்வையும், வருமான வரியும் செலுத்தாமல் ஏய்க்கும்
பொருட்டு, கட்டிட உரிமையாளர்கள் பொய்யான விவர அறிக்கைகளைக்
கொடுக்கக்கூடும்; ஆயின், தற்போதுள்ள அமைப்பின்படி உரிமையாளர்கள்
கொடுத்த விவர அறிக்கைகள் சரியானதா என பத்திரப் பதிவு செய்யும்
அதிகாரிகள் நேரில் சென்று சரிபார்க்க இயலாது. இதனால், அந்தந்த இடத்
திற்கு நேரில் சென்று ஆய்வு செய்வதன் மூலமாக, விவர அறிக்கைகளைச்
சரிபார்க்க முறையான பணியாளர் அமைப்பு இருக்க வேண்டியது அவசிய
மாகையால், சொத்தின் மதிப்பைக் குறைத்து எழுதுவதைக் கண்டுபிடித்துத்
தடுக்கும்பொருட்டு தனி பொறியாளர்களை நியமிப்பதற்குரிய செயற்குறிப்பு
பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

7. கிரயப் பத்திரம், தானபத்திரம், சொத்து உரிமை மாற்றம், விடுதலை ஆவணம், செட்டில்மெண்டு ஆவணம் முதலிய பலவகையினதாக ஆவணங்களை வகைபடுத்திப் பின்னர் அவற்றுக்குச் சரியான முத்திரைத் தீர்வை விதிப்பதென்பது மிகவும் இடர்பாடு மிக்க ஒரு பணியாகும். அதற்குச் சொத்துரிமை மாற்றம், சொத்துரிமை ஏற்பாடுகள், முத்திரைத்தாள் முதலிய பொருள்பற்றிய பல்வேறு சட்டங்கள் குறித்த முழு அறிவும் பெற்றிருக்க வேண்டியது அவசியம். ஆகவே, சார்-பதிவாளர் அனைவரும் முத்திரைத் தாள் சட்டம் குறித்த முழு அறிவும் பெறும் பொருட்டு, நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதற்கொண்டு, திங்கள் தோறும், சார்-பதிவாளர்கள் 141 பேருக்குப் பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் நான்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளார். 1980-81 ஆம் ஆண்டுக் காலத்தில், பதிவு செய்யும் அதிகாரி ஒவ்வொருவருக்கும் முத்திரைத்தாள் சட்டம் குறித்த விளக்கக் குறிப்பேடு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

7 (அ) தற்பொழுது விற்பனை பறிமாற்றம் (Exchange) அன்பளிப்பு (Gift) ஆகிய பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை சென்னை, மதுரை, சேலம், கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் சொத்தின் மதிப்பில் 8 சதவீதமும், ஏனைய இடங்களில் 6 சதவீதமும் வசூலிக்கப்படுகிறது. தற்பொழுது நகரங்களைப் போலவே கிராமப் பகுதிகளிலும் நவீன கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இடத்தின் மதிப்பு (Site value) மட்டும் மாறுபட்டாலும் இக்கட்டிடங்களின் கட்டுமானச் செலவும் கட்டிட மதிப்பும் நகரங்களிலும் கிராமங்களிலும் ஒன்றாகவே இருப்பதால் மேற்கூறிய பத்திரவகைகளுக்கு கிராமப்புறங்களில் தற்பொழுது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையான 6 சதவீதத்தை 7 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அடைமானம் (Mortgage) குத்தகை (Lease) பாகப்பிரிவினை (Partition) விடுதலை (Release) முதலான பத்திரங்கள் மீது நூறு ரூபாய்க்குத் தற்பொழுது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையான இரண்டு ரூபாய் ஐம்பது பைசாவிலிருந்து மூன்று ரூபாயாகவும், ஆயிரம் ரூபாய்க்குமேல் ஒவ்வொரு ஐநூறு ரூபாய் அல்லது அதன் பகுதிக்கு பதின்மூன்று ரூபாயிலிருந்து பதினைந்து ரூபாயாகவும் தீர்வை விதத்தை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



அன்பளிப்புப் (Gift) பத்திரத்திற்கு சொத்து மதிப்பில் நகரங்களில் 8 சதவீதமும், கிராமப்புறங்களில் 6 சதவீதமும் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகையில் 'செட்டில்மெண்டிற்கு' ரூபாய் 100க்கு ரூபாய் 2.50 வீதம் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இந்தத் தீர்வை வேறுபாட்டைப் பயன்படுத்திக் கொண்டு பொதுமக்கள் 'அன்பளிப்பைக்கூட, 'செட்டில்மெண்டாக' எழுதி விடுகின்றனர் இதே போல தங்களது உறவினர்களுக்குச் சொத்தை விற்கும் போது, சொத்துரிமை மாற்றாவனப் (Conveyance) பத்திரங்களைக்கூட குறைவான முத்திரைத் தீர்வைகளாகும் 'செட்டில் மெண்ட்' பத்திரங்களாக எழுதி விடுகின்றனர் இத்தகைய முறைகேடுகளைத் தடுக்கும் நோக்குடன் சொத்துரிமை மாற்றாவணம் (Conveyance) மற்றும் அன்பளிப்பு (Gift) ஆகிய பத்திரங்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை வீதத்தை 'செட்டில் மெண்டிற்கும்' விதிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் II 1899) சொத்துரிமை மாற்றாவணத்திற்கும் (Conveyance) விடுதலைப் பத்திரத்திற்கும் வேறுபட்ட வீதத்தில் முத்திரைத் தீர்வை வசூலிக்க வகை செய்கிறது. விடுதலைப் பத்திரங்களுக்கு அதிகப்படியாக ரூபாய் 25 மட்டுமே முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகையில் சொத்துரிமை மாற்றாவனப் (Conveyance) பத்திரங்களுக்கு சொத்தின் சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு தீர்வை விதிக்கப்படுகிறது. பெரும்பாலான விடுதலைப் பத்திரங்கள் உண்மையிலேயே 'விடுதலையாக இல்லாமல் 'சொத்துரிமை மாற்றாவண' (Conveyance) மாக இருந்தபோதிலும் சாமார்த்தியமாக பினாமி உரிமைப் பொறுப்பு நீக்கும்' ( Release of Cenami Rights) பத்திரங்களாக எழுதப்பட்டு உயர்வீத முத்திரைத் தீர்வை செலுத்துவதைத் தவிர்த்து விடுவதாகவிம் இதனால், முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான வகையில்அரசிற்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறதென்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவே உண்மையான விடுதலைப் பத்திரங்களையும் பினாமி உரிமைப் பொறுப்பு நீக்கும் பத்திரங்களையிம் வேறுபடுத்திக் காட்ட மேற்கூறிய சட்டத்தைப் பொருத்தமான முறையில் திருத்த முடிவு செய்யப்பட்டது.

முத்திரைத் தீர்வை வீதங்களில் மேற்கூறிய மாற்றங்களை செய்யத் தேவையான சட்ட முன்வடிவை நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

8. கிரயப்பத்திரம், தான பத்திரம், சொத்துரிமை மாற்றம் முதலிய ஆவணங்களுக்குச் செலுத்தத்தக்க உரிமை மாற்றத் தீர்வையை வசூலித்தல், அவ்வசூல் தொகையைப் பல்வேறு உள்ளாட்சி மன்றங்கள், நகரியங்கள்,

நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றுக்கு ஒதுக்குதல் ஆகிய இவ்விரு முக்கியப் பணிகளையும் பத்திரப் பதிவுத் துறை செய்து வருகிறது. தீர்வை வசூல், ஒதுக்கீடு முதலியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு (1) | வசூலிக்கப்பட்ட தீர்வை. (2) | ஒதுக்கப்பட்ட தீர்வை. (3) |
| --- | --- | --- |
| | (ரூபாய்கோடியில்). | |
| 1978–79 .. .. | 12.31 | 11.94 |
| 1979–80 . .. | 13.14 | 12.75 |

ஒவ்வொரு இனத்தின் கீழுள்ள வரவுகளின் விவரங்கள் வருமாறு—

| முத்திரைத்தாள்களின் வகை. (1) | வரவுகள்: 1979–80 ஆம் ஆண்டிற்குரிய வரவுகள் (1979 ஏப்ரல் முதல் 1980 மார்ச் வரையில்) ரூபாய் கோடியில் (2) | 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவுகள் இணக்கம் செய்யப்படாத கணக்குகள் (1980 ஏப்ரல் முதல் 1980 டிசம்பர் வரை). (3) |
| --- | --- | --- |
| 1. நீதித் துறை சாரா முத்திரைத்தாள்களின் வருவாய். | 33,61,41,952.85 | 29,69,75,414.15 |
| 2. நீதித் துறை சார்ந்த முத்திரைத்தாள்களின் வருவாய். | 6,40,30,002.90 | 4,51,59,234.54 |
| 3. உண்டியலுக்கான முத்திரைத்தாள்களின் மூலம் வருவாய். | 13,15,518.00 | 10,45,653.75 |
| 4. பசை தோய்ந்த முத்திரைத் தாள்களின் மூலம் வருவாய் | 2,04,09,343.55 | 1,67,59,699.05 |
| 5. பல்வகை வரவுகள் | 3,51,78,271.07 | 3,50,26,304.35 |
| மொத்த வரவுகள் .. | 45,70,75,093.07 | 39,49,66,305.80 |



| முத்திரைத்தாள்களின் வகை. (1) | வரவுகள்: 1979–80 ஆம் ஆண்டிற்குரிய வரவுகள் (1979 ஏப்ரல் முதல் 1980 மார்ச் வரையில்) ரூபாய் கோடியில் (2) | 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவுகள் இணக்கம் செய்யப்படாத கணக்குகள் (1980 ஏப்ரல் முதல் 1980 டிசம்பர் வரை (3) |
| --- | --- | --- |
| திருப்பிச் செலுத்தப் படும் தொகைகள். | | |
| நீதித் துறை சாரா முத்திரைத்தாள்கள். | 12,43,67,132,72 | 10,19,33,034.43 |
| நீதித் துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 22,88,170.61 | 19,89,224.64 |
| திருப்பிச் செலுத்தப் படும் மொத்தத் தொகை. | 12,66,55,303.33 | 10,39,22,259.07 |
| செலவுகள்— | | |
| 1. முத்திரைத்தாள்கள் விற்பனையில் தள்ளுபடி. | 41,31,289.42 | 35,04,298 60 |
| 2. பணிகாளர்கள் செலவு. | 6,02,436.26 | 5,30,959.23 |
| 3. நாசிக்கிலுள்ள முத்திரைத் தாள்கள் மையப் பண்டகசாலையிலிருந்து வழங்கப்பட்ட முத்திரைத் தாள்கள் மதிப்பு. | 16,52,284.44 | 25,41,117.32 |
| மொத்தச் செலவு .. | 63,86,010.12 | 65,77,375.15 |

V211,31 N81
N83.2

| முத்திரைத்தாள்களின் வகை. | வரவுகள். | |
|---|---|---|
| | 1979–80ஆம் ஆண்டிற்குரிய வரவுகள் (1979 ஏப்ரல் முதல் 1980 மார்ச் வரையில். | 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவுகள் இணக்கம் செய்யப்படாத கணக்குகள் (1980 ஏப்ரல் முதல் 1980 டிசம்பர் வரை. |
| | | ரூபாய் [illegible]டியில் |
| (1) | (2) | (3) |
| மொத்த வருவாய் .. | 45,70,75,093.07 | 39,49,66,305.84 |
| மொத்தச் செலவும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளும். | 13,30,41,313.45 | 11,04,99,634.22 |
| நிகர வருவாய் .. | 32,40.33,779.62 | 28,44,66,671.62 |

10. தகுதியுடைய பொது நிறுவனங்களுக்கு, முத்திரைத் தாள் தீர்வையில் ஒரு பகுதி அல்லது முழுதுவம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

11. முத்திரைத்தாள் வருவாய் நிருவாகம் மனநிறைவு அளிப்பதாக உள்ளது.

122202